# வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## பொன்விழா வெளியீடு - 2004



# கொழும்பில் இந்துப் பாரம்பரியம்


## – ஒரு தேடலின் தொடக்கம்

50

6
2



உ
சிவமயம்



# வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

# பொன்விழா 2004



34148

இ30.6 வட 54PR

திகதி 22/10/2004

உ
சிவமயம்



# பொன்விழா மலர்

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்
40A, டெம்பிள் வீதி,
கொழும்பு - 15.

The Colombo North Hindu Paripalana Sangam
40A, Temple Road, Colombo - 15, Sri Lanka.
Tel : 2524308, 4610132

# சமர்ப்பணம்

வட கொழும்பு இந்து பரிபாலன சங்க பொன் விழாவைச் சிறப்புற நடாத்தச் செயற்குழு தீர்மானித்தது. இவ்விழாவை முன்னிட்டு மலர்க்குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. அக்குழுவைச் சேர்ந்த நாம் இம் மலரைச் செம்மையாகவும் நேர்த்தியாகவும் சமய அம்சங்களுடனும் வெளியிட வேண்டுமெனத் தீர்மானித்தோம்.

எமது இப்பணியை வெற்றிகரமாக முடித்து வைக்க நன்கொடை வழங்கியவர்களையும், எமக்கு ஊக்கம் அளிக்குமுகமாக விளம்பரம் தர முன்வந்த பெரியார்களையும் வர்த்தக நிறுவனங்களையும் நன்றியுணர்வுடன் இங்கு குறிப்பிட விரும்புகின்றோம்.

கடந்த ஐம்பது ஆண்டுகளாக எமது சங்கம் வளர்ந்த வரலாற்றையும் ஆய்வுக்குழுவில் இடம்பெற்ற கல்விமான்களால் தயாரிக்கப்பட்ட தொகுதியையும் இணைத்து அழகியதொரு மலரை அருணாசலேஸ்வரப் பெருமானின் அருளாசியுடன் உங்கள் முன் சமர்ப்பிக்கின்றோம்.

# அறிமுகம்

வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம் தனது பொன்விழாவினைக் கொண்டாடும் வேளையில் பொன்விழா சிறப்பு வெளியீடு ஒன்றினையும் வெளியிடுவதையிட்டு பெருமகிழ்வடைகின்றேன். இச்சிறப்பு வெளியீடு இரு பகுதிகளைக் கொண்டது. ஒன்று வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் பற்றியது. மற்றையது கொழும்பில் இந்துப் பாரம்பரியம் தொடர்பான தொகுப்பாகும்.

பொன்விழா மலரினை எவ்வாறு அமைப்போம் என பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களிடம் ஆலோசனை கேட்டபோது, கொழும்பில் இந்துப் பாரம்பரியம் தொடர்பான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப் படவில்லை. எனவே அவ்வாறான ஒரு ஆய்வினை மேற்கொண்டு அவ் ஆய்வினை ஓர் தொகுப்பாக வெளியிடலாம் என்றார். இந்த ஆய்வுத் தொகுப்பில் கொழும்பில் உள்ள இந்து ஆலயங்கள் தொடர்பாகவும் இந்து நிறுவனங்கள் தொடர்பாகவும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டு பிரசுரிக்கப்படுகின்றது. காலம் போதைமையால் ஒரு முழுமையான ஆய்வுத் தொகுப்பாக வெளிக்கொணர முடியவில்லை. இதை ஒரு தொடக்க முயற்சியாகக் கொண்டு இனிவரும் காலங்களில் இந்த ஆய்வு பூரணப்படுத்தப்படும் என நம்புகின்றேன்.

இந்த ஆய்வுக்குப் பொறுப்பாகவிருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கும் அவர்தம் உதவியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். மேலும், ஆக்கங்களைத் தந்துதவிய பெரியார்களுக்கும் ஆய்வுக்குப் பூரண ஒத்துழைப்பு வழங்கிய ஆலய மற்றும் நிறுவன நிர்வாகத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்.

இத்தொகுப்பு வெறுமனே வாசித்துவிட்டு விட்டுவிடக்கூடிய ஒரு மலராகக் காணப்படாது ஒரு வரலாற்று ஆவணமாக நிலைக்கும் என நம்புகின்றேன். இலங்கையின் இந்துப் பெருமக்கள் இதனை வரவேற்பார்கள் என்று நம்புகின்றோம். வரவேற்க வேண்டும் என விரும்புகின்றோம்.

எஸ். பி. சாமி<br>
தலைவர்,<br>
வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

# கொழும்பில் இந்துப் பாரம்பரியம்

## – ஒரு தேடலின் தொடக்கம்

# Hindu Traditions in Colombo

## - A beginning for further Search

# அருளாசிச் செய்தி



இரண்டாவது குருமஹாசந்நிதானம்
*ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்*
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம்,
பருத்தித்துறை வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

**வட** கொழும்பு இந்து பரிபாலன சங்கம் தமது ஐம்பதாவது ஆண்டு நிறைவினைக் கொண்டாடி மகிழ்வதனையிட்டு பேருவகையடைகின்றோம். தலைநகரில் சைவம் தழைத்தோங்க தமது தனித்துவமான சேவையினை செவ்வனே ஐம்பது வருடங்களாக ஆற்றிவருகின்ற சங்கத்தினுடைய பணி போற்றுதற்குரியது. கால மாற்றங்களுக்கும் கலாசார மாறுதல்களுக்கும் ஈடுகொடுத்து அதன் போக்கிலேயே எம் முன்னோரால் கட்டிக் காத்து வரப்படும் சமயக் கோட்பாடுகளையும் பண்பாட்டு விழுமியங்களையும் மாசற எதிர்கால சமுதாயத்திடம் கையளிப்பதற்கு இவ்வாறான அமைப்புக்களுடைய பங்கு மிகமிக அவசியமானதாகும்.

இவ்வகையில் மூத்தோர் மத்தியில் சமய வளர்ச்சிக்காய்ப் பாடுபடுவதோடு இளையோர்தமை இந்து நெறியில் நிலைநிற்க வழிகாட்டுகின்ற இச்சங்கத்தினுடைய சேவையினை வாழ்த்துகின்றோம். ஆதியும் அந்தமுமில்லாத எம் சமயம் அரும்பெரும் அறநெறியாகத் திகழ்கின்றது. இதன் வழி பயணித்து இணையில்லா இன்ப வாழ்வை பெறுவதற்கு அறக் கருத்துக்களையும் நற்பண்புகளையும் கருத்திற் கொண்டு செயற்படுதல் அவசியமானதாகும்.

இதனை நன்குணர்ந்த வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் சீரிய முறையில் தொழிற்பட்டு வந்துள்ளமை கண்கூடு. இப்பணியினை மேற்கொள்ள தம்மை அர்ப்பணித்து உழைத்து வருகின்ற அனைத்துள்ளங்களையும் இறைவன் ஆசிர்வதிப்பானாக. இச்சங்கம் தொடர்ந்தும் பல நூற்றாண்டுகளைக் கண்டு பணியாற்றவும் சைவத் தமிழ் வளர்ச்சிக்காக பாடுபடவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.



# அருள் வாழ்த்துரை



*திருக்கயிலாய பரம்பரைத்*
*திருவாவடுதுறை ஆதீனம்*
*23 ஆவது குரு மஹாசன்னிதானம்*
***சீர்-வளர்-சீர் சிவப்பிரகாச தேசிக பரமாச்சாரிய சுவாமிகள்***
*திருவாவடுதுறை - 609 803*

இலங்கை, வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் ஐம்பது ஆண்டுகளாக சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருவது பாராட்டிற்குரியது. இவ்வமைப்பின் பொன்விழாவினை இவ்வாண்டு சிறப்பாக செப்டெம்பர் திங்கள் கொண்டாடவிருப்பதும், அவ்விழாவின் நினைவாக பொன்விழா மலர் ஒன்றினை வெளியிடவிருப்பதும் மகிழ்ச்சிக்குரியது.

சமை என்னும் சொல்லின் அடியாகப் பிறந்தது சமயம் என்ற சொல், உள்ளத்தைப் பக்குவப்படுத்தி இறையருயைப் பெறச் செய்வது சமயம் ஆகும். சமயங்களில் தொன்மைச் சமயம் சைவசமயம் ஆகும்.

சைவசமயம் இறைபணியையும் சமூகப் பணியையும் இரு கண்களெனக் கொண்டு விளங்குவது

**படமாடக் கோயில் பகவற்கொன் றீயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங் காகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கொன் றீயில்**
**படமாடக் கோயில் பகவற்க தாமே**

என்றும்

**ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்**
**நன்றே நினைமின்**

என்றும்

**யாவர்க்குமாம் இறைவற்கொரு பச்சிலை**
**யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை**
**யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி**
**யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே**

என்றும்



திருமூலர் பெருமான் சைவசமயக் கோட்பாட்டை விளக்கி யருளுகின்றார். சைவசமயம் குரு, இலிங்க சங்கம வழிபாட்டைச் சிறப்பித்துக் கூறுகின்றது. நமது அறுபத்துமூன்று நாயன்மார்கள் இந் நெறிகளில் நின்று இறையருளைப் பெற்றுள்ளனர். மேலும் சமுதாயம் சிறந்தால்தான் சமயம் நன்கு வளரும் என்பதனால் நால்வர் பெருமக்களும் சமயத் தொண்டும் செய்தனர்.

**அவனன்றி ஓரணுவும் அசையாது** என்பதை உணர்ந்து அரன் நாமத்தையே எண்ணி வாழ்ந்தனர்.

**சிந்தனை செய்ய மனம் அமைத்தேன்**
**செப்ப நா அமைத்தேன்**
**வந்தனை செய்யத் தலை அமைத்தேன்**
**கைதொழ அமைத்தேன்**
**பந்தனை செய்வதற்கு அன்பு அமைத்தேன்**
**மெய் யரும்ப வைத்தேன்**
**வெந்த வெண்ணீறணி ஈசற்கு**
**இவையான் விதித்தனவே.**

என்று சேரமான் பெருமான் நாயனார் அருளியது போன்று வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்த சென்னியும் கொண்டு ஒரு நெறிய மனத்தோடு பரம்பொருளைச் சிந்தித்து என் கடன் பணி செய்து கிடப்பதே என்று பணி செய்திட, எண்ணியிருந்து கிடந்து நடந்தும் அண்ணலெனா நினைவார் வினை தீர்ப்பார் என்று சுந்தரர் பெருமான் அருளியவாறு நம்பன் அருளைப் பெற்று நலம் பெறலாம்.

நம்பன் அருளால் சமயப் பணியும் சமுதாயப் பணியும் ஆற்றிவரும் வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் பொன்விழா சீரும் சிறப்புமாக நடைபெறவும், பொன்விழா மலர் திருநெறிய மணம் வீசவும் நமது வழிபடு கடவுளாகிய அருள்மிகு ஞானப்பெருங்கூத்தன் திருவடி மலர்களைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.

# வாழ்த்துரை



*கலைமாமுனிவர்*
*திருவளர் திரு காசிவாசி*
***முத்துகுமாரசுவாமி தம்பிரான் சுவாமிகள்***
*தலைவர், காசித்திரு மடம்*
*திருப்பானந்தாள் - 612 504*
*தஞ்சாவூர் மாவட்டம்*
*இந்தியா*

கோயிலும் சுனையும், கடலுடன் சூழ்ந்த கோணமாமலை, கேதீச்சரம் ஆகிய திருத்தலங்களைக் கொண்டிலங்குவதும், சமயமும், தமிழ்மொழியும் இரு கண்கள் எனப் போற்றுவதும், இறை வழிபாட்டில் என்றும் தோய்வு மிக்கதும், சமயநெறிகள், சமயச் சான்றோர்கள், சமய நூல்கள் எனும் இவற்றில் மாறாப் பற்றுதல் கொண்டதும் ஆகிய இலங்கைப் பதியில், வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் 2004 செப்டெம்பர் திங்கள் பொன்விழாக் காண்பதறிந்ததும், விழாவில் மலரொன்று வெளியிடப் பெறுவது அறிந்தும் மகிழ்கிறோம்.

'மனமது நினைய, வாக்கு வழுத்த, மந்திரங்கள் சொல்ல' - அமையும் வழிபாட்டு நெறி ஒருபுறம், ஞானநூல், ஓதுதல், ஓதுவித்தல் மறுபுறம், காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிச் சமயச் சான்றோர் திருப்பாடல்களை ஓதுதல் பிறிதொருபுறம் எனும் எல்லா வகையான நிலையிலும் செம்மையுடையராய் வாழும் மக்களின் பணிகளும், அவர்தம் வாழ்வியலும், அவர்கள் எடுக்கும் விழாவும், விழா மலரும் எல்லா விதத்திலும் மேன்மை பெறச் செந்திற்கந்தன் சேவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்!

சுபம்!

# ஆசியுரை




***சுவாமி கௌதமானந்தா***
*தலைவர், ராமகிருஷ்ண மடம்*
*31, ராமகிருஷ்ண மட் ரோட்,*
*மைலாப்பூர், சென்னை - 600 004.*
*இந்தியா*


வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம் கோலாகலமான அளவில் பொன்விழா கொண்டாட இருப்பதையும், அவ்விழாவில் மலரொன்றினை வெளியிட இருப்பதையும் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன்.

இவ்வமைப்பு கடந்த 50 ஆண்டுகளாக சமய, சமூகப் பணிகளை ஆற்றி வருகிறது. இலங்கைத் தலைநகர் கொழும்பில் இவ்வமைப்புக்கென தனிக் கௌரவம் உண்டு. மூத்தோர் மத்தியில் சமய வளர்ச்சிக்காகப் பாடுபடுவதோடு இளையோர் தமையும் இந்து நெறியில் நிலைநிற்க இவ்வமைப்பு வழிகாட்டி வருகிறது.

பொன்விழா நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெறவும், சமூகப் பணிகள் தொடர்ந்து நடைபெறவும் பகவான் ஸ்ரீராமகிருஷ்ணர், அருள்மிகு அன்னை சாரதாதேவியார் மற்றும் சுவாமி விவேகானந்தர் ஆகியோரை மனமார வேண்டுகின்றேன்.



# எந்நாட்டவரும் போற்றும் இந்து சமயம்



**பரமஹம்ஸ பரத்வாஜ் ஸ்வாமிகள்**
*ஸ்ரீ யோகமாயா புவனேஸ்வரி பீடம்*
*அம்பத்தூர்*
*சென்னை - 600 053*
*இந்தியா.*

"ஹிம் ஸயாம் தூய தேயஸ
ஸ: ஹிந்தூரீ த்யபி த்யதே!!

என்கிறது வேதம். அதாவது, ஹிம்ஸையைக் கண்டு எவன் துன்பப்படுகிறானோ, அதாவது, பிற உயிர் வருந்துவதைக் கண்டு எவன் ஒருவன் வருந்துகிறானோ அவனே இந்து ஆவான் என்பது கருத்து. பிறரை இம்சிக்காதவன் இந்து.

எனவே இந்து சமயம் உலகிலுள்ள மதங்களுள் எல்லாம் ஒப்புயர்வற்றது. எந்நாட்டவரும் ஏற்றிப் போற்றுவது. இந்த இந்து சமயம் தோன்றிய நம் பாரதத் திருநாட்டில் எத்தனையோ மகான்கள் வாழ்ந்தார்கள்; வாழ்கிறார்கள். அவர்கள் எல்லாருமே எந்தவிதமான வேற்றுமைகளையும் பாராட்டாத பெருமக்கள். புண்ணிய பாரதத்தின் பெருமையை, சமய ஒற்றுமையின் மூலம் உலகெங்கும் பறை சாற்றிய உத்தம புருஷர்கள்.

'ஸமத்வம் யோக அச்யதே' என்பது கீதா வாசகம். அதாவது, சமத்துவ நிலையே வெற்றிக்கும் ஒற்றுமைக்கும் வழிகாட்டும் யோகம் என்கிறார் பகவான் கண்ணன்.

நல்லவர்களிடம் நல்லவிதமாக நடந்து கொள்வதைப் போலவே கெட்டவர்களிடமும் கூட நாம் நல்லவிதமாக நடந்து கொள்ளுதல் வேண்டும். இதைத்தான் "பகைவனுக்கருள்வாய் நன்னெஞ்சே!" எனப் பாரதியும் பாடினார்.

மனித இனத்தை அடிப்படையாகக் கொண்டு, மனித வாழ்வு சிறப்பாக அமைய வேண்டும் என்ற அடிப்படைக் கொள்கையைப் பீடமாக அமைத்துக் கொண்டு, பல்வேறு நன்னெறிகள் என்னும் படிக்கட்டுகளை உருவாக்கி அதன்மூலம் பெறற்கரிய பேறான நல்வாழ்வு என்னும் இனிய எழில் மாளிகையை அடைய உதவுவதே இந்து சமயம்.



மனிதன் என எடுத்துக்கொண்டால், இந்த உலகிலுள்ள எல்லாக் கூறுகளும் அவனிடம் பொதிந்து கிடக்கின்றன. பஞ்சபூதங்களும் அவனிடமே உண்டு என்பது இந்துசமய நம்பிக்கை; கொள்கை. இந்த வகையில் நாம் என்பது உடல், ஆன்மா, இறைவன் ஆகிய மூன்றும் அடங்கிய முக்கூட்டுப் பொருளாகும். ஆன்மாவாகிய உயிரை மையப்படுத்தி, ஒரு பக்கம் உடலையும் மறுபக்கம் இறைவனையும் பார்க்க வேண்டும்.

நாம் எல்லோரும் அறியாமையில் உழன்று வருகின்றோம். நம்மிடம் உள்ள அறியாமையிலிருந்து சிறிது சிறிதாக அறிவு விளக்கம் பெற்று வளர்வதே வாழ்க்கை. அறியாமையாகிய இருட்டிலிருந்து சிறிது சிறிதாக அறிவை விளக்கம் பெற வைப்பது இறைவனின் செயலாகும். இதற்காகத்தான் கடவுள் நமக்குச் சில கசப்பான அனுபவங்களைத் தருகின்றான். இந்த உலகில் அறிவு வெளிச்சம் பெறும்வரை அவற்றுக்காகப் பல்வேறு பிறவிகளை எடுக்க நேர்ந்தாலும், இறுதியில் உண்மையான ஞானத்தைப் பெற்ற பின்னரே அறியாமை இருளிலிருந்து மீண்டு இறைவனின் திருவடிகளை அடைகின்றோம்.

இறைவனிடம் முழுமையான பக்தி வைத்துவிட்டால் அவன் நம் பிரச்சனைகளைத் தீர்த்து வைக்க முன்வருவான். உதாரணமாக, நம் வீட்டில் மின்விளக்குப் பழுதாகி, விளக்கு எரியவில்லை என்றால் அதை நாமாக ஒன்றும் செய்ய முடியாது. பழுது நீக்கத் தெரிந்த ஒருவரிடம் அப்பணியை ஒப்படைத்து சரிசெய்யச் சொல்கின்றோம். எனவே, பிரச்சனை நமக்குத்தான் என்றாலும் அதற்குத் தீர்வு காணும் சக்தி நம்மிடம் இல்லை. அதை சர்வ வல்லமை மிக்க இறைவனிடம் ஒப்படைத்துவிட வேண்டும். ஆணவம் என்னும் அறியாமை நம்மை விட்டு நீங்க வேண்டுமானால் இறையுணர்வு மேலோங்க வேண்டும். இந்த நிலையை அடைய மனமும் உடலும் பக்குவப்படவேண்டும்.

'ஊனுடம்பு ஆலயம்' என்கிறார் திருமூலர். நம் உடலே ஓர் ஆலயம் தான். நம் இதயக் கமலத்தில் ஈசன் உறைகின்றான். இறைவன் நமக்குள் இருக்கிறான் என்பதற்கான அடையாளம்தான் நம் சுவாசம் என்னும் மூச்சுக்காற்று. அந்தச் சிவன் என்னும் மூச்சுக்காற்று வெளியே வந்து உள்ளே போய்க் கொண்டிருக்கும் வரை நம் உடல் என்னும் சீவன் அழியாமல் இருக்கும்.


எனவே, நம்முடன், நம்முள்ளேயே இருக்கிறான் என்ற பயத்துடன்தான் நம் செயல்பாடுகள் யாவும் அமைதல் வேண்டும். இறைவனுக்குத் தெரியாது என்றெண்ணிக்கொண்டு நாம் செய்யும் தவறுகளையும் இறைவன் நன்றாகவே அறிவான்.

இவ்வாறாக, நம் உடலைக் கோயிலாக ஏற்று, எப்போதும் நம்முள்ளே உறையும் இறைவனின் திருவருளைக் குறைவின்றி முழுமையாய்ப் பெற வேண்டுமானால் நாம் தூய்மையான மனத்துடன் இறைவனை தினமும் நாவாரப் பாடித் தொழவேண்டும். சுயநலப் பேராசைகளை விலக்கி நியாயமான தேவைகளைத் தெரிவித்து வலியுறுத்தி வேண்டிக் கொள்ளலாம். தியானம் செய்யலாம். இதை முழுமையான நம்பிக்கையுடன் செய்ய வேண்டும் என்பதே முக்கியம். நம் எல்லையற்ற அன்பாலும் கண்ணீராலும் இறைவனின் பேரருளைப் பெறலாம்.

நம் முதுகுத்தண்டு என்ற கொடி மரம், இடுப்பில் மூலாதாரத்தில் தொடங்கி மூளையில் உள்ள பிரணவத்துடன் கலந்து முடிகின்றது. இறைவனின் அருட்கொடி பறக்கும் அற்புதமான இடம் நம் புருவ மத்தியாகும். அங்கே அருட்கொடி பறக்கும்போது இறைவனின் அருட்காட்சிகளை நாம் தரிசிக்கலாம். நம் உடலும் மனமும் ஒன்றாக இணைந்து அமைதியான நிலையைப் பெற்றால் இது எல்லோருக்குமே சாத்தியம்தான். இந்நிலையை நாம் அடைவதற்கு சிந்தனை நலம், உள்ளத்தில் உயர்ந்த எண்ணம், புலன்களில் செம்மை, பொறிகளில் தூய்மை ஆகியன தேவை. அப்பொழுதுதான் வளமான வாழ்க்கையைக் காணமுடியும்.

முந்திய காலச் சுவடுகளிலிருந்து முற்றிலும் நழுவி, இன்றைய கம்ப்யூட்டர் யுகம் வளர்ந்து வருகிறது. ஆயினும், நம் சமயப் பாரம்பரியம் இன்றைக்கும் தலைநிமிர்ந்து நின்று உலகெங்கும் உள்ள நாடுகளுக்கு வழிகாட்டக்கூடிய அளவில் நம் பாரத பூமி திகழ்ந்து வருகின்றதென்றால் அதன் வெற்றிக்கு அடிப்படை யானவை சமயப் பிரசார சபைகள் சிலவற்றின் அயராத தொண்டுகளே என்பதில் ஐயமில்லை.

அந்த வகையில் கொழும்பிலுள்ள இந்து பரிபாலன சங்கம் என்ற அமைப்பு தொடங்கப்பட்டு ஐம்பதாண்டுகளை நிறைவுசெய்து பொன்விழாக் கொண்டாடுகிறது என்பது மிக மகிழ்ச்சி தருவதும், பாராட்டக்கூடியதுமான ஒரு செய்தியாகும். பல்வேறு வாழ்க்கைச் சிக்கல்களிடையேயும் இதற்கென நேரத்தை ஒதுக்கி, பொழுதைப் பொன்னாக்கி, இந்து சமயத்தின் வளர்ச்சிக்குப் பாடுபட்டு வரும் இச்சங்க உறுப்பினர்களை மனமாரப் பாராட்டி, இச்சபை மேலும் பல விழாக்களைக் கொண்டாடும் வகையில் உயர்வடைய வேண்டும் என்று எல்லாம் வல்ல பரம கருணாம்பிகையான புவனேஸ்வரி தேவியின் பொன்னார் திருவடிகளைச் சிந்தித்து வாழ்த்துகிறோம்.



# ஆசியுரை



ஆன்மிகச் செம்மல்
**தவத்திரு சிவதாசன் சுவாமிகள்**
ஸ்ரீ சண்முகநாதர் திருக்கோயில்
கடம்பூர், சிறுவயல் அஞ்சல்
ராமநாதபுர மாவட்டம்
தமிழ்நாடு
இந்தியா.

உலகில் பல்வேறு சமயங்கள் நிலவி வருகின்றன. அவைகளில் சிறந்த சமயம் நம் இந்து சமயம் ஆகும்.

> ***''நீதியினால் இவையெல்லாம் ஓரிடத்தே காண***
> ***நின்றது யாதொரு சமயம்! அது சமயம்!''***

என்பதற்கேற்ப மனித குலத்திற்கும், மனித இயற்கைக்கும் உரிய இனிய சமயம் இந்து சமயம். "இந்து" என்பதற்கு ***''ஹிம்ஸாயாம் தூயதேய:ஸ: ஹிந்து இத்ய தியதே!''*** எனப் பொருள் கொண்டு ஓர் உயிர் எக்காரணத்திலாவது வருந்தினால் தற்காக மிக வருந்தி அத்துன்பம் தனக்கு வந்ததாகக் கருதி அதனை அகற்றிவிட எவன் ஒருவன் பணிபுரிகிறானோ அவனே ஹிந்து! என விரித்துரைப்பர். சப்தகல்பதரு என்னும் வடமொழி இலக்கணம், ***''ஹேயம் நிந்தாதி இதி ஹிந்து''*** என்று கூறுகின்றது. நினைவிலும் சொல்லிலும் செயலிலும் இழிவானவற்றை நீக்கி வாழ்பவனே ஹிந்து என்பது அதற்குப் பொருள். இந்து சமயத்தில் கடவுளை அடைய நான்கு மார்க்கங்களைக் கூறுவர். தொண்டு நெறி, மகன்மை நெறி, தோழமை நெறி, ஞானநெறி என நான்கு நெறிகள் உண்டு.

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் 50 ஆண்டுகளாக சமய சமூகப் பணிகள் ஆற்றி வருகின்றது. 'என் கடன் பணி செய்து கிடப்பதே!' என்பது அப்பரடிகள் வாக்கு. அவர் வாக்கின்படி தொண்டு புரியும் இச்சங்கம் மேலும் பல பணிகள் புரிந்து நூற்றாண்டு விழாக் காண வாழ்த்துகின்றோம்!

சங்கப் பொறுப்பாளர்களும் உறுப்பினர்களும் எல்லா நலன்களும் பெற்று வாழவும் பொன்விழா மலர் சிறக்கவும் பொன்விழா வெற்றியடைய ஞானமே வடிவான ஸ்ரீ சண்முகநாதர் திருவடிகளைச் சிந்தித்து ஆசிர்வதிக்கிறோம்!

நாளும் நலனே சூழ்க! வாழ்க வையகம்!

## அருளாசிச் செய்தி



*ஸ்ரீ மாணிக்கவாசகர் மடாலய மகா சந்நிதானம்*
*கொங்குமண்டல குலகுரு, 'இறையருட் செம்மல்*
*'ஆதிசைவ அருட் தோன்றல்'*
***ஸ்ரீலஸ்ரீ இராஜலிங்க மாணிக்கவாசக சுவாமிகள்***
*கூனம்பட்டி ஆதீனம்*
*பல்லகவுண்டம்பாளையம் (அஞ்சல்)*
*விஜயமங்கலம் - 638 056,*
*ஈரோடு மாவட்டம்.*

இலங்கைத் தலைநகராம் கொழும்பில் இந்து பரிபாலன சங்கம் தொடங்கி 50 ஆண்டுகள் நிறைவு பெற்று 'பொன் விழா' காண்பதையறிந்து பேருவகை கொள்கிறோம். அரியதொரு சேவையாற்றும் சங்கத்தினைப் பெரிதும் பாராட்டுகின்றோம்.

உலகில் தோன்றும் கோடானுகோடி பிறவிகளில் மேலான பிறவி மனிதப் பிறவியென்று அருளாளர்களும் ஞானிகளும் மொழிந்துள்ளனர். 'என் கடன் பணி செய்து கிடப்பதே' எனும் அப்பர் வாக்கிற்கிணங்க ஆன்மிக நெறி நின்று சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் சேவை செய்வதே மனிதப் பிறவியின் கடமையாகும். தானும் நன்றாக வாழ்ந்திடவும் பிறரை வாழ வைக்கவும் இதுவே விதிமுறை ஆகும். மக்கள் சேவையே மகேசன் சேவை எனும் முதுமொழிக்கேற்ப இந்த ஐம்பது ஆண்டுகளாக ஆன்மிக வழிநின்று சமயத்திற்கும் சமுதாயத்திற்கும் அரும்பணியாற்றி வரும் இந்து பரிபாலன சங்கத்தின் மேலான தொண்டினைப் பாராட்டி வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றோம்.

சங்கத்தின் அருந்தொண்டு உலகம் உள்ளளவும் குறைவின்றி நிறைவுடன் நிகழ்ந்திட குருவருளும் திருவருளும் துணை செய்ய வாழ்த்தி ஆசிர்வதிக்கின்றோம். சங்கத்து அன்பர்கள் அனைவருக்கும் நம் ஆசிகள் என்றும் உரித்தாகுக.

நிறைந்த ஆசிகள்



## ஆசியுரை


*துர்க்கா துரந்தரி, சிவத்தமிழ்ச் செல்வி*
***கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி* J.P.**
*தலைவர்,*
*ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்*
*தெல்லிப்பழை*
*இலங்கை.*


'சைவமாஞ் சமயஞ் சாரும் ஊழ் பெறலரிது' என்பது சைவசித்தாந்தக் கோட்பாடு. இன்று உலகம் முழுவதும் பரந்து பரவி வருகிறது சைவசமயம் என்றால் அதில் மிகையொன்றுமில்லை. திருக்கோயில்களும் சைவமன்றங்களும் கிழக்கே அவுஸ்ரேலியா தொடக்கம் மேற்கே அமெரிக்கா வரை செறிந்து விளக்குவதை நன்கு அறிய முடிகிறது.

'வாய்ந்தது நம் தமக்கு ஈதோர் பிறவி மதித்திடுமின்' என்று ஆற்றுப்படுத்துகிறார் அப்பர் பெருமான். இந்த வகையில் சைவ மக்களாகப் பிறவி எடுத்த நாம் ஆற்றவேண்டிய அரும்பணிகளை நினைத்துப் பின்பற்ற வேண்டும்.

வடகொழும்புப் பகுதியை தெய்வீகமாக்குவதில் இந்து பரிபாலன சங்கத்துக்கு முக்கிய இடமுண்டு. ஆண்டு பலவாக அங்கு நான் சென்று உரையாற்றியுள்ளேன். கண்ணியமும் கடமையும் தெய்வ நம்பிக்கையும் கொண்ட ஒரு திருக்கூட்டம் இங்கு காலந்தோறும் கடமையாற்றி வந்துள்ளது. இந்தச் சிறப்பிலே பொன்விழாக் காணும் புண்ணியமும் பெற்றுள்ளது.

மதிப்பார்ந்த பெருந்தலைவர் S. P. சாமி அவர்கள் கண்ணியம் வாய்ந்தவர். சங்கத்தை நன்கு நெறிப்படுத்தக் கூடியவர். ஆகவே பொன்விழாக் காணும் பூரிப்பில் நாமும் கலந்து மகிழ்ச்சியடை வோமாக. மேலும் சீரும் சிறப்பும் பெற்று ஓங்கி உயர வேண்டும் என்று சங்கத்தை வாழ்த்தி திருவருளைப் போற்றி அமைகின்றேன்.

நிறைந்த ஆசிகள்!



## மேன்மை கொள் சைவநீதி
## விளங்குக உலகமெல்லாம்


**கு. கார்த்திக்கேசக் குருக்கள்**
*பிரதம குரு*
*ஸ்ரீமத் அருணாசலேஸ்வர தேவஸ்தானம்*
*இல. 68, கோயில் வீதி,*
*கொழும்பு - 15.*


மிகவும் சிறப்பு வாய்ந்த கொழும்பு, முகத்துவாரத்தில், பொதுநல நோக்கத்தோடு ஸ்தாபிக்கப்பெற்ற வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் இவ்வருடம் 50 ஆவது ஆண்டுப் பூர்த்தியையிட்டு, பொன்விழாவை மிகவும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள்.

சங்கத்தின் உறுப்பினர்களின் விடா முயற்சியினாலும், பல தனவந்தர்களின் பொருளுதவியைக் கொண்டும் கட்டப்பட்ட நாவலர் மணி மண்டபமும் அதைச் சார்ந்த 3 மாடிக் கட்டிடமும், பல சமூக சேவைகள், சமய விழாக்கள், கலைவிழாக்கள் முதலியவற்றிற்கு உபயோகப்படுகின்றது. மற்றும், அறநெறிப் பாடசாலை, இசை, நடனம் முதலிய கலைகளுக்குப் பயிற்சியளிக்கிறார்கள்.

எதிர்காலத்தில் மேன்மேலும் இச்சங்கம் பல அரிய சேவைகளைச் செய்து, சகல மக்களும், பிள்ளைகளும் பயன் அடைய வேண்டுமென்று மேற்படி சங்கத்தின் சகல உறுப்பினருக்கும், பொன் விழாவைச் சிறப்பாக நடத்தும் குழுவினருக்கும் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரப் பெருமானின் கிருபை கிடைக்க வேண்டுமென்று பிரார்த்திக்கின்றேன்.

பொன்விழா மிகவும் சிறப்பாக நடக்க வேண்டுமென்றும் பிரார்த்திக்கின்றேன்!

## பொன்விழா காணும்

## வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

# அன்றும் இன்றும்



வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## எங்கள் தலைவர்




திரு. எஸ். பி. சாமி அவர்கள்

இருபத்துநான்கு ஆண்டுகள் ஒரு தாபனத்திலே தலைமைப்பதவி வகிப்பதென்றால் அது பெருமைக்குரிய விடயமென்று யாரும் சொல்லத் தயங்க மாட்டார்கள். அதிலும் அக்குறிப்பிட்ட காலகட்டத்தில் பல்வேறு சங்கடங்கள், யுத்தத்தினால் ஏற்பட்ட தாக்கங்கள் என்பவை மத்தியில் அரைகுறையாக இருந்த கட்டடத்தைக் கட்டியெழுப்பி மேலும் பல கட்டங்களையும் உள்ளடக்கி கம்பீரமாகக் காட்சியளிக்கும் மணிமண்டபமாகத் திகழச் செய்த பெருமை அவரையும், அவருடன் இணைந்து சேவையும் அறிவுரையும் வழங்கிய பொருளாளர் திரு. செல்வரத்னம் அவர்களையும் பொதுச் செயலாளர் திரு. நா. சுப்பிரமணியன் அவர்களையும் சாரும். இம்மூவரின் செல்வாக்கு பல்வேறு வகையிலும் இவ்வளர்ச்சிக்கு வழி வகுத்ததென்று சொன்னால் அது மிகையாகாது. தலைமைத்துவம், அனைவரையும் இணைத்து செயற்படுத்தும் ஆற்றல், துணிவு, எடுத்த காரியத்தை செவ்வனே முடிக்கும் செயல்திறன் இவற்றையெல்லாம் தன்னகத்தே கொண்டவர் எமது தலைவர் திரு. சாமி அவர்கள். அவர்களின் தலைமையிலே இயங்குவதில் நாம் பெருமைப்படுகின்றோம்.

மலர்க்குழு

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## எங்கள் செயலாளர்



### திரு. நா. சுப்பிரமணியன் அவர்கள்

திரு சுப்பிரமணியன் அவர்கள், திரு. எஸ். பி. சாமி அவர்கள் தலைமைப் பதவி ஏற்ற காலம் முதல் இச்சங்கத்தின் பொதுச் செயலாளராகச் சேவையாற்றி வருகின்றார். எமது சங்கத்தின் ஆறாண்டு நிறைவின்போது இதன் வளர்ச்சியில் நாட்டம் காட்டிய திரு. சுப்பிரமணியன் அவர்கள் 1981 ஆம் ஆண்டு சங்கத்தின் வளர்ச்சியில் நேரடியாகப் பங்கு கொண்டாரென்பதை எமது மணிவிழா மலரிலிருந்து அறிந்து கொண்டோம். அடக்கமாகவும் மற்றவர்களின் மதிப்பைப் பெறக்கூடிய விதத்திலும் சங்கத்தை வழிப்படுத்தும் அவரின் ஆற்றலை நாம் பெரிதும் மதிக்கின்றோம். காலத்துக்குக் காலம் ஏற்படும் சங்கடங்களுக்கு உரிய முறையில் முகங்கொடுத்து, அனைவரும் தாம் விரும்பிய விதத்தில் செயற்பட வழிசமைத்து தடம்புரளாது அனைவரையும் அணைத்துச் செல்லும் அவரது பங்களிப்பு மதிக்கப்பட வேண்டியதொன்றாகும். அவரது அறிவுரைகள் எப்பொழுதும் எமக்கு அவசியமாகும்.

மலர்க்குழு

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## எங்கள் பொருளாளர்




### திரு. எஸ். செல்வரத்னம் அவர்கள்

எமது பொருளாளர் திரு. எஸ். செல்வரத்னம் சமூகப் பணியில் அயராத பற்றும், பிறருக்கு உதவும் பண்பும், எடுத்த கருமத்தைத் திறமையாகச் செய்து முடிக்கும் ஆற்றலும் கொண்டவர். அவர் கடந்த இருபத்துநான்கு ஆண்டுகளாக தலைவர் எஸ். பி. சாமி அவர்களின் தலைமையில் சங்கத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றிய பெரியவர். அவர் ஒரு கட்டத்தில் தமது முழு நேரத்தையும் சேவையையும் சங்கத்தின் கட்டடப் பணிக்கே வழங்கியுள்ளார் என்பதை சங்கத்தின் வளர்ச்சியை அறிந்தோர் நன்கறிவர். சங்கத்தின் சகல வேலைகளையும் தன் கடமையெனக் கருதிச் செயற்படுபவர். அவரது துணிவும் நேர்மையான நோக்கும் என்னைக் கவர்ந்த நற்பண்புகளாகும். அவர் தொடர்ந்து சமூகப் பணி செய்ய இறைவன் அருள் பாலிப்பானாக.

மலர்க்குழு

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## உபதலைவர்கள்


திரு. எஸ். கந்தசாமி திரு. வி. நாகதேவன் திரு. ஜே. பி. ஜெயராம்

சங்கத்தின் உபதலைவர்களாகிய இவர்கள் சங்க வளர்ச்சிக்கு தாராளமாகவும் தங்குதடையின்றியும் சகல வழிகளிலும் உதவி வந்துள்ளார்கள். இவர்களின் தீவிரமான பங்களிப்பை சங்கம் பெரிதும் பாராட்டுகின்றது.

மலர்க்குழு

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## மலர்க்குழு



திரு. வை. தேவராஜ்



திரு. சி. ஆனந்தேஸ்வரன்



திரு. சு. கணேஷ்



திரு. கா. கார்திகேசு

இப்பொன்விழா மலரை நேர்த்தியாகவும் சிறப்பாகவும் கண்கவர் வண்ணமாகவும் அச்சிட்ட 'கிறிப்ஸ் பிரின்டேர்ஸ்' நிறுவனத்தினருக்கு எமது நன்றிகள் உரித்தாகுக.

மலர்க்குழு

# 50வது ஆண்டு பொன்விழா வருட நிர்வாக சபை உறுப்பினர்கள்

### காப்பாளர்கள்

தேசமான்ய உயர்திரு. பா. மகாதேவா அவர்கள்
பிரம்மஸ்ரீ கார்த்திகேயக்குருக்கள்
திரு. P. P. தேவராஜ் அவர்கள்
திரு. சு. சத்தியமூர்த்தி அவர்கள்
தேசபந்து. V. T. V. தெய்வநாயகம்பிள்ளை அவர்கள்
திரு. எம். சந்திரபால் அவர்கள்
கௌரவ திரு. R. யோகராஜன் அவர்கள்
திரு. M. வைத்தியலிங்கம் அவர்கள்

### நிர்வாகக் குழுவினர்

| | |
|---|---|
| தலைவர் | S. P. சாமி |
| செயலாளர் | N. சுப்பிரமணியன் |
| பொருளாளர் | S. செல்வரத்னம் |
| உபதலைவர்கள் | S. கந்தசாமி<br>V. நாகதேவன்<br>J. P. ஜெயராம் |
| உபசெயலாளர்கள் | V. தேவராஜ்,<br>M. நித்தியானந்தன் |
| உபபொருளாளர் | N. செல்வராஜா<br>S. கணேஷ் |
| உள்ளகக் கணக்காய்வாளர் | K.செல்லையா |
| பஜனைச் செயலாளர் | S. கனகரத்னம் |
| உதவி பஜனைச் செயலாளர் | V. S. P. பிள்ளை<br>G. யோகராஜன்பிள்ளை |

### நிர்வாக உறுப்பினர்

M. சொக்கலிங்கம்
P. சிவராஜா
செல்வி. N. சுப்புலட்சுமி
K. கார்த்திகேசு
K. S. ராஜரட்ணம்
G. L. பிரதிவிராஜன்
M. திருநீலகண்டன்
K. விஜயகுமார்
S. ஆனந்தேஸ்வரன்
P. சண்முகலிங்கம்
செல்வி. கோமதி சுப்பையா
M. செல்வராஜ்
K. கணேசன்




நிற்பவர்கள் (இடமிருந்து வலம்) : M. நித்தியானந்தன், S. ஆனந்தேஸ்வரன், K. கார்த்திகேசு, P. சண்முகலிங்கம், G. L. பிரதிவிராஜன், M. செல்வராஜ், P. சிவராஜா, G. யோகராஜன்பிள்ளை, K. விஜயகுமார்

அமர்ந்திருப்பவர் (இடமிருந்து வலம்) : செல்வி, கோமதி சுப்பையா, S. கணேஷ், N. செல்வராஜா, N. சுப்பிரமணியன், S. P. சாமி, S. செல்வரத்னம், V. நாகதேவன், S. கந்தசாமி, V. தேவராஜ், செல்வி N. சுப்புலட்சுமி

சமூகமளிக்காதோர் : J. P. ஜெயராம், K. செல்லையா, S. கனகரத்னம், V. S. P. பிள்ளை, M. சொக்கலிங்கம், V. நடராஜா, G. S. இராஜரத்னம், K. கணேசன், M. திருநீலகண்டன்

# வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் பொன்விழா அறிக்கை

**''வேண்டுதல் வேண்டாமை இலான் அடிசேர்ந்தார்க்கு யாண்டும் இடும்பை இல''**

1959ஆம் ஆண்டு ஒரு நாள் தகவல் திணைக்களத்தில் பிரதம மொழிபெயர்ப்பாளராகவும் ஸ்ரீலங்கா மாத இதழ் ஆசிரியராகவும் இருந்த முதலியார் குல சபாநாதன் அவர்களை திரு. வை. முத்துக்குமாரசுவாமி காண வந்திருந்தார். ஸ்ரீலங்கா எனும் சஞ்சிகை அரசாங்கத் தகவல்களை வெளியிடும் இதழாகவிருந்த போதிலும் அதில் எமது வரலாறு, இலக்கிய பாரம்பரியம், பண்பாட்டம்சங்கள் பற்றிய கட்டுரைகளையும் வெளியிட்டு வந்தது. அந்த இதழுக்கு கட்டுரை சமர்ப்பிக்க வந்த திரு. முத்துக்குமாரசுவாமி மகாசிவராத்திரி விழாவுக்கு பணம் சேகரிக்கும் பத்திரம் ஒன்றையும் கொண்டு வந்திருந்தார். அதனைப் படித்துப் பார்த்தபொழுது கொழும்பு வடக்கிலே வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் என்ற பெயரில் ஒரு இந்து அமைப்பு இயங்கி வந்ததை அறிந்து கொண்டேன். நானும் முகத்துவாரத்திலே குடியேறியிருந்ததால் அதனைப் பற்றி அறிய எனக்கு இதன் மூலம் சந்தர்ப்பம் கிட்டியது. அன்று தொட்டு சங்கத்தின் தொடர்பு தொடர்ந்தது. சங்கத்தின் வளர்ச்சியில் பெரும்பங்கு கொண்ட திரு. எஸ். இ. இராசையா என்னை அடிக்கடி வந்து சந்தித்தார். சங்கம் பற்றிய விபரத்தை அறிந்து கொண்டேன். அப்பொழுது பொதுச் செயலாளராக இருந்த திரு. எஸ். முத்து அவர்களால் வெளியிடப்பட்ட சங்கத்தின் ஆறு ஆண்டு அறிக்கை கிடைத்தது. சங்கத்தின் ஆரம்பகால வரலாறும் செயற்பாடுகளும் அதில் தெளிவாக இருந்தன.

அதிலிருந்து சில முக்கிய குறிப்புகளை இங்கு தருகின்றேன்.

**''வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் ஆறு ஆண்டுகளின் அறிக்கைப் பத்திரம் - ஆரம்பம் 5.7.53 முதல் 31.7.59 வரை''**

''இந்து சமுத்திரத்தின் நித்தில தீபமெனப்படும் இவ்விலங்கா தீவின் தலை நகராகிய கொழும்பு மாநகரத்தில் நூற்றுக்குச் சுமார் நாற்பது வீதம் சைவ சமய

மக்கள் வாழ்கின்றனர். இவர்களுக்கு ஆத்மிகத் தொண்டுபுரிவதற்கு விவேகானந்த சபை, இராமகிருஷ்ண சபை, சைவமங்கையர் கழகம் போன்ற ஸ்தாபனங்கள் இருக்கின்றன. இவை பெரும்பாலும் கொழும்பு மத்திய பகுதி, தென்பகுதி ஆகிய இடங்களில் உள்ள சைவமக்களின் சமய வளர்ச்சிக்குத் தொண்டாற்றி வருகின்றன. எனினும் வடகொழும்பில் முக்கியமாக முகத்துவாரம், மட்டக்குளி, மாதம்பிட்டி, புளுமெண்டால், கொட்டாஞ்சேனை முதலிய பகுதிகளில் வசிக்கும் சைவமக்களுக்கென ஒரு சமய தாபனம் இல்லாதது பெருங் குறையாகக் கருதப் பட்டது. இக்குறையை நிவர்த்திசெய்வதற்கு முகத்துவாரம் பகுதியைச் சேர்ந்த **திரு. எஸ். இ. இராசையா, திரு. பி. சிவலிங்கம்** இவர்களின் விடாமுயற்சியால் இப்பகுதியில் இருந்து வந்த காரைநகர் இந்துக் கல்லூரி பிரதம ஆசிரியராக இருந்து இளைப்பாறிய திரு. ஏ. கனகசபை பி.ஏ. அவர்களையும் திரு. எஸ். சின்னத்துரை, திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்களையும் கண்டு கூடி ஆலோசித்து முகத்துவாரத்தில் பள்ளிகொண்டெழுந்தருளியிருக்கும் சர்வார்த்த சித்திவிநாயகர் கோவில் கல்யாண மண்டபத்தில் 1953 ஆம் ஆண்டு ஆடி மீ 5ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திரு. ஏ. கனகசபை பீ. ஏ. அவர்களின் தலைமையில் சைவ முறைப்படி தேவாரம் பாடி, திருவிளக்கேற்றி ''வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்'' என்ற திருநாமஞ்சூட்டி அங்குரார்ப்பணக் கூட்டம் நடைபெற்றது. சங்கத்தைத் தாபனம் செய்த அங்கத்தவர்கள் பின்வருமாறு :-

திருவாளர்கள் ஏ. கனகசபை, பி.ஏ.
எஸ். சின்னத்துரை
வை. முத்துக்குமாரசுவாமி
பி. சிவலிங்கம்
எஸ். இ. இராசையா
எம். வைத்திலிங்கம்
டி. நடராசா
வி. சுப்பையா
எஸ். வைத்தியலிங்கம்
வி. சோமசுந்தரம்
எம். சுந்தரமூர்த்தி
எஸ். ஞானசேகரம்
எஸ். செல்வத்துரை
கே. செல்லத்தம்பி ஆகியோர்கள்.''

அவ்வறிக்கையின்படி சங்கத்தின் முதலாவது பொதுக்கூட்டம் கொட்டாஞ் சேனை குமார கல்லூரி மண்டபத்தில் 1953 ஆம் ஆண்டு ஐப்பசி மீ 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4.30 மணியளவில் உயர்திரு. சேர். கந்தையா வைத்தியநாதன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. ஏ. கனகசபை பி.ஏ. நீதிபதி ஸ்ரீஸ்கந்தராஜா, நியாயதுரந்தரர், வி. ஏ. கந்தையா, டாக்டர் நல்லைநாதன், பிரம்மஸ்ரீ எஸ். ஆர். ஐயர், திருவாளர். எஸ். சின்னத்துரை,

திரு. வை. முத்துக்குமாரசுவாமி ஆகியோர்கள் வடகொழும்பிலே ஒரு சைவத் தாபனத்தினால் அவசியம் ஆற்றப்பட வேண்டிய இலட்சியங்கள். அது செய்யக் கூடிய நன்மைகள் முதலியனவற்றைப் பற்றிச் சொற்பொழிவாற்றினார்கள். கூட்டத்திற்கு தலைமை வகித்த சேர். கந்தையா வைத்திய நாதன் அவர்கள் தமது தலைமை உரையில் கொழும்பு மாநகரத்தில் சைவமக்கள் வாழும் மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் இத்தகைய சங்கங்கள் நிறுவி சைவத்தொண்டு புரியவேண்டும் என வலியுறுத்தினார்கள். அன்று நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பின்வருப வர்கள் சங்கத்து உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

| | |
|---|---|
| போஷகர்கள் | - அமைச்சர் சேர். கந்தையா வைத்தியநாதன்<br>அமைச்சர் திரு. எஸ். நடேசன் |
| தலைவர் | - திரு. ஏ. கனகசபை, பி.ஏ. |
| உபதலைவர்கள் | - திரு. எஸ். சின்னத்துரை<br>- திரு. வை. முத்துக்குமாரசுவாமி |
| கௌரவ செயலாளர் | - திரு. பி. சிவலிங்கம் |
| உபசெயலாளர் | - திரு. எம். வைத்திலிங்கம் |
| நிதியதிகாரி | - திரு. எஸ். இ. இராசையா |
| உப நிதியதிகாரிகள் | - திரு. டி. நடராசா<br>- திரு. வி. சுப்பையா<br>- திரு. வி. சோமசுந்தரம்<br>- திரு. எஸ். ஞானசேகரம் |
| நிர்வாகக் குழுவினர் | - திருவாளர்கள். கே. செல்லத்தம்பி, எஸ். கந்தையா, ஏ. எஸ். எஸ். சங்கரலிங்கம் பிள்ளை, வைத்தியர் சச்சிதானந்தம் ஆகியோர்கள். |

## ''சங்கத்தின் முக்கிய இலட்சியங்கள்

சைவசமய மதச்சார்பை அடிப்படையாகக் கொண்ட தாபனங்களை வடகொழும்பில் நிறுவுதல், சைவப்பிள்ளைகளுக்கென கல்வி வசதிகள் செய்வித்தல், நூல் நிலையம் அமைத்து நூல்களை வழங்குதல், சமய அறிவைச் சொற்பொழிவுகள் மூலமாகப் பெருக்குதல், சைவ உணர்ச்சியை கூட்டுப்பிரார்த்தனை மூலம் ஊட்டுதல், கதா பிரசங்கங்கள் செய்வித்தல் முதலியனவாகும்.

மேலே கூறப்பட்டுள்ள இலட்சியங்களைப் பூர்த்திசெய்வதற்கு நிதி திரட்டுதலே முக்கிய மெனச் சங்கத்தினர் கருதி எவரொருவர் நூறு ரூபாவோ அல்லது அதற்கு மேலான தொகையைச் சங்கத்திற்கு வழங்குகிறார்களோ அவர்களை ஆயுள் அங்கத்தவர்களாக ஏற்றுக் கொள்வதே முதலாவது திட்டமாகக் கருதினர். சங்க நிர்வாகக் குழுவினர்கள் தங்களது ஓய்வு நேரத்தில் மாநகரத்தின் பல வட்டாரங்களிலும் அங்கத்தவர்களைச் சேர்த்தனர். 1959ஆம் ஆண்டில் 51 ஆயுள் அங்கத்தவர்களும் 133 சாதாரண அங்கத்தவர்களும் இருந்தனர்.''

## ''பள்ளிக்கூடம் அமைப்பதில் தாமதம்

ஆறு ஆண்டுகளுக்கு முன் எவ்வாறு சைவப்பிள்ளைகள் மற்றப் பள்ளிக் கூடங்களில் இடமின்றித் தவித்தனரோ அதேநிலைமையில்தான் இன்றும் இருந்து வருகின்றனர் எனக் குறிப்பிட்ட பொதுச் செயலாளர், இந்துக்களுக்கென ஒரு ஆரம்ப தமிழ்ப் பாடசாலையை அமைக்க அங்கத்தினர் முயன்று உழைத்ததாகத் தெரிவித்துள்ளார். பள்ளிக்கூடம் கட்டுவதற்கு அரசாங்கக் காணிகளையும் தனியார் சொந்தக் காணிகளையும் தேடிப் பார்த்து எதுவும் அமையாமலும் பொருளாதாரம் இதற்கு இடம் கொடாமலும் தயங்கித் தவித்த வேளையில் முகத்துவாரம் சர்வார்த்த விநாயகர் கோயிலின் பின்புறமுள்ள காணியில் பள்ளிக்கூடம் அமைக்க வசதி இருப்பதைக் கண்டனர். அதைப் பெற எடுக்கப்பட்ட முயற்சிகள் தோல்வியுற்றன. ஆரம்பத்தில் சங்கக் கூட்டங்கள், தலைவர், உபதலைவர் இல்லங்களில் நடைபெற்றன. 1959ஆம் ஆண்டு தொடக்கம் முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர ஆலயத்தில் நிர்வாகசபைக் கூட்டங்கள் நடைபெற்றதாக சங்க ஆறு ஆண்டு அறிக்கை குறிப்பிடுகின்றது. இக்காலகட்டத்தில் தலைவர் திரு. ஏ. கனகசபை, பி.ஏ., அவர்கள் 1955ஆம் ஆண்டு சுகவீனம் காரணமாக யாழ்ப்பாணம் சென்றமையால் உபதலைவர் திரு. எஸ். சின்னத்துரை அவர்களும் உபதலைவர் திரு. வை. முத்துக்குமாரசுவாமி அவர்களும் தலைமை தாங்கி வந்துள்ளனர். திரு. பி. சிவலிங்கம் அவர்கள் சங்கம் ஆரம்பித்ததிலிருந்து 7. 9. 56 வரை கௌரவ செயலாளராகத் தமது கடமையைச் செவ்வனே நடத்தி வந்துள்ளார். அவரது உத்தியோகமாற்றம் ஏற்படவே துரதிஷ்டவசமாக அவர் பதவியை இராஜினாமா செய்ய நேரிட்டது. அப்பதவிக்கு திரு. முத்து அவர்கள் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். அவரது காலத்திலேயே சங்கத்தின் முதலாவது ஆறாண்டு அறிக்கை வெளிவந்தது. அந்த அறிக்கையின்படி திருவெம்பாவைப் பாட்டுப்பாடி முதன்முதலாக 1957 மார்கழி மாதம் சங்கம் வீதி பஜனையில் இறங்கியது. அன்று முதல் இன்றுவரை திருவெம்பாவை வீதி பஜனை நிகழ்ச்சி மிகச் சிறப்பாகத் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

## ''கூட்டுப் பிரார்த்தனை

*1953 - 1959* ஆறாண்டு அறிக்கை இது பற்றி குறிப்பிடுவதாவது : -

''இங்கு இரண்டு புராதன ஆலயங்கள் இருந்தும் இப்பகுதியில் வாழும் சைவ மக்கள் சரிவர கோவிலுக்குச் சென்று தொழாமலும் அல்லது அங்கு நடைபெறும் விழாக்களில் கலந்துகொள்ளாமலும் இருந்ததைக் கண்டு சைவசமயப் பண்பாடு இப்பகுதியில் தேய்ந்தொழிந்து விடுமோ என்ற ஐயமும் கவலையும் நம் சங்கத்தாரின் மனதைத் தொட்டது. இதை நிவர்த்திசெய்யும் நோக்கத்துடன் 5. 1. 58 இல் வீரகேசரி ஆசிரியராக இருந்த திரு. கே. பி. ஹரன் அவர்களின் தலைமையில் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர ஆலயத்தில் கூட்டுப் பிரார்த்தனை அரங்கேற்றப்பட்டது. ஆரம்பத்தில் வெகு சிலரே சமூகமளித்திருந்தனர். ஆனால் இப்பொழுது கூட்டம் நாளுக்குநாள் கூடிக்கொண்டே வருகின்றது. இக்கூட்டுப் பிரார்த்தனை ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்று வருகின்றது. அதோடு வாரம் தோறும் பல பெரியார்கள் வந்து சைவசமயப் பிரசாரம் நடத்துகின்றனர். கூட்டுப் பிரார்த்தனையை தவறாது விடாமுயற்சி யுடன் நடத்திவரும் நயினை திரு. எஸ். பாலசிங்கம் அவர்களுக்கு சங்கம் தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.''

''சைவ சமயப் பாடசாலை

இப்பகுதியில் சைவசமயப் பிள்ளைகளுக்கு சமய அறிவு இல்லாததை அறிந்த நமது சங்கத்தினர் சுப தினமான தைப்பூசத்தன்று (3. 2. 58) முகத்துவாரம் சர்வார்த்த சித்தி விநாயகர் கோயில் கல்யாண மண்டபத்தில் சைவசமயப் பாடசாலை டாக்டர் நல்லைநாதன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இவ்வகுப்பு ஒவ்வொரு ஞாயிறு தோறும் மாலை 5 மணிக்கு மேற்படி கோவில் மண்டபத்தில் நடைபெற்று வந்தது. சென்ஜோன்ஸ் பாடசாலை ஆசிரியரான திரு. சி. அம்பலப்பிள்ளை அவர்கள் சிறந்த முறையில் இவ்வகுப்பை நடாத்தி வந்துள்ளார். அவருடன் நயினை திரு. அ. மயில்வாகனம், நயினை சு. பாலசிங்கம், செல்வி வி. இராசம்மா ஆகியோரும் ஆசிரியர்களாக கடமையாற்றியுள்ளார்கள்.''

இக்காலகட்டத்தில் எமது விழாக்களை சிறப்பாக நடத்த உதவியவர்கள் முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர ஆலய பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சர்மா அவர்களும் முகத்துவாரம் சர்வார்த்த சித்தி விநாயகர் கோவில் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ நடராஜ ஐயர் அவர்களும் ஆவர். அவர்களை இங்கு நினைவுகூருவதில் பெருமை அடைகின்றோம்.

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் 1970 ஆம் ஆண்டில் மகாசிவராத்திரி சிறப்பு மலர் ஒன்றை வெளியிட்டது. இம் மலர் வெளியிடப்பட்ட காலத்தில் திரு. கு. கனகரத்னம் அவர்கள் சங்கத் தலைவராகவும் திரு. சு. பாலசிங்கம் பொதுச்செயலாளராகவும் சேவையாற்றியுள்ளனர். இம்மலரில் சங்கத்தின் 1953 - 1969 வரையான அறிக்கை சுருக்கமாக வெளியிடப்பட்டுள்ளது. அதிலிருந்து ஆறாண்டு அறிக்கைக்குப்பின் தொடர்ந்து 1969ஆம் ஆண்டு வரையான காலகட்டத்தின் சங்க நடவடிக்கைகள் தரப்பட்டுள்ளன. சங்க வரலாற்றைத் தொடர்ச்சியான தொடர்புபடுத்துவதற்காக அதிலிருந்து சமய பாடசாலையின் நடவடிக்கைகளை இத்துடன் தொடர்புபடுத்த விரும்புகின்றோம்.

> ''1969ஆம் ஆண்டளவில் சமய வகுப்புகள் இரு ஆலயங்களில் நடைபெற்றுள்ளன. முகத்துவாரம் ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்ற வகுப்புகளை திரு. சு. இ. இராசையா அவர்கள் மேற்பார்வையில் திரு. இரா. சத்தியவான் தலைமையில் திரு. சு. சரவணபவானந்தன், திரு. வே. மயில்வாகனம் என்போர் ஆசிரியர்களாகவும் இப்பாடசாலையில் பயின்ற செல்வன். மா. வடிவேந்திரன், செல்வி. கி. பாலசரஸ்வதி என்போர் மாணவ ஆசிரியர்களாகவும் கடமையாற்றி யுள்ளார்கள். கொட்டாஞ்சேனை ஸ்ரீவரதராஜ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற வகுப்புகளை நில்வீதி அரசினர் தமிழ் கலவன் பாடசாலைத் தலைமை ஆசிரியர் திரு. க. சி. சண்முகம் அவர்களும் அவருக்கு உதவியாக திரு. மா. க. கனகரத்னம், திரு. க. இராஜேந்திரன் என்போரும் கல்வி கற்பித்துள்ளனர். மேற்படி பாடசாலைகளில் கற்பித்த ஆசிரியர்கள் யாதொரு வேதனமுமின்றி வகுப்புகளை நடத்தினர் என்று விசேடமாகக் குறிப்பிடப்படல் வேண்டும். இப்பாடசாலை ஆரம்ப காலத்தில் திரு. அம்பலப்பிள்ளை, திரு. வை. முத்துக்குமாரசுவாமி, திருமதி. தங்கரத்தினம் முத்துக்குமார சுவாமி பி.ஏ., ஆகியோர் ஆசிரியர்க ளாகவிருந்து கடமையாற்றிள்ளார்கள். 1965ஆம் ஆண்டு இலங்கை வங்கியில் கடமையாற்றிய திரு. ந. சிவன் அவர்கள் இப்பாடசாலைக்குத் தலைமை ஆசிரியராக இருந்து இச்சமயபாடாசலையை ஓர் வகுப்புத் திட்டத்தின்கீழ் சீரமைத்து கொழும்பு விவேகானந்தசபையோரால் நடாத்தப்பெற்ற சமயபாடப்

பரீட்சைக்கும் மாணவர்களை அனுப்பியுள்ளார். பரீட்சையில் சகல மாணவர் களும் சித்தியடைந்த பெருமை திரு. சிவன் அவர்களைச் சாரும்.'' என மலர் தெரிவிக்கின்றது. சமய பாடசாலையின் செயற்பாடுகள் தொடர்ந்து செயல்பட்டு வந்தன. சமய வகுப்புகள் இரண்டு ஆலயங்களில் நடப்பதற்குப் பதிலாக ஸ்ரீமத் அருணாசலேஸ்வர பெருமான் ஆலயத்தில் மாத்திரம் சமய வகுப்புகள் நடைபெற்றன. அப்பொழுது ஆலயத்தின் பிரதம குருக்களாகவிருந்த பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சர்மா அவர்கள் இவ்வகுப்புகள் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கினார். திரு. எஸ். இ. இராசையா அவர்கள் சிவனடி சேரும்வரை அவரே சமய பாடசாலை சகலதுறை முன்னேற்றத்திற்கும் தூணாக விளங்கினார். திரு. சு. பாலசிங்கம், திரு. இரா. சத்தியவான் தலைமையில் சைவசமய பாடசாலை இயங்கி வந்தது.

சங்கத்தின் 29 ஆண்டு முதல் 35ஆவது ஆண்டு வரையான அறிக்கையில் சமய பாடசாலை பற்றிய குறிப்பு இவ்விதமாகத் தரப்பட்டுள்ளது.

''1982ஆம் ஆண்டிலிருந்து இதுநாள் வரை சங்கத்தின் ஆக்கத்தைப் பொறுப் பேற்றிருந்த ஆட்சிக்குழு மேற்கொண்ட பலதரப்பட்ட பணிகளில் சைவசமய பாடசாலை இயக்கம் முன்னிடம் பெறுகின்றது. சைவசமய பாடசாலை ஒழுங்காக நடப்பதில் கண்ணுங் கருத்துமாக செயல்படுகின்ற திரு. இரா. சத்தியவானை இங்கு விசேடமாகக் குறிப்பிடுதல் அவசியம். அவர் எமது சங்கத்தின் உபசெயலாளராக சங்க நடவடிக்கைகளில் முக்கியமான சைவப் பாடசாலை வேலையைப் பொறுப்பேற்று திறம்பட பணியாற்றி வருகின்றார். பாடசாலையின் தலைமை ஆசிரியராக இயங்கும் இவருக்கு ஆட்சிக்குழு உறுப்பினரான திரு. நவரத்தினம் பக்கபலமாக இருந்து சேவை புரிகிறார். இவர்களிருவரைத் தவிர 5 ஆசிரியர்கள் தொடர்ந்து சேவையாற்றி வருகிறார்கள். இவர்களுக்கு நன்றி உரித்தாகுக. தற்பொழுது இப்பாடசாலையில் 200 மாணவர்கள் சமயக்கல்வி பெறுகின்றனர். இப்பிள்ளைகளுக்கும் ஏனைய பாடசாலைப் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் பகலுணவு 1988 ஒக்தோபர் மாதத்திலிருந்து பெற்றுக் கொடுக்கப்பட்டு வருகின்றது. இதனை செயல்படுத்த முன்னின்று உழைத்த பொருளாளர் திரு. செல்வரத்தினத்திற்கு எமது நன்றி.

உபதலைவர்களில் ஒருவரான திரு. எம். வைத்திலிங்கமும் உப செயலாளர் திரு. மாணிக்கமும் செயற்குழு உறுப்பினர் திரு. டபிள்யூ. நடராஜாவும் பொருளாளரும் சமய பாடசாலையின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்து வருகிறார்கள் அவர்களுக்கு சங்கம் நன்றியைத் தெரிவிக்கின்றது.''

சமயப் பாடசாலையாக அது காலம் வரை இயங்கிய எமது பாடசாலை இந்து சமய, கலாசார அலுவல், தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ திரு. பி. பி. தேவராஜ் மேற்கொண்ட நாடெங்கும் அறநெறிப் பாடசாலைகளை தோற்றுவிக்கும் நடவடிக்கையின் பலனாக எமது சமய பாடசாலை அறநெறிப் பாடசாலையாக மாற்றம் பெற்றது. எமது அறநெறிப் பாடசாலை தொடர்ச்சியான வளர்ச்சியையும் ஏற்பட்ட மாற்றங்களையும் அறிக்கையிடுவதற்காக எமது சங்கத்தின் 36 ஆம் 37 ஆம் ஆண்டுகளின் அறிக்கைப் பத்திரத் திலுள்ள சமய பாடசாலைக் குறிப்பைக் கீழே தருகின்றோம்.

**''சமய பாடசாலை**

திரு. சு. இராசையா அவர்கள் சிவபதவியடைந்தபின் எமது பாடசாலையின் பொறுப்பை திரு. இரா. சத்தியவான் ஏற்று அதன் தலைமை ஆசிரியராகச் சேவை புரிந்தார். இந்து சமய கலாசார அலுவல்கள், தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சு அறநெறிப் பாடசாலைகளின் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் அறநெறிப் பாடசாலைகளுக்கு அவற்றிற்கு அண்மையிலுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் அதிபர்களை அதிபராக நியமிக்கும் பொறுப்பை ஏற்றது. அதன்பிரகாரம் முன்னோடி நடவடிக்கையாக முகத்துவாரம் சி. சி. தமிழ் வித்தியாலய அதிபர் திரு. சந்திரசேகரம் அவர்களை எமது சமயப் பாடசாலையின் அதிபராக இந்து சமய, கலாசார அலுவல்கள் இராஜாங்க அமைச்சு நியமனம் செய்துள்ளது. இப்பாடசாலையில் 10 ஆசிரியர்கள் தொண்டர் ஆசிரியர்களாக சேவை புரிகின்றனர். பாடசாலைக்கு வரும் பிள்ளைகளின் எண்ணிக்கை தினம் தினம் அதிகரித்து வருகின்றது. நாம் எடுத்துக்கொண்ட நடவடிக்கையின் காரணமாக தற்பொழுது இப்பிள்ளைகளுக்கு மதியபோசனமாக பணிசும் பாலும் வழங்கப்பட்டு வருகின்றது. உபதலைவர் திரு. நாகதேவன் சமய பாடசாலைக்கு ரூபா 3000/- பெறுமதியான ஒரு அலுமாரியை நன்கொடையாக வழங்கியுள்ளார் என்பதை நன்றியுடன் அறிக்கையிடுகின்றோம்.''

அடுத்த ஆண்டிலே (90/91) எமது அறநெறிப் பாடசாலையின் வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு ஓர் ஆலோசனைக்குழு நியமிக்கப்பட்டது. திரு. நாகதேவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட குழுவிலே திரு. கா. வீரையா, திரு. எஸ். கந்தசாமி, திரு. மு. சொக்கலிங்கம், திரு. வே. சத்தியசீலன் ஆகியோர் இடம்பெற்றனர். இக்குழு அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்தது. அக்குழுவின் சிபார்சுக்கிணங்க அறநெறிப் பாடசாலை அபிவிருத்திக் குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது.

திரு. வி. நாகதேவன் அவர்களைத் தலைவராகக் கொண்ட அபிவிருத்திக் குழுவிலே திரு. எஸ். கந்தசாமி, திரு. எம். சொக்கலிங்கம், திரு. வே. சத்தியசீலன், திரு. ராஜகுரு ஆகியோர் இடம் பெற்றனர். இக்குழுவில் மும்முரமாக இயங்கிய திரு. சத்தியசீலன் தொழில் காரணமாக வெளிநாடு சென்றமையால் அவ்வெற்றி டத்திற்கு திரு. மாணிக்கம் நியமிக்கப்பட்டார். இக்குழுவுக்கு ஆசிரியர்கள் நியமனம் உட்பட பல அதிகாரங்கள் வழங்கப்பட்டன. எமது அறநெறிப் பாடசாலை நமது கலாசார மண்டபத்தில் ஞாயிறு தோறும் சிறப்பாக இயங்கி வந்தது.

எதிர்பாராத விதமாக ஏற்பட்ட வன்செயல்களின் காரணமாக தமிழ், முஸ்லிம் மக்கள் கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மட்டக்களப்பு ஆகிய பிரதேசங்களிலிருந்து அகதிகளாக கொழும்பு வந்தடைந்தனர். அரசாங்கம் அவர்களை அகதி முகாம்களில் தங்கவைக்க ஏற்பாடு செய்தது. கொழும்பில் சரஸ்வதி மண்டபம், விவேகானந்தசபை மண்டபம், வட கொழும்பு இந்து

பரிபாலன சங்க கலாசார மண்டபம் என்பனவற்றை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நாயகம் கையேற்று அங்கு மக்களைத் தங்க வைத்தார். இதன் விளைவாக எமது கலாசார மண்டபத்தில் 15. 10. 1990 இலிருந்து அறநெறிப் பாடசாலையை அங்கு நடாத்த முடியாதநிலை ஏற்பட்டது. அன்று முதல் இன்று வரை எமது அறநெறிப் பாடசாலை முகத்துவாரம் இந்துக் கல்லூரியில் அறநெறிப் பாடசாலையை நடாத்த அனுமதியளித்த கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கு எமது நன்றியுணர்வுடன் கூடிய பாராட்டைத் தெரிவிக்கின்றோம்.

அறநெறிப் பாடசாலையின் அதிபராக கடமைபுரிந்த திரு. சோ. சந்திரசேகரம் அவர்கள் இளைப்பாறியதைத் தொடர்ந்து முகத்துவாரம் இந்துக் கல்லூரி அதிபராகப் பதவியேற்ற திரு. ஆர். சிவநாதன் அவர்கள் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் தரத்தை மேம்படுத்த அந்தத் துறைகளில் தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டது. திரு. சிவநாதன் அவர்களும் அறநெறிப் பாடசாலை அபிவிருத்திக் குழுத்தலைவரான திரு. வி. நாகதேவன் அவர்களும் குழு உறுப்பினர்களும் இத்துறையில் செயல்பட்டது பாராட்டத்தக்கதொன்றாம்.

சங்கத்தின் தலைமைத்துவத்துக்கெதிராக தொடரப்பட்ட வழக்கின் விளைவாக அறநெறிப் பாடசாலையில் ஆசிரியர்களாக இயங்கிய சிலர் வழக்குத் தீர்ப்பு வரும்வரை பாடசாலைக்கும் கூட்டுப் பிரார்த்தனைக்கும் வரமுடியாதெனத் தெரிவித்தனர். மாணவர்களையும் பாடசாலைக்கு வராமல் தடுத்தனர். செயற்குழு இந்தத் தடைகளையெல்லாம் தகர்த்து புதிய ஆசிரியர்களைக் கொண்டு இயக்குவித்தவர் தலைவர் திரு. எஸ். பி. சாமியும் அபிவிருத்திக்குழுத் தலைவர் திரு. வி. நாகதேவன், குழு உறுப்பினர் திரு. சத்தியசீலன், பாடசாலை அதிபர் திரு. எஸ். சந்திரசேகரம், திரு. இரா. சத்தியவான், திரு. எம். வைத்திலிங்கம், திரு. மாணிக்கம், திரு. எஸ். செல்வரத்னம் ஆகியோர் இக்கட்டான கட்டத்தில் தளராது நின்று செயல்பட்டதை இங்கு சங்கம் பெருமிதத்துடன் குறிப்பிடு கின்றது.

கடந்த ஈராண்டுகளுக்கு முன் திரு. சிவநாதன் அவர்கள் அதிபராகவும் திரு. இரா. சத்தியவான் தலைமை ஆசிரியராகவும் தொடர்ந்து சேவையாற்றிக் கொண்டிருந்த பொழுது அறநெறிப் பாடசாலை அபிவிருத்திக்குழுத் தலைவராகத் தொடர்ந்து நீண்ட காலம் சேவைபுரிந்தபின் திரு. நாகதேவன் அவர்கள் தமக்குப் பதிலாக திரு. எஸ். ஆனந்தேஸ்வரனிடம் அவரது சிபார்சின் பேரில் குழுத் தலைவர் பதவி கையளிக்கப்பட்டது. திரு. ஆனந்தேஸ்வரன் 11 ஆசிரியர்களுடன் மிகச் சிறப்பான பணியை ஆற்றினார். இப்பாடசாலையை நடாத்துவதற்காக சங்கம் ஆண்டு தோறும் இலட்சக்கணக்கான ரூபாவைச் செலவழிக்கின்றது. திரு. ஆனந்தேஸ்வரனின் தலைமையில் திரு. விஜயகுமார், திரு. செல்லையா, திரு. என். செல்வராஜா ஆகியோர் அறநெறிப் பாடசாலை வளர்ச்சிக்காக உழைத்தனர்.

2002 / 03 ஆம் ஆண்டுக் காலத்தில் பொருளாளர் எஸ். செல்வரத்னம் அவர்களின் ஏற்பாட்டில் அறநெறிப் பாடசாலையை மேலும் முன்னேற்றும் நோக்கத்துடன்

அறநெறிப் பாடசாலை பெற்றார் ஆசிரியர் சங்கம் தாபிக்கப்பட்டது. இந்த அங்குரார்ப்பண நிகழ்ச்சியிலே தவலசிங்கராமை பிரதம குரு. வண. ரத்னசிரி தேரரும் முகத்துவாரம் பொலிஸ் நிலைய போதைப்பொருட் தடுப்புப் பொறுப்பதிகாரி திரு. சமரசிங்ஹவும் கலந்துகொண்டனர். அவர் தற்பொழுது பாடசாலைக்கருகாமையில் போதைப்பொருள் எவ்விதம் புழக்கத்திற்குக் கொண்டு வரப்படுகின்றதென்பதை வந்திருந்த பெற்றார்களுக்கும் பிள்ளைகளுக்கும் எடுத்துக்கூறி அதைத் தடுப்பதில் அவர்கள் விழிப்புணர்வுடன் செயல்படவேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். தற்பொழுது பொருளாளர் திரு. எஸ். செல்வரத்னம் அவர்கள் தலைமையில் திருவாளர்கள் எஸ். ஆனந்தேஸ்வரன், ந. செல்வராஜா, கே. செல்லையா விஜயகுமார் அவர்களின் நெருங்கிய ஒத்துழைப்புடன் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. எமது அறநெறிப் பாடசாலை மாணவர்கள் தொடர்ந்து பல அமைப்புகளினால் நிகழ்த்தப்படும் பல்வேறு தன்மையான நிகழ்ச்சிகளில் போட்டியிட்டு வெற்றிவாகை சூடி சங்கத்திற்கு பேரும் புகழும் பெற்றுத் தந்து கொண்டிருக் கின்றனர்.

அண்மையில் அறநெறிப் பாடசாலைக்கு பாராளுமன்ற உறுப்பினர் திரு. பி. இராதாகிருஷ்ணன் அவர்கள் பன்முக வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து பெறுமதி வாய்ந்த கணினி வழங்கியுள்ளார் என்பதை, சங்கீத உபகரணங்களும் சீருடை வழங்க நிதியும் கிடைத்துள்ளதை மகிழ்ச்சியுடன் அறிக்கையிடுகின்றோம்.

எமது சங்க கூட்டுப் பிரார்த்தனைகள், நாயன்மார் குருபூசைகளும் முன்னர் நடத்திய விதத்திலில்லாமல் முற்றுமுழுதாக அறநெறிப் பாடசாலையின் நடவடிக்கைகளாக்கப்பட்டு அறநெறிப் பாடசாலை நிர்வாகிகளினாலும் ஆசிரியர்களாலும் பஜனைச் செயலாளர் உபபஜனைச் செயலாளர்களின் முக்கிய பங்களிப்புடன் நடாத்தப்பட்டு வருகின்றன.

## சங்கத்தின் கல்விப்பணி

எமது சங்க இலட்சியங்களில் ஒன்றான பள்ளிக்கூடம் ஒன்றை அமைத்தலைச் செயல்படுத்தும் ஒரு கட்டம் எழுந்தது. அரசாங்கம் பாடசாலைகளை தேசிய மயமாக்கும் சட்டத்தை நிறைவேற்றி செயல்படத் தொடங்கியதும் அதுநாள்வரை இப்பிரதேசத்தில் கல்விப் பணியாற்றிய கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயங்கள் தம் தேவாலய வளவுகளுக்குள் நடாத்தி வந்த தமிழ்ப் பாடசாலைகளை மூடிவிட்டன. இதனால் இக்கல்வி நிலையங்களில் கல்விகற்ற ஏழைத் தமிழ் மாணவர்கள் அநாதரவான நிலைக்குத் தள்ளப்பட்டனர். வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் இந்த இக்கட்டான நிலைக்கு முகம் கொடுக்க முன்வந்தது. அப்பொழுது சங்கப் பொதுச் செயலாளராகவிருந்த திரு. சிவக்கொழுந்து அவர்களும் திரு. வேலாயுத பிள்ளை அவர்களும் முன்வந்து கல்வி அபிவிருத்திச் சங்கமொன்றைத் தாபித்து எமது சங்க உறுப்பினர்களையே அவ்வபிவிருத்திச் சங்கத்தின் உறுப்பினர்களாக்கி நிதி திரட்டி ஒரு காணியை பழைய கட்டடத்துடன் விலைக்கு வாங்கி, மூடப்பட்ட கிறிஸ்தவ பாடசாலையென்ற பெயரிலேயே பாடசாலையை நடத்தினர். ஆரம்பத்தில் வடகொழும்பு பாராளுமன்ற உறுப்பினராகவும் அமைச்சராகவும் சேவையாற்றிய கௌரவ திரு. வின்சன்ட் பெரேரா பள்ளிக்

கூடத்திற்கு இருமாடிக் கட்டடம் எழுப்ப தமது பன்முக வரவுசெலவுத் திட்டத்தில் பெருந்தொகைப் பணத்தை ஒதுக்கி கட்டடத்தை எழுப்பச் செய்தார். அக்கட்டடத் திறப்புவிழா மிகச் சிறப்பாக நடந்தேறியது. பாடசாலை அரசாங்கத்தினால் கையேற்கப் பட்டதும் அதன் அதிபர் நமது சங்கத்தின் கல்விச்சேவையைப் புறக்கணித்து சங்கத்துடன் எவ்வித தொடர்பும் கொள்ளாது பாடசாலையை நடத்திவந்தார். பின்னர் திரு. எஸ். சந்திரசேகரம் அவர்கள் அப்பாடசாலையின் அதிபராக பதவியேற்றதும் இப்பாடசாலைக்குச் சங்கம் ஆற்றிய சேவையை அறிந்து எம்முடன் தொடர்புகொண்டார். சங்கத்தினர் இப் பாடசாலையின் வளர்ச்சியில் பங்குபற்றவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார். சங்கத்தினர் மும்முரமாகச் செயல்பட்டனர். கௌரவ திரு. வின்சன்ட் பெரேராவையும் அப்பொழுது பாராளுமன்ற உறுப்பினராகவும் இராஜாங்க அமைச்சராகவும் இருந்த திரு. எம். எஸ். செல்லசாமி இந்துசமய இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ், பாராளுமன்ற உறுப்பினர் திரு. திவ்வியராஜன், மேல்மாகாணசபை உறுப்பினர்கள் திருமதி வேலம்மாள் செல்லசாமி, திரு. ஆர். யோகராஜன் ஆகியோரையும் தொடர்புகொண்டு அவர்களின் பன்முக வரவுசெலவுத் திட்டப்பண ஒதுக்கீட்டிலிருந்து நிதி பெற்றுக்கொள்ளப்பட்டது. கௌரவ திரு. வின்சன்ட் பெரேரா மேலும் பெருந்தொகைப் பணத்தைக் கட்டட அமைப்புகளுக்கு வழங்கினார். கட்டடங்கள் மளமளவென்று எழும்பின. வளங்கள் பெருக்கப்பட்டன. அதிபர் எஸ். சந்திரசேகரம் அவர்களின் சலியா முயற்சியால் கல்வி அமைச்சுமூலம் ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கிமூலம் நிதி பெறப்பட்டது. கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி இராஜமனோகரி புலேந்திரனும் இக்கல்லூரியின் வளர்ச்சியில் ஆர்வம் காட்டினார். இவ்விதமாகக் கல்லூரி பல மாடிக் கட்டடங்களுடனும் வளங்களுடனும் கம்பீரமாகக் காட்சி தந்தது. அவ்வேளையில் சங்கத்தார் இந்து சமய கலாசார இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்களை நாடி கல்லூரியை இந்துக்கல்லூரியாக மாற்ற உதவுமாறு கேட்டு இராஜாங்கஅமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் அவர்கள் கௌரவ திரு. வின்சன்ட் பெரேரா அவர்களின் ஒப்புதலுடன் கிறிஸ்தவக் கல்லூரியாகவிருந்த இக்கல்லூரியின் பெயரை இந்துக் கல்லூரியாக மாற்ற ஏற்பாடு செய்தார். திரு. எஸ். சந்திரசேகரம் அவர்கள் இளைப்பாறியதும் திரு. ஆர். சிவநாதன் இக்கல்லூரியின் அதிபரானார். அவரும் சங்கத்துடன் இணைந்து இயங்கினார். இதனால் கல்லூரி மேலும் வளர வழி வகுக்கப்பட்டது. இந்துக்கல்லூரிக்கும் மகுடம்போன்று அருள்மிகு பிள்ளையார் கோயிலொன்றும் தற்பொழுது கல்லூரியில் அமைக்கப்பட்டுள்ளது. திரு. சந்திரசேகரம் காலத்திலிருந்து தொடர்ந்து வந்த அதிபர்கள் எமது அறநெறிப் பாடசாலையின் அதிபர்களாக அளப்பரிய பணியாற்றி வருகின்றனர். சங்கத்தின் கல்விப்பணி பற்றிய கனவு இன்று நனவாகியிருப்பதை அளவற்ற மகிழ்ச்சியுடன் இங்கு அறிக்கையிடுகின்றோம். இக்கல்லூரியின் ஆரம்ப காலத்திலிருந்து இன்றுவரை அதன் வளர்ச்சிக்காக உழைத்த பெரியார்கள் அனைவரையும் நன்றிப் பெருக்குடன் நினைவு கூருகின்றோம்.

## சங்கத்தின் கட்டடப்பணி

நமது சங்கம் 1958ஆம் ஆண்டு முதல் ஸ்ரீமத் அருணாசலேஸ்வர ஆலயத்தில் சைவசமயப் பாடசாலையை நடாத்தியும் கூட்டுப் பிரார்த்தனைகளையும் நடாத்தி வந்தது. அது பற்றிய விபரத்தை மகாசிவராத்திரி விழா மலரிலிருந்து பெற்று ஏற்கனவே விபரமாகக் குறிப்பிட்டிருக் கின்றோம். அக்காலத்தில் அப்பணியில் உழைத்தவர்களின் பெயர்கள் இவ்வறிக்கையில்

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்




நாவலர் மணிமண்டபம்

இடம்பெறுவது அவசியம் என்பதால் நன்றியுணர்வுடன் நினைவு கூருகின்றோம். அப்போதைய சங்கப் பெரியார்களின் முன்யோசனையினாலும் தளரா முயற்சியினாலும் காணி பெறப்பட்டு நிதி திரட்டப்பட்டு மணிமண்டபம் அமைக்க முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டன. இப்பாரிய பணியில் முன்னின்று உழைத்தவர்கள் திரு. சொ. முத்து, திரு. எஸ். இ. இராசையா, திரு. எஸ். பாலசிங்கம் ஆகியோர் முதன்மை வகித்தனர். 19. 05. 1995இல் மணிமண்டபத் திறப்புவிழா நினைவாக நினைவுமலர் வெளியிடப்பட்டது. அதில் தலைவர் எஸ். பி. சாமி அவர்கள் தலைவரின் சில வார்த்தைகள் என்ற தலைப்பில் இவ்விதம் எழுதுகின்றார்.

''சில நண்பர்கள் 1981ஆம் ஆண்டு என்னிடம் வந்து இச்சங்கத்தின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக்கொள்ளுமாறு வற்புறுத்தி வேண்டிக்கொண்டார்கள். அவ்வேண்டுகோளுக்கு அமைய நான், இத் தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டேன்.

இன்று நாம் அமர்ந்திருக்கும் இம் மணிமண்டபம் எமக்கு முன்னர் பதவி வகித்த நிர்வாக சபையினர் அமைத்த அடித்தளத்திலேயே எழுப்பப்பட்டதாகும் என்பதை நன்றியோடு நினைவு கூருகின்றேன். அவர்கள் இட்ட அத்திவாரமே இன்று இம் மணிமண்டபமாகக் காட்சி தருகின்றது. அவர்களில் திரு. சொ. முத்து, திரு. க. சிவக்கொழுந்து, திரு. சு. இராசையா, திரு. இரா. ஞானசம்பந்தன் ஆகியோரை நாம் நினைவுகூர வேண்டும்.

இம் மகிழ்ச்சியைப் பகிர்ந்துகொள்ள அவர்களிற் பலர் இன்று இல்லை. அவர்களையும் நினைவுகூர்ந்து முன்பிருந்த நிர்வாகத்தினருடன் இம்மகிழ்ச் சியைப் பகிர்ந்து கொள்வதில் பெருமை அடைகின்றேன்.

இம் மணிமண்டபப் பணி 1981ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டிக் கால்கோள் செய்யப்பட்டபோதும் 1995ஆம் ஆண்டிலேயே திறப்புவிழா நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது. இடைப்பட்ட 14 வருட காலமாக இம்மண்டபத்தைப் பூர்த்திசெய்யமுடியாத காரணத்தை எடுத்துக்கூறவேண்டியது எனது கடமை யாகும்.

1981ஆம் ஆண்டு ஆரம்பித்த மண்டபப் பணி 1983ஆம் ஆண்டு நிறைவு பெற்றுத் திறப்புவிழாக் காண இருந்தவேளையில் 1983ஆம் ஆண்டு யூலை மாதத்தில் நடந்தவற்றை நான் சொல்லி நீங்கள் அறியவேண்டியதில்லை என நினைக்கிறேன். அதனைத் தொடர்ந்து ஏற்பட்ட இன்னல்களால் தடைப்பட்டி ருந்த கட்டிட வேலை மீண்டும் 1990ஆம் ஆண்டு தொடங்கப்பட்டுப் பூர்த்தியாகித் திறப்பு விழாக் காண இருக்கும் வேளையில் அரசாங்கம் அகதிகளைக் குடியேற்றி முகாம் நடத்தியதின் பயனாகத் திறப்புவிழாத் தடைப்பட்டது. தடைப்பட்டது மாத்திரமன்றிக் கட்டிடம் உருமாறிய நிலையிலேயே மீண்டும் கட்டிடத்தைப் பெற்றோம். அதன்பின் 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திருத்த வேலைகள் பூர்த்தியாகி இன்று திறப்பு விழாக் காணும் நிலையில் இருக்கின்றோம்.

இத்தனை சோதனைகளுக்கும் வேதனைகளுக்கும் முகங்கொடுத்து மனம் தளராது உறுதியோடு என்னுடன் முன்செல்லத் துணை நின்று ஒத்துழைப்பு வழங்கிய என் அன்புள்ளங்கள் சிலரைப் பற்றிக் குறிப்பிடாமல் இருக்கமுடியாது.

உபதலைவர் தம்பி வி. நாகதேவன், பொருளாளர் தம்பி எஸ். செல்வரத்தினம், செயலாளர் அண்ணன் என். சுப்ரமணியம், ஆட்சிக்குழு உறுப்பினர் தம்பி வை. தேவராஜ் இவர்களோடு உபதலைவர் திரு. கே. ஆதியப்பன் ஜே.பி., திரு. எஸ். கந்தசாமி, திரு. கா. வீரையா, சிவநெறிச் செம்மல் இரா. சத்தியவான், திரு. எஸ். சந்திரசேகரம் பி.ஏ., திரு. வி. சத்தியசீலன், திரு. சோலமலைத்தேவர் ஜே.பி. ஆகியோர் கலங்காது கரங்கொடுத்து உதவினர். இவர்களைப் பற்றி சொல்வதானால் இந்த மண்டபக் கூரையைத் தாங்கி நிற்பது சுவருக்குள் மறைந்திருக்கும் கொங்கிறீட் தூண்கள், அது போன்றுதான் இவர்களும் சங்கத்திற்கு பல வகையில் உதவிகள் செய்துகொண்டிருக் கின்றார்கள். மற்றும் சங்கத்தின் தேவைகளையிட்டு அணுகும்பொழுது தேவைகளையறிந்து மனம் கோணாது உதவிகள் பல புரியும் வள்ளல்களை நினைவு கூருவது எனது கடமையாகும்.

அவ்வரிசையில் திரு. எஸ். சத்தியமூர்த்தி, திரு. வி. நாகதேவன், திரு. கணேஸ்வரன், திரு. கே. ஆதியப்பன் ஜே.பி., திரு. எஸ். செல்வரத்தினம், திரு. தில்லைநாதன் ஆகியோரை நான் சிறப்பாகக் குறிப்பிட வேண்டும்.

எமது சங்கம் வருடாவருடம் நடத்திவரும் விழாக்களுக்குப் பலவகைகளில் உதவிகள் புரிந்துவரும் நல்லுள்ளங்களை நினைவு கூருவது நம் கடமையாகும்.

வணக்கத்துக்குரிய சிவாச்சாரியார் கார்த்திகேயக் குருக்கள் தம்பதியினருக்கு நாம் என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம். சங்கத்தில் பல பொறுப்புக்களை வகித்தவரும் இப்பொழுது சமய பாடசாலைத் தலைமையாசிரியராகவும் கூட்டுப் பிரார்த்தனைச் செயலாளராகவும் செயலாற்றும் சிவநெறிச் செம்மல் திரு. இரா. சத்தியவான் அவர்களையும் நான் இங்கு நினைவு கூருகின்றேன்.

மண்டபத்தை நிர்மாணிக்க ஆரம்ப முதல் அயராது உழைத்த பொறியியலாளர் திரு. ம. சந்திரபால் அவர்களையும் நினைவு கூருகின்றேன்.

இங்கு குறிப்பிட்டவர்களைத் தவிர மண்டப வளர்ச்சிக்கு உதவியவர்கள் பலர் இருக்கின்றார்கள். அவர்கள் எல்லோரையும் தனித்தனியே பெயர் குறிப்பிட்டு நன்றி நவில முடியாமைக்கு வருந்துகின்றேன்.''

## சங்க நாவலர் மணிமண்டபத் திறப்பு விழா

எமது சங்கத்தின் நாவலர் மணிமண்டபத் திறப்புவிழா 1995ஆம் ஆண்டு மே 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை நடைபெற்றது.

அவ்விழாவிற்கு முதுபெரும் தமிழ்த் தலைவரும் கால்நடை அபிவிருத்தி, கிராமியத் தொழிற்றுறை அமைச்சருமான கௌரவ திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் அவர்கள் தலைமை தாங்கி மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்து வைத்தார். அகில இலங்கை இந்து மாமன்றத் தலைவர் திரு. கைலாசபிள்ளை மண்டபத்தைத் திறந்து வைத்தார்.

வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் தலைவர் சுவாமி ஆத்மகணானந்தா அவர்கள் அருளுரை வழங்கினார்கள். கலாநிதி. வித்துவான் க. ந. வேலன் சமயப் பேருரை நிகழ்த்தினார்.

நாட்டின் முக்கிய பெரியார்கள் பலர் சிறப்பு அதிதிகளாக விழவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இச்சந்தர்ப்பத்தில் சங்கம் உடப்பூர் பெரி சோமாஸ்கந்தர் அவர்களுக்கு ''ஆன்மிகச் சித்தர்'' என்ற பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவித்தது.

ஆன்மிகச் சித்தர் உடப்பூர் பெரி சோமாஸ்கந்தர் குழுவினர் நாவலர் பெருமான் ஆற்றிய சைவப் பணிகளை எளிய தமிழில் யாவரும் விளங்கும் விதத்தில் மிகச் சிறப்பானதோர் கதாகலாட்சேபம் செய்து விழாவை நிறைவு செய்தனர்.

மண்டபத் திறப்பு விழாவின் பின்னர் தொடர்ந்து மண்டபம் பல கட்டடங்களாக விஸ்தரிக்கப்பட்டு திருமணங்களின்போது உணவு பரிமாறவும் மேலதிக கட்டடமும் கட்டப்பட்டது. மூன்று மாடிகளைக் கொண்ட மணிமண்டபத்தை விஸ்தரிக்க மேலும் நிதி உதவி பெறப்பட்டது.

மணிமண்டபத்தைக் கட்டியெழுப்ப பணத்தாலும் பொருளாலும் உதவி செய்த பெரியார்கள் அநேகர். அவர்களனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றி.

இம்மணிமண்டப வளவினுள் சீரான பாதைகளை அமைப்பதற்கு கொழும்பு மாநகரசபை உறுப்பினர் மதிப்புக்குரிய திரு. ரி. குருசாமி அவர்கள் தமக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து ரூ 2 1/2 லட்சம் வழங்கியுள்ளார் என்பதை இங்கு நன்றியுடன் நினைவு கூருகின்றோம்.

பொன்விழா நிறைவு பெற்றதும் அப்பட்டியல் மண்டபத்தை அலங்கரிக்க ஏற்பாடு செய்யக் கருதியுள்ளோம். எங்கள் வெற்றிக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவரையும் பெயரிட்டுக் குறிப்பிட முடியாதிருப்பதற்காக எம்மை பொறுத்தருளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

## சேர். பொன்னம்பலம் அருணாசலம் அவர்கள் நினைவு தினம்

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து சேர். பொன் அருணாசலப் பெரியாரின் சிரார்த்த தினத்தை சமய வழி நின்று பெருமகனின் திருவுருவச் சிலைக்கு சமயச் சடங்குகளை நிறைவேற்றி நாட்டின் தலைசிறந்த பெரியார்களைக் கொண்டு மலர்மாலை சூட்டி உரைகள் நிகழ்த்துவதை ஆண்டுதோறும் தொடர்ந்து நடாத்தி வருகின்றோம். பாராளுமன்ற முன்றலில் (ஜனாதிபதி செயலகம்) கொண்டாடப்படும் இந்நிகழ்ச்சிகளில் பிரதமர்களும் சபாநாயகர்களும் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கல்விமான்களும் கொழும்பிலுள்ள அனைத்து இந்து சமய அமைப்புகளின் பிரதிநிதிகளும் அருணாசலப் பெரியாரின் வாரிசுகளும் பங்குபற்றியுள்ளனர்.

இதனைப் பெருவிழாவாகக் கொண்டாடுவதில் நாம் பெரும்பங்கு கொள்ளுகின்றோம். இவ்விழாக்கள் பற்றிய விபரங்கள் அவ்வவ்வாண்டு அறிக்கைகளில் இடம்பெறுகின்றன.

## கலைமகள் விழா

எமது சங்கத்தின் கலைமகள் விழா, எமது அறநெறிப் பாடசாலை மாணவர்கள் சமயப் பேச்சு, கட்டுரை, பண்ணிசை, நடனம் ஆகிய துறைகளில் அடைந்திருக்கும் திறமைகளை எடுத்துக் காட்டும் களமாக அமைத்துள்ளோம். சரஸ்வதி பூஜையுடன் பேச்சு, கட்டுரை, பண்ணிசைப் போட்டிகளில் பங்குபற்றி வெற்றிபெற்ற பிள்ளைகளை மேலும் ஊக்குவிக்கும்

நோக்குடன் பெறுமதி வாய்ந்த பரிசுகளை வழங்குகின்றோம். இவ்விழாவில் அருணாசலேஸ்வர ஆலயப் பிரதம குருக்கள் பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்களும் அவரது பாரியாரும் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர். ஒவ்வொரு சரஸ்வதி பூசைகளிலும் அவர்கள் வழங்கும் பரிசில்கள் பெரும் பகுதியாக அமைகின்றன. பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாசசர்மா அவர்களுக்கும் அவருக்குப் பின் ஆலயப் பொறுப்பேற்ற பிரம்மஸ்ரீ கார்த்திகேயக் குருக்கள் தம்பதியினருக்கும் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது.

ஆண்டுதோறும் நடைபெறும் கலைமகள் விழா விபரம் எமது ஆண்டறிக்கைகளில் விபரமாகத் தரப்பட்டுள்ளன.

## மகாசிவராத்திரி விழா

எமது சமய நிகழ்ச்சிகளில் பிரதானமாக விளங்குவது மகாசிவராத்திரி விழாவாகும். கொழும்பு மாநகரிலுள்ள ஆலயங்களனைத்திலும் நடைபெறும் இப்பெரு சமயவிழாவில் வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் தனியொரு இடத்தைப் பெற்றுள்ளது.

ஆண்டுதோறும் வெவ்வேறு தன்மையான நிகழ்ச்சிகளையும், பூசைகளையும் நடாத்தி பல்லாயிரக் கணக்கான சைவ மக்களின் கவனத்தை சிவநாம பஜனையில் ஈர்க்கும் பணியில் எம்மை அர்ப்பணித்துள்ளோம். எமது அன்னதானத்தில் ஆயிரக்கணக்கில் மெய்யன்பர்கள் கலந்துகொண்டு தம் விரதத்தை நிறைவுபடுத்து கின்றார்கள் என்பதை இறையுணர்வுடன் கூறி வைக்கின்றோம். எமது ஆண்டறிக்கைகள் அவ்வக்காலத்தில் மும்முரமாக இயங்கிய வர்களைப் பெயரிட்டு அவர்களின் பங்களிப்புக்கு நன்றி பகர்ந்துள்ளோம்.

## திருவெம்பாவை வீதி பஜனை

1957ஆம் ஆண்டு சங்கத்தால் ஆரம்பிக்கப்பட்ட திருவெம்பாவை வீதி பஜனை இன்றும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆரம்ப காலத்தில் திரு. சு. பாலசிங்கம் அவர்களின் தலைமையில் பண்ணிசையுடன் வீதி வந்த பஜனைக் குழுவினர் பின்னர் திரு. இரா. சத்தியவான் தலைமையிலும் நடைபெற்றன. தற்பொழுது நயினை திரு. சு. பாலசிங்கத்தாரின் அன்புத் தம்பி திரு. சு. கனகரத்னம் அவர்களின் தலைமையில் நடைபெறுகின்றது. திரு. வி. எஸ். பி. பிள்ளை தொடர்ந்து இப் பஜனை களில் ஈடுபட்டு வருகின்றார்.

ஆரம்ப காலத்தில் நூற்றுக் கணக்கான மெய்யடியார்கள் புடைசூழ வீதிவலம் வந்த பஜனைக்குழு தற்பொழுது ஆயிரக்கணக்கான சைவப் பெரியார்களும் தாய்மார்களும் யுவதிகளும் புடைசூழ வீதிவலம் வருகின்றனர்.

தற்பொழுது ஆட்சியிலிருக்கும் உத்தியோகத்தர் காலத்தில் தலைவர் எஸ். பி. சாமி அவர்களும் உபதலைவர் திரு. வி. நாகதேவன் அவர்களும் பொருளாளர் திரு. செல்வரத்னம் அவர்களும் திருவெம்பாவை பத்து நாட்களிலும் கலந்து நிகழ்ச்சிக்கு தலைமைத்துவம் அளித்துள்ளார்கள். செயற்குழு உறுப்பினர்கள் அனைவருமே இந்நிகழ்ச்சியில் பங்குபற்றி விழாவுக்கும் சங்கத்திற்கும் பெருமை தேடித் தருகின்றனர். திருவெம்பாவை பூர்த்திவிழா சிறப்புற அனைத்து வழிகளிலும் பெரும்பங்களிப்புச் செய்யும் தலைவர் எஸ். பி. சாமி அவர்களுக்கு சங்கம் என்றும் கடப்பாடுடையது என்று கூறின் அது உயர்வு நவிற்சி ஆகாது.

## அஞ்சலி செலுத்துகின்றோம்

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் ஆக்கத்திற்கும் வளர்ச்சிக்கும் அளப்பரிய பங்களிப்புச் செய்த பெரியார்களை பொன்விழா கொண்டாடும் சங்க செயற்குழு நினைவுகூர்ந்து அவர்களின் ஆத்மா சாந்திபெற பிரார்த்திக்கின்றோம்.

| | |
|---|---|
| அமரர் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச சர்மா | - காப்பாளர் |
| அமரர் வை. முத்துக்குமாரசுவாமி | - தலைவர் |
| அமரர் திருமதி. தங்கரத்னம் முத்துக்குமாரசுவாமி | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. சௌமியமூர்த்தி தொண்டமான் | - காப்பாளர் |
| அமரர் திரு. பொ. சிவலிங்கம் | - பொதுச்செயலாளர் |
| அமரர் திரு. இரா. ஞானசம்பந்தன் | - தலைவர் |
| அமரர் திரு. சு. இ. இராசையா | - பொருளாளர் |
| அமரர் திரு. சொ. முத்து | - தலைவர் |
| அமரர் திரு. காலகண்டன் | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. சு. பாலசிங்கம் | - பொதுச் செயலாளர் |
| அமரர் திரு. ந. நடராஜா | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. டபிள்யூ. நடராஜா | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. என். எஸ். சதாசிவம் | - உபபொருளாளர் |
| அமரர் திரு. பாலசுப்ரமணியம் | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. எஸ். ஆர். மாயன் | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. ஏரம்பமூர்த்தி | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. வே. மயில் வாகனம் | - உபதலைவர் |
| அமரர் திரு. ரி. நீதிராஜா | - காப்பாளர் |
| அமரர் திரு.வே. சத்தியசீலன் | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் திரு. கரு. ஆதியப்பன் | - உபதலைவர் |
| அமரர் செல்வி ரேவதி | - செயற்குழு உறுப்பினர் |
| அமரர் சி. தில்லைநாதன் | - காப்பாளர் |
| அமரர் சேகர் | - செயற்குழு உறுப்பினர் |

இங்கு பெயர் குறிப்பிடப்படாத சங்க வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்த அமரத்துவம் எய்த அனைத்து உறுப்பினர்க்ளினதும் ஆத்ம சாந்திக்கு பிரார்த்திக்கின்றோம்.

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கப் பொன்விழா மலருக்கென ஆய்வுக் கட்டுரையைத் தயாரித்தளிக்க ஆய்வுக்குழுவொன்று தெரிவுசெய்யப்பட்டது. பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களின் தலைமையில் பேராசிரியர் சி. பத்மநாதன் அவர்கள், பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள், திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்கள் கம்பவாரிதி திரு. இ. ஜெயராஜ் அவர்கள், திரு. கே. நீலகண்டன் அவர்கள், புலவர். இ. திருநாவுக்கரசு அவர்கள்

அடங்கிய குழுவுக்கு திரு. இ. ஏ. ஜோதிலிங்கம் அவர்கள், ஆய்வுத் தொகுதிப்பணி இணைப்பாளராக செயற்பட்டார். இக் குழுவினால் தயாரிக்கப்பட்ட 'இந்து பாரம்பரியம்' என்ற தொகுதி கொழும்பு மாநகரின் இந்து பாரம்பரியம் இயங்கும் தன்மை பற்றிய ஆய்வு அடங்கியுள்ளது. இதனைத் தயாரிக்க திருமதி ஹேமா சண்முக சர்மா அவர்களும் இன்னும் பலரும் பங்களிப்புச் செய்துள்ளார்கள். எமது வேண்டுகோளை ஏற்று இத்தொகுதியை எமது பொன்விழா மலருக்கு வழங்கியமைக்காக சங்கம் தனது இதயங் கலந்த நன்றியை அனைவருக்கும் தெரிவித்துக் கொள்கின்றது.

பொன்விழா மலர் வெளியிட ஒத்துழைப்பு நல்கிய வர்த்தகப் பெரியார்களுக்கும் நிறுவனங்களுக்கும் விளம்பரம் சேகரித்த எமது நல் உள்ளங்களுக்கும் மலரைச் சிறப்பிக்கவும் பொன்விழாவை நடாத்த நிதி வழங்கிய திரு. எஸ். பி. சாமி, திரு. வி. நாகதேவன், திரு. எஸ். கந்தசாமி, திரு. வை. தேவராஜ், திரு. கா. கார்த்திகேசு, திரு. சு. கணேஷ், திரு. ஜே. பி. ஜெயராம், திரு. திருநீலகண்டன், திரு. சி. ஆனந்தேஸ்வரன் அவர்களுக்கும் ஏனைய பெரியார்களுக்கும் சங்கத்தின் சார்பில் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**நா. சுப்பிரமணியன்**

செயலாளர்

*(நிர்வாக சபை சார்பாக)*

# வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம்
# பொன்விழா

## நிகழ்ச்சி நிரல்

## 25. 09. 2004 சனிக்கிழமை

### காலையரங்கு

| | | | |
|---|---|---|---|
| *10.00* | கொடியேற்றம் | | |
| | சங்கங்கொடி | : | திரு. எஸ். கந்தசாமி *(உபதலைவர், வ.கொ.இ.ப.ச)* |
| | நந்திக்கொடி | : | திரு. வி. நாகதேவன் *(உபதலைவர், வ.கொ.இ.ப.ச)* |
| | தேசியக்கொடி | : | என். சுப்பிரமணியன் *(செயலாளர், வ.கொ.இ.ப.ச)* |
| *10.05* | மங்கள விளக்கேற்றல் | : | திரு. கார்த்திகேசக்குருக்கள் *(பிரதம குருக்கள்)* |
| | | : | திரு. வி. கைலாசபிள்ளை *(தலைவர், அகில இலங்கை இந்து மாமன்றம்)* |
| | | : | திரு. ரந்தெனிய பிரதி பொலிஸ் மா அதிபர், நிர்வாகப் பிரிவு, பொறுப்பதிகாரி, முகத்துவாரப் பொலிஸ் நிலையம் |
| | | : | செல்வி. முருகேசு *(அதிபர், இந்துக் கல்லூரி, முகத்துவாரம்)* |
| | | : | திரு. துரைசாமிச் செட்டியார் *(ரஞ்சனாஸ் குரூப்)* |
| *10.10* | கடவுள் வாழ்த்து | : | திரு. எஸ். கனகரத்தினம் *(பஜனை - செயலாளர் வ.கொ.இ.ப.ச)* |
| *10.20* | வரவேற்புரை | : | என். சுப்பிரமணியன் *(செயலாளர், வ.கொ.இ.ப.ச)* |
| *10.30* | வாழ்த்துரை | : | திரு. ஜெ. திவ்யநாதன் *(முன்னாள், பா.உ)* |
| *10.45* | தலைமையுரை | : | திரு. எஸ். தில்லைநடராஜா *(மேலதிக செயலாளர், கல்வி அமைச்சு)* |
| *11.00* | மலர் வெளியீடு | | |
| | வெளியிடுபவர் | : | வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் |
| | முதல் பிரதி பெறுபவர் | : | திரு. எஸ். சத்தியமூர்த்தி *(மஸ்கன்ஸ் லிமிடட்)* |
| | மலர் ஆய்வுரை | : | பேராசிரியர். கா. சிவத்தம்பி |

| | | |
|---|---|---|
| *11.30 சிறப்புரை* | : | பேராசிரியர் 'நாவுக்கரசர்' சோ. சத்தியசீலன் *(இந்தியா)* |
| *12.30 பரிசில் வழங்குதல்* | : | பேச்சு, கட்டுரை போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு |

## மாலையரங்கு

| | | |
|---|---|---|
| **5.30 மங்கள விளக்கேற்றல்** | : | திரு. வை. தேவராஜ் *(வ.கொ.இ.ப.ச)*<br>திரு. எஸ். கணேசன் *(வ.கொ.இ.ப.ச)*<br>செல்வி. கோமதி *(வ.கொ.இ.ப.ச)*<br>திரு. என். செல்வராஜ் *(வ.கொ.இ.ப.ச)*<br>திரு. எம். சொக்கலிங்கம் *(வ.கொ.இ.ப.ச)*<br>திரு. கே. செல்லையா *(வ.கொ.இ.ப.ச)*<br>திருமதி. மாணிக்கவாசகர் |
| **5.45 பண்ணிசைக் கச்சேரி** | : | சங்க அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள்<br>செல்வி. ஆனந்தி, செல்வி. சுப்புலட்சுமி<br>செல்வி யசோதினி |
| **6.15 ஆசியுரை** | : | திருமதி. வசந்தா வைத்தியநாதன் |
| **6.30 தலைமையுரை** | : | திரு. டீ. எம். சுவாமிநாதன்<br>*(சட்டத்தரணி, பொன்னம்பலவாணேஸ்வர ஆலய அறங்காவலர்)* |
| **6.45 சிறப்புரை** | : | திரு. ஆ. சிவநேசச்செல்வன்<br>*(இலங்கை இதழியல் கல்லூரி)* |
| **7.15 பட்டிமன்றம்** | : | நடுவர் -<br>பேராசிரியர் நாவுக்கரசர் சோ. சத்தியசீலன்<br>**விடயம் : அன்றுதொட்டு இன்றுவரை நமது சமயத்தையும் பண்பாட்டையும் பெரிதும் பேணுபவர்கள் ஆண்களே, பெண்களே**<br>பங்குபற்றுவோர் |

| **ஆண்களே** | **பெண்களே** |
|---|---|
| த. சிவகுமார் | இ. ஜெயராஜ் |
| கி. உதயகுமார் | ஸ்ரீ. பிரசாந்தன் |
| த. சிவசங்கர் | ஐ. கதிர்காமசேகரன் |

# வடகொழும்பு இந்து பரிபாலன சங்க பொன்விழாவை முன்னிட்டு மாண்புறு சேவைக்காக கௌரவிக்கப்படும் சங்கப் பெரியார்கள்

திரு. எஸ். இ. இராசையா

திரு. எம். வைத்திலிங்கம்

திரு. பி. சிவலிங்கம்

பிரம்மஸ்ரீ கார்த்திகேசக் குருக்களும் பாரியாரும்

திரு. எஸ். முத்து

திரு. சு. பாலசிங்கம்

திரு. கு. கனகரத்னம்

திரு. சு. பாலசிங்கம்

திரு. கா. வீரையா

திரு. சிவக்கொழுந்து

திரு. எஸ். எம். சிவலிங்கம்

திரு. வீ. நடராஜா

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## அறநெறிப் பாடசாலை அங்கத்தவர் மற்றும் ஆசிரியர்கள்



# ஐம்பது ஆண்டுகள் தலைமை தாங்கியவர்கள்

## தலைவர்கள்

| | |
|---|---|
| திரு. ஏ. கனகசபை, பீ.ஏ. | (1953 - 1959) |
| திரு. வை. முத்துக்குமாரசுவாமி, பீ.ஏ. | (1959 - 1962) |
| திரு. எஸ். சின்னத்துரை | (1962 - 1963) |
| திரு. கு. கனகரத்தினம் | (1963 - 1970) |
| திரு. சொ. முத்து | (1970 - 1974)<br>(1975 - 1978) |
| திரு. க. சிவக்கொழுந்து | (1974 - 1975) |
| திரு. இரா. ஞானசம்பந்தன் | (1978 - 1981) |
| திரு. எஸ். பி. சாமி | (1981 - ) |

## பொதுச் செயலாளர்கள்

| | |
|---|---|
| திரு. பொ. சிவலிங்கம் | (1953 - 1959) |
| திரு. சொ. முத்து | (1956 - 1960) |
| திரு. வே. கனகரத்தினம் | (1960 - 1961) |
| திரு. சு. பாலசிங்கம் | (1960 - 1967)<br>(1968 - 1970)<br>(1972 - 1974) |
| திரு. இரா. சத்தியவான் | (1967 - 1968) |
| திரு. வே. மயில்வாகனம் | (1970 - 1972)<br>(1974 - 1975) |
| திரு. அ. ஆ. இரா. இராஜேந்திரன் | (1975 - 1977) |
| திரு. க. புண்ணியமூர்த்தி | (1977 - 1978) |
| திரு. க. சிவக்கொழுந்து | (1978 - 1981) |
| திரு. நா. சுப்பிரமணியன் | (1981 - ) |

## பொருளாளர்கள்

| | |
|---|---|
| திரு. சு. இ. இராசையா | (1953 - 1966) |
| திரு. சொ. முத்து | (1966 - 1969) |
| திரு. தா. திருமலை | (1969 - 1970) |
| திரு. வி. சுப்பையா | (1970 - 1972)<br>(1975 - 1978) |
| திரு. இரா. ஞானசம்பந்தன் | (1972 - 1974) |
| திரு. வே. கங்காதரன் | (1974 - 1975) |
| திரு. சே. சிவராசா | (1978 - 1978) |
| திரு. வெ. செல்வராஜ் | (1979 - 1981) |
| திரு. சு. செல்வரத்தினம் | (1981 - ) |

## நிர்வாகச் செயலாளர்கள்

| | |
|---|---|
| திரு. இரா. சுந்தரம் | (1964 - 1967)<br>(1968 - 1969) |
| திரு. ந. நடராசா | (1967 - 1968)<br>(1969 - 1970) |
| திரு. க. ஆறுமுகம் | (1970 - 1971) |
| திரு. சு. மு. சிவலிங்கம் | (1971 - 1975, 1978) |
| திரு. இ. தியாகராஜ் | (1975 - 1978, 1981) |
| திரு. க. இ. வேலாயுதபிள்ளை | (1979 - 1981) |

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## மகாசிவராத்திரி மலரின் முகப்புத் தோற்றம்



# வட கொழும்பு இந்து பரிபாலன சங்கம் பொன்விழா

## நிகழ்ச்சி நிரல்

## 26. 09. 2004 ஞாயிற்றுக்கிழமை

### காலையரங்கு

| | | | |
|---|---|---|---|
| 9.30 | மங்கள விளக்கேற்றல் | : | எஸ். சுப்பிரமணியம் செட்டியார் (கதிரேசன் மண்டபம், பம்பலப்பிட்டி)<br>திரு. பொன். வல்லிபுரம் (அறங்காவலர், ஸ்ரீ மயூரபதி அம்மன் ஆலயம், கொழும்பு-6)<br>திரு. ஆர். சிவராமன் (அறங்காவலர், ஸ்ரீ ஆனந்த ஐயப்பசுவாமி ஆலயம், கொழும்பு-15)<br>திரு. ரவி சுவாமி (ஐயப்பசுவாமி ஆலய குரு சுவாமி)<br>திரு. எஸ். வாசுதேவன் (ஜனதா ஸ்டீல்) |
| 9.35 | கடவுள் வாழ்த்து | : | செல்வி. சுப்புலட்சுமி, செல்வி. ஆனந்த ஜயசேகரி (அறநெறிப் பாடசாலை ஆசிரியைகள்) |
| 9.45 | வரவேற்புரை | : | திரு. வை. தேவராஜ் (உபசெயலாளர், வ.கொ.இ.ப.ச) |
| 9.50 | ஆசியுரை | : | திரு. ஆத்மகணானந்தஜி (தலைவர், இராமகிருஷ்ண மிஷன்) |
| 9.55 | தலைமையுரை | : | திரு. தெ. ஈஸ்வரன் (தலைவர், கம்பன் கழகம், கொழும்பு-6) |
| 10.05 | சிறப்புரை | : | வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் |
| 10.20 | கௌரவித்தல் | : | சங்கத்தின் ஆரம்பகாலப் பெரியார்கள் |
| 10.30 | கருத்தரங்கம் | : | **விடயம்: எதிர்கால இந்துமத வளர்ச்சியும் பங்களிப்பும்**<br>**தலைவர்** பேராசிரியர் நாவுக்கரசர் சோ. சத்தியசீலன்<br>**பெண்களின் பங்களிப்பு**<br>திருமதி சாந்தி நாவுக்கரசன் (பணிப்பாளர், இ.ச.தி.)<br>**நிறுவனங்களின் பங்களிப்பு**<br>திரு. க. நீலகண்டன் (பணிப்பாளர் இ.ச.தி.)<br>**ஆச்சாரியார்களின் பங்களிப்பு**<br>பிரம்மஸ்ரீ விஸ்வநாராயணக் குருக்கள் |

**ஆசிரியர்களின் பங்களிப்பு**
திருமதி ஹேமா சண்முகசர்மா

**மாணவர்களின் பங்களிப்பு**
திரு. லோ. பிரசன்னா வருண்

**மாலையரங்கு**

| | | |
|---|---|---|
| 4.30 | மங்கள விளக்கேற்றல் : | திரு. எஸ். ஆனந்தேஸ்வரன் (வ.கொ.இ.ப.ச)<br>திரு. பி. ஜெயராம் (வ.கொ.இ.ப.ச)<br>திரு. கே. கார்த்திகேசு (வ.கொ.இ.ப.ச)<br>திரு. எம். திருநீலகண்டன் (வ.கொ.இ.ப.ச)<br>திரு. என். நித்தியானந்தா (வ.கொ.இ.ப.ச)<br>திரு. ஜி. யோகராஜன்பிள்ளை (வ.கொ.இ.ப.ச)<br>திரு. எல். பிருதிவிராஜன் (வ.கொ.இ.ப.ச) |
| 4.45 | வரவேற்புரை : | திரு. எஸ். செல்வரத்னம்<br>(பொருளாளர் வ.கொ.இ.ப.ச) |
| 4.55 | ஆசியுரை : | தவத்திரு. சிவகுருநாதன் அடிகளார்<br>(முனைவர், உலக ஆன்மீக எழுச்சிப் பேரணி) |
| 5.10 | தலைமையுரை : | மாண்புமிகு சி.வி. விக்னேஸ்வரன் (நீதியரசர்) |
| 5.20 | சிறப்புரை : | திரு. அ. அப்துல் அகாத்<br>(உப அதிபர், ஸாஹிரா கல்லூரி) |
| 5.45 | அறநெறிப் பாடசாலை மாணவர்கள் நிகழ்ச்சி | |
| 6.50 | வழக்காடு மன்றம் : | நீதிபதி -<br>பேராசிரியர் நாவுக்கரசர் சோ. சத்தியசீலன் (இந்தியா)<br>**விடயம் : நமது சமயத்தை வளர்த்தெடுக்காத நாம் குற்றவாளிகள்**<br>**வாதி** திரு. த. சிவகுமார்<br>**பிரதிவாதி** திரு. ஐ. கதிர்காமசேகரன் |
| 7.45 | நடனம் : | நாட்டியக்ஷேத்ரா நடனப்பள்ளி மாணவிகள் வழங்கும் நடனம்<br>தயாரிப்பு இயக்கம் - திருவேணி நாராயணசாமி |
| 8.15 | நாடகம் : | எதிலும் புதுமை வேண்டும்<br>தயாரிப்பு இயக்கம் - திரு. பி. யோகநாதன்<br>(கொ. ஜெயசக்தி மன்றம்) |

# 50வது ஆண்டு
# பொன்விழாவையொட்டி
# அகில இலங்கை ரீதியாக நடாத்தப்பட்ட
# கட்டுரை, பேச்சுப் போட்டிகளின் விபரம்

## கட்டுரைப் போட்டி

### தலைப்பு : ஆறுமுகநாவலர்

**முதலாம் இடம்**

**குகனேஸ்வரி செல்வராசா**
கலைவாணி மில் லேன்,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

**இரண்டாம் இடம்**

**ச. கோபிகிருஷ்ணா**
111/1, விவேகானந்தர் வீதி,
நற்பிட்டிமுனை - 01,
கல்முனை.

**மூன்றாம் இடம்**

**அர்ச்சனா தேவராஜா**
2006 (உ/த) கலைப்பிரிவு,
யா/ வட. இந்துக்கல்லூரி,
பருத்தித்துறை.

**சான்றிதழ் பெறுவோர்**

**சி. பிரதீபா**
கேணியடி வீதி,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**வாமதேவன் சத்தியா**
மே/பா த. வாமதேவன்
பொறியியல் திணைக்களம்,
காகித கம்பனி, வாழைச்சேனை.

**பாத்திமா இனூஸா ரசீத்**
3/7, J. P. லேன்,
5ம் குறுக்குத்தெரு, புத்தளம்.

**செ. தர்ஷிகா**
649, 7ஆம் யுனிற்,
இராமநாதபுரம், கிளிநொச்சி.

**இரா. மதி உமாகாந்தி**
பட்டல்கலை தோட்டம்,
டிக்கோயா.

**வித்யாஷினி சிவசுப்பிரமணியம்**
76/18, லேடிமைக்கலம் டிறைவ்,
ஆவேலியா, நுவரெலியா.

**எம். பி. பாத்திமா ரெஸ்மின்**
808/A, மல்வானஹின்னை,
அக்குறணை 20850, கண்டி.

### தலைப்பு : விபுலானந்தர்

**முதலாம் இடம்**

**செல்வி. ம. ஹலீடா**
85, மூர் வீதி,
திருகோணமலை.

**இரண்டாம் இடம்**

**ஜனகா செல்வராஜ்**
278, பிரதான வீதி,
மாத்தளை.

**மூன்றாம் இடம்**

**இரா. சிவசங்கர்**
19, 1வது குறுக்குத்தெரு,
பெரியமுல்லை, நீர்கொழும்பு.

**சான்றிதழ் பெறுவோர்**

**புவனேஷ்வரன் பவித்ரன்**
மாருதம், சாமித்தம்பி வீதி,
ஆரையம்பதி - 01,
மட்டக்களப்பு.

**கே. விவேகானந்தன்**
தரம் : 13
என்பீல்ட் த.ம.வி.,
டிக்கோயா.

**ம. மைத்ரேயி**
45A, கோணேசபுரம்,
உவர்மலை,
திருகோணமலை.

**கனகரத்தினம் சொரூபன்**
465/1, காலி வீதி,
கொழும்பு - 06.

**மா. சரண்ராஜ்**
கட்டடங்கள் திணைக்கள விடுதி,
கல்லூரி வீதி, பள்ளிமுனை,
மன்னார்.

**வ. பிரேமன்**
ஆண்டு 12, விபுலாநந்தா மத்திய
கல்லூரி, மத்திய வீதி,
காரைதீவு - 05.

**அஸ்மியா சரூக்**
37/8C, வைத்தியசாலை வீதி,
வேவதென்ன, பண்டாரவளை

## பேச்சுப் போட்டி

### தலைப்பு : சைவமும் தமிழும்

**முதலாம் இடம்**

**துரையப்பா கிரோஜன்**
34/1, இரண்டாம் குறுக்குத்தெரு,
பிள்ளையார் கோவில் வீதி,
மட்டக்களப்பு.

**இரண்டாம் இடம்**

**இராஜேந்திரன் சிவசங்கர்**
134, கடற்கரைத் தெரு,
நீர்கொழும்பு.

**மூன்றாம் இடம்**

**இ. டர்ஷக**
15, பஸல்ஸ் லேன்,
வெள்ளவத்தை, கொழும்பு - 06

**சான்றிதழ் பெறுவோர்**

**சுரேஸ்குமார் லிசோகுமார்**
233110C, மஹவத்தை வீதி,
கொழும்பு - 14.

**அனுஷா குமாரகுருகுலசிங்கம்**
228/12, முகத்துவார வீதி,
கொழும்பு - 15.

**ஜயனி பரமானந்தம்**
மணிமண்டபம் லேன்,
நவாலி வடக்கு, மானிப்பாய்.

**ஆர். கிருஷாந்தினி**
199/53, டிம்பபுள்ள வீதி,
ஹற்றன்.

### தலைப்பு : தமிழ்த் தேசியம்


**முதலாம் இடம்**

**வித்யாஷினி சிவசுப்பிரமணியம்**
76/18, லேடிமைக்கலம் டிறைவ்,
ஆவேலியா, நுவரெலியா

| | |
|---|---|
| முதலாவது பரிசுத் தொகை | 10 000/= |
| இரண்டாவது பரிசுத் தொகை | 7 500/= |
| மூன்றாவது பரிசுத் தொகை | 5 000/= |

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

# தாபித அங்கத்தவர்கள்



இருப்பவர்கள் : (இடமிருந்து வலம்)
திருவாளர்கள் பொ. சிவலிங்கம், சு. இ. இராசையா, வே. சோமசுந்தரம், வீ. சுப்பையா

சமுகமளிக்காதோர் :

திருவாளர்கள் ஏ. கனகசபை, பீ.ஏ., எஸ். சின்னத்துரை, வை. முத்துக்குமாரசுவாமி, பீ. ஏ., எம். வைத்திலிங்கம், ரீ. நடராசா, எஸ். வைத்திலிங்கம், எம். சுந்தரமூர்த்தி, எஸ். ஞானசேகரம், என். செல்லத்துரை, கே. செல்லத்தம்பி

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## சங்க ஆரம்ப தலைவர், செயலாளர், பொருளாளர்

திரு. ஏ. கனகசபை பீஏ
தலைவர் (1953-1956)

இவர் இச்சங்கத்தை
ஆரம்பித்து
சைவமும் தமிழும்
தழைத்தோங்க
வழிவகுத்த பெரியார்
ஆவர்.



திரு. பொ. சிவலிங்கம்

(கௌரவ பொதுச் செயலாளர்)
(1953 - 1955)

இச்சங்கத்தை ஆரம்பித்தவர்களில் ஒருவரான இவர் சங்க முன்னேற்றத்திற்காக அயராது உழைத்தவர்.




திரு. கா. கார்திகேசு

(கௌரவ பொருளாளர்)
(1953 முதல் 1966 வரை)

இச்சங்கத்தை ஆரம்பித்த பெருமையும், ஆரம்ப காலத்தில் கௌரவ பொருளாளராக இருந்து சங்கத்தின் நிதி நிலையை உயர்த்துவதற்காக அல்லும் பகலும் உழைத்து, அதைப் பாதுகாத்த பெருமையும் இவரைச் சார்ந்ததே யாகும்.

வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

# ஆரம்பகால உறுப்பினர்கள்




இடமிருந்து வலம்

திரு. சொ. முத்து, திரு. வை. முத்துக்குமாரசுவாமி, பீ.ஏ., திரு. பொ. சிவலிங்கம், திரு. எஸ். சின்னத்துரை, எம். வைத்திலிங்கம், திரு. சு. இ. இராசையா, எஸ். சபாநாயகம், திரு. கந்தையா, திரு. பி. திருநாவுக்கரசு


வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## மணிமண்டப அடிக்கல் நாட்டுவிழா



வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம்

## மணிமண்டப திறப்புவிழா மலரின் முகப்புத் தோற்றம்



卐

# வடகொழும்பு இந்து பரிபாலன சங்க பொன்விழா மலரை ஆக்க உதவிய புரவலர்களும் வர்த்தக நிறுவனங்களும்

## KANNAN CD WORLD

SPECIALIST IN SALES OF ORIGINAL AUDIO & VIDEO CDS

No. 131-1/1, Ismalyas Complex, Sea Steet, Colombo - 11
Tel : 0094-11-2543202, 0094-11-5358189
Fax : 0094-11-2543203

## SCAN DISTRIBUTION CENTRE LANKA (PVT) LTD.

....... for all your logistics needs.

# 46/12, "SAYURU SEVENA"
3rd floor, Navam Mawatha, Colombo - 02, Sri Lanka
Tel : 2307790 & 1
Fax : 2307792

## JOAN ARC (PVT) LIMITED.

(DUTY FREE SHOP)

Importers & Exporters of Electronics, Electrical & Leather products

No. 18A, Arrival Terminal, Bandaranayake International Airport, Katunayake, Colombo, Sri Lanka
Tel : 011-2256727

## Expo Cargo Links (Pvt) Ltd.

126/3/19, 3rd Floor, YMBA Building, Colombo - 1, Sri Lanka
Tel : (+94-1) 2330481, 2542731/3; Fax : (+94-1) 2441881

Head Office
144, Pickerings Road, Colombo - 13, Sri Lanka
Tel : (+94-11) 2430968; Fax : (+94-1) 2430969
e-mail : expocargo@expo.lk

## Orient Lanka Ltd.

(DUTY FREE SHOP)

Chocolates & Perfumes

Bandaranayake International Airport, Katunayake, Colombo, Sri Lanka.

## EXPO LANKA FREIGHT LIMITED.

10, Milepost Avenue, Colombo - 03.
Sri Lanka.
Tel : (+94-11) 2575169 (Multiple lines) Ext. 152
Fax : (+94-11) 2574213 or (94)-(11) 2576725
e-mail : christy@expolanka.com
website : www.expolanka.com

## Metro Stationers (Pvt) Ltd.

25, Maliban Street, Colombo - 11
Tel : 2541269, 2437134, 2451545
Fax : 4-710811; e-mail : metrosts@slt.lk

## BEACON FORWARDERS

728, Bloemendhal Road, Mutwal, Colombo - 15, Sri Lanka.
Tel : 2523841, 2540547 Fax : 2529324
e-mail : beacon@sltnet.lk

## Royale Electronics (Pvt) Ltd.

Duty free shop: 16 A, Arrival Lounge, Katunayake Airport.
Tel : 256070 Ext. 6697; Direct : 252675

Show Room : 258, Sea Street, Colombo - 11
Tel : 4-714681

Head Office : 316/1, Sea Street, Colombo - 11
Tel : 2335013 / 4-714682, Fax : 4-714850

**NIKKI GARMENTS (PVT) LTD.**
**D.D.S. POLESACK (PVT) LTD.**
233/3, Hekitta Road, Wattala.
Tel : 4-814720, 2940495, 2940406; Fax : 2940497
100, St. Andrews Road, Colombo-15
Tel : 2523633 / 2524194; Fax : 2522212

**Dart**
**Dartrans (Private) Limited.**
"Dart Freight Centre"
No. 260, Sri Ramanathan Mawatha,
Colombo - 15, Sri Lanka.
Tel : 2448648 (Auto lines) Fax : 2448628
e-mail : dartcmb@dartwestasia.com

**SOUTH ASIA GRANITE & MARBLE (P) LTD.**
Biyagama Export Processing Zone
Malwana, Biyagama

**Farzana Clearing Agency [Pte] Ltd.**
F 75, First Floor, People's Park, Gaswork Street,
Colombo - 11, Sri Lanka
Tel : 2347794, 4-710699
Fax : 4-715257

**WORLD EXPRESS (CMB) LTD.**
INTERNATIONAL FREIGHT FORWARDERS, CUSTOM HOUSE & TRANSPORT AGENTS AIR, SEA & PROJECT CARGO CONSOLIDATORS
No. 80, Muhandiram Road, Colombo - 3, Sri Lanka.
Tel : 2338091, 2439316 ; Fax : 00 94 11 2335833
e-mail : worldexpresscmb.com
Branches : No. 8, BOI Complex Ground Floor, FTZ, Biyagama
Logitics Center, No.51, Pamunugama Rd., Bopitiya, Ja-Ela

**MILLENNIUM ASSOCIATES**
CLEARING & FORWARDING AGENTS
46/6, C, Basement, Y.M.B.A. Building
Colombo - 1, Sri Lanka
Tel : 2381514

**SINGER**
SINGER INDUSTRIES (CEYLON) LTD.
No. 435, Galle Road, Ratmalana, Sri Lanka.
Tel : 2634416, 2634421, 2637746
Fax : 2637151 / 4-212775
e-mail : sicmat@slt.lk / mmsic@singersl.com

**RICHARDSON PROJECTS (PVT) LTD**
342, Level Road, Colombo - 03.
Sri Lanka.
Tel : 94-112564454/5
Fax : 94-112564456
e-mail : naz@eureka.lk

**UNITED CARGO**
MANAGEMENT [PVT] LTD
Agents for
SCL CONTAINER LINE
#23, 17th Lane, Colombo - 03, Sri Lanka.
Tel : 4-718020 (10 Lines), 5-557371 Fax : 4-718024, 5-557372
e-mail : wiraj@unitedcargomgt.com

**SANGEETH ENTERPRISES**
CUSTOMS HOUSE CLEARING AND FORWARDING AGENCY
10/D, Y.M.B.A Building, Colombo - 1, Sri Lanka.
Tel : 0777 552619

**Baurs**

Over a Century of Dedication
To Agriculture

**A Baur & Co Ltd.**
5, Upper Chatham Street, Colombo-1
Tel : 2320551 - 6; Fax : 2448493

**WHEELS** LANKA (PVT) LTD.
Importers and Dealers in Motor Vehicles
Showroom : 214, Highlevel Road, Kirillapone Rd, Colombo - 06
Tel : 2852994, 2815175; Fax : +94 11 2817223
e-mail : colombo@wheels.lk
Branches : 411/1, Havelock Road, Colombo - 06.
223/2, Katugastota Road, Kandy.

**SATHIYA SAI ENTERPRISES (PVT) LTD.**
CUSTOMS CLEARING & FORWARDING AGENTS
EXIMP REPRESENTATIVES
No. S, 3rd Floor, Colombo Central
Supper Market Complex, Reclamation Road, Colombo -11
Tel : 2327271, 437161 ; Fax : 2333059
e-mail : balaraj_s@sltnet.lk

**Taj Cargo Service**
CLEARING FORWARDING & CUSTOMS
HOUSE AGENTS
39, George R. D. Silva Mawatha,
Kotahena, Colombo - 13
Tel : 4-613285, 2321382; Fax : 231382

**வாழ்த்துக்கள்**
In Memory of
**Late Mr. Ponniapillai Sivalingam**
Wishes from
Nalayinee Sivalingam (London)
Sivayinee Sivalingam (London)
42, Muthuwella Mawatha, Colombo -15

**D. W. Freighters (Pvt) Ltd.**
No. 14/7, Demel Road
Uyana, Morotuwa.
Tel : 0777 756874
2641585

**SPRINT SPERRY**
CLEARING & FORWARDING CO.,(PVT) LTD.
No. 39, Col. T.G. Jayawardana Mawatha,
Colombo - 03, Sri Lanka
Tel : 00 94 11 4-736020-21-22-23
Fax : 4-736021
e-mail : s&scarsales@eol.lk

**Semiramis Supermarkets (Pvt) Ltd.**
No. 487/6, Bloemendhal Road, Colombo - 13, Sri Lanka.
Tel : 2441804/5, 2436559, 2436579 Fax : 2433971
Supermarkets
"Royal Park Condominium" Rajagiriya.
& "Nivasiepura" Ekala, Ja-Ela.

**T.N.A. Agencies**
Customs House Cleaning Agencies
No. 18, Mahawela Place
Kirulapona
Tel : 077 7760996 / 4719782

வட கொழும்பு இந்து பரிபாலன சங்கத்தின் 50 ஆண்டு பூர்த்தியின் புகழையும் வளர்ச்சியையும் கண்டு பூரிக்கும் வேளையில் மேலும் பல சமயத் தொண்டுகளையும் பணிகளையும் செய்து வளர வேண்டுமென்று வாழ்த்துகின்றோம்.

**வி. விக்னேஸ்வரன்** **நா. விஜயரத்தினம்**
**வி. வித்தியானந்தன்** **நா. ராதாகிருஷ்ணன்**
**ரா. ராஜ்பிரகாஷ்**
65/337, Vystooyke Rd., Colombo - 15, Sri Lanka

**Fire & Safety Company**

FIRE SAFETY ENGINEERS

No. 23 B, Mahavidyalaya Mw., (Barber Street)
Colombo - 13, Sri Lanka.
Tel : 2337891, 0777- 752067; Fax : 2387621, 2385345

**முருகேசு & மாயன் குடும்பம்**

65/268, விஸ்டவைக் வீதி, கொழும்பு - 15

வாழ்த்துக்கள்

**ரவீந்திரன் மாயன் குடும்பம்**

No. 42, E. S. Fernando Mw.,
Colombo - 06.

**COLONIAL HARDWARE STORES**

Importers & Distributors &
General Hardware Merchants

No. 427, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2431950, 2435414, 2347981-83-89
Fax : 2387826, 2334090 e-mail : info@colonialhw.com
web : www.colonialhw.com

**SEVANA STEEL**

Importers & General Hardware Merchants

5-A, Abdul Jabbar Mawatha, Colombo - 12.
Sri Lanka.
Tel : 2449337, 2343445

**DAYA ELECTRICAL**

79 C, First Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel / Fax : 2342752, 2389498
e-mail : mtr@eureka.lk

**KALIKOS**

*Dealers in Textiles & Readymade Garments*

No. 114/1, 3rd Cross Street,
Colombo - 11, Sri Lanka.
Tel : 2439414

**METAL TRADERS**

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

31-2/9 Quarry Road, Colombo - 12, Sri Lanka.
Tel : 2434280, 2336580 Fax : 2336247
e-mail : metal@eureka.lk

**Ganesh Textiles**

(Private) Limited

*Wholesale & Retail Dealers in Textiles*

No. 81-83, Main Street,
Colombo - 11, Sri Lanka.
Tel : 2325128, 2343078

**Esco Enterprises**

DEALERS IN TEXTILES, SPECIALIST IN INDIAN SARONG

**Favourite Shopping Centre**

128-A, 1/F, Keyzer Street,
Colombo - 11, Sri Lanka.
Tel : 2541038

**Aum Tex**

Dealers in Imported
Readymade Garments

Karnate Super Market,
164/2, Keyzer Street, Colombo - 11. Sri Lanka
Tel : 2387364

**JEEVAN**

Wholesale & Retail Dealers in Textiles
Specialists in Gray Cloth & Pocketing Materials
No. 99, Third Cross Street, Colombo - 11, Sri Lanka.
Tel : 00 94 11 2449869
Tele / fax : 00 94 11 2430603

**New Mano Hard-ware**

Importers & General Hardware Merchants
No. 355 1/1, Old Moor Street,
Colombo - 12. Sri Lanka
Tel : 2338057, 2342417
Fax : 2342417

**SRI KARTHIK MERCHANTS**

Importers, exporters, Wholesalers in Essential Food Commodities, Commission Agents etc...
83, 85, Fifth Cross Steet, Colombo -11, Sri Lanka
Tel : 2423888, 2432733, 4-724465, Fax : 2338568
e-mail : srikarthik83-85@sol.lk

**R. K. V INTERNATIONL**

Importers of Food Commodities, Exporters, General Merchants & Commission Agents
175A, 5th Cross Steet, Colombo - 11, Sri Lanka
Tel : 2334454, Telefax : 2348133
e-mail : r.k.v.chillies@sol.slk

**NEW RAJAH STORES**

Importers - Exporters - REPRESENTATIVES
No. 55A, 5th Cross Steet,
Colombo - 11

**Lucky Star**

Wholesale & Retail Dealers in Eversilverware Fancy Goods, Cosmetic Items and All kinds of Indian Goods
No. 157/2, Sri Kathiresan Street, Colombo - 13, Sri Lanka.
Tel : 2449813

**CARE LANKA**

Importers & Exporters General Merchants & Commission Agents for Local Produce
No. 177, 4th Cross Steet,
Colombo - 11
Tel : 011- 2323835, 4-715005

**SUN TRADERS (PVT) LTD.**

No. 73, 5th Cross Steet,
Colombo -11
Tel : 2421961, 5378535

**GNANAM IMPORTES (PVT) LTD.**

No. 79, 5th Cross Steet, Colombo - 11, Sri Lanka
Tel : 2449255, 2439334, 2441944, 2472171
Fax : 4715443, 2393339
e-mail : gipl@panlanka.net

**OM SARAVANA CO.**

General Merchants & Commission Agents
No. 229, 5th Cross Steet, Colombo - 11, Sri Lanka
Tel : 2433864, 2435168

## new George & Co. (Pvt) Ltd.

General Merchants & Commission Agents

No. 76, 4th Cross Steet,
Colombo - 11
Tel : 2325973, 2348218

## OMEGA TRADERS

General Merchants & Commission Agents

No. 62 A, Old Moor Steet, Colombo - 12, Sri Lanka
Tel : 2341747, 2432350
Fax : 2434905

## THEPTHA TRADING COMPANY

General Merchants & Commission Agents

No. 22, 4th Cross Steet,
Colombo - 11
Tel : 2325973, 2348218

## R. T. S. AND CO.

Importers, Exporters, General Rice Merchants, Commission Agents, Sugar Distributirs and Dealers in Sri Lanka Produce

69, 5th Cross Steet, Colombo - 11, Sri Lanka
Tel : 2387230, 2387231 Fax : 2380467

## NEW CHELLAH TRADER

General Merchants & Commission Agents for Local Produce

49 A, Forth Cross Steet, Colombo -11, Sri Lanka
Tel : 2438932, 4-712469
e-mail : srikarthik83-85@sol.lk

## Goldan Ray Cabbin

Vegetarian Restaurant "N" Sweet Stall
Vegetarian Foods Suppliers of Wedding & Parties
Special Function Lunch, Special Order for Breakfast & Dinner

No. 203, Sea Steet, Colombo -11
Tel : 2389811

## SHANMUGA AGENCIES

Commission Agents

No. 45, 4th Cross Steet, Colombo - 11, Sri Lanka
Tel : 2421943, 2438467, 2338369

## Rupika Traders

No.100, 4th Cross Steet, Colombo - 11, Sri Lanka
Tel : 2326225, 2341844

## ASEAN INDUSTRIAL TRADEWAYS

Importers, General Hardware Merchants & Government Corporation Suppliers

307-1/3, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2448332, 2433070, 2320526; Fax : 2320526

## LOTUS HARDWARE CENTRE

Importers & General Hardware Merchants

LANKA TOR STEEL

Authorised Distributors for CHICO Products

No. 270-B, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2438232, 2541204, 4-710254
Telefax : 011 2438232
e-mail : sembu6@hotmail.com

**MEHA HARDWARE**

No. 283, Old Moor Steet, Colombo - 12, Sri Lanka

**Mahajana Metals**

Importers of Plywood Sheets, Hard Boards Mdf Boards, Chip Boards & Laminated Plastic Sheets

#297A, Old Moor Steet, Colombo - 12, Sri Lanka
Tel : 2449669, 2432516
Fax : 2458754

***Eastern Trading Company***

Dealers in all kind of Hardware & Electrical Goods

IMPORTERS AND DISTRIBUTORS

273, Old Moor Steet, Colombo -12, Sri Lanka
Tel : 2431544, 2447290
e-mail : eastern_tc@eureka.lk

***Y. S. G. PANDIAN & CO.***

GENERAL HARDWARE & NON-FERROUS METAL MERCHANTS IMPORTERS & EXPORTERS

No. 246, Old Moor Street, Colombo - 12, Sri Lanka
Tel : 2325833, 2448072
Fax : 00 94 1 2422975
e-mail : 21583teleco ce attn pandian

**American Engineering Corporation**

General Hardware Merchants

311, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2434430, 2440758, 2471093
Fax : 2337469

**Sampath**

S T E E L

Importers & General Hardware Merchants

No. 297, Old Moor Steet, Colombo - 12, Sri Lanka
Tel : 2440964, 2423789
Telefax : 2478080

**LANKA STEEL CENTRE**

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

316 A, Old Moor Steet, Colombo - 12, Sri Lanka
Tel : 2320104, 2334957
Fax : 2472490

**AJANTHA STEELS**

Importers and General Hardware Merchants

265/A, Ground Floor, Old Moor Street,
Colombo -12, Sri Lanka.
Tel : 011- 2448583, 011 - 2435121
Fax : 011- 2435121
e-mail : ajanthas@isplanka.lk

**Champion Traders**

Importers and
General Hardware Merchants

No. 307, Old Moor Street, Colombo - 12, Sri Lanka
Tel : 2421893, 2470025
Fax : 5-378100

**BESCO STEEL CENTRE**

Importers & General Hardware Merchants

Pioneer Sellers in ලංකා Tor Steel

No. 326, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2334161, 2447629, 2381901, 5-362886
Telefax : 2424545

**Torrino Steels**

Importers & General Hardware Merchants

No. 39, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2440955
Fax : +94-11-2440950

**DYNAMIC ENTERPRISES**

Importers & Dealers in

GENERAL HARDWARE AND STOCKISTS

DISTRIBUTER : VNP EXPANDED METAL

No. 23, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2435518 / 2326338 / 4-715934
Telefax : (9411) 2326338 e-mail : dynamicc@slt.lk

**TRANSWOOD**

Importers & Dealers in Plywood Products

No. 27, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2320103, 2342870, 2331483
Fax : +94-11-2332680

**STELCO STEEL CENTRE**

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS, SPECIALISTS IN E.R.W.STEEL TUBES

10E, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2434216, 2338456
Fax : 2472479

**SIMKONS TRADING CO.**

SPECIALIST IN AIR CONDITIONING SPARES, ENGINEERING TOOLS & GENERAL HARDWARE MERCHANTS

10, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2434307, 5-334461, Tele/Fax : 2334022

**TRANSTEEL MERCHANTS**

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

#325, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2440951 - 2448781, Fax : 00 94 11 2434282

**GATEWAY METALS**

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

335, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2337554, 2438624, 2424179
Fax : 00 94 11 2424178
e-mail : gateway@eureka.lk

**Noppon Metal Traders**

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS CORPORATION & CONSTRUCTION SUPPLIERS

356, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2434752, 2326063

**VIMAISCE AGENCY**

364, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2440015
Fax : 00 94 11 2478028
e-mail : vica@eureka.lk

**RAINBOW TRADERS**

374, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2436295

**TOPSTEEL (PVT) LIMITED**

Importers & General Hardware Merchants & Building Materials

DEALERS FOR LANKA TORSTEEL

No. 454, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2330099, 2348636
Fax : 22470360

**LIBERTY HARDWARE STORES**

Importers & General Hardware Merchants
Specialist in Bolts & Nuts

No. 453, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2433575, 2459879, 2337398
Fax : 94 11 2337398; e-mail : liberthw@sltnet.lk

**MAHAWELI METALS**

*Importers & General Hardware Merchants*

No.439, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2433894

**SUPER STEEL CENTRE**

DEALERS IN GENERAL HARDWARE
WHOLESALE & RETAIL

419, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 0 11 2472964, 0 11 2472965

**Eterna Agencies**

*Importers & General Hardware Merchants*

51 A, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2449657, 2334056

**Lanka IRON CENTRE (PTE) LTD.**

GENERAL HARDWARE MERCHANTS

7B, Abdul Jabar Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2325413 - 2458189

**Oskar Steel Centre**

No. 140, Maha Vidyalaya Mawatha (Barber Street)
Colombo - 13, Sri Lanka.

Tel : 2440843, 2338267, 2449956
Fax : 2423837

**Modern Hardware Centre**

DEALERS AND STOCKIST OF IRON AND STEEL

43, Abdul Jabar Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2435468 (Auto Lines)
2435468, 2436537, 2439280, 2328614
Fax : +94 11 2431890 e-mail : mhc@srilanka.net

**JANASHAKTHE HARDWARE**

GENERAL HARDWARE MERCHANTS & IMPORTERS

19, Abdul Jabar Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2389305-6; Tele/Fax : 2389306
e-mail : vica@eureka.lk

**COLONIAL HARDWARE STORES**

Importers, Distributors & General Hardware Merchants

427, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2431950, 2435414, 2347981-83-89
Fax : 2334090, 2387826
e-mail : colonial@slt.lk / info@colonialhw.com

## Viviya Steel

Importers & General Hardware Merchants

No. 39, Abdul Jabbar Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2439700, 2338497

## NAVA ASIAN TRADING COMPANY

Importers Suppliers &
General Hardware Merchants

35 A, Abdul Jabbar Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2447210, 2345874

## SILVER KROWN HARDWARE

Importers, General Hardware Merchants &
Government Corporation Suppliers.

22, Abdul Jabbar Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2431419, 2323712, 4-614631; Fax : 2431419
e-mail : silverkrown@usa.net

## JANATHA STEELS

Importers & General Hardware Merchants

20, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2421412, 2325807, 2338607, 2321431
Fax : 2345667

## SIVA HARDWARE'S

Importers & General Hardware Merchants

265 B, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2421704; Fax : 2380966

## CROWN JEWELS

76, Sea Street, Colombo - 11.

Tel : 2431304
Fax : 2435943

## *Subani Jewels*

GEMS AND JEWELLERY

96, Sea Street, Colombo - 11.

Tel : 2330053

## STAR *Jewellers*

90, Sea Street, Colombo - 11.

Tel : 2329727
e-mail : stargold@isplanka.lk

## PATHMA TEX

Dealers in Textlies - Readymade Specialist
in Sarees & Blouse

153, S Main Street, Fort, Colombo - 01.

## Sri Myuri *Jewellery*

138, Sea Street,
Colombo - 11

**ANANDA**

TRADE CENTRE

DEALERS IN : GENERAL HARDWARE, HAND TOOLS, SANITARYWARE AND BATHROOM FITTINGS

352, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2447723; 4-710587, 2458339 Fax : 2430190

**POWER STEEL**

General Hardware Merchants suppliers to Government Corporations & Boards

320, (2nd Floor) Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2436718, 2459045
Fax : 4-712351
e-mail : powerst@sltnet.lk

**Nemco Trading Centre**

Specialist in Imported Door Locks Pantry Cupboard Fittings and Indian brass Fitting

DEALERS IN GENERAL HARDWARE & GOVT. SUPPLIERS

24, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2432331, 2435062, 2459874, Fax : 2432331
e-mail : nemco@dynaweb.lk

**S. P. S**

ENTERPRISE

Importers & General Hardware Merchants

355-1/4, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.

Tel : 2470970, 4-713399, Fax : 2440950

**Viking Traders**

Importers of Engineering Tools & General Hardware Merchants

147 C, Bandaranayake Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2471490; Fax : 2390249

**Multy Timber Dealers**

Stockists of Local and Imported Timber & Plywood Products Specialist in all kinds of Wood Work

No. 65, Sumanatissa Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2328910, 4-616971, Fax : 2473062

**GOLDEN CERAMIC**

Importers of Wall Tiles Floor Tiles & Sanitaryware, PVC Pipes, Fittings & Plumbing Fixtures

No. 117, Messenger Street,
Colombo - 12, Sri Lanka.

Tel : 2338007, 2439016; Fax : 2473192

**Onida Steels**

IMPORTERS & STOCKIST OF IRON & STEEL

41, Quarry Road, Colombo - 12, Sri Lanka.

Tel : 2445065, 2338889
Fax : 2459991
e-mail : info@onidasteels.com
website : www.onidasteels.com

**GIMGO METAL CENTRE**

DEALERS IN ENGINEERING TOOLS, BOLTS & NUTS, POWER TOOLS, HACK SAW BLADES & GENERAL HARDWARE MERCHANTS

405, Sri Sangaraja Mawatha, Colombo - 12, Sri Lanka.

Tel : 2449493, 2449940,
Fax : 2336684

**UNICORN METALICS., (PTE) LTD.**

346, Sri Sangaraja Mawatha, Colombo - 10, Sri Lanka.

Tel : 2432891, 2422629, 2342300, 2344955-6
Fax : 2439408
e-mail : umcpl@sltnet.lk

**Ruby international Associates**

333 1/3, Old Moor Street, (1st floor)
Colombo - 12, Sri Lanka.
Tel : 2440952; 2337259 Fax : 2446506

**MATRIK**

Importers of Hardware and Sanitaryware Wholesale & Retail Dealers in S-Lon, Anton, National PVC and specialist in PVC Fittings, Fabrication and PVC Welding ect.

37, Abdul Jabar Mawatha, Colombo - 12, Sri Lanka.
Tel : 5-376765; Tele Fax : 2436525

**EDCO METAL CENTRE**

IMPORTERS & DEALERS IN TYPE OF POWER TOOLS & ENGINEERING TOOLS & GENERAL HARDWARE MERCHANTS SUPPLIERS OF GOVERNMENT, CORPORATION & PRIVATE SECTORS

7,1/1, Abdul Hamed Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2451581, TeleFax : 4-616954
e-mail : edcometal@yahoo.com

**MONARA STEEL CENTRE**

IMPORTERS & GENERAL HARDWARE MERCHANTS

333-2/18, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2470738, 2470739, Fax : 2320108
e-mail : monara333@sltnet.lk

**SILVER STAR**
**TRADING**

Govt. Corporation Suppliers and Dealers in Hardware Engineering Tools Etc.

333 2/14, Old Moor Street, Colombo - 12, Sri Lanka.
Tel : 2478138; 2348253 Fax : 2432390

**Arramic Agency**

No. 55, K. Cryl C Perera Mawatha,
Colombo - 13, Sri Lanka.

**NEW MANO HARDWARE STORES**

Importers & General Hardware Merchants
No. 355, Old Moor Street, Colombo - 12.
Tel : 2338057, 2342417
Fax : 2342417

**BOBBY JEWELLERS**

ORDERS EXECUTED PROMPTLY
DEALERS IN 22 KT JEWELLERY
159, Sea Street, Colombo - 11.

**SHAAN TRADERS**

DEALERS IN
All kinds of Offcut paper, Board, Printed board, Lunch Paper Lunch Box, Boady Cards, Chip Boards & Paper, Board Cutting etc..

10, Kosala Lane, Colombo - 11.
Tel : 011 2436514

**J. B. GOLD HOUSE**

JB74, Sea Street, Colombo - 11.
Tel : 2431304
Fax : 2435943

*With Best Compliments*

**T. Ithyabalan**

**Sri Ganthimatti Gold House (Pvt) Ltd.**

GUARANTEED SOVEREIGN GOLD

68, Sea Street, Colombo - 11.

Tel : 2324541, 2338828

**desire**

COLLECTION

WHOLESALE & RETAIL DEALERS IN READYMADE GARMENTS

142 2/4, Spencer House, 1st Cross Street, Colombo - 11.

Tel : 2478762

Retail Shop : 449, Galle Rd., Wellawatta, Colombo - 6

**AISWARYA ENTERPRISES**

IMPORTERS OF CERAMICS

"WALL & FLOOR TILES"

30, 2/2, Abdul Jabar Mawatha, Colombo - 12

Tel : 00 94 11 2542414, 2458327

Fax : 00 94 -4-718407

e-mail : aiswarya@sltnet.lk

**Solid steels**

Importers & General Hardware Merchant

32, Abdul Jabar Mawatha, Colombo - 12

Tel : 5-369942, 5-369943

**Ajanta**

Travels & Tours Private Limited.

"Hawwa Plaza", No. 11-1/10, Sea Street, Colombo - 11.

Tel : 00-94-11-4 710638, 2380721

Fax : 00 94 11 2380721

e-mail : ajanta@visual.lk

***Dana Group of Companies***

Dana Manpower (Pvt) Ltd.

Dana Tours & Travels (Pvt) Ltd.

Dana Intl. Educational Service (Pvt) Ltd.

Dana Institute of Software & Technologies (Pvt) Ltd

Industrial Traning Institute (Pvt) Ltd.

Dana Advertising & Promotions

104, 2nd Floor, Sea Street, Colombo - 11.

Tel : 2385046, 2385047, 5333346/7/8/9

**GANESHA Jewellers**

52, Sea Street, Colombo - 11.

Tel : 2432164,

Fax : 2389743

e-mail : ganeshajewellers@yahoo.com

**HYDER JEWELLERS**

DEALERS IN GENUINE 22 KT GOLD & - GENUINE SILVER JEWELLERS

50, Sea Street, Colombo - 11

Tel : 2436168, 2338417

**Arrujina Jewellery (Pvt) Ltd.**

47-A, Sea Street,

Colombo - 11, Sri Lanka.

Tel : 2440042

Web Site : www.lankadirectorycom/arrujina

**Sarrita Jewellers**

42, Sea Street, Colombo - 11, Sri Lanka

Tel : 2325485
Fax : 2387606

**ARUL** JEWELLERS

Makers of Quality Genuine
22ct. Gold Ornaments

#3, Sea Street, Colombo - 11.

Tel : 2436331

**SRI KALYANI JEWELLS**

5, Sea Street, Colombo - 11.

Tel : 2323657

**AMMAN** JEWELLERS

29, Sea Street, Colombo - 11, Sri Lanka.

Tel : 2332033

**Ramya** JEWELLERS (PVT) LTD.

THE MOST EXCLUSIVE &
RELIABLE JEWELLERY MART

85, Sea Street, Colombo - 11.

Tel : 2391233

**Ravi** JEWELLERS

Ravi Forexae (Pvt) Ltd.
(Authorised Money Changer)

No. 115, Sea Street, Colombo - 11.

Tel : 2436358, 2448221
Fax : 2471966

***Selvan Tex***

Dealers in Textiles

No. 226/P2, Antival Street, Colombo - 13.

Tel : 2452433

***STAR LEATHER CENTRE***

*LEATHER MERCHANTS*

No. 93/5, Prince Street, Colombo - 11.

Tel : 2341636

வாழ்த்துக்கள்

**கௌரி அழகு மாடம்**

இல. 316, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்

Tel : 021 222327

வாழ்த்துக்கள்

**வேலாயுதம்பிள்ளை சந்திரமோகன்**

இல. 87, பிக்கரிங்ஸ் றோட்,
கொட்டாஞ்சேனை

**P. K. leather centre**

LEATHER MERCHANTS

No. 108/1, Prince Street, Colombo - 11.
Tel : 2335487
Fax : 2341877

**VIDHU**

*Fancy Items & Toys*

112, Prince Street, Colombo - 11.
Tel : 0 11 4 734297

**MATHURAMS**

DEALERS IN TOYS & FANCY GOODS
No. 122/6, Prince Street, Colombo - 11.
Tel : 2347551

**GEETHA *JEWELLERY***

GENUINE 22 CT GOLD JEWELLERS

1 P, Sea Street Junction, Colombo - 11, Sri Lanka.
Tel : 2447214

**Mathurai Stores**

WHOLESALE DEALERS IN FANCY GOODS & TOYS ETC.
GENERAL MERCHANTS, IMPORTERS & EXPORTERS

49, China Street, Colombo - 11.
Tel : 2324048
Fax : 252271, 2445559

**Akshaya textile**

Shining Metarials Party Frock

No. 133/10 A, Fashion Super Market,
Keyzer Street, Colombo - 11.
Tel : 2342028

**Spencers**

Dealers in Textiles

No. 103, Keyzer Street, Colombo - 11.
Tel : 2324888, 2471641
Fax : 2336909

வாழ்த்துக்கள்

**லதா ஜுவலர்ஸ்**

**திரு. கே. எஸ். சங்கர் *(ஜே.பி)***
*இலங்கை முக்குலத்தோர் கலாசார சங்க செயலாளர்*
*இல. 83, செட்டியார் தெரு,*
*கொழும்பு - 11*

***Romax Hardware Centre***

No. 307/4, Old Moor Street, Colombo - 12.
Tel : 2329415, 2335106
Fax : 2421955
e-mail : romax@sltnet.lk

**Ambro Electricals**

Importers, Dealers in Electrical Goods, Winding
Wires & General Suppliers

No. 88, First Cross Street,, Colombo - 11
Tel : 2327923, 2423808

உ

சிவமயம்



## ஸ்ரீ கல்யாணி கணபதி தேவஸ்தானம்

வட கொழும்பு முகத்துவாரத்தில் களனி கங்கை கடலோடு சங்கமிக்குமிடத்தில் அமைந்து உள்ள வடகொழும்பு இந்து பரிபாலன சங்கம் சிறப்பாக சமய, கலை, கலாசார முறையில் வளர்ச்சி பெற்று வருகிறது. சிறந்த பக்தி உணர்வுடன் எமது பிரதேசத்திலும், மற்றும் ஆலய சமய வழிபாடுகள், அறநெறி போன்ற நிகழ்வுகளையும் சிறப்பான முறையில் செயலாற்றி, 50ஆவது ஆண்டு பொன்விழாவை கொண்டாடும் இச்சங்கமானது, மேலும், பல பயனுள்ள பொதுவான ஆக்கங்களை செயற்படுத்தவும், நற்பணியாற்றவும், சங்கத்தாருக்கு சகல நலங்களும், சகல சௌபாக்கியமும் உண்டாக எல்லாம் வல்ல ஸ்ரீ கல்யாணி கணபதி இறை திருவருளை வேண்டி மென்மேலும் பல்லாண்டு காலம் சிறப்பாக பணியாற்ற பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்
ஆலய தர்மகர்த்தா V. நாகதேவன் குடும்பத்தார்
ஆலய குரு சோம சபேஸ சிவாச்சாரியார்
ஆலய பரிபாலன தொண்டர் சபை
கல்யாணி கங்காராம கிராமத்தவர்களும்

*மேன்மைகொள் சைவநீதி*
*விளங்குக உலகமெல்லாம்!*

*வடகொழும்பு சைவநீதி விளங்குக வளமுடன்!*

# வாழ்த்துச் செய்தி

சுவாமி ஆத்மகணானந்தா
ராமகிருஷ்ண மிஷன்
இலங்கைக் கிளை
40, ராமகிருஷ்ண வீதி,
கொழும்பு - 06.

வட கொழும்பு இந்து பரிபாலன சபை, தங்கள் பொன்விழாவை முன்னிட்டு வெளியிட இருக்கும் 'கொழும்பின் இந்துப் பாரம்பரியம்' என்னும் நூலுக்கு இவ்வாழ்த்துச் செய்தியை வழங்குவதில் பெரு மகிழ்ச்சியடைகின்றோம்.

எமது சமயத்தைச் சார்ந்த ஞானிகளும், அறிஞர்களும், சமய வாழ்க்கையின் உயர் பெறுபேறுகளாகிய இறைபக்தி, ஜீவ காருண்யம், அமைதி போன்ற உயர் பண்புகளை வளர்த்துக் கொள்வதற்கான சமய வழிமுறைகளை வகுத்து, அவற்றைத் தினசரி வாழ்க்கையின் முக்கிய அங்கங்களாக்கிச் சென்றுள்ளனர். இச்சமய வழிமுறைகளையே இந்து பாரம்பரியம் என்கிறோம். கொழும்பு வாழ் இந்து மக்கள், தலைமுறை தலைமுறையாகக் கடைப்பிடித்து, இன்று வரை பாதுகாத்து வந்துள்ள இப்பாரம்பரியத்தைக் குறித்த விளக்கங் களை இந்நூல் வழங்குகின்றது என அறிகின்றோம். மேற்கத்தைய நாகரிகத்தின் தாக்கத்திற்குப் படிப்படியாக அடிமைப்பட்டு வரும் எம் இளைய இந்து சமுதாயத்தினர், இந்துப் பாரம்பரியத்தின் சிறப்பை அறிவதற்கும், அதைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கும் இந்நூல் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

கால்த்தின் தேவையாக உணர்ந்து இந்நூலை வெளியிடும் வடகொழும்பு இந்து பரிபாலன சபையினர்க்கு எங்கள் மனம் நிறைந்த பாராட்டுக்கள்! இந்து மக்கள் இந்நூலை வாசித்துப் பயன் பெறுவார்களாக!

# இந்து மதத்தின் இலங்கைத் தலைநகர அனுபவங்கள்

## கொழும்பில் இந்துப் பாரம்பரியம் என்ற தேடலாய்விற்கான முன்னுரையாக.....

I

### பணித் தொடக்கம்

இலங்கையின் தலைநகராக ஏறத்தாழ கடந்த 500 ஆண்டுகளாக விளங்கிவரும் கொழும்பு நகரில் இந்துமதம் எத்தகைய இடத்தைப் பெற்று வந்துள்ளது, வரலாற்று அடிப்படையில் அதன் இயங்கசைவு எவ்வாறு இருந்து வந்துள்ளது, இப்பொழுது உள்ளது எனும் விடயம் பற்றிய வரன்முறையான ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை என்பது முக்கியமான உண்மையாகும். இந்நிலை ஏன் ஏற்பட்டது, எவ்வாறு தொடர்ந்தது, என வரும் வினாக்கள் மிக முக்கியமானவை ஆகும். ஒரு பொருள் பற்றிய வரலாறு எழுதுகை என்பது பற்றிய பிரக்ஞை உணர்வு, அதனுடன் தொடர்புள்ளவர்களிடையே ஏற்படும்பொழுதே தொடங்குகின்றது என வரலாற்றுப் பொருள்முதல் வாதிகள் கூறுவர். அந்த அடிப்படையில் நோக்கும் போது கொழும்பில் வாழும் இந்துக்களுடைய இந்து சமயம் பற்றிய பிரக்ஞை எத்தகையது, அது எவ்வெக் காரணிகளால் தீர்மானிக்கப்படுகின்றது, இவ்விடயங்களிற்கான சமூக அரசியற் பரிமாணங்கள் யாவை எனும் வினாக்கள் எழுவது இயல்பே. இவை பற்றிய சிந்திப்பு இன்னும் நிறுவனமயப்பாட்டு நிலைக்கு வந்து விடவில்லை என்றே கூறத் தோன்றுகின்றது. இத்தகைய ஒரு சூழமைவுப் பின்புலத்திலேதான் வடகொழும்பு இந்து பரிபாலன சபையின் தலைவர் திரு. எஸ். பி. சாமியும், அச்சபையின் நிர்வாக நிலைப் பதவியினரும் தங்களது சபையின் 50 வது வருட நிறைவைக் குறிக்கும் மலரில் எவ் விடயப் பொருள் எடுத்துப் பேசப் பெறல் வேண்டும் என்ற விவாதிப்பிற்காக என்னுடன் தொடர்பு கொண்டனர்.

இஸ்லாமிய அலுவல்கள் அமைச்சு கடந்த சில வருடங்களாக வெளியிட்டு வந்துள்ள இலங்கையின் பல்வேறு மாவட்ட நிலைகளில் இஸ்லாமிய செயற்பாடுகள் பற்றி எழுதியுள்ளமையை கண்டு வியந்து, அத்தகைய ஒரு பணியில் இந்து விவகார அமைச்சும் ஈடுபடுதல் பொருத்தமானது என இவ்விடயங்களுக்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் பலரிடம் கூறியும், அதற்கான எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையைக் கண்டு பெரிதும் விசனித்த நான், இந்த விடயப் பொருளினை அவர்களுக்கு விதந்துரைத்தேன். அவர்களும் மன நிறைவுடன் ஒப்புக்கொண்டனர்.

ஆனால், இப்பணிப்பொறுப்பு என் தலையிலே விழும் என்ற எண்ணம் எனக்கு அப்பொழுது இருக்கவில்லை. மீளச் சந்தித்த இந்து பரிபாலன சங்கத்தினர், இப் பணியை நான் முன்னின்று நடத்த வேண்டு மென வற்புறுத்தினர். 'முன்நின்று என்பது' பொருள் பொதிந்த ஒரு வினை எச்சமாகும். பின்னே பலர் நின்றால் மாத்திரமே, அதுவும் பலத்துடன் நின்றால் மாத்திரமே, முன்னிற்பவர் துவளாமல் நிற்கமுடியும். அந்த பின்பலத்திற்கான வாக்குறுதியைத் தந்தவர் கொழும்பு வாழ் தமிழ் மக்களின் சமூக அரசியற் செயற்பாடுகளிலே மிக்க சிரத்தை காட்டும் தோழமை உள்ள எனது மாணவர், சட்டத்தரணி, ஆசிரியர் திரு. சி. யோதிலிங்கம் அவர்கள் ஆவார். அவர் இதற்கான ஆயத்தங்கள் பற்றி மிக ஆழமாகச் சிந்தித்த பின்னரே இதனைக் கூறினார். இன்று வணிகத்துறையில் முயல்வூக்கம் கொண்ட தமிழ் வர்த்தகர்களுள் முக்கிய இடம்பெறுபவர்களுள்ஒருவராக விளங்கும் சாமி அவர்கள் இந்த முயற்சிக்கு வேண்டிய சகல உதவிகளையும் வழங்குவதாக ஒப்புக் கொண்டு, உடனடியாக வேலையைத் தொடங்குவதற்கான ஊக்கத்தைத் தந்தார்.

மகேசன் சேவை மக்கள் சேவையாகு மொரு தருணமிது என்பது நன்கு புலனா யிற்று.

பணியின் பெருப்பம், நுண்மை பற்றிய உணர்கை இதற்கான செயற்பாட்டாளர் வட்டத்தை தனிப்பட்ட விருப்பு வெறுப்பு களுக்கு அப்பாற் சென்று, அத்துறையில் ஈடுபட்டுள்ள சகலரையும் உள்வாங்குவ தாக அமைதல் வேண்டும் என்பதில் எனக்கு ஐயுறவு இல்லை. அத்தகைய ஒரு பணிக் களத்தை ஏற்படுத்துவதே சரியெனப் பட்டது.

சமூகவியல் ஆய்வுப் பரிச்சையங்கள் காரணமாக விடயப் பொருள் பற்றிய தரவுச் சேகரிப்பின்பொழுது களநிலைப் பணியின் முக்கியத்துவத்தை ஏற்கனவே அறிந்திருந்த மையால் அந்த மைய செயற்பாட்டிற்கு உதவ வருபவர்கள் பற்றிய மன அங்கலாய்ப்பு நிறைய இருந்தது. நமது மன அவதியை தீர்க்க / தீர்த்து உதவியவர்கள் நான்கு ஆசிரியைகள் ஆவர். வட, மத்திய கொழும்புக்கான களப் பணிகளை திருமதி. ஈஸ்வரி ஜோதிலிங்கம், செல்விகள் மகாலக்ஷ்மி, சசிகலாவும் தென் கொழும்புக் கான பொறுப்பை ஆசிரிய ஆலோசகர் திருமதி ஹேமா சண்முக சர்மாவும் மனமுவந்து ஏற்றுக்கொண்டனர்.

பார்வை விசாலமும், அறிவாழமும் கொண்ட இவர்களது செயற்பாடு கோயில் களின் தரவுகளை மாத்திரமல்லாது, கொழும்பில் இந்துமத நடைமுறையின் சமூகவியல் அம்சங்கள் சிலவற்றையும் வெளிக்கொணர்வதாகவும் அமைந்தது.

அத்துடன் கொழும்பில் இந்துச் செயற் பாடுகளில் தமது ஆளுமை நிறைவை காணும் சில முக்கியஸ்தர்களின் உதவியும் கிட்டிற்று. திரு. நீலகண்டனுடனான ஆழ்ந்த விவாதிப்புகளும், திருவாளர்கள் ஜெயரூபன், ஜனகன் போன்றோரது உதவியும் கிடைக்கப் பெறவே பணி தொடங்கிற்று எனலாம். பல்வேறு சமூக, அரசியல், உளவியல் காரணங்களினால் இதுவரை வரன்முறையாக கையேற்றப் படாத இப் பணி பெரியது.

ஆய்விற்கு வேண்டிய தளங்களும், வளங்களும் கூட நன்கு கண்டறியப்படாத நிலையில் காலம் போதாமை எனும் வரையறை மிக்க பாரமாய் அழுத்தத் தொடங்கப் பெறும் இப்பணியை வரன் முறையான ஆய்வு முயற்சி எனக் கூற முயல்வது தவறாகும். உண்மையில் இது ஒரு தேடலின் தொடக்கமே. ஆய்வு நெறிப் பிரக்ஞையுடன் மேற்கொள்ளப்படுகின்றது என்பதற்கு மேற்சென்று இதனை வரன் முறையான ஆய்வாகக் கொள்ள முடியாது; கொள்ளவும் கூடாது.

# II

## தேடலுக்கான அணுகுமுறை

**கொ**ழும்பு எனும் பதம் மூலம் கொழும்பு பெருநகர்ப் பகுதியையே முதலில் மனங் கொண்டிருந்தோமெனினும் வரலாறு, கல்வி ஆகிய விடயங்கள் பற்றிய ஆய்வுகள் கொழும்பு மாவட்டத்தையும் சிலவிடங் களில் அதற்கு வெளியேயும் செல்ல வேண்டிய நிலைமையை ஏற்படுத்தின. ஆய்வைத் தொடங்குவதற்கு வேண்டிய தரவுகளைத் தொகுத்தல் ஆய்வின் முதற் கட்டமாகக் கொள்ளப்படும் வழக்காறே உண்டெனினும், சமூகக் கற்கைகளில் (Social Studies) பல வேளைகளில் ஆய்வுக் காகப் பெறவேண்டிய தரவுகள் யாவை என்பதை அறிந்து கொள்வதே முதற்கட்ட முயற்சியாக அமையும் என்பது இங்கும் உண்மையாயிற்று. இதனால் கொழும்பில் உள்ள வழிபாட்டிடங்கள், நிறுவனங்கள், ஒழுங்கமைவுகள் (சங்கங்கள்) பற்றி எத்தகைய தரவுகள் விடயப் பொருள் பற்றிய அறிகைக்கு அவசியமாகின்றன என்பதை தெரிந்து கொள்ள விரும்பி தனித்தனி வினாக்கொத்துக்கள் இரண்டைத் தயாரித்தோம். அவை பின்னிணைப்பாகத் தரப்பட்டுள்ளன.

இந்துமத நிலைப்பட்ட நிறுவனமய வாக்க நிலைப்பாட்டின் (Instutionalization) ஒவ்வொரு அம்சங்கள் பற்றியும் இயன்ற ளவு விரிவான 'படத்தை' பெற விரும்பியது மாத்திரமல்லாமல் மத நிலை அனுஷ்டான ஆழத்தையும் அறிந்து கொள்வதற்கான வகையில் கேள்விக் கொத்துக்களை தயார் செய்தோம்.

கொழும்பில் இந்து வழிபாட்டிட நிறுவன மயவாக்கத்திலே தொழிற்படும் பன்முகப்பட்ட காரணிகளாற் சிலர் குறிப்பாக வழிபாட்டிடங்கள் பற்றிய வினாக்கொத்தை அத்துமீறல்களாகவே கருதினர். அதன் எதிரொலியையே களப் பணியாளர்களின் அனுபவப் பகிர்வு நமக்குக் காட்டுகிறது.

குறிப்பாக வினாக்கொத்தின் இறுதியில் வரும் சொத்துப் பற்றிய வினாவிற்குக் கிடைத்த பதிற்குறிகள் மிகச் சுவாரசிய மானவையாகும். செழுமையான நிறுவன மயமாக்கலைப் பெற்றுள்ள கோயில்கள் சொத்துப் பற்றிய வினாவைப் பெரிதுபடுத் தவேயில்லை. ஆனால், சிறியனவும் புதியனவுமாக உள்ள கோயில்கள் பல வற்றுக்கு இந்த வினா சிம்மசொப்பனமாக அமைந்தன. (சிறிய வழிபாட்டிடமொன் றின் பொறுப்பாளரது நண்பர் 'இது என்ன JVP க்கு தரவுகள் சேர்க்கின்றீர்களா?' என்று மிகுந்த கோபத்துடன் கூறியதாக அறிகின் றோம்) இப்பொழுது கிடைத்துள்ள அனுபவத்தின் பின்னர் இந்த வினாக் கொத்தின் போதாமையை நாம் உணரவே செய்கின்றோம்.

முன்னுரையைத் தொடர்ந்து கட்டுரை கள் இடம்பெறுகின்றன. பேராசிரியர் பத்மநாதனின் கட்டுரையில் ஏறத்தாழ சோழர் ஆட்சிக்குப் பின்னர் தென்னிலங்கை யில் இந்து மதம் பெற்றிருந்த நிலையினை யும் குறிப்பாக 15ஆம் நூற்றாண்டிற் போர்த்துக்கேயர் வருகைக்கு முன்னர் நிலவிய சூழல்களைக் காணலாம். அதனைத் தொடர்ந்து வரும் சிறு கட்டுரை இன்று இரத்மலானையாகக் கொள்ளப்படும் பகுதி யில் போர்த்துக்கேயர் ஆட்சியில் இப் பிரதேசத்தில் இந்து மதம் முகம் கொடுக்க வேண்டி இருந்த பிரச்சினைகளுக்கு

எடுத்துக்காட்டாக அமைகின்றது. போர்த்துகேய ஆட்சி மாத்திரமல்லாது, கத்தோலிக்க மதப் பிரிவினர் சிலர் கூட நடந்து கொண்ட முறையை 'கொணாக் கோயில்' பற்றிய வாய்மொழி வரலாறு பேசுகின்றது.

கொழும்பில் ஒல்லாந்தர் ஆட்சி ஒரு வரையறுக்கப்பட்ட நகரின் கடல் சார்ந்த பகுதியில் வரையறுக்கப்பட்ட இடத்துள்ளேயே இருந்தது போலும். அதனாலேயே தெஹிவளையில் உள்ள நெடுமால் கோவிலும், இரத்மலானையில் உள்ள கொணாக் கோயிலும் அக்காலத்திலே நிறுவப்பட்டுள்ளமையைக் காணலாம். போர்த்துக்கேய ஒல்லாந்த காலங்களில் இந்து மதம் இவர்கள் ஒவ்வொருவரது ஆட்சியின் கீழும் கொழும்பில் எத்தகைய இடத்தைப் பெற்றிருந்தது என்பது பற்றிய கட்டுரை எதனையும் இங்கு சேர்க்க முடியாமல் போனமை மிகுந்த மன வருத்தத்தைத் தருகின்றது.

திரு. சுப்பிரமணியம் செட்டியார் எழுதியுள்ள 'நாட்டுக்கோட்டை செட்டிமார் வரலாறு' பல முக்கிய தரவுகளைத் தருகின்றது. செட்டிமாரின் வருகை ஒல்லாந்தர் காலத்திலேயே நிகழ்ந்து விட்டது என்பதும், கோல்புறூக் ஆட்சி (1833) யாப்புடன் வரன்முறையாக பிரித்தானிய காலனித்துவம் நிறுவப்பட்டதும், இந்தியாவில் அதே காலனித்துவத்தின் கீழ் இருந்த தமிழகத்து நகரத்தார் இலங்கையின் வணிகத்தில் முக்கிய இடம்பெறத் தொடங்கியதும் புலனாகின்றன.

கொழும்பில் பிரித்தானியர் காலத்தில் யாழ்ப்பாணத்தவரின் வருகை எவ்வாறு இருந்தது என்பதற்கான குறியீடுகளாகக் கோயில்கள் அமைவதைச் செட்டியார் தெருப் புதிய கதிரேசன் கோயிலும், செக்கடித்தெரு யாழ்ப்பாணத்தார் கோயிலும், கொட்டாஞ்சேனைப் பொன்னம்பல வாணேஸ்வரர் கோயிலும் காட்டுகின்றன.

இலங்கைத் தமிழ் இந்துக்கள் கொழும்பில் குடியேறியமையின் வரலாறும் அந்த வரலாற்றின் பல்வேறு கட்டங்களும் இன்னும் தெளிவாக்கப்படவில்லை. ஏறத்தாழ 1835-40 முதல் இருபதாம் நூற்றாண்டின் முதல் தசாப்த காலம் வரை உள்ள அந்த தமிழரின் கொழும்பு நிலைப்பட்ட வரலாறு இப்பொழுது உதிரி நிலையிலேயே உள்ளது. ஆயினும் கொழும்பில் கொழும்பு வாழ் தமிழரிற்கான ஒரு அரசியற் பிரதிநிதித்துவம் சட்டவாக்கற் சபையில் இருத்தல் வேண்டும் என்ற சேர். பொன். அருணாசலத்தின் கோரிக்கையும் அது கிடைக்கப் பெறாமையால் 1924 இல் அவர் இலங்கை தேசிய காங்கிரஸில் இருந்து விலகியமையும் அரசியல் வரலாற்றில் முக்கியத்துவம் பெறும் நிகழ்ச்சிகளாகும். இவற்றுக்குப் பின்புலமாக அமைந்த சமூக, தள வரலாறு பற்றிய எழுதுகைக்கான மூலங்கள் செட்டியார் தெரு, செக்கடித் தெரு, முகத்துவாரம் ஆகிய பகுதிகளில் உள்ள கோயில்களிலிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பது நமக்கு இத் தேடல் மூலம் தெரிய வருகின்றது. கொழும்பில் உள்ள இந்து நிறுவனங்கள், தன்னார்வச் சங்கங்கள் பற்றிய வரலாறு மிக முக்கியமான ஒன்றாகும்.

திரு. நீலகண்டனின் கட்டுரை அந்த வரலாற்றின் குறியீடுகள் சிலவற்றை எடுத்துக் காட்டுகின்றது. பேராசிரியர் சோ. சந்திரசேகரம் கொழும்பில் உள்ள இந்துப் பாடசாலைகள் பற்றி தமக்கே இயல்பான விரிபுல ஆழ் நோக்கு எழுத்து முறையினால் சுட்டுகின்றார். கொழும்பில் உள்ள இந்துப் பெண்களின் மதக் கண்ணோட்டம் பற்றி எழுதி உள்ள திருமதி பத்மா சோமகாந்தன், கொழும்பின் இடைநிலை, மேல்நிலை, மத்தியதரக் குடும்பங்களில் இந்துப் பெண்கள் எவ்வாறு தொழிற்படுகின்றார்கள் என்பதனை ஆதார்சபூர்வமாக தொடங்கி

யதார்த்தபூர்வமாக நிறைவு செய்துள்ளார். இலங்கையின் மற்ற எந்தப் பகுதிகளிலு மில்லாத கொழும்பின் தலைநகர்த் தன்மை காரணமாக காணப்படுகின்ற அம்சமே திரு. சோமகாந்தனின் கட்டுரைப் பொருளா கும். அதாவது, கொழும்பில் வாழ்கின்ற தமிழர்கள் அல்லாத பிற மொழி இனத்தின ரான இந்துக்களினது மத வாழ்வு பற்றிய தரவுகளை அக்கட்டுரை தருகின்றது. மொழி இன வேறுபாடுகள் இடையேயும் மத ஊடாட்டம் ஏற்படுத்தக்கூடிய சமுதாய நிலை அந்நியோன்னியத்தை இக்கட்டுரை மூலம் அறிகிறோம்.

கட்டுரைகளைத் தொடர்ந்து வரும் நேர்காணல்கள் ஐந்தும் கொழும்பின் இந்துப் பாரம்பரிய வரலாற்று, சமகால இயல்புகளை நன்கு வெளிக்கொணருகின் றன. சுவாமி ஆத்மகணாநந்தஜீயின் நேர் காணல் மூலம் கொழும்பில் இராமகிருஷ்ண மிஷன் கடந்த 75 வருடங்களாக நடத்தி வரும் மௌனப் பணிகளை மிகுந்த அவை யடக்க உணர்வுடன் எடுத்துக் காட்டுகின் றது.

பிரம்மஸ்ரீ. குஞ்சிதபாதக் குருக்கள் அவர்களுடனான நேர்காணல் கொழும்பில் சமகாலத்திற் காணப்படும் இந்துமத அனுட்டானச் செல்நெறிகளை மிக்க தெளிவுடன் வெளிக்கொணருகின்றன. கொழும்பில் உள்ள இந்துத் தமிழ் மக்களின் சமூக வரலாற்றுக்கான பல உண்மைகள் இந்நேர்காணலுள் பொதிந்து கிடக்கின்றன.

திரு. சுப்பிரமணியம் செட்டியார் அவர் களுடைய நேர்காணல் நகரத்தார் சமூகத்தின ரின் செயற்பாடுகளையும், அவை எவ்வாறு கொழும்பின் இந்துப் பாரம்பரியம் காட்டு கின்ற வேல் விழா, கல்யாண மண்டபம் ஆகியவை நகரத்தார் செயற்பாடுகளிற்குள் மையமிட்டு நிற்கின்றன என்பதைக் காட்டுகின்றன.

1980கள் முதல் கொழும்பில் உள்ள இந்து மக்களது வாழ்க்கையில் ஏற்பட்டுள்ள சமூக மாறுதல்களின் வழியாக வரும் மதத் தேவைகள் எவ்வாறு பூர்த்தி செய்யப்படு கின்றன என்பதைத் திரு. வல்லிபுரத்தின் நேர்காணல் மிகத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது. கொழும்புக் கோயிற் பாரம்பரியத்தில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்கள் பற்றி திரு. வல்லிபுரம் விவரமாக எடுத்துக் கூறியுள்ளார்.

கொழும்பில் தமிழ் நியாய துரந்தரப் பாரம்பரியமுள்ள திரு. வே. தேவசேனாபதி அவர்களுடனான நேர்காணல் இரண்டு நிலைகளில் மிகுந்த முக்கியத்துவம் பெறுகின்றது. ஒரு நிலையில் அது கொழும்பில் இந்து மதம் பற்றிய ஒரு வாய் மொழி வரலாற்று எடுத்துரைப்பாக அமைகின்றது. கப்பித்தாவத்தை கோயில் பற்றிய வரலாறு, தட்டாத்தெரு சிவசுப்பிர மணிய சுவாமி வரலாறு போன்றவற்றில் இந்த வாய்மொழி அம்சம் மிகத் துல்லியமாக அமைகின்றது. சாதாரண இந்து கிராமம் ஒன்றில் நிலவக்கூடிய வாய்மொழிக் கதைகள் இங்கும் காணப்படு கின்றன. (கனவில் தெய்வங்கள் வரும் கதைகள்) இத்தகைய கதைகள் கொழும்பில் எல்லாக் கோயில்களையும் உள்ளடக்கா என்பதும் முக்கிய உண்மையாகும்.

இரண்டாவது அம்சம், கொழும்பில் இந்துமத அலுவல்களில் தங்களை ஈடுபடுத்தியோர், அவர்களின் பணிகள் பற்றிய வரலாறு இன்னும் சரியாகக் கொடுக்கப் பெறவில்லை. கோல்புறூக் காலத்தின் பின்னர், கொழும்பில் பெருகும் இந்துமத பிரசன்னத்தின் பரப்புகைக்கு யார் யார் உதவினார்கள் என்பது தெரியவில்லை. பொன்னம்பலம் முதலியார் குடும்பங்களின் நடவடிக்கைகளை ஓரளவு சேகரிக்கலாம். அவர்களைத் தொடர்ந்து முக்கியத்துவம்

பெறும் பல குடும்பங்களின் வரலாறுகள் இப்பொழுது தெரியப்படாமலே போயுள்ளன. 1930, 40 களின் பின்னர், வருகின்ற பெயர்களை ஓரளவுக்கு திரு. தேவசேனாதிபதி தருகின்றார். அதுவும் கொழும்பு வடக்கை மையமாகக் கொண்டே அமைந்துள்ளது. 1920-30 காலப்பகுதியில் முக்கியம் பெறும் சில குடும்பங்களின் தொழிற்பாடு பற்றி எதுவும் தெரியவில்லை. இதுபற்றி அறிவதற்கு நண்பர் நா. சுப்பிரமணியம் தந்துதவிய, ஸ்ரீ பத்மநாப ஐயர் எழுதிய 'மேன்மக்கள் சரித்திரம்' (1930) எனும் நூலை சரிவரப் பயன்படுத்த முடியாது போனமை துரதிஷ்டமே.

கொழும்பில் இந்து மாமன்றம் இப் பணியிற் சிரத்தை காட்ட வேண்டியது அவசியமாகும்.

இந்தக் கட்டுரைகள், நேர்காணல்கள் மூலமாக நாம் அறிந்து கொள்வனவற்றில் முக்கியமானது கொழும்பில் இந்துப் பாரம்பரியம் பற்றி நாம் இன்னும் எத்தனையோ விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்பதாகும்.

**அறிதொறும் அறிதொறும் அறியாமை கண்டவாறு...**

தெரியவரும் சிலவற்றின் மூலம் தெரிய வேண்டிய பலவற்றினைப் பற்றிச் சிந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது.

இந்நூலின் அடுத்த பகுதியாக அமைந்துள்ளது, கொழும்பு மாவட்டத்தில் உள்ள கோயில்கள் இந்து மதம் சார் நிறுவனங்கள், சங்கங்கள், அறநெறிப் பாடசாலைகள் பற்றிய உத்தியோகபூர்வமான பட்டியல்களாகும். இவை இந்து அலுவல்கள் திணைக்களத்திலிருந்து பெறப்பட்டவை ஆகும். இப்பட்டியல்களை தந்துதவிய இந்து அலுவல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் திரு. தெய்வநாயகம் அவர்களிற்கு எங்கள் நன்றி உரித்து.

அடுத்து வருவது வழிபாட்டிடங்கள் பற்றிய விவரக் கொத்தாகும். உத்தியோக பூர்வப் பட்டியலில் நூற்று முப்பத்தெட்டு (138) வழிபாட்டிடங்கள் குறிப்பிடப்பட்டு இருக்க, நமக்குக் கிடைத்துள்ளவை 33 கோயில்கள் பற்றிய விவரங்கள் மாத்திரமே. அதில் இடம்பெறும் ராதாகிருஷ்ண ஆலயம் இந்துத் தமிழ் வழிபாட்டுக்குள் வராதது. ஆகவே, இந்து தமிழ் மரபுக் கோயில்கள், 32 கோயில்களின் விவரங்களே கிடைத்துள்ளன. அதாவது உள்ள கோயில்களில் அண்ணளவான 23% கோயில்களின் தரவுகளே கிடைக்கப் பெற்றுள்ளன. 77% கோயில்கள் தரவு இல்லை.

கொழும்பு நகர்ப் புறத்திற்கு வெளியே நாம் களப் பணியாளர்களை அனுப்பவில்லை என்பது உண்மையே. ஆனால், கோயில்கள் பற்றிய விவரத் தேடுதல்கள் நடைபெறுகின்றது என்பதை பத்திரிகை வாயிலாக ஏறத்தாழ எல்லோருமே அறிந்திருந்தனர். இதற்குச் சான்றாக அமைவது அவிசாவளை கோயிலாளரின் கடிதமாகும். கொழும்பு நகருக்குள் உள்ள கோயில்களுள் தெமட்டகொட, கிருலப்பன பகுதிகளில் உள்ள கோயில்களோடு நேரடித் தொடர்பு ஏற்படுத்தப்படவில்லை என்பது உண்மையே. ஆனால், களனி முதல் தெஹிவளை வரை உள்ள ஏறத்தாழ எல்லாக் கோவில்களுக்குமே களப்பணியினர் சென்றுள்ளனர்.

சொத்து விவரம் பற்றிய வினாவே பிரச்சினை மையமாக இருந்தது என அறிவோம். இந்தத் தயக்கத்திற்கான காரணிகளை நமது கோயில்கள் பற்றிய சமய ஒழுங்கமைப்பு முறையினுள் தேடுதல் வேண்டும். இது பற்றிப் பின்னர் பார்ப்போம்.

அடுத்து கோயில்கள் பற்றிய விவரங்கள் வினாக்கொத்து அடிப்படையில் பெறப்

பட்ட பின்னர் பிரசுரத்திற்காக அவற்றினைத் தொகுக்கும் பொறுப்பினை இந்துப் போதக ஆசிரியை திருவாட்டி வசந்தா வைத்திய நாதன் ஏற்றுக்கொண்டார். தரவுகளைச் செம்மையாகத் தொகுத்துத் தந்தமைக்கு அவருக்கு எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

கோயில்களைத் தொடர்ந்து கொழும்பில் உள்ள சத்திரங்கள் இரண்டு பற்றிய குறிப்புக்களை அடுத்துக் காணலாம்.

நவீனமயவாக்கம் தனது பூரண தாக்கத் துடன் வருவதற்கு முந்திய காலத்து பயண முறைமை, பொது இடத்தில் தரித்துச் செல்லும் முறைமைகளுக்கான நிறுவனமே சத்திரமாகும்.

இந்த சத்திர முறைமை தமிழகத்தின் முக்கிய கோயில்கள் எல்லாவற்றிலும் காணக்கூடிய ஒன்றாகும். கோயில்களே நகரங்களின் மையமாக இருந்த ஒரு காலத்தில் (அதாவது கோவிலைச் சுற்றி நகரங்கள் அமைக்கப்பட்ட காலத்தில் இச்சத்திர முறைமை முக்கியம் பெற்று இருந்தது) கொழும்பில் தம்பையா சத்திரம் கதிர்காமம் போன்ற கோயில்களுக்கு செல்லும் பயணிகளிற்கும் சில வேளை சாதாரண பயணக்காரர்களுக்கும் பயன் பட்டதாக அறிகின்றோம். ஆனால், ராம்லால் சத்திரமே முந்திய காலத்து வட இந்திய தொடர்புகளை காட்டுவது, அந்த சத்திரத்தின் இன்றைய நிலை மிகுந்த விசனத்திற்குரிய ஒன்றாகும்.

நகரமயவாக்கத்தின் கொடூர தாக்கங் களிற்கு எடுத்துக்காட்டாக, விளங்கும் அச்சத்திரத்தை மீட்டெடுப்பது கொழும் பின் இந்து மக்களது சமூக மதப் பொறுப்பு என்றே கூறல் வேண்டும்.

கதிர்காமத்து இராமகிருஷ்ண மடத்தை மீட்டுக் கொள்வதற்கு எடுக்கப்பட்ட அரச மட்ட முயற்சிகள் போன்று இங்கும் எடுக்கப்படல் வேண்டும். ஒரு முக்கியமான இந்து மத நிறுவனம் என்பது மாத்திரம் அல்லாமல் கட்டிட முறைமையை நோக்கும்போது அந்த சத்திரத்தின் மீதியுள்ள கட்டடங்கள் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தவை யாகும். இந்த சத்திரத்தின் எதிர்காலம் பற்றி மிகுந்த நிதானத்துடன் நடவடிக்கைகள் எடுத்து அதன் பாரம்பரியத்தை பேணுவ தற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளல் அவசியம். இந்த விடயம் பற்றிய அவலம் யாதெனில் இப்படியொரு சத்திரம் இருப்ப தென்பது பல இந்துத் தமிழ் மக்களிற்குத் தெரியாததாகும்.

சத்திரங்களைத் தொடர்ந்து இந்து தன்னார்வ நிறுவனங்கள் பற்றிய தொகுப்பினைக் காணலாம். இங்கும் மேற் கூறிய உத்தியோகபூர்வப் பட்டியலுக்கும் தரவுகளைத் தந்துள்ள சங்கங்களின் தொகைக்கும் பெருத்த வேறுபாடு உண்டு. இதற்கான தகவல்களைத் திரட்டுவதில் மிகுந்த சிரமம் காணப்பட்டது. பல இடங்களில் முகவரிகள் மாறி விட்டன. இப் பணியில் மிகுந்த ஆர்வத்துடன் பணிபுரிந்த திரு. ஜனகன் அவர்களிற்கு பெரிதும் கடமைப்பட்டுள்ளேன்.

# III

# கொழும்பின் இந்து சமய வரலாற்றுச் செல்நெறிகள் பற்றிய ஒரு சமூகநிலைப் பருவரைவு

**கோ**ட்டை அரசின் வீழ்ச்சியின் பின்னர் நாம் எதிர்கொள்ளும் கொழும்பு காலனித்துவ நகரமாகவே அமைகின்றது. காலனித்துவம் ஏற்படுத்திய வாய்ப்புகளைப் பயன்படுத்துகின்ற பல்வேறுபட்ட சமூகக் குழுமங்களிடையே இந்துக்களும் ஒரு பகுதியினராக இடம்பெறுகின்றனர்.

போர்த்துக்கேய காலத்து இந்து வரலாறு இன்றைய நிலையில் தெளிவாகத் தெரியவில்லை. ஒல்லாந்தர் காலத்தில் பிற மதப் பொறுதி அதிகம் காணப்படவில்லை என்ற ஒரு பொதுவான குறிப்பு உண்டு. எனினும், மருதானை, தெஹிவளை போன்ற இடங்களில் இந்து நம்பிக்கையின் பிரசன்னம் காணப்பட்டது என்று கொள்வதில் தவறு இருக்காது. கொணாக் கோயிலின் வரலாறும், நதிமாலையில் நிலவிய திருமால் வழிபாடும் மருதானை கப்பிதாவத்தை கோயில்களின் பூர்வீகமும் இந்த உண்மையினை வலியுறுத்துகின்றன. (சம்பந்தப்பட்ட கோயில்களின் வரலாறுகளைப் பார்க்கவும்)

பிரித்தானிய ஆட்சியில் 1796 முதல் 1832 வரை ஆட்சியின் இலக்குப் பற்றிய ஒரு நிச்சயமின்மை இருந்தது. கோல்புறூக் விதந்துரைப்புக்கள் இலங்கையின் காலனித்துவ போக்கிற்கான அடிக்கல்லாக அமைந்தன.

இன்றுவரை காணப்பெறும் இந்து சமயப் போக்கின் தன்மைகள் 1833 உடன் தொடங்குபவையாகவே கருதப்பட வேண்டும். இக்கால கட்டம் முதல் கொழும்பில் தமது இந்து இருப்பினைப் பதிவு செய்கின்ற மக்கட் குழுமங்கள் கீழ்க் காணும் முறையில் அமைந்தன எனக் கொள்ளலாம்.

முதலாவதாகக் குறிப்பிடப்பட வேண்டியவர்கள் இந்தியாவிலிருந்து வந்த இந்துக்களே. பிரதானமாக வர்த்தக நோக்கங்களுக்காகவும் வேறு சில வேளைகளில் கொழும்பில் தொடங்கும் தொழில்கள், வேலைகளுக்காகவும் வந்த உழைப்பாளிகள் என இரு பகுதியினரை நாம் இனங் காணலாம். இவர்களுள் வர்த்தகர்களை முதலில் எடுத்துக் கொள்வோம். வர்த்தகக் குழுமங்களுள் முதலிடம் பெறுபவர்கள் நகரத்தார் எனும் நாட்டுக்கோட்டை செட்டிகளே. இவர்கள் பிரித்தானிய ஆட்சி பரவியிருந்த பர்மா, மலாயா, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்கும் சென்றிருந்தனர். இலங்கைக்கு இவர்கள் ஒல்லாந்தர் காலத்திலேயே வந்திருத்தல் வேண்டும் போலத் தெரிகின்றது. ஆயினும் 1830 களுக்கு பிறகே கொழும்பில் நிலையாகத் தரிக்கத் தொடங்குகின்றனர். அக்காலத்து கொழும்பு நகரம் துறைமுகக் கரையோரத்தை அண்டியதாகவே இருந்துள்ளது. செட்டியார் தெரு எனும் பெயர் இவ்வுண்மையை நிலைநாட்டுகின்றது. இதன் ஆங்கிலப் பெயரான 'Sea Street' மேற்கூறிய உண்மையை வலுப்படுத்துகின்றது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சி நிலைபேறுடையதாக வளரத் தொடங்க ஒரு புறத்தில் பெருந்தோட்டத் துறைக்கான தொழிலாளர்களும் மறுபுறத்தில் தமிழகம், பம்பாய் போன்ற இடங்களிலிருந்து வந்த வர்த்தகர்களும் முக்கியத்துவம் பெறுகின்றனர். இவ்வாறு வந்தவர்களுள் திருவிளங்கத்தார் எனும் எண்ணெய் வாணிபச்செட்டிமார் முக்கியமானவர்கள். களனிய போன்ற இடங்களில் இவர்கள் சிறப்பாகத்

தொழிற்பட்டனர். கொழும்பில் உள்ள செக்கடித்தெரு எனும் வீதி எண்ணெய் வாணிபத்தில் முக்கியத்துவத்தைக் காட்டுவதாகும். ஆனால், இந்த எண்ணெய் வாணிபத்தில் தமிழகத்து எண்ணெய் வாணிபச் செட்டிமார் மட்டுமல்லாது இலங்கையைச் சார்ந்த எண்ணெய் வாணிபர்களும் முக்கிய இடம் பெறுகிறார்கள். சேர். பொன் இராமநாதன் முதல் விவாகம் செய்த பெண்ணின் தந்தையாரான நன்னித்தம்பி முதலியார் குடும்பம் எண்ணெய் வாணிபத்தோடு தொடர்பு பூண்டிருந்தது என்று கூறுவர்.

திருவிளங்கத்தாரை விட இன்னொரு முக்கிய வணிக குழுவினராக கொழும்புக்கு வந்தவர்கள் தமிழ்நாட்டின் தென்புறத்தில் வாழ்ந்த வேளாளர்கள் ஆவர். இவர்களில் இரண்டு முக்கிய வேளாளர் குழுமங்கள் பற்றிக் குறிப்பிடவேண்டும்.

1. ஆறுநாட்டு வேளாளர் குழுமம்
2. தட்சிண வேளாளர் குழுமம்

தட்சிண வேளாள குழுமம் என இங்கு அடையாளம் காணப்பட்டோர் திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த சைவ - பிள்ளைமார் ஆவர். இவர்கள் முதலில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான வியாபாரிகளாக வந்து, பின்னர் தம்மை கொழும்பில் நிலைநிறுத்திக் கொண்டனர் எனக் கூறுவர்.

கொழும்பு இந்து ஆலயங்களைப் பொறுத்தவரை இந்த தட்சிணத்தாரே முக்கியத்துவம் பெறுகின்றனர். கொழும்பு ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயில் இவர்களின் பரிபாலனத்தின் கீழ் காணப்படுகின்றது.

திருநெல்வேலி சைவ - பிள்ளைமார் இலங்கையில் தங்கள் செல்வத்தைப் பெருக்கியமை பற்றிய இலக்கியச்சான்றாக புதுமைப்பித்தன் கதைகள் சில அமைகின்றன. அக்காலத்து இலங்கையின் ஒரு சத நாணயத்தின் ஒரு புறத்தில் தென்னம் பிள்ளை பொறிக்கப் பெற்றிருந்ததால் திருநெல்வேலி மாவட்டத்தில் சாதாரண மக்களிடையே ‘தென்னம்பிள்ளை காசுக் காரர்’ என்ற குறிப்பு நிலவி வந்தது.

தமிழகத்திலிருந்து வந்த வணிகர்கள் எல்லோரையும் பொதுவாக குறிப்பதற்கு சம்மாங்கோட்டார் என்ற பதம் பயன்படுத்தப்பட்டது என்பது இந்நூலில் இடம் பெறும் திரு. சுப்ரமணியம் செட்டியாரின் குறிப்புக்களிலிருந்து தெரிய வருகின்றது. ‘சம்பாங்’ (Champang) எனக் குறிப்பிடப் பெற்ற ஒரு வகை வள்ளத்தின் பெயரே இக்குறிப்புக்கு அடிப்படையாகின்றது. தமிழகத்திலிருந்து வந்த முஸ்லீம் வணிகர்களையும் சம்மாங்காரர் என்று குறிப்பிடும் மரபு இலங்கைச் சோனகரிடையே அண்மைக் காலம் வரை நிலவியது. (கிழக்கு கரையோரத்தில் உள்ள சம்மாந்துறை எனும் பெயர் இது தொடர்பாக முக்கிய கவனிப்புக்குரிய ஒன்றாகும்.)

தமிழர்களான இந்துக்களை விட மலையாளிகள், தெலுங்கர்கள் ஆகியோரும் பம்பாயைச் சார்ந்த சிந்தி வணிகர்களும் குஜராத்தி வணிகர்களும் கொழும்பில் வந்துகுடியேறினர். தென்னிந்தியர்களுள் மலையாளிகள் தமது வணக்க தனித்துவங்களைப் (நாராயணகுரு, ஐயப்பன் வணக்கங்கள்) பேணி வந்தனரெனினும் தெலுங்கர்கள் தமது சமூகக் குழும நிலையில் தமது அடையாளத்தைப் பேணிக் கொண்டனரே தவிர தமக்கெனக் கோயில்களை அமைத்துக் கொள்ளவில்லை என்றே கூறவேண்டும். கொழும்புக்கு கொண்டு வரப்பட்ட நகரசுத்தித் தொழிலாளர்கள் தெலுங்கு மொழி பேசுகின்றவர்களே. இவர்களது பண்பாட்டு நடைமுறைகள் குழும தனித்துவத்துடன் விளங்கின.

இவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவே இருந்தனர். தற்பொழுது இந்நிலை மாறி வருகின்றது. கொழும்பிலுள்ள இந்துக் கோயில்களைப் பார்க்கும்போது தமிழகத்து வணிக குழுமங்களது முக்கியத்துவம் ஏறத்தாழ 1980 வரை மேலோங்கி நின்றமை யால் அவர்கள் பற்றிய குறிப்பு முன்னர் வந்தது.

இலங்கையின் பாரம்பரியத் தமிழ் பிரதேசங்களிலிருந்து இந்துத் தமிழர்கள் கொழும்பை நோக்கி வருவதனை அடுத்த நிலைப்படுத்திப் பார்ப்பது பொருத்த மாகும். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும் புக்கு கடல் மார்க்கமாகவும், தரை மார்க்க மாகவும் வரும் முறைமை யாழ்ப்பாணத் திற்கான புகையிரத சேவை தொடங்கப் படும் வரை நிலவி வந்ததெனலாம். (20ஆம் நூற்றாண்டின் தொடக்க காலம்)

முதலில் வந்த முக்கிய குடும்பங்கள் பெரும்பாலும் மானிப்பாயைச் சார்ந்தவர் களாக இருந்தனரென்பது "மேன்மக்கள் சாத்திரம்" (1930) போன்ற நூல்கள் மூலம் தெரியவருகின்றது. இவ்வாறு வந்த குடும்பங்களுள் முக்கியமானவர்கள் பொன்னம்பல முதலியார் குடும்பமாகும். பொன். குமாரசுவாமி, சேர். பொன். இராம நாதன், சேர். பொன். அருணாசலம் ஆகியோர் இவரது பிள்ளைகளாவர். ஆனந்தக் குமாரசுவாமியின் தகப்பனாரான சேர். முத்துக்குமாரசுவாமி இவர்களது உறவினரே. சேர். பொன். இராமநாதன் குடும்பத்தினது இல்லங்கள் முதலில் செட்டியார் தெருப் பகுதியில் இருந்தன. பின்னர் அக்காலத்து நகர விஸ்தரிப்பு காரண மாக கறுவாத் தோட்டத்திற்குச் சென்றன. இவ்வாறு சமூக முதன்மை பெற்ற பொன்னம்பல முதலியார் குடும்பத்தின் மதப் பணிக்கான எடுத்துக்காட்டாக கொட்டாஞ்சேனை பொன்னம்பல வாணேசர் கோயில் அமைகின்றது.

ஆங்கிலக் கல்வியும் உயர் உத்தியோகங் களும் பெற்றிருந்த இந்தக் குடும்பங்களைத் தவிர இன்னொரு தமிழ்க் குழுமமும் யாழ்ப்பாணப் பகுதியிலிருந்து கொழும் புக்கு வரத் தொடங்கிற்று எனலாம். அவர்கள் பெரும்பாலும் யாழ்ப்பாணத்துக் கரையோரப் பகுதிகளில் வாழ்ந்த கடலோடிப் பாரம்பரியத்தைச் சார்ந்த வர்களே. அவர்கள் கொழும்பு துறைமுக அபிவிருத்தி வேலைகளுக்காக கொழும் புக்கு வந்தனர். பருத்தித்துறை முதல் பொலிகண்டி, வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, மயிலிட்டி, பலாலி, ஊர்காவற்றுறை வரையுள்ள கடலோட்ட பரிச்சயமுடைய வர்கள் கொழும்புக்கு வந்தனர். நாட்டுக்கோட்டை செட்டிமார் களிடையே ஏற்பட்ட பிணக்கு காரணமாக அவர்களுள் ஒரு பகுதியினர் பழைய கதிரேசன் கோயிலை விடுத்து ஏற்கனவே சிறு நிலையில் வழிபாட்டிடமாக இருந்த புதிய கதிரேசன் கோயிலை வாங்கினர் என்று கூறப்படுகின்றது. அந்தக் கோயில் வல்வெட்டித்துறையைச் சார்ந்தவர்களால் வழிபடப்பட்டு வந்தது என்பதற்கான குறிப்புக்கள் உள்ளன. செக்கடித் தெருவில் உள்ளதும் இன்று யாழ்ப்பாணத்தார் கோயில் எனப்படுவதுமான முருகன் கோயில் இந்த மரபினைச் சார்ந்தவர்களது கோயிலாகக் கருதப்படவேண்டும் எனக் கூறப்படுகிறது. பின்னர் இப்பகுதிக்கு வந்த சுருட்டு வியாபாரிகளும் இக்கோயிலில் இடம் பெற்றனர்.

அவ்வாறு நோக்கும்பொழுது கொழும்பு நகரில் யாழ்ப்பாணத்துத் தமிழர்களின் களப் பரம்பல் முதலில் இன்று கொழும்பு வடக்கு எனக் கொள்ளப்படும் கொட்டாஞ்சேனை, முகத்துவாரம் பகுதிகளைச் சார்ந்தவை ஆகும். தமிழகத்திலிருந்து வந்த தொழி லாளர்களும் இப்பகுதியிலேயே வாழ்ந்து வந்தனர். தூத்துக்குடியிலிருந்து வந்த பரதவர்களும் யாழ்ப்பாணம், மட்டக்களப்பு

பகுதியிலிருந்து வந்தவர்களும் இப்பகுதியிலேயே வாழ்ந்து வந்தனர்.

பம்பலப்பிட்டி, வெள்ளவத்தை பகுதிகளில் உள்ளூர் தமிழர்கள் குடியேறத் தொடங்கியமை 1920 முதல் படிப்படியாகத் தொடங்குகின்றது எனலாம்.

1930 களில் பம்பலப்பிட்டி, வெள்ளவத்தையில் வாழ்ந்த தமிழர்கள் தங்களுக்கான மதம்சார் நிறுவனங்களை வளர்க்கத் தொடங்கியதைக் காணலாம். புறக்கோட்டையிலிருந்து மிகத் தொலைவில் உள்ளதாகக் கருதப்பட்டதுதான், கதிர்காம யாத்திரிகர்களுக்கெனக் கட்டப்பெற்ற பம்பலப்பிட்டி கதிரேசன் கோயில், வெள்ளவத்தை மாணிக்கப் பிள்ளையார் கோயில் என்பன கொழும்பு தெற்குப் பகுதியின் முதற்கட்ட கோயில்களாகும்.

கொழும்புத் தமிழர்களில் கோயில்சார் பண்பாட்டு வாழ்க்கை இவ்வாறு அமைய, அவர்களது தன்னார்வ நிறுவனங்களாகத் தொடங்கப்பெற்ற விவேகானந்த சபை, சைவமங்கையர் கழகம் போன்றன மத உணர்வைப் போற்றுவதற்கான களங்களாக அமைந்தன. கொழும்பு தெற்கில் கட்டப்பெற்ற இராமகிருஷ்ண மிஷன் ஏறத்தாழ 1960 வரை இந்துத் தமிழர்கள் மாத்திரமல்லாது தமிழர்கள் அல்லாத இந்துக்களும் ஆதரவு வழங்கிய முக்கியஇடம்பெறுகின்ற ஒரு மையமாக விளங்கிற்று.

நகரத்தார், சம்மாங்கோட்டார் ஆகியோருடைய முதன்மையை ஒட்டி வளர்த்தெடுக்கப்பட்ட கோயில் பண்பாடு ஏறத்தாழ 1950கள் வரை எத்துணை பெரு மாற்றமும் இன்றி தொடர்ந்தது எனலாம்.

கதிர்காமத் தீர்த்தத் திருவிழாக் காலத்திற் கொழும்பில் நடத்தப்பெற்ற ஆடிவேல் விழா கொழும்பு இந்துக்களின் பெருவிழாவாக நடைபெற்றது. புறக்கோட்டை நகரத்தார் கோயில்களில் இருந்து வந்த ரதங்களில் இரண்டாம் நாள் வருவதற்கு அரசமட்ட மரியாதை கொடுக்கப்பட்டு வந்தது. கோட்டையில் உள்ள அரச அலுவலகங்கள் ஒவ்வொன்றும் மரியாதையான முறையில் அந்த ரதத்தை வரவேற்றன. தேசாதிபதி, பின்னர் ஜனாதிபதி, பிரதம மந்திரி, பொலிஸ்மாஅதிபர் போன்ற முக்கியஸ்தர்கள் வரவேற்பில் ஈடுபடுவது வருடாந்த வழக்கமாக இருந்தது. வெள்ளவத்தை, பம்பலப்பிட்டி கோயில்களில் அடுக்கடுக்காக கடைகள் வைக்கப்பெற்று அலங்காரப் பொருட்கள் முதல் வீட்டுப்பாவனைப் பொருட்கள் வரை பல பொருட்கள் விற்கப்பட்டன. காப்புக் கடைகள் (வளையல்) மிகப் பிரசித்தம் பெற்றிருந்தன. மூன்று கோயில்களிலும் நடந்த அன்னதானங்களில் கொழும்பின் வசதி அற்ற சகல மதத்தவர்களும் பங்கு கொண்டனர். யாவற்றுக்கும் மேலாக ஆடிவேல் விழாவின்போது மிகப் பெரிய தமிழகக் கலைஞர்கள் கொழும்பு வந்து ஆற்றுகைகள் செய்வதற்கான ஒழுங்குகள் செய்யப்பட்டன. குறிப்பாக, நாதஸ்வர வித்துவான்கள் பலர் வேல்விழாவுக்கென கொண்டுவரப்பட்டனர். காருக் குறிச்சி அருணாசலம், நாமகிரிப்பேட்டை கிருஷ்ணன், ஏ. கே. சி. நடராஜன் (கிளாரினட்) போன்ற பெரும் வித்துவான்கள் 1950 களில் வேல் விழாக்களுக்காக கொழும்பு வந்தனர். இவை யாவும் நகரத்தார் செயற்பாடுகளாகவே அமைந்திருந்தன. கொழும்பின் இந்த சௌஜன்ய வாழ்வுச் சூழல் 1950 களின் பிற்பகுதியில் மாறுதல் அடையத் தொடங்கியது. சிங்களச் சட்டம் ஏற்படுத்திய மன உளைச்சல்கள், சிங்கள மக்களிடையே கிளம்பப் பெற்ற தமிழ்த் துவேஷக் கோஷங்கள், கொழும்பு வாழ்க்கையின் ஓட்ட ஒத்திசைவிற் பல மாற்றங்களை ஏற்படுத்தத் தொடங்கின. இனத்துவ அரசியலின் வளர்ச்சி, கொழும்புத் தமிழர்களின் நடைமுறைகளில் பல மாற்றங்கள் ஏற்படுத்திற்று.

56, 59, 61, 66 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட தாக்குதல்களின் பொழுது கொழும்பு தெற்கே பெரிதும் பாதிக்கப் பட்டது. இதனால், சரஸ்வதி மண்டபமும் கோயில்கள் சிலவும் அகதி முகாம்களாக தொழிற்பட வேண்டிய நிலையும் ஏற் பட்டது. இத்தகையதொரு வாழ்க்கைப் போக்கு காரணமாக இந்து தமிழ் மக்கள் இரு நிலைப்பட்ட தாக்கத்துக்கு முகம் கொடுக்கும் நிலை ஏற்பட்டது.

ஒன்று, மற்றைய சமூகத்தவர் போல தங்கள் சமய விழாக்கள், கோயில் விழாக்கள் முதலியவற்றைக் கொண்டாட முடிய வில்லை. மற்றையது, மற்றைய பொதுவிட வைபவங்களிலும் கலந்து கொள்வதில் தயக்கம் ஏற்பட்டது. இதனால் கோயில்கள் மாத்திரமே இவர்கள் தங்கள் மனச்சுமை களை இறக்கக்கூடிய இடங்களாக அமைந் தன. 1960களில் இந்துக்களின் வாழ்க்கையில் ஒரு முக்கியமான தாக்கத்தை ஏற்படுத்திய சில நவ வழிபாட்டு முறைமைகள் பரவத் தொடங்கின. அவற்றுள் மிக முக்கியமானது சாயி பாபா வணக்கமாகும். சாயி பாபா இயக்கம் கோயில்களைப் பிரதானப்படுத் தாது பஜனை மண்டபங்களையே பிரதானப் படுத்தியது. இந்நடைமுறையில் இந்துக்கள் அல்லாதவர்களும் சில இடங்களில் சேர்ந்து கொண்டனர். இதனால் மிகச் சிறிய அளவில் எனினும் மத ஈடுபாட்டுக்கு கோயில்களுக்கு அப்பாலான சில மையங்கள் தோன்றத் தொடங்கின.

சாயி பாபா வணக்க முறைமை மாத்திரம் அல்லாமல் வேறு பல சுவாமிஜிகளது வழிபாட்டு நடைமுறைகளும் இங்கு போற்றப்படத் தொடங்கின. குரு மகராஜ் போன்றவர்களுடைய நடைமுறைகளும் சுவாமி சிவானந்தா போன்றவர்களுடைய திவ்யஜீவன சங்கம் போன்றவையும் இக்கால கட்டத்தில் ஒரு புத்துயிர்ப்பை வழங்கின. நவ இந்துமத இயக்கங்களின் வருகை, பாரம்பரிய, வழிபாட்டு முறைமை களிற் பல திருப்பங்களை ஏற்படுத்திற்று. கோயில் அல்லாத இன்னொரு இடத்தில் தியானம் செய்வது இறை புகழ் பாடுவது என்ற ஒரு முறை ஏற்பட்டது. இத்தகைய இயக்கங்களில் முதலில் ஈடுபட்டோர் பொறியியலாளர், மருத்துவர்கள், நிர்வாகி கள் போன்ற தொழின்மைக் குழுவினரே.

கொழும்பு தெற்கில் ஏற்பட்ட இந்தச் சலனங்கள் கொட்டாஞ்சேனை முகத்து வாரத்தை 50-60 காலகட்டங்களில் பெரிதும் பாதிக்கவில்லை என்றே கூறல் வேண்டும். அப்பகுதிகளில் பெரும்பாலும் கத்தோலிக் கரே வாழ்ந்து வந்ததால், அங்கு தமிழ் எதிர்ப்பு முனைப்புறவில்லை.

1960-70 களில் அரசாங்கக் கந்தோர்களில் நவராத்திரி கொண்டாடுவது பெரு வழக்காக இருந்தது. பெரும்பாலும் விஜய தசமியன்று நடத்தப்பட்ட இவ்விழாக்கள் இசை, நடன நிகழ்ச்சிகளைக் கொண்டதாக அமைந்திருந்தன. அரசாங்க உத்தியோகத் தில் இருந்த தமிழர்கள் தங்கள் இனத்துவ அடையாளங்களைப் பேணுவதற்கு இக் கலைமகள் விழாக்கள் பெரிதும் உதவின. வருமானவரித் திணைக்களம், சுங்கத் திணைக்களம் ஆகியவற்றில் நடைபெற்ற கலைமகள் விழாக்கள் பிரசித்தமானவை. கோயில் நிகழ்ச்சிகளுக்கும் இத்தகைய கலை நிகழ்ச்சிகளுக்கும் அரசு முக்கிய இடம் அளித்து வந்தது. தமிழ் ஒலிபரப்பினரே கவர்ச்சி மிக்க கலைமகள் விழாக்களை நடத்தினர்.

கொழும்பின் இந்துத் தமிழர் வாழ்க்கை யின் ஒரு முக்கிய கட்டமாக 1983 அமைந்தமை ஆச்சரியத்தைத் தருவதன்று. 1983 இல் கொழும்பு நகரத்தில் அரசாங்க் அதிகார பின்புல உதவிகளுடன் நடத்தப் பெற்ற திட்டமிடப்பட்ட தாக்குதல்கள் காரணமாக, கோயில்கள், வழிபாட்டி டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன.

கொழும்புக்கு வெளியே உள்ள இந்துக் கோயில்கள் பாதிக்கப்பெற்ற அளவு கொழும்புக் கோயில்களிற்கு பெருமளவு சேதம் ஏற்படவில்லை எனினும் 1983 கலவரம் காரணமாக கொழும்பின் இந்து வாழ்க்கையின் ஒரு பெருத்த ஸ்தம்பித தேக்கம் ஏற்பட்டது.

இந்தக் கலவரத்தின்போது கத்தோலிக்க சிங்களவர்கள் பெரும்பான்மையாக இருந்த கொழும்பு வடக்கும் கொழும்பு தெற்களவு பாதிக்கப்பட்டது. தமிழ்ப் பாடசாலைகளும் இந்துக் கோயில்களும் தற்காலிக அகதி நிலையங்களாக மாறின.

1983 கலவரத்தை கொழும்பு இந்துத் தமிழர் வரலாற்றின் ஒரு திருப்புமுனை யாகவே கொள்ளல் வேண்டும். 83 கலவரம் ஒரு முக்கிய பாடத்தைப் போதித்தது. கொழும்பு தமிழ்ப் பிரதேசமன்று. அங்கு இந்துத் தமிழர்கள் தங்கள் மத பண்பாட்டு ஒழுகலாறுகளை தம்மிச்சைப்படி செய்ய முடியாது. ஏறத்தாழ 1930 முதல் கொழும்பு வழங்கி வந்த சமூக, தொழில் வாய்ப்புகள் தமிழ்ப் பிரதேசங்களில் சாதாரணமாக நிலவிய சமூக மரபுகளிலிருந்து வேறுபட்ட ஒரு சூழலை இங்கு அனுபவித்தமையாலும் அரசாங்க மையங்கள், ஊடகங்கள் ஆகியன கொழும்பையே மையமிட்டு இருந்தாலும் தம்மைக் கொழும்புத் தமிழர் என அடை யாளம் காணும் ஒரு குழுவினரை 1940, 50 களில் கொழும்பிலே காணக்கூடியதாக இருந்தது. 1983 அந்த எடுகோள் பிழை யானது என்பதை நிரூபித்தது.

கொழும்பில் இந்துத் தமிழர் தொடர்ந்து வாழ்ந்து வந்தாலும் மிகுந்த சமூக அடக்கத் துடனேயே வாழவேண்டி ஏற்பட்டது. கணிசமானவர்கள் வட கிழக்குக்கு சென் றனர். வசதி படைத்த பலர் மேற்கு நாடுகளுக்குச் சென்றனர். தமிழகத்து வர்த்தகர்களும் கொழும்பை ஒரு ஸ்திரமான இடமாகக் கருதாது தங்கள் வர்த்தக நடவடிக்கைகளை மாற்றி அமைக்கத் தொடங்கினர்.

80களின் நடு, பிற் கூற்றில் கொழும்பில் இந்துத் தமிழர் வாழ்க்கை இறங்குமுக நிலையிலேயே இருந்தது எனலாம். இதேவேளையில் வடக்கு, கிழக்கில் குறிப்பாக யாழ்ப்பாண மாவட்டத்தில் ஏற்பட்டு வந்த அரசியல் மாற்றங்கள் காரணமாகதமிழ்க் குடும்பங்கள் பல தங்கள் பாதுகாப்புக் கருதி கொழும்புக்கு மீண்டும் வரவேண்டிய நிலை ஏற்பட்டதில் தீவிரவாத இளைஞர் இயக்கங்களுக்கு எதிராக அரச படையினர் மேற்கொண்ட நடவடிக்கைகள் பொதுமக்களைக் கணக்கில் கொள்ளாது சகட்டுமேனிக்கு கிராமங்களையும் வீடு களையும் விமானங்கள் வழியாகவும் ஷெல் எனப்படும் எறிகணைகள் கொண்டும் தாக்கத் தொடங்கின. அரசியல் ஸ்திரம் இன்மைக்கு மேலே உயிர் ஆபத்தும் ஏற்படக்கூடிய இத்தகையதொரு சூழலில் மக்கள் தங்கள் வாழ்விடங்களை விட்டு வெளியேற வேண்டிய தேவை ஏற்பட்டது. யாவற்றுக்கும் மேலாக உரிமைப் போராட்டம், அதற்கு எதிராக அரசநிலை எதிர் யுத்தமும் பாரம்பரிய அடுபோர் நிலைமையினைக் கொண்டு வந்தது. அதாவது, வரன்முறையான களப் போராக மாறிற்று. இதுவும் மக்களை வெளியேறத் தூண்டிற்று. இவை போதாதென்று யுத்தத் தில் இருந்து தப்புவதற்காகவும் பொருளா தார தேவைகளுக்காகவும் பிற நாடுகளுக்கு எப்படியாவது சென்று விடவேண்டும் என்ற ஒரு அங்கலாய்ப்பும் ஏற்பட்டன. இந்தக் காரணிகளின் ஒன்றிணைந்த தொழிற்பாடு காரணமாக குறிப்பாக யாழ்ப்பாணத்தை சேர்ந்த பல குடும்பங்கள் கொழும்புக்குத் திரும்பி வந்தன. 1990களில் இந்தப் போக்கு காணப்பட்டது. இந்த மக்கள் வந்து கொழும்பின் பல பாகங்களிலும் சிங்களக் குடும்பங்களின் அனுசரணையுடனும் ஆதரவுடனும் அனெக்ஸ்கள் எனப்படும்

பின்னொட்டுகளில் குடியிருக்கத் தொடங்கினர். பலர் லொட்சுகள் எனப்படும் தரிப்பு விடுதிகளில் தங்கத் தொடங்கினர்.

இது ஏறத்தாழ ஒரு அகதி நிலைப்பட்ட வரன்முறையை (பின்னர் 90களின் பிற்பகுதியில் புகலிடப் பண வருகை காரணமாக சொந்த இருப்பிடத்தை வாங்கும் வசதி நிலை ஏற்பட்டது) உண்மையில் 80 களின் பிற்கூற்றிலிருந்து இத்தகையோர் தொகை படிப்படியாக அதிகரிக்கத் தொடங்கிற்று. இன்று ஏறத்தாழ 2½ லட்சம் தமிழ் மக்கள் கொழும்பில் வாழ்கின்றார்கள் என மதிப்பிடப்படுகிறது. போர் நிறுத்த ஒப்பந்தத்தின் முன்னர் ஏறத்தாழ 1996ம் ஆண்டில் இருந்து தமிழ் மக்களுக்கு எதிரான அரச அதிகார கெடுபிடிகள் உச்சக்கட்டத்தை எய்தின. இருப்பினும் இவர்கள் கொழும்பில் வாழவேண்டிய நிர்ப்பந்தமே இருந்தது. பொழுதுபோக்குக்காகவோ, கேளிக்கைக்காகவோ எந்த ஒரு மக்களும் பொது இடங்களுக்குச் செல்ல முடியாத நிலை இருந்தது. இத்தகைய ஒரு சூழலில் கோயில்களே இவர்களுக்கு உண்மையான மன வெளிப்பாடுகளுக்கான "புகலிடம்" ஆயிற்று.

இத்தகைய வேளைகளில்தான் மதம் மனித வாழ்க்கையில் ஒரு ஜீவாதாரமான இடத்தைப் பெறத் தொடங்குகிறது. கார்ல் மாக்ஸ் அதனை மிகுந்த வலுவுடன் சித்திரித்துள்ளார். "அது (மதம்) இதயமற்ற உலகின் இதயம் ஆத்மாவை இழந்த உலகின் ஆத்மா"

இந்த மக்களும் மதம் வழியாக மன ஆறுதலை வேண்டி நின்றனர். அந்த மன ஆறுதலை அவர்களுக்கு பரிச்சயமான, அவர்கள் ஆண்டாண்டு காலமாக அத்தகைய தலங்களில் செய்து வந்த நடைமுறைகளையே பின்பற்ற விரும்பினார்கள். யாழ்ப்பாணத்தின் இந்து வாழ்க்கை மரபின் கோயில்களுக்குச் செய்யப்படும் வேண்டுதல்கள் மிக முக்கியமான இடத்தைப் பெறும். அடியழித்தல், அங்கப்பிரதட்சணம் செய்தல், பால்குடம் எடுத்தல், காவடி எடுத்தல், கடும் விரதம் இருத்தல் போன்ற அனுஷ்டானங்கள் இத்தகைய சூழலில் முக்கியமாகின்றன. இவர்களின் இந்தத் தேவைகளை கொழும்பில் ஏற்கனவே இருந்த பெரும் கோயில்கள் பூர்த்தி செய்யக் கூடியவையாக இருக்கவில்லை. பால் குடம் எடுப்பதோ, அடியழிப்பதோ, கடும் விரதம் இருப்பதோ, விரதகாலங்களில் கோயில்களில் தங்குவதோ கொழும்பு மரபில் இடம்பெற முடியாது.

மேலும், இவர்களுக்கு தாங்கள் சென்ற இடங்களில் எல்லாம் தங்கள் இஷ்ட தெய்வங்களையே போற்றி வணங்க விரும்பினர். ஆனால், இவர்களது இந்த மதத் தேவைகளை பூர்த்தி செய்வதற்கான உள்ளக அமைப்பு தமிழகத்து வணிக மேலாண்மை பாரம்பரியத்தின் வழிவந்த கோயில்களில் இருக்கவில்லை. இந்தக் கோயில்கள் நகர்ப்புறத்துத் தேவைகளைப் பூர்த்தி செய்பவையாக, அந்தத் தேவைகளுக்கு இயைய, தாங்கள் வளர்த்தெடுத்த சில நியம முறைகளின்படியே செல்லக் கூடியதாக இருந்தது. கூட்டுப் பிரார்த்தனை போன்ற நடவடிக்கைகளே இங்கு முதன்மை பெற்றன.

இந்தப் பெருந்தொகையான இந்து மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு 90களில் முதன் நிலைக்கு வந்த கோயில்கள் சில உதவின. ஹவ்லக் ரோட்டில் உள்ள மயூரபதி அம்மன் கோயில், இந்தப் புதிய தேவைகளுக்கு இடமளிக்கும் நடைமுறைகளைச் சீரிய ஒழுங்கமைப்புடன் மேற்கொண்டது. உண்மையில் 1980-90 களில் கொழும்பில் குறிப்பாக, ஆர். பிரேமதாஸ பிரதம மந்திரி, ஜனாதிபதியாக இருந்த காலத்தில் பெரிய கோயில்களாக இல்லாதிருந்த சிறுநிலைக் கோயில்கள் முக்கிய இடம் பெறத் தொடங்கின.

இக்காலகட்டத்தில் இக்கோயில்களின் அறங்காவலர்கள் கொழும்பின் புதிய தமிழ் நிலை முதன்மையாளர்களர்களாக முகிழ்க்கத் தொடங்கினர். சமாதான நீதவான் என்ற கௌரவப் பட்டத்துடன் அவர்கள் கோயில் கருமங்கள் சாராத பண்பாட்டு நடவடிக்கைகளிலும் முதலிடம் பெறத் தொடங்கினர். உதாரணமாக, கொழும்பில் நடைபெறும் புத்தக வெளியீடுகள் பலவற்றில் இவர்கள் சிறப்புப் பிரதி வாங்குவோர்களாக வந்து 2000 முதல் 5000 ரூபா வரை வழங்கத் தொடங்கினர்.

இக்காலகட்டத்திலே தமிழகத்தில் ஏற்பட்ட, தமிழகத்தில் தோன்றிய புதிய வழிபாட்டு முறைகளும் கொழும்புக்கு வரத் தொடங்கின. அவற்றுள் முக்கியமானதாக ஐயப்ப வணக்கத்தையும், ஆஞ்சநேய வழிபாட்டையும் கூறலாம்.

கொழும்பில் இன்று தமிழ் மக்கள் பயமில்லாது சென்று திரும்பக்கூடிய இடம் பெரும்பாலும் கோயில் மாத்திரமே. ஆனால் அந்தக் கோயில்களில் இருந்து எதிர்பார்க்கப் படும் “பயன்பாடு” முற்றிலும் புதிய சூழ் அமைவுகளால் தீர்மானிக்கப்படுவதாக அமைகின்றது.

## IV

## கொழும்பின் இந்து மரபுகள் சில...

**கொ**ழும்பில் இத்துணை கோயில்கள் இருந்தும் ஒட்டுமொத்தமான ஒரு இந்துமத நிலை விழிப்புணர்வு ஏன் காணப்பட வில்லை என்பது ஒரு முக்கியமான வினாவாகும். இதற்கான பதில் இந்து மதத்தின் ஆழங்களைத் தொடுகின்ற ஒன்றாகும். அத்தகையனவற்றுள் ஒன்று இந்து வழிபாட்டிடம் குறிப்பாக சைவ மரபு கோயில்கள் என்றுமே, Congregation என ஆங்கிலத்தில் சொல்லப்படும் கூட்டு வழிபாட்டுத் தொகுதி அன்று. நமது மதத்தில் ஆணிவேரான பக்திநிலை காரண மாக வழிபாடு என்பது தெய்வத்துடன் நாம் கொள்ளும் ஆள்நிலைப்பட்ட தொடர்பே. தெய்வம் நமக்கு ஒரு குரு, நண்பன், தகப்பன், தாய் போன்ற உறவுநிலைகளைக் கொண்டது. இங்கு நாம் ஒவ்வொருவரும் நாம் நாமாகவே செல்கின்றோம். கோயிலில் எல்லோரும் ஒருசேர நிற்பதால் நாம் எல்லோரும் ஒரே படிநிலைக்கு உரியவர்கள் அல்லர். சரியை, கிரியை, யோகம், ஞானம் என்ற பல்வேறு ஆன்மிகப் படிநிலைகள் உள்ளன. இதன் காரணமாக, இந்துத் தமிழ்க் கோயிலை நாம் ஒரு கிறிஸ்தவ திருச்சபை போல் பார்க்க முடியாது. கிராமங்களில் நிலைமை வேறு. அங்கு அது வழிபாட்டிடம் மாத்திரமல்லாது எல்லோருக்கும் ஊர்ப் பொதுவான ஒரு சமூக நிறுவனம் ஆகும். கோயிலுக்குள்ளே செல்லத் தடுக்கப் பட்டுள்ளவர்கள் கூட கோயிலில் திருவிழாச் செய்வார்கள்.

இதற்கு மேல் கொழும்பில் தோன்றிய பெரும்பாலான இந்துக் கோயில்கள் அவ்வச் சமூகத்திற்குரியனவாகவோ அல்லது குலங்களுக்குரியனவாகவோதான் அமைந்துள்ளன. கொழும்பு தமிழருக் கென்று ஒரு பொதுக் கோயில் கிடையாது. இதனால் யாவரையும் உள்ளடக்கும் ஒரு மத ஒருங்கிணைவு உணர்வை வளர்த்தெடுப் பது இங்கு சிரமம்.

அறநெறிப் பாடசாலைகள் வந்த பின்னர் இக்கோயில்கள் அவ்வப் பிரதேச நிலைப் படுவதை நாம் காணலாம். மேலும், ஒவ்வொரு குழாத்தினரும் கோயில் முகாமை தங்கள் கையிலிருப்பதை வெகு கவனத்துடன் நிலைநிறுத்திக் கொள்கின் றனர். கொழும்பு இந்துக் கோயில்கள் இங்குள்ள இந்துத் தமிழர்களிடையே ஒரு பொதுமை உணர்வை வளர்க்கவில்லை.

எனினும், இவற்றில் யாழ்ப்பாணத்தின் சில இடங்களில் இன்று வரையும் உள்ள தீண்டாமை போன்ற சமூக பிற்போக்கு நடைமுறைகள் இடம்பெறுவது கொழும் பின் நகர்த்தன்மை காரணமாக இப் பொதுமை அத்தகைய பிரச்சினைக்கும் இடமின்றி வளர்க்கப்படுகின்றது.

கோயில்களின் நடைமுறைகளில் குழும நிலை அடையாளங்கள் முக்கியம் பெறுவதை அவதானிக்கும் அதேவேளை யில் நவ வழிபாட்டு முறைமைகளினூடே ஒரு வர்க்கத் தொனிப்பு உள்ளது என்பதை யும் மறந்துவிடக்கூடாது. உதாரணமாக, பஜனை முறைமைகள், தியான முறைமை கள் போன்றவற்றை வற்புறுத்தும் மத நடைமுறைமையில் எழுத்தறிவு அந்தஸ்து முக்கியமாகின்றன.

இது பாரிய உள்ளார்த்தங்களைக் கொண்டது. நகர்ப்புறத்துக் கோயில்களின் அமைப்புக்கள் மௌன தியானங்களுக்கான சூழலைக் கொண்டிருத்தல் முடியாது.

கொழும்பு இந்துக் கோயில்களின் மிக முக்கியமான பண்பு அவை தாம் உள்ள இடத்தின் இயல்புகளுக்கு ஏற்ற வகையில் இசைந்துள்ளமைதான். சில கோயில்களில் வீதிகளே இல்லை. சில கோயில்களுக்குப் பக்கத்தில் பிற மதத்தவருடைய வழிபாட்டு இடங்கள் உள்ளன. இத்தகைய ஒரு முற்றிலும் நகர்மயப்பட்ட சூழலிலே பெரும்பாலான இந்துக் கோயில்கள் உள்ளன. சைவ வினா விடையில் குறிப்பிடப்படுகின்ற கோயிலுக்கான இடைவெளி (space) பற்றி குறிப்புகள் இந் நகர்ப்புறத்துக் கோயில்களுக்குப் பொருந் தாது. சைவக் கிராம நிலையில் தீட்டுக்கு உரியனவாகக் கொள்ளப்படும் பலவற் றிற்கும் அருகாமையில் இருக்க வேண்டிய புவியியல் நிர்ப்பந்தம் இங்கு உண்டு.

கொழும்பு இந்து மரபில் முக்கியமாவது இங்கு காணப்படும் மதம் சார் தன்னார்வ நிறுவனங்களே. விவேகானந்த சபை முதல் சைவ மங்கையர்கழகம் வரை பல தன்னார்வ நிறுவனங்கள் தத்தம் இயைவு நிலைகளுக்கு ஏற்ப மறப்பணிகளில் ஈடுபட்டுள்ளன. இந்த தன்னார்வ நிறுவன அமைப்புக்களின் மைய நிலையாக அகில இலங்கை இந்து மாமன்றம் விளங்குகின்றது.

இத்தகைய நிறுவன அமைப்புக்கள் சனநாயக இயல்புகளையும் சிவில் சமூக இயல்புகளையும் ஒன்றிணைக்கின்றன என்று கூறலாம். கொழும்பில் இந்துத் தமிழர்களது அடையாள வலுவில் எடுத்துக் காட்டாக இந்துப் பாடசாலைகள் அமைகின்றன. கொழும்பின் பிரபல கிறிஸ்தவ கல்லூரிகள் ஒவ்வொன்றிலும் இந்து மாணவர்கள் உளர் எனினும் இந்துக்கள் தங்கள் பண்பாட்டுச் சூழலில் தமது பிள்ளைகளுக்கு கல்வி புகட்ட வேண்டும் என்ற ஆர்வம் காரணமாக இந்தப் பாடசாலைகள் தொழிற்படுகின்றன. என்று கொள்ளலாம். பாடசாலைகள் மூலம் வளர்த்தெடுக்கப்படும் ஒழுக்காற்றுச் சீர்மைக்கு இந்து மதத்தின் அடிப்படை கொள்கைகள், நடைமுறைகளை எவ்வாறு பயன்படுத்திக் கொள்வது ஒரு முக்கியமான விளைவாகும். இது கொழும்பில் உள்ள இந்துப் பாடசாலைகளுக்கு மாத்திர மல்லாது இந்துப் பாடசாலைகள் எல்லா வற்றையும் எதிர்நோக்கும் ஒரு பிரச்சினை ஆகும்.

# V

## கொழும்பின் இந்துப் பெரியார்கள் முக்கியஸ்தர்கள் பற்றிய வரலாறு

இப்பணியின் ஆழங்களுக்குச் செல்லும் பொழுது நான் கொழும்பினது இந்து வாழ்க்கையின் அகல ஆழ வளர்ச்சிக்கு உதவியவர்கள் பெயர்கள் சரியாக இன்னும் தொகுக்கப்படக்கூடவில்லை என்பது தெரிகிறது. கோயில்களின் வரலாறு மூலமாக சில முக்கியஸ்தர்களின் பெயர்கள் வெளிவருகின்றன. எனினும், கோயில்களை மையமாகக் கொள்ளாத இந்து சமயப் பணிகளை மேற்கொண்ட பலரது பெயர்கள் பொறிக்கப்படாமலே போயுள்ளன. உண்மையில் இந்த தேடுதல் 19 ஆம் நூற்றாண்டின் நடுக்கூற்றிலிருந்து ஆரம்பிக் கப்பட வேண்டும். முன்னர் கூறியது போல இந்தப் பணியினை இந்து மாமன்றம் மேற்கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

# VI

## இந்துச் சமூக நிலை மரபுகள்

கோயில்கள், தன்னார்வ நிறுவனங்கள் கொழும்பில் முக்கியத்துவம் பெறுவதற் கான மிகப் பிரதான காரணிகளில் ஒன்று, கொழும்பில் உள்ள இந்துக் குடும்பங்கள் குறிப்பாக, கொழும்பு தெற்கில் உள்ளவை, தங்களுடைய சமூக, மத வாழ்வில், அதாவது குடும்பநிலைகளில், வீடுகளில், முதன்மைப் படுத்துவதில் சில சிக்கல்கள் உள்ளன.

பௌத்தர்கள் இலங்கையில் தமது வாழ்வியல் தேவைகளுக்கு இந்து மத கடவுளர்களைப் பூஜிக்கும் ஒரு மரபு உண்டெனினும் அந்த வழிபாட்டு மரபு களை அவர்கள் தங்கள் தேவாலயங்களிலும் நடைமுறைப்படுத்துகின்றனர். ஆனால் கொழும்பிலோ இந்து வழிபாட்டுத் தலங்களுக்கு வந்து அவர்கள் தமது வேண்டுதல்களைச் செய்வர். (கொட்டாஞ் சேனை மாரியம்மன் கோயில், மயூரபதி பத்திரகாளி அம்மன் கோயில்)

ஏறத்தாழ 1996 முதல் 2002 வரை நிலவிய அடையாள நெருக்கடி நிலைமைகள் காரண மாக இந்து தமிழ் மக்கள் தங்கள் பண்பாட் டினை வெளிக்காட்டிக் கொள்வதில் உள்ளூர ஒரு தயக்கம் காணப்பட்டது என்பது உண்மையே. (பெண்கள் குங்குமம் இடுதல்) ஆனாலும் அந்தப் போக்குக்கு எதிர் நிலையாக கொழும்பில் தற்காலிகமாக தரித்து வாழ்பவர்கள், தங்கள் மனக் கவலை களை வெளிக்கொணர கோயில்களுக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டது.

கோயில் விரதங்கள் போன்றவற்றை தவறாது கடைப்பிடிக்கும் அதேவேளையில் வாழ்க்கையின் யதார்த்தங்கள் காரணமாக, தங்கள் தங்கள் இக்கட்டு நிலையில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்வதற்கு, இவர்கள் பிற மத நிறுவனங்களுக்கு செல்வது இன்று வழக்கமாகி விட்டது. குறிப்பாக அந்தோனியார் தேவாலயம், கொழும்பு சென் லோரன்ஸ் தேவாலயங் களுக்கு இந்துப் பெண்கள் செல்வது ஒரு சாதாரண நடைமுறையாகியுள்ளது. வாழ்க்கையில் நெருக்கடிகளை ஏற்படுத்தும் சவால்கள் பல.

நகர்ப்புறத்துச் சூழலில் மத நடைமுறை இணைவுகளும் (Syncretism) பண்பாட்டி சைவு நிலைகளும் (Acculturations) பதிகை களும் ஏற்படுவது இயல்பாகும்.

## பிற்குறிப்பு

விழா நாட்களுக்கு இயைய அச்சு வேலைகளும் நிறைவுற வேண்டி இருந்தமையால் ஆற அமர செய்யவேண்டிய பல வேலைகளை மிக்கத் துரித கதியில் முடிக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இதனாலேயே செவ்விதாக்கத்தின்போது பல பிரச்சினைகள் ஏற்பட்டன. அந்த வேளைகளில் எனக்கு உறுதுணையாக நின்று உதவியவர்கள் ஜெயரூபன், ஜெயப்பிரகாஷ், பாஸ்கர் ஆகியோர். இவர்களுக்கு எனது நன்றி. இவற்றுக்கு மேல் அச்சு நிலையில் மிகச் செம்மையானதொரு பதிப்பு வரவேண்டுமே என்பதற்காக அச்சகத்தார் என்பதற்கு மிகமிக மேலே சென்று இவ்விடயம் பற்றிய ஆர்வம் மிக்க மாணவர்களாக சு. கிருஷ்ணமூர்த்தியும், பவானியும் தொழிற்பட்டதாலேயே இப்பொழுது கிடைக்கப்பெற்றுள்ள இந்த அளவு செம்மையாவது சாத்தியமாயிற்று. அவர்களுக்கு என் மனமார்ந்த புலமை வணக்கங்கள். யாழ் பல்கலைக்கழகத்து உறவுத் தொடர்ச்சிகள் தரும் திருப்தி.

# பொருளடக்கம்

**கட்டுரைகள்**

தென்னிலங்கையில் இந்துக் கோயில்கள் ...................... 1

இரத்மலானையிலுள்ள கொணா கோவில் எனப்பெறும் இந்து ஆலயத்தின் வரலாறு ...................... 11

கொழும்பில் நாட்டுக்கோட்டை நகரத்தார் கோயில்கள் ...................... 14

கொழும்பில் இந்துப் பாரம்பரியம் இந்து சமய நிறுவனங்களும் இந்துக் கல்விக்கூடங்களும் ஏற்படுத்திய தாக்கங்கள் ...................... 17

கொழும்பு மாவட்டத்தில் இந்து மாணவர்களின் கல்விநிலை ...................... 27

கொழும்பில் தமிழர் அல்லாத சமூகத்தவர்களின் இந்து சமயப் பணிகள் ...................... 38

கொழும்பு நகர வாழ்க்கையில் இந்துப் பெண்கள் ...................... 45

**நேர்காணல்கள்**

சுவாமி ஆத்மகணானந்தஜீ உடனான நேர்காணல் ...................... 53

பிரதம சிவாச்சார்யர் 'சைவசித்தாந்த பிரதிஷ்டா சக்கரவர்த்தி' சிவஸ்ரீ சி. குஞ்சிதபாத குருக்கள் அவர்களுடனான நேர்காணல் ...................... 62

புதிய கதிரேசன் கோயில் அறங்காவலர் எஸ். சுப்பிரமணியம் செட்டியாருடனான நேர்காணல் ...................... 73

மயூரபதி அம்மன் கோயில் அறங்காவலர் பொன். வல்லிபுரம் அவர்களுடனான நேர்காணல் ...................... 82

நியாய துரந்தரர் திரு. வே. தேவசேனாதிபதி அவர்களுடனான நேர்காணல் ...................... 93

## கொழும்பு மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள், நிறுவனங்கள், அறநெறிப் பாடசாலைகள்


பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள் ..................... 105
பதிவு செய்யப்பட்ட இந்து நிறுவனங்கள் ..................... 113
பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகள் ..................... 123


## கொழும்பில் இந்து வழிபாட்டிடங்கள்


ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி கோவில் ..................... 127
ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானம் ..................... 134
ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி கோயில் ..................... 137
ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில் ..................... 140
ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் ..................... 147
ஸ்ரீ சிவராஜ விநாயகர் கோவில் ..................... 151
நகரத்தார் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் ..................... 154
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம் ..................... 158
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் ..................... 162
ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம் ..................... 165
தெஹிவளை வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில் ..................... 168
ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம் ..................... 170
மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில் ..................... 176
ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம் ..................... 183
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் ..................... 186
ஸ்ரீ சுவர்ணாம்பிகா ஸமேத ஸ்ரீமத் அருணாசலேஸ்வர் ஆலயம் ..................... 189
சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில் ..................... 192
ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் ..................... 195
ஸ்ரீ இலங்கமா காளியம்மன் கோவில் ..................... 198
ஸ்ரீ மஹாகாளியம்மன் ஆலயம் ..................... 200
ஸ்ரீ துர்க்கையம்மன் திருக்கோவில் ..................... 206
ஸ்ரீ உக்ர வீர மஹா காளியம்மன் கோவில் ..................... 209
ஸ்ரீ வெக்காளி அம்மன் ஆலயம் ..................... 211
ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் ..................... 213
ஸ்ரீ மஹாகாளியம்மன் ஸ்ரீமுனியப்பசுவாமி கோவில் ..................... 216
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் ..................... 220

ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலயம் ...................... 223
ஸ்ரீ ஞானபைரவர் முனியாண்டி சுவாமி கோவில் ...................... 226
ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில் ...................... 229
ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு திருக்கோவில் ...................... 234
ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில் ...................... 237
ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில் ...................... 239
ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம் ...................... 242

**கொழும்பில் சத்திரங்கள், நிறுவனங்கள், சங்கங்கள்**

தம்பையா முதலியார் தர்ம சத்திரம் ...................... 245
ராம்லால் மகாராஜா தர்ம சத்திரம் ...................... 246
கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் ...................... 248
இலங்கை சின்மய மிஷன் ...................... 252
ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் ...................... 255
இலங்கை சத்யசாயி கூட்டமைப்பு ...................... 260
பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம் ...................... 262
விவேகானந்த சபை - கொழும்பு ...................... 264
சைவ மங்கையர் கழகம் ...................... 268
அகில இலங்கை சிவப்பிராமண சங்கம் ...................... 274
ஸ்ரீ ராமகான சபா ...................... 276
சைவமுன்னேற்ற சங்கம் ...................... 277
கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை ...................... 279
திருஞான சம்பந்தர் நற்பணி மன்றம் ...................... 280
அன்னை ஆதிபராசக்தி இல்லம் ...................... 281
உலக சைவப் பேரவை ...................... 283
கொழும்பு மகளிர் இந்து மன்றம் ...................... 284

**களப்பதிவுகள்**

பணிக்குழு ...................... 287
அனுபவப் பகிர்வு - I ...................... 288
அனுபவப் பகிர்வு - II ...................... 290
அனுபவப் பகிர்வு - III ...................... 293

**பின்னிணைப்பு** ...................... 295

# தென்னிலங்கையில் இந்துக் கோயில்கள் கோட்டைக் காலம் (1412 - 1591)

பேராசிரியர். சி. பத்மநாதன் B.A, Ph.D (London), LFIBA
வரலாற்றுத்துறைப் பேராசிரியர்
பேராதனைப் பல்கலைக்கழகம்

பொலநறுவை இராச்சியம் 13ஆம் நூற்றாண்டிலே சீர்குலைந்தது. அழிவுற்றதன் பயனாக வடமத்திய பிரதேசம் கைவிடப் பட்டது. இராசதானி தென்மேற்குப் பகுதியை நோக்கி நகர்த்தப்பட்டது. தம்பதெனியா, யாப்பகூவ, குருணாகல் ஆகியன ஒன்றன்பின் ஒன்றாக இராச தானிகளாக அமைந்திருந்தன. 1344 ஆம் ஆண்டளவிலே மலைப் பிரதேசத்தில் உள்ள கம்பளை இராசதானியாகியது. பின்பு ஒரு படைத்தளமாக அழகக்கோனாரால் அமைக் கப்பட்ட கோட்டை 14ஆம் நூற்றாண்டின் முடிவிலே இராசதானியாகியது. பின்பு 16ஆம் நூற்றாண்டில் கோட்டையின் ஒரு பகுதியான சீதாவாக்கை மாயாதுன்னை, முதலாம் இராஜசிங்கன் ஆகியோரின் காலத்தில் ஒரு பிரதானமான அரசியல் மையமாக விளங்கியது. போர்த்துக்கேயர் 1591 இல் தென்மேற்குக் கரையோரம் முழுவதையும் கைப்பற்றி விட்டனர்.

கி.பி. 1250 - 1550 ஆகிய காலப்பகுதியில் இலங்கையின் சமுதாய அமைப்பிலும், பொருளாதார முறையிலும் பண்பாட்டு மரபுகளிலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டன. வரட்சி வலயமான வடமத்திய பகுதியிலும் தென்கிழக்குப் பகுதியிலும் அமைந்திருந்த நீர்த்தேக்கங்களும் கால்வாய் களும் சீர்குலைந்து பாழாகிவிட்டன. அநுராதபுரம், பொலநறுவை, பதவியா போன்ற நகரங்களில் உள்ள மாளிகைகளும் கோயில்களும் பெரும் பள்ளிகளும் இடிந்து வீழ்ந்து காலப்போக்கில் மண்மேடுகளாகி விட்டன. அங்கு அடர்த்தியான காடுகள் படர்ந்தன.

இயற்கை வளங்கள் நிறைந்த ஈரவலயம் முதன்முதலாக இலங்கை வரலாற்றில் மிகுந்த முக்கியத்துவம் பெற்றது. சிங்களவர் வாழும் பகுதிகளில் அதுவே குடிசனப் பெருக்கம் நிறைந்த பகுதியாக இக்காலத்தில்

வளர்ச்சி பெற்றிருந்தது. இரு பருவ காலங்களிலும் மழைவீழ்ச்சி போதியளவு காணப்பட்டதால் கரையோரப் பகுதிகளில் விசாலமான வயல் வெளிகளில் இரு போகங்களில் வேளாண்மை செய்ய முடிந்தது. விவசாயம் செய்வதற்கு நீர்த் தேக்கங்களை அமைக்க வேண்டிய தேவை இருக்கவில்லை. குடியானவர்கள் தங்கள் தோப்புகளில் மா, பலா, வாழை முதலிய பழ மரங்களை அதிக சிரமமின்றிப் பயிரிட்டுப் பலன்களைப் பெற்றுக்கொள்ள முடிந்தது. தானியப் பற்றாக்குறை ஏற்படு மிடத்து இயற்கையாக உற்பத்தியான உப உணவுப் பொருட்கள் மூலம் அதனை இலகுவாக ஈடுசெய்து கொள்ள முடிந்தது. பிரதேசங்களுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய தெங்குப் பொருட்களும், பாக்கும் மிளகு, இஞ்சி, கறுவா முதலிய வாசனைச் சரக்கு களும் அப்பகுதியிலே குறிப்பிடத்தக்க அளவில் உற்பத்தியாயின. அதன் காரணமாக வாணிபத்தில் குறிப்பிடத்தக்க அபிவிருத்திகள் ஏற்பட்டன. தங்கள் தோப்புகளில் மிகுந்தளவில் உற்பத்தியான பாக்கினை விற்பனை செய்வதன் மூலம் குடியானவர்களிற் பெரும்பாலானோர் தங்களுக்கு வேண்டிய துணி வகைகள், உப்பு, கருவாடு, மட்பாண்டங்கள், செப்புப் பாத்திரங்கள் முதலியவற்றைக் கொள்வனவு செய்ய முடிந்தது. வாணிபத்தினால் ஏற்படக்கூடிய பலாபலன்களை அரசரும் குடியானவர்களும் நன்கு புரிந்து கொண்டனர். அதனால் அயல்நாட்டு வணிகருக்கு நல்ல வரவேற்பும் ஆதரவும் கிடைத்தது.

இந்தியா, சீனா, அராபியா, பாரசீகம் போன்ற தேசங்களிலிருந்தும் வணிகக் கப்பல்கள் வந்து சென்றன. கொழும்பு தெவிநுவர ஆகிய இரண்டும் இக்காலத்துப் பெருந் துறைமுகங்களாகும். சிலாபம், நீர்கொழும்பு, புத்தளம், பேருவளை போன்றனவும் துறைமுகப் பட்டினங்களாக அபிவிருத்தியடைந்தன. அயல்நாட்டு வாணிபத்தைப் பொறுத்தவரையில், முற் காலங்களிற் போல இந்தியாவுடனான வாணிபமே மிகுந்த முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது. கறுவா, பாக்கு, தென்னம் பொருட்கள் முதலியன தென்னிந்தியத் துறைமுகங்களுக்குக் கப்பல்களில் எடுத்துச் செல்லப்பட்டன. சோழ மண்டலக் கரை, வங்காளம், குஜராத் போன்ற பகுதிகளி லிருந்து துணிவகைகள் இறக்குமதி செய்யப் பட்டன. இந்திய வணிகரிலும் பெரும் பாலானவர்கள் தென்னிந்திய வணிகராவர்.

தென்னிலங்கையில் இந்து சமயம் பெருமளவிலே செல்வாக்குப் பெறுவதற்கு வணிகர் ஏற்படுத்திய குடியிருப்புகள் குறிப்பிடத்தக்க அளவிலே காரணமா யிருந்தன. அத்தகைய குடியிருப்புகள் இராசதானிகளிலும் துறைமுகப் பட்டினங் களிலும் உள்ளூர்ப் புறங்களிலும் காணப் பட்டன. நகரங்கள் பல்லினப் பண்பாட்டு மரபுகளின் மையங்களாக விளங்கின. தென்னிந்திய வர்த்தகத்திலே 13ஆம் நூற்றாண்டு முதலாக முஸ்லிம்கள் குறிப்பிடத்தக்க பங்கினைக் கொண்டிருந் தனர். ஆயினும், **ஐந்நூற்றுவர், பதினெண் விஷையம்** முதலிய வணிக கணங்களும் செட்டிகளும் பரதவரும் இலங்கை வாணிபத்திலே முக்கியமானதொரு பங்கினை வகித்தனர். கோயில்களைப் புதிதாக அமைப்பதிலும் பிற திருப்பணி வேலைகளிலும் ஆலய தருமங்களை நடத்துவதிலும் அவர்கள் ஈடுபட்டனர். அவர்கள் பௌத்த சமய நிறுவனங்களுக்கு ஆதரவு புரிந்தமைக்கும் சான்றுகள் உள்ளன.

விஜயநகரப் பேரரசர் காலத்திலே தமிழகத்திலே இந்துசமயத்தில் ஏற்பட்ட புதிய அம்சங்கள் இலங்கையிலும் வழக்கில் வந்தன. தமிழகத்திலே 14 ஆம், 15ஆம் நூற்றாண்டுகள் முருக வழிபாட்டின் மறுமலர்ச்சிக் காலமாகும். அருணகிரிநாதர்,

குமரகுருபரர் ஆகியோரின் பக்திப் பாடல்கள் சைவர்களைப் பெரிதும் கவர்ந்தன. பாமரர்களும் பொதுமக்களும் முருகனை முழுமுதற் கடவுளாகக் கொண்டனர். முருக வழிபாட்டிற்கு அடிப்படையான சிந்தனைகளும் தத்துவங் களும் கந்தபுராணத்தின் மூலமாக விளக்கம் பெற்றன. கந்தபுராணத்தை மிகுந்த அபிமானத்தோடு படிக்கும் வழக்கம் ஏற்பட்டது. அரச முத்திரைகளிலும் சின்னங் களிலும் முருக வழிபாட்டுச் சின்னங்கள் பொறிக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்து அரசர்களின் காசுகள் சிலவற்றில் மயிலின் உருவமும் வேலின் வடிவமும் அமைந்துள்ளமை குறிப்பிடற் குரியது. அவர்கள் சில சமயங்களிற் கந்தசுவாமியின் பெயரால் நாணயங்களை வெளியிட்டனர். இலங்கையின் பல பகுதிகளிற் கந்தசுவாமி கோயில்கள் அமைக்கப்பட்டன. கந்தசுவாமி கோயில் கள் அமைக்கப்பட்டன. தென்னிலங்கை யிலும் பல இடங்களிற் கந்தசுவாமி கோயில்கள் அமைக்கப்பட்டன.கந்தசுவாமி கோயில்கள் பலவற்றை வணிகரான செட்டியார்கள் அமைத்தனர் என்பது ஐதீகம். **செட்டி** என்பது முருகனுக்குரிய சிறப்புப் பெயர்களில் ஒன்றாகும்.

## இராசதானிக் கோயில்கள்

கோட்டை இராச்சியத்திலுள்ள பல இந்துக் கோயில்களைப் பற்றிச் சிங்கள நூல்கள் மூலமாகவும் தொல்பொருட் சின்னங்கள் மூலமாகவும் அறிந்துகொள்ள முடிகின்றது. சிவன் கோயில்கள், விஷ்ணு கோயில்கள், காளி கோயில்கள், பிள்ளையார் கோயில்கள், கந்தசாமி கோயில்கள் ஆகியன பற்றிய சில விவரங்கள் கிடைக்கின்றமை குறிப்பிடத் தக்கது. இராசதானிகளான கோட்டை, சீதாவாக்கை ஆகியவற்றிலிருந்த சிவன் கோயில்களைப் பற்றிச் **சந்தேஸ** நூல்கள் வர்ணிக்கின்றன.

கோட்டையில் அமைந்திருந்த சிவன் கோயிலைப் பற்றி **சலலிஹிணி சந்தேஸய** சுருக்கமாக வர்ணிக்கின்றது. அது ஆறாம் பராக்கிரமபாகுவின் ஆட்சிக் காலத்து (1412 - 1467)ப் பிற்பகுதியில் எழுதப்பட்டது. கோட்டையிலுள்ள சிவன் கோயிலில் (ஈஸ்வர தேவாலே) காலையில் நடைபெறும் வழிபாடு பற்றி அதில் மேல் வருமாறு சொல்லப்படுகின்றது. கற்பூரம், அகில் ஆகியவற்றின் நறும்புகைப் படலங் களின் மத்தியிலே நிரை நிரையாக அமைந் துள்ள கொடிகள் அசைந்தாடுகின்றன. சங்கொலியும் மணியோசையும் மிருதங்க வாத்தியத்தின் பேரொலியும் வானத்தை நிரப்புகின்றன. அடியார்கள் தமிழ்த் தோத்திரப் பாடல்களைப் பக்தியோடு பாடுகின்றனர்.

கோட்டையில் அமைந்திருந்த சிவால யம் இராசதானியில் வாழ்ந்த தமிழ்ச் சைவர் வழிபாடு செய்வதற்கென்று அமைக்கப் பட்ட ஆலயமாகும். அடியார்கள் அதிகாலையில் நடைபெற்ற வழிபாட்டிலே தமிழ்ப் பாடல்களைப் பாடினார்கள் என்ற குறிப்பினால் இது தெளிவாகின்றது. அங்கு பல விதமான கிரியைகள் நடைபெற்றன என்றும் சொல்லப்படுகின்றது. போர்த்துக் கேயர் கோட்டையிலிருந்த புராதனமான கட்டிடங்களை அழித்தபோது அங்கிருந்த சிவாலயத்தின் கட்டிடங்களும் முற்றாக மறைந்துவிட்டன.

சீதாவாக்கையிலே சிவாலயமொன்று மாயாதுன்னையின் காலத்தில் அமைக்கப் பட்டிருந்தது. அது பிரமாண்டமான தோற்றங் கொண்டது. அதன் கட்டுமானங் கள் மிகுந்த வனப்புடன் காணப்பட்டன.

அதனைப் பற்றிப் போர்த்துக்கேய வரலாற்று ஆசிரியரான தே கூற்றோ (de Couto) மேல் வருமாறு குறிப்பிடுகின்றார்.

'..... இலங்கை முழுவதிலும் உள்ளனவற்றில் மிகவுஞ் சிறந்ததும் அளவிற் பெரியதுமான கோயில் இப்பகுதியில் அமைந்துள்ளது. பரமேஸ்வரன் என்றும் சொல்லப் படும் அவர்களின் கடவுளின் படிமத்தை வழிபடுவதற்கென்று அது உருவாக்கப்பட்டுள்ளது. அதன் கட்டிட வேலைப்பாடுகள் விசித்திர மானவை. அதன் கட்டுமானப் பணிகள் 20 வருடங்களாக நடை பெற்றன என்றும் தொடர்ச்சியாக அதில் 20 000 தொழிலாளர்கள் ஈடுபட்டனர் என்றும் சொல்லப்படு கின்றது.'

முதலாம் இராஜசிங்கனின் காலத்தில் (1581 - 92) எழுதப்பெற்ற **சவுல் சந்தேஸய** என்னும் நூலில் அக்கோயிலைப் பற்றிய சுருக்கமான நூலில் அக்கோயிலைப் பற்றிய சுருக்கமான வர்ணனை காணப்படுகின்றது. வழிபாடு நடைபெற்ற சமயத்தில் அதன் நிருத்த மண்டபத்திலே இளமையும் அழகும் பொலிந்த கன்னியர் உபசாரமாக நடனம் புரிந்தனர். தமிழ்ப்பாடல்களின் பண்களுக்கு இசைவாக அவர்கள் அபிநயஞ் செய்தனர். கோயிற் சுவர்களில் வண்ண ஓவியங்கள் வரையப்பட்டிருந்தன. அங்கிருந்த சித்திரங் கள் இராமாயணம், மகாபாரதம், புராணங் கள் என்பவற்றிலுள்ள கதைகள் சிலவற்றை விளக்கும் கோலத்தில் வரையப்பட்டிருந் தன.

சீதாவாக்கையிலிருந்த கோயில் போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டது. அதன் அதிஷ்டானப் பகுதி மட்டுமே எஞ்சி யுள்ளது. அக்கோயிலை **வெரெண்டி கோயில்** என்று குறிப்பிடுவது வழக்கமாகி விட்டது. அக்கோயில் திராவிட கலைப் பாணியில் அமைக்கப்பட்டது. விஜயநகர காலத்துத் தென்னிந்திய கட்டிடக் கலையின் அம்சங்கள் அதிற் கணிசமான அளவிலே காணப்பட்டன. பிரித்தானியரின் ஆட்சிக் காலத்திலே கோயிலின் அழிபாடுகளைக் கண்டவர்கள் சிலர் அதனைப் பற்றிய குறிப்புகளை எழுதியுள்ளனர். 1800 ஆம் ஆண்டிலே தலத்தைப் பார்வையிட்ட பேர்சிவல் (Percival) மேல் வருமாறு எழுது கின்றார்.

'மார்ச் 20 - எங்கள் பாசறைக்கு அண்மையிலுள்ள கோயிலொன்றின் அழிபாடுகளைப் பார்ப்பதற்கு வாய்ப்பாக எங்கள் (நாளாந்தப்) பணிகளை நிறுத்தி விட்டோம். இலங்கையில் இதுவரை நான் கண்டுள்ள கோயில்களில் இது ஒன்றுமே கற்றளியாகும். நான்கு அல்லது ஐந்து அடி உயரம் வரையான சுவர்ப் பாகங்கள் இன்றுவரை எஞ்சியுள்ளன. அவற்றைச் சுற்றிப் படிக்கட்டுகள் காணப்படுகின்றன. மிகுந்த சிரமத்துடன் இக்கட்டிடம் அமைக்கப்பட்டுள்ளது. அதிஷ்டானத் தூண்களிலும் சுற்றுப் புறங்களிற் பதிக்கப்பட்டுள்ள கற்களிலும் சாசனங்கள் இப்பொழுதும் தெரிகின்றன.'

சீதாவாக்கையில் அமைந்திருந்த கோயிலின் எஞ்சியுள்ள அதிஷ்டானப் பகுதி நன்கு பேணப்படுகின்றது. அது 4 அடி 8 அங்குலம் உயரமுடையது. அதில் வழமை போல ஆறு படைகள் அமைந்துள்ளன. மிகுந்தளவு பாரமுடைய சுவர்களையும் விமானத்தையும் தாங்கும் வகையில் அது பலங்கொண்ட உறுதிப்பாடான அமைப் பாக உருவாக்கப்பட்டுள்ளது. அதிஷ்டானம் அமைந்துள்ள மேடையிற் கற்கள் பதிக்கப் பட்டுள்ளன.

## முன்னேஸ்வரம்

வடமேல் மாகாணத்துப் புத்தளம் மாவட்டத்திலுள்ள சிலாபத்திற்கு 2 கிலோ மீற்றர் தூரத்தில் அமைந்திருக்கும் முன்னேஸ்வரம் இலங்கையில் உள்ள மிகவும் பிரசித்தமான சிவாலயங்களில் ஒன்றாகும். அது முற்காலங்களிலே புத்தளம், கற்பிட்டி, சிலாபம் முதலிய பகுதிகளில் வாழ்ந்த சைவர்களின் வாழ்க்கையோடும் பண்பாட்டு மரபுகளோடும் நெருங்கிய தொடர்பினைக் கொண்டிருந்தது. அப் பகுதிகளில் அமைந்துள்ள கோயில்கள் எல்லாவற்றிலும் முன்னேஸ்வரம் மிகப் பெரியதாகவும் பிரபலமானதாகவும் விளங்கியமையால் அதனைப் பெரிய கோயில் என்று சொல்வது வழக்கம். அதற்குப் பல சிறப்புகள் உண்டு. தேசத்தின் பல பகுதிகளிலிருந்தும் அங்கு சைவர்கள் யாத்திரை போவது வழக்கம். அது சைவர்களும் பௌத்தர்களும் வழிபடும் தலமாக விளங்குகின்றது. முன்னேஸ்வரப் பெருமானின் பேரில் மேற்கொள்ளும் விரதங்களையும் நேர்த்திக் கடன்களையும் முடிப்பதற்கு அங்கு பலர் சென்று வழிபாடுகளைச் செய்கின்றனர். இலங்கைச் சைவசமய வரலாற்றிலே பாடல் பெற்ற தலங்களுக்கு அடுத்த முன்னீடும் சிறப்பும் முன்னேஸ்வரத்துக்குண்டு. இலங்கையில் உள்ள வேறு கோயில்களில் நடைபெறாத சில உற்சவங்கள் இங்கு நடைபெறுகின்றன. வசந்த நவராத்திரி, பிச்சாடனர் உற்சவம், அறுபத்துமூவர் உற்சவம் முதலியன முன்னேஸ்வரத்தில் மட்டுமே நடைபெறுகின்றன. வழிபாடுகள் ஆறு காலமும் ஆகமப் பிரகாரமாக நடைபெறுகின்றன. முன்னேஸ்வரத்திலே சாதிசமய பேதங்கள் இன்றி எல்லோரும் சந்நிதானங்களுக்குச் சென்று வழிபடலாம். இது பூர்வகாலம் முதலாக நிலவிவரும் வழமை கோயிலைப் போர்த்துக்கேயர் 1578ஆம் வருடத்தில் இருந்தனர். ஆயினும் மூலஸ்தானமும் மண்டபமும் அழியாதிருந்தன. சில காலம் அது ஒரு கிறிஸ்தவ வழிபாட்டுத் தலமாகப் பயன்படுத்தப் பட்டது. பின்பு போர்த்துக்கேயரின் ஆதிக்கம் சரிந்த பின் புத்தளம், சிலாபம் ஆகிய பகுதிகள் கண்டி மன்னர்களின் மேலாட்சியின் கீழ் வந்தன. ஆலயம் புனருத் தாரணமாகியது. புராதனமான உலோகப் படிமங்கள் ஆலயத்திலே காணப்படுகின் றன. சுப்பிரமணியர், விநாயகர், நடராசர், பிச்சாடனர் முதலியோரின் உலோகப் படிமங்கள் விஜய நகரக் கலைப் பாணியில் அமைந்தவை. போர்த்துக்கேயர் ஆலயத்தை இடித்த பொழுது இவற்றை அடியார்கள் பாழான கிணற்றில் வீசி விட்டனர். பின்பு தற்செயலாக அவை மீட்கப்பட்டுள்ளன. மீண்டும் அவை புனருத்தாரணமாகிய ஆலயத்திலே வைக்கப்பட்டுள்ளன.

முன்னேஸ்வரம் கோயிலின் பூர்வீகமான வரலாறு தெளிவற்றதாகும். அதன் உற்பத்தி பற்றிய பௌராணிகப் பாங்கிலான கதைகள் **முன்னேஸ்வர மான்மியம், தக்ஷிணகைலாச மஹாத்மியம்** என்னும் நூல்களிற் காணப் படுகின்றன. இராமர் இலங்கையிலிருந்து திரும்பிச் சென்ற பொழுது தனது பிரமஹத்தி தோஷம் நீக்குதற் பொருட்டு மாயவனாற்றுக்கு சமீபமான துறையிலே லிங்கப் பிரதிஷ்டாபனம் செய்தனரென்றும் அங்கு முன்னேஸ்வரம் உருவாகியது என்பதும் ஒரு கதை.

கோட்டை அரசனாகிய ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்தில் (1412 - 1467) முன்னேஸ்வரம் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தது. அவனது 38 ஆவது ஆட்சி ஆண்டில் எழுதப்பட்ட தமிழ்ச் சாசனம் கோயிலின் அதிஷ்டானத்தின் வடபக்கத்தில் எழுதப்பட்டுள்ளது. அதன் வாசகம் மேல் வருமாறுள்ளது:

'ஸ்வஸ்தி ஸ்ரீ ஸமந்தபத்ர
சரணாரவிந்த வந்தித திநகர வம்ஸா
பிஜாத ராஜாதிராஜ பரராஜஸேகர
புஜங்க ஸ்ரீ சங்கபோதி வத்மரான
திரிபுவனச் சக்கரவர்த்தி ஸ்ரீ
பராக்கிரமபாகு தேவற்கு யாண்டு 38
ஆவது அற்பசி முன் பத்தாம் பக்கம்
மொண்ணீஸ்வரமுடைய தம்பிரா
னாரை பூஜிக்கின்ற நம்பிமாரை
ஜயவர்த்தனக் கோட்டைக்கு
அழைத்து விஜஸாமகவ பண்டிதர்
புரோகிதரிடம் தம்பிரானாருடைய
க்ஷேத்திரங்களிற் செய்தி கேட்டு
முன்பு நம்பிமார்க்குநின்ற
மொண்ணீஸ்வரத்தில் சீமைக்கு
உற்பட்ட க்ஷேத்திரத
தம்பிரானாற்குத் திருனாமத்துக்
காணியாக இலப்பைதெணியில்
வயல் அமணம் இருபத்திரண்டும்
கோட்டைப் பிட்டியில் வயல்
அமணம் எட்டும் இதுக்குள்ள
குடியிருப்புங் காடும் ஆகவும்
நியமித்து மொண்ணீஸ் வரத்தில்
நம்பிமாற்கு இருக்கக் கற்பித்து
மனை உள்ளதும் முன்னாளி
அரிசியில் அமுது கறியமுது
இலையமுது சுகந்தம் முதலானவை
யும் நம்பிமாற்கு மாதமொன்றுக்குப்
பணம் மாசமொன்றுக்கு
ஒவ்வொருத்தற்குப் பதினொன்றும்
இவர்களுக்குப் பாரம்பரியமாக
சந்திராதித்யவரை சர்வமான்யமாக
நடக்கும்படி மொண்ணீஸ்வர
முடைய தம்பிரானார்.....
அபமதியவர்களுக்கு நியமித்த
அளவுக்கு மேல் ஒருவராலும் விக்னம்
இன்றியே இருக்கக் கற்பித்தருளின
இந்தக் காணிக்கு அவரிதம்
செய்தவர்கள் பஞ்சமகா பாதகம்
செய்தவர்களாகவும் இதற்கு ஹிதம்
செய்தவர்கள் சூர்யபதத்தைப் பெறக்
கடவராகவும்....'

இச்சாசனத்தின் மூலம் மூன்று பிரதான மான விடயங்களைப் பற்றி அறிய முடிகின்றது. அவற்றுளொன்று சாசனம் எழுதப்பட்ட காலத்தில் கோயிலின் பெயர் ஊர்ப் பெயராகிவிட்டமை. இரண்டாவது பராக்கிரமபாகு ராசனின் கட்டளைப்படி முன்பு பிராமணர் வசமிருந்த நிலங்கள் சில திருநாமத்துக் காணியாக மாற்றப்பட்டன. மூன்றாவது, அரசன் வழிபாடுகள் தொடர் பாக கோயிலுக்கும் கோயிற் பிராமண ருக்கும் புதிதாக நன்கொடைகள் வழங்கியமை. திருக்கேதீஸ்வரம் என்ற பெயரைப் பெற்றுள்ளமை போல முன்னேஸ்வரம் என்னும் கோயில் அமைந்திருக்கும் ஊரும் பராக்கிரமபாகு வின் காலத்தில் கோயிலின் பெயரால் வழங்கியது. எனவே, இச்சாசனம் எழுதப் பட்ட பொழுது முன்னேஸ்வரத்துக்கு ஒரு நெடுங்கால வரலாறு உண்டென்பது உணரப்படுகின்றது.

முன்னேஸ்வரத்திலே ஆராதனைகளைச் செய்கின்ற பிராமணரை இராசதானிக்கு வரவழைத்து, கோயில் நிலங்களைப் பற்றி அவர்களை விசாரணை பண்ணிய பின்பு அரசன் அவற்றைப் பற்றிய புதிய ஏற்பா டொன்றினைச் செய்தான். முன்பு பிராமணர் வசமாயிருந்த நிலங்கள் கோயில் நிலங் களாக வகை செய்யப்பட்டன. பிரம்ம தேயம் என்ற வகையிலிருந்த நிலங்கள் தேவதானம் (திருநாமத்துக்காணி) என்ற வகைக்கு மாற்றப்பட்டன. பிராமணர் இழந்த நிலங்களுக்கு ஈடாக அவர்களுக்கு வேறு நிலங்கள் வழங்கப்பட்டன. அவற்றைப் பற்றிய விவரங்கள் மேல்வரு வனவாகும்.

1. முதன்மைக்கு
   - அ. இலுப்பைதெணியில் வயல் அமணம் 22
   - ஆ. கோட்டைப்பிட்டியில் வயல் அமணம் 30

2. ஆராதனை பண்ணும் மற்றைய பிராமணருக்கு
   - அ. தித்தக்கடையில் வயல் அமணம் எட்டு
   - ஆ. அதற்குள்ள குடியுருப்பு, காடு என்பன.

குருக்கள்மார் வேதனம் பெறுவதற்கும் அரசன் ஏற்பாடுகள் செய்தான். முதன்மைக்கு 30 பணமும் ஆராதனை பண்ணும் பிராமணர் பிறரில் ஒவ்வொரு வருக்கும் 11 பணமும் மாதந்தோறும் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. ஒவ்வொரு நாளும் முன்னாளி அரிசி கொண்டு திருவமுதும் இலையமுதும் கறியமுதும் படைத்து நறும்புகையூட்டி ஆராதனை செய்வது அந்தணர்களின் பொறுப்பாகும்.

இச்சாசனம் திருநாமத்துக்காணி (தேவ தானம்), பூஜைக்காணி என்னும் இரு வகையான நிலங்களைப் பற்றியதாகும். அவை சர்வமானியமாக வழங்கப்பட்டன. அரசனுக்குரிய எல்லாவிதமான இறை கடமைகளும் கோயிலினதும் கோயிற் பிராமணரதும் உடைமைகளாகி விட்டன. திருநாமத்துக் காணியின் அளவுகளோ எல்லைகளோ சாசனத்திலே சொல்லப்பட வில்லை. அவை முன்னைய ஏற்பாடுகள் மூலம் வரையறையாகியிருத்தல் வேண்டும்.

சகவர்ஷம் 1435 இலே கோட்டை அரசனாகிய ஒன்பதாம் பராக்கிரமபாகு தனது குமாரனுக்கு மின்னல் காரணமாக ஏற்பட்ட நோய் குணப்பட்டதால் நன்றிக் கடனாக முன்னேஸ்வரஞ் சென்று மகாவிஷ்ணுவை வழிபட்டுக் கோயிற் பிராமணருக்குப் பூமி தானஞ் செய்து செப்பேடெழுதிக் கொடுத்தான். திஷ்கந்தச் சக்கரவர்த்தியான இராசகுரு முதலான பிராமணர் பன்னிருவருக்கு 140 அமணம் நிலத்தை வழங்கினான். நன்கொடையாக அரசனால் வழங்கப்பட்ட நிலங்கள் முன்னேஸ்வரம்பத்திலுள்ள ஐந்து கிராமங் களைச் சேர்ந்தனவாகும். கிழக்கிலே மல-எல என்னும் கால்வாயும் தென் கிழக்கிலே மாதம்பையில் உள்ள இரு எல்லைக் கற்களும் வடக்கிலே களுதிய பொக்குணையிலுள்ள மான-மான்தோட்ட என்னும் துறையும் அந்நிலங்களின் எல்லை களாகும்.

விஷ்ணு கோயிலிற் பூசகராயிருந்த பிராமணர் ஏழு பேருக்கு திரிகளுஹத்தை யில் 475 அமணம் அளவு கொண்ட நிலம் தானமாக வழங்கப்பட்டது. அவர்கள் இராச குமாரனுக்கு மின்னலால் ஏற்பட்ட நோய்க்கு வைத்தியஞ் செய்து குணப்படுத்தி னார்கள் என்று சொல்லப்படுகின்றது. அரசன் நிலங்களைப் பரவணி ஆட்சியாக வும் சர்வமானியமாகவும் வழங்கிச் செப்பேடு எழுதிக் கொடுத்தான்.

கோட்டை இராச்சியத்திலே போர்த்துக் கேயரின் செல்வாக்கு ஏற்பட்டதன் விளை வாக முன்னேஸ்வரம் பெருமளவிலே பாதிக்கப்பட்டது. 1578 ஆம் ஆண்டு சிலாபம், நீர்கொழும்பு ஆகியவற்றின்மீது படையெடுத்துச் சென்ற போர்த்துக்கேயர் கோயிலைச் சூறையாடிய பின் அதனை இடித்தனர். அதன் பின்பு கோயிலின் வசமாயிருந்த முன்னேஸ்வரம் பத்திலுள்ள 62 கிராமங்களும் ஜெசூற் (யேசு சபை) சபையாரிடம் ஒப்படைக்கப்பட்டன. அவர்கள் 1606 ஆம் வருடத்தில் கிறிஸ்தவ தேவாலயமொன்றை அமைத்தனர்.

கண்டியில் அரசு புரிந்த நாயக்க மன்னனாகிய கீர்த்திஸ்ரீ ராஜசிங்கனின் காலத்தில் முன்னேஸ்வரம் கோயில் புனருத்தாரணமாகியது. புனர்நிர்மாணத் திருப்பணிகள் இந்தியச் சிற்பிகளால் நிறை வேற்றப்பட்டதும் 1753 ஆம் ஆண்டிலே கும்பாபிஷேகம் நடைபெற்றது. நித்திய நைமித்தியக் கிரியைகள் நாள்தோறும்

கிரமமாக நடைபெறுதற் பொருட்டு 32 அமணம் வயல் நிலத்தைக் குருமாருக்குப் பூஜைக் காணியாக அரசன் வழங்கினான். கீர்த்தி ஸ்ரீ மன்னன் வழங்கிய பூமிதானம் பற்றிய வாசகம் செப்பேட்டில் எழுதிக் கொடுக்கப்பட்டது.

பின்பு 19 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆலயத்தின் சில பகுதிகள் கிலமாகி விட்டதால் அவை குமாரசுவாமிக் குருக்கள் (1816 - 1912) என்பவரின் முயற்சியால் மீண்டும் புனரமைக்கப்பட்டன. மூலஸ்தானம், அர்த்தமண்டபம், மஹாமண்டபம் ஆகியன சீர்திருத்தப்பட்டு கி.பி. 1875 இல் மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. அதன் பின் பல தடவைகளிற் திருப்பணி வேலைகள் நடைபெற்றன. இந்நாட்களில் முன்னேஸ்வரத்திலே வழிபாடு செய்வோரிற் பெரும்பாலானோர் பௌத்தராயுள்ளனர். முன்னேஸ்வரத்தில் நெடுங் காலமாகச் சிறப்புப் பெற்றிருந்த அக்கிரகாரம் அண்மைக் காலத்திலே சீர் குலைந்துவிட்டது. கி.பி. 1958, 1983 ஆகிய வருடங்களில் ஏற்பட்ட இனக்கலவரங்களினால் ஆலயம் பெரிதும் பாதிப்படைந்துள்ளது. அங்கு நெடுங்காலமாகப் பேணப்பட்டு வந்த ஆவணங்களும் பட்டயங்களும் அரிய நூல்களும் மறைந்து விட்டன. இப்பொழுது முன்னேஸ்வரம் பௌத்தர்களின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனமாகிவிடும் என்ற அச்சம் சைவர்களிடையே தோன்றியுள்ளது.

## தேநுவரைக் கோயில்

தேநுவரை என்னும் வணிகர் தலமான கரையோரப் பட்டினத்திலுள்ள விஷ்ணு கோயில் பதினான்காம் நூற்றாண்டிலே பேரமைப்பாக விளங்கியது. சாசனங்களும், இலக்கியங்களிலுள்ள குறிப்புகளும் அதன் சிறப்புகளைப் புலப்படுத்துகின்றன. கி. 1344 ஆம் ஆண்டில் இலங்கைக்கு வந்திருந்த இபுன் பத்தூத்தா அதன் பெருமைகளைச் சுருக்கமாக விளக்குகின்றார். அவர் கோயிலைப் பார்த்த காலத்தில் 1000 அந்தணர்கள் ஆலய சேவைகளில் ஈடுபட்டிருந்தனர். ஆராதனை வேளைகளில் இசையோடு தோத்திரப் பாடல்களைப் பாடுவதற்கும் உபசாரமாக அபிநயத்துடன் ஆடல் புரிவதற்கும் 500 தேவரடியார் குடியிருந்தனர் என்று அவர் குறிப்பிடுகின் றார். இபுன் பகதூத்தா கோயில் அருமை பெருமைகளை மிகைப்படுத்திச் சொல்லுகின்றார் என்று கருதினாலும் அவரது காலத்திலே தேநுவரைக் கோயில் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தது என்பதிற் சந்தேகத்திற்கு இடமில்லை. அதன் சுற்றாடலில் அமைந்திருந்த செல்வ வணிகரின் குடியிருப்புகள், பெருந்தொகையான குடிகள் வாழும் கம்மாளர் கிராமங்கள், பல நூற்றுக் கணக்கான பிராமணர்கள் வாழும் அக்கிரகாரம் என்பன தேநுவரைக் கோயிலின் பிரமாண்டமான அமைப்புகள் இயங்குவதற்கு ஆதாரமாயிருந்தன.

தேநுவரைக் கோயில் சீனப் பேரரசரின் ஆதரவைப் பெறுமளவிற்குச் சிறப்புப் பெற்றிருந்தது. காலியிற் கண்டெடுக்கப்பட்ட மும்மொழிச் சாசனம் தேநுரையில் உள்ள சமய நிறுவனங்களுக்குச் சீனப் பேரரசனான யுங்-லோ வழங்கிய தானங்களைப் பதிவு செய்கின்றது. சாசன வாசகங்கள் சீனாவில் எழுதப்பட்டுச் சிலாலேகஞ் செய்யப்பட்டன. அங்கிருந்து சீனக் கடற்படைத் தளபதியான செங்-கோவினால் எடுத்துவரப்பட்ட சிலாசாசனம் 1509 ஆண்டு தேநுரையில் நிறுவப்பட்டது. பௌத்த கோயிலொன்று வழங்கப்பட்ட நன்கொடை பற்றிய விவரங்கள் சீனமொழியில் எழுதப்பட்டுள்ளன. இஸ்லாமிய வழிபாட்டுத் தலம் ஒன்றுக்கு வழங்கப்பட்ட நன்கொடைகள் பற்றிய சாசனம் பாரசீக மொழியில் அமைந்துள்ளது. இந்துக் கோயிலுக்கு வழங்கப்பட்ட தானங்கள் பற்றிய சாசனம்

தமிழ் மொழியில் எழுதப்பட்டுள்ளது. அது கோயிலிற் பள்ளிகொண்டுள்ள நாயனாரைத் **தேநுவரை நாயினார்** என்று குறிப்பிடுகின்றது. 1 000 கழஞ்சு பொன், 5 000 கழஞ்சு வெள்ளி, 50 பல வண்ணப் பட்டுப் புடவைகள், தங்க நூலிழைத்த நான்கு சோடிப் பதாகைகள், ஐந்து செம்பினாலான தூவக் கால்கள், 2 500 கட்டி எண்ணெய் (கற்பூர தைலம்), 10 சந்தனக் கட்டிகள் முதலானவற்றைக் கோயிலுக்கு நன்கொடையாகச் சீனப் பேரரசர் வழங்கினாரென்று சாசனத்திற் சொல்லப்படுகின்றது.

பதினாறாம் நூற்றாண்டிலே தேநுவரைக் கோயிலானது அதன் கட்டடங்களின் பிரமாண்டமான தோற்றத்தினாலும் செல்வ வளங்களினாலும் மிகுந்த சிறப்பினைப் பெற்றிருந்தது என்பதை கெறோஸ் பாதிரியாரின் வர்ணனையின் மூலமாக அறிய முடிகின்றது. அவர் அக்கோயிலைப் பற்றி மேல்வருமாறு கூறுவார்:

> 'மாத்தறையிலிருந்து சிறிது தூரத்திற் கப்பால் அமைந்த கோயில் இலங்கையிலுள்ள கோயில்களிலே திருகோணமலையிலுள்ளதற்கு அடுத்த சிறப்பினைக் கொண்டதாகும். சீனப் பேரரசர் தங்கள் விசுவாசத்தின் அடையாள அங்கு நிறுவிய சீனமொழிச் சாசனங்கள் காணப்படுகின்றன. அந்தவிடத்திலே பின்பு பிரான்சிஸ்கன் தேவாலயம் அமைக்கப்பட்டது. விஷ்ணு வழிபாட்டுக்குரிய தலம் கிறிஸ்தவ வழிபாட்டுத் தலமாக மாற்றப்பட்டுள்ளது. முன்பு, அங்கு சிற்றரசரின் இராசதானி அமைந்திருந்தது. அது தேவநகர் என்று அழைக்கப்பட்டது. தேவநகர் என்பது கடவுளின் நகரம் என்று பொருள்படும். போர்த்துக்கேயர் அதனைத் **தனவரை** என்று சொல்வர். கோயிலிற் சேவை புரிந்த நாட்டியப் பெண்கள் அங்கு வாழ்ந்தனர். அங்கு பொன், வெள்ளி, செம்பு ஆகியவற்றிலே சிறந்த வேலைப்பாடுகள் செய்யப் படுகின்றன. இராணுவத்துக்கு வேண்டிய துப்பாக்கிகளும் ஈட்டிகளும் ஆற்றங்கரையோரத்திலே உற்பத்தி செய்யப்படுகின்றன.'

தேநுவரைக் கோயில் 1588 இலே போர்த்துக்கேயராற் சூறையாடப்பட்டு அழிக்கப்பட்டது. கண்டி நாயக்க மன்னரின் காலத்தில் ஒரு சிறிய விஷ்ணு கோயில் உருவாக்கப்பட்டது. அது பௌத்தரின் வழிபாட்டுக்குரிய நிலையமாகப் பயன்படுகின்றது.

## பிள்ளையார் கோயில்கள்

கோட்டைக் காலத்துச் சந்தேசய காவியங்கள் சிலவற்றில் கணேஸ்வரர் கோயில்கள் பற்றிய சுருக்கமான குறிப்புகள் காணப்படுகின்றன. தேவநகருக்குச் சமீபத்திலுள்ள மகுல்வல்ல என்னும் தலத்திற்கு அண்மையில் வல்லேமடம என்னும் இடத்திலுள்ள தென்னந்தோப்பில் உள்ள கணேஸ்வரர் கோயிலைப் பற்றி **திஸர சந்தேஸய** குறிப்பிடுகின்றது. அது தெவுந்தரவிற்குச் செல்லும் வழியில் அமைந்துள்ளதென்றும் அலைகள் படுமளவிற்குக் கடலின் சமீபமாய் உள்ளதென்றும் கோகில சந்தேஸய குறிப்பிடுகின்றது.

அந்தக் கோயில் இராமசச்சந்திரன் என்னும் வணிகரால் அமைக்கப்பட்டது. நாள்தோறும் காலைவேளையில் கோயிலின் அமைப்பாளரின் பேரில் வழிபாடுகள் நடைபெற்றன. களுகங்கைக்குச் சமீபத்தில் உள்ள கணேசர் கோயில் ஒன்றினைப் பற்றியும் **கோகில சந்தேஸய** வர்ணிக்கின்றது, அங்கு மேள வாத்தியம், சங்கொலி

என்பனவற்றோடு கிரியைகள் நடைபெற்றன. அச்சமயங்களில் கற்பூரம், சாம்பிராணி முதலியவற்றையும் எரித்தனர்.

## கந்தசாமி கோயில்கள்

ஆறாம் பராக்கிரமபாகுவின் காலத்திலே கோட்டை நகரத்தின் வடவாசற் புறத்திலே கந்தசுவாமி கோயிலொன்று அமைந்திருந்தது. அதனைப் பற்றிச் **சலலிஹினி சந்தேஸய** என்னும் நூல் குறிப்பிடுகின்றது. சேவலின் உருவம் வரைந்த பதாகைகளும் வேறு விதமான கொடிகளும் அங்கு மிகுந்த வனப்புடன் விளங்கின.

கந்தக் கடவுளைச் சமகாலச் சிங்கள நூல்கள் சண்முகன் என்றும், மகாசேனன் என்றும் குறிப்பிடுகின்றன. மயில்வாகனம் பற்றியும் சேவற்கொடி பற்றியும் அவற்றிலே வர்ணனைகள் காணப்படுகின்றன. கோட்டையில் உள்ள கந்தசாமி கோயிலில் நடைபெறும் வாத்தியக் கச்சேரிகள் பற்றியும் அங்கு குவிந்திருக்கும் நிவேதனப் பொருட்கள் பற்றியும் **ஹம்ஸ சந்தேஸய** குறிப்பிடுகின்றது. ஏழாம் விஜயபாகுவின் காலத்தில் அச்சுதராயன் என்பவன் கோட்டையில் உள்ள கந்தசுவாமி கோயிலுக்கு வழங்கிய தானங்கள் சாசனமொன்றிலே பதிவாகியுள்ளன.

## காளி கோயில்கள்

கோட்டைக் காலத்துக் காளி கோயில்களைப் பற்றிச் சமகாலத்து நூல்கள் சில குறிப்பிடுகின்றன. சீதாவாக்கையில் வைரவர் கோயிலுக்குச் சமீபத்தில் ஒரு காளி கோயில் இருந்தது. **சவுல் சந்தேஸய** அதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது. வைரவர் கோயிலில் வழிபாடு செய்த பின் உமையின் கோயிலை அடையுமாறு தூது செல்லும் பறவையினை ஆசிரியர் வேண்டுகின்றார். பெந்தோட்டையில், வனவாச விகாரையின் சமீபத்திலே வேறொரு காளி கோயில் காணப்பட்டது. அங்கிருந்த நாட்டியம் பயின்ற பெண்களின் வனப்பு மிக்க கோலத்தையும் ஆடல்களையும் **பரவி சந்தேஸய** என்பதன் ஆசிரியர் நயம்பட வர்ணிக்கின்றார்.

களுத்துறையில் ஐந்நூற்றுவரின் பெயரால் வழங்கிய காளிகோயிலைப் பற்றிச் சாசனமொன்றினால் அறிய முடிகின்றது. அச்சாசனம் களுத்துறை நீதிமன்றது நீதிபதிக்குரிய உத்தியோகபூர்வமான மாளிகையின் வளாகத்தில் உள்ளது. அதில் அரசனின் பெயர் குறிப்பிடப்படவில்லை. சாசன வரிவடிவங்கள் 14 ஆம் நூற்றாண்டுக்குரியவை. **ஐஞ்ஞூற்றுமார் காளிக்கு** இராசாக்களும் குடியானவர்களும் தானமாகக் கொடுத்த நிலங்கள் வரியிலியாக விடப்பட்டமை பற்றிச் சாசனங் குறிப்பிடுகின்றது. வயல், தோட்டம் என்னும் இரு வகை நிலங்களுக்கும் தானிய ஆயம், வயல் ஆயம், தோட்ட ஆயம் என்னும் வரிகளை அரசனுக்கும் முதலிகளுக்கும் செலுத்த வேண்டியதில்லை எனச் சாசனத்திற் கூறப்பட்டுள்ளது. அந்த ஏற்பாட்டின் மூலம் அவை வரியிலி நிலங்களாகி விட்டன.

# இரத்மலானையிலுள்ள கொணா கோவில் எனப்பெறும் இந்து ஆலயத்தின் வரலாறு

[தொழிற் கந்தோரில் கடமையாற்றும் திரு. மனோகரன் அவர்களது ஆர்வம் காரணமாக தமிழ் வாசகர்களின் அறிகைக்குக் கொண்டுவரப்பட்ட இக்கோயில் போர்த்துக்கேய காலம் முதல் இன்றுவரை நின்று நிலவுவதாகும். இக்கோயிலின் பூசகராக இருப்பவர் திரு. காமினி பெர்னான்டோ எனப்படும் பௌத்த சிங்களப் பெருமகனாவர். 18ஆம் நூற்றாண்டிலிருந்து இக்கோயிலுக்குரிய கடமைகளை செய்து வரும் குடும்பத்தின் இன்றைய வாரிசாகவுள்ள திரு. காமினி பெர்னாண்டோ அளித்த நேர்காணலின் தொகுப்பு கீழே தரப்படுகின்றது. நமது வேண்டுகோளுக்கிணங்க எம்மை உரிய தகவல்களுடன் வந்து சந்தித்து வேண்டிய தரவுகளை தந்தமைக்காக திரு. பெர்னாண்டோ பெரிதும் போற்றப்படவேண்டியவர் ஆவார். அவருக்கு எமது நன்றிகள். அவருடன் சேர்ந்து வந்து உதவிய திரு. மனோகரன் அவர்களுக்கும் எமது நன்றிக் கடப்பாட்டைத் தெரிவிக்கிறோம். இது 12. 09. 2004 அன்று காலை இந்த ஒலிப்பதிவு செய்யப் பட்டது.]

மிகப் பழங்காலம் தொட்டே இலங்கையில் இந்து சமயம் நிலவி வந்துள்ளது. விஜய னுடன் வந்த அவனது தோழர்களிற் சிலர் (அனுராத போன்றவர்கள்) இந்துக்களா யிருந்து மதுராபுரியிலிருந்து வந்த இந்துப் பெண்களையே திருமணம் செய்து கொண் டனர்.

அனுராதபுரி காலத்தில் தேவநம்பிய தீசன் காலத்திலேயே பௌத்த மதம் இலங்கைக்கு வந்து அரச மதமாயிற்று. ஆயினும், இந்துக் கோயில்கள் தொடர்ந்தும் நிலவின. தற்பொழுது பௌத்த வழிபாட்டு இடமாக இருக்கும் 'ஈசுறுமுனிய' எனும் இடப் பெயர் முன்னர் ஈஸ்வரன் கோயில் இருந்தமையை நினைவுறுத்துகின்றது.

பொலநறுவைக் காலத்தில் சோழர் ஆட்சியின் பொழுது மேல் மாகாணத்தின் இப்பகுதியிலும் இந்துக் கோயில்கள் பல இருந்திருத்தல் வேண்டும். இந்தக் கோயிலில் உள்ள அம்மன் சிலையான பார்வதி விக்கிரகம் சோழர் காலத்திற்குரிய தென இக்கோயிலுக்கு வந்து இச்சிலை களை பார்வையிட்ட தொல்பொருள் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார். இக்கோயிலில் 1984 இல் மீட்டெடுக்கப்பட்ட ஆவுடையார் சிலை மிகப் புராதனமானதாக இருக்கவேண்டும் என இதனைப் பார்த்த பிராமண அறிஞர்கள் கூறியுள்ளனர்.

பொலநறுவைக் காலத்தின் பின்னர் சிங்கள இராசதானிகள் குருநாகல், தம்புள்ள ஆகிய இடங்களுக்கு மாறி மாறிச் சென்று இறுதியில் கோட்டைக்கு வந்தது. இரத்மலானையாக இப்பொழுதுள்ள இடம் கோட்டை இராச்சியத்தின் ஆட்சியின் கீழ் வந்ததாக இருத்தல் வேண்டும். கோட்டைக் காலத்தில் எழுதப்பெற்ற 'சலலஹினி சந்தேசிய' எனும் கவிதை நூலில் குறிப்பிடப் பெறும் நந்தீஸ்வரம் இதுவாக இருக்கலாம். கோட்டை இராச்சியத்தில் போர்த்துக்கேய அதிகாரம் அதிகரிக்கத் தொடங்க அக்காலத்தில் கத்தோலிக்க மதகுரு பீடங்களில் ஒன்றான பிரான்சிஸ்கன் சபையினர் இக்கோயிலை இடித்தனர். இது 1517ஆம் ஆண்டு நடைபெற்றதென அறிகின்றோம். நெறஞ்சே த அல்மேதா என்ற போர்த்துக்கேய தளபதியின் ஆட்களே இக்கோயிலை இடித்தனர் என்பர். கோயில் இடிக்கப்பெற்ற பொழுது பூசகர்களாயிருந்த பிராமணர்கள் கொல்லப்பட்டனர். பூசகரின் மூத்த புதல்வன் கத்தோலிக்க மதத்திற்கு மாற்றப்பட்டார். இது நடந்து சில வருடங் களின் பின் இக்கோயில் அழிக்கப்பட்டதை அறிந்த வீதிய பண்டார அக்கோயிலை மீட்டான். இது நடந்தது ஒகஸ்ட் 1552 இல்.

இக்கோயில் மீட்கப்பெற்றபோது முந்தைய பூசகர்கள் ஒருவரும் இல்லாத படியால் அக்காலத்தில் மொறட்டுவப் பகுதியைச் சேர்ந்த லக்சபதி எனும் இடத்தி லிருந்த பத்தினி கோயிலின் பொறுப்பாளரா கவும் பூசகர்களாயுமிருந்த யுவானஸ் பெர்னான்டோவிடம் பூசை, நிர்வாகப் பொறுப்புக்களை ஒப்படைத்தான். இந்தப் பரம்பரையின் வழித்தோன்றல்தான் நான். (திரு. காமினி பெர்னான்டோ).

அவ்வாறு பொறுப்பு கொடுக்கப்பட்டா லும் 1717ஆம் ஆண்டிலேயே அந்த இடத்தில் கத்தறகம தெய்யோவின் (முருகன்) கோயில் கட்டப்பட்டது. இதற்கான அதிகாரம் ஒரு ஆக்ஞை பிரகடனத்தின் பிரகாரமே வந்தது. இக்காலத்திற்குரிய நில உறுதிகள் இல்லை. 1717இல் இக்கோயில் கட்டப்பட்டதற்கான சான்றுகள் என்னிடம் உள்ளது.

இந்தக் கோயில் கதிர்காமக் கடவுளுக் குரிய கோயிலாக இருந்தாலும் மக்களால் 'கொணாக் கோயில்' என்றே அழைக்கப்படு கின்றது. 'கொணா' எனும் சொல் எருதைக் குறிக்கும். 'நந்திக் கோயில்' என்ற தமிழ் வடிவமே 'கொணாக் கோயில்' என்று சிங்களத்தில் அழைக்கப்படுகின்றது. இப்பொழுது முருகன் சிலையே ஆதி மூலத்தில் உள்ளது. பரம்பரை பரம்பரை யாக நாம் இதனை பார்த்துக் கொண்டு வருகின்றோம். எனக்கு முன்னர் எனது தகப்பனார் பொறுப்பாக இருந்தார். 1968 இல் எனது பொறுப்புக்கு வந்தது. ஆனால், தகப்பனார் வாழ்ந்து கொண்டிருந்ததால் 1982 இல் நான் நிர்வாகத்தை ஏற்றுக் கொண்டேன். 1991இல் எனது மகனிடம் பொறுப்பை கொடுத்துள்ளேன். கோயில் கருமங்களின் பொறுப்பு, நிர்வாகப் பொறுப்பு என்பது கோயில் விடயங்களை செய்வதாகும். காலை, மாலையில் பூசை செய்தல். முன்னர் மத்தியானத்திலும்

இருந்தது. இதைவிடக் கோயிலுக்கு நேர்த்திக் கடன்களை நிறைவேற்ற வருபவர்களின் கருமங்களைப் பார்த்தலும் எமது கடமையாகும். நவக்கிரக வழிபாடு செய்தலும் இடம்பெறும். பிள்ளை வரம் வேண்டுவோரும் இங்கு வருவர். அதற்கான பூஜையும் இடம்பெறும்.

பூஜை வேளைகளில் வெள்ளை உடையையே அணிவேன். இக்கோயிலுக்கு பிள்ளை வரம் வேண்டியே அதிக பக்தர்கள் வருவார்கள். அதற்கு பௌத்த, சிங்கள மக்களே வருகின்றனர். பிள்ளைப் பேறு என்பது பத்தினி கோயிலுடன் சம்பந்தப் பட்டது. பூஜைகளுக்கு பழங்கள் வைத்து பூஜை செய்வோம். புத்தரும் உண்டு. புத்தருக்கும் பூஜை செய்வோம். இதைவிட இக்கோயில் மஹோற்சவம் இடம்பெறுவது உண்டு. கோயிலுக்குப் பணமும், பொருட்களும் தருவார்கள். இப்பகுதியில் உள்ளவர்களும் பிற இடங்களிலிருந்தும் கோயிலுக்கு வருவார்கள். அண்மையில் கேகாலையில் இருந்து சில பக்தர்கள் வந்தனர். முன்னர் அவர்களுக்குப் பிள்ளைகள் இல்லாமலிருந்தனர். இக்கோயிலில் பூஜை செய்த பின்னர் பிள்ளை கிடைத்தது.

உற்சவம் ஓகஸ்ட், செப்டெம்பரில் இடம்பெறுகின்றது. போயாவை ஒட்டியே உற்சவம் இடம்பெறும். 14 நாட்கள் உற்சவம் இடம்பெறும். சில வேளைகளில் நாட்களைக் குறைப்பதுண்டு. கோயிலின் நடைமுறை இவ்வாறாக அமையும்.

1984 இல் கோயில் வளவில் கோயில் காரியங்களுக்காக நிலத்தை அகழ்ந்தபோது ஒரு ஆவுடையார் சிலை தென்பட்டது. இதைப் பார்க்கும்போது இது மிகப் பெரியதாக இருந்திருக்க வேண்டும். ஆவுடையார் சிலை கிடைத்தபோது ஒரு நந்தி சிலையும் கிடைத்தது. அது உடைந்து காணப்பட்டது.

இங்கு மஹா சிவராத்திரி விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது.

தனிப்பட்ட முறையில் நான் ஒன்றைக் கூற வேண்டும். இது ஈஸ்வரன் கோயில் ஆகையால் ஈஸ்வரன் கோயிலில் பூஜை எவ்வாறு இடம்பெற வேண்டுமோ அவ்வாறு பூஜை செய்து ஈஸ்வரனை சேவிக்க வேண்டும்.

[ஒலிப்பதிவினைக் கேட்டு பதிவுசெய்த குழு: பேராசிரியர் கார்த்திகேசு. சிவத்தம்பி, ஜெயசிங்கம் ஜெயரூபன், சண்முக சர்மா ஜெயப்பிரகாஷ்]

# கொழும்பில் நாட்டுக்கோட்டை நகரத்தார் கோயில்கள்

எஸ். சுப்பிரமணியம் செட்டியார் ஜே. பி.

**நா**ட்டுக்கோட்டை செட்டியார் என்றழைக் கப்படும் நாட்டுக்கோட்டை நகரத்தார், தமிழ் இனத்தைச் சேர்ந்த ஒரு குலத்தினர் ஆவர். இவர்கள் தமிழ்நாட்டின் சிவகங்கை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் உள்ள செட்டிநாடு என்னும் பிரதேசத்தில் செறிந்து வாழ்ந்தவர்கள். தற்போதும் வாழ்ந்துக் கொண்டிருப்பவர்கள். இவர்கள் வணிக சமூகத்தைச் சேர்ந்தவர்கள்.

இவர்கள் எங்காவது வெளிநாடுகளில் வணிகம் தொடங்கிய பின் தமக்குள் சிலர் ஒன்றிணைந்து ஒரு சிறிய கதிரேசன் கோயிலை அமைத்து பின்னர் அதனை அபிவிருத்தி செய்வதை சாதாரண வழக்கமாகக் கொண்டவர்கள். அவர்களின் பிரதான கடவுளாக கதிரேசன் காணப்படு கிறார். அக்கடவுளின் குறியீடு வேலாயுதம். நாட்டுக்கோட்டை செட்டியார்கள் தமது வணிகத்தையும், கோயில்களையும் பர்மா, மலேசியா, இந்தோனேசியா, சிங்கப்பூர், இந்தோசீனா மற்றும் இலங்கை போன்ற கிழக்கு நாடுகளிலும் அமைத்துக் கொண் டனர்.

இச்சமூகத்தினர் இலங்கைக்கு ஆயிரத்து எண்ணூறு (1800) அளவில் வணிகத்திற்காக வந்துள்ளனர். இவ்வாறு வந்தவர்கள் காலி, கொழும்பு மற்றும் யாழ்ப்பாணம் போன்ற இடங்களிலே தமது வியாபாரத்தை ஆரம்பித்ததுடன் அவ்விடங்களிலேயே கதிரேசன் கோயில்களையும் நிறுவினர். இக்காலத்திலேயே கதிர்காமத்திலும் ஒரு கோயிலை நிறுவினார்கள். பின்னர் நாட்டின் உட்பகுதிக்கு கோப்பி மற்றும் தேயிலை என்னும் பெருந்தோட்ட பயிர்ச் செய்கைக்காக நகர்ந்தனர். அத்துடன் கண்டி, மாத்தளை, கம்பளை, புசல்லாவ, குருநாகல், நாவலப்பிட்டி, பதுளை, இரத்தினபுரி, இறக்குவானை போன்ற இடங்களில்

கோயில்களைக் கட்டியவர்களும் இவர்களே. மேலும், நீர்கொழும்பு, மாதம்பே, புத்தளம் ஆகிய இடங்களிலும் ஆலயங்கள் கட்டப்பட்டன. இவை யாவும் தனியாருக்கு உடைமையான ஆலயங்களாக காணப்பட்டன.

நாட்டுக்கோட்டை நகரத்தார், அவர்களின் சொந்தப் பணத்தின் மூலமே இக் கோயில்களை அமைத்தனர். இவர்களின் சமூகத்தைத் தவிர்ந்த மற்றையோர் கோயிலின் நிர்மாணம், நிர்வாகம், முகாமை என்பவற்றில் பங்குபற்ற அனுமதிக்கப்படவில்லை. அத்துடன் பிறரிடமிருந்து நன்கொடைகள் பெறுவதும் கண்டிப்பாகத் தடை செய்யப்பட்டது. ஒவ்வொரு நாட்டுக் கோட்டை நகரத்தாரும் **மகமை** (அங்கத்துவப் பணம்) எழுத வேண்டி இருந்தது.

செட்டியார் தெருப் பகுதியில் (கொழும்பு) பெரும்பாலான நாட்டுக் கோட்டைச் செட்டியார்கள் தமது வியாபாரத்தை நடத்தி வந்ததுடன், அப் பிரதேசத்தில் கோயில் ஒன்றைக் கட்டவும் தீர்மானித்தனர். இல. 239, செட்டியார் தெருவில் கதிரேசன் கோயில் 1809 ஆம் வருடம் கட்டப்பட்டது. சிலகாலம் சென்ற பின்னர், முகாமைத்துவத்தில் ஏற்பட்ட முரண்பாடுகளின் காரணமாக செட்டியார்களில் சிலர் பிரிந்து சென்று புதிய கதிரேசன் கோயிலை வேறோர் இடத்தில் 1839 ஆம் ஆண்டுகளில் கட்டினர். முதலில் கட்டப்பட்ட கோயிலே பழைய கதிரேசன் கோயில் என்று அழைக்கப்படுகின்றது. புதிய கதிரேசன் கோயிலைக் கட்டவென நகரத்தார் செட்டியார் தெருவில் வாங்கிய (உறுதி பத்திர இல. 1845) நிலமானது ஜூன் மாதம் 8ஆம் திகதி 1852 இல் உறுதிப் படுத்தப்பட்டது. மேற்படி காணி நிலத்துடன் இன்னும் சில காணித் துண்டுகளும் கொள்வனவு செய்யப்பட்டன. (உறுதி இல. 479, 16. 12. 1863), (உறுதி இல. 584, 24. 02. 1865) இக்காணிகள் வாங்கப்பட்டதும் உடனடியாகத் தற்போதைய கோயில் செட்டியார் தெருவில் 251ஆம் இலக்க இடத்தில் கட்டப்பட்டது.

இந்நகரத்தார் ஒவ்வொரு வருட ஆடி பண்டிகை (ஜூலை, ஆகஸ்ட்) காலத்திலும் பௌர்ணமி நாளில் கதிர்காமத்திற்குப் பாத யாத்திரையாகச் செல்வதை வழக்கமாகக் கொண்டிருந்தனர். மாட்டு வண்டிகளில் பயணித்த இவர்கள் யானைகளின் அச்சுறுத்தல்கள் நிறைந்த காடுகளுக்கூடாகவும் கதிர்காமம் நோக்கிப் பயணித்தனர். இப் பயணங்களின்போது அவர்கள் மலேரியா போன்ற நோய்களின் தாக்கத்திற்கும் ஆளானார்கள். இவ்வாறு நோய்கள் பரவுவதை விரும்பாத ஆங்கிலேய ஆட்சியாளர்கள் சில சந்தர்ப்பங்களில் இப் பயணங்களைத் தடை செய்தனர்.

இப்பிரச்சினைக்கு முகங்கொடுத்த பழைய மற்றும் புதிய கதிரேசன் கோயில்களைச் சேர்ந்த செட்டியார்கள் கதிர்காம கோயிலுக்கு மாற்றீடாக கொழும்பில் ஆலயம் எழும்பி ஆடிவேல் விழாவை கொண்டாடினர். இரு பிரிவினரும் பம்பலப் பிட்டியில் இரு வேறு காணிகளை கொள்வனவு செய்து இரு ஆலயங்களைக் கட்டினர். அவை தமிழில் **உபய கதிர்காமம்** என்று அழைக்கப்படுகின்றன.

புதிய கதிரேசன் கோயிலைச் சேர்ந்த நகரத்தார் இல. 339, காலி வீதி, பம்பலப் பிட்டியில் 4 ஏக்கர் 3 றூட் 20 பேர்ச் விஸ்தீரணமுள்ள காணி ஒன்றை (1554, 16. 11. 1871இல்) கொள்வனவு செய்தனர். அவ் விடத்தில் அவர்கள் கோயில் ஒன்றையும் கட்டினார்கள். இதன் பிறகு அத்துடன் இணைந்த காணி ஒன்றை (உறுதி இல. 2572,

08. 09. 1909இல்) வாங்கினர். இதன் விஸ்தீரணம் 1 ஏக்கர், 1 றூட், 38 பேர்ச் ஆகும். இத்துடன் இன்னும் சில காணிப் பரப்புகளும் கொள்வனவு செய்யப்பட்டன. அவற்றின் விவரம் பின்வருமாறு: 1 ஏக்கர், 12 பேர்ச் (உறுதி இல. 2148, 23. 02. 1912ஆந் திகதி), 2 ஏக்கர், 29 பேர்ச் (உறுதி இல. 1761, 07. 12. 1932ஆந் திகதி) எனவே, இவர்கள் மொத்தமாகக் கொள்வனவு செய்த காணிகளின் அளவு 9 ஏக்கர், 2 றூட், 19 பேர்ச் ஆகும். பழைய கோயில் உடைக்கப்பட்டு தற்போது உள்ள ஆலயம் 1992 ஆம் ஆண்டில் கட்டப்பட்டது.

புதிய கதிரேசன் கோயிலின் தேர், வெள்ளி ரதம் எனவும், பழைய கதிரேசன் கோயிலின் தேர் தங்க ரதம் எனவும் அழைக்கப்படுகின்றது. கதிர்காமத் திருவிழாக் காலங்களில் இத்தேர்கள், செட்டியார் தெருவில் இருந்து புறப்பட்டு காலி வீதியூடாக பம்பலப்பிட்டியை அடைந்து மூன்று நாட்கள் தங்கியிருந்து பின்னர் செட்டியார் தெருவிற்குத் திரும்பும். இது ஒரு தேசிய விழாவாகக் கருதப்படுவதுடன் அரச, வங்கி விடுமுறையாகவும் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது. இத்திருவிழா ஆடிவேல் விழா என்று அழைக்கப்படும்.

இச்சமூகத்தினர் கொழும்பில் ஆற்றியுள்ள பல்வேறு இந்து சமயப் பணிகள் பற்றி அறிவதற்கு இந்நூலில் இடம்பெறும் திரு. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களின் நேர்காணலைப் பார்க்கவும்.

# கொழும்பில் இந்துப் பாரம்பரியம்

## - இந்து சமய நிறுவனங்களும் இந்துக் கல்விக் கூடங்களும் ஏற்படுத்திய தாக்கங்கள்

**சட்டத்தரணி கந்தையா நீலகண்டன்**
பொதுச் செயலாளர், அகில இலங்கை இந்து மாமன்றம்,
செயலாளர், இந்து வித்தியா விருத்திச் சங்கம்.

இலங்கையின் தலைநகர் கொழும்பு மாநகரின் வரலாற்றில் இந்துக்களுக்கு என்று ஒரு தனி இடம் உண்டு. இன்று கொழும்பு மாநகர், ஏடுகளில் நாட்டின் அரசியல் தலைநகர் என்ற நிலையிலிருந்து வர்த்தக தலைநகர் மட்டும் என்ற நிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டபோதும் கொழும்பு மாநகரும் அதனைச் சுற்றி அமைந்துள்ள கொழும்பு மாவட்டத்தின் ஏனைய அங்கங்களாக இருக்கும் இடங்களும் அடங்கிய இடப் பரப்பு, இலங்கையின் தலைநகரமாக இந் நாட்டவராலும் பிறநாட்டவராலும் கருதப் படுகின்றது.

கொழும்பில் தமிழ் மக்கள் - குறிப்பாக அவர்களில் பெரும்பாலும் இந்து மக்கள் - மிகவும் செல்வாக்கு மிக்க ஓர் இனமாக வாழ்ந்தமை வரலாறு. இன்று அந்த நிலைக்குப் பின் ஒரு வினாக்குறி போட வேண்டியது உண்மை நிலை. இருந்தும்கூட கொழும்பில் இந்துப் பாரம்பரியம் வளர்ந்து விடவில்லை என அங்கலாய்க்கும் நிலை ஏற்படாதது, ஒரு நிம்மதியான விடயம்.

'அடக்கி ஒடுக்கப்படும் இனமாக நாங்கள்' என்ற வேதனை நிலையிலும் நாங்கள் எங்கள் பாரம்பரியத்தை விட்டுக் கொடுக்கவில்லை. அதனை முன்னெடுத்துச் சென்றிருக்கின்றோம்.

அடுத்தடுத்து ஏற்பட்ட இனத்துரோகச் செயல்களினால் கொழும்பில் வாழ்ந்த பிரபல்யமான இந்துக் குடும்பத்தினர் இன்று சோர்ந்து போய் இருக்கின்றனர். ஆனால், வேதனைகளையும், சோதனைகளையும் கூடச் சவால்களாக எடுத்து புதிய தலைமுறையினர் எமது பாரம்பரியத்தை கொழும்பில் வளர்த்து வருகின்றனர்.

இந்த நாட்டில் ஜனநாயகம் என்ற போர்வையிலும், அரச படைகள் தங்கள் பாதுகாப்புக்கு என்ற மாயையிலும் பெரும் பான்மைப் பலம் மிக்கவர்கள் தந்த கொடுமைகள், எம் மக்களை இந்நாட்டில் இருந்து பிற நாடுகளுக்கு வெளியேற வைத்தன. இன்று பாரின் பல பக்கங்களிலும் எமது மக்கள் தங்கள் பாரம்பரியத்தை எடுத்துச் சென்று வளர்த்து வருவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. கடந்த ஆண்டில் கோலாலம்பூரில் உலகச் சைவப் பேரவை மாநாடு நடந்தபோது இரு நாடு களின் பிரதிநிதிகள் மட்டும் இந்தியாவைச் சேர்ந்த அல்லது அந்த மண்ணின் பரம்பரை யாக இருக்க, ஏனைய நாட்டின் பிரதிநிதி களாக இருந்தவர்கள் அனைவருமே இலங்கைச் சைவர்களாக. இருந்தனர். உலகமெல்லாம் சென்று எம்மவர் எமது பாரம்பரியத்தைப் பேணுகின்ற காலகட்டத் தில், கொழும்பில் மனித சக்தி குறைந்த நிலையிலும், எங்களுக்கு ஏற்பட்ட இன்னல்களை ஏணிப்படியாக எடுத்து, சவால்களுக்கு ஈடுகொடுத்து, எமது பாரம் பரியத்தை முன்னெடுத்துச் சென்றிருக்கின் றோம். அந்தப் புதிய அலையில் இணைந்து விட்டவன் என்ற நிம்மதியைத் தன்னடக்கத் துடன் கூறிக்கொண்டு கொழும்பில் இந்துப் பாரம்பரியத்தில் இந்து சமய நிறுவனங் களும் இந்துக் கல்விக்கூடங்களும் ஏற்படுத் திய தாக்கங்கள் பற்றி ஒரு கண்ணோட் டத்தைச் செலுத்த விரும்புகின்றேன்.

நூறு ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட கொழும்பு விவேகானந்த சபை முதல் பல இந்து நிறுவனங்கள் கொழும்பு மண்ணில் பிறந்தவை. சைவ மங்கையர் கழகம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், கதிர்காமத் தொண்டர் சபை, வடகொழும்பு இந்து பரிபாலன சபை, ஈழத்துத் திருநெறித் தமிழ் மன்றம், சிவயோகர் சுவாமி நிதியம் என்பன முக்கிய மானவை. வடகொழும்பில் விவேகானந்த சபை நிறுவிய விவேகானந்தாக் கல்லூரி, தென் கொழும்பில் சைவ மங்கையர் கழகம் ஆரம்பித்த சைவ மங்கையர் கல்லூரி, இந்து வித்தியா விருத்திச் சங்கம் நிறுவிய இந்துக் கல்லூரி, கொழும்பு (பம்பலப்பிட்டி), கொழும்பு இந்துக் கல்லூரி (இரத்மலானை) ஆகியவை கொழும்பு வாழ் இந்து மக்களிடையே புத்துணர்வைக் காலத்துக்குக் காலம் தந்ததுடன் இந்துப் பாரம்பரிய மேம்பாட்டிற்கும் வழி வகுத்தன.

வடகொழும்பில் விவேகானந்த சபை நிறுவிய - விவேகானந்த சபை மண்டபமும் பம்பலப்பிட்டியில் இந்து வித்தியா விருத்திச் சங்கம் (வெள்ளவத்தை மாணிக்க விநாயக ஆலய அறங்காவலர் சபையிட மிருந்து நீண்டகாலக் குத்தகையில் பெற்ற காணியில்) கட்டிய சரஸ்வதி மண்டபமும் கொழும்பில் தமிழ் கலாசார நிகழ்வுகளும் இந்து சமய வைபவங்களும் வசதியாக நடைபெற உதவின.

இதற்கும் மேலாக இராமகிருஷ்ண மிஷன் வெள்ளவத்தையில் நிறுவிய மண்டபங்களும், கதிர்காமத் தொண்டர் சபை மருதானையில் அமைத்த மண்டபமும் இந்துக்களுக்கு பல வழிகளில் பயன் பட்டன. கொழும்பில் நாட்டுக் கோட்டைச் செட்டியார்களும் ஆறுநாட்டு வேளாளர் குழாமும் கட்டிய கோயில்கள் அவற்றின் தாக்கங்களும் இந்து சமய நிறுவனங் களுடன் இந்துக் கல்விக்கூடங்களுடனும் கைகோர்த்து உதவின.

வெள்ளவத்தை மாணிக்க விநாயகரை வழிபட்டுக் கொண்டு பிள்ளையாரின் அருளுடன் 1955 ஆம் ஆண்டு பம்பலப் பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் இலங்கை யில் இருக்கும் இந்து நிறுவனங்களும் ஆலய தர்மகர்த்தா சபைகளும் கூடி

தங்களின் ஓர் கூட்டமைப்பாக - உச்ச நிறுவனமாக - அகில இலங்கை இந்து மாமன்றத்தை ஆரம்பித்தமை கொழும்பில் நடந்த இந்துக்களின் நிகழ்வுகளுக்கு மகுடம் வைக்கும் வைபவமாகக் கருதப்படலாம். இந்து மக்களுக்கு என ஒரு தலைமையகம் கொழும்பில் இருக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இந்த உச்ச நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. காலம் தாழ்த்தியாயினும் அரசிடம் குத்தகை பெற்ற காணியில் 1996 ஆம் ஆண்டில் மாமன்றத் தலைமையகம் பூர்த்தி செய்யப்பட்டது, கொழும்பில் இந்து மக்களின் வரலாற்றில் பொன் அத்தியாயம் ஒன்றெனக் கூறலாம். வேதனைகளும் சோதனைகளும் மிக்க கால கட்டத்தில் இந்து மக்கள் கொழும்பில் சவால்களைச் சந்திப்பதில் உசாராக இருந்திருக்கின்றார்கள் - உத்வேகமாகச் செயற்பட்டிருக்கின்றார்கள் - என்பதற்கு இது ஒரு சான்று.

கொழும்பில் எமது பாரம்பரியம் வளர உழைத்த இந்து சமூகத்தின் சில அங்கங்களைக் குறிப்பிடுவது கடமை. இந்து முயற்சிகள் பலவற்றில் கொழும்பு வாழ் இந்து சட்டத்தரணிகளும் இளைப்பாறிய நீதியரசர்களும் இருக்கின்றார்கள். அவர்கள் தந்த தலைமைத்துவம் சரித்திரம் பகரும் உண்மை. அவர்கள் சுதந்திரமாக இயங்குகின்ற துணிச்சலுடன் குரல் கொடுக்கின்ற வர்க்கம் என்பது அதற்கு ஒரு காரணமாக இருந்திருக்கலாம். அந்த வர்க்கத்துக்குப் பெரிதும் உறுதுணை நின்ற இன்னுமொரு வர்க்கம் கொழும்பில் வாழ்ந்த இந்து வர்த்தகப் பிரமுகர்கள். தாராள சிந்தனையுடன் அவர்கள் இந்து நிறுவனங்களுக்கும் இந்துக் கல்விக்கூடங்களுக்கும் தந்துதவிய பேருதவி மறக்க முடியாத பெரும் புண்ணியச் செயல். இந்து நிறுவனங்களும் இந்துக் கல்விக்கூடங்களும் இயங்க பல்வேறு வழிகளில் உதவி செய்த இன்னும் ஒரு வகையினரும் இருக்கின்றார்கள். அவர்கள் அரச பதவி வகித்தவர்களும் இளைப்பாறிய அரச உத்தியோகத்தவரும் ஆவர். பின் கூறப்பட்ட வகையினர் இன்று தொகையில் குன்றியிருப்பதும் ஆசிரியர்கள் 'டியூஷனில்' மூழ்கியிருப்பதும் இளைப்பாறிய அரச உத்தியோகத்தர்கள் தங்கள் பிள்ளைகளுடன் முதுமைக் காலத்தைக் கழிக்க வெளிநாடுகள் சென்றிருப்பதும் இன்று இந்து நிறுவனங்களுக்குப் போதிய ஆளணி இல்லாத சங்கட நிலையை ஏற்படுத்தி இருக்கின்றன.

மேற்கூறியவை இக்கட்டுரையின் கருப்பொருளின் இரத்தினச் சுருக்கம். சில முக்கிய விடயங்களை சிறிது விரித்து எடுத்துரைக்க விரும்புகின்றேன்.

கொழும்பு வாழ் இந்து மக்களிடையே 1951ஆம் ஆண்டு ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இருபத்து நான்கு இந்துப் பிரமுகர்கள் ஒன்று கூடி எதிர்காலச் சந்ததியினருக்கு எழுத்துக்களால் வர்ணிக்கப்பட முடியாத அளப்பரிய சேவை ஒன்றினை ஆற்றுவதற்கு வித்திட்டனர். உச்ச நீதிமன்றத்தின் மிகவும் உயர் நிலையில் (ஒரு தமிழ் இந்து என்ற காரணத்தினால் பிரதம நீதியரசர் பதவியில் தற்காலிகமாகவே மட்டும் அமர்த்தப்பட்ட, நிரந்தரமான பிரதம நீதியரசர் பதவி மறுக்கப்பட்ட நிலையில்) இருந்த மாண்புமிகு நீதியரசர் செல்லப்பா நாகலிங்கம் தலைமையில் அரச சேவையில் உயர் பதவி வகித்த பெருமக்கள், சட்டத்துறையில் பிரபல்யம் பெற்று வழக்குரைப்பதில் வல்லுநர்களாக உயர்ந்தவர்கள், பிரபல வர்த்தகப் பிரமுகர்கள், பட்டயக் கணக்காய்வாளர்கள், ஆலய அறங்காவலர்கள் என்று வரிசைப்படுத்தப்படக்கூடிய பெரியோர்கள் இந்து என்ற நாமத்துடன் முதற்தடவையாகக் கொழும்பில் ஒன்று சேர்ந்து குமுறி

எழுந்தனர். அவர்களில் ஒருவர் கூறியிருந் தார்: ''எமது சந்ததியினருக்கு ஒரு கல்வி ஆலயத்திலும் பார்க்கப் பெரியதான எந்தப் பரிசை நாங்கள் வழங்க முடியும். இது இலேசாக வந்திருக்கும் பரிசு அல்ல. கொழும்பில் தமிழ் மக்கள் குறிப்பாக இந்து சமூகம் எதிர்நோக்கும் சவாலில் இருந்து பிறந்த பரிசு. இது எங்களின் பிள்ளைகள் கல்லூரி அனுமதி கோரி வேறு மத நிறுவனப் பாடசாலைகளை நாடும்போது 'ஏன் நீங்களும் ஒரு பாடசாலையை ஆரம்பிக்க லாம் தானே. உங்களுக்கு இங்கு இட மில்லை' என்ற வினாவை எதிர்நோக்க வேண்டியிருந்தது.'' இந்த உள்ளக் கிடக்கை யில் பூத்த கல்விப் பூங்காக்கள் அந்தப் பெரியவர்களிடம் இருந்து இளம் தலை முறைக்குக் கிடைத்த அளப்பரிய முதுசொம்.

12. 02. 1951இல் மேற்குறிப்பிட்ட உணர்வுடன் பம்பலப்பிட்டி ஸ்ரீ கதிரேசன் கோயில் மடத்தில் 'பிள்ளையார் பாடசாலை' என்ற பெயரில் அந்த இருபத்து நான்கு இந்துப் பெருமக்களும் கூடி இந்து வித்தியா விருத்திச் சங்கம் அமைத்து நிறுவிய கல்வி ஆலயம் தான் இன்று கொழும்பு மாநகரின் தேசிய பாடசாலை என்ற பெருமையுடன் மிளிர்கின்ற 'இந்துக் கல்லூரி, கொழும்பு'. இந்து வித்தியா விருத்திச் சங்கத்தினர் பெரும் மனத்துடன் பெரும் திட்டம் போட்டார்கள். இரத்ம லானையில் பல ஏக்கர் விசாலமாக இருந்த சதுக்கத்தை தமது சொந்த அடமானத்துடன் கடனெடுத்து வாங்கினார்கள். அங்கு 1955 இல் பெரும் கல்விக்கூடமாக கொழும்பு இந்துக்கல்லூரி கட்டப்பட்டது. இரத்ம லானையில் நிறுவப்பட்ட கல்லூரிதான் கொழும்பு இந்துக் கல்லூரியாக இன்றும் விளங்குகின்றது. பம்பலப்பிட்டியில் ஆரம்பமான பிள்ளையார் பாடசாலையில் படிக்கும் ஆரம்ப வகுப்பு மாணவர்கள் இரத்மலானையில் எழுந்த இந்துக் கல்லூரிக்கு அனுப்பப்படவேண்டும் என்பதுதான் முதலில் போடப்பட்ட திட்டம். இரண்டும் இணைந்த ஒரே அறிவு ஆலயமாகவே கனவு காணப்பட்டது. ஆனால், 1956ஆம் ஆண்டில் நடந்த இனக் கொடூர நிகழ்வுகளும், அதன் பின் வளர்ந்த இனக்குரோத நிகழ்வுகளும் பம்பலப்பிட்டி யில் படித்த இந்துக் கல்லூரி மாணவர்களின் பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இரத்மலானைக்கு அனுப்பத் தயங்க வைத்தது. அதன் விளைவாக பம்பலப் பிட்டியில் பிள்ளையார் பாடசாலை, கனிஷ்ட இந்துக் கல்லூரியாக, இறுதியாக தேசியக் கல்லூரி அந்தஸ்துடனான உயர் கல்வி நிலையமாக வளர்ந்தது. இரத்ம லானையில் 'கொழும்பு இந்துக் கல்லூரி' அமைந்திருப்பதால் பம்பலப்பிட்டியில் உள்ள கல்லூரி 'இந்துக் கல்லூரி கொழும்பு' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி பெற்றோர் - ஆசிரியர் சங்கத்தின் தூண்டுத லாலும் ஆதரவுடனும்தான் அக்கல்லூரியை அடுத்து இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அரசாங்கத்தால் நிறுவப்பட்டது.

இந்து வித்தியா விருத்திச் சங்கம் உருவாக்கிவிட்ட இரு இந்துக் கல்லூரி களும் கொழும்பு வாழ் இந்து சமூகத்தினர் தமது பாரம்பரியத்தினைப் பேணி கல்வி கற்று வளர வழிவகுத்தன என்றால் மிகை யாகாது. இரத்மலானையில் எழுந்த இந்துக் கல்லூரி ஐம்பதுகளில் இந்துக்களிடையே ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியதென்றால் அந்த முழுப் பொறுப்பையும் பம்பலப் பிட்டியில் வளர்ந்துவிட்ட இந்துக் கல்லூரி எழுபது களிலும் எண்பதுகளிலும் ஏற்றுக் கொண் டது என்றே கூறவேண்டும்.

இரு கல்லூரிகளும் 1961 ஆம் ஆண்டு பாடசாலைகள் சுவீகரிப்புச் சட்டத்தைத்

தொடர்ந்து அரச பாடசாலைகள் ஆகின. எனினும், பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியை கொழும்பு வாழ் இந்து சமூகம் தத்தெடுத்து வளர்த்து வந்திருக்கின்றது என்றே கூறலாம். இலங்கைக் கல்விச் சரித்திரத்தில் ஒரு பலம் மிக்க பெற்றோர் ஆசிரியர் சங்கம் (பின்பு பாடசாலை அபிவிருத்திச் சங்கம் எனப் பெயர் மாற்றப் பட்டது - சில ஆண்டுகள் பாடசாலை அபிவிருத்திச் சபையாகவும் இருந்தது) ஆக அது பணியாற்றியது. பெயர் பெற்ற பெரும் கல்லூரிகளில் புகழ் பெற்ற பழைய மாணவர்கள் செய்த சேவையை பாடசாலை அபிவிருத்திச் சங்கம் கொழும்பு வாழ் இந்து மக்களின் மையமாகவே வளர்ந்து வர ஆரம்பித்தது. 'வாழ்ந்தாலும் இந்துக் கல்லூரி: தாழ்ந்தாலும் இந்துக் கல்லூரி' என்று மேடைகளில் வர்ணிக்கப்படும் அளவிற்கு இந்நிறுவனம் இந்து மக்களின் வாழ்வுடன் ஒன்றிணைந்து விட்டது. கொடூர இனவெறியினால் வீடுகளில் இருந்து துரத்தப்பட்டபோது கொழும்பு வாழ் தமிழ் மக்களுக்கு தஞ்சம் தந்த நிலையங்களில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி முக்கியமானதாகும். அதுபோலவே இந்நாட்டில் உலக இந்து மாநாடுகள் நடந்த வேளைகளிலும் பல வழிகளில் கைகொடுத் திருக்கின்றது. எமது பிள்ளைகள் பண்ணுடன் திருமுறைகளைப் பாடுகின்ற பண்பினையும் இக்கல்லூரியும் ஏனைய இந்து பாடசாலைகளும் ஏற்படுத்தின.

இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரி அதன் அமைவிடம் காரணமாக பல இன்னல்களுக்கு எதிர்நீச்சல் கொடுக்க வேண்டியிருந்தது. இனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்ட இந்து மக்கள் தங்களுக்கு உரித்தாக இருந்த இந்துச் சதுக்கத்தில் இருந்த காணிகளை விற்றுவிட்டு வெளியேறியமையும் ஒரு காரணம். இந்துக் கல்லூரிக்குப் பின்புறத்தில் இருந்த வளவில் மொறட்டுவ பல்கலைக்கழகம் போன்ற உயர் கல்வி நிலையங்களில் படித்த மாணவர்களுக்கு இந்து வித்தியாவிருத்திச் சங்கம் நிறுவி நடத்தி வந்த விடுதியும் அரசினால் சுவீகரிக்கப்பட்டது நிலைமை மோசமடையச் செய்தன. இருந்தும் கல்லூரியை நிறுவிய ஸ்தாபக சங்கமான இந்து வித்தியாவிருத்திச் சங்கமும் அகில இலங்கை இந்து மாமன்றமும் மற்றும் கொழும்பு விவேகானந்த சபை போன்ற இந்து நிறுவனங்களும் அடுத்தடுத்து விடுத்த வேண்டுகோளினால் அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச விடுத்த உத்தரவைத் தொடர்ந்து 1983 முதல் மூடப்பட்டிருந்த இந்துக் கல்லூரி மீண்டும் திறக்கப்பட்டது. இக்கல்லூரியை மீண்டும் பலப்படுத்த அகில இலங்கை இந்து மாமன்றம் அங்கு நடத்தி வரும் இலவச மாணவர் விடுதி ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது. அதிபர் திரு. ந. மன்மதராஜனின் முயற்சியால் இந்துக் கல்லூரிக்குப் பின்புறம் உள்ள காணி அரசிடமிருந்து இந்து வித்தியாவிருத்திச் சங்கத்தினால் மீண்டெடுக்கப்பட்டது. அதன் ஒரு பாகம் அகில இலங்கை இந்து மா மன்றத்தினால் வாங்கப்பட்டு அங்கு 'சக்தி இல்லம்' இப்போது நடத்தப்படுகின்றது. தனி மனிதர்கள் பலரினால் எதிர்நோக்க முடியாதவையை - சாதிக்க முடியாத வையை - நிறுவனமாக இயங்கும்போது நிறைவேற்ற முடியும் என்ற உண்மையை இரத்மலானையில் இன்றும் தலை நிமிர்ந்து நிற்கும் கொழும்பு இந்துக் கல்லூரியும் அகில இலங்கை இந்து மாமன்ற விடுதி களும் உணர்த்துகின்றன.

கொழும்பிலுள்ள இந்துப் பாடசாலை கள் எங்கள் பிள்ளைகள் இந்துப் பாரம்பரிய முறையிலே உடுக்கவும், பண் தவறாது தேவாரம் பாடவும் தங்கள் கலைத் திறமை களை வெளிக்காட்டவும் உதவின. அதற்கும் மேலாக இக்கல்விக்கூடங்களில் படித்த

இந்து மாணவர்கள் தலைமைத்துவப் பயிற்சி பெறுவதற்கும், பல துறைகளில் முன்னணியில் திகழ்வதற்கும் ஊக்கமும் ஆக்கமும் தந்த பெருமை இப்பாடசாலை களைச் சாரும். கொழும்பில் உள்ள இந்துப் பாடசாலைகளில் படித்த மாணவர்கள் இந்த நாட்டிலும், வெளிநாடுகளிலும் பிரபல்ய மான முறைகளில் பல பதவிகளை வகிக்கும் திறனுடன் பயிற்றப்பட்டிருக்கின்றனர். பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் படித்த மாண்புமிகு ஐ. ஸ்ரீஸ்கந்தராஜா இன்று மேன்முறையீட்டு நீதியரசராக உயர்ந்திருப் பது நல்லதோர் உதாரணமாகும்.

இந்து மாணவர்கள் படிக்கின்ற ஏனைய பாடசாலைகளில், இந்து மாணவர் சங்கங் களை அமைத்து இயங்கினாலும் கூட, இந்து மாணவர்கள் இரண்டாம் தரப் பிரஜைகள் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது மறைக்க முடியாத உண்மை.

1987 ஆம் ஆண்டில் 'வடமராட்சி ஒப்பரேசனை'த் தொடர்ந்து பலரும் வடகிழக்கு மாகாணத்திலிருந்து கொழும்பு மாநகருக்கு அகதிகளாக வந்து சேர்ந்தபோது அவர்களின் பிள்ளைகள் படிக்க, பாடசாலை அனுமதி பெறுவது பெரும் பிரச்சினையாக இருந்தது. அவர்கள் பாடசாலை விலகல் பத்திரம் பெறாது வடகிழக்கிலிருந்து தமது பிள்ளைகளைக் கொண்டுவர நேர்ந்தது. அப்போது மீண்டும் கொழும்பு வாழ் இந்துப் பெருமக்களிடம் ஒரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. இந்து வித்தியா விருத்திச் சங்கத்தின் தலைவராக அன்றிருந்த நீதியரசர் வி. மாணிக்கவாசகர் தலைமையில் கொழும்பு இந்து பிரஜைகள் குழு ஆரம்பிக்கப்பட்டது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியில் பம்பரமாகச் சுழன்று பணியாற்றி வந்த துணை அதிபர் திரு. சு. பற்குணம் அவர்களின் தூண்டுதல்தான் இந்துப் பிரஜைகள் ஆரம்பிக்கப்பட முதற் காரணமாக அமைந்தது. அன்றைய சூழ்நிலையில் தமிழ் பிரஜைகள் குழு என்ற நாமத்திலும் பார்க்க இந்துப் பிரஜைகள் குழு என்ற பெயரில் இயங்குவது உசிதம் என்று உணரப்பட்டது குறிப்பிடத்தக்கது. அன்றைய ஜனாதிபதி ஜே. ஆர். ஜெய வர்த்தன, அன்றைய கல்வி அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, அன்றைய இந்தியத் தூதுவர் டிக்சிற் ஆகியோரைச் சந்தித்து இந்து மக்களுக்கு நிவாரணம் தேடிக் கொடுத்தது இந்துப் பிரஜைகள் குழு. சரஸ்வதி மண்டபத்திலும் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரியிலும் இயங்கிய கொழும்பு இந்து பிரஜைகள் குழு அன்று செய்த முக்கிய பணி மாநகரில் வந்து குவிந்த வடகிழக்கு மாகாண மக்களுக்கு அவர்கள் முறைப்படி பாடசாலையின் விலகல் பத்திரம், பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் என்பன இன்றி கொழும்புக் கல்லூரிகளில் அனுமதி பெற்றுக் கொடுத்தமை. அது மட்டுமல்லால் இடம்பெயர்ந்து வந்த ஆசிரியர்களையும் கொழும்பு பாடசாலைகளில் கற்பிக்க ஒழுங்கு செய்யப்பட்டது. அமைச்சுக்களின் அதிகாரிகளை இந்துக் கல்லூரிக்கும் சரஸ்வதி மண்டபத்திற்கும் அழைத்து பாடசாலை அனுமதி, ஆசிரிய நியமனம் போன்ற பணிகளில் அவர்களுடன் இணைந்து கொழும்பு இந்து பிரஜைகள் குழு பெரும் பங்காற்றியமை குறிப்பிடத் தக்கது. நாட்டின் ஜனாதிபதியை அவரின் செல்லப் பெயரினால் அழைத்துக் கதைக்கக் கூடிய செல்வாக்கு மிக்க நீதியரசர் மாணிக்க வாசகர் தந்த தலைமை குழுவின் பணிகளை நிறைவேற்ற மிகவும் உதவியது.

1983 இனக் கலவரத்தைத் தொடர்ந்து கொழும்பு வாழ் மக்களும் ஏனைய தமிழ் பேசும் மக்களும் சொல்லொணாத் துயரங் களுக்கு உட்பட்டனர். அவர்களுக்குக் குரல் கொடுக்க அரசியல் தலைமைத்துவம் கூட கொழும்பில் இல்லாத கட்டம் நிலவியது.

தமிழ் மக்களின் பிரச்சினைகளை எடுத்து உரைக்கக் குழுக்கள் இருந்தாலும் அவற்றிலும் மேலாக பொதுமக்களின் குரலாக அகில இலங்கை இந்து மாமன்றம் ஒலிக்கத் தயங்கவில்லை. ஜனாதிபதிக்கும், பிரதமருக்கும், அரசாங்கத்திற்கும், வெளிநாட்டுத் தூதராலயங்களுக்கும் பொதுமக்களின் பிரச்சினைகளை அகில இலங்கை இந்து மாமன்றம் எடுத்துக் கூறியது. சிவாச்சாரியார்கள் கூட துன்புறுத்தப்பட்டனர். ஒரு கட்டத்தில் உச்ச நீதிமன்றத்துக்குச் சென்று மகா சிவராத்திரிக்கு முன் ஒரு சிவாச்சாரியாரை மறியலிலிருந்து விடுதலை செய்யவும் மாமன்றம் நடவடிக்கை எடுத்தது. களுத்துறையில் வாடி வந்த தமிழ் அரசியல் கைதிகள் சார்பில் குரல் கொடுத்ததுடன் அவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறியும் அங்கு ஓர் இந்து வழிபாட்டு நிலையத்தினையும் மாமன்றம் நிறுவிக் கொடுத்தது.

வடகிழக்கில் யுத்தத்தினால் வாடிய எமது மக்களுக்கு நிவாரண உதவிகளை கொழும்பு மாநகரில் சேர்த்து அனுப்பும் பணிகளிலும் அகில இலங்கை இந்து மாமன்றம் முன்னின்று உழைத்தது. இந்து வித்தியா விருத்திச் சங்கம், இந்து மகளிர் மன்றம், சைவ முன்னேற்றச் சங்கம், விவேகானந்த சபை போன்ற ஏனைய இந்து நிறுவனங்களும் இப்பணிகளில் ஈடு பட்டன. கொழும்பு மக்கள் அனைவரும் இந்து மக்களின் உணர்வுகளுக்கு உருக் கொடுக்க இப்பணி உதவியது. அதேபோல மலையகத்தில் வெள்ளத்தினால் இந்து மக்கள் துயர் அடைந்தபோதும் நிவாரணப் பொருட்களை கொழும்பு மாநகரில் சேர்த்து பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று அடைய இந்து மாமன்றத்தினர் உதவினர். 1967இல் அரசாங்கத்திடமிருந்து 99 வருடக் குத்தகையில் பெற்ற காணியில் கொழும்பு, சேர் சிற்றம்பலம் கார்டினர் மாவத்தையில் தலைமையகக் கட்டிடத்தினை மாமன்றம் கட்ட எடுத்த முயற்சிகள் பல ஆண்டுகள் தாமதித்து 1990 செப்டெம்பரில் முடுக்கி விடப்பட்டது. அதற்குக் காரணம் அன்றைய தலைவர் திரு. வே. பாலசுப்பிரமணியமும் அவர்களுடன் உழைத்த மற்றத் தொண்டர் களுமே. 1996 மே மாதத்தில் தலைமைக் கட்டிடம் ஆறு மாடிகளுடன் கட்டி முடிக்கப் பட்டது. இந்து மக்கள் ஆர்வத்துடன் எதிர் பார்த்த கட்டிடம் சுமார் 27 மில்லியன் ரூபாவில் கட்டப்பட்டது என்றால் அதற்கு முக்கியமானவர்கள் ஐந்து குடும்பத்தினர். பாலசுப்பிரமணியம் குடும்பம், கைலாச பிள்ளை குடும்பம், மாணிக்கம் தவயோக ராஜா குடும்பம், நடேசன் குடும்பம், குணரத்தினம் பத்மராஜா குடும்பம். மற்ற இந்துக் குடும்பங்களின் குறைவே என்றாலும் சீ. ரீ. சி. ஈகிள் இன்சூரன்ஸ் கொடுத்த பத்து வருட வாடகைப் பணத் துடன் 1996 இல் கட்டி முடிக்கப்பட்டது. இன்று இந்து மக்களின் பெருமையைச் சாற்றும் ஒரு கட்டிடமாக அது தலை நிமிர்ந்து நிற்கின்றது. கடந்த இரு தசாப்தங்களாக பல சமூகப் பணிகளில் மாமன்றம் ஈடுபட்டு வருகின்றமை குறிப் பிடத்தக்கது. இரத்மலானை கொழும்பு இந்துக் கல்லூரியில் வசதி குறைந்த மாணவ மாணவியருக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் நடத்தும் இலவச விடுதிகள் இந்து நிறுவனங்களின் சேவைகளின் மகுடமாக இன்று போற்றப்படுகின்றது.

வெள்ளவத்தையில் இந்து மகளிர் கல்லூரியை நிறுவி பல ஆண்டுகள் கல்வி பணி புரியும் சைவ மங்கையர் கழகம் மூலம் சைவ மங்கையர் கொழும்பில் ஏற்படுத்திய இந்துப் பாரம்பரியப் புரட்சி சிறப்பானது.

நூறு ஆண்டுகளுக்கு மேலாக வட கொழும்பில் இந்துப் பாரம்பரியத்தை

வளர்த்து விவேகானந்த சபை அளப்பரிய சேவைகளைச் செய்கின்றது. 13. 07. 1902 இல் நிறுவப்பட்ட விவேகானந்த சபை ஆண்டுதோறும் கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களிடையே மட்டுமல்லாமல் அகில இலங்கை ரீதியிலும் சைவ சமயப் பரீட்சைகள் நடத்தி வருகின்றது. அரசாங்க பாடசாலைகளில் சமயம் கட்டாய பாடமாகப் போதிக்கப்பட முன்பே விவேகானந்த சபை இப்பணியை ஆரம்பித்தது மட்டுமல்லாமல் மாணவர் களுக்கு உபயோகமான நாவலர் பெருமானின் சைவ வினாவிடை போன்ற சைவ சமய நூல்களை வெளியிட்டது. ஒழுங்காகக் குருபூசைகள், திருமுறை ஓதல் போன்ற சமய நிகழ்வுகளையும் நடத்துவ துடன் அறநெறிப் பாடசாலையை ஞாயிறு தோறும் நடாத்தி கொழும்பு இந்து சமூகத்தினிடையே பலத்த தாக்கத்தை ஏற்படுத்திய பெருமையுடன் இச்சபை மிளிர்கின்றது. அது மட்டுமல்லாமல் வடகொழும்பில் தலைநிமிர்ந்து நிற்கும் கல்விக்கூடமான விவேகானந்தாக் கல்லூரியையும் இச்சபையே ஸ்தாபித்தது. கொழும்பில் இந்து சமய நிறுவனங்களில் பழமையான இச்சபை அன்றைய இலங்கைப் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பீடம் ஒன்று அமைக்க வேண்டும் என்று குரல் கொடுத்து அதில் வெற்றி பெற்ற பெருமைக்கும் உரியது. முகத்துவாரத்தில் நாற்பதுகளில் அந்தியேட்டி மடம் ஒன்றை யும் இச்சபை கட்டிப் பராமரித்து வந்தது. இச்சபை 1959 இல் நீர்கொழும்பிலும் ஒரு பாடசாலையை ஆரம்பித்தது. கொழும்பி லும் நீர்கொழும்பிலும் அவை நிறுவிய விவேகானந்தாக் கல்லூரிகள் 1960 இல் அரசினால் சுவீகரிக்கப்பட்டது. 1948 இல் கொழும்புக் கோட்டையில் இச்சபைக்குக் காணி ஒதுக்க அரசு ஏற்றுக்கொண்டாலும் பின்பு அதற்குப் பதிலாக 1967 இல் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு காணி ஒதுக்க அரசுக்கு சம்மதம் தந்தது. கால தாமதம் காரணமாக கோட்டையில் இந்து மக்கள் பெற்றிருக்க வேண்டிய காணி கொழும்பு 02 இல் தான் கிடைத்தது.

கொழும்பில் தமிழ் மக்கள் தஞ்சம் தேடி அடையும் அகதி முகாமாகவும் சிலகாலம் விவேகானந்த சபை பயன்படுத்தப்பட்டது. சுவாமி விவேகானந்தரின் இலங்கை விஜயத்தை ஒட்டி 1997 இல் சபை முன்றலில் நிறுவப்பட்ட கம்பீரமான விவேகானந்தர் சிலை கொட்டாஞ்சேனைப் புனித பூமியில் இந்து மணம் வீசி நிற்கின்றது.

வடகொழும்பில் கணபதிச் செட்டியார் நிறுவிய (பண்டாரநாயக்க மாவத்தையில் இருக்கும்) கணபதி வித்தியாலயம், கப்பிதாவத்தையில் கதிர்காமத் தொடர் சபையினால் நிறுவிய தொண்டர் வித்தியா லயம், முகத்துவாரத்தில் இன்று புதுப் பொலிவுடன் மிளிரும் வடகொழும்பு இந்துக் கல்லூரி என்பனவும் இந்து மக்களுக்கு பல வழிகளில் கைகொடுத்துள் ளன என்பது குறிப்பிடத்தக்கது.

கொழும்பில் தலைமையகம் அமைந் துள்ள இராமகிருஷ்ண மடம் நாடளாவிய ரீதியில் இந்து சமய ஒளி பரப்பி வருகின்ற மையைக் குறிப்பிட வேண்டும். கொழும்பில் இந்து பாடசாலைகளினதும் இந்து நிறுவனங்களினதும் நிகழ்வுகளில் பங்குபற்றி அவற்றை மெருகூட்டி வருகின்ற பெருமை இன்றைய இராம கிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமிஜி ஆத்மகணானந்தஜி அவர்களைச் சாரும். இராமகிருஷ்ண மிஷனின் சேவை கொழும்பிலிருந்து நாட்டின் நாலா பகுதிகளுக்கும் பரவி வருகின்றது. அவர்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் நடாத்தும் அறநெறிப் பாடசாலை கொழும்பு இந்து மக்கள் மத்தியில் பல ஆண்டுகளாக ஒரு

காத்திரமான தாக்கத்தை ஏற்படுத்தி வந்திருக்கின்றது. சில ஆண்டுகளாக சின்மயாமிஷன், அரவிந்தர் நிலையம், ஆனந்தசாகரம் போன்றவையும் தங்கள் பங்களிப்பை கொழும்பில் அளித்து வருகின்றன.

கொழும்பு 02 இல் அருள்மிகு சிவசுப்பிரமணிய சுவாமி திருத்தலச் சூழ்நிலையில் வளர்ந்து வந்திருக்கும் கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம் கொழும்பில் பல அரிய சமயப் பணிகளை ஆற்றி வரும் இன்னுமோர் இந்து சமய நிறுவனம் ஆகும்.

கொழும்பு இந்து மகளிர் மன்றம் சில ஆண்டுகளாக பல சேவைகளை ஆற்றி வருகின்றது. இந்துப் பாரம்பரியம் பேணும் மன்றத்தின் ஆர்வத்தின் எதிரொலியாக ஓர் இந்து சமயப் பாரம்பரியங்கள் பற்றிய நூல் தமிழிலும், ஆங்கிலத்திலும் அவர்களால் வெளியிடப்பட்டுள்ளதும் அவர்கள் நடத்தும் முதியோர் இல்லமும் குறிப்பிடற்பாலது.

சமயக்குரவர் நால்வரினதும், ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரினதும், யாழ்ப்பாணம் சிவயோக சுவாமிகளினதும் குருபூசைகள் கொழும்பு மாநகரில் ஒழுங்காக அனுட்டிக்கப்படுவது இன்னும் ஒரு சிறப்பம்சம். இதிலும் விவேகானந்த சபை முன்னோடியாக இருந்து வந்திருக்கின்றது. யோகர் சுவாமிகளின் அடியார்கள் சிவயோக சமாஜ நிதியம் அமைத்து மாதாந்தம் யோகர் சுவாமி வழிபாடு செய்யவும், ஈழத்துத் திருநெறி தமிழ் மன்றம் நால்வர் குருபூசைகளையும் மற்ற சமய நாயன்மார்களை நினைவு கூரும் நிகழ்வுகளை நடத்தவும் சரஸ்வதி மண்டபம் மையமாக அமைந்துள்ளது. கொழும்பு வடக்கில் குறிப்பாக கோட்டடியில் வாழ்ந்த அன்றைய வழக்கறிஞர்களின் ஈடுபாட்டுடன் விவேகானந்தசபை மண்டபமும் ஒரு காலத்தில் இந்து மக்களின் மத்திய நிலையமாக இருந்தாலும் ஐம்பதுகளுக்குப் பின் வெள்ளவத்தை போன்ற தென் கொழும்புப் பகுதியில் இந்து மக்கள் கூடுதலாகக் குடியேற ஆரம்பித்த பின் பம்பலப்பிட்டியில் இருக்கும் சரஸ்வதி மண்டபம் தமிழ் மக்களின் - குறிப்பாக இந்து மக்களின் - நிகழ்வுகள் நடக்கும் மையமாக மாறியது. வெள்ளவத்தை மாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் ஆறுமுகநாவலர் மரபில் கந்தபுராண படனம் பாடுதலும் இடம்பெற்று வந்திருக்கின்றது. 1983க்குப் பின் சில ஆண்டுகள் அது நிறுத்தப்பட்டிருந்தாலும் சமீப காலத்தில் புதிய கதிரேசன் ஆலயத்தில் கந்தபுராண படனம் நடக்க ஆரம்பித்திருக்கின்றது. மாநகருக்குக் குடியேறி நவீன சக்திகளுக்கு முகம் கொடுத்து வரும் எம்மவர் எமது பாரம்பரியத்தை எமது மக்கள் கடைப்பிடித்து வருவதற்கு இதுவும் ஒரு சான்று. இளைப்பாறிய பிரதிக் கணக்காய்வாளர் நாயகம் திரு. ஆ. குணநாயகம், வைத்திய கலாநிதி க. வேலாயுதபிள்ளை போன்ற அரச பதவியில் இருந்த பலரும் ஆசிரியப் பணியில் இருந்தவர்களும் இதற்கு வழிகாட்டி நின்றனர். இந்து தமிழ் பண்பாட்டு நிகழ்வுகள் எழுபதுகள் வரை கொழும்பில் இடம்பெற முக்கிய காரண கர்த்தாக்களாக இருந்தவர்கள் தமிழ் அரச அலுவலர்களும் ஆசிரியர்களுமாகும். 1983க்குப் பின் அரச சேவையில் தமிழர்கள் அருகியதும் தமிழ் ஆசிரியர்கள் 'டியூஷன்' காரணமாக இரவு பகலாக நேரமின்றி உழைத்தலும், கொழும்பில் எமது பண்பாட்டு நிகழ்வில் பங்குபற்றுபவர்கள் தொகை எண்பதுகள் முதல் குன்றி வருகின்றமைக்குக் காரணிகள் எனலாம். மேலும் சட்டத்துறை போன்ற தொழில்சார் துறைகளில் எம்மவர் தொகை குறைந்து வருவதும் வர்த்தகத் துறையில்கூட இந்து மக்களின் ஆதிக்கம் குறைந்து வருவதும் எமது நிலையை மேலும் பாதித்திருக்கின்றன.

சேவை புரியப் போதிய ஆளணி இல்லாமையுடன் ஒரு சிலர் பாடுபட்டு ஒழுங்கு செய்யும் நிகழ்வுகளிலும் சபையினர் போதாது இருக்கின்ற துர்ப்பாக்கிய நிலைமைக்கும் நாங்கள் தள்ளப்பட்டிருக்கின்றோம். எனினும் மனம் சோராது மன உறுதியுடன் எமது பாரம்பரியம் பேண நாங்கள் உத்வேகத்துடன் உழைக்க வேண்டும். அது நாங்கள் எமது அடுத்த சந்ததிக்குச் செய்ய வேண்டிய கடமையாகும்.

சுதந்திரத்திற்கு முன் கொழும்பு மாநகரில் இருந்த நிலைமை வேறு. ஆனால் 1947 முதல் ஜனநாயகம் என்ற பெயரில் நடந்து வரும் பெரும்பான்மையினரின் ஆட்சியில் இந்து மன்றங்களும், இந்துப் பாடசாலைகளும் இரண்டாந்தர ஆதரவை மட்டும் அரசிடம் இருந்து பெற முடிந்தது. அரசாங்கத்தின் மாற்றாந்தாய் பார்வை மட்டும் இருந்தும் எமது கல்லூரிகளில் சில முன்னேறின என்றால் அதற்குக் காரணம் எமது இந்து சமுதாயத்தைச் சேர்ந்த கொடை வள்ளல்களே. இருப்பினும் எல்லா இந்து மாணவர்களுக்கும் கொழும்பில் தரமான நிலையில் படிக்க வசதிகள் போதாது. இந்த விடயத்தில் இந்து மக்கள் குறிப்பாக இந்து ஆலயங்களின் தர்மகர்த்தாக்கள் மனது வைத்தால் நிச்சயமாக இந்து மாணவர்களுக்கு ஆதரவு தர முடியும். கொழும்பு வாழ் இந்து இளம் தலைமுறையினர் அறிவு பெற்று உயர்ந்திட வழிவகுக்க முடியும். கொழும்பின் சில பகுதிகளில் இன்னும் ஏராளமான இந்துப் பிள்ளைகள் வறுமைக் கோட்டின் கீழ்த் தரத்தில் ஏழ்மையுடன் வாழ்கிறார்கள். இந்த உண்மை நிலையை உணர்ந்து வசதி படைத்த எம்மவரின் கருணைப் பார்வை அந்த மக்களைச் சென்றடைய வேண்டும்.

நாடளாவிய ரீதியில் சிவத்தொண்டர் அணி அமைத்து மக்கள் சேவையே மகேசுவரன் பூசை என்பதனை மறவாது சமூகப் பணியாற்ற அகில இலங்கை இந்து மாமன்றம் ஒழுங்கு செய்து வருகின்றது. மன்னார், கிளிநொச்சி, மஸ்கெலியா, பதுளை போன்ற இடங்களிலிருந்து பலர் சிவத்தொண்டர் அணியில் சேர முன் வந்திருக்கின்றனர். சொகுசு வாழ்வைத் தேடி அலையும் கொழும்பு இந்து மக்களிடமிருந்து போதிய ஆர்வம் ஏற்படாதது வருத்தத்திற்குரியது. எனினும் இம்முயற்சி தீவிரப்படுத்தப்படவேண்டும். ஆலய கர்த்தாக்கள் திருப்பணியுடன் அறப்பணியையும் மேலெடுத்துச் செல்லவேண்டும். ஒவ்வோர் ஆலயத்திலும் இந்து சமய நூலகம் ஏற்படுத்தப்படவேண்டும். சமய அறிவு வளர சமூகப்பணி மேலெடுத்துச் செல்லப்பட அது உதவும். கொழும்பில் இருக்கும் இந்து நிறுவனங்களும் இந்து ஆலயங்களும் இதற்கு முன்னின்று உதவ வேண்டும்.

*(கடந்த இரு தசாப்தங்களாக கொழும்பு இந்து பாரம்பரிய வளர்ச்சியில் அகில இலங்கை இந்து மாமன்றம், இந்து வித்தியா விருத்திச் சங்கம், விவேகானந்த சபை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இரத்மலானை இந்துக்கல்லூரி ஆகியவற்றுடன் பல வழிகளில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற அனுபவம் கட்டுரையாசிரியருக்குண்டு. கூடுமான வரை தனி மனிதர் பங்கு குறிப்பிடப்படவில்லை. சொல்லவேண்டிய கட்டாயம் இருந்த இடங்களில் மட்டும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.)*

# கொழும்பு மாவட்டத்தில் இந்து மாணவர்களின் கல்விநிலை

**பேராசிரியர். சோ. சந்திரசேகரம்**

*கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்*

கொழும்பு மாவட்டத்தின் மக்கள் தொகையில் 8.9 சதவீதமானவர்கள் (ஏறத்தாழ 250 000 பேர்) இந்துக்களாவர். மேல் மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களான கம்பஹா, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் வசிக்கும் இந்துக்களின் சதவீதம் முறையே 2.1%, 3.4% ஆகும்.

கொழும்பில் இந்துப் பாரம்பரியம் என்பது பெரும்பாலும் இந்துக்களாக உள்ள தமிழர்கள் வழியாகவே வந்தது. மிகச் சிறுபான்மையினராகத் தமிழர்கள் அல்லாத இந்துக்கள் வட இந்திய வர்த்தகக் குழுமங்களைச் சார்ந்தவர்கள்.உள்ளனர்.

இலங்கையின் வரலாற்றில் கொழும்பு முக்கியத்துவம் பெறுவது கோட்டை இராச்சியத்துடனும் குறிப்பாக போர்த்துக்கேய, ஒல்லாந்த, பிரித்தானியர் காலங்களிலேயாகும். கொழும்புக்கு இந்துக்கள் எவ்வாறு வந்தனர் என்பது பற்றிய நேரடி வரலாறு இன்னும் எழுதப் படவில்லை. இதனால் நாம் சில வரலாற்று சூழமைவுகளுக்கு உட்படும் தரவுகள், ஊகங்களையே நம்ப வேண்டியுள்ளது. போர் ஆட்சிக் காலத்தில் தமிழர்களாகிய கத்தோலிக்கர் இருந்ததற்கான சான்றுகள் உண்டு. ஆனால் இந்துக்கள் பற்றிக் கூற சான்றுகள் இல்லை. ஒல்லாந்தர் காலத்தில் (1658 - 1796) தமிழர்கள் கொழும்பில் வாழ்ந்ததற்கான சான்றுகள் இருந்தாலும் இந்துக்கள் பற்றி அறிய முடியவில்லை. பிற பகுதிகளிலிருந்து சில இந்துத் தமிழர்கள் வந்திருக்கலாம். அதே வேளையில் ஒல்லாந்தருக்கு இருந்த தென்னிந்தியத் தொடர்புகள் காரணமாக தென்னிந்தியத் தமிழ் வர்த்தகர்கள் கொழும்புக்கு வந்திருத்தல் வேண்டும்.

பிரித்தானிய ஆட்சிக் காலத்திலேயே இந்துக்களின் வரலாறு ஒரு நிச்சயத்

தன்மையைப் பெறுகின்றது. இலங்கை கைப்பற்றப்பட்டதும் முதலில் இங்கு சென்னையில் நடந்த ஆட்சி முறையை மேற்கொள்ளப்பட்டதாய் சில தமிழர்கள் வந்திருக்க வாய்ப்புண்டு. பிரித்தானிய ஆட்சிக் காலத்திலேயே இந்துக்களின் வரலாறு ஒரு நிச்சயத் தன்மையைப் பெறுகின்றது. இலங்கை கைப்பற்றப் பட்டதும் முதலில் இங்கு சென்னையில் நடந்த ஆட்சி முறைமை மேற்கொள்ளப் பட்டதால் சில தமிழர்கள் வந்திருக்க வாய்ப்புண்டு. பிரித்தானியா இலங்கை யைத் தமது நிரந்தர காலனிகளில் ஒன்றாக உறுதிப்படுத்தி அதற்கேற்ற ஆட்சி முறைமையினை 1833 இலிருந்து தொடங்கு கின்றனர். இக்காலம் முதல் இந்துத் தமிழர்கள் பெருமளவுக்குக் கொழும்பு வரத் தொடங்குகின்றனர். கொழும்பு பெரு நகராகவும் வர்த்தகத் தலைநகராகவும் மாறத் தொடங்க தென்னிந்திய வர்த்தகர்கள் - செட்டிமார் போன்றவர்கள் வரத் தொடங்கு கின்றனர். அவர்கள் தமது மரபுகளுக்கு அமையக் கோயில்களைக் கட்டினர். செட்டியார் தெருவும் அங்குள்ள கோயில் களும் இவ்வுண்மையைப் புலப்படுத்தும். நாட்டுக்கோட்டைச் செட்டியார்களுடன் வணிக ஈடுபாடு கொண்ட திருநெல்வேலித் தமிழர்கள் - இந்துத் தமிழ் வர்த்தகர்களும் திருவிளங்கத்தார் என அழைக்கப்படும் எண்ணெய் வணிகர்களும் வரத் தொடங்கி னர். இவர்களை விட ரெட்டி குலத்தைச் சார்ந்தவர்களும் இங்கு வந்துள்ளனர். இவர்கள் யாவரும் ஏதோ ஒரு வகையில் வணிக ஈடுபாடு கொண்டிருந்தமையால் இவர்களுடைய கோயில்கள் முக்கியத்துவம் பெற்றமை இயல்பே. தோட்டத்துறை சாராத பிற இந்துக்களும் கொழும்புக்கு வந்திருந் தனர்.

இலங்கையின் பிற பாகங்களிலிருந்து, குறிப்பாக வடக்கிலிருந்து கொழும்புக்கு வந்த இந்துக்கள் முதலில் பெரிய பதவிகள் சார்ந்த உயர் குடும்பங்களைச் சார்ந்தவர் களும், அடுத்து அல்லது சமமாக துறைமுக வேலை போன்ற உடலுழைப்பு, தொழில் நுட்ப வேலைகளுக்கு வந்தவர்களுமாகப் பலர் இப்பிரிவில் அடங்குவர். ஆங்கில ஆட்சிக்கான அரச அலுவலகங்களில் கடமையாற்றவென வருபவர் தொகை சென்ற நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து படிப்படியாகப் பெருகத் தொடங்கிற்று. இவர்கள் ஒவ்வொரு பிரிவினரும் தத்தம் மத அனுட்டானங்களுக்கான வழிபாட்டிடங் களைத் தோற்றுவித்தனர்.

இவ்வாறு வந்த இந்துத் தமிழர்கள் முதலில் கொழும்பின் வடக்குப் பகுதி களைச் சார்ந்த கொட்டாஞ்சேனை, முகத்து வாரத்திலும் மருதானைப் பகுதியிலுமே பெரிதும் வாழ்ந்து வந்தனர். உயர் குழாத் தினர் கறுவாக் காட்டுப் பகுதியினைத் தமது வசிப்பிடங்களாக ஏற்படுத்திக் கொண் டனர். பெரும்பாலும் அரச பதவிகளைச் சார்ந்த மத்தியவர வர்க்கத் தமிழர்களே கொழும்பு தெற்கைச் சார்ந்த பம்பலப் பிட்டி, வெள்ளவத்தையிலும் இதனை அண்டிய கிருலப்பனையிலும் வசிக்கத் தொடங்கினர். இந்தப் பொதுவான வருகையும் இருப்பும் கொழும்பில் இந்துத் தமிழர்களுக்கான பாடசாலைத் தேவை களையும் அமைவிடங்களையும் தீர்மானித் தன எனலாம்.

கொழும்பு மாவட்ட இந்துக்களில் அடங்குவோரைப் பின்வருமாறு இனங் காண முடியும்.

1. 19 ஆம் நூற்றாண்டு தொடக்கம் வட பகுதியிலிருந்து வர்த்தகம், வேலை வாய்ப்பு காரணமாக வந்து குடியேறிவர் கள்; அவர்களின் வழித் தோன்றல்கள்; அண்மைக் காலங்களில் பல்வேறு காரணங்களுக்காகக் கொழும்பில் வந்து

குடியேறியோர்; இவர்களில் வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த இந்துக்கள் அடங்குவர்.

2. 1830 ஆம் ஆண்டின் பின்னர் இலங்கைக் குக் குடிபெயர்ந்து வந்து பெருந் தோட்டத் துறையில் வேலை செய்த இந்தியத் தமிழ் மக்களைத் தொடர்ந்து, கொழும்பில் சிறுதொழில் செய்வதற் காகவும் துறைமுகம், புகையிரதப் பகுதி, பொது வேலைத்துறை என்பவற்றில் தொழிலாளர்களாகவும் பணிபுரிய தமிழகத்திலிருந்து வந்த தோட்டத்துறை சாரா தமிழ் இந்துக்கள்; அவர்களின் வழித் தோன்றல்கள்.

3. தமிழகத்திலிருந்து வந்த நாட்டுக் கோட்டை நகரத்தார் எனப்படும் செட்டி மாரையும் குறிப்பிடுதல் வேண்டும். குறிப்பாக, கோயில்களை நிறுவுவதில் இவர்களுக்கு இருந்த பாரம்பரிய ஈடுபாடு காரணமாக இவர்களைப் பற்றித் தனித்துக் கூறவேண்டியுள்ளது.

4. 1830 ஆம் ஆண்டின் பின்னர் மலையக மாவட்டங்களின் பெருந்தோட்டத் துறைகளில் வந்து குடியேறிய இந்தியத் தோட்டத் தொழிலாளர்கள் மற்றும் மலையக நகர்ப்புற இந்தியத் தமிழர் களில் கணிசமானவர்கள் காலப் போக்கில் தலைநகரம் தந்த தொழில் மற்றும் வர்த்தக வாய்ப்புகளைக் கருத்திற் கொண்டு கொழும்பு மாவட்டத்தில் வந்து குடியேறியுள்ளனர். தொழில் ரீதியாக நோக்குமிடத்து இவர்களில் பெரும்பாலானவர்க்ள் வர்த்தகர்களாக வும் கடைச் சிப்பந்திகளாகவும் வீட்டு வேலையாட்களாகவும் உள்ளனர். சிறு தொகையான உயர் தொழில் வகுப்பினர், கணக்காளர்கள், வர்த்தகத்துறை முகாமையாளர்கள், இலிகிதர் மட்ட ஊழியர்கள், ஆசிரியர்கள் இவர்களில் அடங்குவர். சிறுதொகையான தோட்டத் தொழிலாளர்களும் (2001 - 7314) இங்கு வாழ்கின்றனர்.

கொழும்பு மாவட்டத்தில் வாழும் இந்து மாணவர்களின் கல்வி நிலை, கல்வித் துறையில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அப்பிரச்சினைகளை அணுகுவதற்கான வழிமுறைகள் முதலிய விடயங்கள் பற்றிய ஒரு பூர்வாங்க ஆய்வாக இக்கட்டுரை அமையும். அத்துடன் மேலும் நுணுகி நோக்க வேண்டிய இந்துக்களின் கல்வி தொடர்பான விடயங்கள், பிரச்சினைகள் பற்றியும் இக்கட்டுரையில் சுட்டிக்காட்டப் படும்.

### இலங்கையின் கல்வி முறையில் சமயக்காரணி

19ஆம் நூற்றாண்டில் ஆங்கிலேயர் உருவாக்கிய கல்விக் கொள்கையின் ஒரு முக்கியஅம்சமாக இலங்கையில் அரசாங்கப் பாடசாலை முறையொன்றும் கிறித்தவ சமயக் குழுக்களின் பாடசாலை முறை ஒன்றும் தோன்றின. கிறித்தவ சமயக் குழுக்களின் கல்விப் பணியானது ஏற்கனவே போர்த்துக்கேயர் ஆட்சிக் காலத்தில் அரசால் ஊக்குவிக்கப்பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் குடியேற்ற அரசு மட்டுமன்றி, சில ஆங்கில தேசாதிபதிகளும் தனிப்பட்ட முறையில் சமயக் குழுக்களின் கல்விப் பணிகளுக்கு ஊக்கம் வழங்கியிருந் தனர். இவ்வாறு அரசாங்கமும் கிறித்தவ சமயக் குழுவினரும் கல்வித்துறையில் செலுத்திய செல்வாக்கின் காரணமாக இலங்கையின் கல்வி முறை இருவழிக் கட்டுப்பாட்டுக்கு (Dual control) உள்ளாக நேர்ந்தது.

இத்தகைய கல்வி ஏற்பாட்டைப் பல்வேறு காரணங்களால் பௌத்த சமயத் தினரும் இந்துக்களும் இஸ்லாமியர்களும்

குறை கூறினர். 19ஆம் நூற்றாண்டில் வட பகுதியில் ஆறுமுகநாவலரும் தென்னிலங்கையில் அநகாரிக தர்மபால, கர்னல் ஒல்கோட் போன்றவர்களும் பௌத்த பிரமஞான இயக்கமும் சுதேச சமயச் சூழலில் உள்ளூர் மாணவர்கள் கல்வி பயில வேண்டிய அவசியத்தை வலியுறுத்தினர். வடபகுதியில் சைவப் பாடசாலைகளையும் தென்னிலங்கையில் பௌத்த பாடசாலைகளையும் உருவாக்கும் முயற்சிகள் மேலோங்கின. சித்திலெப்பை முஸ்லீம்களுக்கான பாடசாலைகளை உருவாக்க முற்பட்டார். கிழக்கில் விபுலாநந்த அடிகளும் இந்துப் பிள்ளைகளுக்கான பாடசாலைகளைத் தொடங்கினார்.

இவ்வாறு இந்து சமயத்தவர் உட்பட பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் 19ஆம் நூற்றாண்டு தொடக்கம் கல்விப் பணிகளில் ஈடுபட்டு, கல்வி இயக்கமொன்றைத் தொடங்குவதற்குப் பல காரணங்கள் இருந்தன:

1. உள்ளூர் சமயப் பிள்ளைகள் தமது சொந்த சமயங்களை விடுத்து அந்நிய மிஷனரிமாரின் சமயப் பாடசாலைகளில் கல்வி பயில நேர்ந்தது. இப்பிள்ளைகள் பெறும் கல்வி எத்தகையது ஆயினும் அக்கல்வியை அவர்கள் தமது சொந்த சமயச் சூழலில் பெறுவதே சிறந்தது என சுதேச சமயத் தலைவர்கள் வலியுறுத்தினர். 10 - 12 ஆண்டுகள் வரை ஆங்கில வழியிலும் பிற மதச் சூழலிலும் கல்வி பெறும் பிள்ளைகள் தமது சமயப் பண்பாட்டிலிருந்து அந்நியமயப் படுத்தப்படும் அபாயத்தையும் உள்ளூர் சமயத் தலைவர்கள் உணர்ந்திருந்தனர்.

2. வெளிநாட்டு சமயக் குழுவினர் ஏராளமான நிதிவளங்கள், கல்வி நிர்வாக அனுபவம் என்பவற்றோடு, அதிகளவிலான ஆங்கில அரசாங்கத்தின் ஆதரவுடனும் பாடசாலைகளை ஏற்படுத்தி, அவற்றை உள்ளூர் சமயத்தவரை மதம் மாற்றும் கருவியாகப் பயன்படுத்தினர். இப்பாடசாலைகளில் கிறித்தவ சமயத்தை உள்ளூர் மாணவர்களுக்கு - பிற சமயத்தவருக்குக் கற்பிப்பதில் எதுவிதமான நேரடியான தடையும் கொண்டுவரப்படவில்லை. இதனை முற்றாகத் தடை செய்யக்கூடிய சட்ட ஏற்பாடு (Conscience clause) பிற்காலத்திலேயே - ஆங்கிலேயர் ஆட்சி முடிவடையும் காலத்திலேயே கொண்டு வரப்பட்டது. உள்ளூர் சமயத்தவர்களும் அவர்கள் உருவாக்கிய உள்ளூர் சமய, கல்வி இயக்கங்களும் இத்தகைய மத போதனையைப் பெரிதும் விரும்பவில்லை.

3. 1831 ஆம் ஆண்டிற்குரிய பாடசாலை பற்றிய தரவுகளின்படி நாட்டில் சமயக் குழுவினருடைய பாடசாலைகளுடன் ஒப்பிடக்கூடிய ஒரு பாடசாலையை யாவது உள்ளூர் சமயத்தவர்கள் நிறுவியிருக்கவில்லை. (பார்க்க 1831க்குரிய பாடசாலைகள் பற்றிய அட்டவணை)

4. 19ம் நூற்றாண்டில் ஆங்கில அரசாங்கம் உதவி நன்கொடை முறையைத் (Grant-in-aid system) தொடங்கி, தனது நிபந்தனைகளுக்கேற்ப அமைந்த சமயக் குழுப் பாடசாலைகளுக்குப் பரீட்சைப் பெறுபேறு / மாணவர் வரவு என்பவற்றின் அடிப்படையில் நிதி உதவி வழங்கத் தொடங்கியது. இவ்வாறான அரசாங்க உதவி மாணவர்களின் கல்விக்கு மட்டுமன்றி, மதமாற்ற நோக்கங்களுக்கும் பயன்படுத்தப்பட்டதாக உள்ளூர் சமயப் பிரிவினர் குற்றஞ்சாட்டினர்.

1868ஆம் ஆண்டில் பொதுப் போதனைத் திணைக்களம் (Dept. of Public Instruction) அமைக்கப்படு முன்னர் - அதாவது,

கல்விக்குப் பொறுப்பாக ஒரு அரசாங்கத் திணைக்களம் அமைக்கப்படுமுன்னர், நாட்டின் கல்வி முறைக்குப் பொறுப்பாக இருந்த பாடசாலை ஆணைக்குழுவில் கிறித்தவ சமய குருமார்களும் அரசாங்கத்தில் முழுநேரம் பணிபுரிந்த அரச அதிகாரிகளுமே உறுப்பினர்களாக இருந்தனர். உள்ளூர் சமயப் பிரிவினர்களுக்கு அச்சபையில் எதுவித பிரதிநிதித்துவமும் வழங்கப்படவில்லை. பாடசாலை சென்ற பெரும்பாலான மாணவர்கள் உள்ளூர் சமயங்களைச் சேர்ந்தவர்கள். இவர்களுடைய கல்வி வளர்ச்சியை இத்தகைய பாடசாலைச் சபை முறையாக நிர்வாகம் செய்ய முடியாது என்று உள்ளூர் சமயத் தலைவர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

## பௌத்த, இந்து, இஸ்லாமியக் கல்வியின் எழுச்சி

இப்பின்புலத்தில் சமயக் குழுவினரின் கல்விப் பணிகளுக்கு எதிராக எழுந்ததே உள்ளூர் சமயத்தவர்களின் இயக்கம் உள்ளூர் சமயங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது சமயச் சூழலிலேயே கல்வி பெற வேண்டும். அதுவே ஆரோக்கியமான வளர்ச்சிக்கும் நன்கு உதவும். உள்ளூர்சமயப் பாடசாலைகளில் பயிலும் மாணவர்கள் தமது சமய தத்துவங்களைப் புரிந்து கொள்ளவும் தமது சமயஅறிவையும் ஒழுக்க சீலங்களையும் புரிந்து கொள்ளவும் வாய்ப்புக்கள் கிட்டும் என்று உள்ளூர்சமயக் குழுவினர் வாதாடினர்.

பாடசாலைகளைத் தொடங்க விரும்பிய பௌத்த, இந்து, இஸ்லாமிய இயக்கங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து மானியங்கள் எதுவும் கிட்டவில்லை. ஆரம்பத்தில் இந்துப் பாடசாலையொன்றைத் தொடங்க விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அனுமதியும் கிட்டவில்லை. முதலாவது பௌத்த பாடசாலை 1869 இல் தொடங்கப்பட்டது. கேணல் ஒல்கொட், அநகாரிக தர்மபால ஆகியோர் இணைந்து கொழும்பு, கண்டி, காலி ஆகிய இடங்களில் ஆங்கிலப் பாடசாலைகளைத் தொடங்கினர். வடக்கே ஆறுமுக நாவலரின் தலைமையில் படிப்படியாகப் பாடசாலை இயக்கமொன்று தொடங்கியது. அவர் ஆங்கிலப் பாடசாலைகளோடு தமிழ்ப் பாடசாலைகளையும் தொடங்கினார்.

பௌத்த பாடசாலைகளும் இந்துப் பாடசாலைகளும் படிப்படியாக அரசாங்க உதவி நன்கொடை முறையில் சேர்ந்து கொண்டன. ஆயினும் அவை மிஷனரிமாரின் பாடசாலைகள் பெற்ற உதவிகளுக்கு இணையான உதவிகளைப் பெற்றுக் கொள்ளவில்லை. 1890 இல் ஒரேயொரு பௌத்த பாடசாலையே உதவி நன்கொடையைப் பெற்றது. 1900 இல் இத்தொகை 10 ஆக உயர்ந்தது. ஆனால் 1900 ஆம் ஆண்டளவில் ஒரு இந்துப் பாடசாலை கூட இத்தகைய உதவி நன்கொடையைப் பெறவில்லை. கொள்கை அடிப்படையில் உள்ளூர் சமயப் பாடசாலைகளுக்கு உதவி பெறுவதில் சம வாய்ப்புகள் இருந்தாலும் நடைமுறையில் உள்ளூர் சமய இயக்கங்களின் கல்விச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்தும் சில நிபந்தனைகளும் இருந்தன.

1925 ஆம் ஆண்டளவில் நாட்டிலிருந்த பாடசாலைகளில் 8.2 % இந்துப் பாடசாலைகளாக இருந்தன. (கிறித்தவ பாடசாலைகள் 72.6 %, பௌத்த பாடசாலைகள் 18.5%, முஸ்லிம் பாடசாலைகள் 0.8%)

கிறித்தவ சமயக் குழுவினர் தமது பாடசாலைகளில் வழங்கிய ஆங்கிலக் கல்வி அக்காலத்தில் வாழ்க்கைப் பயனுடையதாகவும் உயர்கல்வித் துறையில் வாய்ப்புக்களை வழங்குவதாகவும் இருந்தது.

அரசாங்கத்தின் கருமங்கள் ஆங்கில மொழியிலேயே நடைபெற்றதன் காரணமாக அம்மொழியில் படித்தவர்களுக்கே அரசாங்க வேலை வாய்ப்புகளும் கிடைத்தன. இதனால் சமூக, பொருளாதார நோக்கினைக் குறிக்கோளாகக் கொண்ட பெற்றோர்கள் தமது பிள்ளைகளை ஆங்கிலக் கல்வியை வழங்கிய சமயக் குழுப் பாடசாலைகளுக்கு அனுப்புவதில் தயக்கம் காட்டவில்லை. இவ்வாறு நாட்டில் ஆங்கிலக் கல்வி பெற்றிருந்த முக்கியத்துவம் காரணமாக, பௌத்த, இந்து கல்வி இயக்கத்தினர் பௌத்த, இந்து சமயச் சூழலுடன் கூடிய ஆங்கிலப் பாடசாலைகளையே பிரதானமாக அமைத்தனர்.

வெவ்வேறு காலங்களில் அமைக்கப்பட்டாலும் யாழ்ப்பாணத்தில் நிறுவப்பட்ட யாழ். இந்துக் கல்லூரி, தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி என்பன இவ்வகையைச் சேர்ந்தவை. பௌத்தர்கள் தென்னிலங்கையில் ஆனந்தாக் கல்லூரி, நாலந்தாக் கல்லூரி (கொழும்பு), தர்மராஜக் கல்லூரி (கண்டி), தர்மதூதக் கல்லூரி (பதுளை) போன்ற புகழ்பெற்ற ஆங்கிலப் பாடசாலைகளையே நிறுவினர்.

இதன் தொடர்ச்சியாகக் கொழும்பு மாவட்டத்தில் கொழும்பு இந்துக் கல்லூரி, வெள்ளவத்தை இந்து மகளிர் கல்லூரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, கொட்டாஞ்சேனை விவேகானந்த மகா வித்தியாலயம் என்பன அமைக்கப்பட்டன. தேசிய அரசின் பயிற்றுமொழிக் கொள்கையின் காரணமாக இப்பாடசாலைகள் அனைத்தும் தற்போது தமிழ்மொழியை பயிற்று மொழியாகக் கொண்டு இயங்கத் தொடங்கின.

## கொழும்பு மாவட்டத்தில் இந்துக்களின் கல்வி

தற்போது கொழும்பில் வசிக்கும் 250 000 இந்துக்கள் தமது பிள்ளைகளைப் பின்வரும் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர்.

**1. அரசாங்க பாடசாலைகள்**

கொழும்பு மாவட்டத்தில் உள்ள 76 தமிழ் மொழி மூலப் பாடசாலைகளில் பல 1961க்கு முன்னர் மிஷனரிப் பாடசாலைகளாக இருந்தவை. 1961 இல் அரசால் பொறுப்பேற்கப்பட்ட இப்பாடசாலைகள் - முக்கியமாகப் பல பெரிய பாடசாலைகள் ஒரு வரையறுக்கப்பட்ட முறையில் இந்து மாணவர்களை அனுமதித்து வருகின்றன. சமயச் சார்பற்ற சில பெரிய அரசாங்கப் பாடசாலைகள் பௌத்த, இந்து, இஸ்லாமிய மாணவர்களை அனுமதித்து சிங்களம், தமிழ் ஆகிய மொழிகளில் கல்வி வழங்கி வருகின்றன. றோயல் கல்லூரி, டி. எஸ். சேனநாயக்கா, இசிப்பித்தான என்பன இதற்கான முக்கிய உதாரணங்களாகும். நாட்டில் உள்ள ஒரு சில இரு மொழிப் பாடசாலைகளில் இவை பிரதானமானவையாகும். இவ் அரசாங்கப் பாடசாலைகள் பிரபல்யமான தேசியப் பாடசாலைகள் என்பதால் பழைய மாணவர்கள், குறிப்பிட்ட தூரத்தில் வசித்தல் போன்ற அளவுகோல்கள் கடுமையாக பின்பற்றப்படுவதால் அனுமதியை நாடும் சகல இந்துப் பிள்ளைகளுக்கும் அனுமதி கிடைப்பதில்லை.

இப்பாடசாலைகள் ஏராளமான வளங்களை உடையனவாதலாலும் பிரபல்யம் பெற்றவை என்பதாலும் மூவின மாணவர்கள் அங்கு பயில்வதாலும் சமய, இன ஒற்றுமைக்கு கருதி இந்து மாணவர்கள் சமய பாடம் கற்கவும் தமது

சமயம் சார்ந்த சங்கங்களை ஏற்படுத்தவும் விழாக்களைக் கொண்டாடவும் கூடியதாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்து மாணவர்களுக்கென ஏற்படுத்தப்பட்ட கொழும்பு இந்துக் கல்லூரி, இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி, இரத்மலானை இந்துக் கல்லூரி, விவேகானந்தக் கல்லூரி என்பன கொழும்பு மாவட்டத்தில் இந்துக்களுக்கான பிரதான பாடசாலைகளாக விளங்கி வருகின்றன. இவை பெரும்பாலும் 1 AB பாடசாலைகளாகவும் மத்திய அரசால் நிர்வகிக்கப்படும் தேசிய பாடசாலைகளாகவும் விளங்குகின்றன.

இப்பிரதான அரசாங்கப் பாடசாலைகளை விட மட்டக்குளி, தெமட்டகொடை, பாமன்கடை, தெஹிவல, ராஜகிரிய, கொட்டாஞ்சேனை போன்ற இடங்களில் வசதி குறைந்த இந்துக்களுக்கான பாடசாலைகள் இந்துப் பிள்ளைகளுக்குக் கல்வி வாய்ப்புகளை வழங்குகின்றன. இப்பாடசாலைகள் எதிர்நோக்கும் நிதி வளப் பிரச்சினை, பௌதிக வளப் பிரச்சினை, ஆசிரியர் பற்றாக்குறைப் பிரச்சினை என்பன தனியாக நோக்கத்தக்கன. இப்பகுதிகளில் வாழும் பொருளாதார, சமூக ரீதியாகப் பின் தங்கிய குடும்பங்களைச் சார்ந்தவர்கள்; மேலும் பிரதான இந்துப் பாடசாலைகளில் இருந்து உரிய தூரத்துக்கு அப்பால் இவர்கள் வாழ்வதால், பிரதான பாடசாலைகளில் அனுமதி பெற்றுக்கொள்ள இயலாத நிலைமையும் காணப்படுகின்றது. கொழும்பு மாவட்டத்தில் காணப்படும் 43 பாடசாலைகளில் இவையே பெரும்பான்மையானவை. கொழும்பு மாவட்டத்தில் உள்ள 43 அரசாங்கத் தமிழ் வழிப் பாடசாலைகளில் 38 கலவன் பாடசாலைகள்; 2 ஆண்களுக்கான பாடசாலைகள்; 3 பெண்களுக்கான பாடசாலைகள். இவற்றில் முஸ்லிம் பாடசாலைகளும் அடங்கும். இவற்றில் 6 பாடசாலைகள் பெருந்தோட்டப் பாடசாலைகளாகும். கொழும்பு மாவட்டத்தில் அவிசாவளைப் பகுதியில் உள்ள பாடசாலைகளை இவை குறிக்கும்.

கொழும்பு மாவட்டத்தில் க.பொ.த. உயர்நிலை விஞ்ஞானப் பிரிவைக் கொண்ட 1 AB தமிழ்வழிப் பாடசாலைகள் 4; கலை, வர்த்தகவியல் கற்கை நெறிகளைக் கொண்ட 1 C பாடசாலைகள் 5; க.பொ.த.(சா.த) வரை கல்வி வழங்கும் பாடசாலைகள் 19; 7, 8 ஆம் தரம் வரை கல்வி வழங்கும் பாடசாலைகள் 05. இதன் முக்கியத்துவம் யாதெனில் கொழும்பு மாவட்டத்தில் எல்லா வகுப்புக்களையும் (1 - 13) எல்லா க.பொ.த. (உ/த) கற்கை நெறிகளையும் (கலை, வர்த்தகவியல், விஞ்ஞானம்) கொண்ட தமிழ்ப் பாடசாலைகள் 4 மட்டுமே என்பது குறிப்பிடத்தக்கது. ஆரம்பக் கல்வியை வழங்கும் பாடசாலைகள் பரந்து காணப் பட்டாலும் உயர்நிலைக் கல்வி வாய்ப்புகள் இவ்வாறு, சுருக்கமாக, தலைநகர்ப் பிரதேசத்தில் மட்டும் காணப்படுவது நோக்கத்தக்கது.

**2. தனியார் பாடசாலைகள்**

வெள்ளவத்தையில் காணப்படும் இந்துக்களுக்கான ஒரு மகளிர் கல்லூரி தவிர்ந்த ஏனைய பிற சமயத் தனியார் பாடசாலைகளும் இந்துக்களால் பெரிதும் நாடப்படுவன. அரசாங்க பாடசாலைகளின் குறைந்த வினைத்திறன், அவை பற்றிய நம்பிக்கையீனம், பிரபல்யமான அரசாங்கப் பாடசாலைகளில் அனுமதி பெறுவதில் உள்ள சிரமங்கள், அவற்றில் ஒழுக்காற்றல் அம்சமும் பயிற்சியும் குறைவு என்ற எண்ணம், சமூக அந்தஸ்து முதலிய காரணங்களுக்காக வசதியுள்ள இந்துக் குடும்பங்கள் தனியார் பாடசாலைகளை

நாடுகின்றனர். இப்பாடசாலைகள் தமது சமயம் சாராத வர்களுக்கு அனுமதி வழங்குவதில் பல கட்டுப்பாடுகளை வைத்துள்ளன. அத்துடன் இப் பாடசாலைகளில் உள்ள அனுமதித் தொகை வரையறைகளும் இந்துக் களுக்கு வாய்ப்பை வழங்குவதில் தடை யாக உள்ளன.

தனியார் பாடசாலையாக இயங்கும் ஒரேயொரு இந்து மகளிர் பாடசாலை களும் தன்னை விரும்பி நாடி வரும் சகல இந்துப் பிள்ளைகளையும் சேர்த்துக் கொள்ளும் நிலையில் இல்லை. அதனை நாடுவோரின் தொகை, வெற்றிடங்களை விடப் பல மடங்காக உள்ளதாக அறிய முடிகின்றது.

மொத்தத்தில், கொழும்பில் வாழ்கின்ற உயர் மத்திய, மத்திய வகுப்பு இந்துக்கள் இந்துச் சூழலில் தமது பிள்ளைகளைக் கற்கச் செய்ய விரும்பினாலும் அவர் களுடைய சகல பிள்ளைகளையும் அனுமதிக்கும் அளவுக்கு அங்கு வெற்றிடங்கள் இல்லை. இப் பின்புலத் தில்தான் வத்தளை வாழ் தமிழ் மக்களுக் கான பாடசாலையொன்று அமைக்கப் படல் வேண்டும் என்ற கோரிக்கை வலுப் பெற்றுள்ளது.

**3. சர்வதேச பாடசாலைகள்**

இப்பாடசாலைகள் இலங்கையில் வாழுகின்ற வெளிநாட்டவரின் பிள்ளை களுக்கு ஆங்கிலமொழிவழியில் கல்வி வழங்கத் தொடங்கப்பட்டவை. **சர்வதேசம்** என்பது வெளிநாட்டுப் பிள்ளைகளையே கருதியது. இப் பாடசாலை கொழும்பை மையமாகக் கொண்டே இயங்கி வந்தன.

1980 களில் திறந்த பொருளாதாரக் கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டு தனியார் துறைப் பொருளாதார, சமூக வளர்ச்சிக்கான முக்கிய காரணியாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர், கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சர்வதேசப் பாடசாலைகள் இயங்கத் தொடங்கின. பிரித்தானிய பாட ஏற்பாட் டுடன் ஆங்கில மொழியில் இங்கிலாந்து நாட்டுப் பரீட்சைகளுக்கு மாணவர்களை ஆயத்தம் செய்த இப்பாடசாலைகள் உள்ளூர் மாணவர்களுக்கும் அனுமதி வழங்கத் தொடங்கின.

உள்ளூரிலிருந்த பிரபல அரச பாடசாலை களிலும் தனியார் பாடசாலைகளிலும் அனுமதி பெறுவதில் இருந்த தடைகள், ஆங்கில மொழிக் கல்வியில் பெற்றோ ருக்கு இருந்த ஆர்வம், சர்வதேசப் பாடசாலை வழங்கிய சமூக அந்தஸ்து, வெளிநாடுகளில் ஆங்கில மொழியில் உயர்கல்வி பெறக் கிடைத்த வாய்ப்புகள் காரணமாக வசதி மிக்க இந்துக்களில் பலர் சர்வதேசப் பாடசாலைகளை நாடினர். இவற்றில் உயர் மட்டத்தி லிருந்த சர்வதேசப் பாடசாலைகள் உள்ளூர் மொழி, சமயப் பண்பாட்டுடன் தொடர்பற்ற மேலைநாட்டுப் பாணியி லான கல்வி நிலையங்களாக அமைந் தன. இங்கு பயிலும் இந்து மாணவர்கள் தமது இந்து சமய அறிவு, சமயப் பண்பாடு, பழக்க வழக்கங்கள் என்பவற் றுக்குத் தாம் பயிலும் சர்வதேச பாடசாலைகளில் தங்கியிருக்க முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது. இப் பாட சாலையில் பயிலும் இந்து மாணவர் கள் பெறுகின்ற பண்பாட்டு மயமாக்கம், சமூக இயல்பின்னாகும் முறை வழி (socialization process) பற்றியும் அவர்களின் தொகை பற்றியும் தரவுகள் சேகரிக்கப் பட வேண்டியதொன்று.

## இந்து மக்களும் இந்து மாணவர்களும் எதிர்நோக்கும் பிரச்சினைகள்

1. *ஆரம்பக் கல்வி நிலையில் மாணவர் அனுமதியைப் பொறுத்தவரையில் இவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினை பிரதானமாகும். சிறந்த கல்வியை நாடும் இந்துப் பெற்றோர்கள் முதலில் பிரபல்யமான உயர்மட்ட இந்துக் கல்லூரிகளையே நாடுகின்றனர். ஆனால், ஏற்கனவே கூறியது போல மூன்று இரு மொழிப் பாடசாலை களிலும் இந்துக்கள் விரும்பியவாறு அனுமதி பெற முடியாதுள்ளது. றோயல், இசிப்பித்தான, டி. எஸ். சேனநாயக்கா போன்ற பாடசாலைகள் இறுக்கமான அனுமதிப் பிரமாணங்களைக் கொண் டவை; அத்துடன் ஒரு வகுப்புக்கு ஒரு பிரிவு மட்டுமே இருப்பதால் இயல்பா கவே அப்பாடசாலைகளில் இந்துக்களின் அனுமதி கட்டுப்படுத்தப்படுகின்றது. இதேபோன்று கத்தோலிக்க மற்றும் கிறித்தவ தனியார் பாடசாலைகள் தமது சமயத்தவருக்கு முன்னுரிமை வழங்கு வதால் இந்துக்கள் பெரிய அளவில் இப்பாடசாலைகளில் தங்கி இருக்க முடியாத நிலை உண்டு.*

*இந்துக்களுக்குரிய மூன்று பிரதான (1AB) மாநகரப் பாடசாலைகளில் காணப்படும் இடவசதிகளுக்கு மிதமிஞ்சிய முறை யில் அனுமதி விண்ணப்பங்கள் கிடைக் கின்றன. ஆண்களுக்குரிய ஒரு பிரதான பாடசாலையில் அனுமதியை நாடுவோர் தொகை 700 என்றால் இறுதியில் 160 பேருக்கு மட்டுமே அனுமதி கிடைத் திருக்கின்றது. மற்றொரு பிரதான கலவன் பாடசாலையிலும் இதே நிலை காணப்படுகின்றது. 1 C வகைப் பாடசாலைகள் இரண்டிலும் கூட இதே நிலை காணப்படுவதாகவே தரவுகள் தெரிவிக்கின்றன.*

*2 ஆம் வகைப் பாடசாலைகள் வளங்கள் குறைந்தனவாகவும் பிரபல்யம் அற்றும் காணப்படுவதன் காரணமாக அப் பாடசாலைகளை நாடும் மாணவர் குறைவாகக் காணப்படுவது அப் பாடசாலைகளைப் பொறுத்தவரையில் ஒரு முக்கிய பிரச்சினையாகும். கிடைத்துள்ள தரவுகளின்படி இந்துப் பிள்ளைகள் பெரும்பான்மையாகப் பயிலும் புறநகர்ப் பாடசாலைகளுக்கு (பாமன்கடை, தெஹிவலை, நுகே கொடை, ராஜகிரிய) வரும் அனுமதி விண்ணப்பங்கள் குறைவு. இப்பகுதி யில் வாழ்ந்து வந்த இந்துக்கள் கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் நிலவி வந்துள்ள சமாதான நிலைமைகள் காரணமாக வடகிழக்கில் உள்ள தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்பத் தொடங்கியுள்ளமையும் அனுமதி பெறும் மாணவர் தொகை குறைவடைய ஒரு முக்கிய காரணமாகும். இத்தகைய ஒரு பாடசாலையில் மொத்த மாணவர் தொகை 600 இலிருந்து தற்போது 350 ஆகக் குறைந்துள்ளது.*

*வளங்கள் குறைந்த இப்பாடசாலை களுக்கு அனுமதி பெறுபவர்களும் பின்னர் பிரபல்யமான பாடசாலைகளில் அனுமதி கிடைத்தபின் இப் பாடசாலை களைக் கைவிட்டுச் செல்கின்றனர்.*

*புறநகர்ப் பகுதியில் உள்ள இத்தகைய 2ம் வகைப் பாடசாலைகள் மாணவர் அனுமதி தொடர்பான இப்பிரச்சினை யைத் தொடர்ந்து எதிர்நோக்கினால் இப்பாடசாலைகள் மூடப்படும் நிலை தோன்றலாம் என பாடசாலை அதிபர்கள் கருத்துத் தெரிவிக்கின்றனர்.*

*இப்பாடசாலைகளை மேம்படுத்த மேற் கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை கள் பற்றி அவர்கள் கூறுவதாவது:*

i. இப்பாடசாலைகளின் வளங்கள் அதிகரிக்கப்பட்டு கவர்ச்சிகரமாக்கப் படுதல் வேண்டும்.

ii. பிரபல்யமான பாடசாலைகள் தமது அனுமதித் தொகையினைத் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டு செல்லக்கூடாது.

இப்பிரச்சினையைத் தொகுத்து நோக்கு மிடத்து ஒருபுறம் பிரபல்யமான பாடசாலைகள் தேவைக்கேற்றவாறு இந்து மாணவர்களை அனுமதிக்க முடியாத நிலை மறுபுறம் புறநகர்ப் பகுதியில் உள்ள இரண்டாம் வகைப் பாடசாலைகள் போதிய அளவு இந்து மாணவர்களைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை.

2. பிரபல்யமான இந்துப் பாடசாலைகள் வளப்பற்றாக்குறை பற்றி அதிக முறைப் பாடுகள் செய்யாதவிடத்து புற நகர்ப் பாடசாலைகள் பல அதிகார தரப்பின ரால் அதிகம் கவனிக்கப்படுவதில்லை என்ற முறைப்பாடு உண்டு. 1995 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கோட்டமட்ட பாடசாலை அபிவிருத்திச் செயற் திட்டத்தின்கீழ் கொழும்பு மாவட்டத் தில் உள்ள பின்தங்கிய இந்துப் பாடசாலைகள் எதுவும் ஆரம்பத்தில் தெரிவு செய்யப்படவில்லை. இச்செயற் திட்டத்தின் கீழ் வரும் பாடசாலைகளில் எதுவித ஆசிரியர் பற்றாக்குறையும் இருக்க முடியாது. ஆசிரியர்களை நினைத்த மாத்திரத்தில் இடமாற்றம் செய்ய முடியாது. வளங்கள் போதியளவு வழங்கப்படல் வேண்டும். ஆசிரியர் களுக்கு விசேட பயிற்சியும் வழங்கப் படல் வேண்டும். ஒரு கோட்டத்துக்கு ஒரு பாடசாலை என்ற முறையில் பாட சாலைகள் இத்திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும். இத் திட்டத்தின் கீழ் அண்மையில் பல சிரமங்களுக்கு இடையில் ஒரு இந்துப் பாடசாலை தெரிவு செய்யப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

இந்துக்கள் செறிவாக வசிக்காத புறநகர்ப் பாடசாலைகளை அரசியலாளர்கள் கருத்தூன்றிக் கவனிப்பதில்லை என்றும் இப்பாடசாலைகள் சரியாக மேற் பார்வை செய்யப்படுவதில்லை என்றும் இப்பாடசாலை அதிபர்களுக்காக அதிகாரிகளால் நடாத்தப்படும் கூட்டங் களில் தமிழ்மொழிக்கு இடந்தரப்படுவ தில்லை என்றும் பல முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன. மேலதிகாரி களின் மேற்பார்வை, வழிகாட்டல் என்பன இன்றி அதிபர்களின் சுய முயற்சி யினால் மட்டுமே இப்பாடசாலைகள் முன்னேற்றம் காண வேண்டியுள்ளது, இப்பாடசாலைகள் பெரும்பாலும் பொருளாதாரத்தில் பின்தங்கிய வகுப் பினரின் பிள்ளைகளுக்கே கல்வி வாய்ப்பினை வழங்குகின்றன. பெரும் பாலும் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் கல்வி அறிவிலும் குறைந்தவர்கள் என்பதால் அவர்களு டைய பங்களிப்பினையும் உதவிகளை யும் பாடசாலைகள் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகின்றது. சில பாடசாலைகளுக்கு இந்து மன்றங்களும் தனிப்பட்ட இந்து வள்ளல்களும் உதவி புரிவதாக சில அதிபர்கள் தெரிவித்தனர். இந்து மன்றங்களின் இணைந்த அமைப்பானது இப்பாடசாலைகளில் மேலதிக கவனத்தைச் செலுத்துதல் இன்றியமையாதது.

3. புறநகர்ப் பாடசாலைகளில் பயிலும் வறுமையான இந்து மாணவர்கள் பல சந்தர்ப்பங்களில் மத மாற்றத்துக்கு உள்ளாகின்றனர் என்றும் அதற்கான பொருளாதார ஊக்குவிப்புகள் வழங்கப்

படுவதாகவும் முறைப்பாடுகள் கிட்டுகின்றன. மறுபுறம் மாணவர்கள் இந்துக்கள் என்ற உணர்வுடன் செயற்படுவதும் குறைவு என்றும், ஊக்கமுள்ள இந்து ஆசிரியர்கள் இருந்தால் மட்டுமே இந்து சமய விழாக்கள் மற்றும் அனுட்டானங்கள் பின்பற்றப்படுவதாகவும் தரவுகள் தெரிவிக்கின்றன.

4. சமயக் கல்வியைப் பொறுத்தவரையில் பல சந்தர்ப்பங்களில் சமய பாடம் கற்பிக்கும் பயிற்சியற்ற மற்ற பாட ஆசிரியர்கள் சைவ சமய பாடத்தைக் கற்பிப்பதாகத் தரவுகள் கூறுகின்றன. வெளி மாவட்டங்களில் பிற சமய ஆசிரியர்களும் சைவ சமய பாடத்தைக் கற்பிப்பதாகக் கூறப்படுகின்றது. இத்தகைய குறைபாடுகளில் இந்து சமய மன்றங்கள் கூடிய அக்கறை செலுத்த வேண்டியுள்ளது.

**குறிப்பு:** இக்கட்டுரை ஒரு பூர்வாங்க ஆய்வுக் குறிப்பாகும். இங்கு சுட்டப்பட்டுள்ள பிரச்சினைகள் மேலும் விரிவாக ஆராயப்படவேண்டியவை.

இக்கட்டுரைக்கான ஆலோசனையைத் தந்து, தகவல்களையும் திரட்ட உதவிய கலாநிதி மா. கருணாநிதி அவர்களுக்கும் இந்துப் பாடசாலை அதிபர்கள் பலருக்கும் எமது நன்றிகள்.

இக்கட்டுரையின் அமைப்பு மற்றும் ஆரம்ப நிலைத் தரவுகள் என்பவற்றுக்கு விரிவான முறையில் உறுதுணையாக இருந்த பேராசிரியர் கா. சிவத்தம்பி அவர்களுக்கு எமது உளமார்ந்த நன்றிகள்.

- ***கட்டுரையாசிரியர்***

# கொழும்பில் தமிழர் அல்லாத சமூகத்தவர்களின் இந்து சமயப் பணிகள்

நா. சோமகாந்தன்

**ப**ல்லினங்களைச் சேர்ந்தவர்களையும் வேறுபட்ட சமயங்களைப் பின்பற்றும் மக்களையும் கொண்ட பெருநகராக கொழும்பு திகழ்கின்றது. பௌத்தம், இந்து, இஸ்லாம், கிறிஸ்தவம் ஆகிய மதங்களைப் பேணுபவர்கள் பெரும் எண்ணிக்கையில் வசிப்பதனால், அம்மதங்களைச் சேர்ந்தவர் களுக்குரிய வணக்கத் தலங்கள் பல அமைந்துள்ளன.

தமிழைத் தாய் மொழியாகக் கொண்ட நாட்டுக்கோட்டைச் செட்டிமார்கள், தென்னிந்தியா திருநெல்வேலியைச் சேர்ந்த சைவ வேளாளப் பிள்ளைமார்கள், மற்றும் யாழ்ப்பாணத்தார்கள் ஒரு நூற்றாண்டுக்கு முன்னரே கொழும்பில்பல பெரும் இந்துக் கோவில்களை ஸ்தாபித்து, இவ்வாலயங் களில் வேதாகம முறைப்படி நித்திய நைமித்திய பூஜைகளையும் மகோற்சவங் களையும் சிறப்பாக நடத்தி வருகின்றனர்.

இவர்களைத்தவிர, தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்களான மலையாள சமூகத்தினர், குஜராத்தி சமூகத் தினர், சிந்தி சமூகத்தினர் ஆகியோரும் இந்து சமயத்தை தத்தமது பாரம்பரிய விதிமுறைப் படி கடைப்பிடித்து, இந்து சமய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

## மலையாள சமூகம்

கேரளத்தைச் சேர்ந்த மலையாளி களுக்கும் இலங்கைக்குமிடையே பல நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்தே தொடர்பு உண்டு. கேரளம் முன்னர் சேர நாடென விளங்கியது. அதன் அரசனாக விளங்கிய சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்கு கோவில் அமைத்த விழாவில் இலங்கை யிலிருந்து அக்கால சிங்கள அரசனாகிய கஜபாகு (114-136 கி.பி.) கலந்து கொண்டு, பத்தினி (கண்ணகி) வழிபாட்டையும்

இங்கு கொண்டுவந்தான். தன்னுடன் நூற்றுக்கணக்கான கேரள விவசாயிகளையும் சதுப்பு நிலங்களில் நெல் பயிரிடும் முறையை வளர்ப்பதற்காக கூட்டிவந்தான் என்று சொல்லப்படுகிறது. பிற்காலத்தில் இலங்கையிலிருந்து சிங்கள ராஜதானிகளை ஆளுகை புரிந்த அரசர்களிடையே மோதல்கள் ஏற்பட்ட காலங்களிலும், அந்நிய நாட்டுப் படை யெடுப்புக்கு எதிராகப் போரிடவும் கேரளத்தைச் சேர்ந்தவர்கள் படைகளில் பணியாற்ற அழைக்கப் பட்டனர்.

முதலாம் பராக்கிரமபாகு (1153 - 1186) காலத்தில் திருவாங்கூரிலிருந்து செல்வாக்கு மிக்க வர்த்தக சமூகத்தினர் வருகை தந்து தமது பணச்செல்வாக்கு, அரசியல் அறிவு நுட்பம் முதலியவற்றால் அதிகாரம் மிக்கவர்களாக விளங்கினர் என்று கூறப் படுகிறது. கம்பளையிலிருந்து அரசு புரிந்த ராஜகுடும்பத்தில் திருமண பந்தத்தை ஏற்படுத்திக்கொள்ளும் அளவுக்கு அவர்கள் ஆற்றலுள்ளவர்களாக விளங்கினர்.

காலப்போக்கில் படைகளிற் பணியாற்ற வந்தவர்கள் கேரளீய அடையாளத்தை இழந்து இங்குள்ள மக்களுடன் சங்கமித்து விட்டனர். படையினராக, கைவினைஞர்களாக, தொழிலாளர்களாகக் கோட்டை இராஜதானிக் காலத்தில் வந்தவர்களிற் பலர் வர்த்தகத்திலும் மற்றும் தொழில்துறைகளிலும் சிறந்து விளங்கினர். இந்நிலைமை போர்த்துக்கேய, ஒல்லாந்தராட்சியிலும் நிலவியது.

பிரித்தானியர் காலத்தில் 19ம் நூற்றாண்டின் கடைக்கூறிலும் சென்ற நூற்றாண்டின் ஆரம்பக் கூறிலும் திருவாங்கூர், கொச்சின் போன்ற இடங்களிலிருந்து இங்குவந்து குடியேறியவர்கள் வர்த்தகம், கைத்தொழில் அபிவிருத்தித் துறையில் திறமையைக் காட்டினர். பெரும்பாலானவர்கள் நகரப் பகுதிகளில் எழுதுவினைஞர்களாகவும், ஆங்கில ஆசிரியர்களாகவும், கணக்காளர்களாகவும், மருத்துவர்களாகவும் பணிகளில் அமர்ந்தனர். ஒரு சாரார் உணவுச்சாலைகளை நடத்துவதிலும் ஈடுபட்டனர். தொழிலனுபவமற்றவர்கள், புடவை, நெசவாலைகள், புகையிரத திணைக்களம் என்பவற்றில் ஊழியர்களாகவும் கிராமப் புறங்களில் கள் இறக்குபவர்களாகவும் தொழில்களில் அமர்ந்தனர். இலங்கையில் தொழிற்சங்க இயக்கம் வலுப்பெறுவதற்கு முன்னின்றுழைத்த பெருமை மலையாளிகளுக்குரியது.

இலங்கை சுதந்திரமடைந்தபின் நிலவிய அரசியல் சூழ்நிலைகளால், மலையாளிகளில்பலர் தமது தாயகத்துக்குத் திரும்பிவிட நேர்ந்தது. எனினும் இவர்களில் ஒரு பகுதியினர் இங்கு உள்ளூர் மக்களுடன் திருமண பந்தங்கொண்டிருந்தமையால், இங்கேயே தங்கிவிட்டனர். இவர்களில் ஒரு சிறு தொகையினர் வர்த்தகம், கைத்தொழில் துறைகளில் சிறந்து விளங்குகின்றனர்.

ஒன்றே குலம், ஒருவனே தேவன், சமயமும் ஒன்றே. அதனால் சாதியைப் பற்றி நினைக்கவோ, பேசவோ, கேட்கவோ கூடாது என்பது இந்து சீர்திருத்த ஞானியாக விளங்கிய ஸ்ரீ நாராயணகுரு அவர்களின் பொன்மொழி. திருவிழாங்கூரில் அவதரித்த இந்த ஞானி 1918இல் தமது முதலாவது இலங்கை விஜயத்தை மேற்கொண்டபோது மேற்படி உண்மையை மலையாளிகளிடம் பரப்பினார். இக்கோட்பாட்டை முன்னெடுத்துச் செல்ல இலங்கை ஸ்ரீ விக்னோதய யோகம் என்ற அமைப்பை நிறுவினார். அவரின் முதலாவது வருகையின் போது ஸ்ரீநாராயணகுரு வழிபாட்டு நிலையமும் திறந்து வைக்கப்பெற்றது. 1926ல் மீண்டும் வருகைபுரிந்து இந்து சமய உண்மைக் கோட்பாட்டை மலையாள

சமூகத்தில் சிறப்பாகப் பரப்புவதில் ஈடுபட்டார். கொழும்பு 14, லேயாட்ஸ் புரோட்வேயில் உள்ள ஸ்ரீநாராயண குரு நிலையம், 1935ல் வழிபாட்டு நிலையத்துடன் இணைந்த ஞாபகார்த்த மண்டபமாக நிர்மாணிக்கப்பெற்றதுடன், ஸ்ரீநாராயண குரு சபை என்ற பெயரில் ஒரு நிறுவனமும் ஏற்படுத்தப்பெற்றது. ஸ்ரீநாராயணகுரு அவர்களின் ஜன்மதின விழா 1918ல் இருந்து ஆண்டுதோறும் கொண்டாடப்பட்டு வருகின்றது. இம்மண்டபத்தில் கலாசார நிகழ்வுகளும் அடிக்கடி நடைபெறுகின்றன. இச்சபை உத்வேகமாக இயங்குவதிலும், இம்மண்டபத்தை அமைப்பதிலும் முன்னின்றுழைத்தவர் தொழிலதிபர் திரு. கே.கே. மாதவன். இவர் சிறந்த பரோபகாரி, கொம்பனித்தெருவில், நேஷனல் கல்லூரி, கண்டியில் மகாத்மா காந்தி கல்லூரி ஆகிய இரு கல்வி நிறுவனங்களின் கட்டடப் பணிகளுக்கு பேருதவி புரிந்த பெருமகன். அனுராதபுரம், பொலநறுவை மாவட்டங்களில் விவசாயத்துக்கான குளங்களில் ஏற்பட்ட அணை வெடிப்புகளைத் திருத்த பெருந்தொகைப் பணத்தை வழங்கியவர்.

பாரம்பரிய முறைப்படி தம் வழிபாட்டு முறைகளை வளர்க்கவும், தமது கலாசாரத்தை வளர்க்கவுமென கே.சி.ஆர். வைத்தியா என்பவரைத் தலைவராகக் கொண்டு 1932ல் நிறுவப்பெற்ற இலங்கை மலையாளிகள் மகாஜன சபை என்ற அமைப்பு காலப்போக்கில் இயங்காமையால் 1952இல் கேரளா சமாஜம் என்ற அமைப்பு திரு. T. P. கேசவன் என்பவரால் தோற்றுவிக்கப்பட்டது. இதன் மகளிர் பிரிவாக 1956ல் கேரள வனிதா சமாஜமும் ஏற்படுத்தப்பெற்றது. மலையாள கலாசாரத்தையும், இசை மற்றும் கலைகளையும் வளர்ப்பதும் பெண்களை சமாஜத்தின் முக்கிய பணிகளில் ஈடுபடுத்துவதுமே சமாஜத்தின் பிரதான நோக்கங்களாக இருந்தன. இலங்கையில் கர்நாடக சங்கீதம், நடனம், நாட்டியம் போன்ற இந்துக் கலைகளில் மலையாள சமூகத்தைச் சேர்ந்த குடும்பங்களின் இன்றைய வாரிசுகள் தலநகரில் முன்னணியில் திகழ்கின்றனர்.

திருச்சூர் பூரம் பண்டிகையை நினைவூட்டும் வகையில், ஸ்ரீநாராயண குருவின் ஜன்ம தினத்தில் நாராயண குரு சபை வருடந்தோறும் ஆன்மீக ஊர்வலத்தை பலகலை நிகழ்ச்சிகளுடன் ஏற்பாடு செய்து நடத்தி வந்தது. இப்போது சில வருடங்களாக ஊர்வலமின்றி, ஞாபகார்த்தக் கூட்டம் நடைபெற்று வருகிறது. மலையாளி சமூகத்தினர் இந்தியாவில் இந்துக்களால் கொண்டாடப்படும் ஓணம் பண்டிகையை தமது இல்லங்களிலும், குழுமமாக ஒன்று கூடியும் சிறப்பாகக் கொண்டாடி வருகின்றனர். இக்கொண்டாட்டத்தில் கேரளத்தில் ஆடப்படும் பாரம்பரிய நடனம் தவறாமல் இடம்பெறும்.

எண்ணிக்கையில் மலையாள சமூகத்தினர் குறைவாக இருந்தாலும் தமது கேரள இந்து பாரம்பரியத்தைப் பேணிவருவதன் மூலமும் இந்துக் கலைகளை வளர்ப்பதன் மூலமும் கணிசமான பங்களிப்பை கொழும்பில் செய்து வருவதைப் பாராட்ட வேண்டும்.

## குஜராத்தி சமூகம்

19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலே வர்த்தக வாய்ப்புகளைத் தேடி, பம்பாய், குஜராத் பகுதிகளிலிருந்து இலங்கைக்கு போரா சமூகத்தினர் வந்த காலத்திலேயே குஜராத்தி இந்து சமூகத்தினரும் இங்கு வந்து சேர்ந்தனர். போரா சமூகத்தினரின் வர்த்தக நிறுவனங்களில் நிர்வாகிகளாக, கணக்காளர்களாக, குஜராத் மொழியில் பதிவேடுகளை எழுதும் பணிகளில் இவர்கள் அமர்த்தப்பட்டனர். 19ம் நூற்றாண்டின் பிற்கூறிலேயே

இவர்களிற் சிலர் சொந்த வர்த்தக நிறுவனங் களை நிறுவி இலங்கையின் ஏற்றுமதி இறக்குமதி வியாபாரத்துறை களில் பிரதான இடத்தை வகிக்கத் துவங்கினர். இப்பொழுது இச்சமூகத்தினர்களில் குறிப் பிடக்கூடிய தொழிலதிபர்களாக உற்பத்தி யாளர்களாக, சந்தைப்படுத்துபவர்களாக, அமாலியான், அம்பானி, மோடி, உதேஷி, பாட் போன்ற குடும்பங்களின் வாரிசுகள் விளங்குகின்றனர்.

தமது சமூகத்தினால் பாரம்பரியமாகக் கடைப்பிடிக்கப்படும் இந்து கலாசார நடை முறைகளைப் பேணுவதில், மிக்க நாட்ட முள்ளவர்களாகவும், தர்மப் பணிகளுக்கு தாராளமாக உதவுபவர்களாகவும் இவர்கள் விளங்குகின்றனர்.

1940ல் குஜராத்தி இந்து மண்டல என்ற ஆன்மீக அமைப்பை கொட்டாஞ்சேனை யில் இவர்கள் அமைத்தனர். சி.பி. மோடி அவர்களின் முன்முயற்சியால் 1958ல் இரு மாடி நிரந்தரக் கட்டடம் இவ்வமைப்புக் கென அமைக்கப்பெற்றுள்ளது. கமலா மோடி மண்டபம் எனப் பொது மக்களால் அழைக்கப்படும் கி.பி. மோடி கலாகேந்திர மண்டபத்தின் மேல் மாடியில் அழகிய ராதா-கிருஷ்ணர் ஆலயம் இடம் பெற்றுள்ளது. இங்கு ஞாயிற்றுக்கிழமை களில் கூட்டு வழிபாடு சிறப்பாக நடைபெற்று வருகிறது. இதில் குஜராத்தியர் அல்லாத பலரும் கலந்துகொள்கின்றனர். இராதாகிருஷ்ணர் அமர்ந்துள்ள பீடம் அழகிய மண்டப வடிவில், அலங்கரிக்கப் பட்டுள்ளது. இவ்வாலயத்தின் பூஜை வழிபாடுகளை உள்ளூர் அர்ச்சகரே நிகழ்த்தி வருகின்றார். மேல்மாடிக்குச் செல்லும் படிகள் தோறும் குழந்தைக் கிருஷ்ணரின் பாதத்தின் பதிவுகள் பதிக்கப்பெற்றுள்ளன. குஜராத்திகளின் இந்துக் கலாசாரத்தையும் கலைகளையும் வளர்ப்பதற்காக இம் மண்டபம் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் குஜராத் மொழியையும் கலாசாரத்தையும் போதிப்பதற்கென வதிவிட ஆசிரியர் ஒருவர் பணியாற்றினார். கீழ் மண்டபத்தில் மேடையுடன் கூடிய கேட்போர் கூடம் நூலகம் முதலியவை அமைந்துள்ளன. உபநயனம், திருமணம், கீதைச் சொற்பொழிவுகள், சாயி பஜனை களுக்கென சலுகை அடிப்படையில் இம் மண்டபம் பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டு வருகின்றது. நவராத்திரி காலத்தில் இம் மண்டபத்தில் குஜராத்தி குடும்பங்கள் ஒன்று கூடி, இரவு முழுவதும் குஜராத்தி இந்துக்களின் ஆடல் பாடல்களை நிகழ்த்தி தம் கலாசாரப் பெருமையை வெளிப்படுத்தி மகிழ்வர்.

அலுமினியப்பொருட்கள், பிளாஸ்டிக் பொருட்களின் உற்பத்தி, உதிரிப் பாகங் களை இறக்குமதி செய்து, வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளைத் தயாரித்து விற்பனை செய்தல், தெங்குப்பொருள் ஏற்றுமதி, தொடர்பாடல் கருவிகளின் விற்பனை முதலிய வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டு வெற்றிகரமான தொழிலதிபர் களாகத் திகழும் இச்சமூகத்தவர்கள் எண்ணிக்கையில் சில நூறுபேர்களாக இருந்தாலும் சமய உணர்வும், தொண்டு உள்ளமும், ஆன்மீகப் பணிகளுக்கு தாராள மாக உதவுகின்ற மனப்பான்மையும் கொண்டவர்களாகத் திகழ்கின்றனர்.

கமலாமோடி மண்டபத்தின் தர்மகர்த்தா வாகவும், பிரபல தொழிலதிபருமாகத் திகழ்ந்த காலஞ்சென்ற கீர்த்தி மோடி அவர்கள் ராமகிருஷ்ண மிஷன், சின்மய மிஷன் போன்ற ஆன்மீக அமைப்புகளில் முக்கிய பதவிகளை வகித்ததுடன், இவற்றிற்கு தாராளமாக நிதியுதவியும் புரிந்துள்ளார். தமது சமூகத்தைச் சேர்ந்தவர்களை இவ்வமைப்புகளுக்கும்,

ரம்பொடை ஆஞ்சநேயர் ஆலயக் கட்டடப் பணிகளுக்கும் உதவுவதற்குத் தூண்டு கோலாக விளங்கியவர் கீர்த்தி மோடி அவர்கள்.

## சிந்தி சமூகம்

கடல் வழிப் பிரயாணம் ஏற்பட்ட காலத்திலிருந்தே, இந்து சமயத்தைச் சேர்ந்த வணிக சமூகத்தினரான சிந்திகள், உலகின் துறைமுக நகரங்களில் கடைகளை ஆரம்பித்து உல்லாசப் பயணிகள் கொள் வனவு செய்யக்கூடிய கலைப் பொருட்கள், துணிவகைகள் என்பவற்றை விற்பனை செய்வதிலும் உடனேயே அழகாக தைத்துக் கொடுக்கும் தையல் தொழிலிலும் ஈடு பட்டனர். பிரித்தானிய ஏகாதிபத்தியம் தலைதூக்கியிருந்த காலத்தில், சர்வதேச மட்டத்தில் இச் சமூகத்தினரே முன்னணி வர்த்தகர்களாக விளங்கினர்.

இந்திய-பாகிஸ்தான் பிரிவினைக்குப் பின் இவர்களின் பூர்வீக இடமான சிந்து மாகாணம் பாகிஸ்தானுக்குள் அடங்கிய தால், இவர்களில் பெருந்தொகையான வர்கள் பம்பாயிலுள்ள தமது உறவினர்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றனர்.

வியாபார முயற்சியில் ஈடுபடும் நோக்குடன் 19ம் நூற்றாண்டின் பிற்பகுதி யில் இலங்கைக்கு வந்த முதலாவது சிந்தி சமூகத்தவர் தொப்பன் சிங் முத்துமால் என்பவரே என அறியப்படுகின்றது. ஆரம்பத்தில் இவரின் புடவைக்கடை கோட்டை சதாம் வீதியில் தொடங்கப் பெற்றது. அவரைத் தொடர்ந்து ராம்சம்மி சகோதரர்களின் ஸ்தாபனம் கொழும்புத் துறைமுகத்துக்கு அருகிலுள்ள பிரிஸ்டல் கட்டடத்தில் நிறுவப் பெற்றிருந்தது. மேலும் துறைமுகத்தில் தரித்து நின்ற கப்பல் களுக்கு தமது விற்பனைப் பொருட்களை எடுத்துச் சென்று உல்லாசப் பயணிகளிடம் விற்பனை செய்யுமளவுக்கு செல்வாக்கு உடையதாகவும் அந்நிறுவனம் விளங்கி யிருந்தது. இவர்களைத் தொடர்ந்து 1900 ஆம் ஆண்டில் ஹஸராம் முத்துமால், சிருமால் தொப்பன்தாஸ், பி. சந்திரம், ஷம்தாஸ், லால்சா ந்த், பரமானந்த், ஜீவத்ராம், உத்தமசந்த் ஹைதராமணி, பூல்சந்த், பார்ஸ்ராம், பேசுமால் ஆகிய வர்கள் இலங்கைக்கு வந்த முன்னோடிச் சிந்தி சமூகத்தவர்களாவர். இந்தியாவிலி ருந்து வர்த்தகம் புரிவதற்காக இலங்கைக்கு வந்த நாட்டுக்கோட்டை செட்டிமார், குஜராத்தியர், மேமன் மற்றும் போரா சமூகத்தவரைப் போலன்றி, இவர்கள் துறைமுகத்தை அண்மிய கோட்டை, சதாம் வீதி, பிறிஸ்டல் கட்டடம் ஆகிய இடங் களிலேயே தமது வியாபார நிலையங்களை அமைத்துக்கொண்டனர்.

சென்ற சில தசாப்தங்களாக உலகின் ஏனைய நகர்களில் வர்த்தகத்தில் ஈடுபட்டி ருக்கும் சிந்தி சமூகத்தவர்களைப் போல, இலங்கை சிந்தி சமூகத்தினரும் வர்த்தகத் தொழிலிருந்து விடுபட்டு, பெரிய வணிக முயற்சிகளான ஆடைத் தொழிற் சாலைகள், மின்னணுப் பொருள் உற்பத்திச் சாலைகள், உல்லாசப் பயணிகளுக்கான ஹோட்டல்கள் போன்றவற்றில் ஈடுபட்டு வருவது அவர் களின் தொழிலார்வத்தையும் வளர்ச்சியை யும் வெளிப்படுத்துகின்றது.

இலங்கையில் இன்று இச்சமூகத்தின் மூன்றாவது தலைமுறையினராக விளங்கும் மக்களின் எண்ணிக்கை சுமார் 1000 பேர் களே.

சிந்தி சமூகத்தவர் தமது பாரம்பரிய இந்து வழிபாட்டு முறையையும் கலாசாரத்தையும் இறுக்கமாகக் கடைப்பிடிப்பவர்கள். இவர்கள் தமது வழிபாட்டிற்கென சிந்தி வர்த்தகர் சங்கத்தின் அனுசரணையுடன் 1952இல் சிந்தி கலாசார நிலையத்தை

கொள்ளுப்பிட்டியில் அமைத்துள்ளனர். இந்நிலையத்தின் மேல் மாடியில் உள்ள வழிபாட்டு நிலையத்தில் இந்து விக்கிரகங் களுக்கும், சிந்தி சமூகத்தவரின் பெருங் குருவான குரு கிராந்த சரஹிப் அவர்களின் பிரதிமைக்கும் அபிஷேகம் நிகழ்த்தி அலங்கரித்து தினமும் பூஜை களைப் புரிவதற்கும் மற்றும் விசேட சமய நிகழ்ச்சிகளைச் செய்வதற்கும் ஜெய்பூரைச் சேர்ந்த பண்டிட் ஜெய்தேவ்சர்மா வதிவிட அர்ச்சகராகப் பணிபுரிந்து வருகிறார். இவ்வாலயத்தின் சுவர்களில் சாயிபாபா வின் திருவுருவமும் சிந்தி சமூகத்தின் குரவர் ஞானிகளின் திருவுருவப் படங்களும் அமைக்கப்பட்டுள்ளதால் வழிபாட்டு நிலையம் பக்தி மணம் பரப்புகின்றது. இங்கு முக்கிய நாட்களில் சிந்தி சமூகத் தவர்கள் ஒன்றுகூடி பஜனை, ஹனுமன் சாலிச பாராயணம் முதலியவற்றை நிகழ்த்தி வருகின்றனர். இங்கு நடைபெறும் சாயி பஜனை வெகு பிரசித்தமானது. இந் நிலையத்தின் வளவில் 1965ஆம் அண்டு மே 5 முதல் 7ந் திகதிவரை நடைபெற்ற பஞ்ச மகாயக்ஞும் சிந்தி சமூகத்தவரிடம் மட்டு மல்ல, கொழும்பு வாழ் இந்துக்கள் மத்தி யிலும் ஆன்மீகப் பேரெழுச்சியை ஏற்படுத் தியது.

ஹைதரபாத் நகரில் 1949ஆம் ஆண்டு சுவாமி ராமதாஸ், பாபா புரந்தாஸ் தபஸ்விஜி மற்றும் பல மகான்கள் பங்கு பற்ற பல்லாயிரக்கணக்கான மக்கள் பக்தி பூர்வமாக கலந்துகொண்ட பஞ்ச மகா யக்ஞத்தின் ஞாபகார்த்தமாக இப் பஞ்சமகா யக்ஞம் 1965இல் இலங்கை சிந்தி சமூகத்தி னரால் கொள்ளுப்பிட்டி நிலையத்தில், ஐந்து யக்ஞ குண்டங்கள் அமைத்து பல குருமார்களினால் வெகு பக்திபூர்வமாக நிகழ்த்தப்பெற்றது. இந்த யக்ஞத்தின் மற்றொரு சிறப்பம்சம், இதில் ஹிமாலயத் தில் தவமியற்றிக் கொண்டிருந்த 142 வயதான இந்து முனிவர் பூஜ்ய பாபா புரந்தாஸ் தபஸ்விஜி வரவழைக்கப்பெற்று, அவரால் நிரந்தரமாகப் பேணப்பெற்று வந்த தீயிலிருந்து ஹோமகுண்டத்துக்கான தீ ஏற்றி வைக்கப்பெற்றமையாகும். அம் மகா முனிவரை இந்துக்கள் பலர் தரிசித்து ஆசி பெறுவதற்கு வசதியாக தொடர்ந்து எட்டு மாசங்கள் கொழும்பில் அவரை ஹைதரா மணி இல்லத்தில் தங்கியிருக்க ஏற்பாடு களையும் செய்திருந்தனர்.

சிந்தி சமூகத்தினர் ஆன்மிக உணர்வு மிக்கவர்கள் என்பதனால், எமது நாட்டில் பல தர்மப் பணிகளுக்கும் உதவி வருகின் றனர். இவர்களிற் சிலர் வேறு சில இந்து ஆன்மீக அமைப்புகளிலும் இணைந்து அவற்றின் வளர்ச்சிகளுக்கு உறுதுணையாக இருந்து வருகின்றனர். சுவாமி சாந்தானந்தா ஜியை குருவாகக் கொண்ட கொழும்பி லுள்ள சிவா குடும்பம் (Colombo Shiva Family) என்னும் ஆன்மீக அமைப்பின் வளர்ச்சியில் அர்ஜுன் ஹதிராமணியும் அவரின் சகோதரர் லால் ஹதிரா மணியும் மிகவும் ஈடுபாடுகாட்டி உதவிகளும் புரிந்து வருகின்றனர். திரு. முனிகுண்டன்மால் இலங்கை சின்மய மிஷனின் தலைவராகப் பல காலம் பணியாற்றி அதனை வளர்ச்சிப் பாதையில் வழிநடத்தியவர். உலகச் சின்மய மிஷனின் ஸ்தாபகரான குருதேவர் சுவாமி சின்மயானந்தா அவர்களின் இலங்கை வருகைகளின் போதெல்லாம் அவரை தமது இல்லத்தில் தங்க வைத்து தேவையான வசதிகளை அவருக்குப் புரிந்தார்கள் ஷப்னானி குடும்பத்தவர்கள். சின்மய மிஷனைச் சேர்ந்த பல சுவாமிகளின் கீதையக்ஞங்களைச் சிறப்புற நடத்துவதில் முன்னின்று ஒத்துழைப்பையும் உதவிகளை யும் புரிந்து வருவதில் ஜீவாத்திராம் குடும்பத்தினருக்குப் பெரும் பங்களிப்பு உண்டு. ரம்பொடை அனுமன் ஆலய அமைப்புப் பணிகளில் சிந்தி சமூகத்தவர்

பலரின் ஈடுபாடும் அவர்களின் தாராள நிதி உதவிகளும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியவை.

கொழும்பில் தமிழர்கள் எழுப்பிய கோவில்கள் இந்து சமய வளர்ச்சியை வெளிப்படுத்தி நிற்கின்றபோதிலும், தமிழர் அல்லாத இந்து சமூகங்கள் எண்ணிக்கையில் சிறியவையாக இருந்தாலும், பல நெருக்கடி களின் மத்தியிலும் தத்தமது பாரம்பரிய வணக்க முறைகளைப் பேணி, தமது இந்து அடையாளத்தைப் பாதுகாத்து வளர்த்து வருவது இந்து சமயத்துக்கு வலுவும் பெருமையும் சேர்ப்பதாக உள்ளது.

*உசாத்துணை :* The Indo Lankans - Their 200 year Saqa by S. Muthiah *என்னும் நூலின் பக்கம் 151, 154 அத்துடன் 160ல் காணப்படும் சிறு குறிப்புகள்.*

# கொழும்பு நகர வாழ்க்கையில் இந்துப் பெண்கள்

## - கொழும்பின் மத்தியதர வர்க்க இடைநிலை இந்துக் குடும்பங்களிலுள்ள பெண்கள் பற்றிய அவதானிப்பு

**பத்மா சோமகாந்தன்**

**கொ**ழும்பு பல்வேறு இன மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கும் இடமாக இலங்குகின்றது. இங்கு பல்லாண்டுகளுக்கு முன் சனத் தொகையில் சரிபாதியாக இருந்த தமிழர்கள் பல்வேறு காரணிகளினால் படிப்படியாகத் தொகையில் குறைந்தே காணப்படுகின் றனர். தமிழ் மக்களில் பெரும்பாலானோர் இந்துக்களேயாயினும், தமிழின மக்கள் அல்லாத பிற இனத்தவரான, சிந்தி, குஜராத்தி, மேமன் சமூகத்தைச் சேர்ந்தவர் களும் இந்துக்களாகவே வாழ்கின்றனர். நீண்டகாலமாகக் கொழும்பில் வாழ்ந்து வரும் இந்துக்களில் ஒரு பகுதியினர் தென்னிந்தியாவிலிருந்து வியாபார நோக்கமாகச் சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கு வந்து குடியேறிய பல சமூகங்களின் தலைமுறையினராவர். ஏனைய தமிழர்கள் அரச, தனியார், உத்தியோகங்கள் காரணமாக இலங்கையின் ஏனைய தமிழ்ப் பிரதேசங்களிலிருந்தும் யாழ்ப்பாணத்திலிருந்தும் கொழும்பில் வந்து குடியேறியவர்களாவர். இவர்கள் இரு பகுதியாரும் கொழும்பில் இந்து ஆலயங் களை அமைத்து அவற்றின் மூலமும் வீடுகளில் கொண்டாடும் தீபாவளி, வருடப்பிறப்பு , நவராத்திரி விரதங்கள் போன்ற இந்துப் பண்டிகைகள் மூலமும் இந்துப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணி வளர்ப்பதற்குக் காரணஸ்தர்களாக விளங்கினர்.

இக்குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பல்வேறு கலாசாரங்கள் கொழும்பில் நிலவிய போதிலும் இந்து கலாசாரத்தை இறுக்கமாகக்கடைப்பிடிக்கத்தவறவில்லை. தவறாமல் வெள்ளி, செவ்வாய், விரத தினங்கள் மற்றும் விசேட தினங்களி லெல்லாம் ஆலயங்களுக்குச் சென்று முறைப்படி இறைவனை வழிபட்டு இந்து சமயத்தோடு ஒன்றியே வாழ்ந்தனர்.

ஆண்களை விடப் பெண்களே விரத, விசேட தினங்களை ஞாபகமாக மனத்திலித்தி வழிபாட்டு நெறிமுறைகளைத் தாம் பின்பற்றுவதுடன் தம் குடும்பத்தினரும் கணவன், பெற்றோர், பிள்ளைகளும் அவ்வழியில் ஒழுகத் தூண்டுகோலாக விளங்குகின்றனரெனில் மிகையன்று. எவ்வளவு சிறிய வீடாக இருந்தாலும் வசதியற்ற சூழல் நிலவினாலும்கூட வீட்டில் பிரதானமாக வழிபாட்டிற்கென ஒரு இடம் அமைத்து சுவாமி படங்களை அங்கே வைத்துக் குத்துவிளக்கேற்றி வழிபாடு செய்து வருகின்றனர். வசதியுள்ளவர்களின் வீடுகளில் விக்கிரகங்களைக் கொண்ட பூஜை அறைகள் உண்டு.

ஆண்கள் சுறுசுறுப்பாகத் தம் தொழில் முயற்சிகளில் ஈடுபடுவதனால் வீடுகளில் முக்கியமான இந்துப் பண்டிகைகள், புதிதாக விருந்துண்ண வருவோர், சிவனடி யார்களை வீட்டிற்கு வரவேற்று உபசரித்தல், ஏழைகளுக்கு ஈதல், பண்டிகைகளைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்கள், ஏற்பாடுகளைச் செய்வதிலெல்லாம் பெண்களே பெரும் பங்கு வகிக்கின்றனர். இந்து முறைப்படி தான தருமங்களைச் செய்வதிலும் முன்னின்று உழைக்கின்றனர்.

இன்னும், பிரசித்தி பெற்ற கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயம், மயூரபதி அம்மன் ஆலயம் போன்ற ஆலயங்களில் பெண்களே கூடிப் பக்திபூர்வ மாகத் தேர்வடம் பிடித்து இழுத்துப் பக்திப் பரவசத்தோடு வீதி வலம் வரச் செய்கின் றனர்.

ஆலயங்களில் திருவிளக்குப் பூஜை, கற்பூரச்சட்டி எடுத்தல், தேசிக்காய் மற்றும் நெய் விளக்கேற்றல், பாற்குடங்கள் பவனியாக எடுத்துச் சென்று அபிஷேகத் திற்கு உதவுதல் போன்ற ஆலயத்தின் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்குகொண்டு தமது பக்தியை வளர்த்துக் கொள்கின்றனர்.

பிள்ளைகளுடைய கல்வி முன்னேற்றம், தொழில் தேடல், வெளிநாட்டுப் பயணம், திருமணத் தேவைகள், குழந்தைப்பேறு, நோய் நொடிகள் போன்ற மனிதனின் பல்வேறு வாழ்வு நிலைகளுக்கும் இறையருள் வேண்டி, தம் குல தெய்வங் களுக்கும் அருள் பொலியும் ஆலயங்களுக் கும் பக்திபூர்வமாக நேர்த்திகள் வைப்பதும், அவற்றை மறவாது பக்தியுடன் நிறை வேற்றுவதிலும் பெண்கள் பெரிதும் ஆர்வம் மிக்கவராகவே உள்ளனர்.

விரதமனுஷ்டித்தல், தவறாது ஆலய வழிபாடு செய்தல், சிவனடியார்களைப் போஷித்தல், சமயத் தொண்டுகளில் ஈடுபடல் எனப் பல்வேறு கடமைகளிலும் தம்மை இணைத்துக் கொண்டிருக்கும் கொழும்பு வாழ் இந்துப் பெண்கள் பல்வேறு வகையான இந்து அமைப்பு களையும் நிறுவி, அவற்றோடு சேர்ந்து 'அன்பே சிவம்' என்றபடி அன்பு காட்டிச் சேவையாற்றுகின்றனர். வெள்ளவத்தை விவேகானந்தா வீதியிலுள்ள அன்னை ஸ்ரீ சாரதா தேவியாரின் நினைவாக எழுந்துள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷனைச் சேர்ந்த சாரதா சமிதி பஜனை, பூஜை, இந்து சமய விசேட தின வழிபாடுகளை அனுட்டிப்பதோடு இந்துப் பெண்களுக்காக முதியோர் இல்லம் ஒன்றையும் விசேட கவனம் செலுத்த வேண்டிய - பெற்றோர்களை இழந்த அநாதைப் பெண் குழந்தைகள் சுமார் 35 பேருக்கு கல்வி, உணவு, உடை, உறையுள் கொடுத்துப் பராமரித்து சேவை செய்து வருகின்றது.

இவ்வாறு கொள்ளுப்பிட்டி பகந்தல வீதியில் உள்ள கொழும்பு மகளிர் இந்து மன்றமும் 'விசாலாம்பாள் அன்பு இல்லம்' என்ற பெயரில் முதிய இந்துப் பெண்களுக் கான பராமரிப்பு இல்லமொன்றை அமைத்து, அதிலுள்ளோர் இந்து சமயச் சூழலில் இந்து கலாசார நடைமுறைகளைக் கைக்கொள்ளவும் கூடிய வகையில்

ஆசாரமாகவும் இறை வழிபாடு தேவார, திருவாசகங்கள் ஓதுதல், குருபூசைகள் செய்தல் சைவ மரக்கறி உணவு வகை என ஏற்பாடு செய்து நடாத்துகின்றது.

இவற்றைத் தவிர கொழும்பு வாழ் இந்துப் பெண்கள் சிவா குடும்பம், முத்துக் கிருஷ்ண மிஷன், ஸ்ரீ ராதாகிருஷ்ண இல்லம், சாயி பாபா அமைப்புகள், சின்மய மிஷன், ஆதிபராசக்தி மன்றம், யோகர் சுவாமிகள் மன்றம் என்ற இந்து சமய நிறுவனங்களோடு இணைந்து பக்திபூர்வ மாக யோகம், தியானம், பஜனை என்பவற் றோடு சமய, விசேட தினங்களுக்கான பிரசாதங்களைத் தயாரித்துப் பூசைக்கான பூக்கள் மாலைகள் அலங்காரங்கள் செய்தல் போன்ற தொண்டுகளை ஆற்றியும் சமய நிலைப்பாட்டிற்கான தொண்டுகளைகளில் தம்மை இறுக்கமாக்கிக் கொள்கின்றனர்.

இத்தகைய அமைப்புக்களில் இணைந் துள்ள பெண்களில் சிறப்பாக சிவா குடும்பத்தினரைக் குறிப்பிடலாம். திரு உருவங்களுக்கு அபிஷேகம் செய்து பூசை களையும் தாமே செய்வதிலும், விதவித மாகப் பிரசாதங்கள் செய்து இறைவனுக்கு நைவேத்தியம் பண்ணுவதிலும், பக்தி பூர்வமாக மந்திரங்களைத் தாமே கூடி யிருந்து உச்சாடனஞ் செய்வதும் வழிபாடு களை இயற்றுவதோடு இளம் தலைமுறை யினரும் இத்தகைய இறை வழிபாடு களிலும் சமய அனுஷ்டானங்களிலும் நம்பிக்கையுடன் ஈடுபடும் வகையில் முன்னோடியாகத் திகழ்கின்றனர்.

நவராத்திரி காலங்களில் தமது இல்லங் களில் பொம்மைகளை அடுக்கிக் கொலு வைத்தல், கோலம் போடுதல், மாலை கட்டுதல், அர்ச்சனைகளைத் தாமே செய்தல் போன்ற காரியங்களில் பிள்ளைகளை வழிநடத்துவோர் அநேகமாகப் பெண்களே யாவர். அத்துடன் ஆலய உற்சவங்களின் போது புலால் உணவு உட்கொள்வோர் அவற்றை அந்த உற்சவ நாட்களில் தவிர்த்து சைவ உணவுகளையே வீட்டில் சமைத்து ஆசாரமாக இருப்பர்.

சந்நிதி முருகன், நயினாதீவு நாகம்மாள், நல்லூர்க் கந்தன், கதிர்காமக் கந்தன் ஆகிய புதுமையும் பிரசித்தியும் பெற்ற ஆலயங் களில் கொடியேற்றத்தைத் தொடர்ந்து திருவிழாக் காலங்களிலெல்லாம் நூற்றுக் கணக்கான மைல் தூரத்திற்கு அப்பால் இருந்தும்கூட, வீட்டில் அத் தெய்வங்களை நெஞ்சார நினைத்து வழிபடுவதிலும், அக்காலங்களில் விரதங்கள் அனுட்டிப்ப திலும் குடும்பங்கள் ஈடுபடுவதற்குப் பெரும்பாலும் பெண்களின் தூண்டுதல்களே காரணமாகும்.

அதிகமான சமயச் சடங்குகள், பிதிர்க் கடன்களான திதி விரத நாட்களான அமாவாசை, பௌர்ணமி மற்றும் பிரதோஷம், வெள்ளி, செவ்வாய் முதலிய விசேட தினங்களில் ஆலயங்கள் சென்று சுவாமி தரிசனம் செய்வதுடன் இல்லந் தோறும் சமயச் சடங்குகளை ஆற்றவும் ஆசாரங்களைப் பேணவும் பெண்களே பெரும் பங்கு வகிக்கின்றனர்.

இந்து மதச் சடங்குகளும் ஆசார அநுட்டிப்புக்களும் ஏனைய நடைமுறை களை விட மிக நுட்பமானவை. இதிகாச புராண சம்பந்தமானவை. இவற்றை வழுவாது கடைப்பிடிப்பதில் ஒவ்வொரு இந்துவும் பெரு மனநிறைவெய்துகின்றான். பயணங்களை மேற்கொள்ளும்போது தேவார திருவாசகங்களை ஓதுதலும், வசதி குறைந்த இடங்களிலும்கூட கைகால் முகம் கழுவித் திருநீறு அணிவதும், திருநீற்றைப் பக்குவமாகப் பயணப் பெட்டிகளில் எடுத்துச் செல்வதும் பயண ஆரம்பத்தின் போது தம் இஷ்ட தெய்வத்தை எண்ணிக் கற்பூரம் ஏற்றிப் பிள்ளையாருக்குச் சிதறு தேங்காய் அடிப்பதும் இன்றும் ஆசாரமான இந்துக் குடும்பங்களால் கைக்கொள்ளப் பட்டுவரும் நடைமுறைகளாகும். இவற்றை

நினைவூட்டி நடைமுறைப்படுத்துவது பெரும்பாலும் பெண்களே.

புரட்டாதிச் சனிக்கிழமைகளில் விரத மிருந்து எள் எண்ணெய்ச் சட்டி எரித்தல், சனீஸ்வரனாகக் கருதி காகத்திற்கு உணவு வைத்த பின்பே தாம் உணவுண்டு விரதத்தை நிறைவு செய்தல் முதலிய வழக்கங்களை தமது ஊர்களில் எனில் ஊரோடு ஒத்தபடி இவற்றைக் கடைப்பிடித்தல் எளிதானது. ஆனால், கொழும்பில் பக்கத்து வீடு முஸ்லிம், மறுபக்கம் பறங்கியர், முன் வீடு சிங்களவர் என்ற சூழ்நிலையில் இறுக்க மான இந்துக்கள் தமது சமயச் சடங்குகள், ஆசாரங்கள் விரத அநுட்டிப்புக்களை எல்லாம் மேற்கொள்வதில் ஏற்படும் சங்கடங்களைப் பொருட்படுத்தாது பெண்கள் வெகுசிரத்தையுடன் இவற்றை முன்னெடுக்கின்றனர். இவற்றைப் பார்த்தே இவர்களுடைய பிள்ளைகளும் அவ்வழி யில் காலடி எடுத்து வைக்க வேண்டுமென் பதில் வெகு அக்கறை கொண்டவர்கள் இந்துப் பெண்கள்.

அநேகமான இந்துக்களுடைய வரவேற்பு அறையில் கூட சிவ சம்பந்தமான திரு உருவங்கள், படங்கள், இந்துக்களுடைய அடையாளங்கள் அதிகமாக இருப்பதை நாம் அவதானிக்கலாம். வீடுகளில் பெண்கள் இந்துவாக வாழும் கரிசனை ஒவ்வொன்றும் பிள்ளைகளுக்கு நல்ல வழிகாட்டியாக அமைந்து விடுகின்றது. உதாரணமாக, அமங்கல நிகழ்ச்சி ஒன்றிற் குச் சென்று வரும் இந்துக் குடும்பப் பெண் வீட்டின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லாது நேரே குளியலறைக்குச் சென்று தலையில் குளித்த பின் வீட்டுள் நுழையும் வழக்கத்தை கடைப்பிடிக்கின்றாள். அதனை அவதானிக் கும் பிள்ளைகளும் பிற் காலத்தில் தாமும் அப்படியே ஒழுகத் தலைப்படுவர்.

இந்துச் சூழலில் பெண்கள் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக வெள்ளவத்தை சைவ மங்கையர் கழகம், கொழும்பு இராம நாதன் கல்லூரி, கொட்டாஞ்சேனை விவேகானந்தா வித்தியாலயம் போன்றவை சிறப்பாக இயங்குகின்றன. இவை இந்துப் பண்பாட்டையும் கலாசாரத்தையும் பேணி வளர்ப்பதில் கண்ணும் கருத்துமாக விளங்கு கின்றன.

இந்து ஆலயங்களினால் நடாத்தப்படும் அறநெறிப் பாடசாலைகளில் சமயக் கல்வி யைப் புகட்டும் ஆசிரியர்களாக அநேகம் இந்துப் பெண்களே பணியாற்றுகின்றனர். பெண்கள் மத்தியில் மட்டுமல்லாமல் பொதுமக்களிடமும் இந்து சமய தத்துவங் களையும், போதனைகளையும் சொற் பொழிவுகள் மூலமாகப் பரப்பும் பணியில் பெண்களும் பெருந் தொண்டாற்றி வருகின் றனர். உதாரணமாக, ஆழ்ந்த புலமையும் சைவப் பற்றும் மிக்க வித்துவான் திருமதி. வசந்தா வைத்தியநாதன் அவர்களைக் குறிப்பிடலாம்.

தீபாவளி, நவராத்திரி காலங்களில் முத்துக்கிருஷ்ண மிஷன் தமிழ் நாட்டைச் சேர்ந்த பல கலாவிற்பன்னர்களை அழைப்பித்து, இந்துக் கலைகளைப் பரப்பி வருகின்றனர். தமது அமைப்பின் மாணவி களைப் பயிற்றுவித்தும் 63 நாயன்மார்களது வரலாறு, இதிகாச புராண தத்துவங்கள், ஆன்மிக எழுச்சிக்கான சம்பவங்கள் ஆகிய வற்றை நாடகங்களாக மேடையேற்றியும் சாஸ்திரோக்தமாகப் பல பூஜைகள், யாகங்கள், வழிபாடுகள் ஆகியவற்றைப் பெண்களே முன்னின்று பக்திப் பரவசத் தோடு செய்தும் இந்து மக்களின் ஆத்மீக சக்திக்கும் அறிவுக்கும் மேன்மேலும் வலுவூட்டுகின்றன.

மாறுபட்ட சூழலிலும் இந்து சமயத்தைச் சார்ந்த பெண்கள் தமது சமய பண்பாடுக் கலாசாரங்களை அடியொற்றி வாழும் முறைமை பெரிதும் கவனத்தில் கொள்ள வேண்டியதே.

# THE VEL FESTIVAL

BY

VISWA WIGNESWARAN

There is a popular belief that Hinduism is a Polytheistic religion. This is incorrect Hindus worship the Deity through many forms, symbols and mediums, for the satisfaction of physical, emotional, intellectual and spiritual desires and aspirations of the individual. The word "individual" means either an aspirant or a community of aspirants or a social group. God—the unknown—is a symbol and once the aspirant merges with the Unknown, the symbol loses its significance.

In Algebra. 'X' denotes the Unknown. Let us assume that X equals five. When one is confronted with the problem, one is not aware that X equals five. 'X' in other words is the symbol for the Unknown. As soon as the problem is solved and one discovers that X equals five, the need to retain 'X' vanishes. Thus, the ancient sages formulated symbols to suit the aspirations of individuals and in due course when the Mysteries of Life were solved, men were expected to discard symbols and merge with the Unknown.

As time lapsed, these Symbols were sanctified by men. Mythology played an important part. Tales of valour, intellectual brilliance, emotional content and spiritual mysticism were built around these symbols. To the conservative Hindu, these mythical symbols have ceased to be the symbols of the Unknown. He is not interested in solving the mystery of 'X'. 'X' is the finality. Not only does he stop with the symbol, but proceeds further and projects his own aspirations, desires and idiosyncrasies on his idol, subjugates himself to the idol and expects in reciprocation his reward. Festivals were celebrated to enable social groups or communities to do the same.

One such festival is Vel. It is a festival planned for a community to partake in the worship of Lord Skanda or Lord Murugan. Murugan is a favourite deity among Hindus, the learned as well as the untutored. He is worshipped as the God of Wisdom by those who seek spiritual enlightenment, as the God of Sacrifice and rituals by the ritualists, as the God of Learning by the Scholars, and as the giver of all blessings—worldly and spiritual, by his devotees.

Murugan would thus appear to be the amalgamation of many legends and traditions and one who embraces many aspects of religion and modes of worship- primitive and advanced. He embodies the Hindu ideal of the Unknown, immanent in all things and manifesting Himself whenever sought by man with love.

The Vel festival is closely connected with the jungle shrine of Kataragama or Kathirgamam, situated, in the extreme south east of Sri Lanka, amidst forests, hillocks, and woodlands. Still preserving something of the primitive quietude of the woody glades, haunted by elephants and wild animals, reptiles and birds. Kataragama conjures to the ordinary people of Sri Lanka a place of deep sanctity and reverence. More than any other shrine in Sri Lanka, it is able to spotlight the impersonal divine existence. There is no particular symbol of worship in the main temple, the Holy of Holies being covered with veils, even though the 'Vel' (or the lance) which is the emblem of Lord Murugan is the most closely identified figure in the minds of Hindus.

It is a belief among Hindus that the miracle of Kataragama manifests itself when they take their whole being as a sacred offering. This is more difficult than the offering of flowers, fruits, music and dance. The primary requisite is an attitude of surrender imposed by each devotee from within himself to the God. This consecration should be effected in the purity of the body, mind, intellect and spirit. Hence the need for a quiet strong and devoted faith. To make it effective, the pilgrim to Kataragama performs hundreds of acts of penance and surrender. One such penance is the carrying of the shoulder poles—Kavadis—with peacock feathers and the lance, which are the insignia of Murugan.

In the early days when Colombo and Kataragama were not linked by roads, the Carrying of the Kavadis from the City and from other parts of the Island to the jungle shrine would have been no easy task. Moreover dreadful diseases like Malaria accounted for many lives. Nevertheless, these acts of penance were performed by the pilgrim with much piety and yet without involvement as a participant. They had learned to let certain concealed regions of their being to support them, and glide into their life's process and thereby performed their penance with consummate ease.

In the early part of the 19th century one group of men and women who undertook the arduous task of carrying the Kavadi on their shoulders and—walking the distance from Colombo to Kataragama was a trading community of Chettiars called the Nattukottai Chetties, who had come from India and set themselves up In business in Sri Lanka. They were a well-knit community with customs and traditions of their own. They were also a very wealthy community who were zealously religious. They had a temple dedicated to Lord Murugan at Sea Street, Colombo. Every year in those days, the Kavadies were taken by the members of this community from the Kathiresan Temple at Sea Street to Kathirgamam. Owing to the difficult terrain they had to traverse, and due to the lack of proper roads and the intervening jungles, it

was decided later that a pilgrimage symbolic of the 'Kathirgama Yathra' should be undertaken in Colombo for the benefit of the ladies, and others in the community who due to old age, disease or other difficulties were unable to undertake the pilgrimage to Kataragama.

Therefore, about 150 years ago, the tradition of bringing Holy Water (Thirtha) from the Menik Ganga during the July festival at Kataragama (commencing on the New Moon day of the month of Esala) and after 'abhisheka' and 'pooja' (religious service) at the Kathirasen Temple at Sea Street, carrying Kavadis to the Murugan Temple at Bambalapitiya, began as a sort of miniature pilgrimage organised by the Nattukottai Chetties.

Originally the Kavadis used to be carried on the shoulders of the members of this community. But In later times a Cart carried the Kavadi with an idol of the Lord Murugan. The first arrangement was the carrying of the Kavadi from the Old Kathirasen Tempi- at Sea Street to the Kathirasen Temple at Bambalapitiya. In time there was a dispute between the traders of other communities and the Nattukottai Chetties; thereby a rival chariot wound its way to the temple at Wellawatte from the Kathiresan Temple at First Cross Street. Again there were disputes within the fold of the Nattukottai Chetties themselves and there was a rival procession from a newly constructed Kathiresan Temple at Sea Street to a new Kathiresan Temple at Wellawatte.

Soon there was reconciliation whereby it was agreed that the cart must go from the two Kathiresan Temples at Sea Street to Bambalapitiya and Wellawatte Temples alternatively each year. The procession starting from the Temple at First Cross Street organised by other traders came to be called the Kavadi procession and its cart was forerunner to the Vel Cart.

The original Kavadi carried by members of the Nattukottai Chetty community in the early days have been hitherto preserved, and could be viewed during the festival days. The Chetty community, being very wealthy. It was to be expected that much wealth was poured into the making of the God's statues. Gold, and precious stones adorn the statues. The carts too are artistically made according to South Indian pattern and are drawn by strong white bullocks, especially reared for this task.

One of the peculiar traditions of the Nattukottai Chetties is that they make Lord Murugan too a business partner, and a part of the profit is allocated for him. There is no Chairman for their board meetings. Lord Murugan is deemed to preside over their meetings. It is no wonder that such zealously religious people should do everything within their means and influence to make the Vel festival a grand, colossal and colourful one. Hence it has now become tradition for the Vel Cart to stop at Queen's House (now President's House) with a view to bless the first citizen of the Island. Thus, the festival has traditional patronage of the rulers of the land.

The Kathirgama Murugan also being the Kataragama Skanda Kumara of the Sinhalese, the festival is looked forward to both by the Hindus and Buddhists, and those who find it difficult to make the journey to Kataragama during the festival days await the Vel Cart en route to have the blessings of the Kataragama God bestowed on them. There is an additional luxury conferred on the Vel devotee. Whereas at Kataragama there is no visible idol, the Holy of Holies being covered with veils as said earlier, at the Vel Festival one could concentrate on the form of the God, and also perform a visible pooja which is performed right along the journey, by the officiating priest.

The festival takes the form of two processions which coincide with the last four peraheras (processions) at Kataragama. The forerunner is the Kavadi procession which leaves the Sri-Kathiresan Temple at First Cross Street, Colombo, bearing the bow shaped Kavadi draped in maroon and gold with peacock plumes at either end and carrying two brass pots of offering to the deity. On the following day the gaily decorated chariot (or Vel Ratham) leaves the Sea Street. Sri Kathiresan Temple, carrying a golden statue of the Kathirgama God with the old Kavadis still preserved, accompanied by men carrying banners and flags. Eminent musicians from far and wide provide an accompaniment of music to the procession. A distance of about four to five miles from the Pettah to their ultimate destination takes more than a day to cover. The Vel Cart stops at a number of traditional spots, including trading establishments, private residences, including 'Temple Trees'- the official residence of the Prime Minister of Sri Lanka - and accepts offerings of love in return for the blessing bestowed on the devotee. Once the Cart reaches its destination at the Temple at Wellawatte or Bambalapitiya, as the case may be, the idols are taken out of the Chariot and kept for public worship. Men, women and children of all communities and of all ages throng to see the procession and the images on view. Business is brisk and one could buy almost anything from the hordes of shopkeepers who pitch their tents overnight along the route and within the temple premises. Sweet-meats of all kinds, and sugar cane catch the eye of the kids while beautiful bangles of all shades of colour are fancied by girls and women alike. Caracoles and Giant Wheels turn the temple premises overnight into a typical carnival ground. Musical entertainments are galore and every now and then the inevitable shouts of "Haro Hara" the manthra used in invoking Lord Murugan, rends the air.

Thus the Vel Festival which was essentially a religious festival depicting the pilgrimage to Kataragama has attracted people from far and wide and consequently all the fun and frolic that go with any festival In India and Sri Lanka from time immemorial have also been accepted as a part and parcel of the festival.

These religious festivals In the East also provide the necessary background for social reunions. It is interesting to note that in the East, and specially In India and Sri Lanka the entire gamut of social and community life is centered around religion. Whereas in the West, a carnival or fair which has no religious significance, would attract people together; In the East, until western culture permeated in recent times, all social gatherings were normally linked with religious events. Even the coronation of a king in the early days was a religious event. Hence It is not surprising that In course of time the Vel Festival has acquired a social significance in addition to its religious meaning and content.

Visva Wigneswaran, Attorney-at-Law, is a Bachelor of Arts (London) and Bachelor of Laws (Ceylon). A Hindu by birth and conviction he has been associated for some time with the movement for religious unity. His time out of the Court room, and away from the reach of clients, is now spent mastering the Sitar and delving deep into the myths and rituals of Hinduism. In this article he explains the colourful pageantry and rituals of the Vel Festival.

கொழும்பில் இந்துப் பாரம்பரியம் பற்றி

# சுவாமி ஆத்மகணானந்தஜீ உடனான நேர்காணல்

## நேர்கண்டவர் : பேராசிரியர் கா. சிவத்தம்பி

கா.சி: இராமகிருஷ்ண மிஷன் கொழும்பிலும் இலங்கை முழுவதிலும் - ஒரு மிக முக்கியமான இந்து மதம் சார்ந்த விடயங்களில், ஒரிடத்தைத் தனக்கென வைத்துக் கொண்டுள்ளது. கொழும்பில் இந்த நிறுவனமும், இந்த நிறுவனம் அளிக்கின்ற வசதிகளும் இந்து மக்கள் ஒருங்கு சேர்வதற்கும், தங்கள் நம்பிக்கைகளை - தங்கள் கருத்துக்களை வளர்த்துக் கொள்வதற்குமான ஒரு இடமாக அண்மைக் காலத்தில் மிக முக்கிய இடமாகப் பரிணமித்துள்ளது.

நாங்கள் இந்த விடயங்களைப் பற்றி சற்று ஆழமாகவே தங்களுடன் பேச விரும்புகின்றோம். முதலில் இந்த நிறுவனத்தினுடைய கொழும்புக் கிளைக்குப் பொறுப்பாக இருக்கின்ற அருளாளர் சுவாமிஜி அவர்களை கொழும்பில் உள்ள இந்துப் பாரம்பரியம் பற்றிய அல்லது இந்து நடைமுறைகள் பற்றிய தங்கள் கருத்தை அறிவதன் மூலம் ஆரம்பிக்கலாம் எனக் கருதுகின்றேன். கொழும்பில் இன்று நீங்கள் அவதானிக்கும் இந்துப் பாரம்பரிய மரபுகள், அவற்றின் முக்கியத்துவம் பற்றிக் கூறுங்கள்.

சுவாமிஜி: தமிழ்நாட்டை விட இலங்கையில் தமிழ் மக்களுடைய சமய ஆர்வம் என்பது கூடுதலாக இருப்பதாகத்தான் நான் மட்டுமல்ல பலர் சொல்கின்றார்கள். கொழும்பில் மட்டுமல்ல இலங்கையில் தமிழ் நாட்டைக் காட்டிலும் இங்கு வாழக்கூடிய மக்கள் சமய அனுஷ்டானங்களைப் பின்பற்றுவதிலும், ஆலயங் களுக்குச் செல்வதிலும், ஆலயத் திருவிழாக்களில் அல்லது விசேஷ நாட்களில்

பங்கு பெறுவதிலும், தமிழ்நாட்டைக் காட்டிலும் கூடுதலாக இலங்கை மக்களின் ஆர்வம் இருக்கின்றது என்பது எனது அபிப்பிராயம்.

**கா.சி:** ***பல இன, மத மக்கள் வாழுகின்ற நாட்டின் தலைநகரான கொழும்பில் வாழுகின்ற இந்து மக்கள் தமது பாரம்பரியங்களை எந்த முறையில் செய்து கொண்டு போகின்றார்கள்?***

*சுவாமிஜி:* *பொதுவாக இங்கு சமயம் என்று சொன்னவுடன் கோயிலுக்குச் செல்லுதல், ஆலய வழிபாடு, திருவிழாக்களிலே பங்கேற்றல், விரதங்களைக் கடைப்பிடித்தல், சமய திருவிழாக்களை கொண்டாடுதல் இவைகள் தான் வழக்கமாக இருக்கின்றன. பல கோயில்கள் இருக்கின்றன. மக்கள் கோயில்களை நாடிச் செல்கின்றனர். விசேஷ நாட்கள், வெள்ளிக்கிழமை நாட்கள், திருவிழா நாட்கள், பெருவாரியாக மக்கள் பங்கேற்பதை நாம் பார்க்கின்றோம். பொன்னம்பலவாணேஸ்வரமாயினும், ஜிந்துப்பிட்டியாயினும், ஆஞ்சநேய கோயிலாக இருந்தாலும், மயூரபதி அம்மன் கோயிலாக இருந்தாலும் சிறியதும் பெரியதுமான அனைத்துக் கோயில்களிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகளிலே மக்கள் பெருவாரியாகப் பங்கேற்கிறார்கள். அதற்கு வாய்ப்பிருக்கின்றது. அதனை மக்கள் பயன்படுத்துகின்றார்கள்.*

*அதேபோல தமிழ்நாட்டில் இருந்தோ, வேறு இடங்களில் இருந்தோ சமயச் சொற்பொழிவாளர்கள் அல்லது இசைக் கலைஞர்கள் வந்து சொற்பொழிவு களையோ இசை நிகழ்ச்சிகளையோ நடாத்தும்போது மக்கள் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள். சமயப் பாரம்பரியங்களைத் தொடர்ந்து நடத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. மக்கள் அதைப் பயன்படுத்துகிறார்கள்.*

*அதைவிட இராமகிருஷ்ண மிஷன், சின்மயா மிஷன், சாயிபாபா சமித்தி, வாழும் கலை, மனவளக்கலை நிறுவனங்கள் இதுபோன்ற சமயநிறுவனங்கள், சமய சீர்திருத்த மன்றங்கள் இயங்குகின்றன. அவற்றுக்கு மக்கள் வருகின்றார்கள். அரசாங்கமும் தன்னாலியன்ற உதவிகளை இந்து கலாசார அமைச்சினூடாக வழங்குகின்றது. தமிழ் நாட்டில் பார்க்க முடியாத அளவில் அறநெறிப் பாடசாலைகள் இங்கு இயங்குகின்றது. பள்ளிக்கூடங்களில் சமயம் ஒரு கட்டாய பாடமாக இருக்கின்றது. தவிர அறநெறிப் பாடசாலைகள் இங்கு இயங்குகின்றன. இதில் குறைபாடுகள் இருந்தாலும் ஏதோ அங்கில்லாத ஒன்று இங்குள்ளது.*

**கா.சி:** ***இப்படியாக, பன்முகமான இந்துமத நடைமுறைகள் காணப்படும் இடத்திலே கொழும்பிலே ஏறத்தாழ ஒரு நூற்றாண்டுக்கு அண்மித்த கால வரலாறுள்ள இராமகிருஷ்ண மிஷனுடைய செயற்பாடுகள் அதனுடைய பணிகளை நீங்கள் எவ்வாறு பார்க்கின்றீர்கள்? இந்த ஒட்டுமொத்தமான ஓட்டத்தில் இராமகிருஷ்ண மிஷன் செய்கின்ற பங்களிப்புக்களையும் மிஷனிடமிருந்து மக்கள் எதிர் பார்க்கின்ற சமயப் பணிகளையும் தயவுசெய்து கூறவேண்டும்?***

*சுவாமிஜி:* *இராமகிருஷ்ண மிஷனின் பணி என்பது மக்களின் வாழ்க்கையை எந்த வகையில் மேம்படுத்தலாம் என்பதற்காகத்தான் அமைந்தது. அதில் குறிப்பாக சமயம் என்பது சமய நிகழ்வுகள் என்பது சாதாரண மனிதனுடைய சமயத் தேவைகளை பூர்த்தி செய்யத் தவறிவிட்ட நிலையில்தான் சுவாமி விவேகானந்தர் இராமகிருஷ்ண*

*மிஷனைத் தொடங்கினார். அன்பைப் போதிக்கக்கூடிய இந்தச்சமயத்தைச் சேர்ந்த மக்கள் ஏழ்மையிலும் அறியாமையிலும் இருப்பது என்பது நம்முடைய சமயக் கருத்துக்களுக்கு முரணானது. இது மக்களிடையே அவர்களுடைய வாழ்க்கை தேவைகளையும் அதாவது, பொருளாதார நிலைமைகளை மேம்படச் செய்யவேணும் என சுவாமி விவேகானந்தர் விரும்பினார். அதற்காக இராமகிருஷ்ண மிஷனின் பணியாக மருத்துவப் பணி, கல்விப் பணி, நிவாரணப் பணி, கிராமத்துப் பணி என்று பிரித்து வைத்துக் காரியங்களை ஆற்றி வருகின் றார்கள்.*

*அறநெறிப் பாடசாலையைத் தவிர, இங்கு மாணவ விடுதி இருந்தது. இது சில காரணத்தினால் 1970, 80 களிலே மூடப்பட்டது. திரும்பவும் ஆரம்பிப்பதற்கான காலச்சூழல் இல்லை. போர்ச்சூழலில் பொலிஸ் கெடுபடி இருந்தது. தற்சமயம் சமாதான காலகட்டத்தில் கொஞ்சம் ஓய்ந்துள்ளது. போர்ச்சூழலில் இங்கு பணியாற்றியவர்களைப் பொலிஸ் கூட்டிச் சென்றனர். நான் போய் கூட்டி வந்தேன். ஆகவே போர்ச்சூழலிலே திரும்பவும் இந்த மாதிரியான நிலையை இந்நிறுவனம் பேண விரும்பவில்லை.*

***கா.சி:*** **பல இன, மத மக்கள் வாழுகின்ற நாட்டின் தலைநகரான கொழும்பில் வாழுகின்ற இந்து மக்கள் தமது பாரம்பரியங்களை எந்த முறையில் செய்து கொண்டு போகின்றார்கள்?**

*சுவாமிஜி:* *பொதுவாக இங்கு சமயம் என்று சொன்னவுடன் கோயிலுக்குச் செல்லுதல், ஆலய வழிபாடு, திருவிழாக்களிலே பங்கேற்றல், விரதங்களைக் கடைப்பிடித்தல், சமய திருவிழாக்களை கொண்டாடுதல் இவைகள் தான் வழக்கமாக இருக்கின்றன. பல கோயில்கள் இருக்கின்றன. மக்கள் கோயில்களை நாடிச் செல்கின்றனர். விசேஷ நாட்கள், வெள்ளிக்கிழமை நாட்கள், திருவிழா நாட்கள், பெருவாரியாக மக்கள் பங்கேற்பதை நாம் பார்க்கின்றோம். பொன்னம்பலவாணேஸ்வரமாயினும், ஜிந்துப்பிட்டியாயினும், ஆஞ்சநேயர் கோயிலாக இருந்தாலும், மயூரபதி அம்மன் கோயிலாக இருந்தாலும் சிறியதும் பெரியதுமாக அனைத்துக் கோயில்களிலும் நடைபெறுகின்ற நிகழ்வுகளிலே மக்கள் பெருவாரியாகப் பங்கேற்கிறார்கள். அதற்கு வாய்ப்பிருக்கின்றது. அதனை மக்கள் பயன்படுத்துகின்றார்கள்.*

***கா.சி:*** **தங்கள் மருத்துவ சேவை பற்றி..?**

*சுவாமிஜி:* *நாங்கள் மாதத்திற்கொருமுறை இங்கு இலவச மருத்துவ முகாம் நடத்துகின்றோம். அது தவிர வருடத்துக்கு 2, 3 தடவை எங்கு கூப்பிட்டாலும் சென்று மருத்துவ முகாம் நடாத்துகின்றோம்.*

*சாரதா சமித்தியும் தங்களுடன் இணைந்துதான் கடமை ஆற்றுகின்றது. சாரதா சமித்தி தனியாக பதியப்பட்ட நிறுவனம். அதுவும் எங்களின் ஆதரவுடன்தான் இயங்குகின்றது. இப்போ சமீபத்தில் முதியோர் இல்லம், அநாதை இல்லம், சிறுமிகள் இல்லம் என்பன எங்களின் ஆதரவுடன் இயங்குகின்றன.*

*மக்கள் இராமகிருஷ்ண மிஷனிடம் இருந்து என்ன எதிர்பார்க்கின்றார்கள் என்பது புரியவில்லை. முடிந்தளவுக்கு மாணவர்களுக்கு கொலர்சிப்பும் கொடுக்கின்றோம். சுமார் 70 யுனிவர்சிட்டி மாணவர்களுக்கு மாதத்திற்கு 1 000/= கொடுக்கிறோம்.*

**கா.சி:** *பொதுவான நான் 1950 களில் இருந்து கொழும்பில் மாணவனாக வந்து இங்கே பணியாற்றி இருக்கின்றேன். அந்தக் காலத்தில் இருந்து மிஷனைப் பற்றி தூரத்தில் இருந்தும் அண்மையிலிருந்தும் பார்க்கின்ற பேறு எமக்குக் கிடைத்திருக்கின்றது. நான் அவதானித்த ஒன்று தமிழர்கள் அல்லாத இந்துக்கள் இங்கு வந்து மிஷன் நிகழ்விலே பங்குபற்றுகிறார்கள். மற்றையது இங்கு வருபவர்கள் தமிழர்கள், தமிழர்கள் அல்லாதவர் உட்பட, இந்து மத ஒழுக்காறுகளை ஒரு உயர் ஆன்மீக நிலையில் (ஏறத்தாழ* intellectual *நிலையில்) ஒரு அறிவு சார்ந்த நிலையில் பின்பற்றுகின்ற தன்மையும் இங்கு காணப்படுகிறது. இந்த இரண்டு பற்றியும் தயவு செய்து சொல்ல வேண்டும். அதாவது தமிழர்கள் அல்லாத இந்துக்களுக்கும் மிஷனுக்கும் உள்ள தொடர்புமற்றது இந்த அறிவுசார்ந்த முறையில் விடயங்களில் நீங்கள் முன்னின்று நடாத்துகின்ற முறைகள் தமிழர்கள், வடஇந்தியர்கள் இங்கு வந்து வணக்கங்களில் பங்கு பற்றுவதை எல்லாம் நான் பார்த்திருக்கிறேன். அதாவது 1960களில் பிரேமாத்மகாநந்தாஜியினுடைய காலத்தில் பூஜை வணக்கங் களில் எல்லாம் நான் வருவதுண்டு. எனது நண்பர்* K. S. V. *மயில்வாகனத்துடன் வருவதுண்டு. அப்பொழுது பார்க்கின்ற பொழுது கொழும்பில் உள்ள வட இந்திய வணிகர்கள் பலர் வந்து மிஷனுக்கு ஆதரவு கொடுப்பதுண்டு. மிஷனு டைய பூஜைகளிலே பங்குபற்றுவதை அவதானித்திருக்கிறேன்.*

சுவாமிஜி: இருக்கலாம். ஒருசிலர் அவ்வாறு இருந்திருக்கலாம். இப்ப இல்ல. இருக்காங்க, இப்போ மிஷன் கமிட்டியிலே வட இந்தியாவைச் சேர்ந்த இருவர் இருந்தார்கள். மோடி என்று சொல்லி கைதாரமண என இருந்தனர் இப்ப அவர்கள் காலமாகி விட்டார்கள். அவர்களுடன் தொடர்பிருக்கின்றது. ஆனால் அடிக்கடி இந்த மாதிரி வந்து பங்கு கொள்பவர் இல்லை.

**கா.சி:** *மிஷனுக்கு வருகின்ற பொழுது மிஷனில் நடக்கின்ற வழிபாடுகளை பார்க்கின்ற பொழுது இங்கு அதாவது கோயிலைப் பற்றிச் சொன்னீர்கள். இந்துசமயத்தில் உள்ள பக்திப்பாரம்பரியம் காரணமாக நாங்கள் ஒரு சாதாரண வழிபடுபவர் கோயிலுக்குப் போவது என்பது நேர்த்திக்கடன் செலுத்தல் அல்லது வணங்கல் என்பன தங்களது சுகதுக்கங்களை சொல்லுதல் பெறுதல் என்ற நடைமுறை யாகத்தான் இந்த பக்திப் பாரம்பரியம் காரணமாக நடைபெறுவது வழக்கம். அது ஒரு நம்மோடு ஊறிப் போன விடயம். உண்மையில் அதற்கு மேல் எங்களுக்கு அந்தக் கோயிலை மையமாக வைத்து எழுகின்ற* 'Community life' *என்று சொல்லப் படும் சமுதாய வாழ்க்கை சேச்சுக்குள்ளது போலவோ பன்சலைக்கு உள்ளது போலவே இல்லை என்று சொல்லலாம். ஆனால் யாழ்ப்பாணத்தில் சிறு மாற்றங் கள் ஏற்படுகிறது, ஆனால் மிஷனைப் பொறுத்தவரையில் மிஷன் உண்மையான ஒரு இந்துமதம் சார்ந்த ஒரு* 'Community life' *நீங்கள் வளர்த்து வந்துள்ளீர்கள். அந்த வளர்ச்சி முறைகள் என்ன? என்ன மாதிரி தொழிற்படுகிறீர்கள் அதிலே காணப்படும் நன்மைகள் என்ன? ஏன் என்றால் குழந்தைகளையும் பார்க்கின் றீர்கள். பெண்கள் வந்து உதவி செய்கின்றார்கள் தொண்டர்கள் உதவி செய்கின் றார்கள் இங்கே ஒரு* 'Religious Community' *(ரிலீஜஸ் கொமியுநிட்டி) வளர்க்கப் படுகிறது. அதைப்பற்றி தயவு செய்து கொஞ்சம் விளக்கமாகச் சொல்லவும்.*

சுவாமிஜி: ஏதோ என்று யாரோ ஒரு கஷ்டத்துடன், தங்களது சுகதுக்கங்களை பகிர்ந்துகொள்ள வேண்டும் என்றும் வரும் பொழுது நாமாக அவர்களுக்கு அவர்கள் ஆறுதல் கேட்டு நம்மால் இயன்ற அளவு ஆறுதல்கள் வழங்குவது அல்லது வேற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நம்மால் இயன்றளவு செய்யும்பொழுது இயல்பாக நம்மீது அவர்களுக்கு நம்பிக்கை வருகின்றது. ஒரு நட்பு வளர்கின்றது. தினசரி இங்கே பிரார்த்தனை உண்டு. காலையில் பூஜை பின்னேரம் கூட்டுப் பிரார்த்தனை உண்டு. வெள்ளிக்கிழமை விஷேசமாக ஒரு மணிநேரம் கூட இதற்கு வந்து போபவர்கள் இருக்கிறார்கள். ஒரு வருடத்தில் வரும் சிவராத்திரி. நவராத்திரி என எல்லாம் கொண்டாடுகின்றோம். அதில் அவர்கள் பங்குபற்றுகிறார்கள். தினசரி இங்கு தொண்டாற்ற அவர்களுக்கு நேரம் ஒதுக்கி கொடுக்கிறோம். எல்லாருக்கும் அந்தவாய்ப்பு இருக்குமா என சொல்ல முடியாது. சிலருக்கு ஆர்வம் இருக்கலாம் வாய்ப்பிருக்காது. சிலர் பணம், மூலதனம் மூலம் சிலர் உடல் உழைப்பு மூலம் செய்கின்றார்கள். குடும்பங்களின் துக்க நிகழ்வுகளில் பங்குகொள்கிறோம். ஆனால் திருமணங்களுக்கு போகமாட்டோம். இதற்கெல்லாம் இருக்கிறதனால் மிஷனுக்கும் அவர்களுக்கு ஒரு நெருக்கமான தொடர்புண்டு. மற்றும் மிஷனிலும் இன்னாருடைய ஆன்மிக வாழ்க்கை எனும் ஆளை மாற்றும் மந்திர தீட்சை இருக்கு. அது எல்லாருக்கும் சொல்வதில்லை. ரொம்ப ஆர்வமாயிருக்கிறவர்களுக்கு எங்களுடைய கல்கத்தாவில் இருக்கும் ‘பிரசிடன்ட்’ இங்கு வந்தால் அல்லது இவர்கள் அங்கு போக நேர்ந்தால் அதற்கும் ஏற்பாடு செய்து கொடுப்போம்.

கா.சி: ***இப்படிப் பார்க்கின்றபொழுது உங்களுடைய இந்த அறிவுசார்ந்த புலமை சார்ந்த இந்து மத அணுகுமுறைகளுக்கு தங்களிடத்தில் உள்ள நூல் நிலையமும், அதனுள் உள்ள புத்தகங்களும் அதனை இவர்கள் பயன்படுத்துகின்ற முறைமையும் மிக முக்கியமானதாக இருக்கும் எனக் கருதுகிறேன், அந்த நூல்நிலையத்தின் அமைப்பு அது என்ன மாதிரி தொழிற்படுகிறது. அது யார் யார் பயன்படுத்துகிறார்கள் என்பது பற்றி கூறுங்கள்...***

சுவாமிஜி: நூல் நிலையம் 83ஆம் ஆண்டு கலவரத்தின் பிறகு, சுமார் 10, 12 ஆண்டுகள் சிறப்பாக இயங்கவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இப்போது கடந்த 7, 8 ஆண்டுகளாக கணினிமயப்படுத்த முயற்சி எடுத்து வருகிறோம். ஆனால் அது இன்னும் முடியவில்லை. அற்புதமான அருமையான நூல்கள் இருக்கின்றன. தினசரி நூல் நிலையங்களில் பத்திரிகை வாசிக்க வருகிறார்கள். மாணவர்கள், பெரியவர்கள் நூல் நிலையத்தை பயன்படுத்துகிறார்கள்.

கா.சி: ***சுவாமிஜி! இப்படியான ஒரு அடிப்படையான விடயங்களை உங்களைப் போன்ற புலமையாளர்களுடன் நாங்கள் பேசலாம். பேசவும் வேண்டும். இலங்கையைப் பற்றி சொல்லுகின்ற பொழுது, இலங்கை தமிழர்கள் பற்றி குறிப்பாக வடபுலத் தமிழர்களைப் பற்றி பேசும்போதும் சைவசித்தாந்த மரபு மிக முக்கியமானதாகும். தமிழும் சைவமும் ஒன்று. சைவத்தை சைவசித்தாந்த சைவம் என்றே சொல் வார்கள். ராமகிருஷ்ண மிஷன் போன்ற வேதாந்தத்தை தளமாகக் கொண்டு எல்லோரையும் அரவணைக்கக்கூடிய ஒரு தளமாக இருப்பதால், சைவசிந்தாந்த மரபுடன் ஊடாடும்போது தங்களுக்கு ஏற்பட்டுள்ள அனுபவங்கள் அல்லது***

**அவற்றை நீங்கள் உள்வாங்கிய முறைமைகள் பற்றிய தங்களது அனுபவங்களைச் சொன்னால் அது மிக உதவியாக இருக்கும்.**

சுவாமிஜி: என்னைப் பொறுத்தமட்டும் அவை என்றும் நேரடியாக இடைஞ்சலாக இடையூறாக இருந்ததில்லை. எல்லா இடங்களுக்கும் செல்கின்றேன் எல்லோரும் வரவேற்கின்றனர். சித்தாந்தம் என்பது எமது தினசரி வாழ்க்கையில், கோயிலுக்கு செல்லுதல், பூஜை தியானம் சைவத்திலும் இருக்கும். எல்லாம் எல்லாத்திலும் இருக்கு. நாங்களும் அதைத்தான் கடைப்பிடிக்கின்றோம் அதனால் தினசரி காலையில் சிவபுராணம் சொல்வோம். அது சமீப காலமாகத்தான் செய்துகொண்டு வருகிறோம். சிவ வழிபாடு என்பது எல்லா மடங்களிலும் இருக்கின்றது. எல்லா ராமகிருஷ்ண மடங்களிலும் தானலிங்கம் வைத்துத் தான் வழிபடுவது வழக்கம். தான லிங்கத்தில் எந்தப் பூஜையும் செய்யலாம் என்று இருக்கு. தான லிங்கத்திற்கு லிங்க அனுஷ்டான பூஜை செய்து மற்றைய ராமகிருஷ்ண வழிபாடு எந்த வழிபாடையும் செய்யலாம். அது இங்கு வருபவர்களுக்கு சிவசின்னம் வைத்திருக் கிறார்கள். அந்த வகையில் எல்லோரும் அதனுடன் ஒன்றுவதற்கான வாய்ப்பு இருக்கு. அதுதவிர வேறு எந்தவகையிலும் கஷ்டமாகத் தெரியவில்லை. ஒரே சமயத்திலேதான் பாடங்கள், பாடசாலையில் 11ஆம் ஆண்டு வரை சைவநெறி படிப்பிக்கப் படுகின்றது. A/L லில் இந்து சமயம், இந்து நாகரிகம் படிப்பித்தனர். அப்போதுதான் யாரோ ஒருவர் எழுதியிருந்தார். A/L இல் சைவநெறியை தொடர்ந்து கற்பிக்கணும் என யாழ்ப்பாணத்தில் இருந்து எழுதியிருந்தார். அது எனக்கு அப்பாற்பட்டது.

கா.சி: **நூலகத்தை மேலும் வலுவுள்ள நிறுவனமாக்கி அதனூடு மாணவர்களுடன் ஊடாடுவது ஒரு முக்கியமான விடயம். ஏன்என்றால் கொழும்பில் இந்து மதம் சம்பந்தமாக எந்த வித நூலகமும் இருப்பதாகத் தெரியவில்லை. இதை தொடர்ந்து ஒரு கேள்வி கேட்க விரும்புகிறேன். உண்மையில் பல்கலைக்கழகத்தில் இந்து நாகரிகத்துறை பயிற்றுவதற்கான மூன்று துறைகள் உள்ளது. பேராதனை, யாழ்., கிழக்கு பல்கலைக்கழகங்கள். இந்த மாணவர்கள் வந்து புத்தகங்களை பார்ப்பதற் கான நூல் நிலையம் வேறு ஒன்றும் இல்லை. அதுமாத்திரம் அல்லாமல் இந்துநல பண்பாட்டு நடைமுறைகள் சம்பந்தமாக பாடங்கள், பிறநாட்டு வணிகமுறைகள் பற்றிய எந்தவிதமான நடைமுறை அறிவு இங்குள்ளவர்க்கு கிடையாது. அந்த மரபை அறிய சிரமமாக உள்ளது. அதுதவிர இந்துக்கள் அல்லாதவர்களும் இந்து சமயம் பற்றி அறிய விரும்புகிறார்கள். அவர்களுக்கு சிறு ஆராய்ச்சி மையம் ஒன்று தொடங்கி நடத்தலாம் என நான் நினைக்கிறேன். தொடர்ந்து நான் இன்னொன்று கேட்க விரும்புகிறேன். இந்த தாபனத்துக்கு கிடைத்துள்ள மதிப்புக் காரணமாகவும் தாபனத்தின் பொறுப்பாக உள்ளவர்கள், அதாவது பிரேமானந்தாஜி முதல் தாங்கள் வரை ஒரு மக்களிடையே ஏற்புடைய ஒன்று இருக்கிறது. இதன்காரணமாக முக்கியமான விடயங்களில் இந்து மதப் பிரதிநிதித் துவ வாய்ப்பு மிஷனுக்கு கிடைத்திருக்கிறது. அது பற்றிக் கூறுங்கள்?**

சுவாமிஜி: சில சமயங்களில் சில அமைப்புக்களும் சிங்களவர்களும் கிறிஸ்தவ சமய அமைப்புக்களும் இந்து சமயத்தை பற்றி அறிந்து கொள்வதற்காக அந்த

மாணவர்களை இங்கு அழைத்து வந்து வகுப்புகள் நடாத்தி இருக்கிறார்கள். குறிப்பாக இந்து கலாசார அமைச்சரை அழைத்திருக்கிறோம். குறிப்பாக லொக்குபண்டார அவர்கள் நமது புத்தகம் எல்லாம் வாங்கிப் படிப்பார். MP யாக இருக்கும் போதும் Cultural அமைச்சராக இருக்கும்போது இங்குவந்து போயுள்ளார். நாங்கள் சில புத்தகங்களை சிங்களத்தில் மொழிபெயர்த்து இருக்கின்றோம். சமீபத்திலே புத்தர் பற்றி விவேகானந்தர் கூறியதை எல்லாம் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துள்ளோம். 'Lord விவேகாநந்த and புத்தர்' என்று அதை சிங்களத்தில் மொழிபெயர்த்து சிங்களத்தில் வெளியிட லொக்குபண்டார உதவியிருந்தார். கலாசார அமைச்சராக இருக்கும்போது இதனை கலாசார அமைச்சு வெளியிடுவதாக கூறியிருந்தார். ஆனால் அரசாங்கம் மாறியதால் அது அரசாங்க வெளியீடாக வெளிவரவில்லை. தனிநபர் ஒருவர் வெளியிட்டிருந்தார். அப் பிரதிகளை பெருமளவு விற்பனையாகி உள்ளன. டாக்டர் ஆரியரத்ன, அவருடன் தொடர்பு இருக்கு. அவரும் ஸ்ரீராமகிருஷ்ண சொன்ன கதைகள் எனும் நூலை சிங்களத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டார். அந்த மாதிரியான தொடர்பு இருந்து வருகின்றது.

கா.சி: **இலங்கையில் கொழும்பைத்தவிர குறிப்பாக மட்டக்களப்பில், திருகோண மலை யில் மிஷன் உண்டு. இலங்கையில் மற்றைய மிஷனுடன் கொண்ட தொடர்பு பற்றி குறிப்பிடுக.**

சுவாமிஜி: பருத்தித்துறையில் ராமகிருஷ்ண சாரத சேவாசங்கத்தில் சிற்சொரூபாநந்தா அவர்கள் இருக்கிறார். அவர் உண்மையில் ராமகிருஷ்ண மிஷனில்தான் இருந்தார். ஏதோ காரணத்துக்காக விலகி தனியாக நடாத்தி வருகிறார். அவருடைய பணி களுக்கு நாங்களும் எம்மால் முடிந்த உதவிகளை செய்துவருகிறோம். அவரும் எமது விழாக்களில் பங்கேற்கிறார். சமீபத்திலே சாரதாதேவியின் 150 நூற்றாண்டு விழாவை கொண்டாடினோம். யாழ்ப்பாணத்தில் அவர்தான் செய்தார். நாங்கள் எல்லாம் அதில் பங்கேற்றோம். அதேமாதிரி மட்டக்களப்பு தவிர மலையகத்தில் ஹட்டனுக்குப் பக்கத்தில் டிக்கோயாவில் அனாதை சிறுமிகள் இல்லம் தொடங்கி இருக்கிறோம். இப்ப தொடங்கி 4, 5 மாதம் ஆகிறது.

கா.சி: **நான் பேச எடுத்துக்கொண்டதில் அதுவும் முக்கியமானது. மலையகப் பிரதேசத்தில் ஒரு வரன்முறையான ஒழுக்காற்று இந்து நிறுவனத்தின் வழி காட்டல்தேவை. மலையகம் சம்பந்தமாக நீங்கள் சற்று அதிகமாக ஆர்வம் காட்ட வேண்டும் என எண்ணுகிறேன். ஏனென்றால் தங்களுடைய பாரம்பரியம் எல்லாவற்றையும் ஒரு உரைநிலையாகவே வைத்திருக்கிறார்கள். அது தனியாக வளர்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை. அதன் அரசியல் கூட ஒரு குறிப்பிட்ட வட்டத்தினுள்ளே இருக்கவேண்டிய நிலைகூட ஏற்பட்டுள்ளது. பல நிர்ப்பந்தங்களுக்கு ஆளான மக்கள் குழுமம். அந்த இடத்தில் மிஷனுக்கு ஒரு முக்கிய பங்கு இருக்கென கருதுகிறேன். அது பற்றி....**

சுவாமிஜி: தொண்டமான் பெரியவர் அவர் வாழ்ந்த காலத்தில் அவருக்கு ஒரு குறை இருந்தது. மட்டக்களப்பு, கொழும்பில் இருப்பது போல மலையகத்திலும் மிஷன் ஏதாவது செய்யவேணும் என விரும்பினார். நாங்கள் போய் செய்ய ஆள்பலம் இல்லை.

தேவராஜ் இருந்தார் அவரிடம் சொன்னேன். உள்ளூரிலே யாராவது தொடங்கினால் நாங்கள் எங்களால் ஆன உதவியை செய்வோம் என்றார்.

கா.சி: **இதை நான் ஏன் சொல்கிறேன் என்றால் இந்துமத கோட்பாட்டிலே Hindu way of life இலேயே Social view of life ஐ "திருநாராயணன்" என்ற எண்ணக்கருவை விவேகானந்தர்தான் கொண்டு வந்தார். அது இந்தியாவில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இந்து மத தாக்கத்திற்கும் பலவழிகளில் பல சமாஜங்கள் இருந் தாலும் ராமகிருஷ்ண மிஷனுக்கு தனி இடத்தை கொடுத்தது. அது சமூகநிலைப் பட்ட செயல். இதனாலே அன்னை தெரேசா போன்றவர்கள்கூட மற்ற இடங்களில் செய்யமுடியாதவற்றை கல்கத்தாவில்தான் செய்யமுடிந்தது. காரணம் மிஷனுடைய அறக்கட்டளை தளம் இருந்தது. அந்தமாதிரியான சேவை ஒன்றை மலையகம் சம்பந்தமாக செய்து பார்ப்பது நல்லது என கருதுகிறேன்.**

சுவாமிஜி: நாங்கள் முயற்சி பண்ணுகின்றோம். கடந்த 7, 8 வருடங்களாக, ஏதாவது செய்யணும் எண்ணி இருந்தேன். அது ரொம்ப கஷ்டம், அவர்கள் அங்குவந்து இருந்து செய்யணும் என்று எதிர்பார்க்கிறார்கள். பதுளையில் இருந்து முயற்சி செய்தோம். அங்கு இளைஞர் பேரவை அதிபராயிருக்கிறவர் ஆர்வம் காட்டினார். தொடர்ந்து 10 நாட்கள் தங்கிச் செய்தோம். புத்தகக் கண்காட்சி, மாணவர்களுக்கு வகுப்புக்களை நடாத்தினோம், பண உதவி செய்தோம். ஆனால் அங்கு ஒரு நிரந்தரமான ராமகிருஷ்ண மிஷன் கிளை அமைய வேண்டும் என்றால் அங்கு நாளாந்த செயற்பாடுகள் சில அமைய வேண்டும். அப்போதுதான் அது நிரந்தர மானதாக அமையும். விவேகாநந்தர் விழா என்றால் செய்வார்கள். அதற்காகத்தான் சிறுமியர் இல்லம் ஒன்று அமைத்திருக்கு. அதை மையமாக வைத்து, பெண்களுக்கு ஏதாவது செய்யலாம் என்று வைத்திய முகாம் நடந்தது. அவர்களுக்கும் உதவி, புலமைப்பரிசில் செய்கிறோம். அவர்களுக்கு அனைத்து உதவியும் செய்கிறோம். வருடத்துக்கு ஏறத்தாழ 1 மில்லியன் கல்விக்கே செலவளிக்கிறோம். இதை வெளியில் யாருக்கும் சொல்வதில்லை. ஆண்டறிக்கையில் வரும். பத்திரிகையில் பிரசுரிப்பதில்லை. மலையகத்தில் மாதத்துக்கு ஒருமுறை செல்வது வழக்கம்.

கா.சி: **இலங்கையில் இந்துமதம் பற்றிய ஆய்வை வழங்க பல்வேறு நிறுவனம் உள்ளது. ஆனால் ஒட்டுமொத்த பார்வையில் ஆய்வை வழங்குவதற்கும் தங்களுடைய நிறுவனம் ஒரு புலமை தொடர்பான தலைமையை கொடுப்பது பலநிலைகளில் முக்கியமானதாக இருக்கும் என நினைக்கிறேன். இது பற்றியும் இந்தியாவில் உள்ள இந்துப் பாரம்பரியம் பற்றி அறிந்துகொள்வதற்கும் அறியப்படுத்துவதும் மிகக் குறைவு. அதனை செய்வதற்கு அதனை பயிற்றுவிப்பதற்கும் இந்நிறுவனம் ஆற்றக்கூடிய பங்களிப்புப் பற்றி.....?**

சுவாமிஜி: சுமார் 7, 8 பெண்கள் தமிழ்நாட்டுக்கு அனுப்பி படிப்பிப்பதற்கு உதவி செய்கிறோம். மாணவர்களும் சென்று படிக்கின்றார்கள். படித்து முடித்து வந்தவர் களும் இருக்கின்றார்கள்.

கா.சி: **அனைத்து ராமகிருஷ்ண மடத்தை பார்க்கும்போது அவைகள் சைவத்துடன் இணைந்துள்ளன. இது பற்றி...**

சுவாமிஜி: *நாட்டு நிலை அப்படி. தமிழ்நாட்டில் அவ்வாறு இல்லை. பொதுவாக தேவாரம் தெரியாத மக்களை இங்கு காணமுடியாது. தமிழ்நாட்டில் அவ்வாறு இல்லை. இங்கு சைவசித்தாந்தம் வேரூன்றி வளர்ந்துள்ளது. இது நாவலருடைய வேலையாக இருக்கலாம். அது தெரியல.*

கா.சி: **இராமகிருஷ்ண மண்டபம் பல மக்கள் வந்து இணையும் ஒரு களமாக உள்ளது. குறிப்பாக சிங்கள மொழி பேசுபவர்கள். இம்மண்டபம் பற்றிய உங்கள் அனுபவம்...**

சுவாமிஜி: *சிங்கள நிகழ்வு நடைபெறுவதில்லை. முன்பு பலநிகழ்ச்சிகள் நடைபெறும். அது இப்ப நிறுத்திட்டோம். அங்கு வாற மக்களின் நடவடிக்கைகள் மிஷனின் நடவடிக்கைக்கு பாதிப்பாக இருந்ததுடன் தங்குமிடத்தில் தங்கி இருந்தவர்க்கு அசௌகரியங்களை ஏற்படுத்தியது. இப்ப நிறுத்திட்டோம். இப்ப கலை நிகழ்வுகளே நடைபெறுகிறது. இப்போ எவ்வளவு குறைக்க முடியுமோ அதற்கேற்ப குறைத்துக் கொடுக்கிறோம். கதிரைகள் எல்லாம் திருத்த வேண்டும். தங்குமிடத்தை கஷ்டப்பட்டே நடத்துகிறோம். இங்கு ஒருத்தரும் நிலையாய் இருக்க மாட்டார்களாம். மேற்பார்வை பார்ப்பதற்கு ஆள்பலம் இல்லை. ஒரு மனேஜரை கண்டுபிடிப்பதே சிரமமாக உள்ளது. அவர்கள் பல எதிர்பார்ப்புடன் வர்ராங்க. அவங்களுக்கும் சில கஷ்டங்கள் இருக்கின்றன. குறைபாட்டை பலர் சொல்லுவாங்க. மனேஜர் சார்பாக நான் மன்னிப்பு கேட்டிருக்கேன்.*

கா.சி: **உங்களின் இந்த மிஷனின் கட்டமைப்பு என்ன?**

சுவாமிஜி: *பொது அமைப்பு ஒன்று உள்ளது. அதில் 20, 25 அங்கத்தவர்கள் இருக்கிறார்கள். அது வேலூரில் இருக்கிறது. அவர்களால்தான் நாங்கள் நியமிக்கப்படுகிறோம். நாங்கள் உபதலைவராகவே நியமிக்கப்படுகிறோம். தலைவர் கல்கத்தாவில் இருக்கிறார். அவர்தான் வழிநடத்துகிறார். சபையின் நிர்வாகம் கல்கத்தாவில் உண்டு. அவர் எங்களை கட்டுப்படுத்துவதில்லை. ஆனால் வருடத்துக்கு ஒரு முறையாவது வருடாந்த பொதுக்கூட்டம் நடைபெறும் அதில் ஆண்டறிக்கை வெளியிடப்படும்.*

கா.சி: **கொழும்பில் உள்ள இந்து மக்களுக்கு மிஷன் தலைவர் என்ற வகையில் என்ன சொல்லவிரும்புகின்றீர்கள்?**

சுவாமிஜி: *மேலைநாட்டு நாகரிக மோகம் என்பது நம்மை அறியாது. எமக்குள் புகுந்துள்ளது. அறநெறி பாடசாலைக்கு இந்துக் கலாசாரப்படி தமது பிள்ளைகளை அனுப்பும் பெற்றோர், வீடு சென்ற பின் அதைத் தொடர்ந்து பின்பற்றுகிறார்களா என்பது சந்தேகம். வீட்டுக்கு போனவுடன் நடை, உடை பாவனை மாறுகிறது. அறநெறி பாடசாலைக்கு வரும் பிள்ளை மஞ்சள் பாவாடை சட்டையுடன் வரும் பிள்ளை பின்னேரம் வேறு தேவைகளுக்கு வரும் பிள்ளை வேறு உடையுடன் வருகிறது. ஒரு சமயத்தில் அப்பிள்ளை ஆணா பெண்ணா என தெரியவில்லை. சமயம் என்பதை வாழும்பொழுது பின்பற்ற வேண்டும். ஆங்கிலம் வேண்டாம் என்றில்லை அநாகரிகம் வேண்டாம். பெற்றோர்கள் இதை கவனிக்க வேண்டும். பெற்றோர்கள் தான் தங்கள் பிள்ளைகளை கவனிக்க வேண்டும். பிள்ளைகள் பொய் சொல்லாது.*

கா.சி: **இந்த ஆத்மார்த்தமான எச்சரிக்கை எங்களுக்கு நல்லவழியை காட்டுவதாக கூறி இதுவரை பங்குபற்றியதற்கு நன்றி கூறுகிறோம்.**

## கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தான பிரதம சிவாச்சார்யர் 'சைவசித்தாந்த பிரதிஷ்டா சக்கரவர்த்தி'

# சிவஸ்ரீ சி. குஞ்சிதபாத குருக்கள் அவர்களுடனான நேர்காணல்

### நேர்கண்டவர் : பேராசிரியர் கா. சிவத்தம்பி

கா.சி: **ஐயா...! முதலில் உங்கள் வாழ்க்கை வரலாறு பற்றிய ஒரு சுருக்க குறிப்புடன் ஆரம்பிப்பது நல்லது எனக் கருதுகின்றேன். தாங்கள் எப்பொழுது கொழும்பிற்கு வந்தீர்கள். தாங்கள் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் இந்நிலைக்கு வரத் தங்கள் படிநிலை வழிமுறைகள் யாவை எனக் கூறுங்கள்**

குரு.ஐயா: நான் 1949 நவம்பர் 13ஆம் திகதி கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் குருக்களாகப் பூஜை செய்ய வந்தேன். அப்போது கோவிலில் 6 காலப்பூஜை இப்பொழுது நடைபெறுவது போன்று நடைபெற்றது. இரண்டாம் உலக மகாயுத்தம் முடிந்து இலங்கை சுதந்திரம் அடைந்த காலகட்டமாதலால் கொழும்பு எங்கும் தமிழ் மக்கள் குறைவாகவே காணப்பட்டார்கள். கோவில்களுக்கு மக்கள் வருவது மிகக்குறைவு. செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் 10 காளாஞ்சி அர்ச்சனை நடைபெற்றது என்றால் அது ஒருபெரும் விசேஷம் என்றே கருதினோம். இதற்கான காரணம் பெருமளவு யாழ்ப்பாண மக்களின் மனைவி, குடும்பம் யாழ்ப்பாணத்திலேயே வசித்து வந்தது. ஆண்கள் மட்டும் கொழும்பில் தனி அறை. அல்லது வீட்டில் வசித்துவந்தனர். அவர்கள் மட்டும் விசேஷத்திற்கு வருவது வழக்கம். என்றாலும் மலையாள மக்கள் குடும்பத்தோடு வாழ்ந்ததால் அவர்கள் கோவிலுக்கு வருவது வழக்கத்தில் இருந்தது. இந்த நிலைப்பாடு கொழும்பில் உள்ள சகல கோவில்களுக்கும் பொருந்தும். கோவில் பூசைகள் விரிவாகவும் ஒரு சில கோவில்களில் குறைவாகவும் அப்போது இருந்தன. எமது கோவிலில் அன்றும் இன்றும் போதிய வசதிகளுடன் உள்ளதால் கோவில்

பூசைகளில் எந்தக் குறையும் இல்லை. 1983 இனக் கலவரத்திலும் கோவிற் பூஜைகள் ஒழுங்காக எனது தலைமையில் நடந்தமையை இங்கு கூறலாம்.

**கா.சி:** **ஐயா.... நீங்கள் யாழ்ப்பாணத்தில் எந்தப் பகுதியில் இருந்து வந்துள்ளீர்கள். உங்கள் குருக்கள் பட்டத்திற்கான குருகுலக் கல்வியை எவ்வாறு பெற்றீர்கள் எனக் கூறுங்கள்.**

குரு. ஐயா: நான் சுன்னாகம், மயிலணி ஸ்ரீ விஸ்வநாத சுவாமி ஆலய சூழலில் இருந்து வந்தேன். எனது தகப்பன், பெரிய தகப்பன், அண்ணன் ஆகியோர் ஆகமம், வைதீகம் ஆகிய துறைகளில் நன்கு படித்துப் பாண்டித்தியம் பெற்றவர்கள். ஆகவே ஆரம்பத்தில் இவர்களிடம் குருத்துவக் கல்வியைப் பெற்றேன். பின்னர் வித்தியா தரிசி, முகாந்திரம் பிரம்மஸ்ரீ சதாசிவ ஐயர் அவர்கள் நிறுவிய ஸ்ரீ சதாசிவ பிராசீன வித்தியாலயத்தில் சமஸ்கிருதம், தமிழ் என்பனவற்றை மேற்படிப்புக் கல்வியாகக் கற்றுள்ளேன். மேலும் நான் இங்கு கோவிலில் நியமனம் பெற்ற பின்பும் ஆகமக் கிரியை, கோவில் நடைமுறைகள் என்பனவற்றைப் பாண்டித்தியம் பெற்ற அனுபவம்மிக்க குருக்கள்மாரிடம் கேட்டு அறிந்து எனது அறிவை மேலும் விருத்தி செய்துகொண்டேன்.

**கா.சி:** **... நீங்கள் இவ்வாலயத்திற்கு வந்தபோது யார் பெரிய குருக்களாக இருந்தார்?**

குரு. ஐயா: நான் வந்தபோது வதிரியைச் சேர்ந்த சிவஸ்ரீ இரகுநாதக் குருக்கள் தலைமைக் குருவாக இருந்தார். என்றாலும் செட்டியார் தெரு முத்து விநாயகர் கோவில் ஜிந்துப்பிட்டி முருகன் கோவில், எமது கோவில் ஆகியன முன்னேஸ்வரம் பிரதம குருவின் ஆலோசனை, நெறிப்படுத்தலிலேயே செயற்பட்டு வந்தன. எமது தேவஸ் தானத்துக்கு முன்னேஸ்வரம் சிவஸ்ரீ பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்கள் வந்து கோவில் விசேஷ கருமங்களை முன்னின்று நடத்துவார். அவரின் பின்னர் முன்னேஸ்வரம் சிவஸ்ரீ இரத்தின கைலாச நாதக் குருக்கள் அவர்கள் சகல விடயங்களையும் நெறிப்படுத்தி வந்துள்ளார்.

**கா.சி:** **நீங்கள் வந்த காலத்தில் கொழும்பில் எத்தனை கோவில்கள் இருந்திருக்கும்.... அக்கோவில்களின் கிரியை முறைகளைக் கூறுங்கள்.**

குரு. ஐயா: ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம், ஸ்ரீ முத்து விநாயகர் கோவில், ஜிந்துப்பிட்டி முருகன் கோவில் ஆகிய கோவில்களில் 6 காலப் பூஜைகள் நடைபெற்றன. முகத்துவாரம் பிள்ளையார் கோவில், கப்பித்தாவத்தை சிவன் கோவில், மாரி அம்மன் கோவில், சம்மாங்கோட்டார் கோவில் போன்றவற்றில் 4 கால பூஜைகள் நடைபெற்றன. இவை ஒருசில உதாரணங்கள் ஆகும். கொழும்பு ஆலயங்களில் கிரியைகள், பூஜைகள் நடவாமல் இல்லை. கோவில் வசதி, நிர்வாகம் என்ற நிலை களுக்கு அமைய பூஜைகள் சிறப்பாக நடைபெற்றுவந்தன. இதனால் கொழும்பில் சைவம் வளர்ந்து வந்தது.

**கா.சி:** **ஐயா.... நீங்கள் ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் இவ்வுயர் பதவிக்கு எப்போது வந்தீர்கள்?**

குரு. ஐயா: நான் 1969. 01. 31இல் பிரதம குருவாக நியமனம் பெற்றேன்.

**கா.சி:** **குருக்கள் ஐயா, உங்களிடம் இருந்து நான் மூன்று விடயங்களை அறிய விரும்புகின்றேன். 1. நீங்கள் 1949இல் கொழும்பிற்கு வந்தபோதும், 2. 1969இல் பிரதம குருவாக வந்த பின்னரும், 3. இன்றும், நீங்கள் காணுகின்ற கோவிற் கிரியை மாற்றம், கிரியாவிருத்தி, இந்துசமய நிலைகளை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்.**

குரு. ஐயா: நான் 1949 இல் வந்தபோது விஷேச வைபவங்கள் எல்லாம் கோவில்களில் நடந்தன. அவை சுருக்கமாக இடம்பெற்றன. உதாரணமாக எமது ஆலயத்தில் சிவாகம முறைக்கமைய 6 காலப் பூஜை உள்ளது. இதிலே எமது ஆலயத்தில் நித்திய அக்னி, நித்திய உற்சவம் சிறப்பம்சம் ஆகும். அக்காலத்தில் நித்திய உற்சவத்தில் ஒருவர் சுவாமியையும் அம்பாளையும் தூக்கிவருவார். பின்னர் நாம் இப்பொழுது பல்லக்கிலே சுவாமிகளைத் தூக்கி வருகின்றோம். முன்பு பிரதோஷ உற்சவம் என்றால் 20 - 30 பேர் வருவர். இப்போது 3000க்கு மேற்பட்ட விரதகார அடியார் கூட்டத்தைப் பிரதோஷ காலத்திலே காண முடிகின்றது. இப்போது வெள்ளி இடப வாகனத்தில் சுவாமியும் அம்பாளும் பிரதோஷ காலத்தில் வீதிவலம் வருவது அழகாக உள்ளது. நான் பொறுப்பு ஏற்றபோது உற்சவ உபயங்களை அடியார் வேண்டுதலால் அவர்களுக்கு அளித்ததால் உற்சவங்கள் சிறப்பம்சம் பெற்றன. இவை யாவும் தர்மகர்த்தாக்களின் அங்கீகாரத்துடனேயே அன்றும் இன்றும் நடைபெறுவது வழக்கத்தில் உள்ளது.

நான் வந்த காலத்தில் திருவெம்பாவைக் காலத்தில் ஒருவர் மட்டும் வருவார். அவர் திருவெம்பாவைப் பாடல்களைப் படிப்பார். அவர் வராது விட்டால் நானே திருவெம்பாவைப் பாடலைப் படித்து நானே கற்பூரம் காட்டுவேன். பின்னர் எனது முயற்சியால் உபயம் ஏற்படுத்தி விரிவாக நடத்திவந்துள்ளேன். மக்களும் கொழும்பில் குடியேறியதால் பக்தர் கூட்டம் அதிகமாக விரத அனுட்டானங்களுடன் வரத் தொடங்கியது. 1956 இல் றேடியோ சிலோன் திருவெம்பாவை அஞ்சல் செய்ய ஆரம்பித்தது. 1956 இல் இலங்கையில் கலாசார அமைச்சு, கலாசாரத் திணைக்களம் என்பன ஆரம்பித்ததால் சமய ரீதியான முறைகள் ஓரளவு முக்கியத்துவம் பெற்றன.

1958, 1960 ஆண்டுகளின் பின் மக்கள் கொழும்பில் வசித்து வந்தமையால் கோவில் வழிபாட்டில் அதிக ஈடுபாடுகொண்டு விளங்கினார்கள். இதனால் உற்சவங்களை நன்கு நடத்த முடிந்தது. இதற்கமைய ஸ்ரீ அம்பாள் உற்சவமும் லக்ஷார்ச்சனையும் ஆரம்பிக்கப்பட்டன.

**கா.சி:** **ஐயா.... உங்கள் தேவஸ்தானத்தில் மாதாமாதம் நடைபெறும் உற்சவங்கள், வருட உற்சவங்கள் யாவை என முதலில் கூறுங்கள்.**

குரு. ஐயா: எமது தேவஸ்தானம் இந்திய சிற்பம்சத்தோடு கருங்கல்லினால் ஆனதாகும். ஆதலால் பார்ப்பதற்கு அழகாக உள்ளமை ஒரு விசேஷம். எமது தேவஸ்தானத்தில் ஒவ்வொரு மாதப் பிறப்பிலும் சங்கிராந்தித் தீர்த்தம் ஸ்ரீ சுவர்ண புஷ்கரணித் தீர்த்தத் தடாகத்தில் நடைபெற்று விசேஷ பூஜைகள் இடம்பெறுகின்றன.

சதுர்த்தித் திருவிழா, கார்த்திகை உற்சவம், பிரதோஷ உற்சவம், பௌர்ணமி தினத்தன்று ஸ்ரீ சக்ர பூஜை, அம்பாள் உற்சவம் என்பன சிறப்புற இடம்பெறுவது வழக்கம்.

பங்குனி உத்திரத்தை அந்தமாகக் கொண்டு மஹோற்சவம், அதாவது கொடி யேற்றத் திருவிழாவும் தேர், தீர்த்தம், பூங்காவனமும் நன்கு நடைபெறுகின்றன. ஆடிப்பூரத்தை அந்தமாக்கொண்டு அம்பாள் உற்சவம் 10 நாட்களுக்கு ஸ்ரீ சக்ர பூஜையோடு லக்ஷார்ச்சனை இடம்பெற்று வருகின்றது. அத்தோடு அம்பாளுக்கு நவராத்திரி உற்சவம் ஸ்ரீ சக்ரபூஜை கொலு பூஜை என்பன கொண்டு வெகு விமர்சையாக நடைபெறகின்றது. ஐப்பசி மாதத்தில் கந்தசஷ்டி உற்சவம் யாகம் வைத்துச் சிறப்புப் பூஜைகளுடன் இடம்பெற்றுவருவது முக்கியமானதாகும்.

திருவெம்பாவைக் காலத்தில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கும் அம்பாளுக்கும் விசேஷமாக, மாணிக்கவாசக சுவாமிகள் உற்சவம், திருவெம்பாவை படித்தல் என்பன கிரமமாக உள்ளன.

எமது ஆலயம் சனிப் பிரீதிக்கு அன்றும் இன்றும் பெயர் போனது. ஆனமையால் புரட்டாதிச் சனிக்குச் சனீஸ்வரப் பெருமான் அபிஷேகம், ஸ்ரீ மஹா விஷ்ணு அபிஷேகம் என்பன பக்திபூர்வமாகச் செய்யப்பட்டு வருகின்றன. கடைசிப் புரட்டாதிச் சனியன்று ஸ்ரீ மஹாவிஷ்ணு உற்சவமும் உள்ளது. கார்த்திகைச் சோமவாரத்தில் நான்கு திங்கட்கிழமையும் சிவனுக்கும் அம்பாளுக்கும் அபிஷேகம், பூஜை, உற்சவம் என்பன உள. கடைசிச் சோமவாரத்தன்று 1008 சங்காபிஷேகம் சிறப்புற இடம்பெற்று வருகின்றது. விளக்கீடு என்று கூறப்படும் திருக்கார்த்திகை தினத்தில் பிள்ளையார், சிவன், அம்பாள், இருதேவியருடன் முருகன் ஆகிய மும்மூர்த்திகளும் எழுந்தருளிச் சொக்கப்பனை ஏற்றும் திருக்காட்சி நடைபெறுவது அற்புதமானது.

ஆனி மாதத்தில் கும்பாபிஷேக தினத்தில் சிவனுக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய எல்லா மூர்த்திகளுக்கும் அபிஷேகம், பூஜை, மணவாளக் கோலத்திருவிழாவும் அதிசிறப்பு வாய்ந்ததாக நடைபெறுகின்றது. ஆடிப் பூரத்தன்று அம்பாளுக்கு 1008 சங்காபிஷேகம், பூர்வகருமம் என்பன உள்ளன.

அத்தோடு சித்திரை திருவோணம், ஆனி உத்திரம், ஆவணி பூர்வ பக்க சதுர்த்தசி, புரட்டாதி பூர்வபக்க சதுர்த்தசி, மாசி பூர்வபக்க சதுர்த்தசியிலும், மார்கழி திருவாதிரை போன்ற வேளையில் ஸ்ரீ நடராஜர் அபிஷேகம் சிறப்புற இடம்பெறு கின்றது.

ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தி, வைகுண்ட ஏகாதசியில் ஸ்ரீ மஹா விஷ்ணு அபிஷேகம் உற்சவம் நடைபெற்று வருகின்றது. ஸ்ரீ வரலக்ஷ்மி விரதத்தன்று விசேஷ அபிஷேகம், பூஜை நடைபெற்று அடியார்க்கு மாங்கல்யச்சரடு வழங்கப்பட்டு வருகின்றது. ஸ்ரீ கேதார கௌரி அம்பாள் 21 நாள் பூஜைகள் சிறப்புற நடைபெற்று முடிவிலன்று விசேஷ பூஜையின் பின்னர் கேதார கௌரிக் காப்பும் அடியார்க்கு வழங்கப்படுவது வழக்கத்தில் உள்ளது. வைகாசி விசாகத்தில் ஆறுமுக சுவாமி அபிஷேகம் உற்சவம் என்பனவும் உள.

இவ்வாறு நித்திய நைமித்தியக் கிரியைகள் சிவாகம முறைகளுக்கு அமைய வழுவாது எமது தேவஸ்தானத்தில் நடைபெற்று வருகின்றன. இவ்விஷயத்தில் எமது ஆலய தர்மகர்த்தா சபையினரும் குறிப்பாக ஆலய தர்மகர்த்தா ஸ்ரீமான் தே.ம. சுவாமிநாதன் அவர்களும் சுவாமி காரியத்தைச் செவ்வனே செய்யப் பக்தியோடு முன்னின்று செயல்படுவது போற்றுதற்குரியது.

நித்திய பூஜைகள் உரிய வேளைகளில் இப்போது சிறப்புற நடைபெற்று வருகின்றன. கோவில் உள்ளும், புறமும் துப்பரவாக உள்ளது. திருநந்தவனம் உள்ளது. ஆகவே மூர்த்தி, தலம், தீர்த்தம் என்பன கொண்ட மாபெருஞ் சிவாலயமாக ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரம் மிளிர்கின்றது. ஆதலால் இப்பெருஞ்சிவாலயததில் சிவப்பணி புரிவது நான் பெற்ற பெரும்பாக்கியம் எனக் கருதுகின்றேன்.

கா.சி: **ஐயா... உங்களோடு எத்தனை குருமார், உதவியாளர்கள் உளர்?**

குரு. ஐயா: என்னுடன் 6 குருமார் உளர். உதவியாளர்கள் 4 பேர் உளர். மேலும் மேளம், பண்டாரம், சுவாமி தூக்குபவர், ஏனைய வேலையாட்களும் இங்கு உளர். இவர்கள் எல்லோருக்கும் ஆலயத்துடனேயே வீடு உள்ளது. ஆதலால் எல்லோரும் சுத்தமாக உரிய வேளைகளில் தமது கடமைகளைச் செய்வது சுலபமாக உள்ளது.

கா.சி: **குருக்கள் ஐயா.... இவ்வாலயத்தில் நீங்கள் செய்யும் எந்தக் கிரியைகளிற் பங்குகொள்வது உங்கள் மனதிற்குப் பிடித்தமானது எனக் கூறுங்கள்.**

குரு. ஐயா: எனக்கு எல்லாக் கிரியைகளும் சரிதான். என்றாலும் மார்கழி திருவாதிரை, தேர், தீர்த்தம், நடேசர் அபிஷேகம், பௌர்ணமி, கும்பாபிஷேக தினம், சோமவார உற்சவம், புரட்டாதி மஹாவிஷ்ணு உற்சவம், விநாயக சதுர்த்தி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

கா.சி: **ஐயா... நீங்கள் கொழும்பில் எவ்வாறான ஆலோசனைகளை ஆலயங்களுக்கு நல்கி வருகின்றீர்கள்.**

குரு. ஐயா: என்னிடம் வந்து விளக்கங்களை, கிரியை முறைகளைக் கேட்டால் மனப்பூர்வமாக நான் கூறி நல்வழிப்படுத்தி வருகின்றேன். முகத்துவாரம் ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் கோவில், ஹேகித்த முருகன் கோவில் என்பன நான் தலைமை தாங்கிக் கும்பாபிஷேகம் செய்து இன்றும் எனது நல்வழிப்படுத்தலில் எனது பங்களிப் போடு விசேஷங்கள் நடைபெற்றுவருகின்றன. ஏனைய ஆலயங்களும் எனது ஆலோசனையைக் கொண்டு நடைபெறுகின்றன.

கா.சி: **ஐயா.... நீங்கள் கொழும்பிலும் பிற இடங்களிலும் செய்துள்ள முக்கிய கோயில் கிரியைகள் பற்றி.....**

குரு. ஐயா: கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் நான் மூன்று மஹா கும்பாபி ஷேகங்களுக்குத் தலைமை தாங்கிச் செய்து உள்ளேன்.

முகத்துவாரம் பிள்ளையார், கொட்டாஞ்சேனை ஸ்ரீ வீரமஹாகாளி, ஹேகித்த முருகன், கொழும்பு இந்துக் கல்லூரி பிள்ளையார், விவேகானந்தா வித்தியாலயம் பிள்ளையார், விவேகானந்த சபைப் பிள்ளையார், அகில இலங்கை இந்து மாமன்ற ஸ்ரீ நடராசர், மயிலணி விஸ்வநாதசுவாமி, இரத்தினபுரி சிவன்கோவில் போன்ற பல கோவில்களில் கும்பாபிஷேகங்களைத் தலைமை தாங்கிச் செய்துள்ளேன். சம்மாங்கோட்டு, செட்டித்தெரு முத்துவிநாயகர், திருகோணமலை பத்திரகாளி முதலான கோவிற் கும்பாபிஷேகங்களிலும் பங்குகொண்டுள்ளேன்.

அவுஸ்திரேலியா மெல்போன் முருகன் ஆலயம் என்னால் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. சுவிட்சர்லாந்து அடிஸ்வீல்ட் முருகன் ஆலயக் கும்பாபிஷேகத்திலும் பங்குகொண்டு உள்ளேன்.

எனது வாழ்வில் ஸ்ரீபொன்னம்பலவாணேஸ்வரத்தில் ஸ்ரீ மஹா யாகத்தைத் தலைமை தாங்கிச் செய்துள்ளேன். அத்தோடு இலங்கையிலே முதன் முதலாக பவித்திரோற்சவத்தைக் கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் தலைமை தாங்கிச் செய்துள்ளமை எனக்கு மன நிறைவை கொடுக்கின்றது.

**கா.சி:** **ஐயா... நீங்கள் இவ்வாறு ஒரு பெரும் பேற்றினைப் பெற்று முதுபெரும் அறிவுகொண்ட சிவாசார்யராக வர நீங்கள் எந்த எந்த சிவாசார்யரின் அறிவுரைகளைப் பெற்றீர்கள்?**

குரு. ஐயா: ஆரம்பத்திலே எனது தமையனாரிடம் கல்வியைப் பெற்றேன். பின்னர் காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் சிவஸ்ரீ கணபதீஸ்வரக் குருக்கள் பின்னர் அச்சுவேலி சிவஸ்ரீ குமாரசுவாமிக் குருக்கள், திருகோணமலை சிவஸ்ரீ பூரணானேந்திரக் குருக்கள் முன்னேஸ்வரம் குரக்கள் ஆகியோரிடம் வேண்டிய வேளையில் உரிய முறையில் ஆலோசனைகளைப் பெற்றுவந்தேன். பின்னர் காஞ்சிபுரம் ஏகாம்பரேஸ்வரர் தேவஸ்தானம் சிவஸ்ரீ ராஜப்பாக் குருக்கள், திருக்கழுக்குன்றம் சிவஸ்ரீ T. C. தியாகராஜக் குருக்கள் அவர்களிடமும் ஆலோசனைகளைப் பெற்று வருகின்றேன்.

**கா.சி:** **இந்த கோவிற் கிரியை பத்ததிகள் இருக்கின்றனவே..... அவை எவ்வகையில் கொழும்பில் உள்ள ஆலயங்களிற் பின்பற்றப்படுகின்றன?**

குரு. ஐயா: ஆகமங்கள் காரணாகமம் காமிகாமம் என இருவகைப்படும். இவை விதிமுறைகளைக் கூறுவன. கிரியை முறைகளைக் கூறுவன பத்ததிகள். அவை அகோர சிவாசார்ய் பத்ததி, அருணாசலோற்சவப் பத்ததி என உள. இலங்கையிலே காரணாகமத்தை அடிப்படையாகக் கொண்ட கோவில்கள் நடைபெறுகின்றன, எல்லாக் கோவில்களும் அகோர சிவாசார்யப் பத்ததியை பின்பற்றுகின்றன. இந்தியாவில் வேறுபாடுகள் உள. அவை அந்தக் கோயிலையும், அக்கோவிற் பத்ததியையும் கொண்டதாக உள்ளது.

எமது மஹோற்சவத்தில் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற முறையில் தேர்த்திருவிழாவை 9ஆம் நாள் வைத்துள்ளோம். ஆனால் சென்னை மயிலாப்பூர் கபாலீஸ்வரர் கோவிலில் தேர்த்திருவிழா 6ஆம் நாள் உள்ளது. அது அந்தக் கோவில் முறை. எது எப்படி இருந்தாலும் சிவாகம முறைக்கு அமைய இலங்கை, இந்தியக் கோவில்களில் பூஜை, உற்சவங்கள் சிறப்பாகச் செய்யப்பட்டு வருகின்றன.

**கா.சி:** **ஐயா... எங்களது யாழ்ப்பாணப் பாரம்பரியத்தில் கோவில் குருக்களையே தலைமைக் குருவாகக் கொண்டு எமது வீட்டு நல்ல விசேஷங்களுக்கு அழைத்துச் செல்வது மரபாக உள்ளது. இவ்வழக்கம் கொழும்பில் எவ்வாறு உள்ளது?**

குரு. ஐயா: எமது பக்தர்களில் அழைப்பின் பேரில் பூர்வ, அபரக்கிரியைகளைச் செய்வது வழக்கத்தில் உள்ளது. திருமணம், வீடு குடிபோதல், சாந்தி கருமங்களையும் அபரக்

கிரியைகளில் வீட்டுக் கிருத்தியம், திவசம் என்பனவற்றைச் செய்து வருகின்றோம்.

**கா.சி:** **ஐயா... கொழும்பில் பண வசதி இருப்பின் கிரியையைக் கூட்டியும் பணவசதி குறைந்திருந்தால் கிரியைகளைக் குறைத்தும் செய்வது பற்றி உங்கள் அபிப்பிராயத்தைத் தயவுசெய்து கூறவும்.**

குரு. ஐயா: கிரியைகள் எல்லோருக்குமே ஒன்றுதான். பணக்காரன் ஏழை என்ற வித்தியாசம் இல்லை. ஒரு சில சந்தர்ப்பத்தில் வசதி அற்று ஒருவர் இருந்தால் அவரை விரதம் இருந்து கோவில் வழிபாட்டைச் செய்து அவர் செய்ய வேண்டிய வழிபாட்டினைச் சிவாகம முறைகளுக்கு அமையச் செய்ய வழிகாட்டியும் வருகின்றோம். குருக்கள் என்றால் எமக்கு எல்லோருமே சிவனடியார்தான்.

**கா.சி:** **ஐயா.... நீங்கள் இவ்வாறு கூறும்போது பக்தரிடம் ஏதும் மாற்றம், அல்லது அவர்களின் வழிபாட்டு நிலையிலே ஏதும் மாற்றத்தைக் காண்கின்றீர்களா?**

குரு. ஐயா: பக்தரின் விரத அனுட்டானம் இப்பொழுது சிறப்பாக உள்ளது. இதனால் மதப் பற்றும் மிகவும் அதிகமாக உள்ளது. கோவில் விரதம், பிதுர்க் கடமைகளைச் செவ்வனே எல்லோருஞ் செய்து வருவது அவர்களின் பக்திமேம்பாட்டைக் காட்டுகின்றது.

என்றாலும் கிரியை விஷயங்களில் ஒருவர் இறந்தால் 31ஆம் நாள் செய்ய வேண்டிய அந்தியேஷ்டி, துடக்குக் கழிவு, வீட்டுக்கிருத்தியம் என்பனவற்றைப் 16ஆம் செய்ய விளைகின்றார்கள். காரணம் வெளிநாட்டில் இருந்து வந்தவர் மீண்டும் அவர் வெளிநாடு செல்ல வேண்டுமாம். அதற்கு அவர் தமது இரத்த உறவுமுறையான ஒருவரை நியமிக்கலாம். அவரும் தாம் வசிக்கும் நாட்டில் 31ம் நாள் அங்கு உள்ள வசதிக்கு அமையக் கிரியைகளைச் செய்தால் பிதுர் திருப்தியடையும், பிதுர் ஆசியும் கிடைக்கும்.

இ தனைவிடுத்து 16ஆம் நாள் செய்தால் கடமையைச் செய்பவர் மட்டும் அல்லாது ஏனைய துடக்குக்காரரான அவரின் இரத்த உறவுக்காரரும் அல்லவா சமய நெறியைத் தவிர்க்கின்றார்கள். நான் அப்படியான வழமைக்கு மாறான கிரியை களைச் செய்வதில்லை.

**கா.சி:** **கிரியைகள்.... சம்பிரதாயம் பற்றி உங்கள் அபிப்பிராயம் பற்றிக் கூறுங்கள். விசேஷமாகக் கூறுவதானால் எமது வீடுகளில் குருக்களைக் கூப்பிட்டுக் கிரியைகளைச் செய்யும்போது சற்றுக் கூடவாகக் கிரியை இருக்கின்றதா?**

குரு. ஐயா: கிரியைகள் ஒன்றுதான். மாற்றம் இல்லை. ஆனால் அவர் அவர் குடும்ப சம்பிரதாயத்தையும் அனுசரித்துக் கிரியைகளைச் செய்து வருகின்றேன்.

**கா.சி:** **ஒரு பூரணமான குருவாக ஒருவர் வர எத்தகைய தகுதி தேவை**

குரு. ஐயா: ஒரு குருவிடம் இருந்து 5 -6 வருடப் பயிற்சி தேவை. அத்தோடு அவரின் சொந்த முயற்சியால் மேலும் அறிவைப் பெறுவது மிக அவசியம்.

கா.சி: **முற்காலக் குருகுலக் கல்வி முறையில் பாடமாக்குவது முக்கியமானது. பாடமாக்கி மந்திரம் சொல்வதே மரபாக இருந்தும் வருகின்றது. இன்று ஒலிப்பதிவு செய்து அதனை ஓடவிட்டுக் கிரியைகளைச் செய்வது சரியானதா?**

குரு. ஐயா: பிழை. மந்திரம் வாயால் சொல்லி உச்சரித்துச் செய்யவேண்டியதாகும். அங்கு தொனி முக்கியம். குருவின் ஆளுமையும் அவர் மற்றவர்களுக்கு கையளிப்பதும் மிக முக்கியமானதாகும்.

கா.சி: **உங்கள் அபிப்பிராயப்படி ஒரு பூரணமான குருவிடம் இருக்கவேண்டிய பண்புகள் என்ன ஐயா....**

குரு. ஐயா: முதலாவது நேர்மை. அடுத்தது அவரது சமயானுஷ்டானம். ஆன்மார்த்தமாகச் சந்தியாவந்தனம், சிவபூஜைகளைச் செய்யவேண்டும். பிரார்த்தனைகளைச் செய்தல் வேண்டும். ஆசார ஒழுக்கத்தினின்றும் சற்றும் நீங்கலாகாது. வேதம், புராணம், ஆகமம் ஆகியனவற்றைக் கற்க வேண்டும். கற்றுக்கொண்டே இருந்து படிப்படியாகத் தமது அறிவைப் பெருக்க வேண்டும். இவைகளைக் கொண்டு மக்களை நல்வழிப்படுத்துதல் அவசியம். இதுவே ஒரு குருவின் கடமையும் ஆகும்.

கா.சி: **தற்போது லௌகீகம் மேலோங்கியுள்ளது. இதனால் உந்தப்பட்ட பிராமணச் சிறார்கள் பாதிப்புக்குள்ளாவர் என்ற ஒரு அபிப்பிராயம் உள்ளது. இது சரியானதா ஐயா....**

குரு. ஐயா: மாதா, பிதா, குரு, தெய்வம் இதுவே எல்லோருக்குமானது. தாய், தகப்பன், குருவிடம் அவர்களிடம் கல்வி பயின்றவர்கள் நேர்மையான வழியிலேயே செல்வர். இவைகளை விடுத்துத் தம்வழியே செல்பவர்களை நாம் நமது பக்கம் இழுக்க முடியாது.

கா.சி: **ஐயா... உங்களைப் போன்ற அறிவுகொண்ட குருமாரை வருங்காலங்களிலும் எமது சந்ததியினர் பெற நாம் என்ன செய்யலாம்.... இப்போது நீங்கள் இது தொடர்பாக என்ன செய்துள்ளீர்கள்?**

குரு. ஐயா: கல்வியை விருத்தி செய்யப் பாடசாலைகளை நிறுவலாம். படித்து முடிந்ததும் தொழில் நியமனம், உரிய ஊதியம், வதிவிட வசதி, உத்தியோக உத்தரவாதம் என்பன முக்கியமானவை. இந்த நோக்குடனேயே 1957 நவம்பர் மாதம் அகில இலங்கைச் சிவப்பிராமண சங்கத்தை நிறுவினோம். நான் முன்மொழிந்த இந்த விடயத்தை எலலோரும் விரும்பி ஏற்றுக்கொண்டனர். கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ ஷண்முகரத்தினக் குருக்கள் இந்தச் சங்க ஆரம்பத்தை அப்போது அங்கீகரித்ததோடு இன்று இச்சங்கத் தலைவராகவும் உள்ளார். கலாசார அமைச்சில் பதிவுபெற்ற சங்கம் அவர்களது வருடாவருடம் அன்பளிப்புப் பணத்தையும் பெற்றது. இதனால், கொழும்பு, ஸ்ரீசிவதர்ம சம்வர்த்தனி வித்தியாலயம், மாவிட்டபுரம் வேத சிவாகமப் பாடசாலை, சுன்னாகம் ஸ்ரீசதாசிவ பிராசின பாடசாலை, நீர்வேலி சங்கரபண்டிதர் வேதப் பாடசாலை, துன்னாலை காசிநாத வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளை நிறுவிப் பிராமணச் சிறார்களுக்கு வேத சிவாகமக் கல்வி, குருகுலப் பயிற்சி என்பனவற்றை அளித்தோம். வருடா வருடம் பரீட்சை வைத்துச்

சான்றிதழ்களை வழங்கினோம். எமது மாணவர்கள் இந்தியப் பரீட்சைகளிலும் தோற்றிச் சித்தியெய்தியுள்ளனர். என்றாலும் 1983க் கலவரத்தால் இக்கல்வி முறையை நடத்த முடியாததால் இப்பொழுது ஸ்ரீபொன்னம்பல வாணேஸ்வரத்தில் மட்டும் ஸ்ரீ சிவதர்ம சம்வர்த்தனி வேதப் பாடசாலையை நடத்துகின்றோம். எம்மைப் போன்று வேறு ஒருசில சங்கங்களும் நடத்துகின்றன.

இந்த விடயத்தில் முன்னர் 1956 முதல் கலாசாரத் திணைக்களம் தன்னிடம் பதிவு செய்த எல்லாச் சங்கங்களுக்கும் ஏதோ ஒரு கொடுப்பனவைக் கொடுத்தது. ஆனால் இந்து கலாசார அமைச்சு, திணைக்களம் என்று வந்தபின்பு அவர்கள் அமைச்சரிடம் செல்லும் சங்கங்களுக்கு மட்டும் பெருமளவு பணத்தைக் கொடுக்கின்றார்கள். ஏனைய சங்கங்களுக்குக் கொடுப்பதில்லை என்ற பரவலான அபிப்பிராயம் இலங்கையில் உள்ளது.

கா.சி: **ஏனைய மதத்தவர் தமது குருவின் தன்நிலை வாழ்வுக்கும், குருமுறை வாழ்வுக்கும் உதவுவது போன்று எமது இந்துக் குருமாருக்கு நாம் எதுவுமே செய்யவில்லை என்று நான் கூறுகின்றேன். இதனால் குருமாரின் வாழ்க்கை முறை திருப்தியற்றும் இருக்கலாம். அது எமது தவறு. இதனை நிவர்த்திக்க நாம் என்ன செய்யலாம்?**

குரு. ஐயா: குருமார் தமது கடமைகளைச் செய்யவேண்டும். அவர்களுக்கான ஊதியம், வதிவிடம், அவர்களது நலன் பேணல் என்பன மிக அவசியமானவை. அதே போன்று பிராமணர் நல்லொழுக்கத்துடன் வாழ்வதாலேயே நீங்கள் கூறிய கௌரவம் அவர்களுக்குக் கிடைக்கின்றது. ஒழுக்கமற்றவர் சமூகத்துக்கே உதவார். மேலும் 4 பிள்ளைகள் ஒரு குடும்பத்தில் இருந்தால் ஒருவரின் கோவில் ஊதியம் மட்டும் போதாது. ஆகவே பிராமண சமூகம் இங்கே கவலைப்படும் நிலையையும்கூறவேண்டும்.

கா.சி: **ஐயா..... யாழ்ப்பாணத்தில் இருந்து குருத்துவத்துக்குக் கொழும்புக்கு வருவது ஒன்று. இப்போது பிற நாடுகளுக்கும் குருவாகச் செல்கின்றார்கள். இது விடயத்தில் பலவித செய்திகள், கருத்துக்கள் உள்ளன. மேல்நாடுகளில் இந்து நடைமுறைகளை நாம் எவ்வாறு பேணலாம்?**

குரு. ஐயா: அங்கு உள்ள சூழலுக்கு அமையக் குருமார் அங்கு தம்மாலான முறையில் செயல்படுகின்றார்கள் என்றே அறிகிறேன். அவர்கள் அங்கு இந்து மரபினைப் பேணுவது... அங்குள்ள மக்களை இந்து சமய வாழ்வுக்கு இட்டுச்செல்வது சிறப்பான விடயம். ஆனால் அவர்கள் தவறு செய்தால் அது கோவில் நிர்வாகத்தையும் அங்குள்ள மக்களையும் பொறுத்தவிடயம். பல மைல் தூரத்தில் இருந்து கொண்டு நாம் எதனையும் அறியாது அபிப்பிராயம் கூற இயலாது.

கா.சி: **ஐயா.... கொழும்பிலே எம்மைப் போன்ற தமிழ் பேசும் இந்துக்களைப் போன்று ஏனைய இந்துக்களும் உங்களிடம் வருவது உண்டா?**

குரு. ஐயா: ஆம்.... வருகிறார்கள் சிந்து பாய்மார், மலையாள அடியார், தெலுங்கு அடியார் எல்லோரும் வருகின்றார்கள். கோவில் அபிஷேகம், அர்ச்சனை வழிபாடுகளைச் செய்கின்றார்கள். இவர்களுக்குத் தனித்தனி வழிபாட்டுத் தலங்கள் உள. அங்கேயும் கிரமமாக வழிபாடுகளைச் செய்து வருகின்றனர். அவர்களது

ஆலயத்திலே அவர்களுக்குக் குரு ஒருவர் உள்ளார். வீடு குடிபுகுதல், லக்ஷ்மி ஹோமம், சாந்தி போன்றவற்றிற்கு எம்மை அழைப்பார்கள்.

கா.சி: ***கொழும்பில் இந்துப் பாரம்பரியங்கள் எனக் கூறுமிடத்து நீங்கள் சிறப்பானவை என எதனைக் கருதுகின்றீர்கள், எவை இந்துப் பாரம்பரியங்கள் அல்லாதவை எனக் கருதுகின்றீர்கள்?***

குரு. ஐயா: இந்துப் பாரம்பரியங்கள் எனக் கூறும் போது கோவில்கள், திருவிழாக்கள், வீட்டிலே தைப்பொங்கல் முதலான இல்ல விழாக்கள், பல்வேறு சங்கங்கள் நடத்தும் சமய விழாக்கள் எல்லாம் வரவேற்கக் கூடியன. சிறப்பாக இந்து மதத்தவரும் இந்து மதம் அல்லாதாரும் இந்த அனுட்டானங்களை மேற்கொள்ளு கின்றார்கள். முறையாக வழிபடுகின்றார்கள்.

அர்ச்சனை அபிஷேகம் செய்யும் போது நட்சத்திரம், ராசி, பெயர் சொல்லியே சங்கற்பஞ்செய்தல் வேண்டும். பலர் நட்சத்திரம், பெயரை மட்டும் கூறுவர். ஆனால் ஒருசிலர் மேடம், மீனம் என ராசியைக் கூறிப் பெயரைச் சொல்கின் றார்கள். இது பிழை. நட்சத்திரம், பெயரையேனும் சொல்லி சங்கற்பிப்பது நல்லது.

கா.சி: ***ஐயா.... பௌத்தர் கூட உங்கள் கோவிலுக்கு வருகின்றார்களே... அவர்கள் எவ்வாறு வழிபாடுகளைச் செய்கின்றார்கள்?***

குரு. ஐயா: அவர்கள் எமது இந்துக்களைப் போலவே அர்ச்சனை, அபிஷேகம் செய்விக் கின்றார்கள். திருநீறு தரித்து, தீர்த்தம் பருகி, சந்தனம், குங்குமம் பொட்டிட்டுக் கடைசியாகச் சண்டேஸ்வரப் பெருமானைக் கைதட்டி வழிபட்டு இல்லஞ் செல்கின்றனர்.

வீட்டிற்கு அத்திவாரம், வீடு குடிபுகுதல், வீட்டில் சாந்தி என்பனவற்றை எம்மைக்கொண்டு வீட்டில் செய்விக்கின்றார்கள். எமது ஆலயத்தில் உள்ள துர்க்கை அம்மாளுக்கு நெய் விளக்கிட்டு வழிபட்டுத் திருமணப் பேற்றினைப் பெற்ற இந்து, பௌத்தப் பெண்கள் அதிகமாக உள்ளனர். பௌத்தர் ஈஸ்வர வணக்கம் ஸ்ரீ விஷ்ணு வழிபாடு விரும்பிச் செய்வதும் வழக்கத்தில் உள்ளது. கணதெய்யோ எனப் பிள்ளையாருக்கு தேங்காய் எம்மைப் போல உடைத்து வழிபடுவதும் வழக்கத்தில் உள்ளது.

இவைமட்டுமல்ல பௌத்தர்கள் இந்து முறைப்படி கல்யாணம் செய்கின்றார்கள். அப்படி ஒரு திருமணத்தை ஆகஸ்ட் முற்பகுதியிற் செய்துள்ளேன். 5 வருடங் களுக்கு முன்பும் இப்படிச் செய்துள்ளேன்.

கா.சி: ***இந்துப் பாரம்பரியங்களை இப்போது உள்ளவர்களுக்கும் பிற்காலச் சந்ததி யினருக்கு ஏற்ற வகையில் வளர்க்க நாம் என்ன செய்ய வேண்டும்?***

குரு. ஐயா: ஆலயத்திற்கு வரும் அடியார்க்கு ஏற்ற வகையில் அவர்களைத் திருப்திப்படுத்த வேண்டும். உரிய விளக்கங்களை அளித்தால் அவர்கள் விளங்கி வழிபாடுகளைச் செய்வர். இப்பொழுது பௌத்த மக்கள் அதிகமாக வருவதால் அவர்களுக்கு மூர்த்தி அம்சம், விரத விளக்கம் எமது திருவிழா விளக்கங்களை அவர்களுக்கு அளித்தால் அவர்கள் வழிபாடு சிறக்கும் எனக் கருதுகின்றேன்.

எமது சிவனடியார்க்கு சமய பிரசங்கம், கல்வி மூலம், பிரசார மூலம் விளக்கங்களை அளிக்கலாம். கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் திருமுறை முற்றோதல் தைப்பூசத்தன்று ஆரம்பித்து மஹாசிவராத்திரியுடன் நிறைவு பெறுகின்றது. கொழும்பு, விவேகானந்த சபையிலும் இப்படியான திருமுறை முற்றோதல் வருடா வருடம் நடைபெறுகின்றது. இவை பக்தி மார்க்கத்திற்கு வித்திடுகின்றன. ஆனால் பெருமளவு மக்கள் பங்குகொள்வதில்லை.

ஆரம்பத்தில் இராமகிருஷ்ண மிஷன் ஆரம்பித்த அறநெறிப் பாடசாலை திரு. பி.பி. தேவராஜ் அமைச்சராக இருந்தபோது இந்து கலாசார திணைக்களம் மூலம் அறநெறிப் பாடசாலைகளைக் கோவில்களிலும், பாடசாலைகளிலும் ஆரம்பித்தது மாணவர்க்கு ஏற்ற ஒரு சமயக் கல்வியாகும். விவேகானந்த சபை நாடளாவிய ரீதியில் சமய பாடப் பரீட்சை வைப்பதும் இளஞ் சந்ததியினரின் சமயக் கல்வி விருத்திக்கே எனலாம். ஆகவே எல்லோருக்கும் சமய அறிவை உரிய முறையில் விளங்கிக்கொள்ள வசதிகளைச் செய்து கொடுப்பது உத்தமமானது.

கா.சி: **கோவில்களில் பணக்காரன், ஏழை என்பதை இயன்றளவு குறைக்கும் வகையில் நாம் சமய நீதியாக எவ்வாறு நடந்துகொள்ளலாம் என நீங்கள் கருதுகின்றீர்கள்?**

குரு. ஐயா: இது ஒரு நல்லகேள்வி. திருமணத்தை எடுத்துக்கொண்டால் ஒரு முகூர்த்தத்தில் 10, 15 திருமணங்களை மாப்பிள்ளை, மணப்பெண்ணுக்கு உடுப்பு, தாலி, மாலை வாங்கிக்கொடுத்து கோவிலிலோ, பொது மன்றத்திலோ திருமண விழாவை கிரியா பூர்வமாகச் செய்து அவர்களுக்குக் கல்யாணச் சாப்பாட்டையும் கொடுக்கலாம். மேலும் விதவைகள், திருமணமாகாத பெண்களுக்கு தையல் இயந்திரம் குடிசைத் தொழில்வாய்ப்புக்களையும் அளிப்பது நல்லது. ஏடு தொடக்குவதும் இப்படிச் செய்யலாம். இவ்வாறு சமூக நலன்களைச் செய்வதால் மத மாற்றம் தவிர்க்கப்படும் என்பது எனது அபிப்பிராயம்.

பொதுவாகச் சமூகக் காரியங்களை இலவசமாகச் செய்யலாம். இதற்குக் கோவில் மட்டுமல்ல இந்து மன்றங்கள், சபைகள் கூட முன்வந்து சமூக மேம்பாட்டிற் காகவும் சமய வளர்ச்சிக்காகவும் செய்வது எல்லோருக்குமே நல்லது. இதனால் இறையருள் எல்லோருக்கும் கிட்டும் என்பது உறுதி.

கா.சி: **குருக்கள் ஐயா..... இவ்வளவு நேரமும் அரிய பெரிய பயனுள்ள விடயங்களைத் தந்தீர்கள். மிக்க நன்றி. வணக்கம்.**

குரு. ஐயா: ஆம்.... நல்லவை எப்பொழுதும் நல்லவையே. நல்ல மனங்கொண்டு இப்படியான விடயங்களைத் தெரிவாக்கி சமய வளர்ச்சிக்கு உதவினீர்கள். எனது நல்லாசிகள்! கொழும்பு வாழ் மக்களும் இலங்கை மக்கள் எல்லோரும் சகல சௌபாக்கிய வாழ்வு வாழ்வார்களாக!

புதிய கதிரேசன் கோயில் அறங்காவலர்

# எஸ். சுப்பிரமணியம் செட்டியாருடனான நேர்காணல்

**நேர்கண்டவர் : பேராசிரியர் கா. சிவத்தம்பி**

---

**கா.சி:** **வணக்கம். திரு. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களே! கொழும்பில் இந்துப் பாரம்பரியம் சம்பந்தமான எமது வெளியீட்டில், நாம் பதிவுசெய்ய விரும்பும் முக்கியமான விடயமொன்றனுக்குத் தாங்கள் பொறுப்பாக இருக்கிறீர்கள். நாட்டுக்கோட்டை நகரத்தார். நிர்வகிக்கும் ஆலயங்களுக்குப் பொதுமுகாமை யாளராக இருக்கும் தாங்கள் இத்தொகுப்பிற்குப் பயன்செய்யக்கூடிய தகவல் களையும், தரவுகளையும் தரவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். முதலாவ தாக, தங்கள் பரிபாலனத்தின் கீழ் கொழும்பிலும், இலங்கையின் பிற இடங் களிலும் உள்ள கோயில்கள் யாவை என்பதைத் தயவுசெய்து சொல்லுங்கள்?**

**எஸ்.சு :** கொழும்பு புதிய கதிரேசன் கோயில், காலி கதிர்வேலாயுத சுவாமி கோயில் ஆகியவற்றின் பிரதம அறங்காவலராக உள்ளேன். திருக்கேதீஸ்வரர் கோயிலுக்கு நிரந்தர அறங்காவலராகவும் உள்ளேன்.

**கா.சி:** **இவற்றைவிடவும் செட்டியார் குலத்தைச் சேர்ந்தவர்களுக்கு வேறு கோயில்கள் இருக்கின்றனவா?**

**எஸ்.சு :** கொழும்பில் பழைய கதிரேசன் கோயில், நீர்கொழும்பு மற்றும் புத்தளத்தில் முத்துமாரி அம்மன் கோயில்கள், கண்டியில் பிள்ளையார் கோயில், மேலும் கம்பளை நாவலப்பிட்டி, புசல்லாவை ஆகிய இடங்களில் தலா ஒரு கோயில் ஆகியன தற்பொழுதும் நகரத்தார் நிர்வாகத்தின் கீழ் உள்ளன. ஏனைய சில இடங்களில் உள்ள கோயில் நிர்வாகங்களை நகரத்தார் நாட்டை விட்டு வெளியேறும்போது ஏனையோரிடம் கையளித்துவிட்டுச் சென்றனர்.

**கா.சி:** ***உதாரணமாக.....?***

எஸ்.சு : பதுளை, ரக்குவானை, குருநாகல் ஆகிய இடங்களிலுள்ள கோயில்கள் தற்போது நகரத்தார் நிர்வாகத்தில் இல்லை.

**கா.சி:** ***நகரத்தாருடைய முக்கிய இயல்பு தாங்கள் செல்லுமிடமெல்லாம் கோயில் அமைப்பது. நகரத்தார் எப்போது இங்கு வந்தார்கள். அவர்கள் நிறுவிய கோயில்கள் யாவை?***

எஸ்.சு : 1800 இல் முதன் முதல் வந்திருக்கலாம். பத்திரம் மூலம் கிடைக்கும் தகவல்கள் 1809 என்கின்றன. அவர்கள் முதன் முதல் வந்த நகரம் யாழ்ப்பாணம். பின்னர் கொழும்பு அதன்பின் காலி, யாழ்ப்பாணத்தில் கதிரேசன் கோயிலும் நகரத்தாராலேயே தொடங்கப் பெற்றது. கலவரத்தின் பின் மற்றவர்களாலே நிர்வகிக்கப்படுகின்றது. இப்பொழுது எஸ்.ரி.ஆர். அதைப் பார்த்துக்கொண்டு வருகின்றார்.

**கா.சி:** ***கொழும்பை எடுத்துக்கொண்டால், வந்து நீங்கள் புறக்கோட்டையில்தானே தங்கியிருந்தீர்கள். அதிலிருந்து தயவுசெய்து ஆரம்பியுங்கள்....***

எஸ்.சு : தனிநபர்களாக வந்திருந்து (குடும்பங்களை விட்டுவிட்டு வந்து) அவர்கள் முதன் முதல் தங்கியிருந்த இடம் செட்டியார்தெரு. கூட்டங் கூட்டமாக சேர்ந்திருக்க அவர்கள் முதலில் சிறிய வேலை அமைத்தே வழிபட்டு வந்தனர். நாங்கள் இப்பொழுது சொல்வோமே 'ஷேர் கப்பிடெல்' என்று அதேபோலே அவர்கள் செட்டித்தெருவில் தம் வியாபாரத்தைத் தொடங்கும் போதெல்லாம் கதிர்வேலாயுத சுவாமி வரவு என்று வைத்துத்தான் தொடங்குவார்கள். எந்தத் தொழில் ஆரம்பித் தாலும் சுவாமிக்கென சிறு பங்கை வைப்பார்கள். அப்பங்கைக் கோயிலுக்குக் கொடுத்து தேவைப்பட்டால் மேலும் கொடுத்து கோயிலை வளர்த்தெடுப்பார்கள். அப்பொழுது ஒரு கட்டுப்பாடு இருந்தது. இப்பொழுது நாம் 'கப்பிடெல்' என்று சொல்வோம் அதை அப்பொழுது அவர்கள் தங்களிடம் எவ்வளவு பணம் இருக்கிறது என்பதை குடத்துள் எழுதிப் போடுவார்கள். ஒவ்வொருவரும் தங்கள் கைப்பட எழுதிப் போடுவார்கள். இப்போது 'செல்ப் டிகளறேஷன்' என்போமே அதுபோல. கடவுளுக்குப் பயந்து ஒருவருமே குறைத்து எழுதமாட்டார்கள். நூற்றுக்கு ஒரு வீதம்? அரை வீதம் என்று கட்டுப்பாடு வைப்பார்கள். அக்கட்டுப் பாட்டின்படி எல்லோரும் பணங்கொடுத்துத் தீரவேண்டும். அப்படிச்சேர்ந்த பணத்தைக் கொண்டுதான் கோயில்கள் கட்டப்பட்டன. அதை விடவும் வருடாவருடம் ஒவ்வொருவரும் குறித்த தொகைப் பணத்தைக் கோயிலுக்கென எழுதவேண்டும். எழுதப்படாவிட்டால்.... அவர்களைத் தண்டிப்பது என்று இல்லை... ஆனால் ஆலோசனைகள் கூறி வசூலித்துவிடுவார்கள்.

**கா.சி:** ***அந்தப் பணத்தைத்தான் மகமை என்பதா?***

எஸ்.சு : ஆம். அதுதான் மகமை. குடமுழுக்குக்கு எழுதப்படுவது ஆஸ்தி. ஆஸ்தி என்றால் கப்பிடெல். இந்த நாட்டில் மட்டுமல்ல பர்மா, மலேஷியா, சிங்கப்பூர், இந்தோனேஷியா எல்லா நாடுகளிலும் இதுவே வழக்கம். ஏனோ தெரியவில்லை கிழக்கு ஆசியா சென்றவர்கள் மேற்கு ஆசியா நோக்கி செல்லவே இல்லை.

காரணம். அங்கு இஸ்லாமிய ஆதிக்கம் கடுமையாக இருந்திருக்கலாம். செட்டிமார்கள் இந்து மதத்தில் ஊறித் திளைத்தவர்கள். முதன்முதலில் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கும்போதே சைவத்தைச் சொல்லிக் கொடுத்து கழுத்திலே உருத்திராட்சம் அணிவித்துத்தான் வாழ்க்கையை ஆரம்பிப்பார்கள். இப்பொழுது இது சிறிது மறைந்து வருகிறது. வெள்ளையரோடு எவ்வளவு நெருங்கிப் பழகியிருந்தாலும் இதுவரை நானறிந்தவரை இரண்டே இரண்டு பேர்தான் மதம் மாறியுள்ளார்கள். வெள்ளையர்களும் மதம் மாறும்படி வற்புறுத்தவில்லை. இவர்களும் இடங்கொடுக்கவில்லை. மதமாற்றமே கிடையாது.

**கா.சி:** ***கிழக்கோடு நெருங்கிய தொடர்பு வர மற்றொரு காரணம். சோழர் காலத்துக்கும் அதற்குப் பின்பும் ஏற்பட்ட கடற்பெருவணிகத்தை அரசர் கொண்டு செலுத்தினாலும் அரசர் சார்பில் அதனை நிறைவேற்றியவர்கள் நகரத்தார். வணிகத்தார் ஆகியோரே. இதற்குக் கல்வெட்டுச் சான்றுகளும் உண்டு. அதனுடைய தொடர்ச்சியாகத்தான் நீங்கள் கிழக்கிற்குச் சென்றிருக்கலாம் என்றும் கருத முடியும்.***

*எஸ்.சு :* *உண்மைதான், மிக ஆதிகாலத்தில் சோழர்களிக் உதவி காரணமாக சென்றதுண்டு. பின் வெள்ளையர் காலத்தில், வெள்ளையர் இவர்களுக்கு தமது வியாபாரத்தைத் தாமே செய்ய விரும்பியமையால், இவர்களைக் கூட்டிக்கொண்டு போகா விட்டாலும் இவர்களின் வருகையை வரவேற்பார்கள்.*

**கா.சி:** ***எங்களுடைய பாரம்பரியத்தில் உங்களுடைய குலத்தவரைத்தான் நகரத்தார் என்று சொல்வதுண்டு. 'சிற்றி பீபள்' ஆரம்பத்தில் சமணர்களும் பௌத்தர்களும் கூட வணிகத்தில் ஈடுபட்டதுண்டு. நாட்டுக்கோட்டை நகரத்தார் பற்றி - நீங்கள் சொன்ன ஒரு குறிப்பிடத்தக்க விடயம் அவர்கள் தொடர்ந்து சைவர்களாக இருந்தனர் என்பது?***

*எஸ்.சு :* *சிலப்பதிகார காலத்திலிருந்து கோவலன் - நாட்டுக்கோட்டை நகரத்தார் வாணிபத்தில் ஈடுபட்டதாக அறியவருகிறது. எனினும் அவை பத்திரபூர்வமாக நிரூபிக்கப்படவில்லை என்பதால் எவ்வளவு தூரம் உண்மையோ என சொல்ல முடியவில்லை. கோவலன் எங்கள் சமூகத்தவன். நாங்கள் முன்பு வாழ்ந்தது காவிரிப்பூம்பட்டினத்திலேதான். அங்கு அடிக்கடி வெள்ளமேற்பட்டதனால் பெண்களை அழைத்துச் செல்வதில்லை பாதுகாப்புக்காக ஒரு சமயத்திலே சோழ அரசன் ஒருவன் இவர்களுடைய பெண்களை தொட்டுவிட்டான் என்ற காரணத்துக்காக பாண்டிய நாட்டுக்குச் சென்றார்கள். அப்போது எமது இடம் பாண்டிய நாட்டுக்குரியதாக இருந்தது. பௌத்தம் ஓரளவு சைவத்தை ஒத்து இருப்பதனால் இந்த கிழக்கு நாடுகளுக்குச் சென்றிருக்கலாம்.*

**கா.சி:** ***கொழும்பில் நகரத்தார் நிறுவிய முதல் கோயில் பழைய கதிரேசன் கோயில். அங்கு முன்பே ஒரு வேல் இருந்ததாகவும் ஒரு செய்தி சொல்லப்படுகிறதே?***

*எஸ்.சு :* *என்னைப் பொறுத்தவரை அவ்வாறான செய்தி ஏதும் தெரியவில்லை. முன்பே ஜிந்துப்பிட்டி கோயிலில் ஒரு வேல் இருந்ததாகவும் அந்த வேலையே இவர்கள்*

வழிபட்டார்கள் என்றும் செய்தி இருக்கிறது. மற்றபடி முன்பே கதிரேசன் கோயிலில் ஒரு வேலிருந்ததாக எனக்குத் தெரியவில்லை. சம்மாங்கோட்டுக் கோயிலையுமே முதலில் ஆரம்பித்தவர்கள் நாட்டுக்கோட்டை நகரத்தார்கள்தான். கோயில்கள் பெருகிவிட்ட காரணத்தால் ஏனைய வியாபார சமூகத்தினரையும் அழைத்து அவர்கள் கையில் கொடுத்துவிட்டார்கள்.

கா.சி: **பழைய கதிரேசன் கோயில்தான் முதல் கோயிலா?**

எஸ்.சு : ஜிந்துப்பிட்டி கோயில்தான் ஆதிக்கோயிலாக இருந்திருக்க வேண்டும். இன்றும் முதலில் அந்தக் கோயிலை வணங்கிவிட்டுத்தான் தொடங்குகிறோம்.

கா.சி: **அடுத்து எந்த கோயில் கட்டப்பட்டது....?**

எஸ்.சு : அடுத்த கோயிலும் செட்டியார் தெருவிலேதான் முதற்கோயிலுக்கு அருகே கட்டப் பட்டது.

கா.சி: **இரண்டாவது கோயில் கட்டப்பட்ட காரணம் என்ன?**

எஸ்.சு : நிர்வாக அதிகாரப் போட்டி. இருவரிடையேயும் பணவசதி இருந்ததால் யார் நிர்வகிப்பது என்ற போட்டியால் வந்தது.

கா.சி: **செட்டியார் தெரு கோயில்கள் அளவு முக்கியத்துவம் வெள்ளவத்தை பம்பலப் பிட்டி கோயில்களுக்கும் இன்று கிடைக்கின்றன. ஆடிவேல் விழா முதலிய வற்றால்.**

எஸ்.சு : 130ஆவது வருட ஆடிவேல் இப்பொழுது நடந்திருப்பது. இப்போது பல கோயில்கள் உருவாகின்றன. எல்லோருமே வேல்விழா நடாத்த ஆரம்பித்திருக் கிறார்கள். இந்த ஒரு வேல்விழாதான் அரசால் அங்கீகரிக்கப்பட்டுத் தேசிய விழாவாக நடத்தப்படுகிறது.

கா.சி: **நாம் 1949 / 50இல் கொழும்பு வந்தபோது அரச அலுவலகங்கள் மூடப்பெற்று தேசாதிபதி, பிரதமர் முதலியோர் கலந்துகொள்வதாக ஆடிவேல்விழா இருந்தது. 1983க்குப் பின் இது குலைந்தது என்று நினைக்கிறேன். சரிதானா?**

எஸ்.சு : சரி, இப்பொழுதும் ஜனாதிபதியும், பிரதமரும் எமது வேல்விழாவுக்கு முக்கியத்துவம் தந்துவருகின்றனர். 2002இல் நாம் கொடுத்த நேரத்துக்கு இரு மணிநேரம் தாமதித்துச் சென்றபோதும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்கள் காத்திருந்து வழிபாட்டார்கள். இவ்வருடம் அவர் இல்லாததால் காரியதரிசி மரியாதையை பெற்றார். இவ்வருடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ நேரில் வந்திருந்து விருந்து தந்து கொண்டாடினார். அவர்களும் இந்து மதத்தை மதிக் கின்றார்கள்.

கா.சி: **பம்பலப்பிட்டி கோயில்கள் எப்போது கட்டப்பட்டன?**

எஸ்.சு : 1839ல் செட்டியார் தெரு கோயில் கட்டப்பட்டது. இந்தக் கோயில் 1874ஆக இருக்கவேண்டும்.

**கா.சி: கோயில் நிர்வாகம் பற்றி...?**

எஸ்.சு : இப்போது ஜனநாயக முறையில் வோட்டுப்போட்டு செய்வது போல அல்லாமல் நியமிக்கும் முறையில் இருந்தது. முன்பு ஆட்கள் அதிகம் என்பதால் ஒருவர் இருவருடமே பதவியிலிருக்கலாம். சுழற்சி முறையில் பதவியில் இருக்கலாம். அப்போது தவறு நிகழாது. எந்தவோரு அறங்காவலர் என்றாலும் பொதுக்குழு கூடி எடுக்கும் தீர்மானத்தை நிறைவேற்றவே அதிகாரம் உள்ளது. தாம் நினைத்ததைச் செய்ய முடியாது. இத்தகைய விடயத்தில் 1800களிலேயே ஜனநாயகத்தன்மை பின்பற்றப்பட்டுள்ளதைக் காணமுடியும்.

**கா.சி: ஒரு முக்கியமான வினா. சாதாரண நகரத்தார் குலத்தை சேர்ந்தவர்களுக்கு கோயில் ஏன் முக்கியமாகிறது?**

எஸ்.சு : கோயில் கூடுவதற்குச் சிறப்பான இடமாகவும், ஒருவருக்கு கஷ்டம் வந்தால் அவருக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்று ஆலோசிப்பதற்குச் சிறந்த இடமாகவும் கோயில் விளங்குகிறது. வணிகர்களைப் பொறுத்த அளவில் கோயில் உதவுவதற்குரிய ஒரு இடமாக உள்ளது. வழிபடுவோர்களுக்கு துன்பம் அல்லது அகௌரவம் நேர்ந்தால் அதைத் தீர்க்க பொதுக்குழு கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும்.

**கா.சி: சாதாரண நகரத்தார் ஒருவருக்கு இது ஒரு முக்கிய தகவல். அது மாத்திரமல்லாமல் சாதாரண நபருக்கு கதிரேசன் பற்றிய நம்பிக்கை என்ன? காலையில் எழும்பி, வணங்கி, வருவாயில் கொடுக்கவேண்டியதைக் கொடுத்து.... இப்படி அந்த வணிகருக்கும் கோயிலுக்குமான நடைமுறைத் தொடர்புபற்றிச் சொல்லுங்கள்.**

எஸ்.சு : அப்போது.... காலையில் எழுந்து குளித்து கோயிலுக்குப் போய்விட்டுத்தான் பிற வேலையில் ஈடுபடுவர். எக்காரியத்தையும் பின்பே தொடங்குவர். சிறியவராயினும் பெரியவராயினும் இதுவே வழக்கம். இப்போது கொஞ்சம் மறைந்து கொண்டு வருகிறது.

**கா.சி: அப்படியானால் வெள்ளிக்கிழமைகளில் கட்டாயம் போவார்களா?**

எஸ்.சு : தினமும் போவார்கள். தவறினால் வெள்ளி, கார்த்திகைகளில் கட்டாயம் போவார்கள். கார்த்திகை மிக முக்கியமானது. கதிரேசனுக்கு உரியது கார்த்திகை. அன்று கண்டிப்பாகப் போவார்கள்.

**கா.சி: உங்களுடைய சொந்த இடம் அல்லாத நிலையில் திருமணம் போன்றன கோயிலை மையமாகக் கொண்டு நடக்குமா? அல்லது....?**

எஸ்.சு : அதில் மட்டும் இன்றும் கண்டிப்பாகவே இருக்கிறோம். எங்கு இந்தியாவில் பிறந்தோமோ - அது சிறு கிராமமே எனினும் அங்குதான் கட்டாயமாகச் சென்று திருமணம் செய்வோம். இங்கு திருமண விருந்து கொடுக்கலாம். தாலிகட்டுவது அங்குதான் கண்டிப்பாக நடாத்தப்படவேண்டும்.

**கா.சி: உங்கள் கோயில்களைப் பொறுத்தவரை வருடாந்த விசேட உற்சவங்கள் எவை?**

எஸ்.சு : அநேகமாக இந்துக்களுக்கு பொருந்தும் எல்லா விசேட தினங்களும் இங்கு கொண்டாடப்படுகின்றன. கண்டிப்பாக கார்த்திகை, மற்றது மஹாசிவராத்திரி

இரண்டும் முக்கியமானவை. கதிர்வேலாயுத சுவாமி கோயில் என்றாலும் சிவனுக்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படும். மார்கழி, திருவெம்பாவையும் முக்கியம். இப்போது 10 நாட்கள் அநுஷ்டிக்கின்றனர். முன்பு நாம் 21 நாள்கள் கடுமையாக விரதம் இருப்போம். விரதமென்றால் இப்போது சாப்பிட்டுவிட்டும் இருக்கின்றனர். ஒருவேளை உணவுடன் நாம் 21 நாள்கள் விரதம் பிடிப்போம்.

**கா.சி:** ***முன்பைப் போலல்லாமல் நகரத்தாருடைய குடும்பங்களும் இப்போ கொழும்பில் உள்ளனவா?***

எஸ்.சு : குறைவு. அரசு சட்டத்தால் மிக மிகக் குறைவு.

**கா.சி:** ***குடும்பத்தார் கோயிலில் கொள்ளும் ஈடுபாடு எத்தகையது?***

எஸ்.சு : நாம் பெண்களை நிர்வாகத்தில் அனுமதிப்பதில்லை. ஆனால் எங்களை விடவும், அதிக பக்தி கொள்பவர்கள் அவர்கள்தாம். நாம் வியாபாரத்தில் கூடிய கவனம் செலுத்துவோம். அவர்கள் கோயிலில் கவனம் செலுத்துவர். குடும்பத்தை விட கூடிய கவனம் எடுப்பர். இன்றும் அப்படித்தான்.

**கா.சி:** ***இங்குள்ள பல பாடசாலைகளுக்கு காணிகள் கொடுத்து உதவியுள்ளீர்கள். இது பெரிய உதவி. அவ் விவரங்களைச் சொல்வீர்களா?***

எஸ்.சு : முதன் முதல் தமிழர்க்கென்ற பாடசாலை புதிய கதிரேசன் கோயிலை ஒட்டியே தொடங்கப்பெற்றது.

**கா.சி:** ***பிள்ளையார் பாடசாலை என்ற பெயரில்....***

எஸ்.சு : ஆம். அதன்பின் பின்னுள்ள காணிகளில் 3 ஏக்கர் ஆண்கள் பள்ளிக்கும், 1 ஏக்கர் பெண்கள் பள்ளிக்கும் கொடுக்கப்பட்டது. இவை யாவும் அரசு கட்டாயத்தால் கொடுக்கப்படவில்லை. நீதியரசர் நாகலிங்கம் போன்றவர்கள் கேட்டுக் கொண்டார்கள். நாமே இவற்றை மனம்விரும்பி வழங்கினோம். நாங்கள் கொடுப்பதாகச் சொன்ன காணியை பின் அவர்கள் அரசைக் கொண்டு சீர்செய்தார்கள் என்பதே உண்மை. பெண்கள் பள்ளிக்கூடம் பற்றி கூறுவதானால், இதை சிங்களப் பள்ளிக்கூடமாக்க அரசு முயற்சித்தது. அவ்வாறு போகக்கூடாது என விரும்பிய நாம் மனமுவந்து தருகிறோம் என தமிழ்ப் பள்ளிக்கூடத்துக்கு கொடுத்தோம். ஒரு பள்ளிக்கூடத்துக்கு நிறுத்தி மறு பள்ளிக்கூடத்துக்கு கொடுத்தோம். அதுதான் உண்மை. பழைய கோயிலாரும் விஸாகா வித்தியாலயம் என்று சொல்லப்படுகிற பௌத்த பாடசாலைக்கு நிலம் வழங்கி உதவியுள்ளார்கள். அப்போது உடையவன் விரும்பினால்த்தான் நிலம் கொடுக்கப்படலாம் என்ற நிலையே இருந்தது. எனவே, நாமாக விரும்பியே கொடுத்தோம். அரசசட்டத்தால் அல்ல.

**கா.சி:** ***இன்று சரஸ்வதி மண்டபம் இருப்பதும் நகரத்தாருடைய காணியல்லவா? அதன் வளர்ச்சிக்கும் உதவியுள்ளீர்கள் என்று சொல்லக் கேள்விப்படுகிறோம்.***

எஸ்.சு : வளர்ச்சிக்கு உதவியுள்ளோம். ஆனால், அந்த இடம் எங்களுடையது அல்ல. அது சம்மாங்கோட்டார் கோயிலுடையது.

**கா.சி:** **3 சொற்கள் சொல்லப்படுவதுண்டு நகரத்தார் பற்றிப் பேசும்போது சம்மாங் கோட்டார், நாட்டுக்கோட்டையார், திருவிளங்கத்தார் என்று இந்த 3 பகுதிகள் பற்றிச் சொல்லுங்கள்.**

எஸ்.சு : சம்மாங்கோட்டார் எனும் பகுதியுள் எந்த ஒரு தனிக்குலமும் கட்டுப்படவில்லை. வணிகர்கள் செட்டியாராக இருக்கலாம், முதலியாராக இருக்கலாம், சைவப் பிள்ளைகளாக இருக்கலாம். திருவிளங்கத்தார் எண்ணெய் வியாபாரிகள். இலங்கையில் எண்ணெய் கம்பெனிகள் வைத்திருந்தவர்கள். நாட்டுக்கோட்டை நகரத்தாருடைய குலத்தொழில் வட்டித்தொழிலும், நிலத் தொழிலும். நிலத் தொழில் என்றால் ஒருவருக்கும் ஏர்பூட்டி உழத்தெரியாது. நிலச் சொந்தக் காரர்களாக இருந்து விளைவிப்பது. சொத்தை ஆளத் தெரியும்.

**கா.சி:** **சம்மாங்கோட்டாரோடு இப்போது எவ்வித உறவுள்ளது?**

எஸ்.சு : இப்போது உறவு இல்லை. புறக்கோட்டையிலுள்ள பிள்ளைமார் தற்போது தனியே விலகிவிட்டனர். கோயிலின் உண்மைச் சொந்தக்காரர் தற்போது இந்தியாவில் உள்ளனர். இவர்கள் அவர்களுடைய ஏஜெண்டுகளாகத் தொழிற்படுகின்றனர்.

**கா.சி:** **இந்தியாவில் யார்?**

எஸ்.சு : பாளையக்காட்டு முதலியார், இன்னும் சில செட்டிமார்.

**கா.சி:** **அப்படியானால் 'சம்மாங்கோடு' என்று பெயர் வந்தது பற்றி....?**

எஸ்.சு : அவ்வாறான பெயர் படகில் வந்த வியாபாரிகளைக் குறிப்பதாக கேள்விப் பட்டுள்ளேன்.

**கா.சி:** **இந்தோனேஷியாவில் 'சம் பங்' என்றால் ஒருவித படகைக் குறிக்கும். அதன் தொடர்ச்சியாக இருக்கலாம்.**

எஸ்.சு : அப்படித்தான் இருக்கவேண்டும். அப்போது 'ஹாபரில்' வந்திறங்கி வியாபாரம் செய்த எல்லோரையும் சம்மாங்கோட்டார் என்றே சொல்வதுண்டு.

**கா.சி:** **இன்றுகூட கொழும்பு முஸ்லிம்களுள் சம்மாங்காரர் என்றொரு பிரிவினர் உள்ளனர். சம்மாந்துறை என மட்டக்களப்பில் ஒரு இடமுளது. இவை எல்லாமே சம்பந்தம் உடையன.**

எஸ்.சு : உண்மை. சம்மாங்கோட்டார் என்பது ஒரு குலம் அல்ல. பல வியாபாரிகளின் பொதுப்பெயர்.

**கா.சி:** **கொழும்பு முஸ்லிம்களைக்கூட இரு வகைப்படுத்துவர். ஒன்று சோனகர், மற்றையது சம்மாங்காரர். சம்மாங்காரர் என்றால் முஸ்லிம் வணிகர். இப்பொழுது இவ்வேறுபாடு குறைந்து வருகிறது.**

எஸ்.சு : உண்மையில், தென்னிலங்கையில் உள்ளவரே சோனகர். கிழக்கிலங்கையில் உள்ளவர்களை சம்மாங்காரர் என்று கூற முடியாது. அவர்கள் விவசாயிகளும், மீன்பிடிகாரரும். 1950இலிருந்து மட்டக்களப்பில் பல காலம் இருந்தவனென்பதால் இதை சொல்ல முடியும். அங்கிருப்போர் வியாபாரிகள் அல்ல.

**கா.சி:** **ஒரு காலத்தில் ஆடிவேல் விழாத்தான் இலங்கைக்குத் தமிழ்நாட்டுக் கலைஞர் பலரைத் தரும் விழாவாக இருந்தது. கே.பி. சுந்தராம்பாள் முதல் பலரைக் கூறலாம். பெரிய இசைவிழாவாக நடக்கும். உங்கள் காலத்தில் யார் வந்துள்ளனர்?**

எஸ்.சு : ஷேக் சின்னமௌலானா பேரர் வந்துள்ளனர். பேச்சுக்கு ருக்மணி அம்மா வந்தார். இங்கேயுமுள்ள கலைஞர்களைப் பயன்படுத்தமுடிந்தது. அடிப்படை மாற்றம் பண்ணாமல் சின்னச் சின்ன மாற்றங்களை ஏற்படுத்தினோம். இவற்றைப் போலவே அன்னதானமும் சிறப்புப் பெற்றது. ஆண்டி - முருகனுக்கு உகந்ததே அன்னதானம். எனவே இதில் கவனமாக இருப்போம். அதேபோல எங்கு கோயில் கட்டினாலும் வேதப் பாடசாலை கட்டுவோம். பிள்ளைகள் தங்க இலவச வசதியும் உணவு வசதியும் கொடுப்போம்.

**கா.சி:** **கோயிலுக்கு அந்தணர்களை நியமிப்பது எப்படி? தமிழ்நாட்டிலிருந்துதான் அழைப்பீர்களா?**

எஸ்.சு : முன்பு இங்கு போதிய அந்தணர் இல்லை. எனவே தமிழகத்திலிருந்து அழைப்போம். 30 வருடமாக இங்கும் போதியளவு அந்தணர் உள்ளனர். ஒரு சிலர் இந்தியாவிலிருந்து வந்துள்ளனர். ஜிந்துப்பிட்டியிலும், மயூரபதியிலும் எமது கோயிலில் யாழ்ப்பாண, மட்டக்களப்பு அந்தணரே உள்ளனர்.

**கா.சி:** **நிர்வாகி என்ற வகையில் அந்தணர்களை எப்படி அவதானிக்கிறீர்கள்?**

எஸ்.சு : தங்கள் கடமையை நிறைவேற்றுகிறார்களா, வேறுபாடில்லாமல் பக்தரைக் கவனிக்கிறார்களா என்று அவதானிப்போம். பூசை நேரத்துக்கு செய்யப்படுகிறதா? ஆலயம் சுத்தமாக உள்ளதாக எனப் பார்ப்போம். அவர்களை நிர்வாகத்தில் ஈடுபட அனுமதிக்கமாட்டோம்.

**கா.சி:** **நிறைவாக கிழக்கு ஆசிய இடங்களிலுள்ள ஏனைய நகரத்தாருடனான தங்கள் தொடர்பு எப்படியுள்ளது?**

எஸ்.சு : என் தந்தையார் பர்மாவில் இருந்தவர். ஆனால் அங்கேயுள்ளவர் இங்கேயோ இங்குள்ளவர் அங்கேயோ நிர்வாக விஷயத்தில் தலையிடமுடியாது. அங்கு சென்றால் தனி மரியாதை கிடைக்கும் அவ்வளவுதான்.

**கா.சி:** **யார் யார் அறங்காவலராக வரலாம்?**

எஸ்.சு : ஒன்று வயது, இரண்டு நடத்தை, மூன்று பணமுடைமை, இவை கொண்டிருக்கிற தீய பழக்கங்கள் அற்ற ஒருவரே நியமனமுறையில் அறங்காவலராகலாம். முன்பு இரு அறங்காவலர் நியமனம் இருந்தது. இப்போது இல்லை.

**கா.சி:** **மாறிவரும் சூழலில் (அரசியல் சூழல், சமுதாய சூழல்) தங்கள் கோயில் எதிர்நோக்கும் சவால்கள் எவை? எவ்வாறு முகம் கொடுக்கின்றீர்கள்?**

எஸ்.சு : அவ்வாறான அனுபவம் எமக்கில்லை. அரசு போதியளவு ஒத்துழைக்கின்றது. குறிப்பாக பௌத்தர் நல்ல ஒத்துழைப்புத் தருகின்றனர். சைவமக்களில்

வழிபடுவோரை நம்பி நடாத்துவதால் அவர்களாலும் பிரச்சினை இல்லை. சிறு குறை இருந்தால் எம்மிடம் சொல்கின்றனர். நாம் நிவர்த்தி செய்துவிடுகிறோம்.

***கா.சி:* உங்களுடைய பொறுப்பை இனி ஒருவருக்கு வழங்கும்போது உங்கள் அனுபவத்திலிருந்து அவருக்கு என்ன புத்திமதி சொல்வீர்கள்? கொழும்பை பின்புலமாக வைத்து என்ன சொல்லுவீர்கள்?**

எஸ்.சு : நாட்டுக்கோட்டை நகரத்தாராகிய நீங்கள் இந்தியா, யாழ்ப்பாணத்தவர் என்ற பாகுபாடின்றி பக்தர்களை நடாத்தி கோயிலைப் புனிதமாகவும் துப்புரவாகவும் பேணும்படி சொல்வேன். வீட்டைவிட துப்புரவாக வைக்கும்படி சொல்வேன். எந்த அரசு வந்தாலும் ஒத்துப்போகச் சொல்வேன். நான் ஐ.தே.கட்சியினன். அதற்காக சுதந்திரக்கட்சியை வெறுக்கவில்லை. பொதுமக்களுடன் அன்பாகப் பேசச் சொல்வேன்.

மயூரபதி அம்மன் கோயில் அறங்காவலர்

# பொன். வல்லிபுரம் அவர்களுடனான நேர்காணல்

## நேர்கண்டவர் : பேராசிரியர் கா. சிவத்தம்பி

கா.சி: மயூரபதி அம்மன் என்று கொழும்பு முழுவதும் இலங்கை முழுவதும் ஓரளவுக்கு கோயில் விஷயங்கள் தெரிந்த தமிழகத்து அன்பர்கள் எல்லோரும் அறியக்கூடிய ஒரு கோயிலை மிக மிகக் குறுகிய காலத்தில் மிகவும் பிரசித்தமான ஒரு நிலைக்கு கொண்டுவந்த அல்லது அது அந்த நிலைக்கு வந்த எல்லாவற்றுக்கும் பின்புறமாக நின்ற திரு. பொன். வல்லிபுரம் அவர்கள். இவருடைய செயற் பாடுகள் இவரிடத்து எந்தவொரு செயற்றிறனுள்ள கருமங்களையும் ஒப்படைக் கலாமென்ற கருத்தினை பொதுவாக இந்து சைவ மக்களிடையேயும் மற்றைய ஏனையவர்களிடமும் ஏற்படுத்தியுள்ளது. இந்த கோயிலின் வளர்ச்சி பற்றியும் அந்த முக்கியத்துவம் பற்றியும் இந்த வளர்ச்சியின் ஊடே காணக்கிடக்கின்ற சில முக்கியமான விடயங்கள் பற்றியும் தெளிவுபடுத்துவதற்காக இந்த நேர்காணல் நடைபெறுகிறது, திரு, வல்லிபுரம் அவர்களே நீங்கள் தயவுசெய்து இந்தக் கோவிலினுடைய முக்கியத்துவத்துவத்தை ஒரு தமிழர் நிலைநின்ற அல்லது ஒரு பொதுவான சமூகநிலைப்பட்ட ஒரு ஆய்வு மாணவன் என்ற முறையில் எப்பிடி பார்க்கின்றேன் என்றால் இது கொழும்பு தெற்கு, தெமட்ட கொடை, கிருலப்பனை போன்ற முழு பிராந்தியத்திற்கும் பொதுவான ஒரு முக்கியமான கோயிலாகும். இந்தப் பிரதேசத்தில் வாழுகின்ற மக்களுடைய ஆத்மார்ந்த தேவைகளையும், அவர்களுடைய இடர்க்கால நிவாரணங்களுக்கும் அதன் விடுகைகளுக்கு உதவுகின்ற தெய்வமாகவும் இந்தக் கோயிலிலுள்ள அம்மன் பூஜிக்கப்படுகிறார். இந்தக் கோயிலினுடைய வளர்ச்சி 1987 இல்

**இருந்துதான் ஆரம்பிக்கின்றது என்று சொன்னால் பலர் ஆச்சரியப்படுவார்கள். தயவுசெய்து நீங்கள் ஏற்கெனவே இந்த கோயிலின் வரலாற்றைத் தந்திருக் கின்றீர்கள் என்றாலும், இந்த கோயிலின் வளர்ச்சி முக்கியமானதொன்றாகக் காணப்படுகின்றது. 1987இல் இந்தக் கோயிலினுடைய நிர்வாகத்தை கையேற்ற சூழலும் அதிலிருந்து எப்பிடி நீங்கள் படிப்படியாக வளர்ச்சியடைந்தீர்கள் என்பதையும் இந்த வளர்ச்சியோடு இத்தனை பக்தகோடியான மக்கள் எவ்வாறு இணைந்து கொண்டார்கள் என்பதையும் தயவுசெய்து சொல்லவும்.**

பொ.வ. : *இதற்கு நான் சரியான பதிலைக்கூறுவதாக இருந்தால், தெய்வ சக்தி என்னை ஆட்கொண்டு இந்த நிலையில் வைத்திருக்கிறது என்று தான் கூறவேண்டும். இறைவனுடைய அருள் இல்லாமல் எதுவுமே நடக்காது என்பது சிறு வயதிலிருந்தே நான் படித்த பாடம். அந்தப் பாடத்திற்கு அமையவோ அல்லது முயற்சியுடையார் இகழ்ச்சியடையார் என்ற வாக்கியத்துக்கு அமையவோ அல்லது தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி மெய்வருத்தக் கூலி தரும் என்ற வள்ளுவ னுடைய குறளுக்கமையவோ, என்னை எந்தவிதத்திலோ ஆன்மிகத் தொழிலை செய்யலாமென்று நான் நினைத்தபோது, நான் இரண்டு வருடத்தில் பென்சன் எடுக்கப் போகின்றேனோ, 1988ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 6ம் திகதி எனக்கு பென்சனாகப் போகின்றது அதற்குப் பின்பு நான் என்ன செய்யப் போகின்றேன். எனக்கு ஓரளவுக்கு பணம் சம்பாதித்தது போதும். இருந்தாலும் ஓடியாடித் திரியாமல் இருக்கமுடியாது. எதையாவது தொழில் செய்யத் தானே வேண்டும் என்று நான் நினைத்துக்கொண்டிருந்த போது, இரண்டு மூன்று பெரிய நண்பர்கள் தங்களுடைய ஸ்தாபனங்களில் வந்திருக்கலாம். நீங்கள் வேலையொன்றும் செய்யத் தேவையில்லை என்றார்கள். சரி பார்ப்போம் என்றிருந்த நேரத்தில் 87ஆம் ஆண்டு திடீரென வந்து என்னை அழைக்கப்பட்டது. ஒரு நாள் என்னை இந்தக் கோயிலுக்கு வருமாறு அழைத்தார்கள். அப்போது இந்த கோயில் அரச மரமும் வேப்பமரமும் பின்னிப் பிணைந்து இருந்த விருட்சத்திற்குக் கீழ் ஒரு சூலம் அதற்கு மேல் ஒரு சிறிய தகரக் கொட்டில், பின்புறத்திலே 2, 3 விக்கிரகங்கள் இருந்தது. அந்த விக்கிரகங்கள் விக்கிரகங்கள் மாதிரியே இல்லை. கல்லு உருவம் மாதிரி எனக்குத் தெரிந்தது. இவ்வளவுத்திலும் ஒரு பூசை நடந்துகொண்டிருந்தது. வெள்ளி யிலும், செவ்வாயிலும் மட்டும் ஒரு ஐயர் பூசை செய்வார். ஒரு அர்ச்சனைக்கு 10 ரூபா வாங்கி அர்ச்சனை செய்வார். இந்த நிலையில்தான் இருந்தது. என்னைக் கூட்டிக்கொண்டு போய் காட்டினார்கள். என்னைக் கூட்டிக்கொண்டு காட்டின போது அந்தக் கோயிலை நான் பார்த்தேன். ஏதோ ஒரு விதமான சக்தி என்னை இழுத்த மாதிரி தோன்றியது. அன்றைக்கு நான் அந்தக் கோயிலைப் பாரமெடுக்கப் போகின்றேன் என்றோ இதைநான் செய்யப் போகிறேன் என்றோ நினைக்க வில்லை. அதை நினைக்க வேண்டிய அவசியமும் எனக்கு இருக்கவில்லை. அது யாருடையதோ கோயில். அதை நினைக்கவேண்டிய அவசியம் எனக்கு ஏன் இருக்கிறது? எங்கேயோ பிறந்த எங்கேயோ வளர்ந்து எனக்கு இந்த மயூரா பிளேசே தெரியாது. இப்படி இருக்கும் போது நான் எப்பிடி இதனை நினைக்க முடியும்? திரும்பிவந்த பின்பு இரு இளைஞர்கள் வந்து என்னைக் கூப்பிட்டார்கள். அசோகன், மோகன் என்ற இரு இளைஞர்கள். அந்தக் கோயிலை வந்து பாருங்கோ*

என்றார்கள். போய்ப்பார்த்தேன். 10 ரூபா கொடுத்து ஒரு அர்ச்சனை செய்தேன். அதோடு நான் வீட்டுக்கு வந்துவிட்டேன். பிறகும் என்னிடம் வந்தார்கள். மூலஸ்தானத்துக்கு கல்லு வாங்கி தாருங்கோ என்று கேட்டார்கள். வாங்கி கொடுத்தேன். 10 நாள் கழித்து வந்தார்கள். பெயின்ட் வாங்கி தாருங்கோ என்று கேட்டார்கள். வாங்கிக் கொடுத்தேன். அதற்குப் பின் வந்து கேட்டார்கள். கும்பாபிஷேகம் செய்ய வேண்டுமென்று போதியளவு ஆக்களும் இல்லை. நாங்கள் தொடங்கிவிட்டோம். ஆக்கள் எங்களைக் கண்டாலே, பயப்படுகிறார்கள், இவன் இன்றைக்கு பசிக்கு காசு கேட்க, கோயிலைக் கட்டி வருகிறான் என்று நினைக் கிறார்கள். ஆனபடியால் ஐயா இதனை நீங்கள் தான் பாரமெடுத்து செய்ய வேண்டும் என்று கேட்டார்கள்.

கா.சி: **நீங்கள் சொல்லுற அவர்கள் என்பது அந்த இடத்தில் வாழ்பவர்கள்....**

பொ.வ. : அந்த இடத்தில் பத்தோ, பதினைந்து பேர் ஒரு கமிட்டியாக இந்த கோயிலுக்காக அமைத்திருந்தார்கள். அவர்களே ஒரு வருமானமும் இல்லாதவர்கள். அப்படி யிருக்கும்போது என்னை இவர்கள் அழைத்த போது அம்பாள் என்னைக் கூப்பிடுகிறா. இந்தக் கோயிலலைப் பாரமெடுத்து செய்யச் சொல்லுகிறாப் போல இருக்கு என்று நினைத்துக் கொண்டேன். அப்படி நினைத்துக்கொண்டே சரி பின் அதற்குரிய நடவடிக்கை எடுக்கிறேன் என்று சொல்லி கும்பாபிஷேகத்திற்கு நாள் வைத்துப் பார்த்தேன். அவசரத்திற்கு செய்வதற்கு குருக்களும் இல்லை. சிலைகளும் இந்தியாவிலிருந்து வரவில்லை. அப்ப எப்படி கும்பாபிஷேகம் செய்யப்போகிறீர்கள் என்று கேட்டால், இந்த ஐயர் நாள் வைக்கச்சொன்னார்கள். நாங்கள் போய் நாள் வைத்து விட்டோம். என்றார்கள். சரி அந்த நேரத்தில் அமைச்சராகவிருந்த இராஜதுரை ஐயா அவர்கள், அவர்களுடன் நான் நெருக்கமாக பழகியதனால் அவரை வைத்தே, அந்த சிலைகளையெல்லாம் இங்கே எடுப்பித்தேன். பிறகு சாமி விசுவநாத ஐயாவைக் கண்டுகொண்டேன். அவர் கும்பாபிஷேகம் செய்கிறேன் என்று சொன்னார். பின் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அப்போதும் அங்கு சின்ன கோயில்தான் இருந்தது. கோயில் வாசல் மண்டபத்தில் வழி இருந்தது. Flats இருக்கிறவர்கள் எல்லோரும் அதைத்தான் பாவிப்பார்கள். குப்பை வண்டிகூட அதாலதான் போகும். கார்கள் வேனுகள் கூட அதாலதான் போகும். அவ்வளவு கஷ்டமான சூழ்நிலை. முன்னுக்குப் நிலமில்லை. பின்னுக்கும் நிலமில்லை. மரத்தைச் சுற்றிய இடந்தான் வேறு ஒன்றுமில்லை. எங்களுக்கென்று வேறு உரிமையில்லை. இந்த நிலையில் அதற்கு ஊடாக குப்பை வண்டியெல்லாம் போகும்போது எங்களால ஒன்றும் செய்ய முடியாது. ஒரு நாள் அந்த கும்பாபிஷேகம் நடந்தபோது, நாங்கள் அன்னதானம் கொடுக்கிறோம். அப்போது அங்கு குப்பை வண்டில் வந்துவிட்டது. குப்பை வண்டி போகவேண்டும் என்றார்கள். குப்பை வண்டி போவதற்காக ஆக்களை எழுப்பிவிட்டு, குப்பை வண்டியை போகவிட்டோம். பிறகு பார்த்தால் அங்குள்ள அம்மா தனது கார் போக வேண்டும் என்று கேட்டா சரி எழும்பி கார் போக இடம் கொடுங்கோ சரி என்ன செய்வது என்று கேட்டேன். பிற சமயத்தவர்கள் அவர்களுக்கு எங்கட சமயம் விளங்காது சரி விடுங்கோ என்று கேட்டேன்.

ஆத்திரம் தாங்கமுடியாமல் ஒரு பையன் கல்லால் காருக்கு எறிந்துவிட்டான். கார் பின் கண்ணாடியெல்லாம் உடைந்துவிட்டது. அவ நின்று சத்தம் போட்டுக் கொண்டு நின்றா பொலிஸ் வந்தது. என்னை பொலிஸ் நிலையம் கூட்டிக்கொண்டு சென்றார்கள். அங்கு பொலிஸ் நிலையத்தில் இருக்கும்போது, அப்போது அனுரா பஸ்தியன் என்ற எம்.பி. வந்து சத்தம் போட்டார். நான் உங்களுக்கு உரிமை தந்ததற்கு நீங்கள் இப்பிடியெல்லாம் செய்யப்படாது என்றார்.

நாங்கள் சொன்னோம். நாங்கள் செய்யவில்லை. மேல இருந்து தேங்காய் விழுந்துதான் உடைச்சது என்று சொல்லி சமாதானமாக அந்த கண்ணாடியை வாங்கித் தருவதாகச் சொல்லி, அவ்வளவோடு அது முடிந்தது. அதில இருந்து எனக்குள்ளே தீர்மானித்துக்கொண்டேன். எப்பிடியாவது, இந்த நிலத்தையும் எடுத்துவிட வேண்டுமென்று அப்போது எனக்கிருந்த நட்பில் திரு. பிரேமதாஸ விடம் அவர் அப்போது ஜனாதிபதியாகவிருந்தவர். அவருடைய நட்பை பிரயோசனப்படுத்த வேண்டும் என்று ஒருநாள், காலையில் White & White Uniform போட்டார்தான் என்னை அவருக்கு தெரியும். அந்த White & White Uniform மோட அவருடைய வீட்டு வாசலுக்கு போய்விட்டேன். வாசல்கேற்றருகில் நான் நிற்கின்றபோது அவர் பெனியனுடனும் டவல் உடனும் குளித்துவிட்டு தீபம் காட்டிக்கொண்டு வருகிறார். கேற்றைப் பார்த்தார். என்னைக் கண்டுவிட்டார். Security ஐ சொன்னார் என்னை உள்ளே விடும்படி..... 'I know you. but forgot your name' என்றார். பிறகு என்னை அறிமுகப்படுத்தியபோது 'yes, yes I know you are custom man' கூறிவிட்டு அமர்ந்தார். எனக்கு தெரியும் அவருக்கு என்ன தேவையென்று அவருக்கு எல்லாம் எழுத்தில் கொடுக்க வேண்டும். என்று எனக்கு முன்பே தெரிந்ததால் எல்லாம் எழுத்தில் தயாரித்து இருந்தேன். கொடுத்தேன் வாசித்தார். பேனையை எடுத்து அதிலேயே உடன் எழுதினார். Lease the land for 33 years immediately. Block the traffic going that way என்று எழுதிவிட்டு மகாலிங்கத்திற்கு உடனே போன் பண்ணினார். do it immediately. என்றார், நான் Hulfsdrop இலிருந்து இங்கு வருவதற்கிடையில் Utility van இங்கு வந்து நிற்கிறது. Block பண்ணுவதற்கு அவ்வளவு வேகமாக அவர் செய்து தந்த வேலை அன்றையோடு அந்தப் பிரச்சினையும் முடிந்தது. பிறகு அங்கால உள்ள ஆக்கள் கேஸ் போட்டார்கள். கேசுக்கும் போனோம். flats இல் உள்ள ஆக்களும் கேஸ் போட்டார்கள். கேசுக்கு போனவுடன் அவர்களுடைய பக்கம் தீர்ந்தது. நாங்கள் சுப்ரீம் கோர்ட்டிற்கு போனோம். சுப்ரீம் கோர்ட்டில் ஜஸ்டிஸ் இராமநாதன் இருந்தார். அவர் சொன்னார் 'you can't do against President's word, therefore this case is dismissed' என்றார். அதற்குப்பிறகு தான் அந்த நிலத்தை எடுத்து, அதற்குப்பின் அம்பாளுக்கு மூன்றுக்கு ஐந்து தேரும் போவதற்கு வழி உண்டாகியிருக்கிறது. அப்படியாக அந்த கோயிலை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக திட்டம் போட்டு ஒவ்வொரு நேரத்திற்கு என்ன செய்ய வேண்டுமோ அதையெல்லாம் செய்து, கோயிலை வளர்த்துக் கொண்டு வருகிறேன். விக்கிரகங்கள் ஒன்றுமில்லை. ஊர்வலத்திற்கு... அப்போது ஒருவரை approach பண்ணி எல்லாம் நான் custom இல் இருந்தபடியாலதான் செய்ய முடிஞ்சது. நான் அந்தக்காலத்தில Railway Guard ஆக இருந்திருந்தால் ஒன்றுமே செய்திருக்க முடியாது. அப்ப ஒரு

ஆளைக் கேட்டேன். செய்வோம் ஐயா என்றார். உடனே சிவா ஆசாரியாரை திருகோணமலையிலிருந்து அழைத்தேன். அப்பாளுக்கு விக்கிரகம் செய்ய வேண்டும். அம்பாள், முருகன் என்று ஒவ்வொரு விக்கிரமாகச் செய்து, அந்த நிலம் வந்தவுடனே மண்டபத்தை அமைத்து...

**கா.சி: நிலம் எத்தனையாம் ஆண்டில் வந்தது?**

பொ.வ. : அது அநேகமாக நாலு வருடத்தில் வந்துவிட்டது. 91ம் ஆண்டில் வந்துவிட்டது. அது வந்தபிறகு அதில் மண்டபத்தை அமைத்தோம். மண்டபம் அமைத்தாலும் மூலஸ்தானம் சிறியதாகவே இருந்தது. அந்த நேரம் எங்களுக்கு வேறு ஒன்றுமே செய்யமுடியவில்லை. அந்தநேரத்தில் அத்துடன் எனக்கு சரியான வழிகாட்டல் களும் இல்லை. வழிகாட்ட வந்தவர்களும் என்ன நிலையில் வருகின்றார்கள் என்றால் தாங்களும் இந்த கமிட்டியில் சேரவேண்டும் தங்களையும் இதற்குள் இணைத்துக்கொள்ளும் நோக்கத்தில்தான் அவை வருகினம். அப்ப நான் பார்த்தேன். இவர்களுடைய mood ஐ அறிந்துவிட்டேன். அவையளுக்கு படிப்பறிவு இல்லை. தொண்டு செய்து பழக்கமில்லை. அவர்களுடைய மதுவும், மாதுவும் கொள்ளையும் கொலையும் ஆயிருந்த இடம். அந்த நேரத்தில் இருந்த இடத்தை கற்பூர வாசனையாக்கி, பத்தி குச்சி வாசனையாக்கி சந்தனமும் குங்குமமும் மணக்க செய்தது அதே எனக்கு ஒரு மனநிறைவுதான். அதேநேரத்தில் யோசித்தேன். அப்பவே நான் உடனே 88ம் ஆண்டே பிள்ளைகளெல்லாரையும் சேர்த்து ஒரு பாடசாலையைத் தொடக்குவோம் என்று அறநெறி பாடசாலையை தொடக்கி னேன். அப்போது அதை சைவப்பாடசாலையென்று தொடக்கியபோது ஏழு மாணவர்கள் தான் சேர்ந்தார்கள். அவர்களுக்கு தேவாரம் என்றால் என்னவென்று தெரியாது. திருவாசகம் என்றால் என்னவென்று தெரியாது. ஒன்றுமே தெரியாது. அப்போது ஒரு பிள்ளையை நான் பாடச்சொன்னேன். அந்தப் பிள்ளை சினிமாப் பாட்டு பாடியது. அப்போது நினைத்தேன். இந்த இடத்தில்தான் என்னோட பணியை தொடக்க வேண்டும் என்று நினைத்தேன். உடனே கொம்பனிதெருவில இருந்தார் இப்போது இறந்துவிட்டார். ஓம் சக்தி என்று போடுவார். சிவப் பிரகாசம் என்று அவரைக் கூட்டிக்கொண்டு வந்து அவர் மூலமாக பஜனை தொடக்கிக் கொண்டு செய்துகொண்டு போகும்போது, பிள்ளைகள் கூடிக்கொண்டு வந்ததால் அந்த இடம் போதாமல் போகவே கோயிலுக்கு முன்னார் உள்ள நிலத்தை எடுக்க வேண்டும் என்று அதற்கொரு திட்டம் வகுத்து கோயிலும் வளரட்டும், சமூகத் தொண்டும் வளரட்டும் என்று ஒரு எண்ணத்தில தொண்டமான் ஐயாவைப் போய் கேட்டேன். ஐயா நீங்கள் தான் இப்போது வெள்ளவத்தை spinning mills க்கு நீங்கள் தான் மினிஸ்டர் அந்த மில்லுக்கு சொந்தமாயிருக்கின்ற இந்த நிலத்தில ஒரு 40 பேர்ச் தந்தீர்களென்றால் நாங்கள் எவ்வளவோ பெரிய காரியமெல்லாம் செய்ய முடியும் என்று கேட்டார். அவரை எனக்கு 58ம் ஆண்டில் இருந்து தெரியும். அப்போது அவர் சொன்னார், 40 பேர்ச் தரமாட்டார்கள். அதற்குக் குறைவாக பார்ப்போமென்று. நான் பேசி எடுத்து தருகிறேனென்று சொன்னார். அதற்குப் பின் ஒன்றுமே நடக்கவில்லை. திரும்பவும் பிரேமதாசாவிடமே சென்றேன். Why you come again என்றார். நிலம் வேண்டும் என்றேன். உடனே அடித்தார். தொண்டமானைக் கேட்டார். அது சும்மாதானே இருக்கிறது என்று தமிழில்

கேட்டார். கொடுத்தால் என்ன? நாளைக்கே கெபினேற்றில் பேப்பர் போடுங்கோ என்றார். மறுநாள் கெபினேற்றில் போட்டாச்சு. எங்களுக்கு 20 பேர்ச், முஸ்லிம்களுக்கு 20 பேர்ச், கிறிஸ்தவர்களுக்கு 20 பேர்ச், பௌத்தர்களுக்கு 30 பேர்ச்... அதன்படி கொடுக்கசொல்லி கட்டளையிட்டார். நீதியாகச் செய்தார். உடனே Surveyor கூப்பிட்டு அளந்து உடனே அந்த நிலம் எங்களுக்கு allocate பண்ணி தந்தாச்சு. இது முஸ்லிம்களுக்கு பிடிக்கவில்லை. எங்களுடைய கோயிலுக்கு பக்கத்தில்தான் அவையளுடையது இருந்தது. அதை அப்புறப்படுத்த வேண்டிவரப் போகின்றதேயென்று மூன்று பெரியவர்கள் நான் பெயர் சொல்ல விரும்ப வில்லை. அங்க போயிருக்கினம். அதற்கிடையில் அவர் விஷயத்தை படித்து விட்டார். date ஐ கொடுத்தார். அவர்களையும் வரச்சொன்னார். என்னையும் வரச் சொன்னார். நானும் புரொக்டர் சிவானந்தனும்தான் போனது. அங்க போனவுடனே இதேமாதிரித்தான் என்னைக் கேட்டார். “What is a problem?” என்று, “Sir, I don't have any problem” என்றேன் திரும்ப அவர்களிடம் கேட்டார். “Sir நீங்கள் முன்னுக்கு அவர்களுக்கு கொடுத்து விட்டீர்கள். எங்களுக்கும் முன்னுக்கே அவர்களுக்குப் பக்கத்தில் தந்தால் நல்லது” என்றார்கள். அங்கால Buddhist Shrine இருக்கிறது. அதை அவர் நன்றாகவே படித்துவிட்டார். உடனே செயலாளரைக் கூப்பிட்டு கேட்டார். கோயிலுக்கு பக்கத்தில வேற land இருக்கிறதா? எனக் கேட்டார். “OK Mohamed, Premadasa never sign. Once he sign he never erased, you know me know” என்றார். இவ்வளவும் தான் அவர் சொன்ன வார்த்தை. அப்பிடியே அவர்கள் பின் கதவால் போய்விட்டார்கள். அதற்குப் பிறகு எனக்கு கண்ணைக் காட்டினார். நான் அவருடன் டீ குடித்துவிட்டு வந்துவிட்டேன். இனி நிலத்தில் கட்டிடத்தை தொடங்குவோம் என நினைத்த போது, என்ன கட்டிடம் கட்டலாம். “Hindu Cultural Centre” அவருக்கு நான் ஒரு வார்த்தை கொடுத்தேன். அவர் என்ன கட்டிடம் கட்டப்போகிறீர்கள் என்று கேட்டபோது, ஒரு School கட்ட போகிறோம் என்று சொன்னேன். very good idea என்றார். நான் பின்பு யோசித்தேன். கோயிலுக்கொரு income வரவேண்டும். அப்போதுதான் கோயிலை நடாத்த முடியும் என்ற எண்ணத்துடன் திட்டம் போட்டேன். ஆனால் யாரையும் ஒன்றும் கேட்கவில்லை. அம்மாவைத்தான் கேட்டேன். வேற ஆக்களைக் கேட்கப் போனால் பத்தை சொல்லுவினம். கமிட்டி போடு என்பினம். கமிட்டியில் எங்களுக்கு நம்பிக்கை யில்லை. ஆனாபடியால் கீழுக்கு கடைகள் போடுவம். இந்தியா மாதிரி கோயிலுக்கும் ஒரு அலங்காரமாக இருக்கும் என்று அப்படியென்று சொல்லி ஒரு plan போட்டம். அதற்கடுத்ததாக முதலாவது மாடியில் ஒரு கலியாண மண்டபம் கட்டுவம். இந்த இடத்தில கலியாண மண்டபம் இல்லை. அலங்காரமாக இவ்வளவு இடத்திற்குள்ளேயே இதைக் கட்டுவோம் என்று தீர்மானித்து ஒரு Architect ஐ பிடிப்போமென்று V. S. துரைராஜாவைப் பிடிப்போமென்று அவரிடம் போனோம். அந்த இடத்தில என்னத்தைக் கட்டப்போறியள்? உங்களால முடியுமா என்று பல நியாயம் சொன்னார். முடியுமென்று தானே நான் வந்திருக்கிறேனென்று சொன்னேன். கையில என்னிடம் காசு இல்லை. ஆனால் நான் கட்டுவேன் என்ற முடிவு எனக்குத் தெரியும். என்று சொன்னேன். அவர் கொஞ்சம் இழுத்தார். நான் வந்துவிட்டேன். மறுநாள் பார்த்தா ஒரு வயோதிப அம்மா ஒரு ஆள் சின்ன கார் வைத்து ஓடித்திரிகிறவ. அவ ஒரு நாள் கோயிலுக்கு வந்தார். அவர் வந்துவிட்டு

அவவிடம் சும்மா கதைக்கும்போது இப்படி கட்டப்போகிறேன் என்று சொன்னேன். யார் Architect என்று கேட்டுவிட்டு, என்னிடம் ஒரு ஆளிருக்கு. நாளைக்கே கூட்டிக்கொண்டு வாறனென்று சொன்னா.... அடுத்தநாள் சரத் பெரேரா என்கின்ற சிங்கள ஆள். அவரைக் கூப்பிட்டு Best man make use என்று சொன்னார். எனக்கும் அவர் ஒரு நீதியான ஆளாகத் தெரிந்தது. அவர் ஒரு கண்டிப்பு கிடையாது. பணத்துக்கு ஆசை கிடையாது. அப்போது 2 மாடிக்குத்தான் என்னிடம் முடிக்க முடியும் போல தெரிந்தது. கடையைக் கட்டியவுடன் தொண்டமான் ஐயாவே கூட்டிக்கொண்டு வந்து திறந்து வைத்தேன். அடுத்தது கலியாண மண்டபத்தை திறந்து வைக்க அதுவும் அவரையே கூட்டிக்கொண்டுவந்து திறந்தேன். அப்போது அந்த நேரத்தில் கலியாண மண்டபத்தை தனிய ஒரு ஆள் செய்யலாமோ என்று யோசித்துக்கொண்டிருக்கும்போது. வீரவாகுக்கு டெலிபோன் எடுத்தால் Secretary கொடுக்கிறானில்லை. வீரவாகுவுக்கும் ஒரு கடிதம் போட்டேன். அப்பாவின் friend என்று நல்லாத்தெரியும். இப்படி உங்களால இயன்ற கூடிய ஒரு உதவியைச் செய்யுங்கோ என்று. அவர் நேரே கோயிலுக்கு வந்துவிட்டார். கோயில் வாசலில் நின்று கண்ணீர் விட்டு அழுகிறார். பிறகு அவர் சொன்னார். கலியாண மண்டபம் முழுக்க நானே கட்டுகிறேன் என்றார். பிறகு எவ்வளவு வரும் என்றார். அந்த நேரத்தில், 40, 45 இலட்சம் வருமென்று சொன்னேன். ஒரு பிளானை போட்டுக்கொண்டு வாங்கோ என்று சொன்னார். ஒரு கிழமைக்குள்ள பிளானைப் போட்டுக்கொண்டு போனேன். அதன்படி 45 இலட்சம் ரூபா தந்து அந்த கலியாண மண்டபத்தைக் கட்டி முடித்தேன். அந்த கலியாண மண்டபத்திற்கு தொண்டமான் ஐயாவினுடைய தாயாரின் பெயராகிய "சுப்பம்மாள் கலியாண மண்டப"மென்று பெயர் சூட்டினேன். அடுத்த மாடியில என்ன செய்யலாமென்று சிந்தித்தபோது, கனவில சில விஷயங்களை தோற்றுவித்தது. இதையொரு கலைக்கூடமாக்க வேண்டும் என்று முடிவெடுத்தேன். வர்த்தகம் வேண்டாம். வர்த்தக நோக்கமாக செய்வதாக இருந்தால் இன்னொரு கலியாண மண்டபத்தைக் கட்டியிருக்கலாம். ஆகவே இதனைக் கலைக்கூடமாக்கி மக்கள் அனைவரும் வந்து இதனைப் பார்வையிட வேண்டும் அம்பாளுடைய திரு அவதாரங்களைக் கலைக்கூடத்தில் வைக்க வேண்டும் என்று அதற்கொரு திட்டத்தைப் போட்டேன் இனி இதற்கொரு சிற்பி வேண்டும். யாரைப் பிடிப்போம் என்று இருக்க இங்கு ஒரு கோயிலில் ஒரு சிற்பி இருக்கிறார். அவர் இந்தியாவிலிருந்து வந்திருக்கிறார். அவர் கெட்டிக்காரர் என்று சொன்னார்கள். போய்ப்பார்த்தேன். young chap. பெயர் ரவிச்சந்திரன். ரவி இன்னென்ன மாதிரி idea இருக்கிறது. நானும் இதைப்பற்றி கேள்விப்பட்டேன் ஐயா அம்பாள் என்னைக் கூப்பிடுகிறாபோல இருக்கு. நானும் வாறன் ஐயா என்றார். வந்து பார்த்தார். plan ஐ போடுவோம் என்றார். பிளான் போட்டாச்சு. அதையும் அம்பாளின் அருளால் செய்தோம். அதற்கு மேலே நாலாவது மாடியில் தியான மண்டபம் கட்டியிருக்கிறோம். தியானம் செய்யும்போது அம்பாளின் அரச மரக்கிளை தெரிய வேண்டும் என்பதற்காக கண்ணாடிகளைப் போட்டிருக்கிறோம். கலியாண மண்டபம், தியான மண்டபத்தை இன்று ஆயிரக்கணக்கான சனம் வந்து பார்த்துக் கொண்டு போகிறார்கள். நூலகமொன்றும் இயங்குகிறது.

**கா.சி:** **லைப்ரரியை பயன்படுத்துவது யாரோ...**

பொ.வ. : students எல்லாம் வருகினம். வந்து வாசிக்கினம். கேட்டு எடுத்துக்கொண்டும் போயினம். பழைய புத்தகங்களும் சிலர் தந்திருக்கினம். அப்பிடியே எல்லாம் நடந்துகொண்டே போகும். நான் பிறந்த மண்ணில முத்துமாரியம்பாளுக்கு என்னென்னவெல்லாம் நடந்ததோ அவையெல்லாம் கொழும்பிலயும் நடக்கின்றது. இப்பிடி நடக்கும்போது, மனசில ஒரு வைராக்கியம் வந்தது. கொழும்பிலும் அம்பாளுடைய அற்புதங்களைக் காட்ட வேண்டும் என்று யோசித்தேன். அப்போதுதான் எனக்கு 88ம் ஆண்டு பாற்குடம் எடுக்கும் எண்ணம் தோன்றியது. அப்போதுதான் பாற்குட பவனியை செய்தால் என்னவென்று தோன்றியது. ஆடிப்பூரம் அம்பாளுக்கு விசேடமான நாள். ஆகவே ஆடிப் பூரத்தன்று பெண்களெல்லாம் பாற்குடம் ஏந்தி வந்து அம்பாளுக்கு அபிஷேகம் செய்வது சிறப்பாக இருக்கும் என்று தோன்றியது. என்னுடைய எண்ணமெல்லாம் அம்பாளுடைய எண்ணம். இதற்குரிய ஏற்பாடு பற்றி அமைச்சர் இராஜதுரையிடம் கதைத்தேன். 30 நாட்களுக்குள் ஒரு தேரை உருவாக்கினேன். மூன்று தேர்களை உருவாக்கி அவை மயிலிட்டியைச் சேர்ந்த செல்வராசா என்பவர்தான் அவைகளை உருவாக்கித் தந்தார்.

1994ஆம் ஆண்டு இலட்சக் கணக்கான சனங்களுக்கு மத்தியில் சித்திரத் தேர் பவனி நடந்தது. அதற்குப்பின் பஞ்சரதம் ஓடினால் என்ன? கேள்வி எழுந்தது. அப்போது அமெரிக்காவிலிருந்து ஒரு அன்பர் வந்திருந்தார். அவரிடம் சிவனுக்கும் அம்பாளுக்கும் தேர் செய்ய உதவி கோரினேன். அவரும் அந்த தேர் இரண்டையும் உருவாக்கித் தந்தார். அதற்குப்பின் ஐந்தாவதாக சண்டேசுவரர் தேரை பொதுமக்கள் உபயமாக செய்வதாகக் கூறினேன். அதற்குப் பின் 2000ம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்வதற்கு முடிவெடுத்தேன். அதற்காக பாலஸ்தாபனம் செய்தபின் பொதுமக்கள் போட்டி போட்டுக்கொண்டு உதவினார்கள். அதன் படியே எல்லாம் இனிதாக கும்பாபிஷேகம் எல்லாம் முடிந்தபின் அம்பாள் ஒருநாள் என்னைக் கேட்டா "இவ்வளவும் செய்கிறாயே எனக்கு தங்கக்குடம் செய்து பால் ஊற்றுவியா?" என்று கேட்டார். "செய்கிறேன் அம்மா" என்றேன். மறுநாள் பௌர்ணமிநாள். அன்று அம்பாளுடைய விருப்பத்தைக் கூறினேன். ஐயா எங்களுடைய நகைகளையெல்லாம் தருகிறோம் என்றார்கள். அதேபோல 32 இலட்சம் ரூபாவில் தங்கக்குடம் செய்து, அஷ்டலட்சுமிகளையும் பதித்து, நவரத்தினங்களைப் பதித்து தங்கக்குடம் செய்தேன். அதற்குப்பின் ஒரு சுவாமி வந்தார். அவர் தந்த வலம்புரி சங்கிற்கு தங்க முலாம் பூசி ஒவ்வொரு பௌர்ணமி யன்று அந்த வலம்புரிச் சங்காலும் அபிஷேகம் செய்கிறோம்.

பின் இன்னொரு அன்பர் அம்பாளுக்கு உடல் முழுவதும் தங்க அங்கி செய்ய வேண்டும் என்று செய்து தந்தார்கள்.

அம்பாளுக்கு வைரத்தில் மூக்குத்தி, தோடு, இரு கண்களும் வைக்கப்பட்டு ஒவ்வொரு பௌர்ணமியன்றும் அலங்காரம் செய்யப்படும். இந்த வருடத்துடன் அம்பாளின் திருவிழாவை 27 ஆக்கியிருக்கிறேன். 27 நாளும் அன்னதானம் நடக்கும்.

**கா.சி:** **நாளொன்றுக்கு இந்த கோயிலில் நடக்கும் நிகழ்ச்சியை சொல்லுங்கோ.**

பொ.வ. : தினமும் அபிஷேகம் நடக்கும். கண்டிப்பாக ஒரு நாளைக்கு ஒரு அபிஷேகம் மட்டும்தான் நடக்கும். கந்தசஷ்டி, சூரன் போர், நவராத்திரி, வேட்டைத் திருவிழா, திருக்கார்த்திகை திருவிழா எல்லாம் நடக்கும்.

**கா.சி:** **மற்றைய மதத்தினரோடு, குறிப்பாக பௌத்த சிங்கள மக்களோடு அவர்களும் வந்து வணங்குகிறார்கள் தானே அவர்களுடைய மரபுகள் என்னமாதிரி...**

பொ.வ. : அவர்களும் அம்பாளில் மிகுந்த பக்தியுள்ளவர்கள். அவர்களுடைய பக்தி எங்களுடைய பக்தியை விட மேலோங்கியது. அதாவது அவர்கள் பத்ரகாளி யம்பாளுக்கு பயப்படுகிறமாதிரி அவர்கள் வேறு எந்த தெய்வத்திற்கும் பயப் படுவதில்லை. ஒரு நேர்த்தியை வைத்து அந்த காரியம் நிறைவேறினால் மறுநாளே தோய்த்து குளித்துவிட்டு அந்த நேர்த்திக்கடனை நிறைவேற்ற வந்து விடுவார்கள். இரத்தினபுரி, பலாங்கொடை, காலி, போன்ற இடங்களில் இருந்தெல்லாம் பக்தர்கள் வருகிறார்கள், எதுவும் எங்களுடைய சமய முறைக்கு மாறாக எதுவுமே செய்ய மாட்டார்கள்.

**கா.சி:** **கோயில் நிர்வாகத்திற்கு உதவி புரிகின்றார்களா?**

பொ.வ. : முன்னம் ஒரு சபை இருந்தது. 1990 ஆம் ஆண்டுதான் அதன் கடைசி கூட்டம் நடைபெற்றது. அதோட அந்த சபை, கமிட்டி எல்லாமே இல்லாமல் போய் விட்டது. முன்னர் அதற்கு தலைவரென்று ஒருவர் இருந்தவர். சுப்பிரமணியம் என்று அவரும் இறந்துவிட்டார். அவர் இறந்தபிறகு அவருடைய தம்பி உபதலைவராகவிருந்தவர். அவரும் இறந்துவிட்டார். அதோட ஒருவருக்குமே இதில் தலையிட விருப்பமில்லை. ஐயா நீங்கள் தான் எல்லாம் உங்களால தான் எல்லாம் நடக்குது. ஆகவே நீங்களே நடத்துங்கோ என்று என்னட்டையே விட்டுப் போய்விட்டார்கள். ஆனால் நான்அதை எனக்குப் பிற்காலத்துக்கு எனக்குப்பிறகு இந்தக் கோயில் எப்பிடி நடக்க வேண்டும் என்பதற்கு நானொரு வரையறை உயில் எழுதி வைத்திருக்கிறேன். அதை எழுதி லோயர் சிவானந்தனிடம் கொடுத்திருக் கிறேன். அவர் அதை முறைப்படி எழுதி என்னிடம் தந்துள்ளார்.

**கா.சி:** **நீங்கள் செய்யும் அறப்பணிகள் என்னென்ன?**

பொ.வ. : சொல்லப்போனால் இந்த அறநெறிப் பாடசாலை. 480 பிள்ளைகள் படிக்கிறார்கள். 16 ஆசிரியர்கள். அவர்களுக்கு சம்பளம் கொடுக்கிறோம். பிள்ளைகளுக்கு மாதத்தில் இரு நாட்கள் மதிய போசனம் கொடுக்கிறோம். இதைவிட காலையில் பிஸ்கட்டும் பாலும் கொடுக்கிறோம். இதைவிட பஜனை வகுப்பு, பண்ணிசை வகுப்பு, நடன வகுப்பு, சங்கீத வகுப்பு நடக்கின்றது. இவைகளெல்லாம் மண்டபத் தில் 2வது மாடியில் நடக்கிறது. அதைவிட மலைநாட்டிலுள்ள பல கோயில் களுக்கு தகுந்த உதவியைச் செய்கிறோம்.

**கா.சி:** **நீங்கள் பல கோயில்களுக்கு உதவி செய்துள்ளதாக அறிகிறோம். கட்டாயமாக நீங்கள் தொடர்ந்து செய்ய வேண்டிய காரியம் இது.**

பொ.வ. : இப்போது மலையகத்தில் ஒரு கோயில் கட்டுப்படுகின்றது.

**கா.சி:** ***நீங்கள் ஒருமுறை என்னுடன் பேசும்போது சொன்னது ஞாபகம் வருகிறது. ஒரு கோயிலினுடைய வளர்ச்சிக்கு அந்தக் கோயிலிலுள்ள மூர்த்திகளும் அடிப்படையாக இருக்கும். அத்தோட கோயில் நிர்வாகம். வழிபடுவதற்கு வருகின்ற பக்தர்கள். இந்த மூன்றும் சிறப்பாக அமையும் போதுதான் கோயில் சிறப்புப் பெறும் என்று கூறினீர்கள்.***

பொ.வ. : ஒரு கோயிலின் சிறப்பாக இருக்கவேண்டும் என்றால் கோயிலின் நிர்வாகம், பக்தர்கள், சிவாச்சாரியார்கள் மூவரும் இணைய வேண்டும். இந்த மூன்றுக்குள்ளும் ஏதாவது பிணக்கு ஏற்பட்டால் அது கோயிலுக்கு கூடாது. கோயில் விஷயங்கள் கோர்ட்டுக்குப் போகக்கூடாது. கடைசிமட்டும் போகக்கூடாது. அத்தோடு சிவாச்சாரியர்களை நிர்வாகத்துக்கு எடுக்க முடியாது. சிவாச்சார்யர்கள் நிர்வாகத்திற்கு கட்டுப்பட்டு நேரந்தவறாமல் பூசை, அபிஷேகங்களை செய்ய வேண்டும். ஆகவே இந்த மூன்றும் இணைந்தால் தான் அக்கோயிலை நடாத்த முடியும்.

**கா.சி:** ***கொழும்பில் முன்னர் பிரசித்தம் பெறாத கோயில்களெல்லாம் இப்போது பிரசித்தமாகிக் கொண்டு வருகிறது. 1988ம் ஆண்டளவில் வளர்ச்சி பெற்று வந்துள்ள இந்த மயூரபதி அம்மன் ஆலயமும் அதற்குள் அடங்குகிறது. கோயில் களுக்கிடையே உங்களுக்குள் பேசித்தீர்க்கின்ற முறைமைகள் ஏதாவது உண்டா?***

பொ.வ. : அப்பிடியொன்றுமேயில்லை. கோயில்களுக்கு ஜாதிப்பெயர், ஊர்ப்பெயர் வைக்கக்கூடாது என்பது என்னுடைய தாழ்ந்த அபிப்பிராயம். நகரத்தார் கோவில், சம்மாங்கோட்டார் கோவில் அப்படியான பெயர்கள் கோவில்களுக்கு இருக்கக்கூடாது. முருகன் கோவில், பிள்ளையார் கோவில் அப்படியாக இருக்க வேண்டும்.

**கா.சி:** ***மயூரபதி அம்மன் கோயில் வளர்ச்சியைத் தொடர்ந்து இங்கு புதிய வணக்க முறைகள் அதிகமாகக் காணப்படுகின்றன. இந்த வணக்க முறைகளை, ஒரு கோயிலின் நிர்வாகி என்ற முறையில் எப்பிடி பார்க்கிறீர்கள்?***

பொ.வ. : வளர்ச்சியை காலத்திற்கு ஏற்றமாதிரி ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும் காலம் அந்த மாதிரி இருக்கிறது. உதாரணத்துக்கு தெஹிவளை ஆஞ்சநேயர் ஆலயத்தை ஒரு சுவாமிகள் தான் நடாத்துகிறார். புலம்பெயர்ந்து சென்றுள்ள எங்களுடைய தமிழர்கள் அங்கு கோயில்களைக் கட்டுகிறார்கள். ஒரு காலத்தில் ஆங்கிலேயர் எங்களுடைய கோயில்களை இடித்து தேவாலயம் கட்டினான். அங்கு இப்போது தேவாலயத்தை இடித்து கோயில் கட்டுகிறார்கள். காலம் மாறியிருக்கிறது சந்தோஷமாக அங்கு சில கோயில்கள் வியாபார ரீதியில் நடாத்துகிறார்கள்.

**கா.சி:** ***உங்களுடைய அபிப்பிராயத்தில் கொழும்பில் இந்து மக்களுடைய தேவைகள் எவையெவை இன்னும் பூர்த்தி செய்யாமல் இருப்பதாகக் கருதுகிறீர்கள்?***

பொ.வ. : பூர்த்தி செய்யாமல் இருப்பதாகக் கூறுவதால் இந்துக்களுக்கென அனாதைகள் இல்லம், வயோதிபர் இல்லம் என்பன இல்லை. இது சம்பந்தமாக நான் பல கோயில் நிர்வாகிகளுடன் கதைத்துள்ளேன். இவை கட்டுவதற்குரிய நிலத்தைக் கொடுங்கோ. நாங்கள் நிர்மாணிக்கிறோம் என்று கூறியிருக்கிறேன். புலம்

பெயர்ந்த தமிழர்கள் பலர் என்னிடம் கேட்டார்கள். நாங்கள் இலட்சக்கணக்கில், கோடிக்கணக்கில் தருகிறோம். நீங்கள் இதைக்கட்டுங்கோ எங்களுடைய தாய் தந்தையரை இங்கு வைத்து பராமரிக்க முடியாது. உங்களால் இது முடியும். ஏன் இதனைச் செய்கிறீர்கள் இல்லையென்று கேட்கிறார்கள். பம்பலப்பிட்டி வெள்ளவத்தை பகுதியில் எங்கள் கோயிலுக்குரிய நிலங்கள் தாராளமாக இருக்கின்றது. இதனை இவர்கள் வழங்கினால் எங்களால் நிர்மாணிக்க முடியும். இது எனது மனசிலுள்ள முக்கியமானவொன்று. அதைப்போல அனாதை இல்லம் ஆண்கள் வேறாகவும் பெண்களுக்கு வேறாகவும் கட்டலாம். இதற்கு துணிவு, தன்னம்பிக்கை, அனுசரணை யாவரையும் அனுசரித்து செல்லும் தன்மையும் வேண்டும்.

கா.சி: **கொழும்பையே சொந்த இடமாகக்கொண்ட வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள மிகவும் வறிய நிலையில் உள்ள இந்து மக்களது கல்வி வளர்ச்சி சம்பந்தமான கோயில் முகாமையாளர்கள் ஏதாவது உதவி செய்ய முடியுமா?**

பொ.வ. : என்னைப் பொறுத்த அளவில் எங்கட கோயிலைப் பொறுத்த அளவில் பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரிப் பிள்ளையார் கோவிலுக்கு உதவி புரிந்து வருகிறேன். இராமநாதன் இந்துமகளிர் கல்லூரிப் பிள்ளையார் கோவிலுக்கு வெள்ளி அங்கி செய்துகொடுத்து, சுற்றிவர மின்சார விளக்கு போட்டு கொடுத்திருக்கிறோம். சமூகத்திற்கு உதவி புரியவும் மனம் வேண்டும். சிலர் இந்துக்கள் என்ற வட்டத்துக்குள் நின்று செய்கிறார்கள். சிலர் குல அடிப்படையில் உதவுகிறார்கள். இது வேதனைக்குரிய விடயம்.

கா.சி: **கொழும்பில் இந்து பாரம்பரியத்தை பலப்படுத்தும் முயற்சியில் நீங்கள் என்ன கூறவிரும்புகிறீர்கள்? கொழும்பிலுள்ள இந்து பாரம்பரியத்தை பாதுகாக்க என்னென்ன செய்யவேண்டும்?**

பொ.வ. : இந்தியாவிலிருந்து வருகின்ற சொற்பொழிவாளர்களை உதாரணத்துக்கு செல்வ கணபதி, சுகி சிவம் போன்றவர்களைப் பாடசாலைகளுக்கு கூட்டிக்கொண்டு போய், பாடசாலை பிள்ளைகளுக்கேற்ற அறிவுரைகளை வழங்க வைப்பது நல்லது.

நியாய துரந்தரர்

# திரு. வே. தேவசேனாதிபதி அவர்களுடனான நேர்காணல்

## நேர்கண்டவர் : பேராசிரியர் கா. சிவத்தம்பி

---

கொழும்பில் இந்து சமயத்துக்காக பல்வேறு காலங்களில் பணிபுரிந்த பெரியவர்கள் பலர் இருக்கிறார்கள். அவர்களைப் பற்றிய வரலாறுகளை இப்பொழுது அறியவும் முடியாமல் இருக்கின்றது. இப்பொழுதுள்ள ஆவணங்களில் அவற்றைப் பெறவும் முடியாதிருக்கின்றது. கோயில்கள் சிலவற்றின் வரலாற்றை இப்பொழுது அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆனால் இந்தப் பிரமுகர்களின் வரலாறு பற்றி ஒன்றுமே தெரியவில்லை. எனவேதான் தேவ சேனாதிபதி அவர்களை அவருடைய குடும்பம், குறிப்பாக தகப்பனார் திரு. வேலாயுதம் பற்றி அறிய அணுகினோம். திரு. வேலாயுதம் அவர்கள் நியாயத்துரந்தரராய் இருந்து அந்தப் பகுதியிலே மிக முக்கியமானவராகவும் இருந்தபடியினால் இவருக்கு குடும்பப் பின்புலத்திலேயே இந்த விடயம் பற்றி அறிந்தவர் என்பது எமக்குத் தெரியும். எனவே திரு. தேவசேனாதிபதி அவர்களிடம் இருந்து இந்தத் தகவல்களை பெற விரும்புகின்றோம்.

*கா.சி:* ***இப்ப நாங்கள் உங்களிடம் அறிய விரும்புவது என்னவென்றால் உங்களுடைய உறவினர்களாக இருந்திருப்பார்கள். உங்களுடைய நண்பர்களாக உங்களுடைய குடும்ப நண்பர்களாக நிச்சயமாக இருந்திருப்பார்கள். இப்போ ஏறத்தாழ 1930 களில் இருந்து முக்கியமானவர்களை எடுத்துக் கொள்வோம். நான் நம்புகிறேன். கல்ஸ்டோபில் சுப்பிரமணியம் ஐயா என்று சொல்லி சட்டத்தரணி இருந்தார். அவர் மகள் எங்களுடன் பல்கலைக்கழகத்தில் படித்தவர். அவர் பெரிய தையல் நாயகி என நம்பிறன். சிவசுப்பிரமணிய ஐயா இந்த கோயில் ஈடுபாடோடு இருந்தவர். அவருடைய ஈடுபாடு எல்லாம் எவ்வாறு இருந்தன?***

தே.சே.: சிவசுப்பிரமணியம் ஐயா கூடுதலாக சித்தாந்தக் கோட்பாட்டை பின்பற்றுபவர். வேதாந்தம் சைவாகம விதிகள் இவற்றையெல்லாம் பலவிதமாக சேர்த்து கட்டுரைகள் எழுதுவார். பத்திரிகையில் எழுதுவார். அதுமாத்திரம் அல்ல பிரதம மந்திரி, ஜனாதிபதி இப்படியான அரசியல்வாதிகளுக்கெல்லாம் உபதேசம் பண்ணிக்கொண்டிருப்பார். அவர் அடிக்கடி தன்னுடைய கட்டுரைகளை சஞ்சிகை களிலும்கூட வெளியிட்டுக் கொண்டிருப்பார். அவரைச் சூழ சுவாமி பக்தர்கள் காவி உடை அணிந்தவர்களும் கூட்டமாக வருவார்கள். குறிப்பாகச் சொல்லப்போனால் சைவசமயத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டவர். தன்னுடைய தொழிலிலும் பார்க்க சைவத்துக்காகவே அர்ப்பணித்து தன்னுடைய வீட்டில்கூட ஒரு பகுதியை அதற்காகவே ஒதுக்கி வைத்திருந்தவர் என்பது எல்லோரும் அறிந்த ஒரு விடய மாகும். அதாவது ஒரு நாளைக்கு 150, 200 கடிதம் சைவ சமயத்தை பரப்புவதற்காக பலருக்கும் எழுதிக் கொண்டிருப்பார். அவர் சிங்களவராக இருந்தால் என்ன கிறிஸ்தவர்களாய் இருந்தால் என்ன முஸ்லிம்களுக்குக் கூட எங்களுடைய சைவசித்தாந்த தத்துவங்களை அரசியல்வாதிகள் தொடக்கம் வியாபாரிகள் வரை பரப்பிக் கொண்டுதான் இருப்பார். அவர் அடிக்கடி, எங்களுடைய சமயம் தொன்மை வாய்ந்தது; பழைமை வாய்ந்தது; விஞ்ஞான ரீதியாகவும் விளக்கம் கொடுப்பது; விஞ்ஞானிகள் கூட எங்களுடைய சமயத்தில் உள்ள விடயங்களைத் தான் பின்பற்றுகிறார்கள் என்பதை எல்லாம் அவர் தெளிவாக எழுதி ஆய்வு செய்து கொண்டு இருப்பார். இவருடைய மகன்தான் மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை ஐயா உட்பட.

**கா.சி: சிவசுப்பிரமணிய ஐயா அவர்களுடைய நண்பர்கள், அவர் காலத்தவர் என்று யார் யாரைச் சொல்லலாம்.**

தே.சே.: சிவசுப்பிரமணிய ஐயாவினுடைய காலத்தவர் என்று சொல்லப்போனால் அவர் வாழ்ந்த காலத்தில் இருந்தவர்கள். ஏ. சி. நடராஜா, வைத்திய கலாநிதி வேலாயுதப் பிள்ளை, சட்டத்தரணி துரைசிங்கம் இவ்வாறு பலர் காணப்பட்டார்கள்.

**கா.சி: துரைசிங்கம் ஐயாவை நல்ல ஒரு கொமினிஸ்டாகத் தெரியும். அதேவேளை நல்ல இந்துவாகவும் வாழ்ந்தவர். அதைப்பற்றி தயவுசெய்து சொல்லுங்கோ.**

தே.சே. : அவர் அரசியல் நோக்கத்துக்காக லெனினுடைய புத்தகங்களை, கார்ல் மாக்சினுடைய புத்தகங்களை படித்ததில் அவர் கொமினிசக் கொள்கையை பின்பற்றினாலும் உண்மையில் அவர் வீட்டிலும் மற்றைய இடங்களிலும் அவர் ஒரு நல்ல இந்துதான். அடிக்கடி கோயில் செல்வார். கோயிலுக்குப் போய் கோயில் விழாக்களில் கலந்துகொள்வார். அவர் அரசியலில் மட்டும் பீற்றர் கனமனோடு சேர்ந்த கொமினிசத்தை பின்பற்றியவர். ஆனால் அவர் உண்மையில் வாழ்க்கை முறையில் தீவிரமாக ஒரு சமயவாதியாகத்தான் இருந்தார். ஆகவே அவர் சகல கோயிலுக்கும் போவார். அவருடைய பிள்ளைகள்கூட நல்ல சைவசமயி களாகத்தான் இருக்கிறார்கள்.

**கா.சி: அவர் இரண்டு புத்தகம் போட்டிருக்கிறார். அற்புதமான கட்டுரைத் தொகுப்பு ஒவ்வொன்றும் 700, 800 ரூபா. கொழும்பில் உள்ள முக்கியமான கட்டுரைகளை எல்லாம் தொகுத்துப் போட்டிருக்கிறார். அவரை விட வேறுயாரைச் சொல்வீர்கள்?**

தே.சே. : *அவருடைய சொந்தக்காரராகயிருந்த ஏ. சி. நடராஜா அவர்கள். அவர் விவேகானந்த சபையில் பலகாலம் உப தலைவராகவும் கடைசி காலங்களில் தலைவராகவும் இருந்தவர். அவர் பஜனை எல்லாம்வீட்டிலே ஞாயிற்றுக்கிழமை வைப்பவர். திவ்ய ஜீவன சங்கத்தினர் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் அவருடைய வீட்டில் பஜனை கள் செய்வார்கள். வீட்டில் பிரசாதம் எல்லாம் அவருடைய அன்பு மனைவியார் தயாரித்து எல்லோருக்கும் வழங்குவார், வீதி பஜனைகள் வரும்போது அந்த ரோட்டில் அவர்கள் அந்த கதவைத் திறந்து விளக்கேற்றி, கும்பங்கள் எல்லாம் வைத்து ஆக்களை எல்லாம் அவர் அனுசரித்து நடப்பார். அவருடைய வீடு கல்ட்டோப்ஸ் ஸ்றீட்டில் இருந்தது இப்போ அவருடைய மகன் ஒரு சட்டத்தரணி. ஜயந்தன் என்று சொல்லி. மகள் ஒரு வைத்தியராக இருக்கிறார். வெளிநாட்டில் இவர், சமயத்தோடு ரொம்ப தொடர்புகொண்டவர். அந்தக் காலத்தில் அகில இலங்கை இந்து காங்கிரசில் கூட ஒரு அங்கத்தவராயிருந்தவர். இவர் அதிக தீவிரமாக சைவ சமய பாடசாலைகளில் விவேகானந்த சபை பரீட்சை வைப்பதற்கு முன்னோடியாக ஓடித் திரிவார். இவர் அதிகமாக ராஜபுவனேஸ்வரன் போன்றோ ருக்கு ஒத்துழைப்பு கொடுத்தவர்.*

கா.சி: **கேணல் ஆர். சபாநாயகம் என்று ஒருவர் நாங்கள் மாணவராய் இருந்த காலத்தில் விவேகானந்த சபையின் தலைவராக இருந்தவர். அவரைப்பற்றி ஏதாவது கேள்விப் பட்டீர்களோ?**

தே.சே. : *கேணல் என்ற ஆமிக் கேணல் சபாநாயகம் என்ற ஒருவர் இருந்தவர் என்று என்னு டைய தந்தையார் சொல்லுவார். அவர்தான் ஆதிகாலத்தில் இந்த விவேகானந்த சபையை பலப்படுத்த வேண்டும் என மிகவும் பாடுபட்டவர். அந்த சபைக்கென தனிஒரு கட்டடம் இருக்கவேண்டும். அதை விஸ்தரிக்க வேண்டும். அதற்குப் பிறகுதான் சபையாக இயங்கிய பள்ளிக்கூடத்தின் ஒரு பகுதியை அரசாங்கம் சுவீகரித்து விவேகானந்த மகாவித்தியாலயம் என்ற ஒரு இடம்வந்தது. அப்ப அவர்கள் அந்த வித்தியாலயம் தங்களுக்குள் இருக்கவேண்டும் என்று போராடிய வருள் கேணல் சபாநாயகமும் ஒருவர் என்பதை நான் கேள்விப்பட்டிருக்கிறேன்.*

கா.சி: **இவர்களைவிட அக்கால கட்டத்தில் முக்கியமானவர்களாக வெள்ளவத்தையில் டொக்டர் நல்லநாதன் இருந்து ரொம்ப முக்கியமான பங்காற்றினார். அவருடைய மனைவியார் திருமதி நல்லநாதன்தான் கொழும்பு சைவமங்கையர் கழகத்தின் நடவடிக்கைகளில் ஈடுபட்டவர். நல்லநாதன் அவர்கள் ஆயுர்வேத கல்லூரியில் ஒரு பேராசிரியராக இருந்துகொண்டு இந்து சங்கம் சம்பந்தமாக வளர்ச்சிகளுக்கு காரணமாக இருந்தவர். அவரைப்பற்றி ஏதாவது தெரியுமா?**

தே.சே. : *அவரை அவ்வளவாகக் கேள்விப்படவில்லை.*

கா.சி: **கே. ராமச்சந்திரா என்று சொல்லி, ரா. சுந்தரலிங்கம், கண்டக்டர் பரராசசிங்கம், இவருடைய தகப்பனார் மிஸ்ர ராமச்சந்திர என்று சொல்லி கலங்கமவில் இருந்து ஒரு ‘Religious Digest’ என்ற சஞ்சிகை எல்லாம் போட்டுக் கொண்டு இருந்தவர். அவர் பற்றி சொல்லுங்களேன்.**

தே.சே. : ஓம். அந்தக் காலத்தில் நான் நினைக்கிறேன் மாதத்துக்கொரு முறையாக இருக்க வேண்டும் ராமச்சந்திர அவர்கள் புத்தகம் வெளியிடுவார். சஞ்சிகை வெளியிடுவார். கட்டுரைகள், பலருடைய கட்டுரைகளை ஒன்று சேர்த்து வெளியிடுவார். அன்று நான் கேள்விப்பட்டிருக்கிறேன். இதைப் போன்று தான் நாவலப்பிட்டியிலும் ஆத்ம ஜோதி முத்தையா அவர்கள் அதை ஒத்த சஞ்சிகை வெளியிட்டிருக்கிறார். தற்போதில்லை. அவருடைய புத்தகங்கள் வாசிகசாலையில் பயனற்று இருக்கு. கிட்டத்தட்ட அந்த இரண்டு புத்தகத்தையும் ஒப்பிட்டால் ஒரே புத்தகமாக இருக்கும்.

**கா.சி: இதைவிட உங்களுடைய காலத்தில உங்களுடைய தந்தையாரின் காலத்தில் இந்து சமயம் சார்ந்து கொட்டாஞ்சேனையில் பணிபுரிந்த பிரபலமான ஆட்கள் பற்றி தயவுசெய்து சொல்லுங்கோ.**

தே.சே.: மிகப் பிரபலமான ஆட்களை 5 பகுதியாக பிரிக்கலாம்.

1. யாழில் இருந்து வந்து சேர்ந்தவர்கள் - வடமாகாணம்
2. கிழக்கு மாகாணத்தை சேர்ந்தவர்கள்
3. கொழும்பிலே ஆதிதொட்டு இருந்தவர்கள்
4. மலையகத்தைச் சேர்ந்து வந்தவர்கள்
5. இந்தியாவில் இருந்து குடியேறி இருந்து வந்தவர்கள்

இப்படியாக பல பகுதியினராய்ப் பிரிக்கலாம். இப்ப யாழ்ப்பாணத்தவர்களைச் சொல்லப்போனால் துரைசிங்கம் ஐயா, ஏ. சி. நடராஜா, சிவசுப்ரமணியம் ஐயா, அடுத்து நமசிவாயம். இப்படிப் பலரை கூறிக்கொண்டு போகலாம். ஆனால் மலையகத்தைச் சேர்ந்தவராக இருந்தால் ஆத்மஜோதி முத்தையா அவரும் அவருடைய கூட்டத்தாரும் சமயத்தை பரப்புவதற்காக இருந்திருக்கிறார்கள்.

அதே மாதிரி செட்டியார்மார்கள், இரண்டுவிதமான செட்டியார்கள் இருந்திருக் கிறார்கள்.1. நாட்டுக்கோட்டை செட்டிமார் 2. வாணிபச் செட்டிமார்கள். இந்த வாணிபச் செட்டிமாரில் கு. பிச்சயன் செட்டியார் என்ற ஒரு செட்டியார் இருந்திருக் கிறார். அவர் மிகவும் பிரபல்யமான கோடீஸ்வரன். நான் நினைக்கிறன் முழு பண்டாரநாயக்க மாவத்தையும் அவருக்குத்தான் சொந்தம். அவர் நெடுகவும் வர்த்தகத்தில் ஈடுபடுவாரே ஒளிய அந்தக் காலத்தில அதிக பக்தி என்று இல்லை. இப்படி இருக்கும் போது அவரை ஒருநாள் முருகன் கனவில் தோன்றி ''நான் குப்பைத் தொட்டியில் நீர்கொழும்பில் கிடக்கிறேன் என்று ஓர் இடத்தைக் காட்டி என்னைத் தவிக்கவிட்டிருக்கிறாயே இங்க வந்து பிரதிஷ்டை பண்ணு'' என்று சொல்லியிருக்கிறார். இவ்வாறு 4 தரம் தொடர்ந்து கனவு கண்டபடியால் அந்தக் காலத்தில் வாகனமும் இல்லை. மாட்டு வண்டியில் போய் அந்தக் குப்பைத் தொட்டியை தோண்டிக்கொண்டு போனால் மூலவருடைய சிலை, வள்ளி தெய்வயானை சமேதராக காணப்பட்டார். அதைக் கொழும்புக்கு மாட்டு வண்டி யில் கொண்டு வந்து பிரதிஷ்டை பண்ணித்தான் இந்த தட்டாத்தெரு சிவசுப்பிர மணிய சுவாமி கோவில் ஏற்படுத்தப்பட்டது. இன்டைக்கும் அந்த சிலை இப்போ மூலஸ்தானத்தில் இல்லை. ஏனென்றால் அந்த சிலையில் சிதைவுகள் ஏற்பட்டபடியால் அந்தக் கோயிலுக்குப் பின்னாலேயே அதைப் பிரதிஷ்டை பண்ணி

வைத்திருக்கிறார்கள். அந்தச் செட்டியார் இலங்கையை விட்டுப் போகும்போது இந்தக் கோயில் காணியையும் நன்கொடை கொடுத்து கோயிலுக்கு சொந்தமாக உள்ள 100 கடைகள், 259, 300 வீடுகள் எல்லாவற்றையும் கோயிலுக்கு நன்கொடை கொடுத்துவிட்டு போய்விட்டார். இப்ப அவை எல்லாம் அதே இடத்தில்தான். பள்ளிக்கூடம் ஒன்று இயங்கியது. அதாவது கணபதி வித்தியாலயம் என்ற பள்ளிக் கூடம். கோயிலுக்குப் பின்னால் பிறகு அந்தப் பள்ளிக்கூடம் இயங்கி இப்போது அது முன்னர் சுதந்திரன் பேப்பர் இருந்த இடத்தில் அரசாங்கத்தினால் கொடுக்கப்பட 2, 3 மாடிக் கட்டிடத்தில் இயங்குகின்றது.

இன்று செட்டியாரின் சொத்துக்களில் இருந்துதான் கோயில் வருமானம் வாடகை பராமரிக்கப்படுகிறது. ஆனால் பெரும்பான்மையான வீடுகள் எல்லாம் பீற்ற கெனமன் அவர்களால் கொண்டுவரப்பட்ட வீட்டு உச்சவரம்புச் சட்டத்தின் கீழ் சுவீகரிக்கப்பட்டு அங்கு வாடகைக்கு இருந்த குடியிருப்பாளருக்கு அவை உறுதியாக கொடுக்கப்பட்டது. எனவே கோயிலுடைய சொத்துக்கள் இப்போது மிகவும் பாதியாக குறைந்துவிட்டது.

**கா.சி:** **இவரை விட வேறு யாரைப் பற்றிச் சொல்வீர்கள்?**

தே.சே.: முந்தி ஜிந்துப்பிட்டியில் கணபதியாப்பிள்ளை என்று ஒருவர் இருந்திருக்கிறார். சைவவேளாளர். அவர்களும் அந்தக் கோயிலை ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமி கோயிலில் அதிக தீவிரம் கொண்டவர். விடியக்காலை திருவெம்பா 10 நாட்களும் 300, 400 பிள்ளைகளை எல்லாம் ஒலிபெருக்கி மூலம் ஆக்களையும் எழுப்பி கிட்டத்தட்ட 29, 30 வருடமாக இச்சேவையைச் செய்திருக்கிறார் அவர். தற்போது இந்தியா போய்விட்டார்.

**கா.சி:** **உங்களுக்கு ஒரு முக்கியமான விடயம் தெரியும் கொழும்பில மிகமுக்கியமான 2 சத்திரங்கள் உள்ளன. 1. தம்பையா சத்திரம், 2. ராம்லால் சேட் மகாராஜா சத்திரம். இந்த மகாராஜா சத்திரம் பற்றி தயவுசெய்து சொல்லுங்கோ.**

தே.சே.: இந்த மகாராஜ சத்திரம் ராம்லால் மகாராஜ சத்திரம் ஜிந்துப்பிட்டி சிவசுப்பிரமணிய சுவாமிகோவிலுக்கு முன்னால் உள்ளது. இந்தச் சத்திர வளவுக்குள்ளே ஒரு விநாயகப்பெருமானுடைய கோவில் உள்ளது. மற்றது வெளியூரில் இருந்து வந்தவர்கள் அங்கே இருக்கின்ற சத்திரத்தின் ஓர் அறையில் நான்கு அல்லது ஐந்து நாட்கள் தங்கலாம் என்றுதான் இது உருவாக்கப்பட்டது. கொழும்புக்கு வருகின்ற பலர் இந்தச் சத்திரத்தில் இலவசமாக இருக்கலாம் அல்லது தான் விரும்பியதைக் கொடுத்துவிட்டு போகலாம். அப்படியான விடுதி முறையுடன்தான் இருந்தது. இது ஒரு பெரிய முயற்சி. திருக்கேதீஸ்வரத்தின் மடங்கள் ஒரு காலத்தில் இருந்த மாதிரி இது காணப்பட்டது. ஆனால் காலம் செல்லச்செல்ல இதற்கு வந்த பல (ரஸ்ரிகள்) அமைப்புக்கள், இதை அதிகார துஷ்பிரயோகம் செய்து இவற்றை எல்லாம் வாடகைக்கு கொடுத்துவிட்டார்கள். இப்போது அச்சத்திரத்தில் உள்ள சகல அறைகளும் வீடுகளாக்கி வாடகைக்கு எடுக்கப்பட்டு அவர்கள் வாடகை கொடுக்காமல் குடும்பம் குடும்பமாகப் பெருகி அது ஒரு பெரிய தோட்டமாகத்தான் காணப்படுகிறது.

**கா.சி:** **இது சம்பந்தமாகத்தான் உங்களிடம், அதாவது நீங்கள் இந்த இந்து விவகாரங்களில் ஆர்வம் காட்டுகிறீர்கள் என்ற வகையிலே எங்களுடைய ஆய்வாளர்கள் அந்த இடத்தைச் சென்று பார்த்தபொழுது வாசலை மறைத்தே எத்தனையோ குடும்பங்கள் இருக்கின்றன. அவற்றில் பல இந்துக்கள் அல்லாதவர்கள் போலத் தெரிகின்றது. அவர்களை எழும்பச் சொன்னால் எழும்ப மறுக்கிறார்களாம். சிவப்பிரகாசம்மா என்று சொல்லப்படுகின்ற பெண்மணி இவர்களுக்கு சத்திரத்துக்கு பின்னால் உள்ள காணி கொடுக்க முன்வந்துள்ளனராம். இதுபற்றி?**

தே.சே.: இது சம்பந்தமாக நானும் பல தடவை இந்த சிவப்பிரகாசம்மாளுடன் சேர்ந்து இவர்களுடன் கதைத்திருக்கிறேன். ஆனால் அங்கிருப்பவர்கள் குடும்பங்களும் பெருகிவிட்டன என்று கூறி, தாங்கள் உழைத்த பணம் எல்லாத்தையும் 2, 3 மாடிக் கட்டடமாக்க கட்டியிருப்பதால் அவர்கள் இப்போது பின்னுக்கு இருக்கின்ற வெறும் காணியில் இருக்க மறுக்கிறார்கள். அவர்கள் ரோட்டுக் கரையோரத்தில் இருக்க வேண்டும் என்று விரும்பி கோயில் பின்னுக்கு இருக்கட்டுக்கும். தாங்கள் வீதிக்கருகாமையில் இருக்க வேண்டும் என்கின்றனர். சுவாமியைப் பற்றிய அக்கறை இல்லை. தங்களுடைய சொகுசை மாத்திரம் தான் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்கு எதிராக வழக்குகள் போட்டாலும் அதுவும் சில சந்தர்ப்பங்களில் கடினமாக இருக்கலாம். ஏன்என்டா சில ரெசீட்டுகள் வைத்திருக் கிறார்கள், தாங்கள் வாடகை கொடுத்தவர்களே அல்லது சந்தாப் பணமோ அல்லது வேறு ஏதாவதோ என்று சொல்லி நீண்டகாலம் இருப்பதால் அங்கு பல நடைமுறைச் சிக்கல்கள் காணப்படுகிறது.

**கா.சி:** **இப்பிரச்சினையை எவ்வாறு தீர்க்கலாம் என்கிறீர்கள்?**

தே.சே.: இதைத் தீர்ப்பதாக இருந்தால், அரசாங்கம் இந்தக் காணியை சுவீகரித்து இவர்களுக் கெல்லாம் வேறெங்காவது அரசாங்கக் காணியை கொடுத்து இதிலுள்ள இவ் வீடுகளை தரைமட்டமாக்கி பழையபடி பெரிய கோயிலாக அமைக்க உதவ வேண்டும். இதற்கு இந்து கலாசார அமைச்சுதான் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கா.சி:** **கொழும்பு மாநகரசபை இதில் தலையிட ஏலாதோ?**

தே.சே.: கொழும்பு மாநகர சபைக்கு ஒரு மாநகர சபைக்குரிய அதிகாரத்தைச் செய்யலாம் ஒழிய ஒரு குறிப்பாக சமய வளர்ச்சியை செய்வதற்கு அதிகாரம் இல்லை.

**கா.சி:** **கொழும்பு சைவமக்கள், பிரதமருக்கோ, ஜனாதிபதிக்கோ இது சம்பந்தமாகக் காட்டி இந்த விடயத்தில் ஏதாவது செய்யமுடியாதா எனக் கேட்க முடியாதா?**

தே.சே.: நான் நினைக்கிறேன் 50 வீடுகள் இருக்கின்றன. இந்த 50 வீட்டாருக்கும் கொழும்பில் இந்தக் கிட்டடிப் பகுதியில் ஒரு பெரிய விசாலமான இடத்தை எடுத்து அவர்களுக்கு ஏதாவது ஒரு கட்டிடம் கட்ட வசதிகளை செய்து கொடுத்தால் இதில் யாரும் பேச்சு வார்த்தை நடத்தினால் அது சுலபமாகச் செய்யலாம். ஆனால் அதைச் செய்வதாய் இருந்தால் அரசியல்வாதிகள் பலர் ஒன்றுபட வேண்டும். ஒரு அரசியல்வாதி நலன் செய்யும்போது இன்னொருவர் அதற்கு எதிரான அபிப்பிராயம் கொடுப்பார். அப்படி கொடுக்காமல் எல்லா அரசியல்வாதியும் ஒன்றுபட்டால் தான் இது சாத்தியமாகும்.

**கா.சி:** ***சிவப்பிரகாசம் அம்மாள் சொல்லுகிறார் தங்களுக்கு பின்னுக்குள்ள காணிகளில் அவர்களுக்கு இருப்பதற்கு இடம் தருகிறோம் என்று. அதை எழுதியே தருகிறோம் என்று. அவர்கள் முன்னுக்கு உள்ளதைத்தான் வேணும் என சிரமப்பட்டு சொல்லு கிறார் என ஆய்வுக்குப் போனவர்கள் சொல்லுகிறார்கள்?***

தே.சே.: *ஆம். அது என்னவென்றால் முன்னுக்குள்ள பகுதி மிக விசாலமான பகுதி. பரந்த பகுதி. முன்னாலே சிவசுப்ரமணிய சுவாமி கோயில். ஒரு பக்கம் அண்ணன் விநாயகரும் மறுபக்கத்தில் தம்பியாரும் இருக்கிறார்கள். ஆனால் அது சிவராஜ விநாயகர் ஒரு மூலைக்குள்ளே அமர்ந்திருக்கிறார். இப்போது அக்கோயிலுக்குப் போகும் எல்லோரும் வீட்டில் உள்ள சிறுபிள்ளைகள் போகும் அசுத்தத்தை மிதித்துக்கொண்டுதான் போகவேண்டிய தேவை ஏற்படுகிறது. ஆடு மாடு, பன்றி போன்றவற்றை கூட காய்ச்சக்கூடிய வாய்ப்புள்ளது.*

**கா.சி:** ***இந்த மகாராஜா யார்? எங்கிருந்தவர்? இந்தியாவில் உள்ள மகாராஜா இங்கு ஏன் வந்தார்? அதுபற்றி...***

தே.சே.: *நான் கேள்விப்பட்ட வகையில் அவர் ஒரு வியாபாரத்துக்காக தொழிலோட வியாபாரத்தோட சேர்ந்து அரசாங்கத் தொடர்போட வந்து காணி வாங்கி இதற்கு நல்ல நோக்குடன் கொழும்பில் வந்து தங்குபவர்கள் ஒரு கோயிலையும், கோயிலுக்குப் பக்கத்தில் மடங்கள் என இந்தியாவில் காணப்படும் அமைப்பு மாதிரி அமைத்தார். இதே அமைப்பு பல இடத்தில் உள்ளது. செட்டித்தெரு விநாயகர் கோவில் தம்பையா சத்திர விநாயகர் கோவில், ஆடிவேல் கோவில்கள் மூன்று, கதிரேசன் கோயில், யாழ்ப்பாணத்தார் கதிர்வேலாயுத சுவாமி கோயில், கிட்டத் தட்ட கொட்டாஞ்சேனை பகுதியில் 15, 20 கோவில்கள் இருக்கின்றன.*

**கா.சி:** ***ஏன் அவ்வளவு கோயில்கள் வந்தது என நினைக்கிறீர்கள்?***

தே.சே.: *பல சமூகக் குழுக்கள் இருக்கிறார்கள். அதாவது இந்திய கரையோர மக்கள், கேரளாவில் இருந்து வந்தவர்கள், காத்துக்குடியில் இருந்துவந்தவர்கள், யாழ்ப் பாணத்தில் இருந்து வந்த சுருட்டுக் கடை முதலாளிமார் அவர்கள் யாழ்ப்பாண கதிர்வேலாயுத சுவாமி கோயில் கட்டி யாழ்ப்பாணத்தார் கோயிலை உருவாக் கினார்கள்.*

*நாட்டுக்கோட்டை செட்டிமார் வந்து நாட்டுக்கோட்டை கோயில் அதில் 2 கோயில் பழம்கோயில் புதுக்கோயில் அவற்றை உருவாக்கினர். மற்றது மானிப்பாயில் இருந்து வந்தவர்கள் செட்டித்தெரு முத்துவிநாயகர் கோயிலை உருவாக்கினர். இந்திய சைவவேளாளர் வந்து ஜிந்துப்பிட்டி சிவஸ்ரீ சுப்ரமணிய சுவாமிகோயிலை உருவாக்கினர். மற்றது கொஞ்சம் வசதியான ஆக்கள் வந்து தம்பையா சந்திரத்தில் உள்ள அந்தக் கோவிலையும், இன்னும் கொஞ்சம் பணம் படைத்தவர்கள் பொன்னம்பலவாணேஸ்வரர் கோவிலையும் உருவாக்கினர். சேர். பொன் இராமநாதன் உருவாக்கியது பொன்னம்பலவாணேஸ்வரம். இப்படிப் பல சமூகத் தினர் வந்து கோயில்களை உருவாக்கினர்.*

**கா.சி:** ***தம்பையா சத்திரம் பற்றி கொஞ்சம் தயவுசெய்து சொல்லுங்கோ.***

தே.சே.: *தம்பையா சத்திரத்தில் சித்தியவிநாயகர் என்னும் பிள்ளையார் இருக்கிறார். அந்தப் பிள்ளையாரைச் சுற்றி பல மடங்கள் மாதிரி அறை அறையாக காணப்படுகிறது.*

வெளியில் இருந்து கொழும்புக்கு வருகிறவர்கள், இந்தக் கோயிலை பார்ப்பவர்கள் இங்கு தங்கியிருந்து கோயிலுக்கு விரும்பினால் கொடுக்கலாம். கொடுக்காமலும் விடலாம். இப்படியாகத்தான் அச்சத்திரத்தின் அமைப்பு இருக்கிறது.

**கா.சி: முன்னர் இந்தியாவில் அல்லது யாழ்ப்பாணத்தில் இருந்து வருகிறவர்கள் இப்படி யான இடத்தில் தங்கிவிட்டு போவார்களா அல்லது அதுபற்றி....**

தே.சே. : முன்பு இப்ப இருக்கிற மாதிரி ஹோட்டல் இல்லை. கொழும்புக்கு வந்து தங்கு பவர்கள் வியாபாரத்துக்காக வரலாம். வேறு தேவைக்காக வரலாம். இப்படி வருபவர்கள் மடங்கள் சத்திரங்களில் தான் தங்குவார்கள். தம்பையா சத்திரத்தில் முன்னர் அன்னதானம் கூட ஒவ்வோர் நாளும் போடப்பட்டது. உதாரணமாக கேதீஸ்வரம் அல்லது கதிர்காமத்தில் வள்ளி தெய்வயானை மடத்தில் போட்ட மாதிரி இங்கேயும் வழங்கப்பட்டது. ஆனால் காலம் செல்லச் செல்ல இந்த அறைக்குள் வந்த குடும்பங்கள் தம்பையா சத்திரத்திலும் போகாமல் இருந்தார்கள். இங்கு பல பிரச்சினைகள் ஏற்பட்டு பேராசிரியர் நடராஜா தலைமையின் கீழ் எல்லாரும் சேர்ந்து கனபேரை வெளியில் போட்டு இப்போ அச்சத்திரம் ஓரளவு மீட்கப்பட்டுள்ளது. ராமலால் சத்திரம் மீட்கப்படாமல் ஓர் துர்ப்பாக்கியமாக இருக்கிறது.

**கா.சி: நீங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்தவர்கள் என, தமிழகத்தில் இருந்து வந்தவர்கள் என 5 வகைப்பட்டவர்களைச் சொன்னீர்கள். அதிலே சில செட்டிமார் பற்றி சொன்னீர்கள், கிழக்கில் இருந்து வந்தவர்கள் பற்றியும் சொன்னீர்கள், கிழக்கில் இருந்துவந்தவரை யார் யாரை உங்களுக்குத் தெரியும்?**

தே.சே.: கிழக்கில் இருந்து வந்தவர்கள் என்பது மட்டக்களப்பு, திருகோணமலை இப் பிரதேசங்களில் இருந்து முன்பு சிலர் வந்திருக்கிறார்கள். அதாவது நகைக் கடையில் வேலை செய்பவர்கள் செட்டித்தெரு நகைக்கடையில உள்ளவர்கள். இந்தக் கிழக்கில் இருந்து வந்தவர்கள் கடைகள் வைத்திருக்கிறார்கள். அவர்கள் கடை வைத்திருந்தாலும் பட்டறைதான் கூட வேலை. பொன்னை உருக்குவது, அதாவது தட்டார் தொழில் செய்பவர்கள்.

**கா.சி: அவர்களுக்காக இருந்ததென ஒரு தனிக் கோயில் சொல்லலாமா?**

தே.சே.: அவர்கள் உண்மையில் அப்படியான கோயிலை அமைக்கவில்லை. அமைத்தது வடபகுதி தமிழர்களும், இந்தியத் தமிழர்களும், கொழும்பில் இருந்தவர்களும் தான். ஏட்டிக்குப் போட்டியாக கோயில் அமைத்தனர்.

**கா.சி: கொழும்பில் உள்ள இந்துக்களில் நான் பார்த்ததில் என்னுடைய பார்வையில் முக்கியமாக இடம்பெறுபவர்கள் தமிழர்கள் அல்லாத இந்துக்களாகவும் சிலபேர் இருக்கிறார்கள். மோடி, அதாவது கமலா மோடி, கோஸ், குண்டன்மால் இவர்களைப் பற்றி....**

தே.சே.: சுருக்கமாகச் சொல்லப்போனால் வட இந்தியர்கள் அவர்கள். (அவர்களும் இந்துக்கள் தான்) ஆனால் அவர்கள் தமிழர்கள் அல்ல. ஆனால் அவர்கள் இந்துக் களாக இருந்தபடியால் அவர்களும் இங்கே சைவத்துக்காக பாடுபட்டு மோடி ஹோல் ஒன்று அமைத்து இப்ப அவர்கள் மோடி 'பிஸ்னஸ்'சும் இருக்கிறது.

அவர்கள் அந்த 'பிஸ்னஸ்'சில் வாற காசில தான் மோடி ஹோல் அமைத்தார்கள். குண்டன் மாலும் சமயத்துக்கு பல சேவை செய்துள்ளனர். எனக்கு தெரியும். இமயமலைச் சாரலில் உள்ள முனிவர்களை கூட்டிவந்திருக்கினம். நான் சின்னப் பிள்ளையாய் இருந்தபோது பல முனிவர்கள் வருவார்கள். அவர்களிடம் ஆசிர் வாதம் எல்லாரும் வாங்கினர். நானும் வாங்கினேன். அப்ப எனது தாயார் ஒவ்வொரு முனிவரையும் கும்பிடேக்கே ஒருவர் சொன்னார் என்னைக் கும்பிடாதே உன் கணவனை கும்பிடு. உனக்கு கடவுள் உன்னுடைய கணவன்தான். கணவனைக் கும்பிட்டால் ஒவ்வொரு மனைவிக்கும் போதும் என்றார். அப்போதுதான் வள்ளுவர் கூற்று ஞாபகம் வந்தது. அதாவது

தெய்வம் தொழா அள், கொழுநற்தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

கா.சி: **கொழும்பில் இருந்த சட்டத்தரணிமார் இருக்கிறார்களே. இவர்களில் நீங்கள் சொன்ன சிவசுப்பிரமணியம் ஐயா, ஏ. சி. நடராஜ் இவர்களைவிட வேறு யாரை யாவது சொல்லத் தவறுகிறோமா...**

தே.சே.: சோமசுந்தரம், சோமா என்று சொல்லுவார்கள். ராமீஸ்வரா என்ற சட்டத்தரணி இருந்திருக்கிறார். ராமீஸ்வராவின் நெருங்கிய சொந்தக்காரர் சி.வி. விக்னேஸ்வரன் என நான் கேள்விப்பட்டேன். அதேமாதிரி ராமநாதன், மேஜர் ராமநாதன் என்றும் அமைப்பு ஒன்று இருக்கு. சட்டத்தரணிகள் அமைப்பு அதில் உள்ள ராமநாதன் என்னும் சட்டத்தரணி நான் நினைக்கிறேன் பார் அசோசியேசனுக்கு தலைவராக இருந்தவர் கென்டஸ்ற் பண்ணியவர் திரு ராமநாதன். அவர்தான் புத்தகம் எழுதி யவர். தேசவழமை ஆக்களுக்கு புத்தகம் பாதுகாக்கப்பட வேண்டும் என்று.

அதேமாதிரி ஜஸ்டிஸ் தம்பையா ஐயா அவர்கள். அவர்கள் கிறிஸ்தவராய் இருந்தாலும் இந்துக் கோயிலில் அதிக ஈடுபாடு உடையவர். நான் அறிய நானே கூட்டிச் சென்று கோயிலில் பேசவைத்திருக்கிறேன். அவர் தமிழர்களுடைய பாரம்பரியத்தை பேணுவதற்காக இலங்கை தமிழர் சட்டங்கள் என்ற ஆங்கில புத்தகத்தில் எழுதி தன்னுடைய செலவில் புத்தகம் வெளியிட்டிருக்கிறார். உயர்நீதிமன்ற நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா, காலம்சென்ற தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவராக இருந்த சிவசிதம்பரம் ஆகியோரும்.

கா.சி: **வழக்குகள் தொடங்குவதற்கு முன் சுப்பிரீம் கோட் நீதிவான் சத்தியம் எடுப்பதற்கு ஒரு வழிபாட்டிடத்துக்கு போவார்கள். அவ்வாறு தமிழ், சைவக்கோயிலுக்கு போய் தங்களுடைய வேலையை தொடங்கிய சுப்பிரீம் கோட் நீதிவான்மார் இருக்கிறார்களா?**

தே.சே. : அதில் அநேகமாக சொல்லப்படுபவர் ஜஸ்டிஸ் ஸ்ரீஸ்கந்தராஜ ஐயா. அவர்கள் அப்பவும் பண்டாரநாயக்க மாவத்தையில் உள்ள கோயில் தினமும் போய் காலையில் கும்பிட்டு போவார் என்று என்னுடைய தந்தையார் சொல்லுவார். சட்டத்தரணிகள் எல்லாம் பொய்சொல்லுவார்கள். கட்சிக்காரரும் பொய் சொல்லுகிறார்கள். உண்மையை காட்டுவதற்காக எனக்கு உதவி செய்யுங்கள் என்று சொல்லி மிக மன்றாடி அவர் நீதியான தீர்ப்புகளை வழங்குவதற்கு மிக உற்சாகப் படுபவர் என்று கதைப்பார்கள்.

மற்றது பழையாக்களில் சைவத்தை வளர்ப்பதில் பாடுபட்டவரில் ஜீ. ஜீ. பொன்னம்பலம். உதாரணமாக, நான் கேள்விப்பட்டேன். யாழ்ப்பாணத்துக்குப் போய் தன்னுடைய ஊரில் உள்ள கோயில்கள் எல்லாவற்றுக்கும் அவர் சில புனருத்தாரண வேலை செய்திருக்கிறார். அதே மாதிரியாக தியாகலிங்கம் ஐயா அவர் மிகவும் பக்தர். அவர் இந்தியாவில் உள்ள தியாகராஜ பெருமாள் கோயிலுக்கு திருவாரூருக்கு தேர் பிடிச்சு இழுப்பதற்காக ஒவ்வோர் வருடமும் போய் வெறும் மேலுடன் தேர் பிடிச்சு இழுப்பார். அவரில் உள்ள முக்கியத்துவம் அவரை கண்ணால் பார்த்திருக்கிறேன். நெத்தியில் விபூதி அணிந்து சந்தனம் குங்குமத்துடன் காதில் பூவைத்துக் கொண்டு நீதிமன்றத்துக்குள் துணிச்சலுடன் வந்த தமிழர் என்றால் தியாகலிங்கம் ஐயாதான். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கூட அவரைக்கண்டு பயப்படுவார்கள்.

கா.சி: **கொழும்பில் பெண்கள் சிலமுக்கிய இடத்தை வகித்திருப்பார்கள். ஆராய்ச்சிக்கு போனவர்கள் கூறுகின்ற மிக முக்கியமான உண்மை என்னவென்றால் உண்மையில் இந்தப் பெண்களாலதான் கோயில்களுக்கு சனமே போகிறது என்று. கொழும்பில் உள்ள கோயில்களுக்கு உதவிய பெண்கள் பற்றி கூறமுடியுமா?**

தே.சே. : சொல்லப்போனால் சேர். பொன் ராமநாதன் பரம்பரையில் வந்த பெண்கள் அந்தக் குடும்பத்தை சேர்ந்த பெண்கள் அதிக தீவிரமாக இருந்திருக்கிறார்கள். அதேபோல் தம்பையா சத்திரம் அமைத்த குடும்பத்தினர் எனக்கு தெரியும், பேராசிரியர் நடராஜாவின் மனைவி, வயது முதிர்ந்த அம்மையாரும் அவருடைய சகோதரியாரும் அவர்கள்தான் நான் நினைக்கிறேன். விரிவுரையாற்றும் பேராசிரியரைக் கஷ்டப்பட்டு கோயிலுக்கு இழுத்துக்கொண்டு வருகிறார்களோ என யோசிப்பேன், அவர்கள் தட்டத்தோட ஒவ்வோர் நாளும் கோயிலுக்கு வருவதைப் பார்க்கின்ற நான் அதேமாதிரி ராம்லால் சத்திரத்தின் சிவப்பிரகாசம் அம்மாளின் பாட்டியார், அவர்கள் அதிக ஈடுபாடு கொண்டவர்கள். பெண்கள் தீவிரமாக இருந்தாலும் இந்த எங்களுடைய பழைய கலாசாரம் ஆண்களைத்தான் முன்னுக்கு விடவேணும் பெண்கள் பின்னால் நிற்க வேணும் எனும் கலாசாரம். நான் நினைக்கிறேன் பெண்களின் முக்கியத்துவம் அதிகமாக இதனாலேதான் தெரியவில்லை. ஆனால், உண்மையான காரணம் பெண்களாகத்தான் இருக்கும். மற்றது அகில இலங்கை இந்து மாமன்றத்தை தாபித்து வலுப்படைத்து செய்த ஜஸ்டிஸ் சிவசுப்பிரமணிய ஐயாவும் நினைவு கூரத்தக்கவர். அதேமாதிரி மெய்கண்டான் அதிபர் ரட்ணசபாபதி அய்யா அவர்களும் மிக முக்கியமானவர். இலவசமாக புத்தகம் அடித்துக் கொடுத்தவர். மற்றது சட்டத்தரணி சுந்தரலிங்கம் ஐயாவின் தகப்பன் லீலா சின்னத்துரை அவர்களும் முக்கியமானவர். நீதிராஜா குடும்பத்தினரும் மிகவும் சமயத்துடன் ஈடுபாடு கொண்டவர்கள். அருளாநந்தம், வடிவேற்கரசு முதலியோர்.

கா.சி: **கப்பித்தாவத்தை பற்றி?**

தே.சே.: கப்பித்தாவத்தை கோயில் முன்பு 1790ம் ஆண்டளவில் இற்றைக்கு 200 வருடமாக உள்ள ஒரு பழைமை வாய்ந்த கோயில். அந்த நேரத்தில் வந்த ஆங்கிலேயன் கப்டன்

அவர்கள் இந்தக் கோயிலை தகர்த்தி கோயிலுக்கூடாக மூலஸ்தானம் உள்ள பகுதியினூடாக தண்டவாளம் போட வேண்டும் என்னும் சட்டம்போட்டார்.

கா.சி: **முதலில் முத்தையா என்ற ஒரு டச்சு பிரதானி பொறுப்பாக இருந்தார். அந்த பிரதானி தன்னிடத்தில் வேலை செய்த தமிழருக்கு அந்தக் காணியை கொடுத்த தாகவும் அந்தக் காணியில் தமிழர் கோயிலை வைத்து நடாத்தியதாகவும் அதன்பின் அந்த பிரதானி சிலருக்கு எழுதிவிட்டு சென்றதாகவும் அதுவரை அவ்வரலாறு இருக்கு. இந்தக் கப்டன் காடின் என வந்ததை தயவுசெய்து சொல்லுங்க.**

தே.சே.: கப்டன் காடின் என்பது இந்த கப்டன் என்று சொல்பவர் இந்தக் கோயில் பகுதியால், மருதானையால் வரும் புகைவண்டி இதுக்கிளால போகவேணும் இது ஒன்றும் செய்ய ஏலாது. எங்களுக்கு புகைவண்டிதான் முக்கியம் என தண்டவாளம் போட முனைந்தார். அங்கிருந்த அந்த கோயில் பரிபாலன சபையினர் எல்லாம் முறைப் பட்டார்கள். மற்றது இக்கோயில் வைரவர் பிரபலமான வைரவர். அதனால் தான் இப்போது எல்லா சிங்கள மக்களும் போய் நூல் கட்டுவார்கள். முன்னர் மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸ வெள்ளி, செவ்வாய் வேளையில் வைரவர் இடத்தில் நூல் கட்டுவார். இப்பவும் சிங்கள அரசியல்வாதிகள் கூட அப்படிப் செய்கிறார்கள். அப்ப புகையிரத பாலம்போடப் போகும்போது அப்ப கோயில் பரிபாலகர் மிகவும் வருந்தி வைரவ பெருமானை கேட்டபோது (பிள்ளையார் மூலவிக்கிரகம் ஆனால் வைரவர் ஒரு சக்திமிக்க தெய்வம்) வைரவர் வந்து கப்டனை அடிச்சு வீசியதாகவும் அவரை நாய் வந்து கடிக்க வந்ததாகவும் கனவு கண்டிருக் கிறார். உடனே அவர் எழும்பிப் பார்த்தால் வீட்டிலதான் படுத்திருகிறார். அடுத்தடுத்து 3 நாள் அதே கனவு கண்ட அவர் தன்னுடைய கொள்கையை மாற்றி இந்தக் கோயில் எனக்கு சொந்தமான கோயில் இந்த ஏரியா முழுக்க எனக்குத் தான் சொந்தம் என 'கப்டன் காடின்' என் பெயரும் வைத்தார். அதனால் அதற்கு கபித்தாவத்தை என பெயர் வந்தது. அது ஒரு மிகப் பிரபல்யமான பழைமையான கோயில்தான். அந்தக் கோயிலுக்கு பக்கத்தில ஒன்று வணிகச் செட்டிமாருடைய ஆட்சியில் இருக்கும் சிவன் கோயில். பிள்ளையார் கோயில் யாழ்ப்பாண மக்களின் ஆட்சியில் இருப்பது. பக்கத்தில் பாடசாலை தொண்டர் வித்தியாலயமாக உள்ளது. கதிர்காம யாத்திரிகர் சபைத் தலைமையின் கீழ் ஆரம்பிக்கப்பட்டது.

மற்றது கொம்பனித்தெரு பிரபலமான ஒரு முருகன் கோவில் - சுப்பிரமணிய சுவாமி கோவில் உள்ளது. அந்த இடத்தில் உள்ள வியாபாரிகள் ஒன்று சேர்ந்து தான் அதாவது யாழ்ப்பாணத்தாரும், கொழும்பில் இருந்தவர்களும், மலையகத்தவரும் ஒன்று சேர்ந்துதான் இக்கோயிலை நடாத்தினார்கள். இது ஒரு கேந்திர இடத்தில் உள்ள மறக்க முடியாத பிரபலமான கோயில் எனலாம்.

இப்பவும் இஸ்லாமிய பெருமக்களும் இந்துக்களும் அன்னியோன்னியமாக இருக்கிறார்கள். இந்தக் கோயிலில் ஜஸ்டிஸ் ஸ்ரீஸ்கந்தராஜா ஈடுபாடு கொண்டவர் இவருடைய மகளும் சிவயோகம் ஸ்ரீ ஸ்கந்தராஜாவும் இத்துறையில் ஈடுபாடு கொண்டிருந்தார். சைவமுன்னேற்றச் சங்கம் ஒன்று காணப்படுகிறது. ஏழைச் சிறார்களுக்கு வார இறுதியில் வகுப்பு நடத்துவார்கள். பஜனைகள் நடாத்துவார்கள்.

இவர்களுடன் இறந்து போன மணிமாஸ்ரர் அவர் பெயர் பாலசுப்பிரமணியம் அவரும் ஈடுபாடு கொண்டவர். வெள்ளியம்பலத்தார் என்று ஒரு தொழிலதிபர் இருந்தார். மற்றது சாந்தி விகார் பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களும் இந்து மாமன்றத்தில் ஈடுபாடு கொண்டவர். பலகோயிலில் ஈடுபாடு கொண்டவர். கப்டன் காடின் கோயிலில் ஈடுபாடுகொண்டவர். சாந்தி விகார் உரிமையாளரும் அவரே. அவருக்கு இரு காலும் சத்திரசிகிச்சை செய்தபோதும் கோயிலுக்கு வந்ததை நான் கண்டிருக்கிறேன். இந்து மாமன்றத்தை புனருத்தாரணம் செய்யவேணும் என்று முன்னின்றதில் இவரும் ஒருவர்.

# பதிவு செய்யப்பட்ட இந்து ஆலயங்கள்

## கொழும்பு மாவட்டம்

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 1. | Sri Bala Selva Vinayaga Moorthy Alayam<br>Kapikawatta, Colombo -10. | HA/06/CBO/1 |
| 2. | Sri Ilanga Maka Kali Amman Alayam<br>38/35, RatnamRoad, Colombo -13. | HA/06/CBO/2 |
| 3. | Nugegoda Pillaiyar Alayam<br>5, Skenton St, Colombo - 05. | HA/06/CBO/3 |
| 4. | Vinayagar Alayam<br>49/12, Matterace, Dematagoda, Colombo 08. | HA/06/CBO/4 |
| 5. | Arul Mihu thiru Murugan Alayam<br>Torigton Avenue, Colombo-07. | HA/06/CBO/5 |
| 6. | Sri Veera Maha Amman Alayam<br>3 6, Sri Ramanathan Road, Colombo-13. | HA/06/CBO/6 |
| 7. | Thiruchenthoor Murugan Alayam<br>90/1, Gnanavimala Road, Colombo - 09. | HA/06/CBO/7 |
| 8. | Sri Durkai Amman Alayam<br>86/10, Silvasmith Lane, Colombo- 12. | HA/06/CBO/8 |
| 9. | Sri Senthil kumaran Alayam<br>146, Aramaya road, Dematagoda, Colombo - 09. | HA/06/CBO/9 |
| 10. | Sri Poomariamman Alayam<br>Perrehara Road, Pelwatta, Colombo-03. | HA/06/CBO/10 |
| 11. | Veerapathira swami Alayam<br>117/l,GinthupitiyaSt, Colombo-13. | HA/06/CBO/11 |
| 12. | Sri Siva Subramaniya Swami Alayam<br>98, Ginthupitiya St, Colombo- 13. | HA/06/CBO/12 |
| 13. | Thiru Arul Mihu Sivasubramania Swami Alayam<br>131,KewRoad, Slave Island, Colombo - 02 | HA/06/CBO/13 |
| 14. | Arulmigu Sri Gnana Vairarar Swami Alayam<br>42, Dewaas Lane Grandpass, Colombo 14. | HA/06/CBO/14 |
| 15. | Sri PonnampalawaneswararAlayam<br>38, Sri Ramananan Road, Colombo- 13. | HA/06/CBO/15 |
| 16. | Sri Muthumari Amman Alayam<br>Kudagama Road, Avisawella. | HA/06/CBO/16 |
| 17. | Sri Madasamy Alayam<br>112/18, JempattahSt, Colombo - 13. | HA/06/CBO/17 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 18. | Sri Muniyandi Swami Alayam<br>112/18,JempattahSt, Colombo 13. | HA/06/CBO/18 |
| 19. | Sammangodu Sri kathirelayutha Swamy Alayam<br>141, First Cross St, Colombo-11. | HA/06/CBO/19 |
| 20. | Sri Pathirakali Amman Alayam<br>35/44, Mayura Place, Havelock Road, Colombo 0 6 | HA/06/CBO/20 |
| 21. | Ilanthoppu Sakthi Amman Alayam<br>47, St/Michales Road, Colombo — 03. | HA/06/CBO/21 |
| 22. | Old Kathiresan Alayam<br>123, Galle Road, Colombo - 04. | HA/06/CBO/22 |
| 23. | Sri Muthu Mari Amman Alayam<br>44/54,19th Lane, StaceRoad, Colombo- 14. | HA/06/CBO/23 |
| 24. | | HA/06/CBO/24 |
| 25. | Sri Muthu Mari AmmanAlayam<br>Salawa Estate, Hanguwella | HA/06/CBO/25 |
| 26. | Sri kali Amman Alayam<br>Pickrings Road, Colombo - 13. | HA/06/CBO/33 |
| 27. | Sri Muthu mari Amman Alayam<br>Auther Field Estate, Avisawella | HA/06/CBO/34 |
| 28. | Sri Kailasa Swami Alayam<br>11/15, Temple Road, Kappikawatta, Colombo 10. | HA/06/CBO/35 |
| 29. | Sri muthu Mari Amman Alayam<br>Eastern Estate Upper Dlivision, Puwakpitiya | HA/06/CBO/36 |
| 30. | Sammankodu SriManickapillaiyar Alayam<br>359, Galle Road, Colombo - 04 | HA/06/CBO/37 |
| 31. | Sri Muthu Mari Amman Alayam,<br>414, Main St., Puwakpiltiya | HA/06/CBO/38 |
| 32. | Karu Mari Ampal Alayam<br>198/24, Panchikawatta, Colombo- 10. | HA/06/CBO/39 |
| 33. | Vithaka Vinayagar Alayam<br>77, Lawrance St, Colombo - 04. | HA/06/CBO/40 |
| 34. | Sithi Vinayagar Alayam<br>55, Malikawatta Road, Colombo - 10. | HA/06/CBO/41 |
| 35. | Hare Krishna Alayam<br>188, New Chetty St, Colombo 13. | HA/06/CBO/42 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 36. | Sri Maha Kali Amman Alayam<br>59, Paradise Place, Amour St, Colombo - 12. | HA/06/CBO/43 |
| 37. | Sri Murugan Alayam<br>Elston Garden Upper Division, Puwakpitiya. | HA/06/CBO/44 |
| 38. | Sri Munneswarar, Swami Alayam<br>180/42, Bandaranayake Mw, Colombo -12 | HA/06/CBO/45 |
| 39. | Sri Muthu Mari Amman vinayagar Alayam<br>36 th Garden Barber St, Colombo - 13. | HA/06/CBO/46 |
| 40. | Sri Muthu Mari Amman Alayam<br>Elston Garden Upper Division, Puwakpitiya. | HA/06/CBO/47 |
| 41. | Sri Muthu Mari Amman Alayam<br>Kolupitiya Police Quarters, Colombo- 03 | HA/06/CBO/48 |
| 42. | Sri Siva Subramaniya Swami Alayam<br>109, Bandaranayake Mw, 109, Colombo-12. | HA/06/CBO/49 |
| 43. | Sri Muthu Mari Amman Alayam<br>Malaith Thoddam, Puwakpitiya. | HA/06/CBO/51 |
| 44. | Muniyandi Paladayar Alayam<br>3/12 A, Sea Beach Lane, Colombo-11. | HA/06/CBO/52 |
| 45. | Sri Devi Karamari AmmanKovil<br>158/2, Sri Kathiresan Road, Colombo - 13. | HA/06/CBO/53 |
| 46. | Ichchathari Nagadevi Amman Alayam<br>185/1, Toringtrn Avenue, Colombo 07. | HA/06/CBO/54 |
| 47. | Sri muthu Mari Amman Alayam<br>129, Ginthupitiya Road, Colombo -13 | HA/06/CBO/55 |
| 48. | Sri Muthu Mari Amman Alayam<br>Penrith Estate, Lower Division, Avisawela | HA/06/CBO/57 |
| 49. | Muniyandi Swami Alayam<br>155/56, Jampettah St., Colombo -13 | HA/06/CBO/59 |
| 50. | Sri Muniamma Swami Sri Maha Kali Amman Alayam<br>680, Bloemendhal St., Colombo- 15. | HA/06/CBO/60 |
| 51. | Sri Pathira Kali Amman Alayam<br>Devision No: ii, Navagampura. | HA/06/CBO/61 |
| 52. | Sri Muthu Mari Amman Alayam<br>577/20, H, town Council Qrs., Rawattawatta, Moratuwa. | HA/06/CBO/62 |
| 53. | Sri Muthu Mari Amman Alayam<br>Northampalam Estate, Division A, Puwakpitiya. | HA/06/CBO/63 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 54. | Sri Muthu Mari Amman Alayam<br>211/40, Nagalam Road, Colombo - 14. | HA/06/CBO/64 |
| 55. | Sri Muthu Mari Amman Alayam<br>Hanwella Estate, Hanwella, Avisawala | HA/06/CBO/65 |
| 56. | Sri Rajarajeswari Ampal Alayam<br>94/4, Vivekananda Hill, Colombo -13 | HA/06/CBO/66 |
| 57. | Sri Sivasubramaniyar Alayam<br>131/1, Sri Mahindadarma Mawatta, Colombo -09. | HA/06/CBO/67 |
| 58. | Sri Muniyandi Alayam<br>225th Garden, Kathiresan Road, Colombo- 13. | HA/06/CBO/68 |
| 59. | Bama Rukmani Sametha Paartha Sarathi Alayam (Krishnan Kovil)<br>72, Brass Founder Street, Colombo-13. | HA/06/CBO/69 |
| 60. | Sri Pathirakali Amman Alayam<br>60/232, Vathulawatta, Wellampitiya. | HA/06/CBO/70/77 |
| 61. | Sri Muthu Mari Amman Alayam<br>Vaga Division, Dumothara, Avisawella. | HA/06/CBO/71 |
| 62. | Sri Muthu Mari Amman Alayam<br>200/7, Meetotamulla Road, Wadugodawatta, Wellampitiya | HA/06/CBO/75 |
| 63. | Dhurkka Kaliamman Kovil<br>7, Garden, 93/67, Avisawella Road, Wellampitiya, Orugodawattha. | HA/06/CBO/76 |
| 64. | Sri Selvavinayagar Temple,<br>Navakelanipura, Wellampitiya, Orugodawatta. | HA/06/CBO78 |
| 65. | Gonakovil Sri Sivalingaperuman and Sri Kathirgma Thevsthanam<br>Jaysumanarama Raod, Ratmalana. | HA/06/CBO/79 |
| 66. | Sri Muthu Mari Amman Alayam<br>Hewagama Estate, Padukka | HA/06/CBO/81 |
| 67. | Sri Munneswarar Alayam<br>61, Sri Bodhiraja Mawatta, Colombo 12. | HA/06/CBO/82 |
| 68. | Sri Muthumariyambal Alayam,<br>Labugama Estate, Dumodara | HA/06/CBO/84 |
| 69. | Sri Anpu Muttumariamman kovil<br>Pangnakula Estate, Dummodara | HA/06/CBO/85 |
| 70. | Sri Devi Karumari amman Sri Ayyappa Swamy Alayam<br>9th floor Astral arcade, 428 R.A.de Me., Mawatta, Colombo 03 | HA/06/CBO/86 |
| 71. | Sri Muthu Mari Amman Alayam<br>Penrith Estate,<br>Upper Division, Avissavela | HA/06/CBO/87 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 72. | All Ceylon Aiyyappan Devasthanam<br>478/1, Aluth Mmawatta Road, Colombo- 15. | HA/06/CBO/88 |
| 73. | Sri Muthu Mari Amman Alayam<br>Kalanithissagama, Weragodalla, Wellampitiya. | HA/06/CBO/89 |
| 74. | Maha Kanapathy Alayam<br>191/7, Avissawela Road, Wellampitiya. | HA/06/CBO/90 |
| 75. | Sri Bathrakali Amman Kovil<br>G/23, Nagamulla Road, Kolonawa. | HA/06/CBO/91 |
| 76. | Sri Badrakali Ambal Alayam<br>2nd Navagampura, Kelani Road, Wellampitiya. | HA/06/CBO/92 |
| 77. | Pohunuwatta Muniyandi Swami Kovil<br>15/38, Church Road, Mattakuliya, Colombo-15. | HA/06/CBO/93 |
| 78. | Sri Sithi Vinayagar Alayam<br>150, Mahawela Lane, Baseling Road, Colombo-09. | HA/06/CBO/94 |
| 79. | Sri Sivaraja Vinayagar Temple<br>Ramlal Maharajah Darma Chotram, 99 Ginthupitiya St. Col - 13. | HA/06/CBO/95 |
| 80. | Sri Samundeswary Ambal Alayam<br>Ekamuthupura Kathiranawatta, Mattakuliya, Colombo - 15. | HA/06/CBO/96 |
| 81. | Sri Muniyandi Swami Alyam<br>151/A 40, Ginthupitiya Street, Colombo - 13. | HA/06/CBO/97 |
| 82. | Sri Muthu Mari Amman Alayam<br>79, Garden, Sri Mahinda Dharma Mawatta, Colombo -09. | HA/06/CBO/98 |
| 83. | Sri Durkka devi Alayam<br>162, Kotahena Street, Colombo - 13. | HA/06/CBO/99 |
| 84. | Sri Muthumaria Amman Alayam<br>Ayar Estate, Kurula Division, Padukka. | HA/06/CBO/100 |
| 85. | Sri Maha Veerapathirakali Amman Alayam<br>131 /A/I /I Mosque Lane, (Kurunthuwatta) Navala Road, Rajagiriya. | HA/06/CBO/101 |
| 86. | Sri Aanchaneyar Alayam<br>3/11 Sri Bodhi Ukkurana, Kalubovila, Dehiwala. | HA/06/CBO/102 |
| 87. | Thirupathy Sri Vengadeswarar Maha Vishnu Alayam<br>98/10,TempleRd, Colombo 15. | HA/06/CBO/103 |
| 88. | Sri Gnanavairava Muniyandi Swami Alayam<br>22, Kalpoththa St, Colombo 13. | HA/06/CBO/104 |
| 90. | Sri Maha Pathira Kali Amman Alayam<br>60 1 A, Magazine Road,<br>Colomo 08. | HA/06/CBO/105 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 90. | Sri Pathira Kali Amman Alayam<br>55/2,Santhamma Gardens Orugodawatta, Wellampitiya. | HA/06/CBO/107 |
| 91. | Katpaka Vinayagar Alayam<br>Colombo Hindu college, Ratmalana. | HA/06/CBO/108 |
| 92. | Sri Vairavar(Muniyandisamy) Alayam<br>128/35,A,Ginthupiti Street, Colombo-13. | HA/06/CBO/109 |
| 93. | Sri Muthu Mari Amman Alayam<br>Pentrith Garden, Kilancourse, Avisawela. | HA/06/CBO/110 |
| 94. | Sri Maha Kali Amman Alayam<br>Barns Place, Colombo - 07. | HA/06/CBO/111 |
| 95. | Sri Varatharaja Vinayagar Alayam<br>105, Kotahena St, Colombo-13. | HA/06/CBO/112 |
| 96. | Sri Muthu Mari Amman Alayam<br>1151/38A,Kotta Road, Rajagiriya | HA/06/CBO/113 |
| 97. | Sri Muniyandi Swami Muthumari Amman Alayam<br>143/16 B Jinthupitiya St, Col - 13 | HA/06/CBO/114 |
| 98. | Sri Muthu Mari Amman Alayam<br>Thalthuwa Garden, Erakt,division, Avisawela | HA/06/CBO/115 |
| 99. | Sri Muthu Mari Amman Alayam<br>Pokkuunu Watta, Mattakkuliya | HA/06/CBO/116 |
| 100. | Sri Muthu Mari Amman Alayam<br>Lokkan Div, Pendrith Garden, Avisawela | HA/06/CBO/118 |
| 101. | Kali Amman Alayam<br>180-34/A - 7 Grandpass Road, Colombo- 14. | HA/06/CBO/119 |
| 102. | Sri Muthu Vinayaga Swami Alayam<br>221,Sea St, Colombo-11. | HA/06/CBO/120 |
| 103. | Sri Veera Maha Kali Amman Alayam<br>337, Sea St, Colombo-11. | HA/06/CBO/121 |
| 104. | Sri Nagapoosani Amman Alayam<br>4, Vasala St, Dehiwala | HA/06/CBO/123 |
| 105. | Arul Mihu Velmurugan Thirukkovil,<br>11/49, Parakumbah Place, Colombo -06 | HA/06/CBO/124 |
| 106. | Sri Muthu Mari Amman Alayam<br>Sri Nivaska Garden, Lower Division, Velikkanna Vaha | HA/06/CBO/125 |
| 107. | Siva Poomi Ganesha Alayam<br>129, High Level, Road,<br>Nugegoda | HA/06/CBO/126 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 108. | Sri Veera Maha Kannaki Amman Alayam<br>24 A Mallika St, Colombo - 06. | HA/06/CBO/127 |
| 109. | Mangala Vinayagar Alayam<br>95/1, Anderson Flats, Kalubowila, Dehiwala | HA/06/CBO/128 |
| 110. | Sri Mthu Mari Amman Alayam<br>344/A 2nd Division, Padovita, Mt-Laveniya. | HA/06/CBO/129 |
| 111. | Sri Muthu Mari Amman lyappan Temple<br>233./84, Henamulla Camp, Colombo 15 | HA/06/CBO/130 |
| 112. | Sri Muthu Mari Amman Temple,<br>Pathukka Estate, Pathukka | HA/06/CBO/131 |
| 113. | Sri lyappan Mani Mandapa Temple<br>151/30, 155/24,Jempattah St, Colombo - 13 | HA/06/CBO/132 |
| 114. | Sri Muthu Mari Amman Temple<br>40 A, Sri Sivanantha St, Colombo - 13 | HA/06/CBO/133 |
| 115. | Sri Muthu Mari Amman Temple,<br>230 Babupulla St, Colombo -14 | HA/06/CBO/134 |
| 116. | Sri Muthu Mari Amman temple<br>Sirinivasa Estate, Upper Div, Colombo. | HA/06/CBO/135 |
| 117. | Arul Mihu Sri Pathirakali Amman Temple<br>162/378,Modara, Kimbula Ela, Colombo - 15 | HA/06/CBO/136 |
| 118. | Sri Muthu Mari Amman temple,<br>191/29,0 15th Estate, Orukodawatta, Colombo | HA/06/CBO/137 |
| 119. | Sri Muniyappar Temple,<br>79/15 A, Sethawatta St, Umagiriya Estate, Wellampitiya. | HA/06/CBO/138 |
| 120. | Sri Sithi Vinayagar Temple<br>Colombo Vivekananda School, 57. New Chetty st, Colombo - 13 | HA/06/CBO/139 |
| 121. | Sri Muthu Mari Amman temple<br>75/20 E, Pergusion st, Colombo 14 | HA/06/CBO/140 |
| 122. | Sri Maha Kali Amman Temple<br>46/10,Sri Bala Bindu Mw, Sethawatta, Wellampitita | HA/06/CBO/141 |
| 123. | Sri Muniyappar Temple,<br>Sri Bala Bindu Mw, Sethawatta,<br>Wellampitita | HA/06/CBO/142 |

| No | Name and Address of the Temple | Registration No. |
|---|---|---|
| 124. | Sri Maha Pathirakali Amman Temple,<br>225/379, Pergusionst, Weligoda Housing Scheme. | HA/06/CBO/144 |
| 125. | Munieeswarar Kali Amman Temple<br>218/7AWolfendhal st, Colombo - 13 | HA/06/CBO/145 |
| 126. | Sri Muniyandi Swami Temple,<br>56, Avisawala St, Majeeth Place, Urugodawatta, | HA/06/CBO/146 |
| 127. | Varamarul Vinayagar Temple,<br>180, Maha Vidyalaya Mw, Colombo - 13 | HA/06/CBO/147 |
| 128. | Sri Pathira Kali Amman Thirukkovil<br>400/3, Mowlana Estate, Dematagoda St, Colombo-09 | HA/06/CBO/148 |
| 129. | Sri Pathira Kali Amman Temple,<br>168, AramayaRd, Colombo - 9 | HA/06/CBO/149 |
| 130. | Sri Muthu Mari Amman Temple<br>AI Nawagampura, Sethawatta, Wellampitiya | HA/06/CBO/150 |
| 131. | Sri Pathirakali Amman Temple,<br>T 55/2, Metland Place, Colombo-07 | HA/06/CBO/151 |
| 132. | Sri Muthu Mari Ampal Temple,<br>No: 74.1, Heddakaththa, Avisawella | HA/06/CBO/152 |
| 133. | Sivasakthi Pillaiyar Temple,<br>Kanepalla Estate, Kosgama | HA/06/CBO/153 |
| 134. | Sri Sithi Vinayagar Temple,<br>D.S.Senanayake School, Colombo - 07 | HA/06/CBO/154 |

Source : Dept. of Hindu Cultural Affairs

# பதிவு செய்யப்பட்ட இந்து நிறுவனங்கள்

## கொழும்பு மாவட்டம்

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 1. | Sri Shanmuganantha Society<br>107\9 Bandaranayake Mawatta, Colombo 12 | HA/4/C/01 |
| 2. | All Ceylon Hindu Mamantram<br>101M Sir Chittambalam A Gardens Mawatta, Colombo 2 | HA/4/C/02 |
| 3. | Sri Varatharajar Vinayagar Volunteer Board<br>101M Sir Chittambalam A Gardens Mawatta, Colombo 2 | HA/4/C/03 |
| 4. | Colombo Ladies Hindu society<br>24 A Alfred Place, Colombo 3 | HA/4/C/04 |
| 5. | Wesely College Hindu Mamantram<br>Wesely College, Colombo 9 | HA/4/C/05 |
| 6. | Colombo Thivya Jeevana Society<br>131 Chankamitta Mawatta, Colombo 13 | HA/4/C/06 |
| 7. | Sri Sathya Saji Baba Centre Station<br>113, New Chetty Street, Colombo 13 | HA/4/C/07 |
| 8. | Navalar Sot Pajitsi Mantram<br>248\2 Ratnasothi Saravana Muthu Mawatta, Colombo 13 | HA/4/C/08 |
| 9. | Sathiya Saji Baba Sri Lanka Trust<br>2\3 J Block, Bambalapititya Flats, Colombo 4 | HA/4/C/09 |
| 10. | Appar Arull Neri Mantram<br>142 Chetty Street, Colombo 11 | HA/4/C/10 |
| 11. | Survey Department of Hindu Society<br>Survey Department, P. 0 Box No. 506, Colombo 5 | HA/4/C/11 |
| 12. | Hindu Ma Mantram<br>Local Medical College Organization, University of Colombo, Colombo | HA/4/C/12 |
| 13. | Sri Rama Krishna Saratha Samirthi<br>59 Vivekananda Road, Colombo 6 | HA/4/C/13 |
| 14. | Sri Lanka Thirukurippu Thonda Nayanar Society<br>146 Messenger Street, Colombo 12 | HA/4/C/14 |
| 15. | North Colombo Hindu Paripalana Sabai<br>68 Temple Road, Colombo 15 | HA/4/C/15 |
| 16. | Sri Lanka Sin Maja Mission<br>48 Haig Road, Colombo 4 | HA/4/C/16 |
| 17. | Ealaththu Thiruneri Mantram<br>241\2W.A.SilwaMawatta, Colombo 6. | HA/4/C/17 |

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 18. | Kathirgame Yathirika Volunteer Board<br>3, Temple Road, Colombo 10 | HA/4/C/18 |
| 19. | Hindu Tamil Society<br>67, Sanji Arachchi Garden, Colombo 12 | HA/4/C/19 |
| 20. | Hindu Students Union<br>Colombo Hindu College, Ratmalana | HA/4/C/20 |
| 21. | Hindu Development Society<br>101\70QueeRoad, Colombo 2 | HA/4/C/21 |
| 22. | All Ceylon Hindu Youth Society<br>30 Pipe Street, Colombo 5 | HA/4/C/22 |
| 23. | Thivya Jeevana Mission<br>10 skeldon Street, Colombo 5 | HA/4/C/23 |
| 24. | Gnananda Sri Seva Samajam<br>4, Summer Place, Colombo 8 | HA/4/C/24 |
| 25. | Sri Rama Krishna Mission<br>40, Ramakrishna Road, Colombo 6 | HA/4/C/25 |
| 26. | Sri Lanka Ports Authority Hindu Employees Society<br>P. 0 Box 595, Colombo 1 | HA/4/C/26 |
| 27. | Post & Telecommunication Department Hindu Employees Society<br>Postaal Training Institution, Colombo 6 | HA/4/C/27 |
| 28. | Hindu Youth Society<br>17, FusselsLane, Colombo 6 | HA/4/C/28 |
| 29. | Lanka Bab a Yoga Sangam<br>153, 2\1 Canal Bank Road | HA/4/C/29 |
| 30. | All Ceylon Siva Subramania Society<br>38 St. Antony Mawatta, Kottahena, Colombo 12 | HA/4/C/30 |
| 31. | Vivekananda Society<br>34 Vivekananda Hill, Colombo 13 | HA/4/C/31 |
| 32. | Thiruvarul Federation<br>5 Kanna Street, Colombo 13 | HA/4/C/32 |
| 33. | Malgawatta Hindu Paripalana Sabai<br>157M 7 Grand Pass Road, Colombo 14 | HA/4/C/3 3 |
| 34. | Dematagoda Hindu Culture Society<br>49\12Martress, Colombo 9 | HA/4/C/34 |
| 35. | Ceylon Saiva Neethy Mission,<br>Mahinda Tharma Road, Demattagoda, Colombo 9 | HA/4/C/3 5 |
| 36. | Piramma Kumarikal Raja Yoga Station<br>6th 8th Lane, Colombo 3 | HA/4/C/36 |

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 37. | Aru Naddar Verlalar Society<br>243 4\1 Main Street, Colombo 11 | HA/4/C/37 |
| 38. | Hindu Cultural Society<br>39\23 Nelson Lane, Colombo 3 | HA/4/C/38 |
| 39. | Samaneethi Federation<br>D.4 National Housing Flats, Thimbirikasaya Road, Colombo 5 | HA/4/C/39 |
| 40. | Bagavan Sri Sathya Seva Samirthy<br>22, Bames Place, Colombo 7 | HA/4/C/40 |
| 41. | All Ceylon Hindu Religious & Cultural society | HA/4/C/41 |
| 42. | Sri Narayana Guru Mantram<br>103, Loyards' Broadwat, Colombo 4 | HA/4/C/42 |
| 43. | Colpitty Methodist Govt. Tamil Mixed School Hindu Cultural Society<br>59, Feradson Road, Colombo 3 | HA/4/C/43 |
| 44. | Dehiwella Tamil Vidyalaya Hindu Society<br>Dehiwella Tamil Vidyalayam, off Station Road, Dehiwella | HA/4/C/44 |
| 45. | Hindu Cultural Development Society<br>39V71 Nelson Lane, Colombo 3 | HA/4/C/45 |
| 46. | Oam Sivasakthy Front<br>180\45 Bandaranayake Mawatte, Colombo 12 | HA/4/C/46 |
| 47. | Krishnamoorthy Centre<br>11, Nagagahawatta, Kirulappanai, Colombo 5 | HA/4/C/47 |
| 48. | Bagawan Sri Sithi Sai Seva Organisation in Sri Lanka<br>24 Palm Grove, Colombo 3 | HA/4/C/48 |
| 49. | Sri Murugan Volunteers Society<br>123\44 Bandaranayake Mawatta, Colombo 12 | HA/4/C/49 |
| 50. | Hinduism & Cultural Littreature Federation<br>248\9 Sri Ratnasothy, Saravan Muththu Mawatta, Colombo 13 | HA/4/C/50 |
| 51. | Kathirgamapatha Yaththirikai Society<br>38\8 St. Antony Mawatta, Colombo 13 | HA/4/C/51 |
| 52. | Mownachchiramama<br>19 International Buddist Central Road, Colombo 6 | HA/4/C/52 |
| 53. | Hindu Maha Society<br>254 Main Street, Puvakpittiya | HA/4/C/53 |
| 54. | Hindu Youth Society<br>4, Ramakrishna Gardens, Colombo 6 | HA/4/C/54 |
| 55. | North Colombo Hindu Youth Society<br>31 A Hamsa Lane, Muthuwella Mawatta, Colombo 15 | HA/4/C/55 |

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 56. | Hindu Pothuppani Mantram<br>248\9 Sri Sankaraja Mawatta, Colombo 10 | HA/4/C/56 |
| 57. | Mel Maruththoor Aathi Parasakthy Vara Valipaddu Mantram<br>12 School Lane, Colombo 3 | HA/4/C/57 |
| 58. | Hindu Religious & Cultural Society<br>181M8 Santhy Road, Hendala, Wattala | HA/4/C/58 |
| 59. | Colombo Crow Island Hindu Society<br>65\264 Vishdvike Road, Maddakuliya | HA/4/C/59 |
| 60. | Devara Pannisai Society<br>103\3 Hulptsdrop Street, Colombo 12 | HA/4/C/60 |
| 61. | Sowmiam Hindu Kala Mantram<br>180\22 B Block, Grand Pass Road, Colombo 14 | HA/4/C/61 |
| 62. | Vivekananthar Hinud Youth Society<br>Kalanithisgama, Verakodala, Wellampittiya | HA/4/C/62 |
| 63. | Urukodawatta 15th Estate Maha Kanapathy Temple<br>Hindu Development Society<br>191V7 Avisawella Road, Wellampittiya | HA/4/C/63 |
| 64. | Colombo Ladies Hindu Society<br>23 A Alfred Place, Colombo 3 | HA/4/C/64 |
| 65. | Sri Murugan Hindu Mantram<br>Fentry Estate, Lower Division, Avisawella | HA/4/C/65 |
| 66. | Sri Devi Maha Gayathri Children Development Union<br>77M8 Veluvana Road, Dematagoda, Colombo 9 | HA/4/C/66 |
| 67. | World Hindu Organisation<br>9 Jeya Road, Colombo 4 | HA/4/C/67 |
| 68. | Sri Siththi Vinayagar Temple Hindu Youth Union<br>183 Sri Saththarma Mawatta, Maligawatta, Colombo 10 | HA/4/C/68 |
| 69. | Valluvar Aranery Mantram<br>1\3 B 54 Eachamuthupura, Kathiranawatta, Mattakuliya, Colombo 15 | HA/4/C/69 |
| 70. | Sethsripaya Hindu Society<br>Sethsripaya, Battaramulla | HA/4/C/70 |
| 71. | Sankatamil Hindu Society<br>H39 Navakampuram, Wellampititya | HA/4/C/71 |
| 72. | All Ceylon Iyappa Seva Society<br>G\I\6 Saththiyarachchi Garden, Colombo 12 | HA/4/C/72 |
| 73. | Hindu Ladies Society<br>23 Uruthira Mawatta, Colombo 6 | HA/4/C/73 |

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 74. | Annai Aathi Parasakthy Illam<br>65\235VistwikeRoad, Colombo 15 | HA/4/C/74 |
| 75. | Hindu Ma Mantram<br>436 Main Street, Puvagapittiya | HA/4/C/75 |
| 76. | Vaddukoddai Hindu Youth Society<br>Colombo Branch, 83M 2\4 Hamden Lane, Colombo 6 | HA/4/C/76 |
| 77. | World Muruga Devotees Assembley<br>F G\8 Mount Laveniya, Ratmalane | HA/4/C/77 |
| 78. | Arulakam Welfare Association<br>28\1 Brass Founder Street, Colombo 13 | HA/4/C/78 |
| 79. | Sakthi Hindu Students Union<br>Colombo 6 | HA/4/C/79 |
| 80. | Sivasakthy Hindu Ma Mantram<br>Wellawatta Government Tamil Vidyalayam, Pambankada,<br>Colombo 6 | HA/4/C/80 |
| 81. | Sri Hari Hara Suthan Peedam Seva Society<br>100\3 Chetty Street, Colombo 11 | HA/4/C/81 |
| 82. | Sri Rama Ragaventhira Swamikal Mantharalaya<br>Hindu Ma Mantram<br>Luxmi Vasam, 38 C Beach Road, Colombo 11 | HA/4/C/82 |
| 83. | Hindu Youth Society<br>35\34MajuraPlace, Colombo 6 | HA/4/C/83 |
| 84. | Sri Lanka Sinth Social Service Centre<br>32, Ilth Lane, Colombo 3 | HA/4/C/84 |
| 85. | Hindu Soceity of University of Colombo<br>93, Kumaratunga Munidasa Mawatta, Colombo 3 | HA/4/C/85 |
| 86. | Hindu Ladies Society<br>141\6 Aramaya Road, Dematagoda, Colombo 9 | HA/4/C/86 |
| 87. | Oam Sakthy Centre<br>145\17QuarriRoad, Kirulappanai | HA/4/C/87 |
| 88. | Maha Sri vidya International Hindu Matha Peedam<br>86\26 A St. Benedict Mawatta, Colombo 13 | HA/4/C/88 |
| 89. | Sivathiru Mantram<br>13 A, 40th Lane, Wellawatta, Colombo 6 | HA/4/C/89 |
| 90. | All Ceylon Siva Piramana Society<br>136\28, George r. D. Silva Mawatta, Colombo 13 | HA/4/C/90 |
| 91. | Sanathana Thama Yuva Awarenes Society<br>3 Ridgeway Place, Colombo 4 | HA/4/C/91 |

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 92. | World Aanmeega Eluchchi Perani<br>31\21 DosanRoad, Colombo 2 | HA/4/C/92 |
| 93. | Thaththuvagnana Thavasalai<br>Aruloli Centre, 31\21 Dosan Road, Colombo 2 | HA/4/C/93 |
| 94. | International Sabarimalai Sri Tharma Sastha Peedam<br>86\26 A St. Benedict Mawatta, Colombo 13 | HA/4/C/94 |
| 95. | Presbyterian Girls' Hindu Society<br>Regent Street, Colombo 10 | HA/4/C/95 |
| 96. | Hare Krishna Pakthy Iyakkam<br>57\3 Avisawella Road, Urukodawatta, Wellampittiya | HA/4/C/96 |
| 97. | Pakthi Vethantha Children Home<br>188 New Chetty Street, Colombo 13 | HA/4/C/97 |
| 98. | Hindu Tharma Social Seva Society<br>132M 1\1, Welikadawatta Road, Kurunthuwatta, Navala Road, Rajakiriya | HA/4/C/98 |
| 99. | Ratmalana Morattuwa Hindu Society<br>C/14/1/1/ Soisapura Housing Scheme, Morattuwa | HA/4/C/99 |
| 100. | Hindu Employees Union<br>Sri Lanka Ports Authority, Colombo Port, 19 Church Road, Colombo 1 | HA/4/C/100 |
| 101. | Sabarimalai Yaththirai Sir Manikanda Sevapeedam<br>94\4 Vivekananda Hill, Hill Street, Colombo 13 | HA/4/C/101 |
| 102. | Vivekananda Youth Awareness Society<br>15\4 Beach Road, Colombo 11 | HA/4/C/102 |
| 103. | The Hindu Mahasaba of VTV Courts,<br>3\5 Daffodil Apt, 426M6 K Cyril C. Perera Mawatta, Colombo 13 | HA/4/C/103 |
| 104. | Sri Devy Gurugula Sabaripeedam Vethakama College<br>64-1 1\4 Joseph Dayas Lane, Colombo 15 | HA/4/C/104 |
| 105. | Hindu Cultural Natpani Mantram<br>121\5 Chetty Street, Colombo | HA/4/C/105 |
| 106. | Old Boys' Association<br>Vivekananda College | HA/4/C/106 |
| 107. | Hindu Students Society<br>Kanapathy Hindu Ladies Vidyalayam<br>194 A Bandaranayakka Mawatta, Colombo 12 | HA/4/C/107 |
| 108. | Hindu Students Society<br>Kottahena Methodist Tamil Vidyalaya,<br>200 Packarinz Road, Colombo 13 | HA/4/C/108 |
| 109. | Hindu Students Society<br>Royal College, Colombo 7 | HA/4/C/109 |

| No | Name and Address of the Hindu Organizations | Registration No. |
|---|---|---|
| 110. | Hindu Students Society<br>Vivekanantha College, Colombo 13 | HA/4/C/110 |
| 111. | Ceylon Visvakarma Society<br>168 Sri Kathiresan Road, Colombo 13 | HA/4/C/111 |
| 112. | Youth Development Society<br>162 Muthuwella Mawatta, Colombo 15 | HA/4/C/112 |
| 113. | Hindu Students Union<br>Ramanathan Hindu Ladies College,<br>Lorenz Road, Colombo 4 | HA/4/C/113 |
| 114. | Hindu Students Union<br>Hindu College, 154, Muthuwela Mawatha, Colombo - 15 | HA/4/C/114 |
| 115. | Hindu Students Union<br>Good shephered Govt. Tamil Girls' Vidyalayam<br>Colombo 13 | HA/4/C/115 |
| 116. | Hindu Students Union<br>Wolfendal Govt. Tamil Vidyalaya<br>300\4 Srimavo Bandaranayakka Mawatta, Colombo 14 | HA/4/C/116 |
| 117. | Hindu Students Union<br>D. S. Senanayake College<br>Colombo 2 | HA/4/C/117 |
| 118. | Hindu Students Association<br>Jayawardanapura Hindu Vidyalayam<br>Obeysekarapura Road, Rajagiriya | HA/4/C/118 |
| 119. | Hindu Students Union<br>Nugegoda Tamil Vidhyalayam<br>Nugegoda | HA/4/C/119 |

Source : Dept. of Hindu Cultural Affairs

**'கொழும்பு மாவட்டத்தில் இந்து மாணவர்களின் கல்விநிலை' எனும் பேராசிரியர். சோ. சந்திரசேகரம் அவர்களின் கட்டுரையின் பின்னிணைப்பாகத் தரப்பட்ட அட்டவணைகள்**

## அட்டவணை I

**கொழும்பு மாவட்டம் - சமய வகைப்படி**

**மக்கள் தொகை (1981 - 2001) (சதவீதத்தில்)**

| | 1981 | 2001 |
|---|---|---|
| 1. பௌத்தர்கள் | 70.1 | 70.4 |
| 2. இஸ்லாமியர்கள் | 7.7 | 8.9 |
| 3. இந்துக்கள் | 9.9 | 10.7 |
| 4. றோமன் கத்தோலிக்கர் மற்றைய கிறிஸ்தவர் | 11.8 | 9.9 |

Source : Statistical Pocket Book - 2002
Dept. of Census & Statistics

## அட்டவணை II

**கொழும்பு மாவட்டம் - இன வகைப்படி மக்கள் தொகை**

**மக்கள் தொகை (1981 - 2001) (சதவீதத்தில்)**

| | 1981 | 2001 |
|---|---|---|
| 1. சிங்களவர்கள் | 77.6 | 76.4 |
| 2. தமிழர்கள் | 11.2 (1.2)* | 12.4(1.2)* |
| 3. முஸ்லிம்கள் | 8.2 | 9.2 |

* அடைப்புக் குறிக்குள் இந்தியத் தமிழர் சதவீதம்

Source : Statistical Pocket Book - 2002
Dept. of Census & Statistics

## அட்டவணை III

### *1832 இல் இலங்கையிலிருந்த பாடசாலைகள்*

| | | |
|---|---|---|
| *1.* | *கோயில் பற்றுப் பாடசாலைகள்* | 97 |
| *2.* | *கிறிஸ்தவ சமயக் குழுக்களின் பாடசாலைகள்* | 236 |
| *3.* | *தனியார் பாடசாலைகள்* | 640 |
| *4.* | *கத்தோலிக்கப் பாடசாலைகள்* | 63 |
| *5.* | *பௌத்தப் பாடசாலைகள்* | 1000 |
| *6.* | *இந்துப் பாடசாலைகள்* | - |
| *7.* | *முஸ்லிம் பாடசாலைகள்* | - |

Source : Reberu R. Education Colonical Ceylon, Kandy, Printed, 1962

*அக்கால அரச ஆவணங்கள் நாட்டிலிருந்த பௌத்த பிரிவேனாக்கள் (1000) பற்றிய தகவல்களைத் தந்தன. இந்துக்களின் கோயில் பள்ளிகள், திண்ணைப் பள்ளிகள் முஸ்லிம்களின் மதரஸாக்கள் என்பவற்றைப் பாடசாலைகளாக கருத்திற் கொள்ளப்படவில்லை.*

## அட்டவணை IV

### இந்துப் பாடசாலைகளின் வளர்ச்சி

### *(1880 - 1900)*

| ஆண்டு | இந்துப் பாடசாலைகள் | மாணவர் தொகை |
|---|---|---|
| 1880 | 1 | 167 |
| 1885 | 4 | 378 |
| 1890 | 6 | 661 |
| 1895 | 30 | 4 600 |
| 1900 | 45 | 5 000 |

## அட்டவணை V

### கொழும்பில் உள்ள இந்துப் பாடசாலைகள்

1. இந்துக்கல்லூரி, பம்பலப்பிட்டி, கொழும்பு - 04
2. இராமநாதன் இந்து மகளிர், பம்பலப்பிட்டி, கொழும்பு - 04
3. விவேகானந்தக் கல்லூரி, கொழும்பு - 13
4. இரத்மலானை இந்துக் கல்லூரி
5. சைவ மங்கையர் வித்தியாலயம், கொழும்பு - 06
6. இந்துக்கல்லூரி, முகத்துவாரம், கொழும்பு - 15
7. விபுலானந்த மகாவித்தியாலயம், தெமட்டகொடை, கொழும்பு - 09
8. கொழும்பு மத்தி ஆண்கள் வித்தியாலயம்
9. கணபதி வித்தியாலயம்
10. தொண்டர் வித்தியாலயம்
11. தெஹிவல தமிழ் மகாவித்தியாலயம்
12. நுகேகொடை தமிழ் வித்தியாலயம்
13. வுல்பெண்டால் தமிழ் வித்தியாலயம்

# பதிவு செய்யப்பட்ட அறநெறிப் பாடசாலைகள்

## கொழும்பு மாவட்டம்


| No. | Aranery School Name, Address | Registration No. | Total No. of Students | Total No. of Teachers |
|---|---|---|---|---|
| 1. | Hindu Mission Aranery School No 5 Oinment Street, Colombo-12 | HA/07/56/01/01 | 50 | 07 |
| 2. | Sri Varatharaja Vinayakar Thondar Sabai,No102,Kotahena St, Colombo-13 | HA/07/5 6/01/02 | 52 | 03 |
| 3. | North Colombo Hindu Comiti's Aranery School,No 40 Temple St,Colombo 15. | HA/07/56/01/03 | | 09 |
| 4. | Ramakrishnamission Aranery School, No 40, Ramakrishnamission Colombo 6 | HA/07/56/01/04 | 780 | 07 |
| 5. | Hindu Kalachara Muththamil Mandra Hindu Aranery School 265/15,GalleRoad, Colombo 03. | HA/07/56/01/05 | | 10 |
| 6. | Vivakanantha Sabai Aranery School, No 34. Vivekanantha Hills. Colombo -13 | HA/07/56/01/06 | | 10 |
| 7. | Bahavan Sri Sathya Sai Baba Center, 109.Baber St, Colombo-13. | HA/07/56/01/07 | 100 | 04 |
| 8. | Kalaivanee Aranery School, 180,Kotahena Street,Govt Tamil Vidyalaya,Colombo -13 | HA/07/56/01/08 | 100 | 07 |
| 9. | Kathirkama Yathirikar Thondar Sabai Aranery School.No 03 Temple Road,Kappiyawatta Colombo-10 | HA/07/56/01/09 | 52 | 01 |
| 10. | Sri Siththi Vinayakar Temple Aranery School,No 59,Maligawatta Road, Colombo -10 | HA/07/56/01/10 | 388 | |
| 11. | Saiva Munnetra Sanka Aranery School,! 01/70,Que road, Colombo -02 | HA/07/56/01/11 | 350 | 14 |
| 13. | Krishna Mankalam Acadamy,100/15, Parakirama Mawatha, Peliyagoda. | HA/07/56/01/13 | | |
| 14. | Sri Ananda Vinayakar Aranery School, 49/12,Mart Trace,Dematagoda,Col-09. | HA/07/56/01/14 | 62 | 03 |
| 15. | Sarasavi Ilaignhar Kalaka Iyyappan Hindu Mandra Aranery school,A-6, F37 Blumendhall Flats,Colombo -13. | HA/07/56/01/15 | 113 | 05 |
| 16. | AmbalArivagam Aranery School, 2E,1 A Nawagampura 2nd Division, Colombo 14. | HA/07/56/01/16 | 50 | 03 |

| No. | Aranery School Name, Address | Registration No. | Total No. of Students | Total No. of Teachers |
|---|---|---|---|---|
| 17. | Dehiwella Tamil Vidyalaya Aranery School, Station Road.Dehiwala. | HA/07/56/01/18 | 150 | 05 |
| 18. | Sri Sivasubramaniya Aranery School, No 13 1/1, Sri Mahindarama Mawatha, Dematagoda, Col-09 | HA/07/56/01/19 | 35 | 05 |
| 19. | Ashta Laxmi Aranery School,Sri Muthumariamman Temple,Senkuth Thottam. Colombo 14. | HA/07/56/01/20 | 30 | 02 |
| 20. | SriMuthumariamman Temple Aranery School, 129/17 A Jinthupiti St.Col-13 | HA/07/56/01/21 | | 01 |
| 21. | Kanapathi Aranery School.Kanapathi Vidyalayam, Bandaranayake Mw,Col3 | HA/07/56/01/22 | 175 | 10 |
| 22. | Kalaivani Aranery School.Kotahena Tamil Vidyalayam, Colombo-13 | HA/07/56/01/23 | 335 | 10 |
| 23. | Vipulananda Aranery School, No77,Veluvana Road.Colombo 09. | HA/07/56/01/24 | | 06 |
| 24. | Vipulananthar Aranery School, KclanytissaGama,Weragodella, Wellampitiya. | HA/07/56/01/25 | 30 | 02 |
| 25. | Katpaka Vinayakar Aranery School, Pickarings Road,Kotahena. | HA/07/56/01/26 | 175 | 08 |
| 26. | Maha Kanapathi Aranery School, 191/7 Awissawela Road,Wellampitiya. | HA/07/56/01/27 | 68 | 04 |
| 27. | Sri Sivasubramaniya Swamy Dewasthana Aranery School, 109,Srimath Bandaranayake Mw, Colombo- 12 | HA/07/56/01/28 | 182 | 03 |
| 28. | Sripathira kaliamman Devasthana Aranery School, No 07,Mayura Place, Colombo-06. | HA/07/56/01/29 | 420 | 11 |
| 29. | Valluvar Aranery School, I/3A,No 05, Ekamuthupura,Kadiranawatta,Colo-15 | HA/07/56/01/30 | 60 | 03 |
| 30. | SriMuthumariamman Aranery School, Labugama Thottam,Thummodara. | HA/07/56/01/31 | 60 | 01 |
| 31. | Sri Varatha Vinayakar Temple Aranery School, Sri Varatharaja Vinayakar Temple, 105, Kotahena Street, Col-13. | HA/07/56/01/33 | 198 | 05 |
| 32. | North Colombo Ilaingchar Shanka Aranery School 155/I.Dhawalasinharama, Mw, Colombo 15. | HA/07/56/01/34 | 181 | 06 |

| No. | Aranery School Name, Address | Registration No. | Total No. of Students | Total No. of Teachers |
|---|---|---|---|---|
| 33. | Jeyanthi Nagar Aranery School, 42/8, Kannaratheru, Colombo 15. | HA/07/56/01/35 | 32 | 03 |
| 34. | Arumuganavalar Aranery School, N0,61 New Kalany Bridge Road, 2nd Nawagampura, Wellampitiya. | HA/07/56/01/36 | 55 | 05 |
| 35. | Barathy Aranery School, Elaston Estate,LowerDivision,Puwakpitiya, Awissawella. | HA/07/56/01/37 | 70 | 02 |
| 36. | Sriselva Vinayakar Aranery School, 128/7,New Kelanypura, wellampitiya. | HA/07/56/01/38 | 40 | 02 |
| 37. | Sankathamil Hindu Mandra AmerySchool, H-39,Nawagampura Col - 14 | HA/07/56/01/39 | 136 | 10 |
| 38. | Srimahakaliyamman Temple Aranery School, 59,Pradice Place, Colombo 12. | HA/07/56/01/40 | 40 | 03 |
| 39 | .Srimuthumariamman Vinayakar Amery 36/42,Maha Vidyalaya Mawatha Colombo-13. | HA/07/56/01/41 | 20 | 01 |
| 40 | Sri Senthil Kumaran ThiruKovil Aranery School, 146/1, Aramaya St,Dematagoda | HA/07/56/01/42 | 64 | 04 |
| 41 | Sri Muthumariamman Aranery School, SrimthumariammanTermple, Kudagamavali,Awissawella. | HA/07/56/01/43 | 102 | 03 |
| 42 | Annai Parashakthi Aranery school, 65/235 Vistwhyk Road. Colombo -15 | HA/07/56/01/44 | 37 | 04 |
| 43 | Sri Devi Karumariamman Sri iyyappa Swamy Aranery School, 428,R.A.De Mel, Mawatha,Colombo - 03 | HA/07/56/01/45 | 20 | 03 |
| 44 | Sri Vairavar Muniyandy Swamy Temple Aranery School, 128/35 A,Jinthupity St, Colombo-13. | HA/07/56/01/46 | 30 | 02 |
| 45 | Srithurka Aranery School, 67/93,Majid Place, Orugodawatta. | HA/07/56/01/47 | 70 | 05 |
| 46 | Ariya patta Pala Pandir Sanathana Vilipunarchi Kalaka Aranery School, No 03 .Colombo - 04. | HA/07/56/01/48 | 52 | 11 |
| 47 | Harekrishna Aranery School, 133,SriSaddharma Mawatha,Colombo-10. | HA/07/56/01/49 | 25 | 04 |

| No. | Aranery School Name, Address | Registration No. | Total No. of Students | Total No. of Teachers |
|---|---|---|---|---|
| 48 | Sri Sivasubramaniya Swamy Temple Aranery School,98,Jayanthi Nagar, Colombo-13. | HA/07/56/01/50 | 114 | 04 |
| 49 | Srimaha Kaliyammkan No680, Bluemandhal road.Colombo 15 | HA/07/56/01/51 | 50 | 06 |
| 50 | Arulmihu Muthumariamman Temple Thirugnanasambantha Natmany Mandra Aranery School,66/I 4,Baseline,Borella. | HA/07/56/01/52 | 25 | 01 |
| 51 | Vani Vidya Aranery School,Sri Siththi Vinayakar Temple,Dematagoda. | HA/07/56/01/53 | 30 | 02 |
| 52 | Srikanchikamakodipeeda Sankarachariyar Swamikal Aranery School, 428,R.A.De Mel Mw.Colo-03 | HA/07/56/01/54 | 39 | 05 |
| 53 | Srimuthumariamman Aranery School 151/38,Kotte road,Rajagiriya, | HA/07/56/01/55 | 60 | 01 |
| 54 | Kalaimahal Aranery School, Srinivasa Thottam, Upper Division,Colombo. | HA/07/56/01/56 | 39 | 01 |
| 55 | Thanthai Selva Aranery School, 198, Dam Stree.Colombo-12. | HA/07/56/01/57 | 150 | 06 |
| 56 | Sri Pala Vinayakar Aranery School 27/40A, Sethawatta road,Wellampitiya. | HA/07/56/01/58 | 100 | 05 |

# ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி கோவில்



ஸ்ரீ முத்து விநாயகர் சுவாமி கோவில்
221, செட்டியார் தெரு
கொழும்பு - 11

## ஆலய அமைப்பு

கொழும்பு 221ஆம் இலக்க செட்டியார் தெருவில் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயம் 50 பேர்ச் விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது. கிழக்கு நோக்கிய வண்ணம் ஸ்ரீ விநாயகர் சந்நிதி அமைந்துள்ளது. விநாயகர் சந்நிதிக்கு சமாந்திரமாக கிழக்கு நோக்கி மூலவராக ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரப் பெருமான் எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். அம்பிகை மீனாக்ஷியின் மூல மூர்த்தம் தெற்கு நோக்கி அருள்மொழி திருக்கோலத்தில் அமைந்துள்ளது. ஆலயம் 350 ஆண்டு பழமை வாய்ந்தது.

ஆதியில் இவ்வாலயம் சிவாலயமாகவே இருந்தது. 1754இல் முத்துக் குளிக்கச் சென்றவர்களால் கண்டெடுக்கப்பட்ட தாமிர விநாயகர் அழகுமிக்க அருள்நிறை விநாயகர். அதனால் இவ்வாலயத்தில் மூலவராக விநாயகர் ஸ்தாபிக்கப்பெற்று அவரது திருநாமத்தினாலேயே இவ்வாலயம் முத்து விநாயகர் ஆலயமாக உயர்ந்தது. இச்சிறப்புக் களை ஆலய வரலாற்றில் காணலாம்.

விநாயகர் திருமுன் மூஷிகம் பலிபீடமும் சிவனுக்கு முன்னால் சிறிய நந்தி பலிபீடமும் உட்சுற்றில் சோமசுந்தரேஸ்வரப் பெருமான் சந்நிதியின் முன்பாக பல நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த பெரிய நந்தியும் பலிபீடமும் அமைந்துள்ளன. இந்நந்தி மிகுந்த அழகுடன் கம்பீரமாகக் காணப்படுகின்றது.

16 அடி உயரமான துவஜஸ்தம்பம் அழகுடன் விளங்குகின்றது. மூலத்தான விநாயகர் கருவறை ஆலய முகப்பிலே இராஜசிம்மாசனத்தில் ஸ்ரீ முத்து விநாயகப்பெருமான் கலையழகுடன் ஒளிர்கின்றார்.

இவ்வாலயத்தின் நுழைவாயிலில் இரண்டு இராஜகோபுரங்கள் காணப்படுகின்றன. 55அடி உயரத்தில் ஐந்து தளங்கள் கொண்ட அழகிய இராஜகோபுரம் விநாயகர் சந்நிதிக்காகவும் சிவசந்நிதிக்கு முன்பாக அமைந்துள்ள கோபுரம், சிவன், உமை, விநாயகர், முருகன் சகிதம் சுதையினால் உருவாக்கப்பெற்று கவினுடன் காட்சியளிக்கின்றது.

இனி ஆலயத்தை வலமாக வந்தால் பரிவாரமாக அம்பிகையின் சந்நிதிக்கு முன்பாக சமயக் குரவர் நால்வரின் திருவுருவங்களும் ஆஞ்சநேயர், ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, சக்தி கணபதி, வள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, மயில் பலிபீடத்துடனும் சோமாஸ்கந்தர், நடேசர், பஞ்சமுக விநாயகர் (செப்புத் திருமேனி) நவக்கிரகங்கள், பைரவர், நாகர், சூரியன், சந்திரன் போன்ற மூர்த்தங்களும் சிவன் ஆலயத்தைச் சுற்றி கோஷ்ட விக்கிரகங்களாக தக்ஷிணாமூர்த்தி, இலிங்கோற்பவர், துர்க்கை ஆகியோரும் 2002ஆம் கும்பாபிஷேகத் திருப்பணிகளில் துர்க்கையை அடுத்துக் காளியும் காணப்படுகின்றனர். சண்டேஸ்வரர் சந்நிதியும் உண்டு.

எழுந்தருளி மூர்த்தங்களாக விநாயகர், காளி, சுப்பிரமணியர், சிவன், சோமாஸ்கந்தர், நடேசர், பஞ்சமுக விநாயகர், பிரதோஷ மூர்த்தி, விஷ்ணு, அம்பாள், மனோன்மணி ஆகியோர் காணப்படுகின்றனர்.

ஆலய உபயோகத்திற்கான ஒரு கிணறும் இரண்டு குழாய்க் கிணறுகளும் உண்டு.

எழுபத்தைந்து கிலோ நிறை கொண்ட பழைமை வாய்ந்த கண்டாமணியும் உண்டு.

அழகிய வசந்த மண்டபம், யாகசாலை அமைந்து காணப்படுகின்றன.

## பூஜை ஒழுங்கு

ஆறுகால பூஜை நேரங்கள் திருவனந்தல் காலை 6.00 மணி; காலை சந்தி 7.30 மணி; உச்சிக்காலப் பூஜை 11.00 மணி; சாயரக்ஷை 6.00 மணி; இரண்டாம் கால பூஜை 6.30 மணி; 8.00 மணிக்கு அர்த்தஜாமப் பூஜை.

ஆலய பூஜைகள் ஆகம முறைப்படி அந்தண சிவாச்சாரியார்களினால் நிகழ்த்தப் படுகின்றது. பிரதம குருக்களுக்கு உதவியாக உதவிக் குருக்கள்மார், மடைப்பள்ளி ஐயர், பலவேலைகாரர் போன்றோரும் உள்ளனர்.

பூஜை ஒழுங்குகள் நிர்வாகத்தினரால் கண்காணிக்கப்படுகின்றன. செவ்வாய், வியாழன், வெள்ளிக்கிழமைகளில் காலை சந்தி பூஜை முடிந்த பின் வசந்தமண்டப பூஜை, தீபாராதனை நிகழும்.

ஆலயத்தில் நேர்த்திக் கடன்களாக நெய் விளக்கேற்றல், அபிஷேகம், சந்தனக் காப்பு, குடம், குத்துவிளக்கு ஆகியவற்றை ஆலயத் திற்கு அளித்தல் ஆகியன நடைபெறும். ஆலய வழிபாடுகள் வதிவிட அடிப்படையில் நடைபெறுகின்றன.

ஆலய அர்ச்சகர்களுக்கு வீடும் மாத வேதனமும் தட்க்ஷணையும் விசேட திருவிழாக் காலங்களில் ஊக்குவிப்புத் தொகையும் வழங்கப்படுகின்றது.

பூஜா சாதனங்கள் அனைத்தும் ஆலயத் தில் உள்ளன.

## திருவிழாக்கள்

ஸ்ரீ முத்து விநாயகரின் வருடாந்த மஹோற்சவம் பங்குனித் திங்கள் 23ஆந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பங்குனி 30 ஆம் நாள் வேட்டைத் திருவிழாவும் ஒன்பதாம் திருநாளான சித்திரைத் தமிழ் வருடப்பிறப்பு அன்று தேர்த்திருவிழாவும் மிகச்சிறப்பாக நடைபெறும். பக்தர்கள் தங்கள் இல்ல வாயில் களில், வியாபாரத் தலங்களில் ஆயிரக்கணக் கான தேங்காய்களை மலைபோல் குவித்து சிதறுகாய் எறிந்து இஷ்ட சித்திகளைப் பெறுவர். செட்டியார் தெரு, ஸ்ரீ கதிரேசன் வீதி ஐந்து லாம்புச் சந்தி, செட்டியார் வீதி வழியாக தேர்பவனி நடைபெற்று பெருமான் ஆலயத்தை அடைவார்.

சித்திரைத் திருநாள் இரண்டாம்நாள் காலையில் ஆலயக் கன்னி மூலையில் உள்ள கிணற்றில் தீர்த்தத் திருவிழா கோலாகலமாக நடைபெறும். மாலையில் திருவூஞ்சல் நடை பெற்றுக் கொடியிறக்கத்துடன் வருடாந்தத் திருவிழா இனிதே நிறைவேறும்.

மஹோற்சவ உபயகாரர்கள் :-

1ஆம் நாள் கொடியேற்றம்
கோவில் தர்மகர்த்தாக்கள்
மாலை திருமதி. எல். சுவாமிநாதன்

2ஆம் நாள் திருவிழா
திரு. ஷண்முகநாதன்

3ஆம் நாள் திருவிழா
திரு. மகாதேவா
மாலை திருமதி. செல்லமுத்து

4ஆம் நாள் திருவிழா
திரு. முத்துராமலிங்கம்

5ஆம் நாள் திருவிழா
திரு. கணேசன்

6ஆம் நாள் திருவிழா
லீலா ஜூவல்லர்ஸ்

7ஆம் நாள் திருவிழா
பழைய, புதிய கதிரேசன் கோவில் கணக்கப் பிள்ளைமார்கள்

8ஆம் நாள் திருவிழா
அம்பிகா ஜூவல்லர்ஸ்

9ஆம் நாள் திருவிழா - தேர்த் திருவிழா
கோவில் தர்மகர்த்தாக்கள்

10ஆம் நாள் திருவிழா - தீர்த்தோற்சவம்
கோவில் தர்மகர்த்தாக்கள்

மாலை - திருவூஞ்சலை
ஏ. கே. கோல்ட் ஹவுஸ்

மாலை - கொடியிறக்கம்
கோவில் தர்மகர்த்தாக்கள்

சித்திரைத் திங்கள் 24ஆம் திகதி முதல் வைகாசி 14 ஆம் திகதி வரை அக்கினி நக்ஷத்திரத்தை முன்னிட்டு உச்சிக்காலப் பூஜையுடன் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரப் பெருமானின் சிகாமணிக்கு மேல் (இலிங்கப்

பெருமானின் சிரசின்மேல்) நீர் நிரம்பிய தாரா பாத்திரத்தை அமைத்து அதிலிருந்து இடைவிடாமல் நீர் அபிஷேகமாக விழும் காட்சி, சிவபெருமானைக் குளிர்விப்பதன் மூலம் மக்கள் வாழ்வும் வெப்ப வேதனைகளிலிருந்து காக்கப்படும் என்பதன் அறிகுறியாக இத் திருவிழா அமைவது இவ்வாலயச் சிறப்பாகவும் காணப்படுகின்றது.

வைகாசிப் பௌர்ணமி விசாகத்தன்று ஸ்ரீ சுப்பிரமண்ய சுவாமிக்கு அபிஷேகம் உள்வீதி உற்சவம் நடைபெறும்.

வைகாசி மாதம் கணபதி ஹோமத்துடன் ஆரம்பித்து 20 நாட்கள் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரருக்கு அஷ்டோத்திர சங்கு ஸமேத கலசாபிஷேகமும் மாலையில் விசேஷ தீபாராதனையுடன் பஞ்சமுக லட்சார்ச்சனையும் நடைபெற்று 21ஆம் நாள் ஆனி உத்தரத்தன்று சுவாமிக்கு நவோத்ர சஹஸ்ர சங்காபிஷேகமும் ஹோமபூர்த்தியும் விசேஷ தீபாராதனை, உள்வீதி உற்சவமும் மறுநாள் திருவூஞ்சல் உற்சவமும் நடைபெறும்.

இது போன்று ஆடிமாதம் ஸ்ரீ மீனாக்ஷி அன்னைக்கு ஆடிப்பூரம் அன்றும் ஆவணி ஸ்ரீ கிருஷ்ண ஜயந்தியும் மறுநாள் திருமாலுக்குத் திருவூஞ்சலும் நடைபெறும்.

ஆவணி வளர்பிறை சதுர்த்தி விழா சிறப்பாக ஸ்ரீ முத்துவிநாயகருக்கு மூன்றுவேளை அபிஷேகங்கள் நடைபெற்று இரவு மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பெற்ற இரதத்தில் வெளி வீதிஉலா வந்து அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

நவராத்திரி விழாவில் ஸ்ரீ மீனாக்ஷி தேவிக்கு காலை அபிஷேகமும் பூஜையும் இரவு வசந்த மண்டபத்தில் விசேஷ அலங்காரங்களுடன் தீபாராதனையும் நடைபெற்று பத்தாம் நாள் விஜயதசமியன்று காலையில் வித்யாரம்பத்துடன் அம்பிகைக்கு அபிஷேகம் பூஜையுடன் மாலையில் மானம்பூத் திருவிழாவும் நடைபெறும்.

புரட்டாதி சனி தோறும் ஸ்ரீ மஹா விஷ்ணுவிற்குக் காலையில் அபிஷேகமும் மாலையில் அலங்கார தீபாராதனை வழிபாடும் நடைபெறும்.

கந்தசஷ்டியில் ஸ்ரீ சுப்பிரமணியருக்கு அபிஷேகமும் இரவு விசேஷ தீபாராதனையும் இடம்பெறும்.

கார்த்திகை மாத சோமவாரங்களில் ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரருக்கு நவோத்ர சஹஸ்ர சங்காபிஷேகமும் விசேஷ தீபாராதனை, உள்வீதி உற்சவம் நடைபெறும். திருக்கார்த்திகையில், சர்வாலய தீபம், குமாராலய தீபம், விஷ்ணுவாலய தீபம் என்பனவற்றில் விநாயகர், முருகன், விஷ்ணு மூர்த்திகளுக்கு அபிஷேகம் இரவு விசேஷ தீபாராதனை தீபம் ஏற்றுதல், கோபுரவாசலில் சொக்கப்பானை என்பன சிறப்பாக நடைபெறும்.

விநாயக ஷஷ்டி இருபது நாட்களுக்கும் ஸ்ரீ பஞ்சமுக முத்துவிநாயகருக்குக் காலையில் அபிஷேகம், மாலையில் வசந்த மண்டபத்தில் விசேஷ தீபாராதனை, பஞ்சமுக அர்ச்சனையுமாக இலட்சார்ச்சனைத் திருவிழா சிறப்புற நடைபெற்று இருபத்தியோராம் நாள் விநாயக ஷஷ்டி அன்று மகேஸ்வரபூஜை இரவு கணபதி ஹோமத்துடன் உள்வீதி உற்சவம் நடைபெறும்.

மார்கழி திருவெம்பாவை பூஜை ஸ்ரீ நடராஜப் பெருமானுக்குச் சிறப்பு வழிபாடு நடைபெற்று திருவாதிரை ஆருத்ரா தரிசனத்தன்று விசேஷ அபிஷேகம் பூஜை, அலங்கார தீபாராதனைகள் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வந்து கோபுர தரிசனம் சிறப்பாக நிகழும். சுவர்க்கவாயில் ஏகாதசி விழாவும் சிறப்புற நடைபெறும்.

தைமாதம் தைப்பொங்கல் ஸ்ரீ முத்து விநாயகர் முன் நடைபெறும். தைப்பூசமும் சிறப்பாக நிகழும்.

மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரை பூரணை போன்ற நாட்களும் ஏற்றமுடன் கொண்டாடப்பெறும்.

ஆண்டில் சித்திரை, ஆனி, ஆவணி, புரட்டாதி, மார்கழி, மாசி மாதங்களில் வரும் நடராஜருக்குரிய ஆறு திருநாட்களும் அபிஷேக அலங்காரங்களுடன் நடைபெறும்.

மேலும் சதுர்த்தி, கார்த்திகை, ஏகாதசி, பிரதோஷம், சங்கடஹர சதுர்த்தி போன்ற விரத நாட்களும் சிறப்புடன் நடைபெறும். சுருங்கக் கூறினால் ஆண்டில் பன்னிரண்டு மாதங்களும் திருவிழாக்கள் கோலாகலமாக இவ்வாலயத்தில் நடைபெறுவது பெருஞ்சிறப் பாகும்.

ஆலயத்திற்கென்று தேர் உண்டு. வெள்ளி யினாலான மூஷிகம், அன்னம், சிங்கம், மயில், குதிரை, ரிஷபம், கைலாச வாகனம், கருடன், சகடை யாவும் உரிய முறையில் வாகனசாலைகள் அமைத்துப் பாதுகாக்கப் படுகின்றது. ஆலயப் பொறுப்பில் அனைத்தும் செய்யப்பட்டன. வழிபாடுகள் வதிவிட அடிப் படையில் நிகழ்கின்றது.

திருவிழாக்கள் ஆலயப் பொறுப்பிலும் நிறுவனங்கள், தனிநபர் அடிப்படையிலும் உபயமாக நடைபெறுகின்றது.

## ஆலய நிர்வாகம்

குடும்பவழி உரிமையில் ஆலயம் பரிபாலிக்கப்படுகின்றது. ஆரம்ப காலத்தில் திரு. எதிர்மன்னசிங்கம், ரெங்கநாத முதலியார், முத்துசாமி முதலியார், ரட்ணசபாபதி, துரைசுவாமி, தியாகராஜன், ரட்ணசபாபதி, திலீபன் (தற்பொழுது) குமாரதேவா போன்ற வர்கள் ஆலய பரிபாலன முறையினர்.

திரு. ந. சுப்பிரமணியன் (முகாமையாளர், 37 வயது), திரு. ரட்ணசபாபதி (அறங்காவலர், 59 வயது), திரு. திலீபன் (அறங்காவலர், 54 வயது), திரு. குமாரதேவா (அறங்காவலர், 72 வயது), திரு. எஸ். விஜயகுமாரன் (உதவி முகாமையாளர், 39 வயது), திரு. பி. வைத்தி லிங்கம் (உதவி முகாமையாளர், 26 வயது), திரு. கே. உதயசூரியன் (உதவி முகாமை யாளர், 37 வயது) நடைமுறையிலுள்ள ஆலய பரிபாலன சபையைச் சார்ந்தவர்களாவர்.

## கும்பாபிஷேகங்கள்

ஆரம்பகாலத்தில் சிவாலயமாக இருந்தது. 1754 இல் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயமாக மாறியது.

1960, 1979, 1990, 2002 இல் கும்பாபிஷே கங்கள் நிகழ்ந்துள்ளன.

ஆலயம் திராவிடக் கட்டிடக் கலைபாணி யில் கட்டப்பட்டுள்ளது.

## ஆலய சொத்து சம்பந்தமான விபரங் கள்

அசையும் சொத்துக்களாக கோயிலிற் குரிய பொருட்களும் தளபாடங்களும் உள்ளன.

அசையாச் சொத்துக்களாகக் கட்டுதெனிய தென்னந்தோட்டம், ஆலய அண்மையிலுள்ள கடைகளும் உள்ளன.

## கலை நிகழ்வுகள்

ஆலய உற்சவ நிகழ்வுகளுக்கு தவில், நாதஸ்வரக் கலைஞர்கள் மாதவேதனம் வழங்கப்பட்டு ஆலய விடுதிகளும் அவர்கள் வசிப்பதற்கு வழங்கப்பட்டுள்ளது.

2002ஆம் ஆண்டில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் கும்பாபிஷேக மலர் ஒன்று மண்டலாபிஷேக நிறைவன்று வெளியிடப்பட்டது.

அமரர் பேராசிரியர் பிரம்மஸ்ரீ கா. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் எழுதி வெளியிடப்பட்ட "திருக்கோயிற் கிரியை நெறி" என்னும் அரிய புத்தகம் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயத்தினால் பதிப்பித்து வெளியிடப் பெற்றது.

## ஆலய அறப்பணிகள்

வெள்ள நிவாரண உதவி, தோட்டப்புற ஆலயங்களுக்கு மேலதிகமாக உள்ள பொருட்களை வழங்குதல், கண்டி கோயிலுக்கு நர்த்தன விநாயகரும் இரத்தினபுரி கோயிலிற்கு ரிஷப வாகனம், மூஷிக வாகனம் போன்றவற்றை வழங்கியமையாகும்.

## ஆலய வரலாறு

இந்து சமுத்திரத்தின் முத்துப்போல் அமைந்த சீர்மிகு சிறப்புடைய இலங்கைத் தீவின் தலைநகரமான கொழும்பு மாநகரில் செல்வச் செழிப்புமிக்க தங்கம் மிளிரும் சுவர்ண நகரமாம் செட்டியார் தெருவில் சிவநெறிச் செம்மல் திருவாளர் உயர்திரு. எதிர்மன்னசிங்கம் முதலியாரால் கருங்கல் திருப்பணியிலான கர்ப்பகிரஹமும் அர்த்த மண்டபமும் அழகிய 12 தூண்களைக் கொண்ட மஹாமண்டபமும் அழகிய 16 தூண்களைக் கொண்ட ஸ்நபன மண்டபத் துடனான கிழக்கு முகமான ஓர் ஆலயம் அமைத்து அதன் கர்ப்பக் கிரஹத்தில் சிவன், பிரம்மா, விஷ்ணு என மூன்று பிரிவுகளான 30 அங்குலம் உயரமுள்ள ஒரு கிரியாலிங் கத்தை அமர்த்தி அதன் தெற்கு முகமாக ஸ்ரீ மீனாக்ஷி அம்பிகைக்கு ஓர் சந்நிதானம் அமைத்து இத்திருப்பணி மூலம் ஆதி சமயமாம் சைவசமய மக்கள் சிறப்புடனும் பெருமையுடனும் வணங்கி வரும் காலத் திலே இவ்வாலயம் ஸ்ரீமத் மீனாக்ஷி அம்பிகை ஸமேத ஸ்ரீ சோமசுந்தரேஸ்வரர் ஆலயமாகச் சீரும் சிறப்புடனும் ஆகம நெறியுடன் நடை பெற்று வரும்போது 1754ஆம் ஆண்டு இத்தீவின் வடக்கே முத்துக்குளிக்கச் சென்றவர்களால் கண்டெடுக்கப்பட்ட தாமிர விநாயகர்சிலை கிடைக்கப்பெற்றது. இறை அருளால் கிடைக்கப்பெற்ற அழகுமிகு விநாயகர் சிலையை இவ்வாலயத்தின் சிவனுக்கு வலது பக்கத்தில் ஏகதள விமானத்துடன் மூலஸ்தானம் அமைத்து 3 தள ராஜகோபுரம் அமைத்து 1754 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது.

இதன்பின் உயர்திரு. முத்துசாமி முதலியார், உயர்திரு. நமச்சிவாயம் முதலியார், உயர்திரு. ரெங்கநாதன் முதலியார், உயர்திரு. இரத்தின சபாபதி முதலியார், உயர்திரு. துரைசாமி முதலியார் இவர்களினால் இவ்வாலயம் நடாத்தப்பட்டு வந்தது.

உயர்திரு. துரைசாமி தியாகராசா அவர் களின் தலைமையில் 1958ஆம் ஆண்டு பாலஸ்தாபன கும்பாபிஷேக வேலைகள் ஆரம்பித்து 1960ஆம் ஆண்டு ஐந்து தள இராஜகோபுரம் அமைக்கப்பட்டு, மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன் பின் 1979ஆம் ஆண்டு, 1990ஆம் ஆண்டு காலப் பகுதியிலும் மஹா கும்பாபிஷேகம் இனிதே நிறைவு பெற்றது.

இதனைத் தொடர்ந்து இவ்வாலயம் முத்துக்களின் நடுவில் விநாயகர் கிடைக்கப் பெற்றமையினால் ஸ்ரீ முத்து விநாயகர் ஆலயமாகப் பக்தர்களினால் அழைக்கப்பட்டு வருகின்றது.

ஒரு குடும்பத்தைப் பொறுத்தமட்டில் தாய், தந்தையினால் பிள்ளைகளுக்குப் பெருமை உண்டாகும். சில குடும்பத்தில் பிள்ளைகளி னால் தாய், தந்தைக்குப் பெருமை உண்டா கும். ஆனால் இக்கோவிலைப் பொறுத்த மட்டில் பிள்ளையினால் தகப்பனுக்குப் பெருமை சேர்த்துக் கொடுத்த சிவாலயம் இதுவாகத்தான் இருக்கும்.

இறைவனை நாம் வணங்கும்போது ராஜபார்வை, மத்திமபார்வை என இருமுறை உண்டு. இறைவனை நாம் வணங்கும்போது நம் தலையை உயர்த்தி ராஜபார்வையில் வணங்கவேண்டும். ஆனால் இங்கு என்ன நடந்தது என்றால் ஒவ்வொரு முறையும் பாலஸ்தாபன கும்பாபிஷேக திருப்பணி வேலைகள் செய்யும்போதும் கோவிலின் உள்ளே உள்வீதி நிலம் போடுவதற்காக உயர்த்தப் பட்டமையால் ராஜபார்வையில் அமர்ந்திருந்த விநாயகர் கீழ்நோக்கியும் அவரை வணங்க வந்த பக்தர்கள் கூடியவரை குனிந்தே விநாயகரை வணங்கவேண்டி இருந்தது.

29. 04. 2001 ஆம் ஆண்டு பாலஸ்தாபன கும்பாபிஷேக திருப்பணியானது மிகவும் பெரிய அளவிலான திருத்த வேலைகள் நடை பெற்றன. பழமைவாய்ந்த விமானம், கர்ப்பக்கிரஹம், அர்த்தமண்டபம் தகர்க்கப் பட்டு பழைய அத்திவாரத்தின் மேல் நிலத்தி லிருந்து கர்ப்பக்கிரஹகம், அர்த்த மண்டபம், விமானம் என்பனவும் கர்ப்பக்கிரஹத்தின் நிலத்தை உயர்த்தி ராஜபார்வையில் மும்மூர்த்திகளான சிவன், பிரம்மா, விஷ்ணு இவர்களுக்கு நடுவில் முத்து விநாயகரை அமர்த்தி அடியார்கள் வலம் வரும் வகையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அத்துடன் 1754ஆம் ஆண்டுக்குமுன் சுவாமி சந்நிதி நுழைவாயிலாக இருந்த இடம் தற்போது ஒரு ஜன்னல்மட்டுமே காணக்கூடியதாக இருந்தது. அதில் வசதியின்றி ஓரளவு அடியார் மட்டுமே சிவனைத் தரிசிப்பார்கள். மீண்டும் சுவாமி சந்நிதி நுழைவாயில் திருத்தப்பட்டு அடியார்கள் சுலபமாக வந்து போகவும் சிவனை தரிசிப்பதற்கும் மிகவும் வசதியாக உள்ளது. கோவிலின் மத்தியில் ஸ்ரீ பஞ்சமுக விநாயகர், ஸ்ரீ நடேசர் மண்டபங்கள் அகற்றப் பட்டு சுவர் ஓரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. வசந்தமண்டபத்தின் மேற்கே உள்ள நவக் கிரஹத்தை கிழக்கே மாற்றி அமைக்கப் பட்டுள்ளது. புதிதாக 4 1/2 அடி உயரத்தில் ஸ்ரீ தேவி பூதேவி ஸமேத ஸ்ரீ மஹாவிஷ்ணு பெருமான் சந்நிதியும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை பாரிய அளவிலான திருத்த வேலைகள் நடைபெற்று ஸ்ரீ முத்துவிநாயகப் பெருமானின் அடியார்கள் சகல வசதியுடனும் எந்தவித இடையூறுகளும் இன்றி சுவாமிகளை தரிசிக்க ஏற்றவாறு அமைத்து சித்திரபானு வருடம் சித்திரை மாதம் 12ஆம் நாள் வியாழக் கிழமை (25. 04. 2002) காலை 10.00 மணி முதல் பகல் 11.40 இற்குள் வரும் அத்த நக்ஷத் திரமும் சித்த யோகமும் சுக்கிரபுத ஹோரை யும் கூடிய மிதுன லக்ன சுபமுகூர்த்த வேளை யில் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானுக்கும் ஏனைய பரிவார சுவாமிகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் ஸ்ரீ முத்து விநாயகப் பெருமானின் கிருபையால் நிறைவேறியது.

# ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானம்



ஸ்ரீ கைலாசநாதர் சுவாமி தேவஸ்தானம்
11 / 15, கோயில் வீதி, கப்பித்தாவத்தை
கொழும்பு - 10

## ஆலய அமைப்பு

கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை 11/15ஆம் இலக்கத்தில் இவ்வாலயம் அமைந்து உள்ளது. இங்கு மூல மூர்த்தியாக அமர்ந்து அருள்பாலிப்பவர் ஸ்ரீ கைலாசநாதர் ஆவார். உட்பிரகாரத்தில் கருவறை வாசலின் இரு புறமும் துவாரபாலகர் உள்ளனர். அர்த்த மண்டபத்தில் அம்பாள் சந்நிதி உள்ளது. உற்சவ மூர்த்திகளும் இங்கு உள்ளனர். மஹா மண்டபத்தில் இடதுபுறம் பிள்ளையாரும் வலதுபுறம் முருகனும் உள்ளனர். நடராசர் சபையும் இங்கு காணப்படுகின்றது. சபையினுள் நடேசர், அம்பாள், நால்வர் உள்ளனர். 63 நாயன்மார் திருவுருவங்களும் வடபுறச் சுவர் ஓரமாக உள்ளனர். உள்வீதியில் இடமிருந்து வலமாக வரின் சூரியன், ஸ்ரீநர்த்தன கணபதி, தட்சணாமூர்த்தி, ஸ்ரீசௌபாக்கிய கணபதி, சோமாஸ்கந்தர், மஹாவிஷ்ணு, லிங்கோற்பவர், ஸ்ரீதேவி கருமாரியம்மன், விஸ்வநாதர், விசாலாக்ஷி, ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி, சனீஸ்வரர், துர்க்கையம்மன், பெருமாள், சண்டேஸ்வரர், தாமரைத் தடாகம் (குளம்), ஸ்ரீ தத்தாத்திரியர் (சிவன், பிரம்மா, விஷ்ணு), நவக்கிரகம், தலவிருட்ஷமான வில்வ மரத்தினடியில் நாகதம்பிரான், சந்தான கோபாலர், நாகம் என்பனவும் வசந்த மண்டபத்தில் எழுந்தருளி மூர்த்தங்கள் சர்வேஸ்வரர், பைரவமூர்த்தி, சந்திரன் முதலான மூர்த்தங்களும் அமைந்துள்ளன. மஹாமண்டபத்தின் நடுவே துவஜஸ் தம்பமும் பலிபீடமும் நந்தியும் உள்ளன. அம்பாள் சந்நிதிக்கும் உள்வீதியில் பலிபீடம் உள்ளது.

## பூஜை ஒழுங்கு

தினமும் ஆறுகாலப்பூஜை நடைபெறுகின்றது. திருவனந்தல் அதிகாலை 5.30 இற்கும் காலைச் சந்தி 7.00 இற்கும் உச்சிக்காலபூசை 10.00 இற்கும் சாயரக்ஷை மாலை 5.00 மணிக்கும் இரண்டாம் காலப்பூஜை மாலை 6.00 இற்கும் அர்த்தஜாமப் பூஜை இரவு 8.00 மணிக்கும் நடைபெறுகின்றன. செவ்வாய் 3.00 மணிக்கு ராகுகாலப் பூஜையும் இரவு 9.00 இற்கு அர்த்தஜாமப் பூஜையும் நடைபெறுகிறது. வெள்ளி, சனிக்கிழமைகளில் இரவு 8.30 இற்கு அர்த்தஜாமப்பூஜை நடைபெறுகின்றது. நாட்பூஜைகள் தவிர மாதக் கார்த்திகையின் போது வள்ளி தேவசேனா ஸமேத சிவசுப்பிரமணிய பெருமானுக்கு அபிஷேகமும் விஷேட பூஜையும் மாதச் சதுர்த்தியில் சர்வாபீஷ்ட வரத விநாயகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனையும் விசேட பூஜையும் மாதப் பூரணையின்போது ஸ்ரீ சக்கர பூஜையும் ஸ்ரீ ராஜராஜேஸ்வரிக்கு அபிஷேகமும் விசேட அலங்கார பூஜையும் சிவகாமி ஸமேத நடேசருக்கு சித்திரைத் திருவோணத்தில் பால் அபிஷேகமும் மாலை தரிசனமும் விசேட பூஜை ஆராதனையும் ஆனி உத்தரத்தின்போது இரவு அபிஷேக ஆராதனையும் உதயம் தரிசனமும் ஆவணி பூர்வ சதுர்த்தசியில் பகல் அபிஷேகமும் மாலை தரிசனமும் விசேட பூஜை ஆராதனையும் மார்கழி திருவாதிரையில் இரவு அபிஷேகமும் உதயம் தரிசனமும் விசேட பூஜை ஆராதனையும் மாசி பூர்வ சதுர்த்தசியில் பகல் அபிஷேகமும் மாலை தரிசனமும் நடைபெறுகின்றன. இவை தவிர ஒவ்வொரு பூரணை தினத்திலும் ஸ்ரீசக்ர பூஜை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. அன்று ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் சர்வ அலங்கார பூஜிதையாக அடியார்களுக்கு அருள்பாலிப்பார்.

பூஜைகள் செய்வதற்கு பிரதான சிவாச்சாரியார் உட்பட இருவர் உதவிக்குருக்கள் மூவர் உள்ளனர். இவர்களுக்கு உதவ பல வேலைக்காரர் ஐந்து பேரும் மாலை கட்டுவோரும் உள்ளனர்.

நாளாந்த பூஜையில் சர்க்கரைச் சாதம், வடை என்பனவும் விசேட தினங்களில் தயிர்ச் சாதம், புளிச் சாதம், கடலை, சர்க்கரைச் சாதம் என்பன நிவேதிக்கப்படுகின்றன.

ஆலயத்திற்கு எல்லாவகை சோடஷோபசாரப் பொருட்களும் தீபாராதனைப் பொருட்களும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆவணி மாதம் கொடியேற்றத் திருவிழா (15 நாட்கள்) நடைபெறுகின்றது. ஆவணி உத்திரட்டாதி நக்ஷத்திரத்தன்று தீர்த்த உற்சவம் நடைபெறும். அன்று கும்பாபிஷேக தின வருஷாபிஷேகமும் நடைபெறுகின்றது. மஹோற்சவ காலத்தில் 63 நாயன்மார்களுக்கு பக்தமுக்தி பாவனோற்சவம், கைலாசவாகன உற்சவம், வேட்டைத் திருவிழா, அலங்கார சப்பரத் திருவிழா, தேர்த்திருவிழா என்பவை சிறப்பாக நடாத்தப்படுகின்றன.

கொடியேற்றத் திருவிழா தவிர சமய நாயன் மார் குருபூசை, சிவராத்திரி, நவராத்திரி, திருவெம்பாவை என்பன சிறப்பாக நடாத்தப் படுகின்றன. இவை தவிர பரிவார மூர்த்தி யாகிய தத்தாத்திரியரின் வருஷாபிஷேகமும் ஆவணி மாத பூச நக்ஷத்திரத்தில் நடைபெறு கின்றது. காலை அஷ்டோத்திர (108) கலசாபிஷேக விஷேட பூஜைகள் நடைபெற்று மதியம் மகேஸ்வர பூஜை நடைபெறும்.

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் திருவிளங்க நகரத்தார் எனப்படும். வணிக வைசியச் செட்டிமாரால் நிர்வகிக்கப்படுகின்றது. நிர்வாக சபையில் ஐந்து பேர் உள்ளனர். ஆலய சிவாச்சாரியார் களுக்கும் பலவேலைகாரருக்கும் கோயில் வெளிவீதியில் தங்குமிட வசதி அளிக்கப்பட்டு உள்ளது. பூசகருக்கு மாதாந்த வேதனம் வழங்கப்படுகின்றது.

## கும்பாபிஷேகங்கள்

அறியக் கூடியவரை முதல் தடவையாக 1783ஆம் ஆண்டிலும் 1949ஆம் ஆண்டிலும் இறுதியாக 15.7.1983ஆம் ஆண்டிலும் கும்பாபிஷேகங்கள் நடந்துள்ளன.

## ஆலய வரலாறு

1783இல் ஸ்ரீ வீரபத்திரன் செட்டியார் அவர் களால் இவ் ஆலயம் கட்டப்பட்டது. அவர் சிவலிங்கத்தை ஸ்தாபித்து கும்பாபிஷே கத்தையும் நடத்தி வைத்தார். கொழும்பு மாநகரில் முதன்முதலாக அமையப்பெற்ற சிவாலயம் இதுவெனக் கூறப்படுகிறது. 1828 முதல் 1851 வரை ஸ்ரீ சிதம்பர இராமையாச் செட்டியார் ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். 1851இல் திருவிளங்க நகரத்தார் 5 உறுப்பினர் கொண்ட அறங்காவலர் சபையைத் தெரிவு செய்தனர். அறங்காவலர் சபையின் காலத்துக்குக் காலம் கோவிலைச் சிறப்பாக நிர்வகித்து போற்றி வளர்த்து வந்து உள்ளனர். 1949ஆம் ஆண்டு ஸ்ரீ பி. சி. கதிரவேலுச் செட்டியார் தலைமையிலான அறங்காவலர் சபையினர் கைலாசநாதப் பெருமானுக்கும் அம்பாளுக்கும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் மஹாகும்பாபிஷே கத்தைச் சிறப்பாக நடாத்தி வைத்தனர். 1982இல் ஸ்ரீ சு. இராசரத்தினம் செட்டியாரை தலைவராகக் கொண்ட அறங்காவலர் சபை கும்பாபிஷேக திருப்பணிக் குழுவுடன் இணைந்து சிறந்த முறையில் திருப்பணி வேலைகளை நிறைவேற்றி 15.7.1983இல் கும்பாபிஷேகத்தை நடாத்தி வைத்துள்ளது.


## கலை நிகழ்ச்சிகள்

கலை நிகழ்ச்சிகள் எதுவும் இங்கு நடைபெறுவதில்லை.

## ஆலய அறப்பணிகள்

திருகோணமலை அன்பு இல்லம், மட்டக்களப்பு அநாதைகள் இல்லம் என்பவற் றிற்கு உடுதுணிகள் உணவுப்பொருட்கள் வழங்கப்படுகின்றன.

# ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி கோயில்



ஸ்ரீ பால செல்வ விநாயகமூர்த்தி கோவில்
கப்பிகாவத்தை
கொழும்பு - 10

## ஆலய அமைப்பு

கொழும்பு கப்பித்தான் தோட்டம் மருதானையில் இவ் ஆலயம் அமைந்து உள்ளது. இங்கு மூலமூர்த்தியாக இருந்து அருள்பாலிப்பவர் பால செல்வவிநாயகர் ஆவார். உட்பிரகாரத்திலுள்ள வழிபடும் தெய்வங்களாக மஹாலக்ஷ்மி, வள்ளி தெய்வானை, முருகன், தண்டாயுதபாணி, சுதர்சன ஆஞ்சநேயர் ஆகிய மூர்த்தங்கள் உள்ளன.

வசந்த மண்டபத்தில் பிள்ளையார், ஆஞ்ச நேயர், வள்ளி தெய்வானை சுப்பிரமணியர், பாலமுருகன், மஹாலக்ஷ்மி என்போர் எழுந் தருளி மூர்த்திகளாக உள்ளனர். துவஜஸ்தம்பம் இல்லை. பலிபீடம் உண்டு. முன்னால் விநாய கரின் வாகனம் மூஷிகம் உள்ளது.

## பூஜை ஒழுங்கு

தினமும் ஆறுகாலப் பூஜைகள் நடைபெறு கின்றன. வெள்ளி போன்ற விசேட தினங் களில் இரண்டாம் காலப்பூஜை நடந்தபின் சகஸ்ரநாம பூஜை சோடஷோபசாரங்களுடன் நடைபறும்.

மேலும் ஆவணிச் சதுர்த்தி, மாதசதுர்த்தி, கார்த்திகை, சோமவாரம், விநாயக சஷ்டி என்பன சிறப்பாக நடைபெறுகின்றன.

பூஜை செய்வதற்கு பிராமணக் குருக்களும் அவருக்கு உதவியாக பலவேலைக்காரரும் இருக்கின்றனர். நாளாந்த பூஜையில் கடலை, மோதகம் என்பன பிரசாதமாக வழங்கப்படு கின்றன. விசேட பூஜையில் சர்க்கரை சாதம், புளிச்சாதம், மோதகம், வடை, சுண்டல் என்பன வழங்கப்படுகின்றன.

ஆலயத்தில் 16 வகையான தீபாராதனை, சோடஷோபசார ஆராதனைப் பொருட்கள் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆனிமாத பௌர்ணமியை இறுதி நாளாகக் கொண்டு 11 நாட்கள் அலங்காரத் திருவிழா நடைபெறுகிறது. உற்சவ காலத்தில் அபிஷே கங்கள், மேளக்கச்சேரி, இசைக் கச்சேரி, சொற்பொழிவுகள் என்பன விசேடமாக அமையும். கட்டுச் சப்பரமும் தேரும் உண்டு. 9ஆம் நாள் சப்பரத் திருவிழாவும் 10ஆம் நாள் தேர்த்திருவிழாவும் நடைபெறும். 11ஆம் நாள் கோயில் கிணற்றில் நீர் எடுத்து கோயில் வெளிவீதியில் தீர்த்த உற்சவம் நடைபெறும்.

திருவிழாவிற்கு 11 நாளும் 11 குடும்பத்தினர் உபயகாரராக இருக்கின்றனர். வழிவழியாகத் தொடர்ந்து இவர்களது குடும்பங்களே உபயகாரராக இருந்து வருகின்றனர். பெயர் விபரம் தரப்படவில்லை.

வருடாந்த திருவிழா தவிர மாதந்தோறும் வரும் விநாயகருக்குரிய சிறப்பு நாட்களில் மிகச் சிறப்பாகப் பூஜைகள் நடைபெறு கின்றன.

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் தேர்தல் வழி உரிமையில் தேர்ந்தெடுக்கப்படுகின்றது. தலைவர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், உபதலைவர் என்ற பதவிகளையுடைய 5 பேர் நிர்வாகப் பொறுப்பில் உள்ளனர். 5 வருடத் திற்கு ஒரு தடவை பொதுக்கூட்டம் நடை பெற்று புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படும்.

## கும்பாபிஷேகங்கள்

1951இலும் 1963இலும் 1974, 1977 இலும் இறுதியாக 1988 இலும் கும்பாபிஷேகம் நடை பெற்றுள்ளது.

## ஆலய வரலாறு

கொழும்பு மருதானை கப்பித்தாவத்தை யில் உள்ள ஸ்ரீ பால செல்வ விநாயகர் ஆலயம் 1790இல் சிவன் பூதப்பர் என்பவரால் ஸ்தாபிக்கப்பட்டது. மூர்த்தியின் பீடத்திலே தாபிக்கப்பெற்றிருக்கும் யந்திரம் 1792இல் வடமொழி நாகர எழுத்தில் அமைக்கப் பெற்றது குறிப்பிடத்தக்கதாகும். முன்பு இது பேராறு என்னும் ஆறால் சூழப்பட்ட ஒரு

தீவாக இருந்தது. புறக்கோட்டையிலிருந்து தோணியில் இரண்டு காசு கொடுத்து அடியார் கள் வந்து வழிபடுவர். முத்தையா முதலாருக் குச் சொந்தமாக இருந்த இத்தீவு முழுவதை யும் சிவன் பூதப்பர் என்ற அராலி, யாழ்ப் பாணத்தைச் சேர்ந்தவர் கங்காணியாக இருந்து மேற்பார்வை செய்து வந்ததாகக் கூறப்படுகிறது. இவர் விநாயகரைக் குலதெய்வ மாக வழிபட்டு வந்தார். இவரே 1790இல் விநாயகர் சிலையை ஸ்தாபித்து தாமே பூஜை செய்து வழிபட்டு வந்தார். 1792இல் விநாயகப் பெருமானுக்குரிய யந்திரம் ஒன்றை வடமொழி நாகர எழுத்தில் எழுதி அமைத்தார். மடாலய மாக இருந்த கோயில் 1800 களில் கோயிலாக கட்டப்பட்டு கும்பாபிஷேகமும் நடைபெற்றது. இத்தீவில் முதன்முதல் கட்டப்பட்ட ஆலயம் இதுவாகும். கோயில் கட்டியபின் பூஜை செய்வதற்கு குருக்கள் நியமிக்கப்பட்டார். சிவன் பூதப்பரின் நேர்மை, கண்ணியம், இறைபக்தியைக் கருத்திற்கொண்டு 1814இல் முத்தையா முதலியார் சிவன் பூதப்பருக்கு அந்நிலத்தைச் சொந்தமாக எழுதிக் கொடுத் தார். 1817இல் நரஹரி வெங்கட்ராமையருக்கு சிவன் பூதப்பர் காணியை தர்மசாதனம் செய்தார்.

1842இல் முதலாவது தர்மகர்த்தா சபை நியமிக்கப்பட்டது. 1936இல் வழிபடுவோர் சபை கூட்டப்பட்டு திரு. ஆ. சின்னத்தம்பி தர்மகர்த்தா செயலாளராகவும் திரு. தி. க. மதியாபரணம் தர்மகர்த்தாவாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பிரம்மஸ்ரீ சுப்பிரமணியக் குருக்கள் பிரதம குருவாக இருந்தார்.

1939 ஆம் ஆண்டு முதல் பிரம்மஸ்ரீ பா. சண்முகரத்தினசர்மா பூஜைகளைக் கவனித்துக் கொள்கின்றார்.


### கலை நிகழ்ச்சிகள்

ஆன்மிக சொற்பொழிவு, பிரசங்கம்

### அறப்பணிகள்

கதிர்காம யாத்திரீகர் மடத்தில் அடியார்கள் தங்குகின்றனர்.

# ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயில்



ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
131, கியூ வீதி
கொழும்பு - 02

## ஆலய அமைப்பு

கொழும்பு கொம்பனித்தெரு, ஸ்ரீ சிவசுப்பிர மணிய சுவாமி ஆலயம் 131 இலக்க கியூ வீதி யில் (கொழும்பு - 02) அமைந்திருக்கின்றது.

ஆலயத்தின் இருமருங்கிலும் மணிக் கோபுரம் அழகு செய்ய ஓங்கி உயர்ந்து 82 அடி உயரத்தில் சப்த தள (7 நிலை) இராஜ கோபுரம் ஸ்தூல லிங்கமாய்க் காட்சி தர பக்தர்களைத் தன்பால் ஈர்க்கும் சிறப்புடையது இவ்வாலயம்.

மூலமூர்த்தியாக வள்ளி தெய்வானை ஸமேதராக ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் காலனை மிரட்டும் எழிற்கோலந்தாங்கி தென்திசை நோக்கி அருள்பாலிக்கும் திருக் கோலம் காந்தமென அடியார்களை இழுக்கும். மஹாமண்டபத்தில் தெற்குநோக்கி விநாயகர், சிவன், அம்பிகை, மேற்குத்திசை நோக்கிய வண்ணம் ஸ்ரீசண்முகப் பெருமான் காணப் படுகின்றார். பக்தர்கள் வரிசையாக நின்று தரிசிப்பதற்காக கம்பிகள் பொருத்தப்பட்டு உள்ளன. உள்வீதியில் மூலமூர்த்தியைத் தரிசித்த வண்ணம், மயில், பலிபீடம், 24 அடி உயர செம்பினாலாகிய மிக அழகிய துவஜஸ் தம்பம் காட்சிதர ஆலயத்தை வலம் வந்தால் கிழக்கு நோக்கிய நிலையில் சமயகுரவர் நால்வர், துர்க்கை (சிலாமேருவுடன் - இலங் கையில் காண்பதற்கு அரியது.), தெற்கு நோக்கிய பரிவார மூர்த்தங்களாக விநாயகர், சிவகாமியம்பா ஸமேத நடராஜர், ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, மேற்கு நோக்கிய நிலையில் சனீஸ்வரர், சந்தான கோபாலர், சண்டேஸ்வரர், நவக்கிரகங்கள் அழகிய வசந்த மண்டபம், வடக்கு நோக்கிய நிலையில் பைரவர், சூரியன், சந்திரன், இராஜ ராஜேஸ்வரி ஆகிய மூர்த்தங்கள் அமைந்து காணப்படுகின்றன.

எழுந்தருளி மூர்த்தங்களாக பிள்ளையார், அம்பிகை ஸமேத சிவபெருமான், வள்ளி தெய்வானை ஸமேத சுப்பிரமணியர், ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, சண்டேஸ் வரர், சந்தான கோபாலர் காணப்படுகின்றனர்.

கிழக்குத் திசையில் திருமஞ்சனக் கிணறு அமைந்திருக்கின்றது. ஆலய வளவிலுள்ள வழிபாடுசாராக் கட்டிட விடுதிகளில் ஆலயப் பிரதம குருக்களும் ஏனைய ஏழு விடுதிகளில் ஏனைய குருமார்களும் தங்கி வசிக்கின்றனர்.

வெண்கலத்தாலான பெரியமணி ஒன்றும் உண்டு.

## பூஜை ஒழுங்கு

நாள்தோறும் ஆறுகால பூஜைகளாகக் காலை 5.45; 6.45; 10.30 இற்கும் மாலை 5.45; 6.30; 8.00 மணிக்கு அர்த்தஜாம பூஜையும் நடைபெறுகின்றது. வெள்ளி, செவ்வாய் போன்ற விசேஷ நாட்களில் உச்சிக்காலம் 12.00 மணிக்கும் அர்த்தஜாமம் 8.30 மணிக்கும் இடம்பெறும்.

பூஜை வழிபாடுகளுக்குப் பிரதான சிவாச் சாரியார், அவருக்கு உதவியாகக் குருமார்கள், பிரசாதம் தயாரிக்க மடைப்பள்ளி அந்தணர், கோயிலைத் தூய்மை செய்ய, மற்றும் பணி களுக்குப் பணியாட்கள் உள்ளனர்.

காலையில் பொங்கலும் செவ்வாய், வெள்ளி போன்ற நாட்களில் கடலையும் நிவேதிக்கப்பட்டு பொதுமக்களுக்கு வழங்கப் படுகின்றன.

நேர்த்திக்காக உருத்திராபிஷேகம், ஸ்நபன அபிஷேகம், கணபதி ஹோமம், நவக்கிரஹ ஹோமம் முதலியனவும் உற்சவ காலங்களில் கற்பூரச்சட்டி, தூக்குக் காவடி போன்றனவும் நடைபெறுகின்றன.

பூஜைக்குரிய அத்துணை சாதனங்களும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆவணி அமாவாசையை நிறைவாகக் கொண்டு 13 நாட்கள் மஹோற்சவம் நடை பெறும். பத்ததி முறையைப் பின்பற்றியே உற்சவங்கள் நடைபெறுகின்றன.

சிவனடியார் திருவிழா, கார்த்திகைத் திருவிழா, கற்பூரத் திருவிழா, தைலாப்பியத் திருவிழா, வேட்டைத் திருவிழா, மாம்பழத் திருவிழா சப்பரத் திருவிழா போன்றன விசேஷ திருவிழாக்களாகும்.

வேட்டைத் திருவிழா, சப்பரத் திருவிழா, தேர்த் திருவிழா முதலியன கியூ வீதி, ஜஸ்டிஸ் வீதி, மலே வீதி, குமரன் இரத்தினம் வீதி, கியூ வீதி வழியாக ஆலயம் வந்தடையும். நல்லூர்க் கந்தசுவாமி கோவில் மஹோற்சவத்தைத் தழுவி நல்லூர் தேர் உற்சவம் நடைபெறும். அன்றே இவ்வாலயத்திலும் இரத உற்சவம் நடைபெறும்.

தீர்த்தோற்சவம் ஆலயத் தீர்த்தக் கிணற்றில் நடைபெற்று சுவாமி உள்வீதி வலம் வருவார்.

இவ்வாலயத்திற்கென 3 மயில் வாகனங்கள், சிம்மம், காராம்பசு, மூஷிகம், ரிஷபம், குதிரை, இரட்டைக் குதிரை, ஆட்டுக்கடா, கைலாச வாகனம், சப்பரம், மஞ்சம், தேர் முதலிய வாகனங்கள் சொந்தமாக உண்டு.

சில வாகனங்கள் உபயம் மூலமாகவும் சில ஆலயக் கணக்கிலும் செய்யப்பெற்றவையாகும். (மஹோற்சவ உபயகாரர்களின் பெயர்கள் இணைக்கப்பட்டுள்ளது. மஹோற்சவ அன்னதான உபயகாரர்களின் பெயரும் இணைக்கப்பட்டுள்ளது.)

மஹோற்சவம் தவிர பிள்ளையார் கதை 21 நாட்கள் நடைபெறும். கந்தசஷ்டி விழாவும் மிகச் சிறப்பாக நடைபெற்று கியூவீதி, கியூ வீதியில் சூரன் போர் நடைபெற்று குமரன் ரத்தினம் வீதியால் ஆலயத்தை வந்தடையும், நடைபெறும். திருக்கல்யாணத் திருவிழாவும் பட்டாபிஷேகத் திருவிழாவும் பாற்காவடி, திருஊஞ்சல் திருவிழாவும் இவ்வாலயத்தில் கோலாகலமாக நடைபெறும். பாற்குடங்கள் சைவ முன்னேற்றச்சங்க ஸ்ரீ பாலவிநாயகர் ஆலயத்திலிருந்து ஊர்வலமாக எடுத்துவரப் படும். தினமும் காலை கந்தபுராணம் படிக்கப் பட்டு பயன் சொல்லப்படும். கந்தபுராண காலத்தில் காலை 5.30 மணிக்குத் திருவனந்தல் 6.30 மணிக்குக் காலைச்சந்தி, காலை 7.30 மணிக்கு உபய அபிஷேகம் 9.00 இற்குக் கந்தபுராணப் படனம் 11.00 மணிக்கு விசேஷ பூஜை, மாலை 4.00 மணிக்கு சாயரக்ஷை பூஜை, 4.30 இற்கு சண்முகர் அபிஷேகம், 5.15 இற்கு 2ஆம் கால பூஜை, 5.30 இற்கு சண்முகார்ச்சனை, 6.30 இற்கு சுவாமி வீதியுலா என கந்தசஷ்டி விழா சிறப்பாக நடைபெறும். கந்தசஷ்டி விரதம் இருப்போருக்கு சங்கல்பம் செய்து விரதக் காப்பு கட்டப்படும். கந்தசஷ்டி பூர்த்தி அன்னதானத்தினை மெய்கண்டான் அச்சகத்தினர் ஏற்று நடத்துகின்றனர்.

கந்தசஷ்டி விழா உபயகாரர்களாக திரு. ப. திருநாவுக்கரசு (நாதன் பிரதர்ஸ் கொழும்பு - 2), திரு. சி. தம்பித்துரை தனுசன், திரு. சி. தனபாலா ஜே.பி., திரு. விஸ்வலிங்கம் (டிறப்பரி ஸ்டோர்ஸ் கொழும்பு - 2), திருமதி. கி. சந்திரசேகரம் முதலியோரும் சண்முகார்ச்சனை உபயகாரர்களாக திரு. கே. சிவநாதன், திரு. எஸ். கே. கணேஸ்வரன், திரு. எம். பாலசுப்பிரமணியம், திரு. கே. அரவிந்தன், திரு. பி. சண்முகநாதன் முதலியோர் அமைகின்றனர்.

சூரசம்ஹாரம் உபயம் திரு. ஆர். தம்பி நவரத்தினம், திரு. எஸ். மகேந்திரன், திரு. கே. அருளானந்தம், திரு. எஸ். வாகீஸ்வரன் போன்றோரும் பட்டாபிஷேகத் திருவிழாவை திரு. ரி. யுவேந்திரகுமார், திரு. சி. கனகையா முதலியோரும் வள்ளி திருக்கல்யாணத் திருவிழாவினை வள்ளி திருமணச் சபை - கொழும்பும் தெய்வானைத் திருக்கல்யாணத் திருவிழாவினை திரு. சேது நாராயணன் - நகரத்தார் அவர்களும் பாற்காவடி விழாவினை

திருமதி. தர்மராணி செல்லமுத்து, திரு. பிரதீப் குமார், திரு. என். பாலகுமார் முதலியோரும் திருஊஞ்சல் திருவிழாவை இந்தோ சிலோன் கபேயினரும் ஏற்று நடத்துகின்றனர்.

திருவெம்பாவை பூஜையும் சிறப்பாக நடைபெறுகின்றது. தினமும் அதிகாலை 4.30 மணி தொடக்கம் அபிஷேகம், பூஜை, திருவெம்பாவைப் பாடல் என்பன நடை பெறும். திருவாதிரை தினம் அதிகாலை 3.30 மணி தொடக்கம் அபிஷேகம், பூஜை நடை பெற்று ஸ்ரீ சிவகாம சுந்தரி ஸமேத நடேசப் பெருமான் உள்வீதிவலம் வருவார்.

திருவெம்பாவை உபயகாரர்களாக டாக்டர். திருமதி. வேலுமணி, திரு. ஆர். எஸ். தனபால சுந்தரம், திரு. எஸ். மார்க்கண்டு, திரு. கே. தில்லைநாதன் ஜே.பி., திரு. எஸ். தங்கராசா ஜே.பி., திரு. ஏ. ஜெயானந்தன் ஜே.பி., திருமதி. கே. சீவரத்தினம், திரு. எம். குமாரசாமி, திரு. எஸ். விக்னேஸ்வரன், திரு. எஸ். இராசதுரை போன்றோர் அமைகின்றார்கள்.

மஹாசிவராத்திரி விழாவும் சிறப்பாக நடைபெறும் திருவிழாவாகும். நான்கு ஜாமப் பூஜை உபயகாரர்களாக திரு. அ. கந்தசாமி (கருணா மெற்றெர்ஸ் சென்டர், கொழும்பு 11), திரு. கே. தில்லைநாதன், ஜே.பி., (விக்டோரியா பேக்கரி, கொழும்பு 2), திருமதி. இராஜேஸ்வரி இராஜேந்திரன், திரு. சி. சிவசாமி முதலி யோரும் இருக்கின்றனர்.

அதிகாலை 5.30 இற்கு விசேஷ வசந்த மண்டப பூஜை நடைபெற்று அலங்கரிக்கப் பட்ட ரிஷப வாகனத்தில் ஸ்ரீ பார்வதி பரமேஸ் வரர் உள்வீதி உலாவந்து அருட்காட்சி வழங்குவர்.

இரவு தாகதான உபயமாக கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கமும் நண்பகல் அன்னதான உபயமாக திரு. எம். பரம்சோதி, திரு. பி. துரைசாமி குடும்பத்தினர்களும் ஈடுபடு கின்றனர்.

**மஹோற்சவ உபயகாரர்களின் பெயர் விபரங்கள் :**

கணபதி ஹோமம்
கோயில் உபயம் சங்கடகர சதுர்த்தி
அப்பலோ வைத்திசாலை

1ஆம் திருவிழா - காலை
பிரம்மஸ்ரீ நா. மகாதேவக்குருக்கள் குடும்பம், கொழும்பு 3

1ஆம் திருவிழா - மாலை
Dr.L. சிவகுருநாதன் குடும்பம், தெஹிவளை

2ஆம் திருவிழா - காலை
திரு. V. துரைசாமி குடும்பம், கொழும்பு 4

2ஆம் திருவிழா - மாலை
திரு.க. சுந்தரேஸ்வரன் குடும்பம், கொழும்பு 4

3ஆம் திருவிழா - காலை
திருமதி லலிதா பாலகிருஷ்ணன் குடும்பம், அவுஸ்திரேலியா

3ஆம் திருவிழா - மாலை
திரு. க. முருகேசுபிள்ளை குடும்பம், கொழும்பு 2

4ஆம் திருவிழா - காலை
திரு. M. நல்லந்துவன் குடும்பம், கொழும்பு 4

4ஆம் திருவிழா - மாலை, சிவனடியார் திருவிழா
திரு. Y. ஸ்ரீ பத்மநாதன் குடும்பம், தெஹிவளை

5ஆம் திருவிழா - காலை
திரு. K. பரமேஸ்வரன் குடும்பம், கொழும்பு 5

5ஆம் திருவிழா - மாலை, கார்த்திகை திருவிழா
திரு. க. ஜெகதீசன் குடும்பம், கொழும்பு 3

6ஆம் திருவிழா - காலை
திருமதி. R. பரஞ்சோதிநாதன் குடும்பம், தெஹிவளை

6ஆம் திருவிழா - மாலை, கற்பூரத் திருவிழா
திரு. A.M. தனநாயகம் குடும்பம், கொழும்பு 6

7ஆம் திருவிழா - காலை, தைலாப்பியத் திருவிழா
திரு. P. விமலேந்திரன் குடும்பம், கொழும்பு 10

7ஆம் திருவிழா - மாலை
திரு. S. செல்வராஜா குடும்பம், கொழும்பு 5

8ஆம் திருவிழா - காலை
திரு. கந்தையா நீலகண்டன் குடும்பம், கொழும்பு 4

8ஆம் திருவிழா - பி.ப., வேட்டைத் திருவிழா
திரு. வி. ச. துரைபாலசிங்கம் குடும்பம், கொழும்பு 2

8ஆம் திருவிழா - மாலை
திரு. S. விஜயகுமார் குடும்பம், கொழும்பு 6

9ஆம் திருவிழா - காலை
திரு. S. சரவணபவன் குடும்பம், கொழும்பு 4

9ஆம் திருவிழா - பி.ப., மாம்பழத் திருவிழா
திரு. Dr. K. கணேஸ்வரன் குடும்பம், கொழும்பு 6

9ஆம் திருவிழா - மாலை
திரு. செல்லையா சிவசாமி குடும்பம், புங்குடுதீவு

10ஆம் திருவிழா - காலை
திருமதி. D. சரோஜா குடும்பம், கொழும்பு 2

10ஆம் திருவிழா - மாலை, சப்பரத் திருவிழா
திரு. வ. இ. இராமநாதன் சகோதரர்கள் குடும்பத்தினர், பன்னாலை, தெல்லிப்பளை

11ஆம் திருவிழா - காலை, இரதோற்சவம்
திரு. க. கனகசபாபதி JP, குடும்பம்,கொழும்பு 6

11ஆம் திருவிழா - மாலை
திருமதி. S. தயா பெரேரா குடும்பம், கொழும்பு 5

12ஆம் திருவிழா - காலை, தீர்த்தோற்சவம்
நவரட்ணம் ஸ்ரோர்ஸ், கொழும்பு 2

12ஆம் திருவிழா - மாலை, துவஜா அவரோகணம் (கொடியிறக்கம்)
திரு. T. சௌந்தரராஜா குடும்பம், கொழும்பு 4

13ஆம் திருவிழா - காலை
கோவில் உபயம்

13ஆம் திருவிழா - மாலை, பூங்காவனம், திருவூஞ்சல்
திரு. S. சத்தியநாதன் குடும்பம், கொழும்பு 6

பைரவர் பூஜை
திரு. K. இரத்தினசபாபதி குடும்பம்

## மஹோற்சவ அன்னதான உபயகாரர்களின் பெயர் விபரங்கள் :

கொடியேற்றத் திருவிழா
திரு. S. சோதிநாதன், ஓசானிக் இம்பெக்ஸ், கொழும்பு 11

2ஆம் திருவிழா
திருமதி. நாகம்மா கனகசபை, கொழும்பு 2

3ஆம் திருவிழா
A One Cafe, Colombo 2

4ஆம் திருவிழா
திரு. S. சிவா, கொழும்பு 2

5ஆம் திருவிழா
திரு. கா. தில்லைநாதன் JP, விக்ரோரியா, கொழும்பு 2

6ஆம் திருவிழா
திரு. கந்தவேல், பெற்ரா எசன்ஸ் சப்பிளையர்ஸ் கொழும்பு 11

7ஆம் திருவிழா
திரு. பிறேமராஜ

8ஆம் திருவிழா
திரு. S. கந்தையா நீலகண்டன், கொழும்பு 4

9ஆம் திருவிழா
திரு. செல்லையா சிவசாமி, புங்குடுதீவு

10ஆம் திருவிழா
திரு. A. மகாலிங்கம், சாந்தி ஸ்ரோர்ஸ், கொழும்பு 2

தேர்த் திருவிழா
திரு. A.M. தனாயகம், கொழும்பு 11

தீர்த்தத் திருவிழா
கொழும்பு சைவ முன்னேற்றச் சங்கம், தொண்டரணி

கொடியிறக்கத் திருவிழா
திரு. A. செல்வம், "Moon Tailors", Colombo 11

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் தேர்தல் மூலம் நடைபெறுகின்றது. ஏழு உறுப்பினர்களைக் கொண்ட நிர்வாக் குழுவினரே ஆலயப் பணிகளைப் பொறுப்புடன் செயற்படுத்துகின்றனர். அனைத்துச் செயற்பாடுகளும் யாப்பின் வண்ணமே நடைபெறுகின்றன.

## கோயில் பரிபாலன முகாமைச் சபை :

திரு. க. கனகசபாபதி
தலைவர் - பொறியியலாளர்

திரு. அ. கந்தசாமி
உபதலைவர்

திரு. எஸ். சண்முகநாதன்
இணைச் செயலாளர்

திரு. என். இராமசுசாமி
இணைச் செயலாளர்

திரு. எஸ். டி. தனநாயகம்
பொருளாளர்

திரு. எஸ். தியாகலிங்கம்
உதவிப்பொருளாளர்

திரு. எஸ். ஜெகதீசன்
இணைப்பாளர்

## கும்பாபிஷேகங்கள்

1902இல் சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது. 31. 03. 1975 அனுஷ நக்ஷத்திரத்தில் பிரதிஷ்டா பூஷணம் சிவாகம ஞான பானு நயினை சிவஸ்ரீ ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களாலும் 29. 03. 1993 அன்று பிரதிஷ்டா சக்ரவர்த்தி பிரம்மஸ்ரீ நவாலி சாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களாலும் நிகழ்த்தப்பெற்றது.

## கலை நிகழ்வுகள்

வில்லுப்பாட்டு, பஜனை, மேளக் கச்சேரிகள், பித்துக்குளி முருகதாஸ், ரி. எம். சௌந்தரராஜன் போன்ற கலைஞர்களின் இசைக் கச்சேரிகளும் சமய சொற்பொழிவுகளும் நடத்தப்பட்டுள்ளன. கும்பாபிஷேகத்தையொட்டி மலர் வெளியிடப்பெற்றது.

## ஆலய அறப்பணிகள்

சைவ முன்னேற்றச் சங்க அறநெறிப் பாடசாலைக்கு உதவுதல் போன்ற பணிகளைச் செய்கின்றது.

## ஆலய வரலாறு

கலியுக வரதனான கந்தக் கடவுள் உறையும் ஆலயங்கள் ஈழத் திருநாட்டின் ஒவ்வோர் பகுதியிலும் அமைந்துள்ளன. இவை ஒவ்வொன்றும் ஒவ்வோர் வகையில் தனிச் சிறப்புப் பெற்று விளங்குகின்றன. கொழும்பு மாநகரின் மத்தியில் பல்வேறு மத வழிபாட்டு ஸ்தலங்களை தன்னகத்தே கொண்டு மிளிரும் கொம்பனித்தெருவில் தன்னை அண்டினோர்க்கும் அல்லவருக்கும் ஸ்ரீவள்ளி தேவசேன ஸமேதராய் வீற்றிருந்து அருள்பாலிக்கும் சிவசுப்பிரமணியப் பெருமானது ஆலய வரலாற்றினை அடியார்கள்முன் சமர்ப்பணம் செய்வதில் மனமகிழ்வடைகிறோம்.

பழமையும் புதுமையும் பொலிவுற்றுத் திகழும் கொம்பனித்தெரு அருள்மிகு சிவசுப்பிரமணியப் பெருமானது இவ் ஆலயம் நீண்ட வரலாற்றைக் கொண்டதாகும். புறக்கோட்டை டாம் வீதியில் திரு. பெரியதம்பி என்னும் சைவப் பெரியாரின் காணியின் மத்தியில் சிறிய அளவிலான மூர்த்தி ஒன்று அக்காலத்தில் வணக்கம் செலுத்தப்பட்டு வந்தது. இலங்கையின் பல்வேறு பாகங்களிலிருந்தும் இந்தியாவிலிருந்தும் தலைநகருக்கு வரும் இந்துக்கள் அனைவரும் வணங்கும் ஒரு யாத்திரீக ஸ்தலமாக இக்கோவில் விளங்கியது.

1832ஆம் ஆண்டளவில் ஸ்ரீ வள்ளி தேவசேன ஸமேத சுப்பிரமணியப் பெருமானின் திருவிக்கிரம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. ஸ்ரீ றணஜி மஹாராஜி என்ற பெரியார் பூசகராகவும் ஸ்ரீ மாணிக்க பண்டாரம் உதவியாளராகவும் இவ்வாலயத்தில் பணிபுரிந்தனர். அக்கால கட்டத்தில் போயர் யுத்தமுனைக்குச் சென்ற இந்திய படைவீரர்களும் தளபதிகளும் இவ் ஆலயத்தை வணங்கி இந்தியா சென்றார்களாம்.

நாளடைவில் பக்தர்கள் கூட்டம் அதிகரித்தமையினால் டாம் வீதியிலிருந்த இவ் ஆலயம் வேறோர் இடத்திற்கு மாற்ற வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. அன்றைய ஆட்சியாளருக்கு இந்த இடம் தேவைப்பட்டதன் காரணமாக சைவத் தொண்டில் சிறப்புற்று விளங்கிய பெரியார் சேர் பொன்னம்பலம் அவர்களிடம் அரசாங்கம் பொருத்தமான இடத்தில் இவ் ஆலயத்தினை அமைக்கும்படி பணித்தது.

1867ஆம் ஆண்டில் திரு. அருணாசலம் பொன்னம்பலம் முதலியார் அவர்கள் இவ் ஆலயத்தினை கொம்பனித்தெரு கியூ றோட்டிலுள்ள வளவினுள் கட்டுவித்தார்கள்.

1902ஆம் ஆண்டில் இவ் ஆலயம் சைவப் பெருந்தகை சேர். பொன்னம்பலம் இராமநாதன் அவர்களால் பெரிப்பிக்கப்பட்டு

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியப் பெருமான் ஆலயம் என்னும் திருநாமம் சூட்டப்பட்டது. அத்துடன் இவ் ஆலய நிர்வாகப் பொறுப்பு அனைத்தையும் கொழும்பு கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலய நிர்வாகத்துடன் இணைக்கப்பட்டது. ஸ்ரீ இராமநாதன் அவர்களுக்குப் பின்னர் அவருடைய புத்திரர் திரு. இ. இராஜேந்திரா அவர்கள் நிர்வாகப் பொறுப்பை ஏற்று பணியாற்றினார்.

1942ஆம் ஆண்டில் அத்தியார் திரு. அருணாசலம் அவர்கள் தலைமையில் ஒரு குழு ஆலயத்தை நிர்வகித்து வந்தது. இதன் பின்னர் இவ் ஆலய நிர்வாகப் பொறுப் பனைத்தும் ஓர் அறங்காவலர் சபையிடம் ஒப்படைக்கப்பட்டு நிர்வகிக்கப்பட்டு வந்தது. இவ் அறங்காவலர் சபையின் தலைவராக சைவப் பெரியார் திரு. எம். எஸ். திருவிளங்கம் விளங்கினார்கள்.

இக்கால எல்லையுள் எதுவித திருத்தங்களு மின்றி பழுதடைந்திருந்த இவ் ஆலயத்தை புனர்நிர்மாணம் செய்யும் பொறுப்பை சைவப் பெரியாரும் வர்த்தகருமான திரு. வி. என். கனகசபை அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு தர்மகர்த்தா சபை 1970ஆம் ஆண்டளவில் பொறுப்பேற்றது. இத் தர்மகர்த்தா சபையின் செயலாளராக கடமை யாற்றிய திரு. க. தியாகராஜா அவர்களின் பெரு முயற்சியால் காஞ்சி காமகோடி பீடம் ஜகத்குரு ஸ்ரீ காமகோடி பீடம் சந்திர சேகரேந்திர சரஸ்வதி அவர்களுடைய நல்லாசியுடனும் திருப்பனந்தாள் மடம் காசிவாசி ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தம்பிரான் சுவாமி அவர்களின் ஆலோசனைப்படியும் மற்றுமுள்ள பெரியோர்களினது ஒத்துழைப் புடனும் பிரதிஷ்டா பூஷணம் சிவஸ்ரீ நயினை ஐ. கைலாசநாதக் குருக்கள் அவர்களால் 1975ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி புனராவர்த்தன அனாவரித்தன மஹா கும்பாபிஷேகம் நடாத்தி வைக்கப்பட்டது.


1980ஆம் ஆண்டு துரதிஷ்டவசமாக அறங் காவலர் சபை மீது வழிபடுவோர்க்கு ஏற்பட்ட அதிருப்தி காரணமாக எழுந்த பிணக்கினால் அரசினர் இவ் ஆலயப் பொறுப்பை ஏற்று சைவப் பெரியாரும் - சிரேஷ்ட இறைவரி மதிப்பாளருமான திரு. வே. சண்முகம் அவர் களை இவ்வாலய அரச நம்பிக்கைப் பொறுப் பாளராக நியமனம் செய்து திரு. வே. சண்முகம் அவர்கள் பணியாற்றிய காலத்தில் இவ் ஆலயத்தின் வைப்பு பணமாக ஒரு லட்சத்திற்கு மேலான பணத்தை வங்கியில் சேகரித்து வைத்ததோடன்று ஆலய நிர்வாகப் பொறுப்பினையும் தனி ஒருவராக நின்று திறம்பட நடத்தினார்.

1984ஆம் ஆண்டு கொழும்பு மாவட்ட நீதி மன்றம் அளித்த உத்தரவை ஏற்று இளைப் பாறிய உயர் நீதிமன்ற அரசர் திரு. ப. சிவசுப் பிரமணியம் அவர்கள் தலைமையில் ஆலய சட்டதிட்டங்களுக்கமைய ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

1984ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 18ஆம் தேதி நடைபெற்ற விஷேட கூட்டத்தில் தங்கள் நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் பாத்திரமான இன்றைய அறங்காவலர் சபையினர் இவ் ஆலயத்தைப் பொறுப்பேற்று இப்புனிதப் பணியில் தொடர்ந்து செயற்பட ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

இன்றைய தர்மகர்த்தா சபையின் காலத் தில் பல்லோராலும் பாராட்டத்தக்க பல்வேறு திருப்பணிகள் செய்யப்பட்டு ஆலய நித்திய பூசைகள் மற்றும் யாவனவும் எல்லோராலும் மெச்சத்தக்க விதத்தில் நடைபெறுகிறது.

# ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்



ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில்

105, ஸ்ரீ கதிரேசன் வீதி

கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு மாநகரில் 105 ஆம் இலக்க ஸ்ரீ கதிரேசன் வீதி கொழும்பு 13 இல் ஸ்ரீ கதிர் வேலாயுத சுவாமி கோவில் அமைந்துள்ளது. மூலஸ்தானத்தில் ஐம்பொன்னாலான கதிர்வேல் பித்தளைப் பீடத்தில் பொருத்தப் பட்டு சூக்கும இலிங்கமாகக் காட்சியளிக் கின்றது. மூன்று தளம் அமைந்த இராஜ கோபுரம் தூல இலிங்கமாய் கவின்மிகு காட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றது.

ஆலயம் வடக்குத் தெற்காக 45 அடியும் கிழக்கு மேற்காக 90 அடியினையும் கொண்டு விளங்குகின்றது. மூலஸ்தானம் 11 இற்கு 7 ஆகவும் பலிபீடம் 6 இற்கு 2 ஆகவும் அமைந் துள்ளது. பலிபீடத்தில் மயூரம் கம்பீரமாகக் காட்சி தருகின்றது. துவஜஸ்தம்பம் இருக் கின்றது. (2½′ × 2½′) அதன் அடியில் மூலாதார கணபதி காணப்படுகின்றார்.

இடமிருந்து வலமாக உள்வீதி 80 யார் சுற்றளவு கொண்டுள்ளது. பரிவார தெய்வங் களாக நிருதி மூலையில் கணபதி, சிவலிங் கம், இராஜராஜேஸ்வரி, கஜலக்ஷ்மி, ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, வடக்கில் சண்முகர், நடேசர், உற்சவ விநாயகர், முத்துக்குமாரசுவாமி, சண்டேஸ்வரர், நவக் ஹிரகம், பைரவர், நாகதம்பிரான் மூர்த்தங்கள் உள்ளன. எழுந்தருளித் திருமேனிகளாக, உற்சவ விநாயகர், நாகதம்பிரான், பைரவர், முத்துக்குமாரசுவாமி காணப்படுகின்றனர்.

ஆலய உபயோகத்திற்குத் திருமஞ்சனக் கிணறு உண்டு.

ஆலய வளவில் பணியாட்கள் தங்கும் விடுதி, வாகனசாலை, தேர்முட்டி முதலியன அமைந்துள்ளன.

இங்கிலாந்திலிருந்து 1993இல் தருவிக்கப் பட்ட வெண்கலத்தாலான கண்டாமணி, மின்சாரத்தால் இயக்கப்படுகின்றது.

## பூஜை ஒழுங்குகள்

அன்றாடம் ஆறுகால பூஜைகள் காலை 6.00 மணி; 7.30; 11.00; மாலை 5.00 மணி; 6.00; 8.00 மணி அர்த்தஜாம பூஜையுடன் நிறை வுறும்.

மாதாந்தக் கார்த்திகை, சதுர்த்தி, ஷஷ்டி, விசாகம், ஏகாதசி, அனுஷம் போன்ற நாட் களிலும் விஷேட திருவிழாக்கள் நடைபெறு கின்றன.

ஆலய பூஜையை சிவாச்சாரியப் பெருமக்கள் செய்கின்றனர். மண்டப ஐயர், அந்தணப் பரிசாரகர், கணக்கப்பிள்ளை, பணியாட்கள் பணி செய்கின்றனர்.

நாளாந்த பூஜைக்குச் சர்க்கரைப் பொங் கலும் விஷேட பூஜா காலங்களில் சர்க்கரைப் பொங்கல், சுண்டல் போன்றவை நிவேதிக்கப் படுகின்றன.

விஷேட தினங்களில் பெருமானுக்கு ஸ்நபனாபிஷேகம், சங்காபிஷேகம் இடம் பெறுகின்றன.

தீபாராதனைக்கு சோடஷோபசாரங்களும் விசேஷ தீபங்கள் அனைத்தும் உண்டு.

பூசகர்களுக்கு மாத வேதனம் தட்க்ஷணை, விசேஷ காலங்களில் அதற்கான தட்க்ஷணை கள் வழங்கப்படுகின்றன.

இக்கோயிலில் நேர்த்திக் கடன்களாக சோறு ஊட்டுதல், காது குத்துதல், ஏடு தொடக்குதல், நவக்கிரஹ சாந்தி, அபிஷேகம் போன்றவை இடம்பெறுகின்றன. அனைத் தையும் ஆலய சிவாச்சாரியர்கள் ஏற்று நடத்து கின்றனர்.

## திருவிழாக்கள்

வைகாசி மாதம் 10 நாட்கள் மஹோற்சவத் திருவிழா கணபதி ஹோமம், கொடியேற்றத் துடன் ஆரம்பமாகி அபிஷேகம், வசந்த

மண்டப பூஜை, வாகனோற்சவம், தேர், தீர்த்தம், கொடியிறக்கம், திருக்கல்யாணம், பூங்காவனம், பைரவர் பூஜையுடன் பதினான்கு நாட்கள் நடைபெறும். (2004ஆம் ஆண்டு மஹோற்சவப் பத்திரிகை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.) வருடாந்தத் திருவிழாவைத் தவிர ஆடி அமாவாசையில் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி தேரில் எழுந்தருளி முகத்துவாரம் சிவன்கோயிலுக்குச் சென்று சங்கமத் துறையில் தீர்த்தம் கொடுத்தருள்வார். வரலக்ஷ்மி விரத பூர்த்தியிலும் தேர்பவனி நடைபெறும்.

தீர்த்தோற்சவம் ஆலய திருமஞ்சனக் கிணற்றிலேயே இடம்பெறுகின்றது.

இவ்வாலயத்திற்கெனத் தேர், மூஷிகம், ரிஷபம், சிம்மம், பத்மம், குதிரை, ஆட்டுக் கடா, கைலாச வாகனம், கருடன், மயில் மற்றும் சகடையும் உள்ளன. இவைகள் அனைத்தும் வாகனசாலைகளிலும் தேர்க் கொட்டகை அமைத்தும் செவ்வையாகப் பராமரிக்கப்படுகின்றன.

வாகனங்கள் கோயில் மூலமாகவும் நேர்த்திக்கடன் செலுத்தும் அடியார்கள் மூலமும் பெறப்பட்டவையாகும்.

மஹோற்சவத்தைத் தவிர ஆனி உத்தரம், மார்கழி திருவாதிரை, திங்கள் தோறும் வரும் பௌர்ணமி, சதுர்த்தி, கார்த்திகை போன்ற நாட்களிலும் நவராத்திரி, பிள்ளையார்கதை, கந்தசஷ்டி போன்ற திருவிழாக்களும் நடைபெறுகின்றது.

கந்தசஷ்டியில் சூரசம்ஹாரமும் நவராத் திரியில் மகிஷாசுர சம்ஹாரமும் சிறப்பாக நடைபெறுகின்றன.

இவ்வாலயத்திற்கெனத் திருமண மண்டபம் ஒன்றும் உண்டு. சைவசமய ஆசாரப்படி திருமணங்கள் நடைபெறு கின்றன. சைவசமய மக்களின் வழிபாட்டிட மாக இவ்வாலயம் இயங்குகின்றது.

**மஹோற்சவ உபயகாரர் விபரம் :**

கணபதி ஹோமம்
ஹப்பி ரேடர்ஸ், பீப்பிள்ஸ் பார்க், சொப்பிங் கொம்பிலெக்ஸ், கொழும்பு 11.
திருக்கோயில் உபயம்

1ஆம் திருவிழா
திரு. அ. குழந்தைவேலு புத்திரர்கள்
ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 11.
திரு. சோலைமலை குடும்பம்
அம்பிகா ஜுவலர்ஸ், செட்டியார் தெரு, கொழும்பு 11.

2ஆம் திருவிழா
E.S.P & Co. 124, பழைய சோனகத் தெரு, கொழும்பு 12.

3ஆம் திருவிழா
திரு. எஸ். நேசராஜா
ஸ்ரீ லட்சுமி ஜுவலர்ஸ், 171/3, செட்டியார் தெரு, கொழும்பு 11.
திரு. கே. நடராஜா
ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு 13.

4ஆம் திருவிழா
திரு. கே. ஞானசேகரம் குடும்பம்
664/1, அளுத்மாவத்தை, கொழும்பு 15.
திருமதி நடராஜா மனோன்மணி புத்திரர்கள், 151, டாம் வீதி, கொழும்பு 12.

5ஆம் திருவிழா
திரு. A.V. கைலநாதன் குடும்பம்
64/17, சாந்த பெனடிக் மாவத்தை, கொழும்பு 13.
திரு. மு. க. கருணாகரன் குடும்பம்
99, புதுச்செட்டித்தெரு, கொழும்பு 13.

6ஆம் திருவிழா
இந்து கலாச்சார மன்றம், வல்வெட்டித்துறை

7ஆம் திருவிழா
திரு. A.S. ஆறுமுகம் குடும்பம்
102 1/2, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு 13.

8ஆம் திருவிழா
திரு. G. தம்பிப்பிள்ளை
நியூ ஸ்ரீ முருகன் ஸ்ரோர்ஸ், பழைய சோனகத் தெரு, கொழும்பு 12.
திருக்குறிப்பு தொண்டர் நாயனார் சபை
146, மெசஞ்சர் வீதி, கொழும்பு 12.

9ஆம் திருவிழா
திரு. S. பாலச்சந்திரன் (புகையிலை சுருட்டுத் தொழிலாளர் சங்கம்)
66, ஸ்ரீ கதிரேசன் வீதி, கொழும்பு 11.

*10 ஆம் திருவிழா*
திரு. அ. கந்தசாமி கடும்பம்
கருணா மெட்ரஸ், 194, சீபீச் றோட், கொழும்பு 11.
தி. T. சிவராஜா குடும்பம்
மேகுரி டிரேடர்ஸ், 203, கெயிசர் வீதி, கொழும்பு 11.

திருக்கல்யாணம்
கனகலிங்கம்பிள்ளை அன் சன்ஸ், சென் ஜோன்ஸ் வீதி, கொழும்பு 11.

பூங்காவனம்
திரு. S. மயூரகிரிநாதன் குடும்பம், 28, சென் ஜோன்ஸ் வீதி, கொழும்பு 11.

பைரவர் பூஜை
திரு. S.K. செல்லையா குடும்பம், 94, புதுச்செட்டித் தெரு, கொழும்பு 12.

## ஆலய நிர்வாகம்

தேர்தல் மூலம் பரிபாலனசபை அமைக்கப் படுகின்றது. தற்பொழுது இப் பரிபாலன சபையின் தலைவராக சிவநெறிச் செம்மல் திரு. செந்தில்வேள் ஜே.பி. அவர்களும் திரு. சி. கு. செல்லையா, திரு. மா. சுப்பிரமணியம், திரு. சு. கு. வீரசுப்பிரமணியம், திரு. சு. இராஜ லிங்கம், திரு. செ. மயூரகிரிநாதன் என அறுவர் செயற்படுகின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

1859இல் ஆலயத் திருப்பணி தொடங்கப் பெற்று 8. 6. 1966இல் முதல் கும்பாபிஷேக மும் 29. 10. 1980இல் இரண்டாவது கும்பாபிஷேகமும் 26. 3. 1993இல் மூன்றாவது கும்பாபிஷேகமும் சிறப்பாக நடைபெற்றன.

## ஆலய சொத்து சம்பந்தமான விபரங்கள்

அசையாச் சொத்தாக நிலமும் திருமண மண்டபமும் அசையும் சொத்துக்களாக மணவறை, பாத்திரங்கள், தளபாடங்கள் உள்ளன.

## கலை நிகழ்வுகள்

மேளக்கச்சேரி, சங்கீதக்கச்சேரி, நடனம், சொற்பொழிவுகளும் இடம்பெறுகின்றன. கந்தஷஷ்டி காலத்தில் தமிழருவி த. சிவகுமார னின் தொடர் சொற்பொழிவு நடைபெறுவது குறிப்பிடத்தக்கதாகும். 1993இல் கும்பாபிஷேக மலர் வெளியிடப்பட்டது.

## ஆலய வரலாறு

200 ஆண்டுகள் பழமை வாய்ந்தது இவ் ஆலயம். வல்வெட்டித்துறையைச் சேர்ந்த புண்ணிய சீலர் ஒருவரால் 1810ஆம் ஆண்டளவில் "வேல்" ஸ்தாபித்து வழிபட்டு வந்ததாகவும் அவருக்குப் பிறகு அவரது மகனும் ஆலயத்தை ஆதரித்ததாக செவிவழிச் செய்தியாக அறியமுடிகின்றது. இவ்வாலயத் திருப்பணி 1859இல் நிறைவேறியதாக மூலஸ்தான யந்திரத்தகடு மூலம் தெரியவரு கின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கொழும்பு வாழ் மக்கள் காலத்திற்குக் காலம் இக் கோயிலைப் புதுப்பித்தும் திருப்பணிகள் செய்தும் வந்துள்ளனர். யாழ்ப்பாணத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் என்பதற்கேற்ப அவர்களது ஈடுபாடு இருந்தது.

17. 7. 1955இல் கோயிற் பரிபாலனசபை கூடி புதிய தர்மகர்த்தாக்களைத் தெரிவு செய்தது. 1959இல் பரிபாலன விதிகள் வகுக்கப்பட்டன.

இக்கோயில் நல்லமுறையில் இயங்க பிரபல சமூக சேவையாளரும் செனட்டரும் சமாதான நீதவானுமான அமரர் திரு. த. நீதிராஜா அவர்கள் காட்டிய ஊக்கமும் கால் நூற்றாண்டிற்கும் மேலாக இவ்வாலயப் பொருளாளராக இருந்து பணிபுரிந்த அமரர் திரு. நா. க. மயில்வாகனம் அவர்களது தொண்டும் மறக்கமுடியாதவை.

# ஸ்ரீ சிவராஜ விநாயகர் கோவில்
## (ராம்லால் மகாராஜா தர்ம சத்திரம்)



ஸ்ரீ சிவராஜ விநாயகர் கோவில்
***(ராம்லால் மகாராஜா தர்ம சத்திரம்)***
99, ஜிந்துப்பிட்டி தெரு
கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு ஜிந்துப்பிட்டித் தெருவில் 99ஆம் இலக்கத்தில் ஸ்ரீ சிவராஜ விநாயகர், ஸ்ரீ ஸ்வர்ண பைரவர் ஆலயம் அமைந்திருக்கின்றது. ஆலயமும் அதனைச் சார்ந்த இடமும் 1¾ ஏக்கர் விஸ்தீரணம் கொண்டது.

அழகான கலைநுணுக்கம் மிக்க நுழை வாயிலின் வழியாக ஆலயத்திற்குச் செல்ல வேண்டும்.

மூலஸ்தானத்தில் ஸ்ரீ சிவராஜ விநாயகர் அருட்காட்சி வழங்குகின்றார். அதேபோன்று ஸ்வர்ண பைரவரும் காட்சி தருகின்றார். இரண்டு பலிபீடங்கள் உள்ளன.

ஆலயத்தை வலம் வந்தால் ஸ்ரீ ஆஞ்சநேயர், நாகம்மாள், காளிகாம்பாள், ஸ்ரீ ஐயப்பன், விநாயகர், முருகன் காணப்படுகின்றனர். எழுந்தருளித் திருமேனிகளாக ஸ்ரீ சிவராஜ விநாயகர், ஸ்ரீ நாகபூஷணி அம்பாள், ஸ்ரீ ஆஞ்சநேயர் விளங்குகின்றனர். பூஜிக்கப்படும் தெய்வங்களாக விநாயகர், ஸ்வர்ண பைரவர், நாகம்மாள், ஸ்ரீ ஐயப்பன், காளிகாம்பாள், முருகன், ஆஞ்சநேயர், முனியப்பர் முதலியோர் அமைந்துள்ளனர்.

ஒரு காலகட்டத்தில் ஆலய நந்தவனம் இருந்த இடங்கள் எல்லாம் தற்பொழுது குடியிருப்புக்களாக மாறிவிட்டன.

ஆலய உபயோகத்திற்கென்று இருந்த கிணறு 1962இல் இடிந்து விழுந்ததால் மூடப்பட்டுவிட்டது.

தர்மகர்த்தாவின் வதிவிடமும் பிரதான வாயிலிலிருந்து ஆலயத்திற்குச் செல்லும் பாதையின் இருமருங்கிலுமுள்ள கட்டிடங்கள் வழிபாடுசாராக்கட்டிடங்களாகும். இக்கட்டிடம் ஒரு காலத்தில் யாத்ரீகர் தங்கும் இடமாக இருந்தது.

ஆலயத்தில் இருந்த பெரியமணியும் களவாடப்பட்டுவிட்டது.

## பூஜை ஒழுங்குகள்

காலை 7.30; மாலை 6.30; இரவு 7.30 இற்கு அர்த்தஜாம பூஜையும் நிகழ்கின்றது.

விஷேட தினங்களில் அபிஷேகம், பூஜை செய்யப்படுகின்றது. அந்தணகுருமாரே பூஜைகளை மேற்கொள்கின்றனர். போதிய வருமானம் இன்மையால் நிரந்தர உதவியாளர்கள் இல்லை. பிரசாதங்கள் தயாரிப்பதற்கு ஆலய குருவும் கோவிலைத் தூய்மைப் படுத்துவதற்கு தற்காலிக உதவியாளர்களும் ஈடுபடுத்துகின்றார்கள்.

நாளாந்த பூஜையில் வெண்பொங்கல், பழம் விஷேட நாட்களில் சர்க்கரைப் பொங்கல், பஞ்சாமிர்தம், கடலை, மோதகம், அவல், பழங்கள் முதலியன நிவேதிக்கப்பட்டு மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. பூஜா உபகரணங்கள் இருக்கின்றன. ஆலய வழிபாடு வதிவிட அடிப்படையில் நடைபெறுகின்றது.

## திருவிழாக்கள்

ஆடி மாதத்தில் ஒருநாள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. ஆவணி சதுர்த்தி விழாவில் தேர்பவனி உண்டு. தேர்முட்டியில் தேர் பாதுகாக்கப்படுகின்றது. தேரைத்தவிர மூஷிகவாகனமும் உண்டு. இவைகள் ஆலயப் பொறுப்பிலேயே செய்யப்பட்டன. ஆலயக் குருக்களும் தர்மகர்த்தாக்களுமே ஆலயத் திருவிழாக்களைச் செய்கின்றனர்.

நவராத்திரி, பிள்ளையார் கதை, சிவராத்திரி, நாகபூஷணி அம்பாள் திருவிழா முதலியன இவ்வாலயத்தில் நடத்தப்படுகின்றன.

## ஆலய நிர்வாகம்

தற்போதைய ஆலய நிர்வாகிகளின் மூதாதையரால் 1813ல் இவ்வாலயம் அமைக்கப்பட்டது. குடும்பவழி உரிமையின் மூலமாகவே ஆலய நிர்வாகிகள் பணிபுரிகின்றனர்.

தற்பொழுது ஆலய நிர்வாகிகளாக திருமதி சிவப்பிரகாசம்மாள், சண்முகநாதன், மஹாலக்ஷ்மி மலையப்பா, கிருபாம்பிகை

தாமோதரம், சாந்தி பாலசிங்கம், நிரஞ்சலா இந்திரராஜ், சண்முகநாதன், ராம்லால் மஹாராஜா முதலியோர் பணி செய்கின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

1993ஆம் ஆண்டு நடைபெற்றது.

## ஆலயசொத்து சம்பந்தமான விபரங்கள்

கோவிலைச் சார்ந்துள்ள இடப்பரப்பு ஒன்றே ஆலயத்திற்குச் சொந்தமானது.

## ஆலய அறப்பணிகள்

ஒரு காலத்தில் (1950இல்) சமஸ்கிருத வகுப்புக்கள், குருகுல உயர்பாடசாலையாக ஏழை மாணவர்களுக்கான பாடசாலை பௌத்த சமய வகுப்புக்களும் நடைபெற்றுவந்தன.

## ஆலய வரலாறு

ஜெயந்திநகர் என்னும் ஜிந்துப்பிட்டியில் அமைந்திருக்கும் ராம்லால் மஹாராஜா தர்ம சத்திரமும் ஸ்ரீ சிவராஜ விநாயகர் ஆலயமும் இலங்கையின் வரலாறு சிறப்புமிக்க ஆலயங்களுள் ஒன்றாகும்.

1813ஆம் ஆண்டு இலங்கையில் வாழ்ந்த பெருஞ் செல்வப் பிரபுக்களுள் ஒருவரான ராம்லால் மஹாராஜாவினாலும் அவரது மனைவியார் சிவப்பிரகாச அம்மாளினாலும் இவ்வாலயமும் சத்திரமும் தோற்றுவிக்கப்பட்டன. அக்காலத்தில் அண்டை அயல் நாடுகளிலிருந்து வந்த பெரும் வணிகர்கள் ஆன்மிகப் பெரியார்கள் தங்கிச் செல்லும் ஒரு உன்னத ஸ்தானமாக இச்சத்திரம் விளங்கிற்று என்றால் அது மிகையாகாது.

179 ஆண்டுகளுக்கு முன்னர் ஸ்தாபிக்கப்பட்ட ஸ்ரீ சிவராஜ விநாயகர் சிலை போன்று இலங்கையின் இந்து ஆலயங்களில் விரல்விட்டு எண்ணிவிடக்கூடிய ஒரு சிலவே உண்டு என இவ்வாலயத்தினை தரிசிக்க வந்த சமயப் பெரியார்கள் பலர் அபிப்பிராயப்பட்டுள்ளனர்.

சர்வ லட்சணங்களும் பொருந்திய ஸ்ரீ சிவராஜ விநாயகரோடு மற்ற மூர்த்திகளாகிய ஸ்ரீ ஸ்வர்ண பைரவர், நாகம்மாள், முனியப்பர் முதலான தெய்வங்களும் இவ்வாலயத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

பல வருடங்களுக்கு முன்னர் நித்திய வழிபாடுகளும் நான்குகாலப் பூஜைகளும் நாள் தவறாது அன்னதானங்களும் சீரும் சிறப்புமாக இவ்வாலயத்தில் நடைபெற்று வந்துள்ளன என்பதற்கு சிவப்பிரகாச அம்மையாரால் 1813ஆம் ஆண்டு விநியோகிக்கப்பட்ட ரசீதுகள் சான்று பகர்கின்றன. அக்காலத்தில் இவ்வாலயத்துக்கென்றே பிரத்தியேகமாக குருக்கள்மாரும் பூக்கட்டும் பண்டாரங்களும் தேவாரமிசைப்போரும் மேளக்காரரும் எடுபிடி வேலையாட்களும் மடைப்பள்ளி பணியாட்களும் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தனர். நித்தியப் பூஜைகளுக்கு வேண்டிய மலர்கள் அக்காலத்தில் கொழும்பு கோட்டையில் அமைந்திருந்த "Gorden Gardens" என்னும் பூங்காவில் இருந்து தருவிக்கப்பட்டதாக ஆலய தர்மகர்த்தாக்கள் கூறுகின்றனர்.

இலங்கையில் முதன்முதலாக தாழ்த்தப்பட்ட இனத்தோருக்கு திறந்துவிடப்பட்ட கோவில் என்ற பெருமையும் இக்கோவிலையே சாரும் (ஆதாரம் - தினகரன் 17. 10. 32) இந்தியாவில் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தீவிரமாக இருந்த சமயம் காந்திஜி இலங்கைக்கு விஜயம் செய்தபோது இச்சத்திரத்திலேயே தங்கிச் சென்றுள்ளார். மேலும் சுவாமி விவேகானந்தர், நேபாள மன்னர் மகேந்திரா, மஹாகவி ரவிந்திரநாத் தாகூர், ஆனைக்குட்டி சுவாமிகள், திருமுருக கிருபானந்தவாரியார் மற்றும் பல ஆன்மிக பெரியார்களும் சரித்திர புருஷர்களும் தங்கிச் சென்ற இடம் இதுவாகும்.

1940ஆம் ஆண்டுகளில் பிரசித்தி பெற்ற இசைக் கலைஞர்களால் நிர்வகிக்கப்பட்ட "ரசிக ரஞ்சனி" சபையின் பொதுக் கூட்டங்களும் 1950 ஆண்டுகளில் ராமகானசபை, சுரநூல் சங்கம் முதலிய சங்கங்களின் பொதுக் கூட்டங்களும் இச்சத்திரத்தில் நடைபெற்று வந்துள்ளன. 1953ஆம் ஆண்டு தொடக்கம் 1964ஆம் ஆண்டு வரை "குருகுலம்" என்ற பாடசாலை இச்சத்திரத்தில் நடைபெற்று வந்துள்ளது. மற்றும் சமஸ்கிருத வகுப்புகள், இந்து, கிறிஸ்தவ, பௌத்த மத வகுப்புகளும் இச்சத்திரத்தில் நடைபெற்று வந்துள்ளன.

# நகரத்தார் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில்



நகரத்தார் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில்

251, செட்டியார் தெரு

கொழும்பு - 11

## ஆலய அமைப்பு

கொழும்பு செட்டியார் தெருவில் 251ஆம் இலக்கத்தில் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமியின் ஆலயம் 30 பேர்ச் விஸ்தீரணத்தில் அழகுற அமைந்துள்ளது. கிழக்குப் பார்த்த கோலத்துடன் ஐம்பொன்னாலான ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி மூலஸ்தானத்தில் அருள் பாலிக்கின்றார். கருவறையின் இருமருங்கிலும் விநாயகர், இடும்பன் வீற்றிருக்கின்றனர்.

ஐந்து தளங்களையுடைய இராஜகோபுரம் ஆலயத்திற்கு கம்பீரமூட்டுகின்றது. எழுந்தருளி மூர்த்தங்களாக முருகன், வள்ளி, தெய்வானை ஸமேதராக விளங்குகின்றார். பூஜிக்கப்படும் தெய்வங்கள் பிள்ளையார், இடும்பன், முருகன் ஆகியோரே.

இக்கோவிலில் கருங்கல்லில் வடித்த விநாயகர், இடும்பன் ஆகிய விக்கிரகங்கள் இரண்டும் மகாபலிபுரத்தில் இருந்து கொண்டு வந்ததாகக் கோவில் ஆவணங்களிலிருந்து அறிய முடிகிறது. இக்கோவிலுக்கு உபய கதிர்காமக் கோவிலாக 339, காலி வீதி பம்பலப்பிட்டியில் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் இருக்கிறது.

வெளிச்சுற்று இல்லை. ஓர் கிணறு மூலஸ்தானத்தின் பின்புற வாசலின் அண்மையில் உள்ளது. திராவிடக்கலை மரபில் ஆலயம் அமைந்துள்ளது.

## பூஜை ஒழுங்குகள்

நான்கு கால பூஜைகள் காலை, நண்பகல், சாயரட்சைஷ, அர்த்தஜாமம் என நடைபெறுகின்றன. பூஜைகள் யாவும் ஆகம முறைப்படி அந்தணர்களைக் கொண்டு செய்விக்கப்படுகின்றன. ஆலயப் பணிகள் யாவையும் பூசகரே கவனித்துக் கொள்வர். இது தவிர கணக்கப் பிள்ளையும் இரு பணியாட்களும் பணிபுரிகின்றனர்.

உபயகாரர் வழங்கும் பொருட்களில் பொங்கல், கடலை போன்ற நிவேதனங்கள் உண்டு.

ஸ்நபன அபிஷேகங்கள் நடைபெறுவது உண்டு. பூஜா உபகரணங்கள் அனைத்தும் ஆலயத்தில் இருக்கின்றன.

அர்ச்சகருக்கு மாத வேதனமும் அர்ச்சனைப் பணம், தட்க்ஷணை என்பன வழங்கப் படுகின்றது.

## திருவிழாக்கள்

வருஷாபிஷேகம் தைமாதம் நடைபெறுகின்றது. கோவில் உபயமாக இவ்விழா நடைபெறுகின்றது. தேர் விழா உள்வீதி வலமாக இடம்பெறும்.

இது தவிர ஆடிவேல் திருவிழா இவ் ஆலயச் சிறப்புத் திருவிழா. இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை நடைபெறுகின்றது. ஆடிவேல் விழா தேசிய விழாவாகக் கொண்டாடப்படுகின்றது. இவ்விழாவில் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி வெள்ளி இரதத்தில் பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் கோயிலிற்குச் சென்று இரு நாட்களிற்குப் பிறகு (கதிர்காமத் தீர்த்தத்தின்பின்) மீண்டும் பெருமான் ஆலயத்திற்கு எழுந்தருள்வார்.

தீர்த்தம் பழைய கதிரேசன் கோயிற் கேணியில் நடைபெறும். ஆடிவேல் இரதபவனி கொழும்பில் சிறப்பாக நடைபெறுவது ஏராளமான அன்பர்கள் இன, மத, பேதமின்றி கலந்துகொண்டு சிறப்பிக்கும் தேசிய விழா.

ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி பவனி வரும் வெள்ளி இரதம் 22 அடி உயரமானது. பர்மாவிலிருந்து கொண்டு வரப்பட்டது. 130 ஆண்டு காலப் பழமை உடையது.

தேருக்கான தேர்முட்டி செட்டியார் தெருவில் உள்ளது.

இவ்விழாக்கள் தவிர பங்குனி உத்தரம், நவராத்திரி, கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், திருவெம்பாவை, சிவராத்திரி, 45 நாட்கள் ஐயப்பன் பூஜை ஆகியனவும் இவ்வாலயத்தில் நடைபெறும் திருவிழாக்களாகும்.

உற்சவங்களை சேதுராமன் செட்டியார் நாராயணன் அவர்கள் உபயகாரராகச் செயற்படுகின்றார்.

கோயிலில் ஆரம்ப காலத்தில் குலக்குழும அடிப்படையிலும் தற்பொழுது வதிவிட அடிப்படையிலும் மக்கள் வழிபடுகின்றனர். கோவிலில் நேர்த்தி செய்து அபிஷேகம் சுவாமிக்குத் திருவாபரணங்கள் அளிக்கின்றனர்.

## ஆலய நிர்வாகம்

ஆலய பரிபாலனம் குலவழி உரிமை கொண்டு நடத்தப்படுகின்றது. நகரத்தார் குழு (செட்டியார் சமூகம்) தனது பாரம்பரிய முறைப்படி ஆட்சி யாப்பு முறையை அமைத்துச் செயற்படுகின்றது.

### முதலாவது தர்மகர்த்தாச் சபையினர் விபரம் (1839-1871)

திரு. ப. லெ. அ. வெள்ளையன் செட்டியார் (தலைவர்) ஆரம்ப தர்மகர்த்தா
திரு. மு. ரு. ல. காடப்ப செட்டியார்
திரு. ரா. ம. ப. அண்ணாமலை செட்டியார்
திரு. ச. சா. வ. சின்னையா செட்டியார்
திரு. கு. ம. க. ரு. லட்சுமண செட்டியார்
திரு. கு. மு. பழனியப்ப செட்டியார்
திரு. கு. ப. ம. பழனியப்ப செட்டியார்

### இரண்டாவது தர்மகர்த்தாச் சபையினர் விபரம் (கி.பி. 1871-1908)

திரு. சா. அ. பழனியப்ப செட்டியார் (தலைவர்)
திரு. பெ. மு. அழகப்ப செட்டியார்
திரு. ரா. ம. ப. அ. சிவராமன் செட்டியார்
திரு. வ. மெய்யப்பன் செட்டியார்
திரு. ப. மு. சே. செல்லப்ப செட்டியார்
திரு. சே. ப. நா. அருணாசலம் செட்டியார்
திரு. மு. நா. பழனியப்ப செட்டியார்
திரு. ப. மு. முத்தையா செட்டியார்
திரு. ப. மு. பிச்சயப்ப செட்டியார்

### மூன்றாவது தர்மகர்த்தாச் சபையினர் விபரம் (கி.பி. 1908-1912)

திரு. எஸ். நாராயணன் செட்டியார் (தலைவர்)
திரு. க. லெ. கருப்பன் செட்டியார்
திரு. ப. மு. சிவலிங்கம் செட்டியார்
திரு. மு. க. ரா. பழனியப்ப செட்டியார்
திரு. க. குழந்தைவேலன் செட்டியார்
திரு. சி. சிதம்பரம் செட்டியார்
திரு. மு. க. கருப்பன் செட்டியார்
திரு. ப. மு. பிச்சயப்ப செட்டியார்
திரு. சே. ப. நா. அருணாசலம் செட்டியார்

### நான்காவது தர்மகர்த்தாச் சபையினர் விபரம் (கி.பி. 1912-1962)

திரு. எஸ். எம். எஸ். பி.சொக்கலிங்க செட்டியார் (தலைவர் 1962 வரை)
திரு. க. ரு. லெ. இலட்சுமணன் செட்டியார்
திரு. சு. ப. சேதுராமன் செட்டியார் (1943இல் இருந்து)
திரு. அ. மு. ரா. ம. இராமசாமி செட்டியார் (1937இல் இருந்து)
திரு. ஏ. வி. ஆர். ஏ. இராமநாதன் செட்டியார்
திரு. ஏ. எம். ஆர். எம். சுந்தரம் செட்டியார்
திரு. ஆர். எம். காசி விசுவநாதன் செட்டியார் (1934 இலிருந்து)
திரு. ஆர். எம். பழனியப்ப செட்டியார் (1943 இலிருந்து)

### ஐந்தாவது தர்மகர்த்தாச் சபையினர் விபரம் (கி.பி. 1963 - இற்றைவரை)

பேராசிரியர் டாக்டர். ராம பழனியப்ப செட்டியார் (தலைவர்)
திரு. காசி விஸ்வநாதன் செட்டியார்
திரு. கு. ரு. லெ. இலட்சுமணன் செட்டியார் 1962 வரை)
திரு. ஏ. எம். ஆர். ஏ. சுந்தரம் செட்டியார் (1985 வரை)
திரு. ஏ. வி. ஆர். ஏ. இராமநாதன் செட்டியார் (1973 வரை)

திரு. சு. ப. சேதுராமன் செட்டியார்
திரு. ஏ. வி. ஆர். ஏ. ஆர். வீரப்ப செட்டியார் *(1985 இலிருந்து)*
திரு. ஏ. வி. ஆர். ஏ. ஆர். அடைக்கப்ப செட்டியார் *(1985 இலிருந்து)*
திரு. சே. நாராயணன் செட்டியார் BCom *(1985 இலிருந்து)*

## கும்பாபிஷேகங்கள்

இக்கோவில் கட்டப்பட்டது கி.பி. 1839 ஆயினும் 1932 தான் 5 மாடங்களையுடைய இராஜகோபுரம் அமைக்கப்பட்டது. அதன் பின்பு முதற் கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. எனினும் கோவில் கல்வெட்டில் அவ்வேளை யில் இதனைப் பொறிக்காது விட்டுவிட்டனர். அதன் பின்னர் 21. 01. 1974இல் இரண்டாவது கும்பாபிஷேகம் நடத்தப்பட்டது. அண்மை யில் நடைபெற்றது இக்கோவிலின் 3ஆவது கும்பாபிஷேகமாகும். 1974இலும் 1999இலும் நடைபெற்ற இரு கும்பாபிஷேகங்களும் எமது தர்மகர்த்தா சபைத் தலைவர் பேராசிரியர், டாக்டர் ஆர். எம். பழனியப்ப செட்டியார் அவர் களின் இடைவிடா முயற்சியினாலும் இறை வனின் கடாக்ஷசத்தினாலும் தான் நிறைவேறி யன என்பதையும் நினைவு கூருகிறோம்.

## ஆலய சொத்து விபரங்கள்

அசையும் சொத்துக்களாக சுவாமியின் அங்கிகள், நகைகள், வெள்ளி இரதம் முதலியன.

அசையும் சொத்துக்களாக செட்டியார் தெருவில் 12 கடைகள், ஒரு வீடு, ஒரு விடுதி, ஒரு கோவில் உள்ளன.

## கலை நிகழ்வுகள்

சிவராத்திரியின் பொழுது நாதஸ்வர மேளக்கச்சேரிகள் நடைபெறும்.

ஆடிவேல் திருவிழாவிற்கு தவில் வித்து வான் வலையப்பட்டி சுப்பிரமணியம், ஜெய்சங்கர், ஷேக் சின்னமௌலானா, காசிம் என்போரின் நாதஸ்வரக் கச்சேரி, குன்னக்குடி வைத்தியநாதனின் வயலின் இசைக் கச்சேரி என்பன.

## ஆலய அறப்பணிகள்


உலக இந்து மஹாநாட்டிற்கு தங்கப் பதக்கம் கொடுக்கப்பட்டது. திருக்கேதீஸ்வர புனருத்தாரணப் பணிக்கு நிதி வழங்கப் பட்டது. பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி, இராமநாதன் மகளிர் கல்லூரிக்கு நிலம் வழங்கப்பட்டது.

## ஆலய வரலாறு

1839இல் திரு. ப. வெ. சு. வெள்ளையன் செட்டியாரும் நகரத்தார் ஆறுபேரும் சேர்ந்து இக்கோவிலை ஸ்தாபித்தனர். ஏற்கனவே அங்கு இருந்த கோவில் நிர்வாகத்தினருடன் ஏற்பட்ட பிணக்குக் காரணமாகவே இவர்கள் அதே தெருவில் இக் கோவிலைக் கட்டி "ஸ்ரீ புதிய கதிர் வேலாயுத சுவாமி" எனப் பெயரிட்டனர். ஆரம்பத்தில் வேல் மட்டும் வைத்து வழிபாடு நடந்தது. 1932இல் இராஜகோபுரமும் கட்டப்பட்டது. மயில் வாகனத்தில் வீற்றிருக்கும் வள்ளி தெய்வானை ஸமேதரரான கதிர்வேலாயுத சுவாமியும் மூலவராகப் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

செட்டியார் தெருவில் 239ஆம் இலக்கத் தில் 1809இல் இயற்றப்பட்ட நகரத்தார் ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி கோவில் நிர்வாகத் தினருடன் அதன் நிருவாக விடயத்தல் ஏற்பட்ட கருத்து வித்தியாசத்தினாலேயே நகரத்தார் களான திரு. ப. வெ. அ. வெள்ளையன் செட்டி யாரும் ஏனைய ஆறு பேரும் சேர்ந்து இக் கோவிலை 251ஆம் இலக்க காணியில் 1839இல் கட்ட நடவடிக்கை எடுத்தனர். இறை வனின் திருவிளையாடலின் மூலம் வந்த இத் திருவருட் செல்வருக்கு நகரத்தார் சமூகத்தினர் இட்ட பெயர் ஸ்ரீ புதிய கதிர்வேலாயுத சுவாமி கோவில் ஆகும். ஆரம்பத்தில் ஒரு வேலாயுதம் மட்டும் வைத்து வழிபாடு ஆரம்பிக்கப்பட்டது. இதன் பின்னர் தான் முதலில் கட்டப்பட்ட 239ஆம் இலக்கத்தில் உள்ள கோவில் "ஸ்ரீ பழைய கதிர்வேலாயுத சுவாமி கோவில்" என்ற பெயரைப் பெற்றது.

# ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்



ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

*38, ஸ்ரீ இராமநாதன் வீதி*

கொழும்பு - *13*

## ஆலய அமைப்பு

கொழும்பு-13 ஸ்ரீ இராமநாதன் வீதி 38ஆம் இலக்கத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு மூலஸ்தானத்தில் கிழக்குநோக்கி சிவலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. தெற்கு நோக்கி சிவகாமசுந்தரி அம்பாள் உள்ளாள். இவ்வாலயத்தில் மூன்று பிரஹாரங்கள் உள்ளன. உட்பிரஹாரத்திலே துவார கணபதி, துவார சுப்பிரமணியர், துவார பாலகர்கள், ஓமகுண்டம் பலிபீடம், நந்தி (வாகனம்) என்பன உள்ளன. மஹாமண்டபத்திலே நடராஜர் தெற்கு நோக்கிய சந்நிதியாக உள்ளார். முதலாவது ஆவரணத்திலே கர்ப்பக்கிரகத்தைச் சூழ நிருத்த கணபதி, சந்தான கோபாலர், தட்சணாமூர்த்தி, லிங்கோற்பவர், பிரம்மா, துர்க்கை, சண்டேஸ்வரர் ஆகிய தெய்வங்களும் அஷ்ட பலிபீடங்களும் உள்ளன. அம்பாள் சந்நிதானத்திலே மூலமூர்த்தியாக அம்பாளும் துவார பாலகிகளும் அம்பாளுக்குரிய நந்தினி பலிபீடமும் உண்டு.

ஸ்தம்ப மண்டபத்தில் மஹாநந்தி, பலிபீடம், கொடித்தம்பம் என்பவை உண்டு.

இரண்டாவது பிரகாரத்திலே மஹா கணபதி, சோமாஸ்கந்தர், பஞ்சலிங்கம், மஹாவிஷ்ணு, சுப்பிரமணியர், ஆறுமுக சுவாமி என்பவையும் வடக்கு வீதியில் உற்சவ மூர்த்திகளும் உள்ளனர். கிழக்குப் பகுதியில் யாகசாலை, பைரவர், சொர்ணாகர், ஷணபைரவர், நவக்கிரகம் என்பனவும் கோபுரவாசலின் உட்பகுதி இரு மருங்கிலும் சூரிய சந்திரர்களும் உண்டு.

மூன்றாம் பிரஹாரத்திலே தென்கிழக்கிலே ஆஞ்சநேயர், மாரியம்மன் என்பனவும் தென்மேற்கில் முனியாண்டி சுவாமியும் வடமேற்கில் பசுத்தொழுவமும் வடகிழக்கிலே சொர்ண புஷ்கரணி எனும் தீர்த்தத் தடாகம், நிருத்தி கணபதி, தேர்முட்டி என்பவையும் காணப்படுகின்றன.

ஸ்தம்ப மண்டபத்தை அடுத்தாற்போல் வசந்த மண்டபம் உண்டு. எழுந்தருளி மூர்த்தங்களாக விநாயகர், சுப்பிரமணியர், சந்திர சேகரர், அம்பாள், அஸ்திரதேவர், ராஜ ராஜேஸ்வரி, இராமர், காத்தவராயரோடு அம்பாள், மஹாவிஷ்ணு அம்பாளுடன் நால்வர், பிரதோஷ நாயனார், பள்ளியறை சுவாமி (அம்பாளுடன்) என்பன உள்ளன.

## பூஜை ஒழுங்குகள்

தினமும் ஆறுகாலப் பூஜை நடைபெறுகிறது. 5.30இற்கு திருவனந்தலில் பால், பழம், பொரியும் நைவேத்தியம் செய்யப்படுகின்றன. 7.30 காலை சந்தி வெற்றிலை, பாக்கு, தேங்காய். 11.30 உச்சிக்கால பூஜை பழம், காளாஞ்சியும் 5.30 சாயரக்ஷையில் வடையும் 6.30 கால பூஜையில் புளிச்சாதம், தயிர்சாதம் என்பனவும் 8.00 இற்கு அர்த்தஜாம பூஜைக்கு பால், வடை, பழம், பாக்கு, வெற்றிலை என்பவும் நைவேத்தியம் செய்யப்படுகின்றன.

விசேஷ பூஜைகளுக்கு சர்க்கரைசாதம், புளிச்சாதம், வடை, கடலை, பயறு ஆகியன பிரசாதமாக வழங்கப்படுகின்றன.

மாதச் சிறப்பு நாட்களில் அதாவது தைப் பூசம், வைகாசி விசாகம், ஆனி உத்தரம் போன்றவற்றிற்கு சிறப்பான உற்சவங்கள் நடைபெறுகின்றன.

காரணாகம முறைப்படி பத்ததி பூஜை நடைபெறுகின்றது. பூஜை ஒழுங்குகளுக்கு 7 சிவாச்சாரியார்களும் 4 உதவி ஐயர்களும் 1 மடப்பள்ளி ஐயரும் உள்ளனர். இவர்களைத் திவர மேளவாத்தியகாரர், மாலை கட்டுபவர்கள், சுவாமி தூக்குபவர்கள், தேவார பாராயணம் ஓதுபவர்கள் என்போரும் உள்ளனர்.

சோடஷோபசாரப் பொருட்கள் 16 வகையானவை உண்டு. பூஜைப்பொருட்கள் அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

பங்குனி உத்தரத்தை அந்தமாகக் கொண்டு 10 நாட்கள் வருடாந்த மஹோற்சவம் சிவனுக்கு நடைபெறும்.

ஆடிப்பூர தினத்தை அந்தமாகக் கொண்டு அம்பாளுக்கு விசேஷ ஹோமம், இலட்சார்ச் சனை நடைபெறும்.

முதல்நாள் கொடியேற்றம், 8ஆம் திருவிழா வேட்டைத் திருவிழா, 9 தேர்த்திருவிழா, 10ஆம் நாள் தீர்த்தம் நடைபெறும். சப்பரம், தேர் என்பன கோவில் வீதியில் மட்டும் வலம் வரும்.

வருடாந்த மஹோற்சவம் தவிர மாதக் கார்த்திகை, கந்தசஷ்டி போன்ற விசேஷ காலங்களில் சுப்பிரமணியர் அம்பாளுடன் வீதிவலம் வருவார். சூரன் போருக்கு ஆறுமுக சுவாமி அம்பாளுடன் வீதிவலம் வருவார். ஆவணி சதுர்த்திக்கு விநாயகர் வீதிவலம் வருவார். பிரதோஷத்திற்கு பிரதோஷநாயனார் அம்பாளுடன் வீதிவலம் வருவார்.

சொர்க்கவாயில் ஏகாதசி, புரட்டாதி, திருவோணம், புரட்டாதி கடைசிச்சனி, கிருஷ்ண ஜயந்தி ஆகிய தினங்களில் மஹா விஷ்ணு அம்பாளுடன் வலம் வருவார். கௌரி விரதம், நவராத்திரி, திருவெம்பாவை என்பன வும் சிறப்பாக நடைபெறும்.

நால்வரின் குருபூஜையும் நடைபெறுகிறது. மாணிக்கவாசகரின் குருபூஜையன்றுதிருவாசக முற்றோதல் நடைபெறும்.

தைப்பூசம் தொடக்கம் மஹோற்சவ காலத் திற்கு இடைப்பட்ட காலத்தில் திருமுறை முற்றோதல் நடைபெறும்.

ஆடிப்பூரத்திற்கு அம்பாளுக்கு 1008 சங்காபி ஷேகமும் ஆனிச்சித்திரைக்கு மூலவருக்கு 1008 சங்காபிஷேகமும் ஏனைய மூர்த்தி களுக்கு சாதாரண அபிஷேகமும் நடை பெறும்.

## ஆலய நிர்வாகம்

சேர். பொன். இராமநாதனின் வழிவந் தோரால் பரிபாலனம் செய்யப்படுகிறது. பரிபாலனசபையில் 5 பேர் உள்ளனர்.

ஆலயப் பூசகருக்கு குடியிருக்க வீடு நிர்வாகத்தினரால் வழங்கப்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டு நவம்பர் மாதத்திலிருந்து சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்கள் பிரதம சிவாச்சாரியாராக இருந்து வருகின்றார். ஆலயத்துக்குச் சொந்தமான தோட்டங்கள் உள்ளன. அவற்றிலிருந்து வருமானமும் கிடைக்கப்பெறுகின்றது.

## கும்பாபிஷேகங்கள்

முதலாவது கும்பாபிஷேகம் 27. 11. 1857 திருவோண நக்ஷத்திரத்திலும் இரண்டாவது கும்பாபிஷேகம் 07. 06. 1873 உத்தர நக்ஷத்திரத் திலும் பொன்னம்பல முதலியார் அவர்களால் நடாத்தி வைக்கப்பட்டது. மூன்றாவது கும்பாபி ஷேகம் 30. 03. 1881 பூச நக்ஷத்திரத்தில் பொ. குமாரசுவாமி முதலியாரால் நடாத்தி வைக்கப் பட்டது. (இவை தமிழ்த் திகதிகள் ஆகும்.)

இதன்பின் 1950ஆம் ஆண்டுவரை நடை பெற்ற கும்பாபிஷேக விபரங்கள் கிடைக்க வில்லை.

குஞ்சிதபாதக் குருக்கள் ஆலய பிரதம குருவாகப் பொறுப்பேற்றபின் 5 தடவைகள் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது.

16. 11. 1950, 06. 12. 1967, 06. 02. 1974, 26. 01. 1986, 23. 06. 1999

## ஆலய வரலாறு

19ஆம் நூற்றாண்டின் நடுக்கூறுகளிலே பொன்னம்பலம் முதலியார் அவர்களால் இவ்வாலயம் கட்டப்பட்டது. அவர் கற்ளாலும் மண்ணினாலும் சாந்தினாலும் தான் முதலில் கட்டுவித்தார். கொச்சிக்கடையில் 5 ஏக்கர் நிலத்தை விலைக்கு வாங்கி இந்திய கலைஞர் களைக் கொண்டு 2 வருடங்களில் கட்டட

வேலைகளைப் பூர்த்தி செய்தார். மூலமூர்த்தியாக மஹாலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தான் வீட்டில் வைத்து பூஜித்து வந்த ஸ்ரீ சக்கர யந்திரத்தை எடுத்து வந்து அம்பாள் சந்நிதி ஒன்று அமைத்து பீடத்திற்கு அடியில் இவ் இயந்திரத்தை வைத்து பிரதிஷ்டை செய்வித்தார். கும்பாபிஷேகப் பெருவிழாக்களையும் நல்லமுறையில் செய்வித்தார். 1886இல் இவர் சிவபதம் அடைந்தபின் மகன் சேர். பொன். இராமநாதன் ஆலய நிர்வாகப் பொறுப்பை ஏற்றார். இவர் தென்னிந்திய கற்றளிகள் போல இவ்வாலயத்தை அமைக்க விரும்பினார். வெயாங்கொடையிலிருந்து கருங்கற்கள் கொண்டுவரப்பட்டு 1907இல் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. 1912இல் ஆலயம் பூர்த்தியடைந்தது. கும்பாபிஷேகம் நடந்த திகதி தெரியவில்லை.

ஆலய வாசலில் கருங்கற் சிற்ப வேலைகளுடனான 5 தள இராஜகோபுரம் கருங்கற் தூண்கள், கருங்கல் கருவறை, கருங்கல் தேற்தளம் என தென்னிந்திய திராவிட கட்டடக் கலைப் பாணியில் பூரணப்படுத்தப்பட்டது. கிழக்குவாசல் கோபுரப்பகுதியில் உட்புற சுவரில் செப்புத்தகட்டில் பொன்னம்பல முதலியார் செய்வித்த கும்பாபிஷேக விபரங்களும் அவர் சிவபதம் அடைந்தமை பற்றிய குறிப்புகளும் பொறிக்கப்பட்டுள்ளமையை தற்போதும் காணலாம். முதலில் இவ்வாலயத்தை நிர்மாணித்த பெருமைக் குரியவர் என்பதால் அவருடைய நாமம் நிலை பெற வேண்டி அவரது பெயரால் இவ்வாலயம் அழைக்கப்படுகின்றது.

### கலை நிகழ்ச்சிகள்

விசேஷ தினங்களில் ஆன்மிக சொற்பொழிவுகள், இசைக்கச்சேரிகள் நடைபெறுகின்றன.

### ஆலண அறப்பணிகள்

அறநெறி பாடசாலை, வேதாகம பாடசாலை என்பன நடைபெறுகின்றன.

சேர். பொன். இராமநாதனின் நினைவு நாளன்று இரத்மலானை இந்துக்கல்லூரி விடுதியிலுள்ளவர்களுக்கும் வத்தளை ஆன்மிக நிலையத்தவர்களுக்கும் உணவு வழங்கப்படுகிறது.

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்



ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்

98, ஜிந்துப்பிட்டி வீதி

கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

இவ்வாலயம் கொழும்பு ஜிந்துப்பிட்டித் தெருவில் அமைந்துள்ளது. அண்ணளவாக 14 000 சதுர அடி நிலப்பரப்பில் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு மூல மூர்த்தியாக எழுந்தருளி இருப்பவர் ஸ்ரீ வள்ளி தேவசேனா ஸமேத சண்முகப்பெருமான் ஆவார். இவ் ஆலயத்திற்கு இரண்டு கோபுரங்கள் உள்ளன. வெளிவாசலில் 65′ உயரமான கோபுரமும் உள்ளே 30′ உயரமான கோபுரமும் உள்ளன. கோபுரங்கள் வடக்கு நோக்கி உள்ளன. ஆனால் மூலவர் கிழக்கு நோக்கியுள்ளார். உட்பிரகாரத்தில் நர்த்தன கணபதி, தக்ஷணா மூர்த்தி, கன்னி விநாயகர், பழனியாண்டவர், மஹாவிஷ்ணு, சோமாஸ்கந்தர், பிரம்மா, துர்க்கை, நடேசர், ராஜராஜேஸ்வரி, காளி, சுவாமிநாதர், நால்வர், பைரவர் என்போர் வீற்றிருக்கின்றனர்.

வசந்த மண்டபத்தில் ஐம்பொன்னாலான எழுந்தருளி மூர்த்தங்கள் உள்ளன. 36′ உயரமான துவஜஸ் தம்பம் தாமிரத்தாலானது. இதன் முன்னுள்ள பலிபீடத்தில் கருங்கல்லினாலான மயில் வாகனமும் மஹாமண்டபத்தில் வெண்கலத்தாலான மயில்வாகனமும் பலிபீடமும் உள்ளன. மஹோற்சவம் வைகாசி விசாக தினத்தன்று தேர்த்திருவிழா இடம்பெறும் வண்ணம் நடைபெறுகிறது. 11 நாட்கள் நடைபெறும் மஹோற்சவம் திருச்செந்தூர் பத்ததிப்படி நடைபெறுகிறது. மேலும் இரு தீர்த்தங்கள் இக்கோவிலில் நடைபெறுகின்றன. மஹோற்சவத்தின் போதும் கந்தஷஷ்டியின் போதும் தீர்த்தம் ஆடப்படுகின்றது. இந்துக்களின் சகல விழாக்களும் இங்கு நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## பூஜை ஒழுங்கு

6 காலப் பூஜை நடைபெறுகின்றது. திருவனந்தல் 5.30, காலை சந்தி 7.30, உச்சிக் கால பூஜை 11.00 சாயராக்ஷை 5.30, இரண்டாங்காலம் 6.30, அர்த்தஜாமம் இரவு 8.00 மணிக்கும் நடைபெறுகின்றன. விசேஷ தினங்களில் ராகுகால சுமங்கலி பூஜை காலை 10.30 இற்கு நடைபெறும். அர்த்தஜாம பூஜை இரவு 8.30 இற்கு இடம்பெறும். மேலும் மாதாந்த விசேஷ தினங்களில் அபிஷேகங்கள், விசேஷ பூஜைகள், விசேஷ அர்ச்சனைகளும் நடைபெறுகின்றன.

பூஜைகள் பிராமண குருமாரினால் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு உதவியாக உதவிக் குருமாரும் உள்ளனர். நாளாந்த பூஜையில் சுண்டலும் விசேஷ பூஜையில் சர்க்கரைச் சாதம், புளிச்சாதமும் வழங்கப்படுகின்றன. கோவிலுக்கு தீபாராதனைப் பொருட்களும் கைலாச வாகனம் உட்பட 10 வகை வாகனங்களும் உள்ளன.

## திருவிழாக்கள்

மஹோற்சவம் 11 நாட்கள் நடைபெறும் வைகாசி விசாக தினத்தன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தமும் நடைபெறும். தேர்த் திருவிழா வெளிவீதி ஊர்வலம் நிறைவடைந்த பின் சுவாமிக்கு பிராயச்சித்த அபிஷேகம், உச்சிக்கால சிறப்புப் பூஜை, மகேஸ்வர பூஜை, அன்னதானம் என்பன நடைபெறும். உபயகாரர் விபரம் தரப்படவில்லை.

நவராத்திரி, கந்தசஷ்டி, சிவராத்திரி, ஆடிவேல் விழா போன்ற அனைத்து விழாக்களும் இங்கு நடைபெறுகின்றன.

## ஆலய நிர்வாகம்

குலவழி உரிமை மூலம் நிர்வகிக்கப்படுகின்றது. தெட்சிணத்தார் பரம்பரையினர் உரிமையாளர்கள் ஆவர்.

## கோவில் பரிபாலன முகாமை

வி.ரி.வி. தெய்வநாயகம்பிள்ளை
- தர்மகர்த்தா

ஏ.எஸ்.எஸ். சோமசுந்தரம்பிள்ளை
- தலைவர்

நெ. மாணிக்கம்பிள்ளை
- உபதலைவர்

ஜி.எஸ். விஸ்வநாதபிள்ளை
- செயலாளர்

கா. சௌந்தரராஜன்
- பொருளாளர்

கு. சுந்தரம் பிள்ளை

தெ. விரபாகு

ஜெ. செந்தில்பெருமாள்

ஆலயக் குருக்கள்மாருக்கு நிர்வாகத்தினரால் மாதவேதனம் வழங்கப்படுவதுடன் தங்குமிட வசதியும் வழங்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகங்கள்

5 தடவைகள் கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ளது. 1953, 1978, 1996, 2003. இறுதியாக நடைபெற்ற கும்பாபிஷேகம் சித்திரபானு வருடம் தைமாதம் 23ஆம் திகதி (06. 02. 2003) ரேவதி நக்ஷத்திரத்தில் சுக்கிலபக்ஷ பஞ்சமி திதியில் நடைபெற்றது.

## கலை நிகழ்ச்சிகள்

ஆன்மிக சொற்பொழிவுகள், நவராத்திரி கலை நிகழ்வுகள், பக்திப்பாடல், பஜனை போன்றன நடைபெறுகின்றன.

## ஆலய அறப்பணிகள்


அறநெறிப் பாடசாலை நடைபெறுகின்றது.

## கோவில் வரலாறு

தென்னிந்திய திருநெல்வேலி மாவட்டம் திருச்செந்தூரை பூர்விகமாகக் கொண்ட சிந்து பாடிகள் என்ற இனத்தவரால் இவ் ஆலயம் அமைக்கப்பட்டதாக நம்பப்படுகின்றது. சிந்து பாடிகள் கிராமம் என அழைக்கப்பட்ட இடமே ஜிந்துப்பிட்டி எனத் தற்போது வழங்கப் படுவதாகவும் கூறப்படுகின்றது. இவ்வினம் பின்னர் அருகிவிடவே திருச்செந்தூரை பூர்விகமாகக் கொண்ட தெட்சிணவேளாளர் சமூக மரபினர் கோவில் பொறுப்பை ஏற்று நடத்தியதாக கோவில் வரலாறு கூறுகின்றது.

முருகனின் ஆறுபடை வீடுகளுள் ஒன்றான திருச்செந்தூர் மூர்த்தியையே முதன்மையாகக்கொண்ட இக்கோவிலின் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள திருமுருகனின் மூர்த்தமும் திருச்செந்தூரிலிருந்தே கொண்டு வரப்பட்டதாகும். தெட்சணத்து வேளாளர் மகிமை பரிபாலன சங்கம் தற்போது இக் கோவிலை நிர்வகித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்



*ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி தேவஸ்தானம்*

*109, பண்டாரநாயக்க மாவத்தை*

*கொழும்பு - 12*

## ஆலய அமைப்பு

கொழும்பு பண்டாரநாயக்க மாவத்தையில் சுமார் 10 பேர்ச் பரப்பளவில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. இங்கு மூல மூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலிப்பவர் வள்ளி தெய்வானை ஸமேத சிவசுப்பிரமணியர் ஆவார். இடமிருந்து வலமாக அமைந்துள்ள மூர்த்திகள் விநாயகர், வள்ளி தெய்வானை ஸமேத திருமுருகன், பழனியாண்டவர், மாரியம்மன், ஸ்ரீதேவி பூமாதேவி ஸமேத மஹாவிஷ்ணு, ஆஞ்சநேயர், ஷண்முகப் பெருமான், தட்சணாமூர்த்தி, நடேசர், சனீஸ்வரன், நவக்ஹிரக நாயகர், துர்க்கையம்மாள் ஆவர்.

வசந்த மண்டபம் உள்ளது. எழுந்தருளி விக்கிரகங்கள் ஐம்பொன்னால் வார்க்கப்பட்டவை. துவஜஸ்தம்பம் உள்ளது. மஹோற்சவம் வைகாசி விசாகத்தை நிறைவு நாளாகக் கொண்டு பதினொரு நாட்கள் நடைபெறும். பலிபீடமும் உண்டு.

## பூஜை ஒழுங்கு

நாளாந்தம் மூன்றுகால பூஜைகள் நடைபெறுகின்றன. (காலை 7.00, மு.ப. 10.30, மாலை 6.00) வெள்ளி, செவ்வாய்க்கிழமைகளில் விசேஷ அலங்காரப் பூஜைகள் நிகழும்.

அத்துடன் மாதச் சிறப்பு நாட்களான தைப்பூசம், மாசிமகம், ஆடிப்பூரம், கார்த்திகைத் தீபம் விசேஷ அபிஷேக வழிபாடுகளுடன் இடம்பெறும். நவராத்திரி, சூரசம்ஹாரம், பட்டாபிஷேகம், தெய்வானை திருக்கல்யாணம், வள்ளி திருக்கல்யாணம் திரு ஊஞ்சல் என்னும் விழாக்களும் கொண்டாடப் படுகின்றன.

பூஜை செய்வதற்கு பிரதான சிவாச்சாரியார் அவருக்கு உதவியாக அந்தணர்களும் பலவேலைகாரர்களும் நியமிக்கப்பட்டு உள்ளனர்.

நாளாந்த பூஜையில் பொங்கலும் விசேஷ பூஜைகளில் சர்க்கரைப் பொங்கல், கடலை, வடை, புளியோதரை என்பன நிவேதிக்கப்படுகின்றன.

ஆலயத்திற்கான பூஜைப் பொருட்கள், சோடஷோபசாரம் உட்பட அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆலயத்தின் மஹோற்சவம் வைகாசி மாதம் நடைபெறும். வைகாசி விசாகத்திற்கு முந்திய பத்து நாட்களும் திருவிழா நடைபெற்று வைகாசி விசாகத்தில் நிறைவடையும். பதினொரு நாட்களும் ஸ்நபனாபிஷேகம், படிக்கட்டு பூஜை, சகஸ்ரநாம பூஜை என்பன நடாத்தப்படும். தேர்பவனியில் மூன்று தேர்களில் விநாயகர், சிவசுப்பிரமணியர், ஆறுமுக நாதரும் திருவீதி உலா வருவர்.

## மஹோற்சவ உபயகாரர்கள்

திரு. வடிவழகன் செட்டியார் குடும்பம்
திரு. ஜீவானந்தராஜா குடும்பம்
m/s மஸ்கன்ஸ் லிமிடெட், ஆமர்வீதி கொ-12.
திரு. க. ரவீந்திரன் குடும்பம்
திரு. பிரணவஜோதி குடும்பம்
திரு. R. வைத்திமாநிதி குடும்பம்

மஹோற்சவம் தவிர்ந்த தைப்பூசம், மாசிமகம், தைப்பொங்கல், வருடப்பிறப்பு, கந்தசஷ்டி, நவராத்திரி, கார்த்திகைத் தீபம் என்பனவும் சிறப்பாகக் கொண்டாடப்படும்.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய நிர்வாகம் குலவழி உரிமையால் தொடர்ந்து வருகின்றது.

## தற்போதுள்ள கோவில் பரிபாலன முகாமை

தலைவர் : திரு சதாசிவ செட்டியார்
(வர்த்தகர் வயது - 60)
திரு. சிற்றம்பல செட்டியார்
(வர்த்தகர்)
திரு. வரதராஜன் செட்டியார்
(வர்த்தகர்)

ஆலயத்தின் அறங்காவலர் சபையினருடன் முகாமையாளர் ஒருவரும் கணக்காளர்

ஒருவரும் முகாமை பணிகளுக்கு உதவுகின்றனர். ஆலய பூசகருக்கு மாதவேதனம் வழங்கப்படுவதுடன் குடியிருக்க ஒரு வீடும் முகாமையால் வழங்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகங்கள்

i. *1995ஆம் ஆண்டு*

ii. *1999ஆம் ஆண்டு*

நக்ஷத்திரம், நாள், திதி போன்ற விபரங்கள் இல்லை.

## கோயில் வரலாறு

இலங்கையில் வர்த்தகம் (எண்ணெய்) செய்து வந்த திருவிளங்க நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த திரு. பிச்சையப்பன் செட்டியார் அவர்களின் கனவில் முருகப் பெருமான் தனக்கு ஒரு ஆலயம் அமைக்குமாறு கேட்டு மறைந்தார். அதன் பின்னர் பிச்சையப்பன் செட்டியார் இவ்வாலயத்தை அமைத்ததாகக் கூறுகின்றனர். 150 வருடங்கள் பழமை வாய்ந்ததாகக் கூறப்படும். இவ்வாலயம் பற்றிய தெளிவான மேலதிகமான தகவல்களைப் பெறமுடியாது உள்ளமை மிகப்பெரும் குறைபாடாகும்.

## கலை நிகழ்ச்சிகள்

சொற்பொழிவுகள் விசேஷ தினங்களில் பஜனை என்பன இடம்பெறும்.

## ஆலய அறப்பணிகள்

அறநெறிப் பாடசாலை நடத்தப்படுகிறது. இவ்வாசிரியர்களுக்கான வேதனத்தை அறங்காவலர்கள் வழங்குகின்றனர்.

# தெஹிவளை வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில்



தெஹிவளை வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு கோவில்
தெஹிவளை

## ஆலய அமைப்பு

கொழும்பின் பெரும்பாக பகுதியின் தெஹிவளை என்னும் இடத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இவ்வாலயம் சுமார் ஒரு ஏக்கர் விஸ்தீரமான பரப்பில் அமைந்துள்ளது. இங்கு மூலமூர்த்தியாக எழுந்து அருள்பாலிப்பவர் ஸ்ரீ வெங்கடேச மஹாவிஷ்ணு ஆவார். ஒரு பிரகாரம் மட்டுமுள்ள கோயிலின் கிழக்கு முகவாயிலின் முன்னால் சனீஸ்வரன், ஆஞ்சநேயர், சந்தான கோபாலர் தெற்கில் நவக்கிரஹ நாயகர்கள், தென்மேற்கில் இராம லட்சுமணர் வடமேற்கில் அனந்தசயன மூர்த்தி, வடக்கில் நாகதம்பிரான், காளி, துர்க்கை, வைணவ துர்க்கை, சிவன் அம்பாள் தனிதனி சந்நிதிகளில் அமர்ந்துள்ளனர்.

வசந்த மண்டபம் உள்ளது. எழுந்தருளி விக்கிரகங்கள் அமைந்துள்ளன. துவஜஸ் தம்பம் உள்ளது. பலிபீடம் உள்ளது. கருடாழ்வார் காட்சி அளிக்கின்றார். ஈசான மூலையில் பகவத்கீதை காட்சி வடிவமைக்கப்பட்டு உள்ளமை விசேடமாகும்.

## பூஜை ஒழுங்கு

நாள்தோறும் ஆறுகால பூஜைகள் சிவாச்சாரியார் செய்கின்றார். ஞாயிறு விசேஷ பூஜைகளும் ஆவணி ஞாயிறு அன்று விசேஷ அபிஷேக ஆராதனைகள் இடம்பெறும்.

மாத விசேஷங்களான ஸ்ரீராம நவமி, ஏகாதசி, துவாதசி தீர்த்தம், ஆனி உத்தரம், ஆடிப்பூரம், புரட்டாதி சனி, ஆவணி ஞாயிறு, கிருஷ்ண ஜயந்தி என்பனவற்றின் போது விசேஷ பூஜைகள் அபிஷேகங்கள் நடைபெறுகின்றன.

பூஜை செய்வதற்கு சிவாச்சாரியார்களும் அவர்களுக்கு உதவியாக அந்தணர்களும் பலவேலைகாரர்களும் பணிபுரிகின்றனர்.

நாளாந்த பூஜையில் புளியோதரை, சர்க்கரைப் பொங்கல், அவல், கடலை என்பன நிவேதிக்கப்படுகின்றன. விசேஷ பூஜைகளின் போது அன்னதானம் நடைபெறும்.

ஆலயத்திற்கான சோடஷோபசாரப் பொருட்கள் அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

திருவிழாக்கள் பற்றிய விபரங்கள் தரப்படவில்லை.

## வருடாபிஷேக உபயகாரர்கள்

விபரங்கள் எதுவும் தரப்படவில்லை.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலயம் குலப்பரம்பரை நெறிமுறையில் தெரிந்தெடுக்கப்படுகிறது.

## தற்பொழுதுள்ள கோவில் பரிபாலன முகாமை

தரவுகள் தரப்படவில்லை.

## கும்பாபிஷேகங்கள்

தரவுகள் தரப்படவில்லை.

## ஆலய வரலாறு

இக்கோவிலின் தொன்மை 18ஆம் நூற்றாண்டுவரை எட்டுவதாகக் கூறப்படுகிறது. 1829-1891 காலப்பகுதியில் சுவாமி தீரன் என்பவர் ஆலயத்தை பராமரித்ததாக அறிய முடிகிறது. அவருக்குப் பின் அவரது சந்ததி வழி வந்தவர்கள் ஆலயத்தை பராமரித்தனர். இக்கோவிலின் திருப்பணியில் லேடி அருணாச்சலம், பீ. எஸ். சேனநாயக்கா போன்ற பிரபலமான நபர்கள் பலரும் பல உதவிகளை நல்கியுள்ளனர். இவர்களுடன் பல அன்பர்களின் ஆக்கபூர்வமான பணிகளாலும் கோவில் புகழ்பெற்று விளங்கியது. 1971ஆம் ஆண்டில் திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்களின் சொந்தச்செலவில் மூலஸ்தான வெளிப்புறத்தை அமைத்தார். பின்னாளில் வந்து குவிந்த நன்கொடைகளால் இவ் ஆலயம் பெருவளர்ச்சி கண்டு சிறப்புற்று விளங்குகிறது.

## கலை நிகழ்ச்சிகள்


தரவுகள் இல்லை.

## ஆலய அறப்பணிகள்

ஞாயிறு தோறும் அடியார்களுக்கு அன்ன தானம் வழங்குதல்.

வெளிமாவட்டங்களில் இருந்து கல்விக்காக கொழும்பிற்கு வரும் மாணவர்களுக்கு தங்குமிட வசதிகளை செய்து கொடுத்தல்.

# ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்



ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம்
105, கொட்டாஞ்சேனை
கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு கொட்டாஞ்சேனை 105ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயம். 73 சதுரஅடி விஸ்தீரணப் பரப்பில் 14½' × 7½' கொண்ட செவ்வக அமைப்புக்கொண்ட கருவறையில் கிழக்கு நோக்கிய வண்ணம் ஸ்ரீ வரதராஜ விநாயகர் அமர்ந்து அடியார்களுக்கு அருள் வழங்கிக் கொண்டிருக்கின்றார். மூஷிகம், பலிபீடம் காணப்படுகின்றன.

மூன்று தளங்கள் கொண்ட 42 அடி உயர மான வண்ணமிகு இராஜகோபுரம் அடியார் களுக்குத் தொலைவிலிருந்தே காணக்கூடிய ஸ்தூல லிங்கமாகக் காட்சியளிக்கின்றது.

ஆலயத்தினை வலமாகவந்தால் விநாயகர், மனோன்மணி அம்பாள், வள்ளி தெய்வானை, முருகன், பஞ்சமுக விநாயகர், நடராஜர், அம்பாள், நாயன்மார், அரசமர விநாயகர், ஆதிகால விநாயகர், நாகதம்பிரான், பைரவர் காட்சி வழங்குகின்றனர்.

அர்த்தமண்டப நுழைவாயிலில் சின்னஞ் சிறிய சந்நிதிகளில் சிவலிங்கமும் வடக்கில் கற்பகாம்பிகையும் மூலஸ்தானத்தில் ஸ்ரீவரதராஜ விநாயகரும் தெய்வீகக் காட்சியை வழங்கிக் கொண்டிருக்கின்றனர். சமயகுரவர் நால்வரும் காணப்படுகின்றனர்.

சுவரில் விநாயகர் அகவல் எழுதப்பெற்று வருபவர்களை ஒரு கணநேரமாவது நிற்க வைத்து வாசிக்கத் தூண்டுகின்றது. வடகிழக் கில் நான்கு படிகள் ஏறி கிழக்கு நோக்கிச் சென்று வடக்கே திரும்பினால் பெரியதோர் அரசமரம் காற்றின் சலசலப்பில் இலைகள் காசாகக் குலுங்க தண்மையுடன் நம்மை வரவேற்கின்றது. இம்மரம் வரலாற்றுப் பெருமைமிக்கது. இவ்வாலய வழிபாட்டின் ஆரம்பமே இவ்வரசின் அடியில்தான் தொடங் கியது. பக்தர்கள் ஒரு சிறு கருங்கல் விநாய கரை வடபுறமாக அமைத்து வழிபாடாற்றி உள்ளனர். கருங்கல்லினாலான நாகதம் பிரானும் இவர்களுக்கு தீபமேற்ற கருங்கல் விளக்கொன்றையும் நாம் காணுகின்றோம்.

எவர்சில்வர் தகடுகளால் அலங்கரிக்கப் பெற்ற வசந்த மண்டபமும் இருக்கின்றது.

எழுந்தருளி மூர்த்தங்களாக விநாயகர், மனோன்மணி, முருகன், நடராஜர், பஞ்சமுக விநாயகர் அமைந்திருக்கின்றனர். ஆலய உபயோகத்திற்கென 60 அடி ஆழத்தில் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டுள்ளது.

இதனைத் தவிர ஆலயத்தின் பக்கலில் பின்புறமாக ஐங்கரன் மண்டபம் அழகிய முறையில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்ட பத்தில் திருமணம், சமய சொற்பொழிவுகள், யோகாசன வகுப்பு, தியான வகுப்பு, மாதந் தோறும் முதல் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை சாயிபஜனை ஆகியன நடைபெறு கின்றன. மண்டபத்தில் முதல்மாடி, 2ஆம் மாடி, விடுதிகள் ஆகியவை உள்ளன. 2ஆம் மாடியில் ஒரு மண்டபம், 3 அறைகள், சமைய லறை என்பன குருக்களின் விடுதியாகவும் மறுபகுதி 2 அறை, ஒரு மண்டபம் என்பன விருந்தினர் தங்குமிடமாகவும் பயன்படு கின்றன. சொற்பொழிவுக்காகவும் கோவில் விசேஷ தினங்களில் விசேஷ பூஜைக்காகவும் இந்தியாவிலிருந்து வருபவர்கள் தங்குவதற் குப் பயன்படுகிறது.

கோவிலுக்குப் பின்னாலுள்ள விடுதியில் ஒரு ஸ்டோர் உள்ளது. 2 உதவிக்குருக்கள் குடும்பம், நாதஸ்வர மேளகாரர் என்போரும் விடுதியில் தங்கியுள்ளனர். பலவேலைகாரர் 2 பேருக்கும் விடுதி வழங்கப்பட்டுள்ளது. ஆலயத்தில் பெரிய வெண்கலமணி உள்ளது.

## பூஜை ஒழுங்கு

நாள்தோறும் ஐந்துகால பூஜைகள் முறைப்படி நடைபெறுகின்றன. காலை 5.30 இற்குத் திருவனந்தல், 6.30 இற்கு காலைசந்தி, 10.30இற்கு உச்சிக்காலம், 5.30 இற்கு சாயரக்ஷை இரவு 8.00 மணிக்கு அர்த்தஜாமம்.

வெள்ளிக்கிழமை போன்ற சிறப்பு நாட் களில் உச்சிக்காலபூஜை 12.00 மணிக்கும் அர்த்தஜாமம் 8.30 இற்கும் நடைபெறும்.

அந்தண சிவாச்சாரியார், உதவிக் குருமார் ஆகியோர் பூஜைக்கும் மடைப்பள்ளியில் பிரசாதம் தயாரிக்க அந்தணரும் மற்றும் கோவிற் பணிகளுக்கு ஊழியர்களும் தொண்டர் களும் உள்ளனர்.

பூஜைகள் சிவாகம முறைப்படியே நடை பெறுகின்றன. விசேஷ பூஜை காலங்களில் பொங்கல், கடலை, நிவேதனம் செய்து பொதுமக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

ஸ்நபனாபிஷேகம், சங்காபிஷேகம், சஹஸ்ரநாம அர்ச்சனை விசேஷ பூஜை களும் நடைபெறுகின்றன.

பூஜைக்குரிய அனைத்து உபகரணங்களும் உள்ளன. வதிவிட அடிப்படையிலும் பொது மக்களும் வழிபாடு செய்கின்றனர். பக்தர் களின் விருப்பப்படி நெய் விளக்கேற்றல், பழத் தட்டு, அர்ச்சனை, பால் அபிஷேகம் போன்றவைகளும் நேர்த்தி அடிப்படையில் நிகழ்கின்றன.

அர்ச்சகருக்கு மாதவேதனம், விடுதி, தீபாவளியையொட்டி ஒரு மாதச் சம்பளம் வழங்கப்படுகின்றது.

## திருவிழாக்கள்

ஆவணிமாத விநாயக சதுர்த்தி மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அலங்கரிக்கப்பெற்ற கட்டுத்தேரில் கொட்டாஞ்சேனை வீதிகளில் பஞ்சமுக ஸ்ரீ வரதராஜ விநாயகர் திருவுலாக்காட்சி அருள்வார்.

நவராத்திரி, பிள்ளையார்கதை 21 நாட்கள் படிக்கப்படும். விநாயக ஷஷ்டியும் கந்தசஷ்டி ஆறுநாட்கள் உற்சவம் நடந்து ஏழாம்நாள் திருக்கல்யாணமும் நடைபெறும். நவராத்திரி ஒன்பது நாள், 10ஆம் நாள் ஏடு தொடக்கப் படும்.

நவராத்திரியை அடுத்து வரும் பௌர்ணமி யில் திருவிளக்குப் பூஜை நிகழும்.

மூஷிகம், மயில் உள்வீதி வலம்வர சிறியதேரும் சங்கு அபிஷேக கலசங்களை வைப்பதற்குக் கேடகமும் உள்ளது.

மாத சதுர்த்தி போன்ற உற்சவங்களும் நிகழும். ஆலய அறங்காவலர்களே ஆவணி சதுர்த்தி விழாவின் உபயகாரர்களாவர்.

## ஆலய நிர்வாகம்

அறங்காவலர் சபை மூலமாக நிரந்தரமாக மூன்று பேர் பொறுப்பேற்று நடத்துகின்றனர்.

திரு. தெ. ஈஸ்வரன், திரு. பொ. பாலசுந்தரம், திரு. தெ. வீரபாகு ஆகிய மூவரும் அறங்காவல ராவர்.

ஆலய நிர்வாகத்திற்கும் அர்ச்சகர்களுக்கு மிடையிலான நல்லுறவு நல்ல நிலையில் உள்ளது. அறங்காவலர்கள், முகாமையாளர், அர்ச்சகர்கள், வழிபடுவோர் இணைந்து சிறந்த முறையில் ஆலய நிர்வாகம் இனிதாக நடக்கத் துணைபுரிகின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

திராவிடச் சிற்பக்கலை மரபு வகையில் அமைக்கப்பட்டுள்ள இவ்வாலயத்தில் 1962 (09. 06. 1962), 1988 (27. 11. 1988), 2000 (11. 06. 2000) மூன்று முறைகள் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றிருக்கின்றன.

## கலை நிகழ்வுகள்

சொற்பொழிவுகள், பட்டிமன்றம், பஜனை, அறநெறிப்பாடசாலை, மாணவர்களின் நடனம், பாடல் போன்ற கலை நிகழ்வுகள் இடம்பெறும்.

இந்தியாவிலிருந்து வரும் சமயப் பெரியோர்களைக் கொண்டு ஆன்மிக உரைகள் இடம்பெறும். செல்வி. இரா. ருக்மணி (மஹாபாரதம்) தொடர் சொற்பொழிவு, பேராசிரியர் இரா. செல்வகணபதி போன்றவர் களின் சொற்பொழிவுகள் நடைபெறுவதுண்டு. 2000ஆம் ஆண்டு கும்பாபிஷேக மலர் வெளியீடு நடைபெற்றது.

## ஆலய அறப்பணிகள்

வன்னியிலுள்ள அகதிகளுக்கு உடை, உலர்உணவு, அறநெறிப்பாடசாலையினை நடத்துதல், மாணவர்களின் பண்ணிசையை மேம்படுத்த தமிழ்நாட்டிலிருந்து திருமதி. சுப்புலட்சுமி மோகன் அவர்களை வரவழைத்துத் திருமுறைப் பண்ணிசையைக் கற்பித்தல் போன்றவைகளும் புலமைப்பரிசில் நிதி ரூ 1000/= வீதம் கொடுக்கப்படுகின்றது. புத்தகம் வாங்க சிறுதொகையும் வழங்கப்படுகின்றது.

## ஆலய வரலாறு

கொட்டாஞ்சேனை வீதியிலிருந்து வாசல வீதி பிரிந்து செல்லும் சந்திக்கு வடக்கில், சுமார் ஐம்பது மீற்றர் தொலைவில், வீதியின் மேற்கில் குளிர் நிழலைத் தந்து நிற்கும் பென்னம்பெரிய அரச மரத்துடனுள்ளது தான் கொட்டாஞ்சேனை அருள்மிகு ஸ்ரீ வரதராஜ விநாயகர் ஆலயமாகும்.

இந்த ஆலயத்தின் தோற்ற காலத்தையோ, பரிபாலனம் பற்றிய நிறைவான செய்திகளையோ இன்று பெறக்கூடிய வாய்ப்புக்கள் பெரியளவிற்கு இல்லையென்றுதான் சொல்லவேண்டி இருக்கிறது. எமக்குக் கிடைத்த தகவல்களின் அடிப்படையில், எதிர் காலத்தில், ஆய்வுக் கட்டுரைகளைத் தயாரித்துச் சமர்ப்பிக்கவுள்ள பல்கலைக்கழக இந்து நாகரிகத் துறைசார் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய தரவுகளை மட்டும் இங்கு தந்துள்ளோம்.

ஆதியில் இங்குள்ள அரச மரத்தடியில் வழிபாடு நடந்திருக்கின்றதென்று தெரிகின்றது. அந்த வழிபாட்டுத் தொடர்பில் கருங்கல்லிற் செதுக்கப்பட்டதொரு விநாயகரும் வழிபாட்டிற்குரியவராகி இருந்திருக்கின்றார். விநாயகருடன் (கருங்கல்) நாகதம்பிரானும் இருந்திருக்கின்றார். அத்துடன் எண்ணெய் விட்டுத் திரிபோட்டுத் தீபமேற்றக்கூடியதொரு கருங்கல் விளக்கமைப்பும் இருந்திருக்கிறது. அந்தக் கருங்கற் சுடர் தாங்கியிலே "கஅளசு" என்னும் தமிழ் எண்குறியீடு உண்டு என்றும் அது 1876 ஆம் ஆண்டைக் குறிப்பது என்றும் ஒரு கருத்து கிடைத்ததும் உண்டு. இந்தச் சிறிய பழமைவாய்ந்த பிள்ளையாருடன் 1890 என்றோ 1876 என்றோ ஆண்டினை சொல்லிக் கொண்டிருக்கும் அந்தத் தீப அமைப்பு இருந்த காரணத்தால் இந்த இடத்தில் விநாயகர் வழிபாடு 1890இற்கு முன்பிருந்தே இருந்திருக்கிறதென்று துணிய முடிகின்றது. இக்கருத்தை உறுதிசெய்யக்கூடிய தக்க சான்றாக அந்த தீப அமைப்பு இன்றும் இருந்து கொண்டிருக்கிறது.

அரச மரத்தடி தெய்வீகத்தை வழிபடும் நோக்கில் இன்றுள்ள படிகளில் ஏறி மரத்தை நோக்கி திரும்பியதும் அடியார்கள் தத்தம் சொந்தக் கரங்களினால் நீர் பெய்து அபிஷேகம் செய்யும் - நீரில் ஒரு பகுதி மறைந்த நிலையில் இருக்கும் - (கருங்கல்) விநாயகரை அந்தக்கால வழிபாட்டிற்குரியவராய் இருந்த வரதராஜ விநாயகர் ஆவார். அவர் பக்கலில் (பக்கத்தில்) அன்றிருந்த நாக தம்பிரானையும் பார்க்க முடிகின்றது. பிள்ளையாரின் பின்னே இருப்பதுதான் காலம் பற்றியதொரு தகவலைத் தந்து கொண்டிருக்கும் கருங்கற் கழி ஆகும். இவை இந்த ஆலயத்தின் பழம்பெரும் நிதியங்கள் என்பதை எம் மனதிற் பதித்துக்கொள்ளவேண்டும்.

இந்த ஆலயம் எல்லாள மன்னன் காலத்திற்கு முந்தியது என்றும் போர்த்துக்கீசர் காலத்தில் அவர்களது இராணுவ வீரர்கள் இந்த ஆலயத்தை பதுங்கிச் சரணடைந்திருக்கும் இடமாகப் பயன்படுத்தினார்கள் என்றும் ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் தங்களுக்குத் தேவையானவற்றை சுருட்டிக்கொண்டு ஆலயத்தை அழித்துவிட்டார்கள் என்றும் கருத்துக்கள் உண்டு. இவையெல்லாம் ஆய்விற்குரியவை.

ஒரு காலத்தில் அரச மரத்தின் வடக்கில் மரத்தடியில் நடைபெற்ற வழிபாடு, மற்றொரு

காலப்பகுதியில் அரச மரத்தின் தென்மேற்கில் மரத்திற்கு அண்மையாக நடைபெற்றிருக் கிறது. நாகதம்பிரானும் உடனாகி இருந்திருக் கிறார். இந்த வகை மாற்றம் நிகழ்ந்த காலம் எது என்பதுந் தெரியவில்லை.

முதலாவது உலக மகாயுத்தம் ஆரம்ப மாகி இருந்ததில் கொட்டாஞ்சேனை ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயச் சிவாச்சாரியார் களது இன்றைய வதிவிடமாயமைந்துள்ள அன்றைய அரசடி இடுகாட்டுப் பகுதியில் 1913இல் ஓர் இராணுவ முகாம் அமைக்கப் பட்டிருந்தது. ஆங்கிலேயர் ஆட்சிக் கால மாகிய அந்த நேரத்தில் ஆங்கிலேயர் ஆட்சிக்குட்பட்டிருந்த பல நாடுகளைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் குறிப்பிட்ட அந்த முகாமில் இருந்திருக்கிறார்கள். வட இந்தியாவைச் சேர்ந்த சண்முகர்ஜீ பட்டேல் என்பவர் அந்த முகாமில் தலைமையை ஏற்றுப் பணிபுரிந்து கொண்டிருந்தார். அவர் விநாயகர் வழிபாட்டில் மிகுந்த ஈடுபாடு உடையவர். அதனால் அரச மரத்தடியை இடமாகக் கொண்டிருந்த வரதராஜ விநாயகரை தரிசித்து வழிபடும் முறைமை அவருடையதாயிற்று. இவ் வண்ணந் தொடர்ந்து வந்திருந்த முறைமை யால் விநாயக வழிபாட்டிடத்திற்கு அருகாமை யில் இருந்த வில்லவராஜா என்பவருடன் அவர் தொடர்பு நெருக்கமாகியது. அத் தொடர் பினால் சண்முகர்ஜீ பட்டேல் வில்லவராஜா வின் மகளைத் திருமணம் செய்துகொண்டார். இந்தத் திருமணத் தொடர்பு சண்முகர்ஜீ பட்டேலுக்கு விநாயகருடனான தொடர்பை மேலும் வலுவடையச் செய்தது. அரச மரத்தின் தென்மேற்கில் பிள்ளையாருக்கென ஒரு ஆலயம் உருவாகியது. சுவர்களுடன் கூடியதும் தகரத்தால் வேயப்பட்டதுமாகிய அந்த அமைப்பில் 1917 ஆவணியில் விநாய கரை பிரதிஷ்டை செய்து வழிபடும் முறை மையை சண்முகர்ஜீ பட்டேல் உருவாக் கினார். ஆலயத்தை வலம் வந்து வழிபடக் கூடிய வகை ஒரு சிறிய பிரகாரமும் இருந்திருக்கிறது. இப்போது ஓம குண்டம் அமைந்துள்ள இடத்திற்கு மேற்காக இப்போதுள்ள பலிபீடத்தை ஒட்டினாற்போல் கருவறை அமைந்திருந்தது. மண்டபத்தின் வடக்குச் சுவரில் தெற்கு நோக்கி பழனி ஆண்டவர் இருந்துள்ளார். பழனி ஆண்ட வருக்கு கிழக்கில் ஒரு வேல் இருந்திருக்கிறது.

இந்தக் காலகட்டத்தில் பிக்கரிங்ஸ் வீதியில் பஞ்சலோக வேலை செய்யும் ஆச்சாரியார்கள் வாழ்ந்து கொண்டிருந்தனர். காலப்போக்கில் அவர்கள் வரதராஜ விநாயகருடன் ஈடுபாடுடையவராயினர். 1912இல் சண்முகர்ஜீ பட்டேல் நாட்டை விட்டுப் போக நேர்ந்தபோது தமக்கு உதவியாளராகவிருந்தவரும் பஞ்சலோக ஆச்சாரியார் சமூகத்தைச் சேர்ந்தவருமான இராமகிருஷ்ணன் என்பவரிடம் ஆலயக் கவனிப்பை ஒப்படைத்துச் சென்றார்.

இரண்டாவது உலக மஹாயுத்த நெருக்கடி களுடன் பிக்கரிங்ஸ் வீதி பஞ்சலோக வேலை ஆச்சாரியார் 1943 இல் இடம்பெயர்ந்தார். அதனால் விநாயகராலய பரிபாலனம் சில ஆண்டுகள் கவனிப்பற்றிருந்தது. இந்த இடைக் காலத்தில் வழிபடுவோர் தத்தம் விருப்பிற் கேற்பத்தாமே வேண்டியவற்றைச் செய்து கொண்டனர். 1944. 08. 27 இல் தாரண வருடம் ஆனி மாதம் 6 ஆம் திகதி திங்களன்று எழுந்தருளி விநாயகர் உபகரிக்கப்பட்டுள்ளது. வழிபாட்டு முறைமையை ஓர் ஒழுங்கிற்குக் கொண்டுவர விரும்பிய திருமதி சொர்ணம்மா சுப்பிரமணியம் அவர்கள் அர்ச்சகர் ஒருவரை யும் நியமனம் செய்து பூஜை முறைமையை யும் ஒழுங்காக்கினார். 1951இல் இருந்து பரிபாலகர்கள் அறங்காவலர்கள் என்ற முறைமை நடைமுறைக்கு வந்தது. 1952இல் இன்றுள்ள சிவஸ்ரீ நடராச சோமஸ்கந்தக் குருக்கள் பூஜை நடைமுறையினைப் பொறுப் பேற்றுக் கொண்டார்கள். அன்றிலிருந்து சில சில வேளைகளில் சிறுசிறுத் தளர்வு கண்ட போதும் நியாயமான அளவிற்கு நல்ல

வண்ணம் நடைபெறுகிறதென்றுதான் சொல்ல வேண்டும்.

1961 – 1962 காலப்பகுதியில் சுவாமி பாலஸ் தாபனம் செய்யப்பட்டுக் கட்டிடம் புனருத் தாரணம் செய்யப்பட்டது. கருவறை இப்போதுள்ள இடத்திற்குச் சென்றது. வசந்த மண்டபமும் இப்போதுள்ள இடத்திற்கு தகரக் கொட்டகையாகிச் சென்றது. வசந்த மண்ட பத்தின் வடமேற்கில் இருந்து கருவறையின் பின்புறமான வடமேற்கைத் தொடும்படி மூலைப் பக்கமாக ஒரு சுவர் அமைக்கப் பட்டது. அந்தச் சுவருக்கும் அந்த வசந்த மண்டபம் மேற்குச் சுவருக்கும் இடைப்பட்ட முக்கோண அமைப்பான பகுதியே யாகசாலையாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த வகையான வேலைகள் செய்யப்பட்டு ஆலயத்தின் முதலாவது மஹாகும்பாபி ஷேகம் 1962. 07. 10 ஆனி அத்த நக்ஷத்திரத் தில் பிரதிஷ்டா சிரோன்மணி நவாலியூர் பிரம்மஸ்ரீ. சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமை தாங்கிய சிவாச்சாரியார்களால் நிறைவு செய்யப்பட்டது. 1962. 08. 24 இல் மண்டலாபிஷேகம் நிறைவாகியது.


1963 ஆனியில் வள்ளி தேவசேனா உடனாகிய முருகன் எழுந்தருளி உபகரிக்கப் பட்டது. 1964 ஆனியில் சிவகாமசுந்தரி ஸமேத நடராசர் மணிவாசகருடன் உபகரிப்பாகியது. ஆலயத்திற்கென புதிய இரதம் ஒன்று செய்விக்கும் முயற்சி 1965 ஆனியில் ஆரம்ப மாகி 1967 ஆனியில் வெள்ளோட்டம் கண்டது. 1967 ஆனி வருஷாபிஷேகத்தின்போது ஸ்ரீ வரதராஜ விநாயகர் முதன்முறையாகச் சித்திரத்தேர் வீதியுலாவந்த கண்கொள்ளாக் காட்சியைக் கண்டோம்.

பஞ்சமுக விநாயகர் நூதனப் பிரதிஷ்டா கும்பாபிஷேகம் 1972 இல் சிவஸ்ரீ நா. சோமஸ் கந்தக் குருக்கள் அவர்களாலே நிறைவு செய்யப்பட்டது. சிவலிங்கம் கற்பகாம்பிகை எழுந்தருளி விநாயகர் ஒருவர் 1988 இல் உபகரிப்பாயினர்.

மீண்டும் புனரமைப்பு வேலைகள் நடந்தன. முக்கோண அமைப்பிற்கு அப்பாற்பட்டிருந்த நிலம் பெறப்பட்டு அந்தப்பகுதி வீதியுடன் ஆக்கப்பட்டு அந்தப் பகுதிக்கு மேற்காக யாகசாலை அமைக்கப்பட்டது. இப்போது அலுவலகம் இயங்கிக் கொண்டிருக்கும் கிழக்கு மேற்கான நிலப்பகுதியும் – முன்னைய ஆலயத்தின் தென்பகுதி – பெறப்பட்டுக் கட்டிடம் இன்றைய நிலைக்கு விஸ்தரிக்கப் பட்டது. அந்தப் பகுதியின் மேற்கே களஞ்சிய அறை அமைக்கப்பட்டது. இந்த வேலைகள் நிறைவு காண்பதற்காக சுவாமி பாலஸ் தாபனம் செய்யப்பட்டு திருப்பணி தொடர்ந் தது. 1988 நவம்பர் 27 கார்த்திகைப் புனர்பூச நக்ஷத்திரத்தில் பிரதிஷ்டா சிரோன்மணி நவாலியூர் சிவஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் அமைந்த சிவாச்சாரியார் களால் இரண்டாவது மஹாகும்பாபிஷேகமும் நிறைவாக்கப்பட்டது.

ஆலயத்தின் மேற்காக உள்ள நிலம் கொள்வனவு செய்யப்பட்டு அழகிய மூன்று அடுக்குக் கட்டிடம் ஒன்று அமைக்கப்பட்டு ஐங்கரன் மண்டபம் எனப் பெயர் சூட்டப்பட்டு 1995. 01. 19 இல் திறந்து வைக்கப்பட்டது. திருமணம் முதலான மங்களகரமான கருமங் களும் பொதுக் கூட்டங்கள் என்பனவும் இந்த மண்டபத்தில் நடைபெறுவதுண்டு. எமது இந்து சமய வளர்ச்சிக்கு அறநெறிப் பாடசாலை வகுப்புகளும் நடாத்தப்படுகின்றது. இவ்வாறு சமூக சமுதாயப் பணிகளிலும் இவ்வாலயம் இணைந்து செயற்படுகின்றது என்றால் மிகையாகாது.

# மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கோவில்



மயூரபதி ஸ்ரீ பத்திரகாளி அம்மன் கோவில்
17A, மயூராபிளேஸ், வெள்ளவத்தை
கொழும்பு - 06

## ஆலய அமைப்பு

கொழும்பு 17A இலக்கத்தில் வெள்ளவத்தை மயூரா பிளேஸ் என்றழைக்கப்படும் இடத்தில் இவ்வாலயம் 1488 + 1224 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளது.

12' × 10' சதுர அடியில் அமைந்திருக்கும் கருவறை மூலஸ்தானத்தில் தென்கிழக்கு நோக்கி ஸ்ரீ பத்திரகாளியம்மன் கருணையே வடிவமாக அமர்ந்து திருவருள் பொழிகின்றாள். கருவறை விமானம் அழகு பொலியக் காணப்படுகின்றது. சிம்மமும் - பலிபீடமும் அன்னையின் திருமுன்னர் அமைந்துள்ளது.

ஆலயத்தை வலம்வந்தால் விநாகயர், நாகதம்பிரான், சிவன், துர்க்கை, விஷ்ணு, நவக்கிரகம், பைரவர், சண்டேஸ்வரி காணப் படுகின்றனர். ஐந்தடி உயரமான ஆஞ்சநேயரும் காணப்படுகின்றார்.

எழுந்தருளி மூர்த்தங்களாக விநாயகர் வள்ளி தெய்வானை ஸமேத முருகன், நடராஜர், சந்திரசேகரர், கௌரி, சண்டேஸ்வரி காணப்படுகின்றனர்.

ஆலயத்தின் தலவிருட்சமாக இரு அரச மரங்களுக்கிடையேயுள்ள வேப்பமரம், அரசு - சிவனையும் வேம்பு சக்தியையும் குறிக்கும். சிவசக்தி அம்சமாகவே அம்பிகை இயற்கை உருவில் காட்சி தருகின்றாள்.

ஆலயத்தில் பெரிய கண்டாமணி இருக்கிறது.

ஆலய வளவில் மடைப்பள்ளி, களஞ்சிய அறை, மின்சக்தி அறை, சிவச்சாரியார்கள் உடைமாற்றும் அறைகள் உள்ளன.

## பூஜை ஒழுங்குகள்

காலை 6.30 மணிக்கும் மதியம் 11.30 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் நித்திய பூஜைகள் நிகழும். வெள்ளிக்கிழமை போன்ற விசேஷ நாட்களில் காலை 6.30 மணி, பின்பு 10.30 மணி, மதியம் 12.00 மணி, மாலை 6.00 மணி, அர்த்தஜாமம் 9.15 மணியில் நிகழும்.

அந்தண சிவாச்சாரியார்கள் ஏழு பேர்களும் வழிபாடு சார்ந்த பணிகளில் உதவுவதற்கு ஆறுபேர்களும் பலவேலை, காவல் வேலைகளுக்குப் பணியாட்களும் உள்ளனர்.

நாளாந்த பூஜையில் செவ்வாய் வெள்ளி நாட்களில் நீர்ச்சாதம், வெண்சாதம், விசேஷ பூஜைகளில் சுண்டல், அவல், சர்க்கரைப் பொங்கலும் நிவேதிக்கப்படும்.

ஸ்நபனாபிஷேகம், சங்காபிஷேகம், ருத்ராபிஷேகம் அனைத்துமே அம்பாளுக்கு நடைபெறும்.

பூஜா உபகரணங்கள் அனைத்தும் உண்டு. பக்தர்களால் ஆலயத்தில் நேர்த்திக் கடன்கள் நிகழ்த்தப்படுகின்றன.

மூலஸ்தானத்தில் அம்பாளுக்கு சித்திர வேலைப்பாடுகள் நிறைந்த வெள்ளிக் கொற்றக்குடை கவிக்கப்பட்டிருப்பது பார்ப் பவரை பரவசத்தில் ஆழ்த்தக்கூடியது.

## திருவிழாக்கள்

ஆடிப்பூரத்தை நிறைவாகக்கொண்டு 20 நாட்கள் லட்சார்ச்சனை விழா அம்பிகைக்கு நடாத்தப்படும். நிறைவுநாளாக ஆடிப்பூரத் தன்று அதிகாலையில் அம்பாளுக்கு விசேஷ அபிஷேகங்கள் நிறைவுற்று சிறப்பான வசந்தமண்டப பூஜைக்குப் பிறகு பஞ்சமூர்த்தி விநாயகர், வள்ளி தெய்வானை ஸமேத ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமான், சிவன் அம்பாள், ஸ்ரீ பத்ரகாளியம்பிகை, சண்டேஸ்வரி, பஞ்ச ரதங்களில் எழுந்தருளி வீதியுலா வருவது இவ்வாலயத்தின் தனித்த சிறப்பாகும். மேளவாத்தியத்துடன் பறைமேளமும் ஒலிக்க அம்பிகையின் தேர்பவனி தெய்வீக அனுபவமாகும்.

மறுநாள் தீர்த்த திருவிழா இந்து சமுத்திரக் கரையில் நடைபெற்றுப் புதிய கதிரேசன் ஆலயத்திலிருந்து பவனியாக அம்பாள் ஆலயம் வந்தடைவாள்.

பூங்காவனத்தன்று தண்டிகையில் எழுந்தருள்வாள். சண்டேஸ்வர உற்சவமும்

பைரவர் மடையும் நிகழ்ந்து ஆடிப்புரத் திருவிழ நிறைவடையும்.

உபயங்கள் கொடை வள்ளல்களின் வள்ளன்மையில் நிகழும். ஆலயத்திற்குரிய தேர்களும் சிம்மம், குதிரை, நாகம், சித்ராசனம் போன்றவைகள் பாதுகாப்பாக வைக்கப்படுகின்றது. எல்லாம் பக்தர்களின் அன்பளிப்பாகப் பெறப்பட்டவையே.

ஆடிப்பூரத் திருவிழாவைத் தவிர நவராத்திரி, கந்தசஷ்டி, கௌரி விரதம் போன்ற விழாக்களும் சிறந்த முறையில் நடைபெறுகின்றன. கந்தசஷ்டி நிறைவில் சூரசம்ஹாரமும் நடைபெறுகின்றது.

இவ்வாலயத்தில் இந்துக்கள், பௌத்தர்கள் அனைவரும் வழிபடுகின்றனர்.

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் பரிபாலனசபையினால் நடத்தப்படுகின்றது. சபையின் விதிமுறைக்கு ஏற்பவே நிர்வாகம் இயங்குகின்றது.

ஆலய அறங்காவலர் சபைத் தலைவராக திரு. பொன். வல்லிபுரம் ஜே.பி. அர்ப்பணிப் புடன் செயற்படுகின்றார்.

## கும்பாபிஷேகங்கள்

1997 – 2000 ஆண்டு பல திருப்பணிகள் நிறைவேறி கும்பாபிஷேகங்கள் நடத்தப் பெற்றன.

## ஆலய சொத்து சம்பந்தமான விபரங்கள்

கோவிலிற்குரிய கடைகள் - இந்து கலாச்சார மண்டபம்.

## கலைநிகழ்வுகள்

இந்து பாரம்பரியத்தை உணர்த்தும் அற்புதமான வரலாற்று தெய்வப் படிமங்கள் நிறைந்த இந்துக் கலாசார மண்டபம் கலைக் கூடமாக இலங்குகின்றது.

நடனம், மங்கள இசை, இசை நிகழ்ச்சிகள் போன்றன நடைபெறும்.

இந்து கலாசார மண்டபத்தைத் திறந்து வைக்க நடிகர் திலகம் செவாலியர் சிவாஜி கணேசனின் வருகை தந்தமை சிறப்பான நிகழ்வாகும்.

## ஆலய அறப்பணிகள்

சிறப்பான முறையில் அறநெறிப் பாடசாலையினை ஆலயம் நடத்தி வருகின் றது.

பராசக்தியின் அம்சங்களை விளக்கும் முறையில் சிறப்பாக 2000 ஆண்டு நடந்த கும்பாபிஷேக விழாவில் "மயூர மங்கலம்" என்ற சிறந்த நூலை வெளியிட்டமையும் அறப்பணியின் கூறாகும்.

## ஆலய வரலாறு

ஏறக்குறைய ஆயிரத்து எண்ணூற்று எண்பதிற்கும் ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூறுக்குமிடைப்பட்ட காலத்தில் இன்று கொழும்பு வெள்ளவத்தையில் மயூராபதி என்றழைக்கப்படும் பகுதியில் நெசவாலை ஒன்று உருவாகியது. அதனைத் தனிப்பட்ட நிறுவனத்தார் செய்தனர். எத்தனை பொருள் வளம் இருந்தாலும் அத்தொழில் இலங்கைக்குப் புதிய அனுபவம் ஆதலால் அந்நெசவாலையைத் திறம்படச் செய்வதற் காகத் தொழிலாளர்களைத் தென்னிந்திய மாநிலங்களான தமிழகம், கேரளம் ஆகியவற்றில் இருந்து வருவித்தனர். அந்த மக்கள் வாழ்வதற்காகக் குடியிருப்பு வீடுகள் (தொடர் வீடுகள்) அமைத்துக் கொடுக்கப் பட்டன. இங்ஙனம் குடியேறிய மக்கள் தமது பூர்வீக வழிபாட்டைத் தொடர விரும்பினர். அவ்விருப்பத்தால் அக் குடியிருப்புகளுக்கு இடையில் தொடர் வீடுகளில் ஒரு மண்டபம் வழிபாட்டுக்காக ஒதுக்கிக் கொடுக்கப்பட்டது. அங்குதான் காத்தற் கடவுளாகிய திருமாலின் அவதாரமாகிய ஸ்ரீ வரதராஜப் பெருமாள்

ஆலயம் ஆரம்பமாயிற்று. ஆலயத்தின் முன் இரு அரசமரங்களுக்கிடையே ஒரு வேப்ப மரம் நின்றது. இம் மரத்தில் ஒரு சூலத்தை நிறுத்திக் காளியம்பாளாக வழிபடத் தொடங்கினர்.

ஆரம்ப காலத்தில் இருந்து நம்பிக்கை யுடன் பூசிக்கப்பட்டு வந்த இவ்வாலயம் தெய்வத் திருவருளாலும் நம்பி வழிபடும் அடியார்களது நிறைந்த பக்தியாலும் அன்னை கொலுவிருக்கும் அரச மரம்போல் மேலும் மேலும் உயர்ந்து வளர்ந்தது.

ஆதிமூலமான நாராயணனும் அவர் தங்கை எனக் கருதப்படும் ஆதி சக்தியான காளியும் அமர்ந்திருக்க அற்புதமாக வளர்ந்த இவ்வாலயத்தில் ஆண்டுக்கு ஒரு முறை குளிர்க்கஞ்சி வைபவம் சிறப்பாக நடந்து வந்தது. குளிர்ந்த உணவமுதினையும் கனியமுதங்களையும் அன்னைக்கு நிவேதித்து கோரமான அவளைச் சாந்தப்படுத்தி அம்மை, பேதி போன்ற நோய்களிலிருந்து அடியார்களைக் காக்கும்படி வேண்டுதல் செய்வது இவ்வாலயத்தின் அடிப்படை நோக்கமாய் இருந்தது. இந்நிகழ்வு ஆவணி மாதந்தோறும் நடைபெற்று வரலாயிற்று.

இக்காலகட்டத்தில் நெசவாலையில் உள்ளூர்ப் பெரும்பான்மை இன மக்கள் கணிசமான அளவு சேர்க்கப்பட்டார்கள். இதனால் ஆரம்ப காலத்தில் கடல் கடந்து தொழிலுக்காக அழைத்து வரப்பட்ட இந்தியத் தொழிலாளர்கள் வந்த வழியே தாயகம் திரும்ப வேண்டிய நிலை உருவாயிற்று. இதனால் பழைய குடியிருப்புகள் உடைக்கப் பட்டு புதிய இரட்டை மாடித்தொடர் வீடுகள் அமைக்கப்பட்டன. மாடி வீட்டில் ஒதுக்கப் பட்ட ஒரு சிறு அறைக்கு ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயம் மாற்றப்பட்டது. இவ்வறையில் தொடர்ந்து ஆலயம் இயங்கும்போது திரு. ஏகாம்பரம் கங்காணி அவர்கள் தலைமை தாங்கி வழிநடத்தினார் கள். இதற்குப் பின்னர் திரு. இரத்தினவேலு முதலியார் தலைமையில் பரிபாலனம் தொடர்ந்தது. இவ்விருவர் காலத்துக்குப் பின்னர் வந்த திரு. சிவப்பிரகாசம் பேராயிரம் உடையார் தலைமை தாங்கிய பரிபாலன சபைக் காலத்தில் குறிப்பிடத்தக்க மாற்றங் கள் இவ்வாலயத்தில் நிகழ்ந்தன.

இளைஞர்கள் பரிபாலன சபையில் இடம் பெறத் தொடங்கினர். இளைஞர்களது வருகை சமயப் பணிக்கும் வளர்ச்சிக்கும் மிகத் துணைபுரிந்தது. இந்த மறுமலர்ச்சிக்குப் பின்னர் சிவராத்திரி விழா வெகுவிமரிசையாக ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் நிகழ லாயிற்று.

இதனைத் தொடர்ந்து சுப்பிரமணியம் ஆலய நிர்வாகத்திற்குத் தலைமை தாங்கி முன்னவர் பணிகளில் எந்தவிதமான குறையு மின்றிச் சிறப்புடன் தொண்டாற்றினார். சிவராத்திரி விழா இவர் காலத்தில் மேலும் சிறந்து விளங்கிற்று.

சிவராத்திரி விழாக்கள் மூலம் ஆலயத் தினைப் பரிபாலிக்க வந்த சபைக்கு ஈ. பி. சுப்பிரமணியம் என்பவர் புதிய தலைவராக வந்து புதிய திருப்பத்தை உண்டாக்கினார்.

1977இல் வரதராஜப் பெருமாள் ஆலய முன்மண்டபம் அரசாங்கத்தின் ஆதரவுடன் அமைந்ததற்கு இவரது முயற்சி பெரிதும் துணை நின்றது. இந்த மண்டப அமைவுக்குப் பிறகு சிவராத்திரி மேலும் சிறப்படைந்தது. இக்கால கட்டத்திலேதான் பெரியதொரு மாற்றம் நிகழ்ந்தது எனலாம்.

பழைய இடத்தில் அரச, வேப்பமரங்கள் நின்றன. 1980இல் வீடமைப்புத் திட்டத்தின்கீழ் புதிய வீடுகள் கட்டப்பட்டபோது வழிபாட்டுக்கு உரிய இடமாக அவ்வரசமரத்தடியில் ஒரு சிறு இடம் ஒதுக்கப்பட்டு 4 × 3 × 5½ அடி பிரமாணத்தில் ஒரு மாடம் கட்டப்பட்டது. அந்த மாடத்தில் எதிர்பாராத விதமாக காளி அன்னையின் சூலம் இருந்த இடத்தில் வேறொரு மதத் தெய்வத்தை அமைக்கும்

முயற்சிகள் நடந்தன. ஆனால் அன்னை இரவோடிரவாக அரச மரத்தடியில் தரிசனம் தந்தாள். முதல் அமர்ந்த அவளைப் பின்னர் எவராலும் மாற்றமுடியவில்லை. சுலத்தில் சூக்கும வடிவில் நின்றவள் சிலைவடிவாகி அருள்தர அமர்ந்தாள்.

பிரதிஷ்டை செய்யப்பட்ட அம்பாளுக்கு கும்பாபிஷேகமும் தொடர்ந்து 48 நாட்கள் மண்டலாபிஷேகமும் நடைபெற்றன. பூர்த்தி தினமான சங்காபிஷேகத்தன்று அன்னை சர்வாலங்கார பூஜிதையாய் வெளிவீதி உலா வந்தாள். வேம்படி வித்தகியாக இருந்து வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கிய பத்திரகாளி 83ஆம் ஆண்டு நாட்டிலேற்பட்ட அசம்பாவிதத்திலும் அணுவும் பங்கம் இன்றி மிளிர்ந்தாள். கலவரத்தின் பின்னர் ஸ்தம்பித நிலையில் இருந்த ஆலயத்தைத் தவறான பாதையிற் சிலர் செலுத்த முயன்றனர். காளியின் அருளால் மீண்டும் அடியவர்கள் ஒன்று திரண்டு பரிபாலன சபை அமைத்துச் செயலாற்றத் தொடங்கினர். மீண்டும் தூய பணி தொடங்கிற்று. எத்தனையோ இடையூறு களுக்கு மத்தியில் ஆலய உரிமையையும் உடைமைகளையும் மீட்டுப் பரிபாலன தத்துவத்தையும் பெற்று மரத்தடிக் கோவிலை மணிமண்டபக் கோவிலாகக் கட்டியெழுப்பத் திருப்பணிச்சபை ஒன்றும் உருவாக்கப்பட்டது.

ஆரம்ப காலத்தில் அன்னை எங்கு நோக்கித் தரிசனம் தந்தாளோ அதே முறை யிலேயே நவீன ஆலயம் உருவாக்கப்பட்டது. இவ் வேளையில் மரத்தொடரின் கீழ் இயங்கி வந்த வரதராஜப் பெருமாள் ஆலயத்தில் இருந்த பிள்ளையார், லிங்கம், வேலாயுதம் முதலிய பரிவார மூர்த்திகளும் இப்புதிய ஆலயத்திற்குக் கொண்டு வரப்பட்டன. 1987. 03. 22ஆம் நாள் பாலஸ்தாபனம் செய்யப்பட்டு திருப்பணிகளுக்கான அடிக்கல் நாட்டப் பட்டது. ஸ்ரீ பத்திரகாளி, பிள்ளையார், சிவன், நாகதம்பிரான், புராதன அம்பாள், நவக்கிரகம் ஆகிய மூர்த்தங்களுக்கான ஆலயங்கள் அமைக்கப்பட்டன. அந்தச் சிறிய இடத்திலே எல்லாச் சந்நிதானங்களையும் ஆகம முறைப்படி அமைப்பது மிகவும் சிரமமாய் இருந்தது. மற்றைய ஆலயங்கள் தூர இருந்தபடியால் எல்லாத் தெய்வங்களையும் இவ்வாலயத்தில் வைத்து வழிபட அடியார்கள் முடிவு செய்தார்கள். ஆகமப் பிரமாணத்தை விட அடியாரின் விருப்பமே மேலானது என நினைத்து அரச மரத்தைச் சுற்றிச் சந்நிதானங் கள் அமைக்கப்பட்டன. அராலியூரைச் சேர்ந்த வரும் வந்தாறுமூலையில் வசித்தவருமான திரு. எஸ். மகேஸ்வரன் ஸ்தபதியார் தலைமை யில் ஆலயத் திருப்பணிகள் ஆரம்பமாயின.

தென்கிழக்கு நோக்கிய மூல மூர்த்தமாக ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் கொலுவிருந்தாள். அம்பாள் சந்நிதானத்தின் பின்புறமாக நின்ற புராதன அரசமரத்தைச் சுற்றி வட்டமான பீடம் கட்டப்பட்டது. அரசமரத்தினை உள்ளடக்கிச் சதுரமாக அவ்வாலயம் அமைந்தது. அன்னையின் வலமாகப் பிள்ளையாரும் இடமாக முருகனும் அமர்ந்தனர். பிள்ளை யாருக்கு முன்பாக கதையாலான மூல பத்திர காளியும் சந்நிதானமும் அமைந்தது. தலவிருட்சத்தை வலம்வரத் தொடங்கினால் புராதன அம்மன், அனந்தசயனத் திருமால், நாகதம்பிரான், சிவபெருமான், நவக்கிரகம், பைரவர் ஆகியோர் காட்சி தருவர். இவ்வாறு அமைந்த ஆலயத்திற்கு அப்போது விமானம் இல்லை. திருப்பணிகள் நடந்து கொண்டிருந்த போது மிகமிக நெருக்கடியான பொருளாதாரச் சூழ்நிலை ஏற்பட்டது. இன்று ஆலயத்தை அற்புதமாய் வழி நடத்தும் சிவதர்மச் சிந்தனையாளர், அரும்பணிச் செல்வர் திரு. பொ. வல்லிபுரம் அவர்கள் அக்காலகட்டத்தி லேயே அன்னையின் அருளால் தலைமைப் பொறுப்பேற்று இத்திருப்பணிகளிற் கைகொடுத்து உதவ முன்வந்தார்.

அவரின் துணையால் திருப்பணி வேலை கள் இனிதே நிறைவுற்றன. மாமல்லபுரத்தில் உருவான அன்னை பத்திரகாளி, முருகன், நாகதம்பிரான் ஆகிய தெய்வவடிவச் சிலை கள் தமிழகத்திலிருந்து கொணரப்பட்டன.

அப்போது இந்து கலாசார அமைச்சராய் இருந்த திரு. செ. இராசதுரை அவர்கள் இப்பணியிற் பெருந்துணை புரிந்தார். அதுபோல அப்போதைய உதவிப் பாதுகாப்பு அமைச்சராக இருந்த அநுரா பஸ்தியான் அவர்களும் இவ்வாலய வளர்ச்சியில் பெரும்பங்காற்றினார்கள். கட்டுமானத்தில் திரு. எஸ். மகேஸ்வரன் ஸ்தபதியோடு திரு. வி. இராசையா, திரு. தேவன் ஆகியோரும் இணைந்து செயலாற்றினர். ஒட்டுமொத்தமாக அன்னையின் ஆலயம் முழுமைபெற்று எழுந்தது.

பிரபவ ஆண்டு கார்த்திகைத் திங்கள் 9ஆம் நாள் (1987. 11. 25) பூர்வபட்சப் பஞ்சமி திதியும் உத்தராட நக்ஷத்திரமும் அமிர்தயோகமும் கூடிய சுபமுகூர்த்தத்தில் அன்னையின் கும்பாபிஷேக விழா பிரம்மஸ்ரீ. சாமி, விஸ்வநாத குருக்கள் தலைமையில் சிறப்புற நடைபெற்றது.

அதன்பின் அன்னையின் அருளாலும் ஆலய அறங்காவலர் திரு. வல்லிபுரம் அவர் களின் முயற்சியாலும்ஆலயத்தின் கீர்த்தியும் நேர்த்தியும் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ச்சியுற்றது. இந்துக் களுக்கே சொந்தமான அன்னை காளியின் ஆலயத்திற்கு ஏனைய மதத்தவரும் இனத்த வரும் கூட்டங்கூட்டமாய் வரத்தொடங்கினர். அன்னையின் அருட்பார்வை இன, மத பேதங் களைக் கடந்து அனைத்து மக்களையும் தன்பால் ஈர்த்தது. இந்துக்களன்றி ஆலயத் திற்கு வருகை புரிந்த ஏனையோரும் பொருளாலும் செயலாலும் பலவிதத்திலும் ஆலய வளர்ச்சிக்குத் துணைபுரிந்தனர்.

திரு. வல்லிபுரம் அவர்கள் தலைமை ஏற்ற பின்பு 1988இல் இவ்வாலயத்தில் ஆடிப்பூரத் திருவிழாவை ஒட்டி 20 நாட்கள் இலட்சார்ச் சனையும் முடிவு நாளான ஆடிப்பூரத் தினத்தன்று மாணிக்கப்பிள்ளையார் ஆலயத்திலிருந்து பாற்குட பவனியாக ஆரம்பித்து அடியார்களாற் சுமந்து வரப்படும் பாற்குடங்களால் அன்னைக்கு அபிஷேகம் செய்யும் முறைமையும் தொடக்கப்பட்டது. அன்று 125 பேருடன் தொடங்கிய இப்பாற்குட பவனியில் இன்று 2200 பேர் கலந்து கொள்கின்றனர். ஆடிப்பூரத்திற்கு அடுத்த நாள் அன்னை ஊர்வலமாய் வந்தாள். ஆரம்பத்தில் மயூராபிளேஸ் மட்டும் நடந்த இவ்வூர்வலம் 1991ஆம் ஆண்டு தொடக்கம் ஹவ்லொக் றோட், டிக்மன் றோட், காலி றோட் வழியாக ஆலயத்தையடையும் வழக்கம் உருவாயிற்று.

95ஆம் ஆண்டு மாசிமகப் பூசையின்போது அறங்காவலர் மனதில் அன்னையை தேரேற்றிக் காணவேண்டும் எனும் விருப்பம் உண்டாக அவ்விருப்பம் பக்தர்களுக்கு அன்றைய பூஜையில் அறிவிக்கப்பட்டது. அவ்விருப்பம் தெரிவிக்கப்பட்டதும் அன்றைய விழா உபயகாரரும் வள்ளலுமான திரு. ஸ்ரீகாந்தா அவர்கள் 16 லட்சம் ரூபா செலவில் அம்பாளுக்கான தேரினைச் செய்யும் முழுப்பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். அவரைப்போலவே திருவாளர் கேசுநாதன் எனும் அன்பரும் விநாயகர் தேருக்கான முழுச்செலவினையும் பொறுப்பேற்றார். முருகனுக்கான தேர் பொதுமக்கள் உபயமாக 36 இலட்சம் ரூபா செலவில் தொண்ணூற் றிரண்டே நாட்களில் உருவாக்கப்பட்டது.

95ஆம் ஆண்டு அறங்காவலர் மனதில் உதித்த தேர் இழுக்கும் நல்லெண்ணம் 96 இலேயே செயலானது. 96ஆம் ஆண்டு ஆடிப்பூரத்தின் அடுத்தநாள் மூன்று தேர்களும் வலம் வந்தன. தேரினைத் தொடர்ந்து அடுத்தநாள் இந்துசமுத்திரத்திலே தீர்த்தத் திருவிழா நடாத்தப்பட்டு புதிய கதிரேசன் மண்டபத்தில் அன்னைக்கு பூஜைகள் நடத்தப் பட்டன. 1997இல் மூன்று இந்திர விமானங் களில் ஏறி அம்பாள், பிள்ளையார், முருகன் ஆகிய தெய்வங்கள் உலாவந்து தீர்த்த மாடியது ஓர் புதுமை.

1988இல் இருந்து செவ்வாய் தோறும் இராகுகாலப் பூஜையும் 1989இல் இருந்து

பௌர்ணமி தோறும் 108 பெண்கள் செய்யும் திருவிளக்குப் பூஜையும் இன்றுவரை தொடர்ந்து நடைபெறுகின்றன. 1995இல் 20 நாள் இலட்சார்ச்சனையுடன் கௌரி விரதப் பூஜை ஆரம்பிக்கப்பட்டு 21ஆவது நாள் காப்பு வழங்குதல் இங்கு வழக்கமாயிற்று. இன்று 2100 பேர்வரை இவ்விரதத்தைஅனுஷ்டித்துக் காப்புப் பெறுகின்றனர். இவை தவிர வரலக்ஷ்மி விரதம், நவராத்திரி விரதம், கந்தசஷ்டி விரதம் என்பவையும் இங்கு விசேஷமாய் நடத்தப் படுகின்றன.

1994இல் அறங்காவலரின் முயற்சியால் அப்போதைய இலங்கையின் ஜனாதிபதி ஆர். பிரேமதாசா அவர்கள் இந்து கலாசார மண்டபமொன்றினை அமைக்க ஆலயத் திற்கு 20 பேர்ச் நிலத்தினை வழங்கினார். இந்நிலத்தில் அப்போதைய கொழும்பு மாநகர மேயர் செ. கணேசலிங்கம் அடிக்கல் நாட்ட 1995இல் கடைத் தொடருடன் கூடிய அடித்தளம் கட்டி முடிக்கப்பட்டது. பின் 1996இல் ராமசாமி வீரபாகு எனும் பெருவள்ளல் தன் சொந்தச் செலவில் 40 லட்சம் ரூபாவரை செலவழித்து தன் தாயாரின் ஞாபகார்த்தமாக 1ஆம் மாடியில் சுப்பம்மாள் கல்யாண மண்டபத்தினை அமைத்து அதற்குரிய அனைத்துப் பொருட் களையும் வழங்கிப் பேருதவி புரிந்தார். கொழும்பிலேயே முதன்முதலாக மயூராபதி ஆலயத்தில் 88ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட அறநெறிப் பாடசாலை 1997இல் 2ஆம் மாடி அமைக்கப்பட அம்மண்டபத்தில் இயங்கத் தொடங்கியது. இவ்வாண்டிலேயே மனோ சின்னராஜா என்பவரது உபயமாக அழகிய மணிக்கூண்டுக் கோபுரம் அமைக்கப்பட்டது. 1998இல் கன்னியாகுமரியிலிருந்து காசிவரை உள்ள அம்பாள் வடிவங்களும் அது தவிர்ந்த பல சிற்பங்களும் கூடிய மிக அழகிய சிற்ப மண்டபம் ஒன்று 3ஆம் மாடியில் அமைக்கப் பட்டது. இவ்வழகிய சிற்ப மண்டபத்தைத் தென்னகப் பிரபல நடிகர் 'நடிகர் திலகம்' சிவாஜிகணேசன் அவர்கள் திறந்து வைத்தார். அதைத் தொடர்ந்து 1999இல் முடிவானதும் நிறைவானதுமான 4ஆவது மாடி அமைக்கப் பட்டு அது அடியார்களுக்குரிய தியான மண்டபமாய் ஒதுக்கப்பட்டது.

இக்கலாசார மண்டபத்தில் பல கலை, இலக்கிய பக்தி விழாக்கள் ஆண்டு தோறும் நடைபெறுகின்றன. நம் நாட்டைச் சார்ந்த கலைஞர்கள் மட்டுமல்லாமல் தமிழகத்தைச் சார்ந்த பல கலைஞர்களும் இந்நிகழ்ச்சியிற் கலந்து கொண்டு வருகின்றனர்.

1999இல் அறங்காவலரும் அடியார்களும் மனம் கொண்டு மீண்டும் திருப்பணிகளுக்காக ஆலயம் பாலஸ்தாபனம் செய்யப்பட்டது. ஆலயம் முழுவதும் இடிக்கப்பட்டு 1 1/2 கோடி ரூபா செலவில் புதிய விமானத்துடன் கூடிய ஆலயம் அமைக்கப்பட்டது. இத்திருப் பணிகளின் போது ஏற்கனவே இருந்த கௌரி அம்பாள் விக்கிரகத்துடன் சந்திரசேகர பஞ்சலோக விக்கிரகம் செய்து இணைக்கப் பட்டது. அதனோடு இந்தியாவிலிருந்து கொண்டு வரப்பட்ட பானுலிங்கத்துக்குத் தனிச் சந்நிதி அமைக்கப்பட்டது. அது போலவே சண்டேஸ்வரி உற்சவமூர்த்தியும் வள்ளிதெய்வானையுடன் கூடிய சுப்பிரமணி யரும் ஐந்தடி உயரமான ஆஞ்சநேயரும் புதிய துர்க்கையும் பளிங்குக் கற்களால் ஆன சுற்றுமதிலும் அம்பாளுக்கான வெள்ளிக் குடையும் அமைக்கப்பட்டு 2000. 11. 09 அன்று சாமி. விஸ்வநாதக் குருக்கள் தலைமையில் மிகப் பிரமாண்டமான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்று 48 நாட்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்றது. இந்த 48 நாட்களும் கல்யாண மண்டபத்தில் பல நிகழ்ச்சிகளுடன் கூடிய பக்திவிழா அற்புதமாய் நடைபெற்றது.

# ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம்



ஸ்ரீ சர்வார்த்த சித்தி விநாயகர் தேவஸ்தானம்

70, முகத்துவாரம் கோவில் வீதி

கொழும்பு - 15

## ஆலய அமைப்பு

கொழும்பு முகத்துவாரத்தில் கோவில் வீதி 70ஆம் இலக்கத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு மூலமூர்த்தியாக எழுந்தருளி அருள்பாலிப்பவர் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான். உள்வீதியில் இடமிருந்து வலமாக வந்தால் சிவபெருமான், பார்வதி, நாகதம்பிரான், தெட்சணாமூர்த்தி, நவக்கிரகம், மஹாலக்ஷ்மி, விஷ்ணு, நால்வர், நடராஜர், சுப்பிரமணியர், உற்சவமூர்த்திகள், பஞ்சமுக விநாயகர், ஆறுமுகசுவாமி, பைரவர், சண்டேஸ்வரர் ஆகியோர் உள்ளனர்.

எழுந்தருளிகள் செப்புத் திருமேனிகளாகும். துவஜஸ்தம்பம் இல்லை. அலங்காரத் திருவிழா பற்றிய விபரங்களைப் பெறமுடியவில்லை. பலிபீடமும், மூஷிகமும் தோற்றமளிக்கின்றன.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் ஆறுகால பூஜைகள் நியமமாக அந்தண சிவாச்சாரியாரால் நடாத்தப்படுகிறது. (அ.கா 5.45, காலை 6.30, ந.ப. 11.30, பி.ப. 5.00, 6.00, இரவு 7.30 அர்த்தஜாமப் பூஜையுடன் நிறைவடையும். (இராகுகால பூஜைகளும் நடைபெறும்.

மாதச் சிறப்பு நாட்கள் அனைத்தும் இங்கே சிறப்பு பூஜைகளுடன் வழிபாடுகள் இடம்பெறும். பூரணை, மாதாந்த சஷ்டி, சதுர்த்தி என்பவற்றைக் குறிப்பிடலாம்.

பூஜை செய்வதற்கு பிரதான சிவாச்சாரியார், அந்தணர்கள், பலவேலைகாரர்கள் என்போர் உள்ளனர்.

நாளாந்த பூஜையில் பிரசாதமாக விபூதி, சந்தணம், குங்குமம் என்பன வழங்கப்படுகின்றன. விசேஷ பூஜைகளில் மட்டுமே நிவேதனம் செய்யப்படுகிறது. பஞ்சாமிர்தம், கடலை, அவல், புளியோதரை என்பன விசேஷ தினங்களுக்கான நிவேத பொருட்கள் ஆகும்.

ஆலயத்திற்கான பூஜைப்பொருட்கள், சோடஷோபசாரம் உள்ளிட்ட அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

இவ்வாலயத்தில் அலங்கார உற்சவங்கள் நடைபெறுவதில்லை. சில விசேஷ தினங்களில் உத்திராபிஷேகம், ஸ்நபனாபிஷேகம், சங்காபிஷேகம் என்பன அடியவர்களால் செய்யப்படுவதுண்டு.

## வருஷாபிஷேக உபயகாரர்கள்

உபயகாரர்கள் பற்றிய விபரங்கள் இல்லை.

குருபூஜைத் தினங்கள், நவராத்திரி கேதார கௌரி விரதம், கந்தசஷ்டி, கார்த்திகை தீபம், பிள்ளையார்கதை, திருவெம்பாவை, பிரதோஷம், பூரணை என்பன இலட்சார்ச்சனை போன்ற விசேஷ பூஜைகளுடன் அனுஷ்டிக்கப்படுகின்றன.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய நிர்வாகம் தேர்தல் நெறிமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பரிபாலன சபையினரால் 1955 தொடக்கம் மேற்கொள்ளப்படுகிறது.

## தற்போதுள்ள கோவில் பரிபாலன முகாமை

திரு. உமேசா செல்லமுத்து

திரு. சி. குணசிங்கம்

திரு. ரமணா செல்லமுத்து

இவர்கள் மூன்றுபேரும் கோவிலின் நிர்வாகத்திற்குப் பொறுப்பாக உள்ளனர். முகாமையாளர், கணக்காளர் என்போர் கோவில் நிர்வாகத்தைச் சீராக நடாத்திச் செல்ல உதவுகின்றனர்.

ஆலய பூசகருக்கு மாதாந்த வேதனம், அர்ச்சனை பணம் என்பன வழங்கப்படுகின்றன.

ஆலயத்தின் நிர்வாக கணக்குகள் வாரத்திற்கு இருமுறை கணக்கு பரிசோதகர் ஒருவரால் பரிசோதிக்கப்படுகிறது.

## கும்பாபிஷேகங்கள்

இரு தடவைகள் கும்பாபிஷேகம் நடைபெற்றது. 18. 12. 1993இல் ஒரு தடவையும் மறுதடவை ராஜகோபுரத்துடன் வெகுதானிய வருடம் வைகாசி மாதம் 24ஆம் திகதி வியாழக்கிழமை (07. 06. 1998) சுவாதி நக்ஷத்திரமும் துவாதசித் திதியுடன் கூடிய நன்னாளில் நடைபெற்றது.

## ஆலய வரலாறு

இத்தேவஸ்தானம் 160 வருடகாலம் பழமைவாய்ந்தது. பழமை சிறப்புமிக்க ஆலயங்களில் ஒன்றான இவ்வாலயம் திரு. சந்திரசேகர முதலியாரால் கட்டப்பட்டது. அவரது மறைவிற்குப் பின் அவரது குடும்ப உறவினர்களால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. 1955இல் திரு. சங்கரப்பிள்ளை செல்லமுத்து அவர்கள் கோவில் நிர்வாகத்தை ஏற்றார். அதனைத் தொடர்ந்து கோவிலின் விஸ்தரிக்கும் திருப்பணிகளும் இராஜகோபுரம் அமைக்கும் பணிகளும் காலத்திற்குக் காலம் நடைபெற்று தற்போதைய நிலையை அடைந்துள்ளது. இந்நாட்களிலும் ஆலயத்தில் சிலதிருத்த பணிகள் நடைபெற்று வருகின்றன.


## கலை நிகழ்ச்சிகள்

இலங்கையின் பிரபல்யமான பேச்சாளர்கள், இந்தியப் பேச்சாளர்கள் சிலராலும் சொற்பொழிவுகள் நடைபெற்றன. பஜனைகள், குருகுலபீட மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

## ஆலய அறப்பணிகள்

அகதிகளுக்கான உதவிகள், குருகுலம் (வித்தியாபீடம்) ஸ்தாபித்து வழிநடத்துதல் என்பவற்றைக் குறிப்பிடலாம்.

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்



ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
53 -55, கொட்டாஞ்சேனை
கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு 53-55 இலக்கத்தில் கொட்டாஞ்சேனையில் அமைந்துள்ளது. ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயம். ஆலயத்தின் மொத்த விஸ்தீரணம் 395 சதுர அடிகள். கிழக்கு நோக்கிய வண்ணம் கருவறையில் ஸ்ரீ முத்துமாரியம்பிகை எழிற்கோலக் காட்சி அளிக்கின்றாள்.

இராஜகோபுரத்தின் ஊடாக நாம் சென்றால் இடதுபுறம் "பெரியாச்சி" என்று பக்தர்களி னால் அழைக்கப்படும் சுதையினாலான காளிகாம்பாள் பெரிய திருவுருவத்துடன் காட்சி கொடுக்கின்றாள். நேர்த்தி - காணிக்கை யாவும் அன்னைக்கு செலுத்தப்படுகின்றது. சிறந்த வரப்பிரசாதி.

ஆலயத்தை வலமாக வந்தால் விநாயகர், தண்டாயுதபாணி, சண்டேஸ்வரி, நவக் கிரஹங்கள், சனீஸ்வரன், பைரவர், பஞ்ச நாகங்கள் காணப்படுகின்றன. எழுந்தருளி மூர்த்தங்களாக விநாயகர், சந்தான கோபாலர், ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, சிவன், அம்மன், கண்ணகி, வள்ளி - தேவசேன ஸமேத சுப்பிரமணியர், முத்துமாரி திரிசூலம் உள்ளன. அனந்தசயனம் சுதை யினால் ஆனது. பூஜிக்கப்படும் மூர்த்தங்களாக விநாயகர் சந்தான கோபாலர், ஸ்ரீதேவி பூதேவி ஸமேத மஹாவிஷ்ணு, ஆதி மாரியம்மன், சிவன் - அம்மன் கண்ணகி, வள்ளி தேவசேனா ஸமேத சுப்பரமணியர், சண்டேஸ் வரி, நடேசர் - சிவகாமசுந்தரி - உற்சவ அம்மன், அனந்த சயனம் உள்ளன.

ஆலய உபயோகத்திற்கென கிணறு உண்டு. பெரியமணி உண்டு.

## பூஜை ஒழுங்குகள்

திருவனந்தல், காலை சந்தி, உச்சிக் காலம், சாயரக்ஷை, இரண்டாம் காலம், அர்த்தஜாமம் என ஆறுகால பூஜைகள் நிகழ் கின்றன. மாரியம்மன் பத்ததியின் வண்ணம் அந்தண குருமார்கள் பூஜை செய்கின்றனர். பலவேலைகளான துப்புரவு செய்தல், பூஜைக்கு வேண்டிய திரவியங்களை ஒழுங்கு செய்தல், காளாஞ்சி தயாரித்தல் போன்ற பணிகளுக்குப் பணியாட்கள் உள்ளனர்.

நாளாந்த பூஜையில் பொங்கல், பஞ்சாமிர்தமும் விசேஷ பூஜைகளில் கடலை, அவல், தயிர்சாதம், புளிசாதம் போன்றவை களும் நைவேத்தியம் செய்யப்படுகின்றது. மடைப்பள்ளிக்காக ஐயர் இருக்கின்றார்.

நேர்த்திக்கான அபிஷேக அர்ச்சனைகள், காலை 5.30இற்கும் மாலை 4.30இற்கும் அபிஷேகங்களும் காலை 7.30 இலிருந்து 10.30 வரையும் மாலை 4.00 மணியிலிருந்து இரவு 7.30 மணி வரையும் அர்ச்சனைகள் நிகழ் கின்றன.

சோடஷோபசார பூஜா உபகரணங்கள் அனைத்தும் ஆலயத்தில் உள்ளன.

## திருவிழாக்கள்

மஹோற்சவங்கள் இல்லை. மாசிமகத் தன்று மாலை சிறப்பு வழிபாடுகள் நடை பெற்று தேர்பவனி இடம்பெறும். தேர் நிறுத்த இடம் இருக்கின்றது.

கந்தசஷ்டி, நவராத்திரி முதலிய திருவிழாக் கள் நடைபெறுகின்றன. சமீவிருக்ஷபூஜை - வாழைவெட்டு மகிஷாசுர சம்ஹாரத்தைக் குறித்து நடத்தப்படுகின்றது.

## ஆலய நிர்வாகம்

வணியவைசியர் / செட்டியார் / திருவிளங்க நகரத்தார் குலவழி உரிமை கொண்டு அமைக்கப்படுகின்றது. ஆலய பரிபாலன சபையை கொழும்பு மாவட்ட நீதிமன்றம் அமைக்கின்றது.

தற்பொழுது நடைமுறையில் ஆலயத்தை பரிபாலிப்பவர்களாக டாக்டர். திரு. எஸ். ஜீ. எம். இராமசுப்பு அறங்காவலர் - பொருளாள ராகவும், திரு. எஸ். செல்வரட்ணம் அறங் காவலர் - செயலாளராகவும், திரு. கே. சீ. நமசிவாயம் அறங்காவலராகவும் செயற்படு கின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

இக்ககோவில் பழமை வாய்ந்தது. இறுதியாக 03. 05. 1996இல் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## ஆலய சொத்து சம்பந்தமான விபரங்கள்

ஆலயக் கணக்குகள் அனைத்தும் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் பார்வைக்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

## கலைநிகழ்வுகள்

கதாப் பிரசங்கம், சமய சொற்பொழிவு, வில்லுப்பாட்டு போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெறுகின்றன.

## ஆலய அறப்பணிகள்

சுமார் 100 வறிய மாணவர்களுக்கு கல்வி கற்பதற்கு மாதாந்தம் நிதி உதவி வழங்கப் படுகின்றது.

## ஆலய வரலாறு

வணிய வைசியர் / செட்டியார் / திருவிளங்க நகரத்தார் சமூகத்தைச் சேர்ந்த காளியன் செட்டி, குப்பமுத்துச் செட்டி ஆகிய இருவரால் 02. 03. 1864ஆம் ஆண்டு இக்கோவில் சிறியதாக ஸ்தாபிக்கப்பட்டது.

# ஸ்ரீ சுவர்ணாம்பிகா ஸமேத ஸ்ரீமத் அருணாசலேஸ்வரர் ஆலயம்



ஸ்ரீ சுவர்ணாம்பிகா ஸமேத ஸ்ரீமத் அருணாசலேஸ்வர் ஆலயம்
முகத்துவாரம்
கொழும்பு - 15

## ஆலய அமைப்பு

இவ்வாலயம் கொழும்பு முகத்துவாரத்தின் கடற்கரையை அண்மித்து 1 1/4 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு சிவபெருமான் அருவுருவ மூர்த்தியாக (சிவலிங்கம்) எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். இடமிருந்து வலமாக விநாயகர், நந்தீஸ்வரர், பாலமுருகன், ஸ்ரீசுவர்ணாம்பிகை, ஆனந்த நடராஜர், ஸ்ரீதேவி பூமாதேவி ஸமேத பத்மநாத சுவாமி, ஸ்ரீசாகம்பரிதேவி, நவக்கிரஹ நாயகர்கள், மஹாலக்ஷ்மி, ஆதியந்தபிரபு என்போர் எழுந்தருளப் பெற்றுள்ளனர். வெளிபிரகாரத்தில் வழிப் பிள்ளையார், நர்த்தன விநாயகர், தக்ஷிணா மூர்த்தி, பிரம்மா, சிவதுர்க்கை பைரவர், சண்டேஸ்வரர் என்போர் கோவில் கொண்டு ள்ளனர்.

மஹாமண்டபத்தில் சிறிய வசந்த மண்டபம் கண்ணைக் கவரும்படியாக வண்ண வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. இங்குள்ள எழுந்தருளி விக்கிரகங்கள் ஐம்பொன்னாலானவை. துவஜஸ்தம்பம் இல்லை. வருடாந்தம் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. பலிபீடமும் ரிஷபமும் காட்சி அளிக்கின்றன. பலிபீடத்திலுள்ள நந்தி வெண்பளிங்காலானது.

## பூஜை ஒழுங்குகள்

நாளாந்தம் ஐந்துகால பூஜைகள் கிரமமாக நடைபெறுகின்றன. (அ.கா. 5.30, மு.ப. 7.00, ந.ப. 12.00, பி.ப. 5.30, இரவு 8.30, அர்த்தஜாம பூஜையுடன் நிறைவடையும்.) வெள்ளி, செவ்வாய் கிழமைகளில் பூஜைநேர மாற்றம் இல்லை.

மேலும் மாதாந்தம் வருகின்ற பூரணை தினங்கள், புரட்டாதிசனி, கார்த்திகை, சோம வாரம், சர்வாலய தீபம், மஹாசிவராத்திரி என்பவற்றின்போது விசேஷ பூஜைகளும் அபிஷேகங்களும் வழிபாடுகளும் நிகழ்கின்றன.

கோயிலின் பூஜைகளை பிராமண சிவாச்சாரியார் செய்ய அவருக்கு உதவியாக அந்தணர்களும் பலவேலைகாரர்களும் உதவியாகப் பணிபுரிகின்றனர்.

நாளாந்த பூஜையில் பிரசாதமாக விபூதி, சந்தனம், குங்குமம் வழங்கப்பட, விசேஷ பூஜைகளில் பொங்கல், கடலை, அவல் என்பன வழங்கப்படுகின்றன.

ஆலயத்திற்கான ரிஷப வாகனமும் பூஜை பொருட்களும் சோடஷோபசாரம் உட்பட அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆலயத்தின் அலங்கார உற்சவம் சித்திரை வருடப்பிறப்பை நிறைவு நாளாகக் கொண்டு 10 நாட்கள் நடைபெறும். சகஸ்ரநாம அர்ச்சனை, சங்காபிஷேகம், விசேஷ தீபாராதனை என்பன இந்த பத்து நாட்களும் சிறப்பாக நடைபெறும். நிறைவு நாளன்று உமாமகேஸ்வரர் தேரில் திருவீதி வலம் வருவார்.

வருடாந்த அலங்காரத் திருவிழாவைத் தவிர ஆவணி அமாவாசைக்கு பின் வருகின்ற வளர்பிறை முதலாம் நாள் தொடங்கி ஆவணி மூலம் வரையான பத்து நாட்களும் ஸ்ரீசாகம்பரி தேவிக்கு பூஜையும் ஹோமமும் நடைபெறுவதுண்டு. இந்நாட்களில் மாலையில் திருவூஞ்சலும் உள்வீதி உலாவும் இடம் பெறும்.

நவராத்திரி, விஜயதசமி, கந்தஷஷ்டி, பிள்ளையார் கதை என்பனவும் நடைபெறும்.

## உபயகாரர்கள் விபரம் :

உபயகாரர்கள் எந்த திருவிழாவிற்கும் இல்லை. கோயில் நிர்வாகமே அதற்கான செலவுகளை பொறுப்பேற்று நடத்துகிறது.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலயம் குடும்பவழி உரிமை முறையில் பரிபாலிக்கப்படுகிறது. ஆலய

தர்மகர்த்தாவாக திரு. பாலகுமார் மகாதேவா விளங்குகின்றார். ஆலய நிர்வாகத்தை ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் பிரம்மஸ்ரீ கு. கார்த்திகேசுக் குருக்கள் நடத்துகின்றார்.

சிவாச்சாரியாருக்கு மாதவேதனமும் அர்ச்சனை பணமும் வழங்கப்படுகிறது. குடியிருப்பதற்கான வீடும் வழங்கப்பட்டு உள்ளது.

## கும்பாபிஷேகம்

மூன்றுமுறை கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ள போதும் முதல் இருமுறை நடைபெற்ற நக்ஷத்திரங்கள் தெரியவில்லை. திகதிகள் பின்வருமாறு : 01. 26. 1913, 04. 09. 1968, 11. 06. 1992 (ஆங்கீரஸ ஆண்டு வைகாசி 29ஆம் நாள் வியாழக்கிழமை)

## தற்போதுள்ள கோவில் பரிபாலன முகாமை

தர்மகர்த்தா :
திரு. பாலகுமார் மகாதேவா

நிர்வாகப் பொறுப்பு :
பிரம்மஸ்ரீ. கு. கார்த்திகேசுக் குருக்கள்

கணக்காளர் ஒருவரும் நிர்வாகப் பணி களுக்கு உதவி புரிகின்றார்.

## ஆலய வரலாறு

19ஆம் நூற்றாண்டில் இலங்கையில் வாழ்ந்த சித்தர்களில் ஒருவரான ஆனைக்குட்டி சாமியாருடன் திரு. சேர். பொன் அருணாச்சலம் அவர்கள் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தார். அச்சித்தர் ஜீவசமாதி அடைந்தார். அச்சித்தருக்காக கடற்கரைக்கு அண்மித்ததாக ஒரு சமாதியை கட்டி அதனை அருணாச்சலம் அவர்கள் வணங்கியும் வந்தார். பின்னர் அச்சித்தரின் நினைவாக அச்சமாதியில் எழுப்பப்பட்டதே அருணாச்சலேஸ்வரர் ஆலயமாகும். திருப்பணிகளைச் செய்து கோவிலாகக் கட்டி எழுப்பிய பின்னர் 01. 26. 1913 இல் முதல் முறையாக மஹாகும்பாபிஷேகம் நடைபெற்று இன்றுவரை சிறப்பாக மக்கள் நம்பிக்கையை வென்று திகழ்வது இவ்வாலயமாகும்.


## கலை நிகழ்ச்சிகள்

அறநெறிப் பாடசாலை மாணவரின் பண்ணிசை, சில கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## ஆலய அறப்பணிகள்

அகதிகளுக்கு உதவுதல், வறிய பாடசாலை மாணவருக்கு உதவுதல், அனாதைகளுக்கு உதவுதல், வறிய பாடசாலைகளுக்கு உதவுதல் போன்றன.

# சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்



*சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் கோவில்*
*359, காலி வீதி*
*கொழும்பு - 04*

## ஆலய அமைப்பு

கொழும்பு பம்பலப்பிட்டி காலி வீதி 359ஆம் இலக்கத்தில் இவ்வாலயம் அமைந்துள்ளது. இங்கு மூலஸ்தானத்தில் மாணிக்க விநாயகர் அமர்ந்திருந்து அருள்பாலிக்கின்றார். மூலவருக்கு முன்னால் கருவறையில் மூஷிகம், பலிபீடம் என்பன அமைக்கப் பட்டுள்ளன. மூலஸ்தானம் மேற்கு வாசல் மூலஸ்தான கோபுரம் ஐந்து தள விமானம் உடையது. மூலஸ்தானத்தை அடுத்துள்ள அர்த்த மண்டபத்திலே பரிவார மூர்த்திகள் உள்ளனர். தூண்களில் அஷ்டலக்ஷ்மிகளும் அஷ்ட மங்கலப் பெண்களும் வடிவமைக்கப் பட்டுள்ளனர். அதனை அடுத்துள்ள அலங்கார மண்டபத்தில் கலைநிகழ்ச்சிகள், திருமண நிகழ்வுகள் நடைபெறுகின்றன. கொடித் தம்பம் இல்லை. உள்வீதியில் வாயிலின் இடதுபுறம் துவார கணபதியும் வலதுபுறம் பழனியாண்ட வரும் உள்ளனர். வட திசையில் பஞ்சமுக விநாயகர், வசந்த மண்டபத்தில் துர்க்கை, வள்ளி தேவசேனா ஸமேத சுப்பிரமணியர், விநாயகர், மணிவாசகர் என்போர் உள்ளனர். வடகிழக்கில் நவக்கிரகங்கள் உள்ளன. தென்கிழக்கில் யாகசாலை உண்டு. தெற்கு வீதியில் துர்க்காதேவி தனிச்சந்நிதியாக உள்ளது. பைரவர் அடுத்து இடும்பன் தனிச் சந்நிதியில் உள்ளார். பரிவார தெய்வங்கள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனி விமானங்கள் உள்ளன. விமானங்களில் அழகிய சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன.

இராஜகோபுரம் சப்த தளங்களைக் கொண்டது. விநாயகரின் திருவிளையாடல் களைச் சித்தரிக்கும் திருவுருவங்களும் சிவன், முருகன் என்போரின் திருவிளையாடல்களும் செதுக்கப்பட்டுள்ளன. வெளிவீதியில் மூலஸ்தானத்திற்கு நேராக மணிக்கூண்டு கோபுரம் உண்டு. ஈசான மூலையில் கிணறு உள்ளது. வடமேற்கில் தேர்முட்டி உண்டு.

## பூஜை ஒழுங்குகள்

தினமும் மூன்றுகாலப் பூஜை நடைபெறு கின்றது. திருவனந்தல், காலைப்பூஜை, மாலைப்பூஜை என்பனவே நடைபெறுகிறது. வெள்ளிக்கிழமை மாலைப்பூஜையின்பின் கூட்டுப் பிரார்த்தனை இடம்பெறும். பிரசாத மாக விநாயகருக்குரிய அவல், மோதகம், கடலை போன்ற நைவேத்தியங்கள் படைக் கப்படும். நவக்கிரகங்களுக்கு ஏற்ற வகையிலே பைரவருக்குரிய நைவேத்தியம், புளியோதரை வழங்கப்படும்.

மாதச் சிறப்பு நாட்களான மாதச்சதுர்த்தி, மாதப் பூரணை, மாத சஷ்டி, சங்கடஹர சதுர்த்தி என்பனவும் விசேஷமாக அனுஷ்டிக் கப்படுகிறது. ஆடிப்பூரத்திற்கு அடியார்கள் விரதமிருந்து பாற்குடம் தலையில் சுமந்து மயூரபதி அம்பாள் ஆலயத்திற்கு பவனி செல்வர்.

விசேஷ காலங்களில் 16 வகை சோடஷோபசாரப் பொருட்களால் அலங்காரப் பூஜைகள் நடைபெறும்.

## திருவிழாக்கள்

வருடாந்த மஹோற்சவம் நடைபெறுவ தில்லை. ஆனால் வருடந்தோறும் வரும் கும்பாபிஷேக தினத்தை அந்தமாகக் கொண்டு 10 நாட்கள் பஞ்சமுக விநாயகருக்கு இலட்சார்ச்சனை நடைபெறும்.

நவராத்திரி 9 நாட்களும் இலட்சார்ச்சனை நடைபெற்று விஜயதசமி அன்று சுவாமி உள்வீதி, வெளிவிதி வலம் வருவார்.

மாதாந்த சதுர்த்தி தினங்களில் நவகலச அபிஷேகம் நடைபெற்று விசேஷ பூஜை ஆராதனைகளுடன் வேதபாராயணம் நிறைவுபெற விநாயகப்பெருமான் சிறிய தேரில் உள்வீதி வலம் வருவார்.

கந்தசஷ்டி 6 நாட்களும் விசேஷ பூஜை இடம்பெற்று ஆறாவது நாள் சுவாமி உள்வீதி, வெளிவீதி உலா வருவார். அடுத்தநாள் பாரணையிலன்று சிறப்பு பூஜை நடைபெறும். மாலை வள்ளி தெய்வானை திருக்கல்யாண உற்சவம் நடைபெறும்.

பிள்ளையார் கதை 21 நாட்களும் சிறப்பான பூஜைகள் நடைபெறும். விநாயகர் சஷ்டிக்கு பஞ்சமுக விநாயகர் உள்வீதி, வெளிவீதி வலம் வருவார். மஹாசிவராத்திரி கொண்டாடப்படும். சூரன்போர் நடைபெறுவதில்லை.

இந்துக்களின் அனைத்து விசேஷ தினங்களிலும் சிறப்பு பூஜைகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய பரிபாலனம் சம்மாங்கோட்டார் சமூகத்தினருக்கே உரிமையாக்கப்பட்டுள்ளது. அவர்களின் வழித் தோன்றல்களே வழிவழியாக நிர்வகிக்கின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

இறுதியாக 2001. 08. 24 அன்று காலை 7.55 மணியளவில் இராஜகோபுரம், மூலஸ்தான கோபுரம், மூலவர் ஏனைய மூர்த்தங்களுக்கு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## ஆலய வரலாறு

1900 ஆண்டு முற்பகுதியில் கதிர்காமத்தில் கொலரா நோய் பரவிய காரணத்தினால் அப்போதைய ஆங்கிலேய ஆட்சியாளர், பிறமாவட்டத்தவர் கதிர்காமம் செல்வதைத் தடைசெய்தனர். கொழும்பிலிருந்து கதிர்காம யாத்திரை புறப்பட்டவர்களும் திருப்பி அனுப்பப்பட்டனர். கதிர்காம கந்தனை தரிசிக்க வழியில்லாது கவலைப்பட்ட இவர்கள் கொழும்பில் ஒரு கோவிலை நிர்மாணிக்க முயன்றதன் விளைவே இவ்வாலயம் ஆகும். 1ஆம் குறுக்குத்தெரு சம்மாங்கோட்டார் ஆலய நிர்வாகத்தினர் 1909 ஆம் ஆண்டு பம்பலப்பிட்டியில் நிலத்தைக் கொள்வனவு செய்து 1910ஆம் ஆண்டு இவ்வாலயத்தை கட்டினர். யாத்திரிகர்களுக்கு அன்னதானம் வழங்கவென மடம் ஒன்றும் ஆலயத்தின் அருகில் கட்டப்பட்டது. இவ் ஆலயம் அமைந்தபின் கொழும்பில் ஆடிவேல் விழாவை சிறப்பாக நடாத்தத் தொடங்கினர். 1960இற்குப்பின் ஆலய நிர்வாகத்திற்கு புதிய நிர்வாக சபை அமைக்கப்பட்டது. 1983 இனக்கலவரத்தின் போது இவ்வாலயத்திலேயே மக்கள் புகலிடம் அடைந்தனர். 1994இற்குப் பின் இயங்கிய அறங்காவலர் சபை மூலஸ்தானம், மண்டபம் என்பவற்றை விரிவுபடுத்தியது. 1996இல் அடிக்கல் நாட்டு வைபவம் நடந்து திருப்பணி ஆரம்பமாகி 5 1/2 ஆண்டுகளின் பின் ஏழுதள இராஜகோபுரம், மூலஸ்தான கோபுரம், பரிவார மூர்த்திகளான இடும்பன், தண்டாயுதபாணி, துர்க்கை, துவார கணபதி, நவக்கிரகங்கள் என்பவற்றிற்கு தனிச் சந்நிதிகள் விசாலமான அலங்கார மண்டபம், மணிக்கோபுரம், ஆலயமுன் வாயிற்கோபுரம், தேர்ச்சாலைக் கோபுரம் என்பன விரிவுபடுத்தப்பட்டன. ஆலயத்திற்குப் பின்னால் திருமண மண்டபம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது.

## கலை நிகழ்ச்சிகள்


ஆன்மிக சொற்பொழிவுகள், இசைக் கச்சேரிகள், கதாப்பிரசங்கங்கள் நடைபெறுகின்றன.

## சிவாச்சாரியார் குடும்பப் பரம்பரை

100 வருடங்களின் முன் பூசகராக இருந்த சிவராமலிங்க குருக்களின் பரம்பரையினரே தொடர்ந்தும் பூசகராக இருந்து வருகின்றனர். சிவஸ்ரீ. பா. சிற்சபேசக் குருக்கள் பிரதம சிவாச்சாரியாராக தற்போது இருந்து வருகின்றார்.

# ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்

**(தம்பையா சத்திரம்)**



ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
30, சாந்த அந்தோனியார் தெரு
கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு தம்பையா சத்திரம் என்றழைக் கப்படும் கோவில் (சாந்த அந்தோனியார் தெரு 30ஆம் இலக்கத்தில்) மூலமூர்த்தியாக ஸ்ரீ சித்தி விநாயகர் பெருமான் எழுந்தருளி அருள் புரிகின்றார். இவ்வாலயத்தின் நீளம் 40 அடி, அகலம் 20 அடியாக அமைந்துள்ளது. உள்வீதி சுவரின்றி உள்ளது. ஆலயத்தை வலம் வந்தால் இலக்குமி, தண்டாயுதபாணி, நாகர், நடராஜர், அம்பாள், எழுந்தருளி விநாயகர், சிவகாம சுந்தரி ஆகிய மூர்த்தங்கள் காட்சி அளிக்கின்றன. வசந்த மண்டபம் உள்ளது. துவஜஸ்தம்பம் இல்லை. ஆலய உபயோகத் திற்குக் கிணறு உண்டு.

எழுந்தருளித் திருமேனிகளாக சீதேவி பூதேவி மஹாவிஷ்ணு, கிருஷ்ணர் காட்சி தருகின்றனர்.

ஆலயத்தில் 300 கிலோ எடையுள்ள வெண்கலத்தாலான கண்டாமணி உண்டு.

ஆலய வளவில் 15 அறைகள் கொண்ட விடுதி, மண்டபம் உண்டு. குருக்கள், உதவிக் குருக்கள், கணக்கப்பிள்ளை, பூக்காரன் பல வேலைகாரர் எழுவர், காவலாளி, தோட்டக் காரன் போன்றோர் தங்க விடுதி அறைகள் பயன்படுகின்றன. மண்டபத்தில் அன்ன தானம் போன்ற நிகழ்வுகள் இடம்பெறும்.

## பூஜை ஒழுங்குகள்

தினந்தோறும் ஐந்துகால பூஜைகள் நியமமாக அந்தண சிவாச்சாரியாரால் ஆகம முறைப்படி நடைபெறுகின்றன. (காலை5.30, 7.30, 10.30, மாலை 5.30, இரவு 8.00 மணிக்கு அர்த்தஜாம பூஜை) ஆலயப் பணிகளுக்கு குருக்கள், உதவிக் குருக்கள், பூக்கட்டுவோர், பலவேலைகாரர் முதலியோர் உள்ளனர்.

நாளாந்த பூஜை, விசேஷ பூஜைகளில் அமுது, மோதகம், கடலை, சுண்டல், சர்க்கரைசாதம், புளிச்சாதம் முதலியன நைவேத்திய வகைகளாக உள்ளன. விபூதிப் பிரசாதம் வழங்கப்படுகின்றன.

மாத சதுர்த்தித் திருவிழா, வன்னி மரத் திற்கு அபிஷேகம், முதலியன உபய அடிப்படையில் நிகழும். இலக்குமி, தண்டாயுதபாணிக்கு வெள்ளியினாலான அங்கி இருக்கின்றது. ஸ்நபன அபிஷேகங் களும் இடம்பெறும்.

பூஜா உபகரணப் பொருட்கள் அனைத்தும் உள்ளன. பூஜகருக்கு மாத வேதனம், தெட்சணை, அர்ச்சனையும் பூஜகருக்கு உண்டு. விசேஷ தினங்களில் உபயகாரர் தரும் தெட்சணை, தீபாவளிக்கு வேட்டி சால்வை முதலியனவும் அளிக்கப்படுகின்றன.

## திருவிழாக்கள்

ஆவணி சதுர்த்தி, மார்கழி விநாயக ஷஷ்டி ஆகிய காலங்களில் காலை சங்காபிஷேகம் நடைபெற்று மாலை விசேஷ பூஜை வசந்த மண்டபத்தில் இடம்பெறும். அனைத்து உபயங்களும் தர்மகர்த்தாக்கள் வழியே நிகழ்த்தப்படுகின்றன. பிள்ளையார் கதை இருபத்தொரு நாட்களும் நவராத்திரி 10 நாட் களும் சிறப்பு பூஜை, வழிபாடுகள் இடம்பெறு கின்றன.

உபயகாரர் வழிபடுவோர் போன்ற ஒழுங்கு கள் குலக்குமும அடிப்படையிலேயே நடை பெறுகின்றன.

## ஆலய நிர்வாகம்

குடும்ப வழி உரிமைகொண்டு நிகழ்த் தப் படுகின்றது. ஆலய நிர்வாகம் செம்மையாக நடைபெறுவதற்கு ஐந்து பேர் கொண்ட பரிபாலன சபை உண்டு. இதற்கான ஒழுங் கமைப்பும் ஆட்சியாப்பு முறையும் பாரம்பரிய முறைப்படியே நடைபெறுகின்றன.

## இப்பொழுதுள்ள கோவில் பரிபாலன முகாமை

திரு. முருகேசு பிரதாப் (தர்மகர்த்தா) தொழிலதிபர்
திரு. செல்லமுத்து உமேசா
திரு. நாகேந்திரா
க. உமாதேவி
சோமநாதன் மங்களேஸ்வரி

## கும்பாபிஷேகங்கள்

திராவிடக் கட்டிடக்கலை வடிவாகக் கட்டப்பட்ட இவ்வாலயத்தில் ஐந்து முறை கும்பாபிஷேகங்கள் நடந்துள்ளன. இறுதியாக 2000ஆம் ஆண்டில் இந்நிகழ்வு இடம்பெற்று உள்ளது.

## ஆலய சொத்து சம்பந்தமான விபரங்கள்

அசையாச் சொத்தாக மாரவில லீகல் எஸ்டேட், முன்னேஸ்வரத்தில் தென்னந் தோட்டம், அசையும் சொத்துக்களாக கோவிலிற்குரிய பொருட்களும் உள்ளன.

## கலை நிகழ்வுகள்

விசேஷ தினங்களில் சமய சொற்பொழிவு இடம்பெறும்.

## ஆலய அறப்பணிகள்

அன்னதானம், வெள்ள நிவாரண உதவி, வதிரி முதியோர் இல்லத்திற்கு (சிவானந்த ஆச்சிரமம்) பாய், தலையணை, மருந்து, உணவு போன்ற உதவிகள், மருதடி பிள்ளை யார் திருவிழாவிற்கு உபயம், நவாலி விஷ்ணு கோவிலிற்கு உதவி, விவேகானந்த பாடசாலை க்கு நிலம் கொடுத்தது, அநாதைகளுக்கு உதவிகள் அளிக்கப்படுகின்றன.

## ஆலய வரலாறு

மிகவும் பழமை வாய்ந்த கோவிலும் இச் சத்திரமானதும் 1880ஆம் ஆண்டு தம்பையா முதலியார் அவர்களால் இந்தியாவிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் கதிர்காமம் போக வரும் யாத்திரிகர்கள் தங்கி இளைப்பாறிச் செல்லுவதற்காகக் கட்டப்பட்டது. மேலும் இவ்வடியார்கள் வணங்கிச் செல்லவென ஒரு விநாயகர் சிலையையும் அன்று வேரோடி இருந்த வன்னி மரத்தின்கீழ் ஸ்தாபித்து வைத்தார். இன்று இக்கோவில் முன்னேற்ற மடைந்து ஒரு பெயர்பெற்ற தலமாக உருவாகியபோதும் அடியார்கள் இன்றும் வன்னி மரத்தை வணங்கிச் செல்வதைக் காணக்கூடியதாக இருக்கிறது. இதை உருவாக்கிய தம்பையா முதலியார் அவர்கள் இலங்கையின் 1ஆவது (Municipal council) மாநகரசபை உறுப்பினராகத் திகழ்ந்தார். இவர் கொழும்பு பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் ஸ்தாபகரான பொன்னம்பலம் முதலியார் அவர்களின் உறவினருமாவார்.

Sir.P. இராமநாதன் அவர்கள் நன்னித்தம்பி முதலியாரின் மாமனார் ஆவார். தம்பையா முதலியாரின் மறைவிற்குப் பின்னர் 1932ஆம் ஆண்டு இச்சத்திரம் மகன் சண்முகம் முதலி யாரிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரது மறைவிற்குப் பின்னர் 1946ஆம் ஆண்டு நீதிமன்றத்தால் Prof.T. நடராஜா அவர்களின் தாயாரான சிவானந்தம் தம்பையா அவர்கள் Sir. பொன்னம்பலம் அருணாசலம் அவர்களின் புதல்வி ஆவார். இன்றுவரை இக்கோவி லானது Prof. T. நடராஜா அவர்களின் மேற்பார்வையில் திறம்பட நிர்வகித்து வருகின்றது. மேலும் இச்சத்திரத்தின் மகிமை யாதெனில் பெயர்பெற்ற சுவாமிகளான சுவாமி விவேகானந்தர், சுவாமி சிவானந்தர், கண்ணையா யோகி, சிவபால யோகி ஆகி யோரும் தங்கி இளைப்பாறிச் சென்றமை யாகும்.

# ஸ்ரீ இலங்கமா காளியம்மன் கோவில்



ஸ்ரீ இலங்கமா காளியம்மன் கோவில்
38/35, இரட்ணம் வீதி
கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு 38/35 இரட்ணம்வீதி கொச்சிக் கடையில் ஸ்ரீ இலங்கமா காளியம்மன் ஆலயம் அமைந்து அதில் மூலப்பிழம்பாக அம்பிகை, வடக்குநோக்கி எழுந்தருள அருள் பாலிக்கின்றாள். இவ்வாலயம் 75அடி நீளமும் 25 அடி அகலமும் கொண்டது 30 அடி உயரத்தில் மூன்று நிலைகள் கொண்ட இராஜ கோபுரம் தூல மூர்த்தமாக அமைந்துள்ளது.

துவஜஸ்தம்பம் இல்லை. பலிபீடமாக சிம்மம் அமைந்துள்ளது. திருச்சுற்று வலம் வந்தால் விநாயகர் கருப்பண்ணசாமி, பைரவர், ராகு, கேது, நாகதம்பிரான், சிவன், அம்மன் காட்சி வழங்குகின்றனர். எழுந்தருளி மூர்த்தங்களாக முத்துமாரி அம்மன் மஹாகாளி, ஐயப்பன் காணப்படுகின்றது.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் நான்கு கால பூஜைகள். காலை 7.00, மதியம் 10.30, மாலை 6.00, இரவு 8.00 மணி அர்த்தஜாம பூஜையுடன் நிறைவு பெறும். அந்தணரைக் கொண்டே பூஜைகள் நடத்தப்படுகின்றன. அவர்களுக்கு மாத வேதனம், அர்ச்சனைப் பணம், தெட்சணை அளிக்கப்படுகின்றன.

வெள்ளிக் கிழமைகளில் பஜனை இடம் பெற்று பிரசாதம் வழங்கப்படும். ஆலயத்தின் தூய்மையைப் பேணுவதில் தொண்டர்கள் ஈடுபாடு காட்டுகின்றனர்.

நாளாந்த பூஜையில் பால், காற்கறி சாதம், சுத்தான்னம் போன்றவை நிவேதனமாகவும் விசேஷ பூஜைகளில் பொங்கல், கடலை, புளி சாதம், மோதகம், வடை, அவல் போன்றவை கள் நிவேதனமாகவும் கொள்ளப்படுகின்றன.

அபிஷேகம், அர்ச்சனை போன்றவை களுக்குப் பற்றுச்சீட்டுமுறை பின்பற்றப்படு கின்றது. பூஜைக்குரிய சோடஷோபசார உபகரணங்கள் உள்ளன.

## திருவிழாக்கள்

அலங்கார உற்சவமாக நிகழ்த்தப்படு கின்றது. மாசிமகத்தை நிறைவு நாளாகக் கொண்டு பத்துநாட்கள் உற்சவம் உண்டு.

உற்சவகாலங்களில் கணபதிஹோமம், சங்காபிஷேகம், பூஜை வழிபாடு நிறைவுற்று அம்மன் வீதிவலம் வருவார்.

திருவிழாக்களுக்கு நிரந்தர உபயகாரர்கள் இல்லை. ஆண்டிற்கு ஆண்டு வெவ்வேறு உபயகாரர்கள் திருவிழாவினை நடத்துவர்.

ஆவணி சுவாதி நட்சத்திரத்தில் வரும் வருஷாபிஷேகத்தில் செக்கடித்தெரு ஆலயத்தினின்று தேரைப்பெற்றுத் தேர்த் திருவிழா நடைபெறும்.

இந்த ஆலயத்திற்கென கேடகம் மட்டுமே உள்ளது. நவராத்திரி விழா 10 நாட்கள் நடை பெற்று மானம்பூத் திருவிழா இடம்பெறும். கந்தசஷ்டி ஆறு நாட்களும் மாரியம்மன் விழாவும் நடைபெறும். வதிவிட அடிப்படை யில் மும்மதத்தவர்களும் ஆலயம் வந்து அம்பிகையை வழிபடுவர்.

## ஆலய நிர்வாகம்

குடும்பவழி உரிமையில் ஆலயம் பரிபாலிக்கப்படுகின்றது. தற்பொழுது ஆலய தர்மகர்த்தாவாக பணிசெய்பவர் சி. சத்திய நாதன் அவர்கள்.

## கும்பாபிஷேகங்கள்

*1986, 1996, 2000 இராஜகோபுரத்துடன்*

## கலை நிகழ்வுகள்

சிவராத்திரி, நவராத்திரி காலங்களில் இசை, நடனம், பஜனை முதலியன இடம் பெறும்.

## ஆலய வரலாறு

1871இல் முனிசாமிபிள்ளை என்பவரால் அம்மன் எழுந்தருளி விக்கிரகமாக வைத்து பூசிக்கப்பட்டு வந்தது. 1982இல் பொதுமக் களின் உதவியால் ஒரு சிறு கோவில் அமைக் கப்பட்டும் 1986இல் நிருத்த மண்டபத்துடன் ஆலயம் விஸ்தரிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றும் 1999இல் மேலும் விரிவுபடுத்தி 2000இல் இராஜகோபுரத்துடன் மஹாகும்பாபி ஷேகம் நடைபெற்றது.

# ஸ்ரீ மஹாகாளியம்மன் ஆலயம்
## (பரடைஸ் பிளேஸ்)



ஸ்ரீ மஹா காளியம்மன் ஆலயம் (பரடைஸ் பிளேஸ்)
59, பரடைஸ் பிளேஸ், ஆமர் வீதி
கொழும்பு - 12

## ஆலய அமைப்பு

கொழும்பு இலக்கம் 59 பரடைஸ் பிளேஸ், ஆமர்வீதியில் ஸ்ரீ மஹாகாளியம்மன் ஆலயம் சுமார் 12 பேர்ச் காணியில் அமைந்துள்ளது. மூலமூர்த்தியாக அம்மன் ஸ்ரீ மஹாகாளி வீராசனத் திருக்கோலத்தில் எழுந்தருளி அருள் மொழிகின்றாள்.

எழுந்தருளித் திருமேனிகளாக விநாயகர், காளியம்மன், ஸ்ரீ வள்ளி தேவசேனாபதி ஸமேத ஸ்ரீ முருகன், அஸ்திரதேவர், சண்டேஸ்வரி, ஐயப்பசுவாமி மூர்த்தங்கள் உள்ளன.

துவஜஸ்தம்பம் இல்லை.

மாநகரசபைக்குச் சொந்தமான காணியில் ஆலயம் அமைந்துள்ளது.

இராஜகோபுரம், கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மஹாமண்டபம் வசந்த மண்டபம், பரிவார மூர்த்திகளுக்கான திருக்கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளன.

## பூஜை ஒழுங்குகள்

ஆறுகால பூஜைகளாக காலை 5.30 மணிக்கு தொடங்கி 6.30, 10.30, மாலை 5.00, 6.30, 8.00 மணிக்கு அர்த்தஜாம பூஜையுடன் நிறைவுபெறும்.

வெள்ளிக்கிழமை போன்ற விசேஷ தினங்களில் நண்பகல் 12.00 மணிக்கு உச்சிக்கால பூஜையும் இரவு 9.00 மணிக்கு அர்த்தஜாம பூஜையும் நடைபெறும்.

இவ்வாலயத்தில் முதலில் சூரிய, சந்திரர்களுக்கும் தலவிருட்சத்தில் வீற்றிருக்கும் விநாயகருக்கும் பூஜை வழிபாடு நடைபெற்ற பின்பே ஸ்ரீ மஹாகாளியம்மனுக்கு பூஜை நடைபெறுவது வழக்கம்.

ஆலய தலவிருட்சமாக அரசும், பனையும் பின்னிப்பிணைந்திருப்பது அபூர்வமானதாகும்.

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் ஈசானன் ஆகிய அஷ்டதிக்கு பாலகர்களுக்கும் நித்திய பலிபீட பூஜை நடைபெற்று அம்பாளுக்குக் காலைப் பூஜையும் மாலைநேரம் சாயரக்ஷை பூஜையும் நடைபெறும். நித்தியாக்கினி பூஜை நடைபெறுவதும் உச்சிக்கால கோபூஜையும் இவ்வாலயத்தில் சிறப்பானதாகும். நித்திய உற்சவ அம்மன் உள்வீதிஉலா வந்து அஷ்ட பலிபீடபூஜை நடைபெற்றபின்னரே சண்டேஸ்வர பூஜை நடைபெறும். உப்பு நேர்த்தி இவ்வாலய சிறப்பு வழிபாடாகும்.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இராகுகால பூஜை வெகுவிமரிசையாக நடைபெறுகின்றது.

மாத பௌர்ணமி தினங்களில் 108 சங்காபிஷேகம், ஸ்ரீ சக்ர பூஜை, கோபூஜையும் வசந்த மண்டப பூஜையுடன் உற்சவ அம்பாள் வெளிவீதி வலம் வரும் திருவிழா நடைபெறும்.

பூஜைகளை நடாத்த இரண்டு பிரதம குருக்கள்மாரும் அவர்களுக்கு உதவியாக ஒருவரும் பலவேலைப் பணிகளுக்கு ஆட்களும் உண்டு.

## திருவிழாக்கள்

ஸ்ரீ மஹாகாளியம்மன் ஆலய வருடாபிஷேகத் திருவிழா தை மாதம் பூர்வபக்ஷ அத்த நக்ஷத்திரத்தில் நடைபெறும். முதல் பத்து நாட்களும் காலையும் மாலையும் சங்காபிஷேகமும் இலட்சார்ச்சனை வெகு விமரிசையாக நிகழும். பதினான்கு நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் 11ஆம் நாள் நவோத்திர ஸஹஸ்ர சங்காபிஷேகமும் 12ஆம் நாள் தேர்த்திருவிழா, 13ஆம் நாள் திரு ஊஞ்சல், 14ஆம் நாள் தீர்த்தமும் இடம் பெறும். 8ஆம் நாள் கரகம் பாலித்தல் நடைபெறும். உற்சவ காலத்தில் தீ மிதித்தல், கற்பூரச்சட்டி எடுத்தல், பால்குட பவனி, அன்னதானம் போன்றவை நிகழும்.

12ஆம் நாள் நடக்கும் தேர்த் திருவிழாவில் மூன்று தேர்கள் பவனி வரும் முதல் தேரில் விநாயகரும் இரண்டாம் தேரில் அம்பிகையும் மூன்றாம் தேரில் வள்ளி தெய்வானை ஸமேத

ஸ்ரீ சுப்பிரமணியப் பெருமானும் திருவீதி உலா வருவார்.

14ஆம் நாள் தீர்த்தத் திருவிழா முகத்து வாரம் சங்குமுகத்தில் நடைபெறும். தீர்த்தம் நடைபெற்று பாலத்துறை, சேதவத்தை, பலாமரச்சந்தி, பபாபுள்ளே தோட்டம், கிராண்ட்பாஸ் வீதியூடாக அம்பிகை ஆலயம் வந்தடைவாள். அதன்பின் மகேஸ்வர பூஜையும் மாலை பைரவருக்கும் பத்ரகாளி யன்னைக்கும் மடைபரவி பொங்கல் வழிபாடு நடைபெறும். தேர்கள் நிறுத்துவதற்கு தேர்க் கொட்டகைகள் உண்டு. 1975இல் முதன்முத லாகத் தேர்த்திருவிழா நடைபெற்றது.

இது தவிர ஆவணிமாதம் அம்பிகைக்குத் திருக்குளிர்த்தி விழா நடைபெறும். பங்குனி நான்கு திங்களிலும் திருக்கோவில் முற்றத் தில் பொங்கல் வைத்து படையலிட்டு வழிபடு வர்.

கந்தசஷ்டி ஆறு நாட்களும் உபய பூஜை கள் உண்டு. அனைத்து இனத்தினரும் வழிபடும் இடமாக இவ்வாலயம் அமைந்து விளங்குகின்றது.

விநாயக சதுர்த்தி, மஹாசிவராத்திரி, வரலக்ஷ்மி நோன்பு, கௌரி நோன்பு போன்ற விழாக்களும் விமரிசையாக நடைபெறு கின்றன.

மேலும் தைமாதம் சியாமளா நவராத்திரி யும் சித்திரையில் வசந்த நவராத்திரியும் ஆடி மாதம் ஆஷாட நவராத்திரியும் புரட்டாசியில் சாரதா நவராத்திரியும் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றன. ஆடி ஆஷாட நவராத்திரி 10 ஆம் நாள் மஹாசண்டி ஹோமம் நடத்தப்படுகின்றது.

## ஆலய நிர்வாகம்

தேர்தல் முறையில் அறங்காவலர் சபை அமைக்கப்படுகின்றது.

திரு. ம. நல்லதம்பி (தலைவர்)

திரு. சி. தியாகலிங்கம் (செயலாளர்)

திரு. ம. குகானந்தன் (பொருளாளர்)

திரு. க. தியாகராசா (உப பொருளாளர்)

திரு. கு. அமிர்தலிங்கம்

திரு. S. M. D. மூர்த்தி

திரு. K. முத்துச்சாமி

சபையின் காப்பாளராக பிரம்மஸ்ரீ பிரதிஷ்டா சிரோன்மணி நவாலி சாமி. விஸ்வநாதக் குருக்கள் செயற்படுகின்றார்.

1976ஆம் ஆண்டு செப்டெம்பர் 13ஆம் நாள் ஸ்ரீ மஹாகாளியம்மன் ஐக்கிய சபை உருவாக்கப்பட்டு இதன் மூலமே திருவிழாத் திருப்பணிகள், ஆலயத் திருப்பணிகள், சமயப் பாடசாலை அனைத்தும் மேற்கொள்ளப்படு கின்றது.

ஆலயத்தின் ஒழுங்கமைப்பில் அறநெறிப் பாடசாலை ஒன்று இயங்குகின்றது.

## கும்பாபிஷேகங்கள்

இரண்டு முறைகள் கும்பாபிஷேக விழா நடத்தப்பட்டுள்ளது. 1949ஆம் ஆண்டும் அதன்பின் ஏறக்குறைய நாற்பத்தேழு ஆண்டுகளின்பின் யுவ வருடம் தைமாதம் 26ஆம் நாள் (9. 02. 1996) வெள்ளிக்கிழமை பஞ்சமி திதியும் அத்த நக்ஷத்திரத்தில் காலை 8.00 மணி 36 நிமிடம் முதல் 10.00 மணி 16 நிமிடம் வரையிலான மீன லக்கின சந்திர ஹோரையில் ஜீர்ணோத்தாரண புனரா வர்த்தன மஹா கும்பாபிஷேகம் பிரதிஷ்டா சிரோன்மணி பிரம்மஸ்ரீ நவாலி சுவாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களால் நிகழ்த்தப் பெற்றது.

## கலைநிகழ்வுகள்

பக்தி இசை கீதங்கள், வில்லுப்பாட்டு விசேஷ மேள நாதஸ்வர இசை போன்றவை கள் நிகழ்த்தப்படுகின்றன.

## ஆலய அறப்பணிகள்

ஆலயத்தின் சார்பாக அறநெறிப் பாடசாலை நடத்தப்படுகின்றது.

## ஆலய வரலாறு

கொழும்பில் தமிழர்கள் செறிந்து வாழுகின்ற ஒரு பகுதி பரடைஸ் பிளேஸ். இன்று இலங்கையில் பல பாகங்களில் இருந்தும் இந்து பக்தர்களும் தமிழர்களும் ஏன் சிங்கள பௌத்தர்களும் இஸ்லாமியர்களும் கிறிஸ்தவர்களும் இவ்வாலயத்தில் வீற்றிருந்து அருள்பாலிக்கும் அம்பாளின் சக்தியை உணர்ந்து கொழும்பு பரடைஸ் பிளேஸுக்கு வருகின்றனர்.

அரசும் பனையும் பின்னிப் பிணைந்த அபூர்வ தளத்திலே 1931ஆம் ஆண்டு இத்திருத்தலம் அமைந்தது.

இத்தல விருட்சங்களில் அன்று நாகமாக நிலைகொண்டு நாகத்தம்பாளாக அருள் பாலித்து வந்தவள் ஸ்ரீ மஹாகாளியம்பாள். இதனை உணர்ந்த அம்பாள் அடியார்கள் இவ்விருட்சங்களைச் சுற்றி மாடம் அமைத்து அதில் சூலாயுதத்தை வைத்து வணங்கத் தலைப்பட்டனர்.

அன்று கொழும்பு நகரமாக இருந்தாலும் கூட இம்மக்கள் கிராமிய வழக்கப்படியே பூஜைகளை நடாத்தி வந்தனர். அம்பாளின் சக்தி படிப்படியாக வெளிப்பட காலத்தின் கோலத்திற்கேற்ப இவ்வாலயத்தை கட்டி யெழுப்ப வாய்ப்புக் கிடைத்தது. அதற்கமைய கொழும்பு பரடைஸ் பிளேஸ் மக்கள் அனை வரும் அம்பாள் அருளால் அமரர் அ. குருசாமி அவர்கள் தலைமையில் ஒன்றிணைந்து 1949ஆம் ஆண்டு ஜூன் 24ஆம் திகதி இவ் ஆலயத்தைக் கட்டியெழுப்பத் திட்டமிட்டனர்.

அதற்கமைய தமிழகத்திலிருந்து சிற்ப சாஸ்திரியான ஆர். நாகலிங்கம் அழைத்து வரப்பட்டார். ஆவணி 3ஆம் திகதி வெள்ளிக் கிழமை திருப்பணி வேலைகள் ஆரம்பிக் கப்பட்டன. அவரது கைவண்ணத்தில் மூல மூர்த்தியான சப்தசதி ஸ்ரீ மஹா மாளியம்ம னுக்கு ஸ்ரீ முனீஸ்வரப் பெருமானுக்கும் ஸ்ரீ சூலாயுத மூர்த்திக்கும் கோபுரங்களுடன் கூடிய திருக்கோயில்கள் அமைக்கப்பட்டன.

இக் கோயில்களில் இவ் இஷ்ட தெய்வங் களின் திருவுருவச் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டு புரட்டாதி மாதம் 30ஆம் திகதி கும்பாபிஷேகம் நடாத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து வருடாவருடம் திருவிழா வெகுவிமரிசையாக கொண்டாடப்பட்டது. பத்து நாட்கள் நடைபெறும். இத் திருவிழா வில் முதல் நாளன்று காப்பு கட்டு வைபவம் இடம்பெறும். அதற்கடுத்த ஏழு நாட்களும் அம்பாளுக்கு விஷேட அபிஷேகங்களும் பூஜைகளும் நடைபெறும்.

எட்டாம் நாள் கொழும்பு பரடைஸ் பிளேஸி லிருந்து அருள்பாலிக்கும் அம்பாளுக்கு முகத்துவாரம் சங்கு முகத்தில் கரகம் பாலித்தல் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து கரகம், காவடி, தீச்சட்டிகள் என பக்தர்கள் புடைசூழ அம்பாள் முகத்துவாரம் ஆலயத்திலிருந்து பாலத் துறை, சேதவத்தை, பலாமரச்சந்தி, பபாபுள்ளேத் தோட்டம், கிராண்பாஸ் வீதியூடாக ஆலயத்தை வந்தடைவாள்.

ஒன்பதாம் நாள் காலை பாலாபிஷேகமும் மாலையில் மங்கல மங்கையரின் மாவிளக்கு பூஜையும் ஆலய முற்றத்தில் கலை நிகழ்ச்சி களும் இடம்பெறும். பத்தாவது நாளன்று பக்தர்களுக்கு மஞ்சள் நீராடி அம்மன் அருளைப் பெற்று சக்தி அடியார்களுக்கு அருள்வாக்குக் கூறுவர். அந்த அருளோடு சக்தி கரகமும் தீச்சட்டியும் ஏந்தி முகத்துவார சங்கு முகத்திற்குச் சென்று தீர்த்தமாடுவர். அதனைத் தொடர்ந்து பரடைஸ் பிளேஸ் ஸ்ரீ மஹா காளியம்மன் சன்னிதானத்தில் மகேஸ் வர பூஜை நடாத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும்.

முதன்முதலாக அம்பாள் வண்ண ரதத்தில் பவனி வந்து அருள்பாலிக்கும் காட்சியை காணக்கூடிய பாக்கியம் பரடைஸ் பிளேஸ் மக்களுக்கு 1975ஆம் ஆண்டு கிடைத்தது. 1976ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 13 ஆம் திகதி ஸ்ரீ மஹாகாளியம்மன்

ஐக்கிய சபை உருவாக்கப்பட்டது. இச்சபையின்மூலம் திருவிழா திருப்பணி களும் சமயப் பாடசாலைகளும் ஆலயத் திருப்பணிகளும் மேற்கொள்ளப்பட்டன.

1982ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 2ஆம் திகதி இத்திருக்கோவிலுக்குரிய தளபாடங்களைப் பாதுகாக்க பதினைந்து அடி கொண்ட இடம் ஒதுக்கப்பட்டு கட்டிடம் கட்டப்பட்டது. மீண்டும் பிரமோதூத வருடம் ஐப்பசி மாதம் முதலாம் நாள் (18. 10. 1990) வியாழக்கிழமை இத்திருக்கோவிலுக்கு பெரிய மண்டபம் ஒன்று அமைக்க அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது. மண்டப வேலை 1992ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 4ஆம் திகதி நிறைவுபெற்று அன்றைய வருடம் மார்கழி மாதம் திருவிழாவும் நடந்தேறியது.

1949ஆம் ஆண்டுக்குப் பின் அதாவது நாற்பத்திமூன்று வருடங்களுக்குப் பின் அதி சுந்தர ஆராமய விமானம், வசந்த மண்டபம், இராஜகோபுரம் அமைப்பதற்காக பிரம்மஸ்ரீ சுவாமி விஸ்வநாதக் குருக்கள் அவர்களால் ஆங்கீரஸ வருடம் தை மாதம் 28ஆம் நாள் (10. 02. 1993) புதன்கிழமை பாலஸ்தாபனம் நடாத்தப்பட்டது. இத்திருப்பணியின்போது கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மஹா மண்டபம், வசந்த மண்டபம் ஆகியவற்றுடன் பரிவார மூர்த்திகளுக்கும் திருக்கோவில்கள் அமைக்கப்பட்டன.

அத்துடன் ஸ்ரீ விநாயகப் பெருமான், ஸ்ரீ முருகப் பெருமான், சந்திரன், சூரியன், ரேணுகாதேவி, உற்சவதேவி, இச்சா சக்தி, கிரியாசக்தி, ஞானாசக்தி, ஸ்ரீ துர்க்காதேவி ஆகிய தெய்வங்களினதும் நவக்கிரகங்களினதும் திருவுருவச் சிலைகள் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

இந்தியாவின் உத்தரகோசமங்கை என்னும் இடத்தைச் சேர்ந்த சிற்ப சாஸ்திரக் கலைஞர் ஸ்ரீ வீ. நாகலிங்கம் ஸ்தபதி குழுவினரின் கைவண்ணத்தில் ஆலயத் திருப்பணிகள் யாவும் மேற்கொள்ளப்பட்டன.

யுவ வருடம் தை மாதம் 26ஆம் நாள் (09. 02. 1996) வெள்ளிக்கிழமை பஞ்சமி திதியும் அம்பாளின் நக்ஷத்திரமான அத்த நக்ஷத்திரமும் கூடிய காலை 8.00 மணி 36 நிமிடம் முதல் 10.00 மணி 16 நிமிடம் வரையில் மீன லக்கின சந்திர ஹோரையில் புனராவர்த்தன ஜீர்னோத்தாரண மஹா கும்பாபிஷேகம் நவாலியூர் பிரம்மஸ்ரீ சாமி விஸ்வநாதக் குருக்கள் பிரதிஷ்டா சிரோன்மணி (பரடைஸ் பிளேஸ் ஸ்ரீ மஹாகாளியம்மன் திருக்கோவில் போஷகர்) அவர்களால் நடாத்தி வைக்கப் பட்டது.

இத் திருக்கோவிலில் விஷேஷமாக முதலில் சூரியன், சந்திரனுக்கும் தலவிருட்ஷங்களான அரசும் பனையும் பின்னிப் பிணைந்த நிழலில் வீற்றிருக்கும் ஸ்ரீ விநாயகருக்கும் பூஜை செய்தபின் ஸ்ரீ விநாயகர் மூல மூர்த்தியும் சப்த சதி நாயகியாகிய ஸ்ரீ மஹா காளியம்மனுக்கும் ஸ்ரீ முருகனுக்கும் பூஜை நடைபெற்று ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும் பூஜை நடைபெறும்.

இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் ஆகிய எட்டு திக்குப் பாலகர்களுக்கும் நித்திய பலிபீட பூஜை நடைபெறும். அம்பாளுக்கு காலை பூஜையும் மாலை நேரம் சாயரக்ஷை பூஜையும் நித்திய அக்கினி பூஜையும் நடைபெறும். நித்திய உற்சவ அம்மன் உள்வீதி உலா வந்து அஷ்ட பலிபீட பூஜை நடைபெற்று சண்டேஸ்வர பூஜையும் நடைபெறும்.

தினந்தோறும் ஆறுகாலப் பூஜைகள் நடைபெறும்.

காலை 5.30 மணிக்கு திருவனந்தல் பால்பூஜை

காலை 6.30 மணிக்கு காலைச்சந்தி

காலை 10.30 மணிக்கு உச்சிக்காலம் கோபூஜை

மாலை 5.00 மணிக்கு சாயரக்ஷை

மாலை 6.30 மணிக்கு இரண்டாம் காலம்

இரவு 8.00 மணிக்கு அர்த்தஜாமம்

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் நண் பகல் 12.00 மணிக்கு உச்சிக்கால பூஜையும் இரவு 9.00 மணிக்கு அர்த்தஜாம பூஜையும் நடைபெறும்.

### ஸ்ரீ மஹாகாளியம்மன் திருக்கோவில் வருடாவருடம் வரும் விஷேட விழாக் களாவன :

வருஷாபிஷேகம், முதல் பத்து நாட்களும் காலையும் மாலையும் இலட்சார்ச்சனை வெகு விமரிசையாக நடைபெறும். தை மாதம் பூர்வபட்ச அத்த நக்ஷத்திரத்தில் வருஷாபி ஷேகம் சகஸ்ர சத சங்காபிஷேகம் நடை பெறும். ஆதிகாலந் தொட்டு கிராமிய முறை யில் நடைபெற்றதுபோல் இன்றும் கொழும்பு முகத்துவாரம் சங்கமத்தில் அம்பாள் அருளோடு தீ மிதிப்பும் இரதபவனி, பால்குட பவனியும் பாலாபிஷேகமும் மாவிளக்கு பூஜையும் நடாத்தப்பட்டு இறுதி நாளன்று மஞ்சள் நீராட்டத்துடன் கொழும்பு முகத்துவாரம் சங்கமத்தில் தீர்த்த உற்சவம் நடைபெறும். அதன்பின் மகேஸ்வர பூஜை நடாத்தப்பட்டு அன்னதானம் வழங்கப்படும். மாலை ஸ்ரீ பைரவருக்கும் ஸ்ரீ பத்ரகாளி யம்மனுக்கும் மடைபரவி பொங்கல் படைத்து பூஜை நடாத்தப்படும்.

இத் திருக்கோவிலில் நான்கு நவராத்திரி விழாக்கள் வெகுவிமரிசையாக கொண்டாடப் படுகின்றன.

முதலாவதாக தை மாதம் சியாமளா நவராத்திரியும் சித்திரை மாதம் வசந்த நவராத்திரியும் ஆடி மாதம் ஆஷாட நவராத்திரியும் புரட்டாதி மாதம் சாரதா நவராத்திரியும் நடைபெறும். இந் நவராத்திரி விழா அனைத்து ஆலயங்கள், பாடசாலை கள், வீடுகள், தொழிற் ஸ்தாபனங்கள் ஆகிய இடங்களில் விஷேடமாக நடைபெறுகிறது. சாரதா நவராத்திரியுடன் விஜயதசமி நடைபெறுவதுபோல ஆடி மாதம் ஆஷாட நவராத்திரி ஆரம்பிக்கப்பட்ட பத்தாம் நாள் மஹா சண்டிஹோமமும் நடாத்தப்படும்.

ஆவணி மாதம் திருக்குளிர்த்திப் பெருவிழா நடைபெறும். இவ்விழா வேறு எந்தவொரு ஆலயங்களிலும் நடைபெறுவதில்லை. இத்திருக்கோவிலில் இவ்விழா வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

மாதா மாதம் வரும் பௌர்ணமி நாளன்று விஷேஷமாக 108 சங்காபிஷேகமும் ஸ்ரீ சக்கர பூஜையும் கோபூஜையும் அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூஜையும் நடைபெறும். மாலை திருவிளக்கு பூஜை, வசந்தமண்டப பூஜை யுடன் உற்சவ அம்பாள் வெளிவீதி வலம் வருதலும் இடம்பெறும்.


பங்குனி மாதம் வரும் பங்குனித் திங்கள் நான்கிலும் இத் திருக்கோவில் முற்றத்தில் அடியார்கள் பொங்கல் வைத்து ஸ்ரீ பத்ரகாளி யம்மனுக்குப் படைத்து பூஜை செய்வர்.

செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் இராகுகாலப் பூஜை வெகு விமரிசையாக நடைபெறுகிறது.

### ஏனைய விசேஷங்களாவன :

விநாயகர் சமுர்த்தி, மஹாசிவராத்திரி, ஸ்கந்த ஷஷ்டி, வரலக்ஷ்மி நோன்பு, கௌரி நோன்பு இன்னும் விஷேஷ பூஜைகள் வெகு விமரிசை யாக நடைபெறுகின்றன. உப்பு நேர்த்தி வைத்தல் இவ்வாலயத்தின் பிரதான மரபு.

# ஸ்ரீ துர்க்கையம்மன் திருக்கோவில்



*ஸ்ரீ துர்க்கையம்மன் திருக்கோவில்*

*86/10, தட்டாரத்தெரு*

*கொழும்பு - 12*

## ஆலய அமைப்பு

கொழும்பு தட்டாரத்தெரு (சில்வர் சிமித் லேன்) 86/10 இலக்கத்தில் 5 பேர்ச்சில் அமைந்துள்ளது. இங்கு மூலமூர்த்தியாக எழுந்து அருள்பாலிப்பவர் ஸ்ரீ துர்க்கை அம்மன் இடமிருந்து வலமாக வந்தால் இடதுபுறம் பாலவிநாயகரும் வலதுபுறம் பாலமுருகனும் பைரவரும் அமர்ந்துள்ளனர்.

சிறிய வசந்தமண்டபம், சித்திரவேலைப் பாடுகளுடன் அழகாகக் காட்சி தருகின்றது. எழுந்தருளி விக்கிரகங்களில் விநாயகரும் முருகனும் செம்புத் திருமேனியராகவும் துர்க்கையம்பாள் ஐம்பொன்னாலும் வார்க்கப் பட்டுள்ளார். துவஜஸ்தம்பம் இல்லை. அலங்கார உற்சவங்கள் வருடந்தோறும் நடைபெறுகின்றன. பலிபீடம் உள்ளது.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் ஐந்துகால பூஜைகள் அந்தண சிவாச்சாரியரால் நடாத்தப்படு கின்றன. (அ.கா 6.00, மு.ப. 7.00, 10.00, பி.ப. 5.30, 7.30 அர்த்தஜாம பூஜையுடன் நிறைவு) செவ்வாய், வெள்ளி கிழமைகளில் ராகுகாலப் பூஜை நடைபெறும்.

மாதச் சிறப்பு நாட்களுக்கு விசேஷ பூஜைகள் இடம்பெறும்.

பூஜை செய்வதற்கு பிரதான குருக்களுடன் உதவிக் குருக்களும் உள்ளனர். இவர்களுடன் பலவேலைகாரர்களும் உதவிபுரிகின்றனர்.

நாளாந்த பூஜையில் தீர்த்தமும் விசேஷ பூஜைகளில் பொங்கல், வடை, கடலை, அவல், பஞ்சாமிர்தம், மேதகம் ஆகியன நிவேதிக்கப்படுகின்றன.

ஆலயத்திற்கு 'பூஜைபொருட்கள் சோடஷோபசார பொருட்கள் அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆலயத்தின் வருடாபிஷேகம் வைகாசி மாதம் நடைபெறும். பதினொரு நாட்கள் திருவிழா இடம்பெறும். உற்சவகாலங்களில் இலட்சார்ச்சனையும் ஸ்நபன அபிஷேகமும் இடம்பெறும். திருவிழாவின் நிறைவில் அம்பாள் வீதிவலம் வருவார். பன்னிரண்டாம் நாள் ஊஞ்லும் 13ஆம் நாள் பைரவர் மடையும் நடைபெறும்.

## வருஷாபிஷேக உபயகாரர்கள் :

| | |
|---|---|
| 1ஆம் நாள் | திருமதி துரைசிங்கம்<br>திரு. பொ. ராஜேந்திரன்<br>திரு. எஸ். சிவலிங்கம்<br>சம்பீம் டிரேடிங் கம்பனி |
| 2ஆம் நாள் | திரு. எஸ். குமரேந்திரன்<br>கேம்பிரிஜ் டிரேடர்ஸ்<br>திரு. சண்முகலிங்கம் |
| 3ஆம் நாள் | திரு. சுவேந்திரராஜா<br>கண்ணன் குரூப் ஒப் கம்பனி<br>திரு. கோபாலப்பிள்ளை<br>திரு. சிவஞானம் |
| 4ஆம் நாள் | திரு. வைத்தியலிங்கம்<br>திரு. குமாரவேலு<br>குமாரவேலு அன்ட் கோ |
| 5ஆம் நாள் | திரு. ராஜரத்தினம்<br>திரு. மங்களேஸ்வரன் |
| 6ஆம் நாள் | திரு. செல்லத்துரை<br>திரு. சதாசிவம் |
| 7ஆம் நாள் | திரு. பாலகிருஷ்ணன்<br>கிரிஷா மல்டி டிரேடர்ஸ்<br>திரு. கங்காதரன் |
| 8ஆம் நாள் | திரு. அரிதாஸ் அனுஷா<br>திரு. கிருஷ்ணகுமார் |
| 9ஆம் நாள் | திரு. சுந்தரம்<br>திரு. மயில்வாகனம்<br>ஜெய நித்திய கல்யாணி ஜுவலர்ஸ் |
| 10ஆம் நாள் | திரு. சந்திரபாலன்<br>திரு. எஸ். சந்திரசேகர்<br>திரு. எஸ். சுப்பிரமணியம் |

வருஷாபிஷேகத்தைத் தவிர மாதாந்த பௌர்ணமிகள், கார்த்திகை தீபம் என்பன

சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. நவராத்திரியின் பின் வாழைவெட்டு சிறப்பாகச் செய்யப்படுகிறது.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய நிர்வாகம் ஆரம்பத்தில் குடும்பவழி உரிமை உடையதாக இருந்தது. தற்போது திருப்பணிக் குழுவினர் இதனை நிர்வகிக்கின்றனர்.

## தற்போதுள்ள கோவில் பரிபாலன முகாமை

தலைவர்
திரு. மு. கேசவராஜா

உபதலைவர்
திரு. து. சரவணமூர்த்தி

உபதலைவர்
திரு. பொ. ராஜேந்திரன்

திருப்பணி சபை தலைவர்
திரு. எஸ். சந்திரசேகர்

பொருளாளர்
திரு. அழகேந்திரன்

செயலாளர்
திரு. ராஜீபாஸ்கரன்

சபை உறுப்பினர்கள்
திரு. சுவேந்திரன்
திரு. குணாளன்

தலைவரும் திருப்பணிச் சபையைச் சேர்ந்த எட்டுப்பேரும் ஆலய பரிபாலனத்தைச் செய்து வருகின்றனர். ஆலய பூசகருக்கு மாதாந்த வேதனமும் தட்சணை பணமும் வழங்கப்படுவதுடன் குடியிருப்பதற்காக ஒரு வீடும் வழங்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகங்கள்

10. 02. 1978 – பாலஸ்தாபனம்
03. 02. 1982 – மஹாகும்பாபிஷேகம்
11. 06. 2000 – மஹாகும்பாபிஷேகம்

## ஆலய வரலாறு

தட்டாரத் தெருவில் வசித்து வந்த திரு. அ. பெருமாள் செட்டியார் 86/10, என்னும் இலக்க இல்லத்தில் அம்பாளை பிரதிஷ்டை செய்து வழிபாடு செய்து வந்தார். இவருக்குப் பின் இவ்வழிபாட்டிடத்தை அவரின் குடும்பவழி வந்த பலரும் நிர்வகித்தனர். அவர்களுக்குப் பின் பொறுப்பேற்ற திரு. கலியப்பெருமாள், திரு. சுப்பிரமணியம் ஆகியோரால் அமைக்கப்பட்ட ஆலயத் திருப்பணிச் சபையால் கர்ப்பக்கிரகம், மஹாமண்டபம், கோபுரம் ஆகியன அமைக்கப்பட்டன. இதற்கான பாலஸ்தாபனம் 10. 02. 1978இல் நடைபெற்றது. அதற்குப்பின் 02. 03. 1982 இல் ஒரு மஹாகும்பாபிஷேகமும் அதற்குப் பின்னர் 11. 06. 2000 இல் மீண்டும் மஹா கும்பாபிஷேகமும் இடம் பெற்றுள்ளது. இவ்வாலயத்தின் வலது, இடது புறங்களின் மேற்சுவர்களில் அஷ்டலக்ஷ்மிகளும் நவதுர்க்கைகளும் வீற்றிருக்கின்றமை ஒரு சிறப்பம்சமாகும்.


## கலை நிகழ்ச்சிகள்

வருஷாபிஷேகத்தின்போது நாதஸ்வர கச்சேரி இடம்பெறும்.

## ஆலய அறப்பணிகள்

- இடம்பெயர்ந்து வந்த கடும்பத்திற்கு மாதாந்தம் 2000/= வீதம் மாதாந்தம் வாங்கி வருகின்றமை.
- வறிய மாணவர்களின் கல்விக்கான நிதி உதவிகள்.
- ஆலயத்தின் மேலதிக பொருட்களை ஏனைய ஆலயங்களுக்கு வழங்குதல்.
- சிறுவர் இல்லத்திற்கு உதவுதல். (சௌண்டஸ் பிளேஸ்)
- உண்டியலில் சேரும் நன்கொடைப் பணத்தில் 1/3 பங்கு பொது சேவைகளுக்கு வழங்குதல். (அகதிகள், அனாதைகள்)

# ஸ்ரீ உக்ர வீர மஹா காளியம்மன் கோவில்




ஸ்ரீமத் உக்ர வீர மஹா காளியம்மன் கோவில்
336-332, செட்டியார் தெரு
கொழும்பு - 11

## ஆலய அமைப்பு

336 - 332 இலக்க செட்டியார் தெரு கொழும்பு 11இல் ஸ்ரீமத் உக்ர வீர மஹா காளியம்மன் ஆலயம் அமைந்துள்ளது. ஆலய விஸ்தீரணம் 900 சதுர அடி.

25 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ள மூலஸ்தானத்தில் அம்பிகை எழுந்தருளி அருள்பாலிக்கின்றார். பலிபீடம் சிங்கம் அமைந்துள்ளன. கோபுர அமைப்பு உண்டு.

ஆலயத்தை வலமாக வந்தால் பிள்ளையார், தண்டபாணி, ஐயப்பன், பேச்சியம்மன், இசக்கியம்மன், நாகதம்பிரான், சந்தான கோபாலன், நவக்கிரகங்கள், பைரவர், சண்டேஸ்வரி, கருப்பண்ணசாமி ஆகிய மூர்த்தங்கள் காணப்படுகின்றன.

எழுந்தருளிகளாக ஆதிகாளி, ஸ்ரீகாளி, மஹாகாளி, சப்தமுக உக்ர வீரமஹாகாளி, ஸ்ரீ ஐயப்பன், அர்த்தநாரீஸ்வரர், சிவலிங்கம், அஸ்திரதேவர், கிருஷ்ணர், சந்தான கோபாலர், பிள்ளையார் உள்ளனர்.

## பூஜை ஒழுங்குகள்

தினசரி ஐந்துகாலப் பூஜைகள் நடைபெறுகின்றன. அந்தணகுருமார் சாக்த வழிபாட்டு முறையில் பூஜை செய்கின்றனர். பூஜை வழிபாடுகளில் பணிசெய்ய பக்தர்கள், பலவேலைகாரர்கள் முன்வருகின்றனர்.

சர்க்கரைப் பொங்கல், கடலை முதலியன நிவேதிக்கப்படுகின்றன. காணிக்கை கட்டுதல் நேர்த்தி போன்ற வழக்கங்களும் உண்டு.

பூஜைக்கான உபகரணங்கள் அனைத்தும் இருக்கின்றன.

மாதவேதனம், அர்ச்சனை, தட்சணை அர்ச்சகருக்குரியது. வதிவிட அடிப்படையில் மக்கள் வந்து வழிபடுகின்றனர்.

## திருவிழாக்கள்

வருஷாபிஷேகம் ஆனிச் சித்திரையில் ஒருநாள் கோவில் பொறுப்பில் நடைபெறுகின்றது.

சகடையில் அம்பாள் வெளிவீதிஉலா வருவாள். ஆலயத்திற்கான சிம்ம வாகனம், இரதம், சூரன் உண்டு. யாவும் ஆலயத்தின் வெலவிலேயே செய்யப்பட்டனவாகும்.

நவராத்திரி பத்து நாட்கள் உற்சவம் நடைபெறுகின்றது. நிறைவுநாளில் மானம்பூ நடைபெறும்.

உற்சவங்களைப் பொதுமக்கள் நடத்துகின்றனர்.

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் தேர்தல் வழியில் நடைபெறுகின்றது. ஏழுபேர் பரிபாலன சபையில் அங்கம் வகிப்பர்.

தற்பொழுது பரிபாலனசபையில் திரு. எஸ். சண்முகசுந்தரம், திரு. சு. சதாசிவம், திரு. எஸ். பாலசந்திரா, திரு. ரி. நமசிவாயம், எஸ். ஜெயலட்சுமி, திரு. ஆர். பாலசுந்தரம், திரு. எஸ். சந்திரசேகரம் முதலியோர் பொறுப்பு வகிக்கின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

1984, 19. 6. 1994, 30. 6. 2004இல் கும்பாபிஷேகங்கள் நிகழ்ந்துள்ளன.

## ஆலய வரலாறு

1937ஆம் ஆண்டு சிறு கோவிலாக (48 சதுர அடி) ஆரம்பிக்கப்பட்டு இன்று 900 சதுர அடியாக விஸ்தீரணப்படுத்தப்பட்டுள்ளது. 1994இல் புதுப்பிக்கப்பட்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. பொது மக்களின் உதவி மூலமும் திரு. சண்முக சுந்தரத்தின் பங்களிப்பின் மூலமும் புனருத்தாரணம் செய்யப்பட்டது.

# ஸ்ரீ வெக்காளி அம்மன் ஆலயம்




ஸ்ரீ வெக்காளி அம்மன் ஆலயம்
ஜெம்பட்டா வீதி
கொழும்பு - 13

## ஆலய அமைப்பு

கொழும்பு ஜெம்பட்டாவீதியில் இவ் ஆலயம் அமைந்துள்ளது. விஸ்தீரணம் பற்றி கூறமுடியாதுள்ளது. சிறிய ஆலயம் எனலாம். நீளம் அதிகமாகவும் அகலம் குறைந்தும் காணப்படுகிறது. இங்கு மூலமூர்த்தியாக இருந்து அருள்பாலிப்பவர் வெக்காளி அம்பாள் ஆவார். மூலமூர்த்திக்கு இடது புறத்தில் சிறிய வசந்த மண்டபம் உள்ளது. அதனுள் காளி அம்மன், நந்தகோபாலன், வாகனத்துடன் விநாயகர், சோமாஸ்கந்தர், முத்துமாரி அம்மன் எனும் மூர்த்திகள் எழுந்தருளி உள்ளனர். இவர்கள் ஐம்பொன்னால் வார்க்கப்பட்டுள்ளனர். உமாதேவியார் சிவலிங்கத்துடன் வீற்றிருக்கும் கோலம், முத்துமாரி அம்மன், மாடசாமி, துர்க்கையம்மன், முனியாண்டி, பத்திரகாளி, விநாயகர் என்போரின் பெரிய உருவச்சிலைகளும் கருங்கல்லாலான நவக்கிரக கோட்டமும் உள்ளது.

துவஜஸ்தம்பம் இல்லை. வருடாந்த உற்சவம் அலங்காரத் திருவிழாவாக நடைபெறுகிறது. பலிபீடமும் சிம்ம வாகனமும் காட்சி அளிக்கின்றன.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் மூன்றுகால பூஜைகள் நடைபெறுகின்றன. (மு.ப. 7.00, 10.30, பி.ப. 5.00) செவ்வாய், வெள்ளிக் கிழமைகளில் உச்சிக் காலப்பூஜை ந.ப. 12.00 மணிக்கு நடைபெறும்.

மாதாந்தம் பௌர்ணமி தினங்களில் திருவிளக்குப் பூஜையும் இராகுகாலப் பூஜையும் இடம்பெறுகிறது. இக்காலங்களில் விசேஷ அபிஷேகங்கள் வழிபாடுகள் என்பன நடைபெறும்.

நாளாந்த பூஜைகளைக் குருக்கள் செய்கின்றார். ஆலயத்தின் ஏனைய வேலைகள் அனைத்தையும் ஆலய தர்மகர்த்தாவின் மகன் செய்கின்றார். பலவேலையாட்கள் இல்லை.

நாளாந்த பூஜைகளிலும் விசேஷ பூஜைகளிலும் நிவேதனம் இடம்பெறுவதில்லை. பூஜை உபயங்கள் இருந்தால் மட்டும் நிவேதனம் படைக்கப்படுகிறது. ஆலயத்திற்கான பூஜைப் பொருட்கள், சோடஷோப சாரங்கள் அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆவணி மாத திருவோண நக்ஷத்திரத்தில் இரதபவனி நடைபெறும். அன்றைய தினத்தில் அடியார்களின் பால்குட பவனியும் இடம் பெறும்.

வருடாபிஷேக திருவிழாவைத் தவிர வெக்காளி அம்பாளுக்கு ஒவ்வொரு வருட வைகாசி இறுதி வெள்ளியிலும் மாம்பழ அபிஷேகம் அம்பாளுக்கு நடைபெறும். நவராத்திரியும் வாழைவெட்டும் சிறப்பாக நடந்தேறுகின்றன.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய நிர்வாகத்தை தர்மகர்த்தா செய்து வருகிறார். இதன் உரிமை குடும்பவழி முறையில் வந்துள்ளது.

## தற்போதுள்ள கோவில் பரிபாலன முகாமை

தர்மகர்த்தா
திருமதி. எம். எஸ். முத்தையா அழகம்மா அவரின் குடும்பத்தினர்.

## கும்பாபிஷேகம்

விபரம் அறிய முடியவில்லை.

## ஆலய வரலாறு

தற்போது ஆலயம் அமைந்துள்ள இடத்தில் 50 வருடங்களுக்கு முன்னர் சூலாயுதத்துடன் முனியாண்டி வழிபாடு நடைபெற்று வந்துள்ளது. பின்னர் முத்தையா நாடார் அழகம்மா தம்பதிகள் இவ்விடத்தில் ஒரு காளியம்மன் திருவுருவத்தையும் வைத்து வழிபாடு செய்து கொண்டு வந்துள்ளனர்.

திருமதி அழகம்மா அவர்கள் தனது கணவரின் இறப்பின் பின்னர் அவ் இடத்தில் ஒரு சிறிய வெக்காளி அம்மன் உருவச் சிலையை நிறுவி ஆலயம் அமைத்தார். அதில் அவரே பூசையும் செய்து வந்தார். பின்னர் சிறிது சிறிதாகவே இவ்வாலயம் தற்போதுள்ள நிலையை அடைந்துள்ளது.

# ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்




*ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்*

*55, மாளிகாவத்தை*

*கொழும்பு - 10*

## ஆலய அமைப்பு

கொழும்பு மாளிகாவத்தை 55ஆம் இலக்கத்தில் இவ்வாலயம் 13பேர்ச் பரப்பில் அமைந்துள்ளது. இங்கு மூல மூர்த்தியாக அமைந்து அருள்பொழிபவர் ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமான். இடமிருந்து வலமாக வந்தால் தட்சிணாமூர்த்தி, ஸ்ரீதேவி ஸமேத மஹாவிஷ்ணு, வள்ளி தெய்வானை ஸமேத ஸ்ரீ சுப்பிரமணியர், துர்க்கை, நவக்கிரகம், சிவன் - கௌரியம்மை, பைரவர் ஆகிய மூர்த்தங்கள் அமைந்துள்ளன.

சிறிய வசந்த மண்டபம் சித்திர வேலைப் பாடுகளுடன் அழகாகக் காட்சி அளிக்கின்றது. எழுந்தருளி விக்கிரகங்களும் செப்புத் திருமேனிகளாக அமைந்துள்ளன. துவஜஸ் தம்பம் இல்லை. வருடாந்த உற்சவங்கள் அலங்காரத் திருவிழாக்களாக நடத்தப்பட்டு வருகின்றன. பலிபீடமும் மூஷிகமும் காட்சி அளிக்கின்றன.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் ஆறுகால பூஜைகள் நியமமாக அந்தண சிவாச்சாரியாரால் நிகழ்த்தப் பெறுகின்றன. (அ.க. 5.30, மு.ப. 7.00, 10.30, பி.ப. 5.00, 6.00, இரவு 8.30 அர்த்தஜாம பூஜையுடன் நிறைவு.) வெள்ளிக்கிழமைகளில் விசேஷ பூஜையும் துர்க்கைக்கு இராகுகால பூஜையாக வெள்ளி ந.ப. 11.00 மணிக்கும் செவ்வாய் பி.ப. 3.30 மணிக்கும் நிகழ்த்தப் படுகின்றது.

மேலும் மாதச் சிறப்பு நாட்களாகிய சதுர்த்தித் திதியில் விநாயகருக்கும் ஏகாதசித் திதியில் மஹாவிஷ்ணுவிற்கும் சிறப்பு அபிஷேகம், வழிபாடு, திருவிழாக்கள் நடைபெறுகின்றது.

பூஜை செய்வதற்குப் பிரதான சிவாச்சாரியாரும் அவருக்கு உதவியாக அந்தணர்களும் பலவேலைகாரர்களும் இவ்வாலயத்தில் பணிபுரிகின்றனர்.

நாளாந்த பூஜையில் வெண்சாதமும் விசேஷ தினங்களில் சர்க்கரைப் பொங்கல், வெண்பொங்கல், வடை, மோதகம் போன்ற நிவேதனங்கள் பைரவருக்கு வடைமாலை ஆகியன நிவேதிக்கப்படுகின்றன.

ஆலயத்திற்கான பூஜைப் பொருட்கள், சோடஷோபசாரம் உட்பட அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆலயத்தின் வருஷாபிஷேகம் ஆனி மாதம் நடைபெறும். ஆனி அனுஷத்திற்கு முந்திய பத்து நாட்களும் திருவிழா நடைபெற்று அனுஷத்தன்று திருவிழ நிறைவு பெறும். உற்சவ காலங்களில் ஸ்நபனம், ருத்ரம், சங்காபிஷேகம் போன்றவை இடம் பெறும். திருவிழாக் காலங்களில் விநாயகர், முருகன், அம்பிகை, விஷ்ணு முதலிய மூர்த்திகள் அலங்கரிக்கப் பெற்று திருவீதிவலம் வருவர்.

### வருடாபிஷேக உபயகாரர் :

| | |
|---|---|
| 1ஆம் நாள் | திரு. ஏ. செல்வராஜா<br>211/34 - 2/1 N.H.S - Co 10 |
| 2ஆம் நாள் | திரு. கே. ஜெகதீஸ்வரன்<br>A 225/26 - N.H.S - Co 10 |
| 3ஆம் நாள் | திரு. தியாகராஜா பத்மராஜா<br>E 1 3/2 - N.H.S - Co 10 |
| 4ஆம் நாள் | திரு. கே. கோபாலபிள்ளை<br>B 11 2/2 - N.H.S - Co 10 |
| 5ஆம் நாள் | திரு. எஸ். ஆர். உதேஷ்<br>B 21 1/3 - N.H.S - Co 10 |
| 6ஆம் நாள் | திரு. எஸ். இராசலிங்கம்<br>B 18 1/2 - N.H.S - Co 10 |
| 7ஆம் நாள் | திரு. ரீ. எஸ். பாண்டியன்<br>யுனேடட் ஸ்டேசனறி,<br>மெலிபன் வீதி கொழும்பு 11. |
| 8ஆம் நாள் | திரு. வீ. ரவிச்சந்திரன்<br>382, காதவெல<br>கொட்டிகாவத்த |
| 9ஆம் நாள் | திரு. கே. தேவதாஸ்<br>T.M.P என்டர் பிரைஸ் 18, 4ஆம்<br>குறுக்குத் தெரு கொழும்பு 11. |
| 10ஆம் நாள் | திரு. ஆர். கருப்பையா<br>K.R.K கோல்ட் கவுஸ், கொழும்பு 10. |

வருடாந்த திருவிழாவைத் தவிர அம்பிகைக்கு ஆடிப்பூரம், சித்திரா பௌர்ணமி தினங்களிலும் சமய நாயன்மார் நால்வரது குருபூஜைத் தினங்களிலும் திருவிழா நடைபெற்றுத் திருஉருவ ஊர்வலமும் நடைபெறும்.

நவராத்திரி ஒன்பது நாட்களிலும் சிறப்புப் பூஜை வழிபாடுகள் நடந்தேறி பத்தாம் நாள் துர்க்கையம்மன் உள்வீதி வலம் வந்து மகிஷாசுர சம்ஹாரம் (வாழைவெட்டு) சிறப்பாக நடைபெறும்.

இவை தவிர பிள்ளையார் கதை, திருவெம்பாவை, கந்தசஷ்டி திருவிழாக்களும் நடைபெறும்.

## ஆலய நிர்வாகம்

இவ்வாலய நிர்வாகம் தேர்தல்நெறி முறையில் தேர்ந்தேடுக்கப்படுகின்றது.

## தற்போதுள்ள கோவில் பரிபாலன முகாமை

தலைவர்
திரு. T. மஹாலிங்கம்
முன்னாள் ஜனாதிபதி ஆலோகசர், வயது 68

திரு. அ. செல்வராஜா
ஓய்வுபெற்ற முகாமையாளர் மெட்லிக்ஸ் லிமிடெட், வயது 65

திரு. T.தர்மலிங்கம்
வர்த்தகர், வயது 65

திரு. S. தியாகராஜா
ஓய்வுபெற்ற முகாமையாளர் சிங்கர் கம்பனி வயது 65

திரு. அ. ஜெயபாலசிங்கம்
கபிகாவத்தை கோவில் முகாமையாளர் வயது 65

திரு. அ. பரசுராமன்
உதவி முகாமையாளர் லேக் ஹவுஸ், வயது 50

தலைவரும் நிர்வாகக் குழுவைச் சார்ந்த ஐந்து பேரும் ஆலய பரிபாலனத்திற்குப் பொறுப்பு வகிக்கின்றனர். முகாமையாளர் ஒருவரும் கணக்காளர் ஒருவரும் நிர்வாகத்திற்கு ஒத்துழைப்பு நல்குகின்றனர்.

ஆலய பூசகருக்கு மாதாந்த வேதனம், அர்ச்சனைப் பணம் ஆகியவற்றுடன் குடியிருக்க வீடும் ஆலய நிர்வாகத்தால் வழங்கப்பட்டுள்ளது. நாள்தோறும் நடக்கும் பணிகளைச் குறிக்க தினக் குறிப்பேடு ஒன்று பேணப்பட்டு வருவது சிறப்பானது.

## கும்பாபிஷேகங்கள்

1987ஆம் ஆண்டு ஆனித்திங்கள் அனுஷ நக்ஷத்திரத்தில் நடைபெற்றது.

## ஆலய வரலாறு

1981இல் திருமுருக கிருபானந்தவாரியாரால் அடிக்கல் நாட்டப்பெற்று ஆரம்பமாகிய கோவில் திருப்பணிகள் 1983இல் இடம்பெற்ற இனக்கலவரத்தால் இடைநிறுத்தப்பட்டு மீண்டும் 1986இல் திருப்பணிகள் ஆரம்பமாகி 1987இல் நிறைவுற்றன. 1987இல் ஆனி மாத அனுஷ நக்ஷத்திரத்தில் கும்பாபிஷேகம் நடை பெற்று வழிபாடுகள் சிறப்பாக நடைபெறுகின்றன.

## கலை நிகழ்ச்சிகள்

அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை, நாட்டிய நிகழ்ச்சிகள் தமிழகத்தில் இருந்து வருகைதரும் சொற்பொழிவாளர்களின் சமய சொற்பொழிவுகள் ஆகியன இடம் பெறும்.

## ஆலய அறப்பணிகள்

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கான காலை உணவிற்கான நிதி வழங்கல், சமய நூல்களை வழங்குதல், மேலும் அநாதைகள், அகதிகள் போன்றோர்க்கு உதவுதல் போன்றனவாகும்.

நாளாந்தம் நடைபெறும் பணிகளின் குறிப்பேடும் இவ்வாலயத்தில் பேணப்பட்டு வருகின்றது.

# ஸ்ரீ மஹாகாளியம்மன் ஸ்ரீ முனியப்பசுவாமி கோவில்

## (புளூமென்டால் வீதி)



*ஸ்ரீ மஹாகாளியம்மன் / முனியப்பசுவாமி கோவில்*

*680, புளூமென்டால் வீதி*

*கொழும்பு - 13*

## ஆலய அமைப்பு

கொழும்பு 680 இலக்க புளூமென்டால் வீதியில் ஸ்ரீ மஹாகாளியம்மன் ஸ்ரீ முனியப்ப சுவாமி கோவில் 12 பேர்ச் விஸ்தீரணப் பரப்பில் அமைந்துள்ளது.

6′ × 6′ என்ற அமைப்பில் உள்ள மூலஸ் தானத்தில் ஸ்ரீ மஹாகாளி எழுந்தருளி அருள்புரிகின்றார்.

துவஜஸ் தம்பம் இல்லை. பலிபீடம் சிம்மத்துடன் காணப்படுகின்றது.

வெண்கலத்தாலான 16 கிலோ நிறை யுடைய ஆலயமணி உண்டு. ஆலய உபயோ கத்திற்கான கிணறு அமைந்திருக்கின்றது.

சிறிய உள்வீதியில் துர்க்கையம்மன், நவக்கிரகங்கள் அமைந்துள்ளன. பூஜைக் குரிய தெய்வங்களாக விநாயகர், முருகன், காளியம்மன் காணப்படுகின்றனர். எழுந் தருளி மூர்த்தங்களாக ஐம்பொன்னாலான விநாயகர், காளி, வள்ளி தெய்வானையுடன் முருகன் அமைந்துள்ளனர்.

கோவில் வளவில் உள்ள ஒரு அறையும் மண்டபமும் வாடகைக்குக் கொடுக்கப்பட்டு உள்ளது. அறையில் அறநெறி வகுப்பு நடை பெறுகின்றது. மண்டபத்தில் பஜனை, அன்ன தானம் போன்ற நிகழ்வுகள் நடைபெறு கின்றன.

ஆலயம் திராவிட கலை மரபையொட்டி அமைக்கப்பட்டுள்ளது.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் இரண்டுகால பூஜைகளாக காலை 6.30 மணிக்கும் மாலை 6.00 மணிக்கும் நடைபெறுகின்றன. அந்தண குருமாரே பூஜை செய்கின்றனர். வெள்ளி போன்ற விசேஷ நாட்களில் காலை 11.00 மணிவரை அர்ச் சனை செய்யப்படும்.

பூஜைக்கு உதவியாக உதவிக் குருக்களும் ஆலய உரிமையாளரும் உதவி செய்கின்றனர். உரிமையாளரின் மனவியே பிரசாதம், பூஜைப் பொருட்கள் பெற்றுக் கொடுப்பதில் உதவி செய்கிறார்.

விசேஷ பூஜையில் பொங்கல், கடலை, அவல் முதலியன நிவேதிக்கப்படுகின்றன. உரிமையாளரும் உதவியாளருமே கோவில் பிரசாத தயாரிப்பு ஒழுங்குகளை கவனித்துக் கொள்கின்றனர்.

ஆலயத்தை தூய்மை செய்தல் போன்ற பணிகளில் பொதுமக்களும் உரிமையாளர், பூசகர் போன்றோர் ஈடுபடுகின்றனர்.

கோவிலில் நேர்த்தியாக நெய்விளக் கேற்றல், பட்டுசாத்துதல் முதலியன இடம் பெறுகின்றன.

வதிவிட அடிப்படையிலேயே வழிபாடுகள் நடைபெறுகின்றன.

ஆலயத்திற்கான பூஜா உபகரணங்கள் அனைத்தும் உள்ளன.

பூசகருக்கு மாத வேதனமாக ரூ.4000/= வழங்கப்படுகின்றது. மேலதிகமாக ஒரு உபயத்திற்கு ரூ.100 உம் தெட்சணையும் தங்கு மிடமும் வழங்கப்பட்டுள்ளது.

## திருவிழாக்கள்

ஆடிப்பூர உற்சவம் அலங்கார உற்சவ மாகப் பத்து நாட்கள் நடைபெறுகின்றன. உற்சவ காலங்களில் பாற்குட பவனி விசேஷ அபிஷேக பூஜை, திரு ஊஞ்சல் ஆகியன இடம்பெறும். அம்பிகை தேரில் ஆரோ கணித்து ஆலயத்திலிருந்து புறப்பட்டு புளூமென்டால் வீதிவழியாக ஜோசப் டயஸ் ஒழுங்கை முன்பாக 1 மணிநேரம் அடியார்கள் தரிசனத்திற்காகத் தரித்துப் பின் கிம்புளா - எல வழியாக மாதம்பிட்டி வீதி, தவளசிங்கா ராம வீதி, ஸ்ரீ பஞ்ஞானந்த மாவத்தை வீதி வழியாக அளுத்மாவத்த வீதியடைந்து மோதர சந்தியால் மோதர வீதிவழியாக முத்வெல்ல மாவத்தை, ஜேம்ஸ் வழியே புளூமென்டால்

வீதி, அரசமரச் சந்தியுடன் திரும்பி ஆலயம் வந்தடையும். டொக்லன் வீதியால் அளுத் மாவத்தை வீதி வந்து வோல்ஸ்லேன் உள்ளே போய்த் திரும்பி அளுத்மாவத்தை வழியாக வந்து சென் ஜேம்ஸ் தொடர்மாடி அருகில் (1மணி நேரம்) தரித்து சென் ஜேம்ஸ் வழியே புளூமெண்டால் வீதி அரசமரச் சந்தியுடன் திரும்பி ஆலயம் வந்தடையும்.

தீர்தத்தன்று கோவில் கிணற்றில் தீர்த்த நீராடி, அன்னதானம் நடைபெறும். மகேஸ்வர பூஜை உபயம் திருமதி. சரோஜா குடும்பத் தினர் ஏற்று நடத்துகின்றனர்.

தேர்முட்டி இல்லாததால் வாடகை நிலத்தில் தேர் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனைத்தவிர நவராத்திரி 10 நாட்கள், பிள்ளையார்கதை 21 நாட்கள், திருவெம் பாவை 10 நாட்களும் உற்சவம் நடைபெறும். நவராத்திரி 10ஆம் நாள் வாழைவெட்டு, மானம்பூ நடைபெறும்.

## ஆலய நிர்வாகம்

குடும்ப வழி உரிமைகொண்டு ஆலயம் பரிபாலிக்கப்படுகின்றது.

ஆலய அறங்காவலர் சபையில் 9 பேர் உள்ளனர். திரு. கா. சிவன் (தலைவர்), திரு. சி. சுதந்திரமணாளன் (செயலாளர்), திரு. எஸ். ரவிச்சந்திரன் (பொருளாளர்), திரு. பி. கே. நாதன் (நிர்வாகச் செயலாளர்), திரு. கே. கதிரைநாதன், திரு. ரி. ரவீந்திரன், திரு. ஈ. திருச்செல்வம், திரு. என். ராஜ சேகர், திரு. எஸ். சிவனேஸ்வரன் ஆலய பரிபாலன சபை உறுப்பினராவர்.

## ஆலய அறங்காலவர்கள்

காளிமுத்து சிவன்
சிவன் ரவிச்சந்திரன்
சிவன் சுதந்திரமணாளன்
தங்கவேலு ரவீந்திரன்
கதிர்நாதன் புஸ்பராணி

## கும்பாபிஷேகங்கள்

22. 06. 1994இல் ஒரு முறை கும்பாபிஷேகம் நடந்துள்ளது.

## கலை நிகழ்வுகள்

கூட்டுப் பிரார்த்தனை, வில்லுப்பாட்டு, சொற்பொழிவுகள், மேளக்கச்சேரி முதலியன.

## ஆலய அறப்பணிகள்

100 மாணவர்கள் பயிலும் அறநெறிப் பாட சாலை நடத்தப்படுகின்றது. இந்து கலாசார அமைச்சு அறநெறிப் பாடசாலைக்குப் புத்தகங்கள் வழங்கி உள்ளனர்.

## ஆலய வரலாறு

இவ்வாலயத்தின் உரிமையாளர், அறங் காவலர் என்ற முறையில் இக்கோவில் ஆரம்பித்த வரலாறை அறியத்தருகிறேன்.

இப்போது இவ்வாலயம் அமைந்திருக்கும் இடமானது 1966ஆம் ஆண்டில் துறைமுக அதிகாரசபையிடமிருந்து தொழில் செய் வதற்கு என்னால் குத்தகைக்கு எடுக்கப்பட்ட இடமாகும். இங்கு நான் ஆடைத் தொழிற் சாலை ஒன்றை ரவிந்திராஸ் இன்டஸ்ரீஸ் என்ற பெயரில் கட்டிடமமைத்து நடத்தி வந்தேன். சித்திரை மாதம் 1966ஆம் ஆண்டு ஆடைத் தொழிற்சாலை தொழில் அமைச் சினால் அங்கீகரிக்கப்பட்டது. அந்த தொழிற் சாலை அமைந்த காணி ஒரு சேற்று நில மாகும். அதில் ஒரு தென்னை மரம் இருந்தது. அதில் ஒரு தேங்காய்க்கு மேல் காய்க்காது அந்த தென்னை மரத்தடியில் ஒரு சிறுவிளக்கு ஏற்றி வணங்கி வந்தேன். அந்த நேரம் ஒரு சோதிடர் இந்த இடத்தில் தெய்வசக்தி இருப்பதாகவும் அந்த இடத்தில் ஒரு சூலாயுதம் பிரதிஷ்டை செய்து வணங்கும்படியும் அதனால் எனக்கு தெய்வ ஆசியும் கிடைக்கும் என்றும் யாரும் விரோதிகளின் செய்வினை கள் பலன் கொடுக்காது இத்தெய்வம் காப்பாற் றும் என்றும் கூறினார். அன்று தொடக்கம் அங்கு விளக்கேற்றி பூஜை செய்து வந்தேன்.

1983ஆண்டு நடந்த இனக்கலவரத்தில் எனது தொழிற்சாலைக்கு தீ வைத்தும் கோவிலை உடைத்தும் விட்டார்கள். அந்த சூலாயுதம் வைத்து வணங்கப்பட்ட இடமே இன்று மூலஸ்தானமாக இருக்கின்றது. பின் 1988 ஆண்டு ஜனவரி 20ஆம் திகதி அந்த இடத்தை சிறிய கோவிலாக கல்லால் கட்டினேன். இந்த இடத்துக்கு குத்தகைப் பணமாக மாதம் 15 500/= கட்டி வந்தேன். பின் கோவில் இந்து கலாசார அமைச்சில் 1990ஆம் ஆண்டு பதிவு செய்யப்பட்டது. பின் மற்ற மத ஆலயங்களுக்கு காணி சும்மா கொடுத்து இருக்கிறீர்கள் எமது கோவிலுக்கும் அப்படித் தாருங்கள் என்று கேட்டு வாதாடி 1977ஆம் ஆண்டு துறைமுக அதிகாரசபையிடமிருந்து சட்டமுறைப்படி கோயிலுக்கு மொத்தக் காணியில் 12 1/2 பேர்ச் காணியை கோவிலுக்காகக் கொடுத்து வருடாந்தம் ரூ. 300/= குத்தகை கட்ட உத்தரவிட்டு உள்ளார்கள். இக்கோவிலை 1994 ஆண்டில் கும்பாபிஷேகம் செய்தோம். (22. 06. 1994) கும்பாபிஷேகம் செய்வித்து 10 வருடங்களாகி விட்டன. இந்த ஆவணி மாதம் பாலஸ்தானம் செய்து கோவிலுக்கு அத்தி வாரமிட சகல ஒழுங்குகளும் மேற்கொண்டு கட்டிடப் பொருட்களும் சிறிய அளவில் தயார் பண்ணி வைத்திருக்கின்றோம். இவ் ஆவணியில் ஆலயப் பணியை ஆரம்பித்து அதை கட்டி முடிக்கும்பணி அம்பிகை அருளால் நாம் ஏற்றுக் கொண்டுள்ளோம். இப்பணி சிறப்புற உதவ எல்லோரும் முன்வர வேண்டும். எமது ஆலயத்திற்கு வரும் அம்பிகை அடியார்கள் கேட்டது கேட்டபடி கொடுக்கும் அருள்மிகு தாய் என்று தேவையான உதவிகளைச் செய்ய ஆயத்தமாக இருக்கின்றார்கள்.

அந்த வகையில் தங்களது உதவியும் ஒத்தாசையும் இந்த திருக்கோயில் திருப்பணிக்கு அச்சாணிபோல் விளங்க வேண்டும் என்பது எங்களின் தணியாத ஆசை என்பதை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பணம், காசோலை, வங்கி, வரைபுப் பொருட்கள் முதலியன வழங்கப்பட வேண்டிய முகவரி

ஸ்ரீ முனியப்ப சுவாமி ஸ்ரீ மஹாகாளியம்மன் கோவில்
680, புளூமெண்டல் வீதி
கொழும்பு 15

வங்கி கணக்கு இல. கமர்ஷியல் வங்கி
முகத்துவாரக்கிளை
கணக்கு இல : 1233455001

# ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்



ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்

குடகம வீதி

அவிசாவளை

## ஆலய அமைப்பு

இவ்வாலயம் அவிசாவளை, குடகம வீதியில் சுமார் 7 பேர்ச் பரப்பளவுள்ள காணியில் அமைந்துள்ளது. ஸ்ரீ முத்துமாரி அம்மன் மூலமூர்த்தியாக வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். பரிவார மூர்த்திகளாக விநாயகப் பெருமான் ஸ்ரீ வள்ளி தெய்வானை ஸமேத சுப்பிரமணியர், முருகன், நவக்கிரகங்கள், துர்க்கை, காளியம்மன் என்பன அமைந்து உள்ளன.

சிறிய அர்த்தமண்டபம் உள்ளது. வசந்த மண்டபம் கலையம்சம் பொருந்திய வேலைப்பாடுகளுடன் அமைந்துள்ளது. கொடித்தம்பம் இல்லை. முக்கிய தினங்களில் வருடாந்த உற்சவங்கள் கிரமமாக நடைபெறுகின்றன.

## பூஜை ஒழுங்குகள்

இரண்டு காலப் பூஜைகள் நடைபெறுகின்றன. காலை 7.00மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் பூஜைகள் நடைபெறுகின்றன.

பூஜைகள் செய்வதற்கு அந்தண சிவாச்சாரியார் ஒருவரும் அவருக்கு உதவியாக பலவேலைக்காரர் ஒருவரும் உள்ளனர். தினந்தோறும் நடைபெறும் பூஜைகளில் சர்க்கரைப் பொங்கல் நைவேத்தியமாகப் படைக்கப்படுகின்றது. விசேஷ தினங்களில் வெண்சாதம், கடலை, அவல், பயறு, வடை, மோதகம், புளிச்சாதம், தயிர்ச்சாதம் ஆகியன நிவேதிக்கப்படுகின்றன.

ஆலயத்திற்குத் தேவையான சோடஷோப சாரப் பொருட்கள் குறிப்பிட்ட சிலவே உள்ளன.

## திருவிழாக்கள்

தற்போது கோவில் புனருத்தாபன திருப்பணி வேலைகள் நடைபெறுவதால் திருவிழாக்கள் இடை நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. திருவிழாக் காலங்களில் அலங்கரிக்கப்பட்ட அம்பாள் தேரேறி வீதிவலம் வருவாள். திருவிழாவிற்கு நிரந்தர உபயகாரர் இல்லை. வருடத்திற்கு வருடம் மாற்றம் உண்டு. திருவிழாக் காலங்களில் சங்காபிஷேகம், ஸ்நபன அபிஷேகம், மகேஸ்வர பூஜை என்பன நடைபெறும்.

பிரதி மாதமும் வரும் பௌர்ணமி தினங்களில் திருவிளக்குப் பூஜை நடை பெறும். சுவாமி உள்வீதி வலம் வருவார். தைப்பூசம், சித்திராப் பௌர்ணமி, ஆடிப்பூரம், மார்கழி மாத வீதி பஜனை, திருவெம்பாவை போன்ற விசேஷ தினங்களில் அம்பாளுக்கு ஸ்நபன அபிஷேகத்துடன் கூடிய விசேஷ பூஜை நடைபெறும்.

மஹாசிவராத்திரி தினம் நான்கு ஜாமப் பூஜைகள் நடைபெறும். இப்பகுதியிலுள்ள 20 பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் தேவார மனனம், திருக்குறள் மனனம், பேச்சு, எழுத்து, வினாவிடைப் போட்டி வில்லிசை நாடகம், கோலம், மாலை கட்டுதல் போன்ற போட்டிகள் நடாத்தப்பட்டு சான்றிதழ்களும் பரிசுகளும் வழங்கப்படுகின்றன. வெற்றிபெறாதவர்களுக்கும் ஊக்குவிப்பாக அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படுகின்றன.

## ஆலய நிர்வாகம்

பொது மக்களால் தேர்தல் மூலம் நிர்வாக சபைதெரிவுசெய்யப்படுகின்றது. தற்போதைய உறுப்பினர்கள் வருமாறு :

தலைவர்
திரு. சி. பக்தசீலன்
(வர்த்தகர்) வயது 56

செயலாளர்
திரு. கு. கனகரட்ணம்
(வர்த்தகர்) வயது 53

பொருளாளர்
திரு. ந. கிருஷ்ணமூர்த்தி
(வர்த்தகர்) வயது 44

மேலும் கணக்காய்வாளர்கள் இரண்டு பேரும் செயற்குழு உறுப்பினர்கள் 20 பேரும் நிர்வாகத்தில் அங்கம் வகிக்கின்றனர்.

ஆலய குருக்களுக்கு நிர்வாகத்தினரால் குடியிருக்க வீடு வழங்கப்பட்டுள்ளது. மாத வேதனமும் வழங்கப்படுகின்றது. ஆலயம் அமைந்துள்ள இடம் தவிர வேறு சொத்துக்கள் எதுவுமில்லை.

## கும்பாபிஷேகங்கள்

1984ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## ஆலய வரலாறு

இவ்வாலயம் அமைந்துள்ள இடத்தில் முன்பு பெருந்தோட்டங்கள் இருந்தன. தோட்டங்களில் வேலைசெய்த தொழிலாளர்கள் தமக்கு வழிபடுவதற்கு ஒரு ஆலயம் தேவை என்று உணர்ந்து, சுமார் நூறு வருடங்களுக்கு முன்பு ஒரு கல்லை வைத்து வழிபட்டு வந்தனர். பின் அதற்கு குடிசை ஒன்று அமைக்கப்பட்டது. காலப் போக்கில் இந்த இறப்பர் தோட்டக் காணிகள் துண்டாடப்பட்டு தனியாருக்கு விற்கப்பட்டன. அப்படியான காலகட்டத்தில் கலசம் வைக்கப்பட்ட சிறிய கருவறை அமைக்கப்பட்டது. கருவறையில் ஸ்ரீ முத்துமாரியம்மன் சிலையும் பிரதிஷ்டை செய்யப்பட்டது. பின்னர் ஒரு விநாயகர் சிலையும் வேல் ஒன்றும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

தற்போது சுமார் 45 இலட்ச ரூபா செலவில் புனருத்தாபன திருப்பணி வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாடு இராமநாதபுரத்தைச் சேர்ந்த ஸ்தபதி சந்தன குமார் குழுவினர் திருப்பணி வேலைகளைப் பொறுப்பேற்று நடத்துகின்றார்கள். 2005ஆம் ஆண்டளவில் கும்பாபிஷேகம் நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## கலை நிகழ்ச்சிகள்


மஹாசிவராத்திரி தினத்தில் அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. இராம கிருஷ்ண மிஷன் சுவாமி இராஜேஸ்வரானந்த அவர்களின் பஜனைக் குழுவும் பஜனை நடத்துகின்றனர்.

## ஆலய அறப்பணிகள்

28. 11. 1999ஆம் ஆண்டு தொடக்கம் அறநெறிப் பாடசாலை இயங்கி வருகின்றது. 64 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். 3 ஆசிரியைகள் கடமையாற்றுகின்றனர். அவர்களுக்கு வேதனம் வழங்கப்படுகின்றது. மாணவர்களுக்கு பொங்கல், அவல், கடலை, பயறு போன்றன வழங்கப்படுகின்றன.

தீபாவளி தினத்தன்று வறிய குடும்பங்களைச் சேர்ந்த வயது வந்தோருக்கு சேலை, வேட்டி, சால்வை என்பன வழங்கப்படுகின்றன. சமூகத் தொண்டுகள் செய்வதற்கு இந்து இளைஞர் மன்றமும் தமிழர் நற்பணி மன்றமும் தற்பொழுது அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளன.

# ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலயம்



*ஸ்ரீ தேவி கருமாரியம்மன் ஆலயம்*

*158, ஸ்ரீ கதிரேசன் வீதி*

*கொழும்பு - 13*

## ஆலய அமைப்பு

கொழும்பு ஸ்ரீ கதிரேசன் வீதியில் 158ஆம் இலக்கத்தில் ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலயம் அமைந்துள்ளது. 7′ × 7′ கீழ்த்தளம் 1, மேல்த்தளம் 1 கொண்ட விஸ்தீரணத்தில் ஆலயம் அமைந்துள்ளது. மூலமூர்த்தமாக ஸ்ரீதேவி கருமாரியம்மன், ஸ்ரீ துர்க்கை அம்மன், ஸ்ரீ முத்துமாரி அருள் வழங்குகின் றனர்.

எழுந்தருளி மூர்த்தங்களாக பிள்ளையார், வள்ளி தெய்வானை ஸமேத சுப்பிரமணியர், நாகபூஷணியம்மன், பத்திரகாளியம்மன் காட்சியளிக்கின்றனர். வெண்கலத்தாலான மணி ஒன்று ஆலய உபயோகத்திற்கென உண்டு.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தோறும் 4 கால பூஜைகள் காலை 6.00 மணி, பகல் 12.00 மணி, மாலை 6.00 மணி, இரவு 8.00 மணிக்கு அர்த்தஜாம பூஜை யோடு நிறைவுறும். வெள்ளிக் கிழமை போன்ற சிறப்பு நாட்களில் அபிஷேகம் நடைபெற்று பகல் 12.00 மணிக்கு விசேஷ பூஜை நிகழும்.

விசேஷ தினங்களில் மட்டும் அந்தணர்கள் பூஜை செய்வர். மற்றைய நாட்களில் நிர்வாகத் தினரே பூஜைகளைச் செய்கின்றனர். பூஜைப் பாத்திரங்களைத் தூய்மை செய்தல், மாலை கட்டுதல், பிரசாதம் தயாரித்தல் போன்ற பணிகளை தொண்டர்களும் உதவிப் பூசகர் களும் செய்கின்றனர்.

நாளாந்த பூஜையில் பொங்கலும் விசேஷ பூஜா காலங்களில் பொங்கல், கஞ்சி, கடலை, வடை, மோதகம் போன்றவைகள் அம்பி கைக்கு நிவேதனம் செய்து பொதுமக் களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

நேர்த்திமுறையில் பக்தர்கள் விரும்பிய வாறு அர்ச்சனை போன்றவைகள் நடத்தப் படுகின்றன. ஆலயத்தில் பூஜைக்குரிய உபகரணப் பொருட்கள் இருக்கின்றன.

## திருவிழாக்கள்

பிள்ளையார்கதை 21 நாட்கள், நவராத்திரி 10 நாட்கள், கந்தசஷ்டி ஆறு நாட்கள், கேதார கௌரி விரதம் 21 நாட்கள், வரலக்ஷ்மி விரதம், ஆடிப்பூரம், சிவராத்திரி முதலிய திருவிழாக் கள் நடைபெறுகின்றன. குலக்குழும அடிப் படையில் வழிபாடு அமைந்துள்ளது.

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் குலவழி உரிமையி லேயே அமைகின்றது. ஆலய ஸ்தாபகர் ஸ்ரீ ரெங்கதாஸ் சுவாமிகளின் புதல்வர்களால் ஆலயம் பரிபாலிக்கப்படுகின்றது. அன்னை யின் அருள்வாக்கின் வண்ணமே அனைத்தும் நடைபெறுவதாக உரிமையாளர்கள் தெரிவிக் கின்றனர். தற்பொழுது அப்பணிகளை திரு. ஆர். மோகனதாஸ் மேற்கொண்டு நடத்தி வருகின்றார்.

## கும்பாபிஷேகங்கள்

11. 11. 2001 இவ்வாலய கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## கலை நிகழ்வுகள்

பக்திப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகள், தென்னிந்திய பக்திப் பாடகர்களான வீரமணி தாசன் - சக்திதாசன் போன்றோர் ஆலயத் தைப் பற்றிப் பாடிய பக்திப் பாடல்களின் நிகழ்ச்சிகள் போன்றவை நடத்தப்பட்டிருக் கின்றன.

## ஆலய அறப்பணிகள்

நவராத்திரி நாட்களில் சிறுவர்களுக்குப் பாடசாலைப் புத்தகங்கள், பென்சில், பேனை முதலியன வழங்குதல், கோவில் விழாக்களில் தண்ணீர்ப்பந்தல் அமைத்தல், வசதி குறைந்த குடும்பங்களுக்கு வேண்டிய உதவிகள் போன்றவை செய்துகொடுக்கப்படுகின்றன.

மேலும் எதிர்காலத்தில் அறநெறிப் பாடசாலை, தியான மண்டபம், மருத்துவ

மனை போன்ற பணிகள் செய்ய உத்தேசிக்கப் பட்டுள்ளன.

## ஆலய வரலாறு

இவ்வாலயத்தை அமைத்த ஸ்ரீ ரெங்கதாஸ் சுவாமிகள் ஆரம்பத்தில் ஒரு நாஸ்திகனாக இருந்தார். பின் அவரின் தாய் வழியால் வந்த தெய்வ வாக்கின்படி ஆஸ்திகரானார். அவரின் இல்லமாக இருந்த இவ்விடத்தை ஆலயமாக் அமைத்தார். 11. 11. 1989இல் இந்து கலாசார அமைச்சில் பதிவுசெய்யப்பட்டது. அவரின் விருப்பப்படியே வறியவர்களுக்கு இலவச திருமண மண்டபம், இலவச மருத்துவ மனை, கல்வி நிலையம், தியான மண்டபம், ஆலயம் என ஐந்து மாடிக் கட்டடம் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

# ஸ்ரீ ஞானபைரவர் முனியாண்டி சுவாமி கோவில்



*ஸ்ரீ ஞானபைரவர் முனியாண்டி சுவாமி கோவில்*

*22, கல்பொத்தை வீதி*

*கொழும்பு - 13*

## ஆலய அமைப்பு

கொழும்பு இல22, கல்பொத்தை வீதி கொழும்பு 13இல் ஸ்ரீ ஞான பைரவர் முனியாண்டி சுவாமி கோவில் அமைந் துள்ளது. மூலஸ்தானத்தில் தெற்குநோக்கி ஸ்ரீ பைரவமூர்த்தி காட்சி தருகின்றார்.

இவ்வாலயம் 15 அடி நீளம் 8 அடி அகல விஸ்தீரணத்தில் அமைந்துள்ளது.

வெளிச்சுற்று, உட்சுற்று வசந்த மண்டப அமைப்புக்கள் இல்லையாயினும் கருவறை தூபி விமானம் அமைந்துள்ளது. பலிபீடம் இல்லை.

இங்கு பூஜிக்கப்படும் தெய்வங்களாக விநாயகர், பைரவர், முருகன், துர்க்கை, முனியாண்டி சுவாமி உள்ளனர். எழுந்தருளி மூர்த்தங்களாக ஞானபைரவர், விநாயகர், முனீஸ்வரன், அம்பாள் உண்டு.

## பூஜை ஒழுங்குகள்

நாள்தொறும் 2 கால பூஜைகள் காலை 7.30 மணிக்கும் மாலை 6.30 மணிக்கும் நிகழ்த்தப்படுகின்றன. உபயம் இருப்பின் விசேஷ பூஜைகள் உண்டு.

ஆகம விதிப்படி அந்தணரே பூஜை செய்கின்றார். அவருக்கு உதவியாக உதவி அர்ச்சகரும் மண்டபப் பணிக்குப் பணியாட் களும் உண்டு.

நாளாந்த பூஜைக்கு அவலும், நேர்த்தி விசேஷ பூஜைகளில் பொங்கல், வடை, மோதகமும் நிவேதிக்கப்படுகின்றன.

நேர்த்தி செய்பவர்கள் காணிக்கை கட்டுதல், தேங்காய் பிரார்த்தனைகளைச் செய்கின்றனர்.

பூஜைக்கான உபகரணங்கள் இருக் கின்றன.

## திருவிழாக்கள்

தைமாதம் 10 நாட்கள் அலங்காரத் திருவிழா ஆகம முறைப்படி நடைபெறும். உற்சவ உபயகாரராகத் திரு. தவக்குமார் செயற்படுகின்றார்.

தேர் உற்சவத்திற்காகத் தேரினை வாடகைக்குப் பெற்று நடத்துகின்றனர். தற்பொழுது அரசாங்கத்தால் உதவி கிடைக்கப்பெற்று தேர் செய்யப்படுகின்றது.

தீர்த்தோற்சவம் முகத்துவாரம் கடலில் நடைபெற்று ஞானபைரவர் வீதி உலாவாக ஆலயம் வந்தடைவர்.

உற்சவ காலத்தில் மூலமூர்த்தியாகிய ஸ்ரீ ஞ்ானபைரவர் பெருமான் திருவீதி வலம் வருவர்.

நவராத்திரி பத்து நாட்களும் விநாயக சஷ்டி இருபத்தொரு நாட்களும் திருவெம்பாவை பத்து நாட்களும் திருவிழா நடைபெறும்.

வதிவிட அடிப்படையில் பக்தர்கள் வழிபாடு செய்கின்றனர்.

உயிர்பலி இவ்வாலயத்தில் இல்லை.

## ஆலய நிர்வாகம்

11பேர் கொண்ட பரிபாலன சபை இவ் ஆலயத்தை நிர்வகித்து வருகின்றது. திரு. மு. சண்முகம் தலைவராகவும் திரு. வே. சுகுமார் செயலாளராகவும் பணியாற்றுகின்றனர். நிர்வாகத்தினரால் அங்கீகரிக்கப்பட்ட யாப்பு உள்ளது.

## கும்பாபிஷேகங்கள்

1998 தை மாதம் கும்பாபிஷேகம் நடை பெற்றது.

## ஆலய வரலாறு


இவ்வாலயம் பன்னெடும் காலமாக கல்பொத்த வீதி 22ஆம் இலக்கத் தோட்டத் தினர் ஓர் சூலாயுதத்தினை சிறு விளக்கேற்றி வழிபாடு செய்து வந்தனர். அதன் பின்பு 1987ஆம் ஆண்டு திரு. சொர்ணமுத்து என்பவர் ஆலயத்தைப் பிரதான வீதிக்

கொண்டு வந்து விளக்கேற்றி வழிபாடு செய்ய வழிவகுத்தார். பலிகள், பூஜைகள் நிகழ்ந்தன.

பின்பு 1990ஆம் ஆண்டு 22/5ஆம் இலக்கத்தில் இருந்த திரு. ராமையா சகாயம் என்பவர் இவ்வாலயத்தைப் புனராவர்த்தனம் செய்ய வேண்டுமென்று பொதுமக்களிடம் நிதி வசூல் செய்து சிறிய ஆலயத்தைக் கட்டினார். ஆனால் பிரதிஷ்டை முதலியவற்றைச் செய்யாமல் ஆலயத்தைப் பூட்டி வைத்து விட்டார். அவரும் காலமாகி விட்டார்.

அதன் பின்பு இவ்வாலயத்தைக் கட்டியெழுப்புவதற்கும் புனராவர்த்தனம் செய்வதற்கும் பொதுமக்கள் முன்வந்து காலமாகிவிட்ட சகாயம் என்பவரின் சகோதரனிடம் திறப்பினை 5. 8. 1997அன்று வாங்கி 10. 8. 1997அன்று பொதுமக்களினால் நிர்வாகம் ஒன்றினைத் தெரிவுசெய்து வெள்ளி தோறும் விசேஷ பூஜைகள் செய்வதற்கு வழிவகுத்தது குறிப்பிடத்தக்கது.

# ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்



*ஸ்ரீ ஐயப்ப சுவாமி திருக்கோவில்*
*478/67, அளுத்மாவத்த வீதி*
*கொழும்பு - 15*

## ஆலய அமைப்பு

கொழும்பு அருள்மிகு ஸ்ரீ ஐயப்ப சுவாமி ஆலயம், 478/67 இலக்கத்தில் அளுத்மாவத்த வீதியில் சிறப்பாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயம் 56 பேர்ச் விஸ்தீரணத்தில் அழகுற அமைந்து விளங்குகின்றது.

மூலஸ்தானத்தில் ஐம்பொன்னினாலான ஐயப்பசுவாமி விக்கிரமும் வலது புறத்தில் விநாயகரும் இடப்புறத்தில் மஞ்ச மாதாவும் காட்சி தருகின்றனர்.

பூஜிக்கப்படும் தெய்வங்களாகக் கன்னி மூல கணபதி, மஞ்சமாதா, கருப்பண்ண சுவாமி, கருத்த சுவாமி, நாகராஜ சுவாமி, நவக் கிரகங்கள் ஆகியோர் அமைந்து உள்ளனர்.

மூலஸ்தானத்திற்கு எதிரில் குதிரை வாகனத்தை உச்சியிலே கொண்ட துவஜஸ் தம்பம் காணப்படுகின்றது. பலிபீடம் மட்டும் அமைந்துள்ளது.

18 படிகள் ஏறி வந்தால் நம் பாவவினை தொலைத்து ஆனந்த ஐயப்பனை ஆனந்த மாகத் தரிசனம் செய்யலாம். வீதியுலா எழுந்தருள ஆனந்த ஐயப்பனின் திருமூர்த்தம் உள்ளது.

வெண்கலத்தாலான 75 கிலோ எடையுள்ள ஆலயமணி உள்ளது.

மணிமண்டபம், மடைப்பள்ளி, பூசகர், வேலைக்காரரது விடுதிகள் ஆலயத்தின் வழிபாடுசாராக் கட்டடப்பகுதியில் அமைந் துள்ளன. இதில் பஜனை, அறநெறிப் பாடசாலை போன்ற பணிகள் மேற்கொள்ளப் படுகின்றன.

கேரள பாணி கட்டிட அமைப்பில் சபரிமலை ஸ்ரீ ஐயப்பன் ஆலயத் தோற்றத்தை ஒத்தே இவ்வாலயம் நிறுவப்பட்டிருக்கின்றது.

## பூஜை ஒழுங்குகள்

இவ்வாலயத்திற்கென அமைந்த தனித்த பாணியில் ஆலய வழிபாடுகள் நடைபெறு கின்றன.

அதிகாலை 5.30 மணிக்கு நிக்மால்ய தரிசனம், காலை 5.45இற்கு அபிஷேகம் (மலர், நைவேத்தியம்), காலை 6.00 மணிக்கு கணபதி ஹோமம், 7.00 மணிக்கு உஷப் பூஜை, 10.00 மணிக்கு உச்சிக்காலம், மாலை 6.45இற்கு தீபாராதனை, இரவு 8.00 மணிக்கு அர்த்தஜாம பூஜை, 8.30 மணிக்கு அரிவராசனம் (இறைவனை உறங்க வைத்தல்) எட்டுக் கால பூஜைகள் நியமமாக நடைபெறு கின்றன. சனிக்கிழமை விசேஷ தினமாகும். அன்று இரவு 8.30 வரை பூஜைகள் நிகழ்த்தப் படுகின்றன. அன்னதானமும் வழங்கப்படு கின்றது. வெள்ளிக்கிழமை இராகு காலத்தில் மஞ்சமாதாவிற்கு அபிஷேகம் நடைபெறு கின்றது.

ஆலய பூஜைகள் நம்பூதிரிகளினால் தாந்திரீக முறைப்படி (வாய் திறக்காமல் மனத்தினுள் மந்திரம் உச்சரிக்கப்படுதல்) நடத்தப்படுகின்றன.

பூஜைப் பணிகளுக்கு உதவுவதற்கும் பூஜைப் பொருட்களை ஆயத்தம் செய்ய, பிரசாதம் தயாரிக்கவென ஏழுபேர்கள் உள்ளனர். இது தவிர பலவேலைகாரர்களும் உள்ளனர். பூஜை ஒழுங்குகளை அறங்காவலர் சபையினரே கவனித்துக் கொள்கின்றனர்.

பூஜையில் பொங்கல், தீர்த்தப் பிரசாத மாகப் பால், அப்பம் முதலியனவும் விசேஷ பூஜைகளில் பஞ்சாமிர்தமும் நிவேதனமாகி விநியோகிக்கப்படுகின்றன.

நேர்த்தி முறையில் கணபதிஹோமம், ஐயப்பன் அபிஷேகம் நிகழ்த்தப் பெறு கின்றன. காணிக்கை கட்டுதல், அபிஷேகமும் இடம்பெறுகின்றன.

பூஜைக்கான அனைத்து உபகரணங்கள், உபசாரப் பொருட்கள் அனைத்தும் ஆலயத் தில் இருக்கின்றன. வதிவிட அடிப்படையில் பக்தர்கள் வழிபட்டு வருகின்றனர்.

## திருவிழாக்கள்

ஆடிமாதம் பத்து நாட்கள் கொடியேறி திருவிழா நடத்தப்படுகின்றது.

கொடியேற்றம், பள்ளிவேட்டைத் திருவிழா, தீர்த்தம், லட்சார்ச்சனை, மஞ்சமாதா, கருப்ப சாமிக்குத் தீபாராதனை என்ற வரிசையில் திருவிழா நடைபெறும்.

18ஆம் படி பூஜை திருவிழா ஒவ்வொரு நாளும் மாலையில் இடம்பெறும் கண்கொள்ளா கவின்மிகு காட்சியாகும். 18 படிகளின் இருமருங்கிலும் விளக்குகள், கும்பங்கள் (36 விளக்குகள் – 36 கும்பங்கள்) ஒவ்வொரு படிக்கும் பாடல் பாடி நிறை வேற்றும் சிறப்பே ஐயப்ப பூஜையின் உச்ச மாகும்.

ஐந்தாம் நாள் ஐயப்பனின் வேட்டைத் திருவிழாவில் ஐயப்பன் யானையில் ஆரோ கணித்து முகத்துவாரம் கங்கையும் கடலும் சங்கமிக்கும் இடத்தில் எழுந்தருளி வேட்டை நடத்துவார். ஆறாம் நாள் காலையில் யானை யில் கேரள முறைப்படி முடிப்பட்டம், கோல அலங்கார ரூபனாக அந்த சபரிகிரீசன் முகத்துவாரத்தில் தீர்த்தவாரி ஆடி அன்பர் களுக்கு அருள் பாலித்து ஆலயம் வந்தடை வார்.

இவை தவிர நவராத்திரி பத்து நாட்கள், கார்த்திகை 41 நாள் மண்டல ஜோதிபூஜை, சபரிமலையில் ஜோதி தரிசனம் தரும் மகரஜோதித் திருநாளில் விசேஷ அபிஷேகம், அர்ச்சனை நடத்தப்பெறும். பங்குனி உத்தரமும் இவ்வாலயத் திருவிழா நடை பெறும் நாளாகும்.

உற்சவ உபயகாரர்களாக ஆலய அறங் காவலர் சபையினரே செயற்படுகின்றனர்.

வதிவிட அடிப்படையில் ஆலய வழிபாடு நடக்கின்றது.

- தினமும் காலை கணபதி ஹோமம், ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு அபிஷேகமும் ஆராதனை வழிபாடு
- தினமும் மாலை ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு அலங்கார அர்ச்சனை வழிபாடு
- பிரதி சனிக்கிழமை தோறும் ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு மாலை அன்னதான ஜோதி பூஜை
- பிரதி வெள்ளிக்கிழமை தோறும் ராகு காலத்தில் மஞ்ச மாதாவுக்கு விசேஷ அபிஷேகம்
- பிரதி மாதம் நாகராஜ சுவாமியின் பிறந்த நக்ஷத்திரமான ஆயில்யத்தில் அவருக்கு காலை விசேஷ அபிஷேக ஆராதனைகள்
- பங்குனி உத்தரம் ஸ்ரீ ஐயப்பனின் அவதார திருநாளில் அபிஷேக அலங்கார பூஜைகள்
- சித்திரை விசு யாத்திரை அடியார்களுக்காக ஏப்ரல் மாதம் முதலாம் தேதியிலிருந்து அபிஷேக ஆராதனை ஜோதி பூஜை வழிபாடு
- சித்திரை விசு தினத்தன்று விசு கனி பூஜை
- ஆனி மாதம் கொடியேற்ற தீர்த்தத் திருவிழா
- இலங்கை திருநாட்டில் சபரிமலை ஸ்ரீ ஐயப்பனின் பரம்பரை அதியுயர் நித்ய தந்திரி அவர்களால் நடைபெறும் திருவிழா நிகழ்ச்சிகள் மிகவும் சிறப்பும் பெருமை யும் வாய்ந்தது. (கேரள திருநாட்டில் நடைபெறும் விசலி விக்கிர யானை வீதிவலம் வரும் தீர்த்தவாரி நிகழ்ச்சிகள் எமது ஆலயத்தில் மட்டுமே நடைபெறு கின்றன.)
- ஆவணி மாதம் திருவோணம் பண்டிகை அன்று ஸ்ரீ ஐயப்பனுக்கு சிறப்பு அபிஷேக ஆராதனைகள்
- புரட்டாசி மாதம் நவராத்திரி காலத்தில் அன்னை மஞ்சமாதாவுக்கு விசேஷ அபிஷேக அலங்கார வழிபாடுகள்
- கார்த்திகை 1ஆம் தேதி ஸ்ரீ ஐயப்ப சபரி மலை யாத்திரிகர்களுக்கு மாலை அணிவிப்பும் விசேஷ அபிஷேக ஆராதனை சக்தி வழிபாடும் ஜோதி பூஜையும்

- கார்த்திகை 1 முதல் தை 1 வரை பிரதி சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை பௌர்ணமி தினம் ஆகிய தினங்களில் விசேஷ சக்தி அன்னதானம் பூஜையும் தினமும் மாலை ஜோதி பூஜையும்
- கார்த்திகை 1 முதல் தொடர்ந்த 41ஆவது நாள் மண்டல சக்தி ஜோதி பூஜை விசேஷ பூஜையாகக் கொண்டாடப்படுகிறது.
- ஆங்கில வருடப் பிறப்பான ஜனவரி 1ஆம் தேதி விசேஷ சக்தி, ஜோதி அன்னதானம், பூஜைகள்
- சபரிமலைக்கு யாத்திரை செல்லும் அடியார்களால் ஜனவரி மாதம் 2ஆம் 3ஆம் தேதிகளில் நடைபெறும் மிகப் பெரிய மஞ்சமாதா கருப்பசாமி பூஜை
- சபரிமலையில் ஜோதி தரிசனம் நடை பெறும் நாளில் இங்கும் எமது ஆலயத்தில் விசேஷ அபிஷேக ஆராதனைகள் ஸ்ரீ ஐயப்ப சுவாமிக்கு நடைபெற்று சக்தி பூஜையுடன் மாலை மிகப் பெரிய திருவிளக்கு ஜோதி பூஜை தரிசனம்
- யாத்திரை சென்று திரும்பி வந்த அடியார் களினால் தை மாதம் நடுப்பகுதியில் நடத் தப்படும் விசேஷ பூஜையும் சபரிமலை ஐயப்பனின் பிரசாதம் வழங்கலும்

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகம் நிர்வாகக் குழுவினரால் மேற்கொள்ளப்படுகின்றது. அறங்காவலர் சபையில் 10 பேர்கள் அங்கம் வகிக்கின்றனர்.

இப்பொழுது

திரு. ஆர். ராஜு சிவராமன்
பொறியியலாளர்

திரு. பி. முத்துசாமி
வியாபாரம்

இவ்விருவரும் தர்மகர்த்தாக்களாகவும்

திரு. கணேசமூர்த்தி
வியாபாரம்

திரு. தியாகராஜா
வியாபாரம்

திரு. சு. ரவீந்திரன் குருசாமி
வியாபாரம்

திரு. வி. வி. மனோரஞ்சன்
வியாபாரம்

திரு. பி. சுப்பிரமணியம்
வியாபாரம்

திரு. எஸ். பால்ராஜ்
வியாபாரம்

திரு. ரமேஷ்
வியாபாரம்

திரு. ஆனந்தீஸ்வரன்
சுங்க அலுவலர்
செயலாளராகவும் பணிபுரிகின்றனர்.

## கும்பாபிஷேகங்கள்

15. 07. 2002இல் கேரள தாந்திரீக முறைப்படி பிரம்மஸ்ரீ. கண்டரு கேஸ்வரு தந்திரி (சபரிமலை ஐயப்பன் ஆலய மேல் சாந்தி) என்னும் நம்பூதிரிப் பெரியார் தலைமையில் மிகச் சிறப்பான முறையில் கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## கலைப்பணி

பஜனை, சொற்பொழிவுகள் அறநெறிப் பாடசாலை மாணவரின் நடனம், பாடல் நிகழ்ச்சிகள் இடம்பெறும்.

கேரள நாட்டிற்கே உரித்தான பஞ்ச வாத்தியத்தினை அவற்றை இயக்குவதில் தேர்ந்த கலைஞர்களைக் கொண்டு 2002இல் நடந்த கும்பாபிஷேகத்தில் கேரளாவிலிருந்து அவர்களை வரவழைத்து அந்த வாத்திய இசை நிகழ்ச்சியினை வழங்கியது இலங்கை யிலேயே முதன் முறையாக நடைபெற்றது என்று கூறலாம்.

அக்கும்பாபிஷேக விழாவினையொட்டி அரிய பெரிய மலர் ஒன்று "ஐயப்ப தரிசன மாக" வெளிவந்ததும் குறிப்பிடத்தக்கது.

## ஆலய அறப்பணிகள்


அறநெறிப் பாடசாலை நடத்துவதும் ஏழைகளுக்கு மருத்துவ ரீதியான உதவிகளும் ஆலய உதவியில் நடைபெறுவனவாகும்.

## ஆலய வரலாறு

திரு. சிவராமன், திரு. முத்துப்பிள்ளை ஆகியோரின் ஒத்துழைப்புடனும் ஐயப்ப ஆயுட்கால அங்கத்தினர்களின் உதவியுடனும் 1990ம் ஆண்டு இந்த ஆலயக்காணி வாங்கப் பட்டது. 5. 4. 1993இல் பத்மஸ்ரீ கே. ஜே. ஜேசுதாஸ் அவர்களால் அடிக்கல் நாட்டப் பட்டு ஆரம்பித்த இத்திருப்பணி 1998ஆம் ஆண்டில் பிரபாகரானந்த சுவாமிகளால் 18ஆம் படிகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டு திருப்பணிகள் ஆரம்பிக்கப்பெற்றன. திருப்பணிகள் மணிகண்டனின் அருளால் விரைவில் பூர்த்தியடைந்து 15. 07. 2002இல் சபரிமலை தந்திரி கண்டரு மகேஸ்வரு தந்திரி அவர்களால் தாந்ரீக முறைப்படி மஹாகும்பாபிஷேகமும் கோலாகலமாக நடைபெற்றது.

தமிழ்நாட்டில் கேரள நாட்டிலுள்ள சபரிமலைக்குச் செல்லவில்லையே என்ற பக்தர்களின் மனக்குறையைப் போக்கும் சிறந்த ஆலயமாக ஸ்ரீ ஆனந்த ஐயனின் ஆலயம் விளங்குகின்றது.

# ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு திருக்கோவில்



ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு திருக்கோவில்

98/10, கோவில் வீதி

கொழும்பு - 15

## ஆலய அமைப்பு

கொழும்பு முகத்துவாரத்தின் 100வது இலக்கத்தில் இவ்வாலயம் 100 பேர்ச் பரப்பளவில் அமைந்துள்ளது. இங்கு மூலமூர்த்தியாக இருந்து அருள்பாலிப்பவர் ஸ்ரீ வெங்கடேஸ்வர மஹாவிஷ்ணு ஆவார். இவ்வாலயத்தின் இடமிருந்து வலமாக சூரியபகவான், சந்திர பகவான், துர்க்கை ஆழ்வார், சனீஸ்வரர், லக்ஷ்மி கணபதி, முத்துமாரியம்மன், பாலமுருகன், ஆதிலக்ஷ்மி, சந்தானலக்ஷ்மி, கஜலக்ஷ்மி, தனலக்ஷ்மி, வீரலக்ஷ்மி, ஐஸ்வர்ய லக்ஷ்மி, விஜயலக்ஷ்மி, பத்மாவதி தாயார், ஆண்டாள் பிராட்டி, குபேரர், மும்மூர்த்திகள், விஷ்வக்சேனர், நவக்கிரக நாயகர்கள், தண்வந்திரி, கருடாழ்வார், ஆஞ்சநேயர் என்போர் வீற்றிருக்கின்றனர்.

வசந்த மண்டபம் உள்ளது. எழுந்தருளி மூர்த்தங்கள் ஐம்பொன்னால் செய்யப்பட்டவை. பிரமோற்சவமும் வசந்தோற்சவமும் நடைபெறுகின்றன. துவஜஸ் தம்பம், தாமிரத்தால் ஆனது. பலிபீடமும் கருடாழ்வாருடன் காட்சி அளிக்கின்றது.

## பூஜை ஒழுங்குகள்

தினந்தோறும் 5 கால பூஜைகள் கிரமமாக நடைபெறுகின்றன. (அ.கா. 5.45, காலை 6.00, ந.ப. 11.30, மாலை 5.00, இரவு 7.30 அர்த்தஜாம பூஜையுடன் நிறைவு) செவ்வாய், வெள்ளி, சனி ஆகிய தினங்களில் விசேஷ பூஜைகள் இடம்பெறும்.

மாதாந்த பௌர்ணமி தினங்களிலும் மாத சிறப்பு நாட்களிலும் விசேஷ வழிபாடுகள், பூஜைகள், அலங்காரங்கள் என்பன இடம் பெறும்.

பூஜை செய்வதற்கு சிவாச்சாரியாரும் அந்தணர்களும் பட்டாச்சாரியார்களும் உள்ளனர்.

அவர்களுக்கு உதவ பலவேலைக்காரர்களும் இருக்கின்றனர்.

நாளாந்த பூஜையில் தீர்த்தம், சஜாரி சந்தனம், குங்குமம் பிரசாதமாக வழங்கப்பட விசேஷ தினங்களில் கடலை, பொங்கல், வெண்சாதம், புளியோதரை வழங்கப்படும்.

ஆலயத்திற்கு சோடஷோபசாரங்கள் உட்பட அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆலயத்தின் பிரமோற்சவம் புரட்டாதி மாதம் 21ஆம் தினத்திலிருந்து 31ஆம் நாள் வரை நடைபெறும். வெங்கடேஸ்வரருக்கான விசேஷ பூஜைகள் அலங்காரங்கள் இந்த 10 நாட்களிலும் இடம்பெறும். ஸ்ரீ பூமிநீளா பத்மாவதி ஸமேத வெங்கடேஸ்வரர் பிரமோற்சவ நிறைவில் தேரில் பவனி வருவார்.

இது தவிர்ந்த வசந்தோற்சவமும் சித்திரை மாதத்தில் நடைபெறுகிறது. 2 தேர் பவனிகள் இவ்வாலயத்தில் இடம்பெறுவது சிறப்பாகும்.

## பிரமோற்சவ உபயகாரர்கள் :

திரு. கே. துரைசாமி செட்டியார்
தொழிலதிபர்

திரு. கே. ரி. எம். கருப்பையாபிள்ளை
ரஞ்சனாஸ் நிறுவன முகாமையாளர்

கணேஷா டெக்ஸ் ரையில்ஸ்
மேயின் வீதி, கொழும்பு - 11

ரஞ்சனாஸ் டெக்ஸ் ரையில்ஸ்
மெயின் வீதி, கொழும்பு - 11

இவற்றுடன் மாதாந்த பௌர்ணமிகளும், ஆடிப்பூரம், சித்திரா பௌர்ணமி, கந்தஷஷ்டி, நவராத்திரி, திருவெம்பாவை, கௌரிகாப்பு, வைகுண்ட ஏகாதசி, திருப்பாவை, சூரன்போர், வாழைவெட்டு என்பனவும் கொண்டாடப் படும்.

## ஆலய நிர்வாகம்

குடும்ப வழி உரிமை முறையில் தெரிவு நடைபெறுகிறது.

## தற்போதைய கோவில் முகாமை / பரிபாலனம்

கோயில் பரிபாலனத்தை அறங்காவலர்கள் செய்கின்றனர்.

## தற்போதைய அறங்காவலர்கள்

திரு. கே. துரைசாமி செட்டியார்
திரு. கே. ரி. எம். கருப்பையாபிள்ளை
திரு. டி. குணசீலன்
திரு. டி. வெங்கடேஸ்வரன்
திரு. டி. விக்னேஸ்வரன்

இவ் ஐந்து பேரும் நிர்வாக பரிபாலனம் செய்கின்றனர். ஆலயத்தின் பிரதான சிவாச்சாரியார் உள்ளிட்ட பூசகர்களுக்கும் மாதவேதனமும் தக்ஷணையும் குடியிருப்பதற்கு ஒரு வீடும் வழங்கப்பட்டுள்ளது.

## கும்பாபிஷேகம்

28. 01. 2002இல் நடைபெற்றது.

## ஆலய வரலாறு

திரு. கே. துரைசாமி செட்டியார் இந்தியாவிலுள்ள திருப்பதிக்குச் சென்றிருந்த சமயம் அவரது கனவில் தோன்றிய துறவி ஒருவர் "என்னுடைய வைணவ வழிபாட்டு முறையை இலங்கையில் பரப்பு" எனக் கூறி மறைந்தார். இதன்பின் இலங்கை திரும்பிய செட்டியார் வழக்கறிஞர் ஒருவருக்குச் சொந்தமான காணியை முகத்துவார கடற்கரைப் பகுதியில் வாங்கினார். கோயிலுக்கான காணி கிடைக்கவே 1996. 12. 14அன்று அமைந்த சுபவேளையில் வெங்கடேஸ்வர பெருமானின் ஆலயத்திற்கான அடிக்கல் செட்டியாராலேயே நாட்டப்பட்டது. ஆரம்பமான கட்டிடப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று 2002ஆம் ஆண்டு நிறைவடைந்ததும் மஹாகும்பாபிஷேகம் மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

## கலை நிகழ்ச்சிகள்

தற்போது அறநெறி பாடசாலை மாணவர்களின் இசை, நாட்டிய, நிகழ்ச்சிகளுக்கே முன்னுரிமை வழங்கப்படுகிறது.

மிகப் பிரபல்யமான பல நிகழ்ச்சிகளை தென்னிந்திய, இலங்கை கலைஞர்கள் பலர் பல நிகழ்ச்சிகளை நிகழ்த்தினர்.

## ஆலய அறப்பணிகள்

அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு உணவு வழங்குதல், புலமை பரிசில்கள் வழங்குதல், வறிய மாணவரின் கல்விக்கு உதவுதல்,

ஆங்கிலம், தமிழ், விஞ்ஞானம் போன்ற பாடங்களுக்கு பிரத்தியேக வகுப்புக்களை இலவசமாக நடாத்துதல்.

# ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்



ஸ்ரீ சித்தி விநாயகர் கோவில்
150, மாவில ஒழுங்கை, பேஸ்லைன் வீதி
கொழும்பு - 9

## ஆலய அமைப்பு

இவ் ஆலயம் தெமட்டகொடை பேஸ்லைன் வீதி, மாவில ஒழுங்கை 150 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ளது. இங்கு மூலமூர்த்தியாக விநாயகப் பெருமான் வீற்றிருந்து அருள்பாலிக்கின்றார். எழுந்தருளி மூர்த்தங்களாக பிள்ளையார், சிவன், அம்பாள், பைரவர் என்போர் உள்ளனர்.

## ஆலய வரலாறு

1972ஆம் ஆண்டு குருசாமி கோட்டமலை என்பவரால் இவ் ஆலயம் ஸ்தாபிக்கப்பட்டது. தொடர்ந்து அவரின் வழித்தோன்றல்களினால் நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. எம். உமாதேவி என்பவர் தற்போது பராமரித்து வருகின்றார். 1998ஆம் ஆண்டு சிறு கோவிலாக கட்டி கும்பாபிஷேகமும் நடாத்தப்பட்டது. 6 வருடங்களாக அறநெறிப் பாடசாலையும் கோவிலில் நடைபெறுகின்றது. 2003ஆம் ஆண்டு தொடக்கம் கலை நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. சமய விழாக்களும் நடைபெறுகின்றன. ஆலயத்திற்கு எதுவித வருமானமும் இல்லாத நிலையில் கஷ்டத்தின் மத்தியில் ஆலய விஸ்தரிப்புப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ராஜ கோபுரம், தேர் என்பன அமைப்பதற்கான வேலைத்திட்டங்களும் உள்ளன. ஆலயத்திற்கு அருகில் உள்ள அரசாங்கக் காணியை கோவிலுக்குப் பெற்று அங்கு ஆரம்பப் பாடசாலை இலவச திருமண மண்டபம் என்பன அமைக்கும் திட்டமும் உண்டு.

## ஆலய அறப்பணிகள்

அறநெறிப் பாடசாலை நடைபெறுகின்றது. மற்றும் கைத்தொழில் ஊக்குவிப்புப் பணிகள், யோகா பயிற்சிகள், கூட்டுப் பிரார்த்தனைகள், பல்வேறு நிறுவனங்களை ஒன்றிணைத்து ஒற்றுமையை வளர்த்தல், அறநெறி சிந்தனைகளை கிராமங்கள் தோறும் விஸ்தரித்தல் என்பன முன்னெடுக்கப்படுகின்றன. பல்வேறு தலங்களுக்கு தீர்த்த யாத்திரை அழைத்துச் செல்லுதல் போன்ற பணிகளும் நடைபெறுகின்றன.

## ஆலய நிர்வாகம்

நான்கு பேர் கொண்ட நிர்வாகக் குழுவினர் ஆலயத்தை சிறப்பாக நிர்வகிக்கின்றனர். தற்போதைய நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பின்வருமாறு :

தலைவர்
திரு. முத்து சிவன்

உபதலைவர்
திரு. ஆர். விஜயகுமாரன்

செயலாளர்
திரு. வாசு சந்திரன்

உபசெயலாளர்
திரு. எஸ். விஜயகுமார்

பொருளாளர்
மா. உமாதேவி

உபபொருளாளர்
சந்திரமணி

ஆலோசகர்
திரு. எஸ். சிவகுமார் தர்மா

காப்பாளர்
மா. உமாதேவி

# ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் கோவில்



*ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்*
*94/4,* விவேகானந்த மேடு
கொழும்பு - *13*

## ஆலய அமைப்பு

கொழும்பு 94/4, விவேகானந்த மேடு, கொழும்பு-13 இல் இவ்வாலயம் அமைந்துள்ளது. மூலமூர்த்தியாக ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் அருள் பாலிக்கின்றாள். 2.5 பேர்ச் சுற்றளவில் இந்த ஆலயம் அமைந்துள்ளது.

பூஜைக்குரிய தெய்வங்களாக விநாயகர், அம்மன், முருகன், ஆஞ்சநேயர் காட்சியளிக்கின்றனர். எழுந்தருளி மூர்த்தங்களாக பிள்ளையார், அம்மன், முருகன், ஐயப்பன் காணப்படுகின்றனர். உற்சவ காலங்களில் எழுந்தருள்வதற்கு உற்சவ அம்மன் திருமூர்த்தம் உள்ளது.

முதலில் இவ்வாலயம் வீடாகவும், தற்பொழுது உள் வீதியோடு சிறு ஆலயமாகவும் அமைக்கப்பட்டுள்ளது.

## பூஜை ஒழுங்கு

தினந்தோறும் மூன்று காலப் பூஜைகளாக காலை 7.00 மணி; மதியம் 12.00 மணி; மாலை 6.00 மணி என வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆலயப் பணிக்கு குருக்களும், குருக்களின் குடும்பத்தினருமே பணியாற்றுகின்றனர். ஆலயத் தூய்மை மற்றும் தொண்டுகளுக்கு பொதுமக்களே தொண்டர்களாக இயங்குகின்றனர்.

வெள்ளிக்கிழமை போன்ற தினங்களில் மாலை 6.00 மணிமுதல் இரவு 8.00 மணி வரையும் பஜனை வழிபாடுகள் தொடர்கின்றன.

நாளாந்த பூஜைகளில் பால், பொங்கல் முதலியனவும் பூஜைக் காலங்களில் பொங்கல், வடை, மோதகம், கடலை, அவல் முதலியனவும் நிவேதிக்கப்படுகின்றன. பூஜைக்குப் பிறகு பொங்கல், அவல், கடலை பிரசாதங்களாக மக்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன.

பூஜைக்குரிய உபகரணப் பொருட்கள் அனைத்தும் உள்ளன.

## திருவிழாக்கள்

ஆடிப்பூரத் திருநாளை அந்தமாகக் கொண்டு 12 நாட்கள் அலங்கார உற்சவம் நடைபெறுகின்றது. வேட்டைத் திருவிழா நடைபெறும். ஆடிப்பூரத் தீர்த்தத் திருவிழா அம்பாள் உள்வீதி பவனி வந்து கோவிலிலேயே தீர்த்தோற்சவம் நடைபெறும். உற்சவ காலத்தில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்படும். மணிமலர் ஸ்டோர்ஸ் உற்சவ உபயகாரராவர்.

நவராத்திரி 10 நாட்கள் உற்சவம் நடைபெறும். நவராத்திரி காலத்தில் அம்பிகைக்கு சண்டிஹோமம் நிகழும்.

வருஷாபிஷேகத்தை முன்னிட்டு தை மாதத்தில் பத்து நாட்கள் உற்சவம் நடைபெறும்.

ஆலயத்தில் நேர்த்திக் கடன்கள் மூலம் பட்டுப்புடவைகள், குத்துவிளக்குகள், அங்கிகள், குடம் போன்றவைகள் அபிஷேகக் காணிக்கை கட்டுதல் போன்றவைகள் பெறப்படுகின்றன.

அனைத்து இன மக்களும் ஆலய வழிபாட்டில் பங்கேற்கின்றனர்.

ஆலய வாகனமாக சகடை மட்டும் உள்ளது.

## ஆலய நிர்வாகம்

ஆலய நிர்வாகத்தை குருக்கள் அவர்களே பொறுப்பேற்று நடத்துகின்றார். குடும்பவழி உரிமை மூலமே ஆலயப் பரிபாலனம் நடைபெறுகின்றது. டாக்டர். சாம்பசிவ மணிக் குருக்கள் அவர்களே ஆலய நிர்வாகம் அனைத்தையும் பொறுப்பேற்று நடத்துகின்றார்.

### கும்பாபிஷேகங்கள்

2 தடவைகள் கும்பாபிஷேகங்கள் நடைபெற்றன. 1991, 2002 ஆகிய காலங்களில் நடைபெற்றன.

## கலைநிகழ்வுகள்

சுமார் 25 இசைக் கச்சேரிகள் இடம் பெற்றிருக் கின்றன. இது தவிர பஜனை, சொற்பொழிவு ஆகியவைகளும் நடை பெறுவதுண்டு. பிரபல இசைக் கலைஞர்கள் திரு. டி. எம். சௌந்தர ராஜன், மலேஷியா வாசுதேவன் ஆகியோரின் பாராட்டுக்களும் ஆலயப் பணியினைப் பாராட்டிப் பெற்றவைகளாகும்.

## ஆலய அறப்பணிகள்

அடியார்களுக்கு சேலை, வேட்டி வழங்கல்; அன்னதானம் வழங்கல்; பரிசில்கள் வழங்கல் போன்றவற்றை ஆலயம் மேற்கொண்டு வருகின்றது.

## ஆலய வரலாறு

இக்கோயில் 21. 01. 1991 ஆம் ஆண்டு மஹா கும்பாபிஷேகம் நடைபெற்றது. ஆலய தர்மகர்த்தாவின் மகள் துர்க்காம்பி காவிற்கு திடீரென இனம்புரியாத வியாதி வந்தது. குருக்களின் கனவில் (தர்மகர்த்தா சாம்பசிவ மணிக்குருக்கள்) அம்பாள் தோன்றி தன்னைப் பிரதிஷ்டை செய்யச் சொல்லி மறைந்து விட்டாள். அதன் பலனாக இக்கோவில் அமைந்தது. சுமார் லட்சக்கணக்கான அடியார்கள் வழிபடு கின்றனர். வெள்ளி, செவ்வாய் ஆகிய நாட்களில் சுமார் ஆயிரம் அடியார்கள் வரை வந்து தரிசனம் செய்கின்றனர்.

# ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம்




சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம்
**188, புதிய செட்டித் தெரு**
கொழும்பு - **13**
*Tel : 2433325, 5335431* *Fax : +94 11 2471099*
*Email : ISKCON@SLT.LK* *Web : www.ISCONSRILANKA.com*

மூல மூர்த்திகள்: ராதா, கிருஷ்ணர்
ஜகந்நாத், சுபத்ரா,
பலராம்

சர்வதேச கிருஷ்ண பக்திக் கழகம் முதன் முதலில் அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் ஸ்ரீல பக்தி வேதாந்த சுவாமி பிரபு பாதா வினால் 1965ஆம் ஆண்டு ஆரம்பிக்கப் பட்டது.

ஸ்ரீல பிரபுபாதா இந்தியாவில் கல்கத் தாவை பிறப்பிடமாகக் கொண்ட வர். அவர் 1977ஆம் ஆண்டு பூமியைவிட்டு மறைவதற்கு முன்னர் அகில உலகிலும் இக்கழகங்களை ஸ்தாபித்தார், ஆலயங்களையும் நிறுவினார். கல்கத்தாவில் மாயப்பூர் எனும் இடத்தில் இதன் தலைமைப் பீடத்தை அமைத்தார்.

இலங்கையில் 1976ஆம் ஆண்டு சீடர் களால் கொழும்பு புதுச்செட்டித் தெருவில் இக்கழகம் ஸ்தாபிக்கப்பட்டது. 1982ஆம் ஆண்டு இந்தியா திருப்பதி வெங்கடேஸ் வராலயத்தினரால் நன்கொடை வழங்கப் பட்ட ஸ்ரீ பால கிருஷ்ணமூர்த்தி பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1990இல் ராதாராணியின் பிம்பமும் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண திருக்கல்யாணமும் இடம் பெற்றது. அதிலிருந்து 6 வேளை பூஜை ஆராதனைகளுடன் ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ண ஆலயம் சிறப்பாக இயங்கி வருகிறது. வேண்டுவார்க்கு வேண்டுவன வழங்கும் கண்ணனாகவும் ஆத்மிக வாழ்வில் வழி காட்டும் ஒரு ஆலயமாகவும் இருக்கிறது. அத்துடன் 1996இல் பூரி ஜகந்நாத், சுபத்ரா, பலராம் மூன்று மூர்த்திகளும் ஸ்ரீல பிரபுபாதாவின் மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

1996இல் சிறப்பாக ஸ்ரீல பிரபுபாதாவின் நூற்றாண்டு விழாவையொட்டி 1008 புண்ணிய தீர்த்தங்களால் அபிஷேகமும் ஆராதனைகளும் இடம்பெற்றன.

வருடந்தோறும் ராதா கிருஷ்ண ஆலயத்தில் ஸ்ரீ கிருஷ்ணஜெயந்தி ஸ்ரீ ராம நவமி விழாக்கள் சிறப்பாகக் கொண்டா டப்பட்டு வருவதுடன் 1999ஆம் ஆண்டு ஸ்ரீ ஜகந்நாதர் இரதயாத்திரை விழாவும் கொண்டாடப்பட்டது. இரதபவனி புதுச்செட்டித்தெரு, கொட்டாஞ்சேனை யிலிருந்து புறப்பட்டு இராமகிருஷ்ண மிஷன் வரை சென்று அங்கு சில நாட்கள் தங்கி மீண்டும் இரதபவனி கொட்டாஞ் சேனையை வந்தடையும் வகையில் சிறப் பாக இடம்பெற்று வருகின்றது. இவ்வருடம் 6ஆவது முறையாக இரத பவனி வர உள்ளது.

அத்துடன் 1999ஆம் ஆண்டு ஆலயத்தி னால் பக்தி வேதாந்த சிறுவர் இல்லம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டது. தற்சமயம் 85 பிள்ளை களைக் கொண்ட கோகுலமாக 607A நீர்கொழும்பு வீதி மாபோல வத்தளையில் இயங்கி வருகிறது. அங்கு பக்தி வேதாந்த சர்வதேச பாடசாலை ஒன்று இயங்கி வருகிறது. அங்கு ஸ்ரீ ரங்க நாயகி ஆண்டாள் சந்நிதிகளும் ஸ்ரீ ரங்கநாத மூர்த்தி வழிபாட்டிற்காக பிரதிஷ்டை செய்யப் பட்ட சிறு ஆலயமும் உள்ளது.

# தம்பையா முதலியார் தர்ம சத்திரம்

இச்சத்திரம் கொழும்பு/13 சாந்த அந்தோனியார் தெரு 30ம் இலக்கத்தில் அமைந்துள்ளது. 1880ம் ஆண்டளவில் தம்பையா முதலியார் அவர்களால் இச் சத்திரம் கட்டப்பட்டது. தம்பையா முதலியார் பொன்னம்பலவாணேஸ்வரர் கோவில் ஸ்தாபகரான பொன்னம்பல முதலியாரின் உறவினராவார், இந்தியாவிலிருந்தும் வேறு இடங்களிலிருந்தும் கதிர்காமம் செல்ல வரும் யாத்திரீகர்கள் தங்கி இளைப்பாறிச் செல்வதற்காக இது கட்டப்பட்டது. மேலும் தங்கும் அடியார்கள் புறப்படும்போது வணங்கிச் செல்வதற்காக ஒரு விநாயகர் சிலையும் அங்கு வேரோடியிருந்த வன்னி மரத்தின் கீழ் முதலியார் ஸ்தாபித்தார்.

தம்பையா முதலிய்ாரின் மறைவிற்குப் பின்னர் 1932ம் ஆண்டு இச்சத்திரம் அவரது மகன் சண்முகம் முதலியாரிடம் ஒப்படைக் கப்பட்டது. இவரது மறைவிற்குப் பின்னர் 1944ம் ஆண்டு இவரின் சகோதரரின் மகனான முருகேசு தம்பையாவிடம் ஒப்படைக்கப்பட்டது. இவரது மறைவின் பின்னர் 1946ம் ஆண்டு நீதிமன்றத்தால் பேராசிரியர் ரி. நடராஜா அவர்கள் தர்ம கர்த்தாவாக நியமிக்கப்பட்டார். சேர்.பொன் அருணாசலத்தின் புதல்வியான சிவானந்தம் தம்பையா அவர்களின் மகனே பேராசிரியர் ரி. நடராஜா ஆவார். இச்சத்திரமும் கோவிலும் சென்ற ஆண்டுவரை ரி. நடராஜாவின் மேற்பார்வையில் நிர்வகிக்கப்பட்டு வந்தது. சுவாமி விவேகானந்தர், சுவாமி சிவானந்தர், கண்ணையா யோகி, சிவபாலயோகி ஆகியோர் இங்கு தங்கிச் சென்றுள்ளனர்.

இன்று இச்சத்திரத்தில் கோயில் தொண்டு புரிவோர்கள் தங்கியுள்ளனர். மண்டபத்தில் கல்யாணங்கள், விழாக்கள், அன்னதானம் போன்றவை நடைபெறுகின்றன. கோவில் குருக்களும் சத்திரத்திலேயே தங்கியுள்ளார். தற்போதும் கதிர்காம யாத்திரிகர்கள், பிராமணர்கள் வந்தால் அவர்கள் தங்குவதற்கு இருப்பிடமும் இலவசமாக உணவும் வழங்கப்படுகின்றது.

# ராம்லால் மகாராஜா தர்ம சத்திரம்

இச்சத்திரம் கொழும்பு ஜிந்துப்பிட்டித் தெரு 99ம் இலக்கத்தில் அமைந்துள்ளது. இச்சத்திரமும் இதன் அருகிலுள்ள ஸ்ரீ சிவராஜ விநாயகர் ஆலயமும் வரலாற்று சிறப்பு வாய்ந்தவை ஆகும்.

1813ம் ஆண்டு இலங்கையில் வாழ்ந்த பெருஞ்செல்வப் பிரபுக்களில் ஒருவரான ராம்லால் மகாராஜாவினாலும் அவரது மனைவியார் சிவப்பிரகாச அம்மாளினாலும் இவ்வாலயமும் சத்திரமும் தோற்றுவிக்கப்பட்டன. இவ்வாலயமும் சத்திரமும் மிக அரிய கலைநுணுக்கங்களைக் கொண்டவை.

அக்காலத்தில் அயல் நாடுகளிலிருந்து வந்த பெரும் வணிகர்கள், ஆன்மீகப் பெரியார்கள் என்போர் தங்கிச்செல்லும் இடமாக இச்சத்திரம் விளங்கியுள்ளது. சுவாமி விவேகானந்தர், நேபாள மன்னர் மகேந்திரா, மகாகவி ரவீந்திரநாத் தாகூர், ஆனைக்குட்டி சாமியார், கிருபானந்த வாரியார் போன்ற ஆன்மீகப் பெரியார்களும் சரித்திர புருஷர்களும் தங்கி சென்றுள்ளனர். தற்போது ஜிந்துப்பிட்டியிலுள்ள முருகன் தியேட்டர் அந்தக் காலத்தில் ஓலைக் கொட்டகையாக வெறும் மண்டப மாக இருந்தது. அங்கு சொற்பொழிவுகள், கூட்டங்கள் நடைபெறுவதுண்டு. சொற்பொழிவுகளுக்காக வரும் பெரியார்கள் இச்சத்திரத்திலேயே தங்கியிருந்துள்ளனர். இந்தியாவிலிருந்து வரும் வாணிப வியாபாரிகளும் இச்சத்திரத்திலேயே தங்கி தமது வியாபார நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்.

இந்தியாவில் தீண்டாமை ஒழிப்பு இயக்கம் தீவிரமாக இருந்த சமயத்தில் காந்திஜி இலங்கைக்கு விஜயம் செய்த போது இச்சத்திரத்திலேயே தங்கியிருந்துள்ளார். 1940ம் ஆண்டுகளில் பிரசித்தி பெற்ற இசைக் கலைஞர்களால் நிர்வகிக்கப்பட்ட ரசிக ரஞ்சனி சபையினரின் பொதுக் கூட்டங்களும் 1950ம் ஆண்டுகளில் இராம கானசபை, சுரநூல் சங்கம் போன்றவற்றின் பொதுக்கூட்டங்களும் இச்சத்திரத்தில்

நடைபெற்றன. ராம்லால் மகாராஜா குடும்பத்தினர் அனைவருமே சிறந்த சங்கீத கலைஞர்களாக இருந்துள்ளனர். இசைக் கருவிகள் வாசிப்பதிலும் திறமை உள்ளவ ராய் இருந்துள்ளனர். சங்கீத வகுப்புக்களும் நடாத்தி வந்துள்ளனர்.

1942ல் 2வது உலக மகாயுத்த காலத்தில் வட இந்தியாவிலிருந்து வந்த பஞ்சாபி இராணுவ சிப்பாய்களும் இச்சத்திரத்தி லேயே தங்கியிருந்தார்கள். 1953-1964 வரை குருகுலம் என்ற பாடசாலை இச்சத்திரத்தில் நடைபெற்று வந்துள்ளது. இந்த சமய வகுப்புகளும் பௌத்தமத வகுப்புகளும் நடாத்தப்பட்டன. பியதாச என்பவர் பௌத்த மத வகுப்புகளை நடாத்தியதாக அறிகின்றோம்.

கோயில் பூசைகள் செய்வதற்கு வருமானம் பெறும் பொருட்டு சத்திரத்தின் ஒரு பகுதி 1948ம் ஆண்டளவில் மக்களுக்கு கூலிக்கு கொடுக்கப்பட்டது. 1964ன் பின் இலவச வகுப்புக்கள் நடாத்தப்பட்டு வந்த மறுபகுதியும் கூலிக்கு கொடுக்கப்பட்டது. சில காலத்தில் பன் மக்கள் கூலி கொடுப்பதை நிறுத்திக் கொண்டதாகவும் வருமானமின்றி கோயிலை சிறந்த முறை யில் நிர்வகிக்க முடியாமலிருப்பதாகவும் குடியிருப்புக்களினூடாக கோயிலுக்கு வர மக்கள் தயங்குவதாகவும் தர்மகர்த்தாக்கள் கூறுகின்றனர். சத்திரத்தை கட்டிய ராம்லால் மகாராஜாவினது பேத்தியாகிய சிவப் பிரகாசம்மாள் தற்போது தர்மகர்த்தாவாக விளங்குகின்றார்.

# கொழும்பு இராமகிருஷ்ண மிஷன்

திருக்கோணமலையில் சுவாமி சர்வானந்தா அவர்கள், சுவாமி விபுலானந்தர் காரணமாக முதன்முதலில் இராமகிருஷ்ண மிஷன் ஆசிரமம் 1925ல் அமைந்தது. ஆயினும் இராமகிருஷ்ண மிஷன் எனும் பெயரில் பேலூர் இராமகிருஷ்ணமிஷன் மடத்தில் நேரடிக் கட்டுப்பாட்டில் கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் அமைக்கப்பட்டது. இந்த மிஷன் தோற்றம் பற்றி 1934ல் சுவாமி அசங்கானந்தர் சுவாமி விபுலானந்தர் வெளியிட்ட ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்து திருமடம், கொழும்பு எனும் அறிக்கையில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

''....1915ம் ஆண்டு சுவாமி சர்வானந்தர் இலங்கைவாசிகளினது வேண்டுகோளுக் கிணங்கி விஜயம் செய்து தமது சொற் பொழிவுகளினாலே கேட்போரது உள்ளத் தினை உருக்கும் ஒரு பெருங் கிளர்ச்சி யினை உண்டாக்கினார். அவர் இடை யிடையே இலங்கைக்கு விஜயம் செய்ததின் பெறுபேறாக யாழ்ப்பாணம், திருகோண மலை, மட்டக்களப்பு முதலிய இடங் களிலே சங்க ஸ்தாபனங்கள் நிறுவப் பட்டன. ஆங்காங்கு பாடசாலைகளும் அநாதைப் பிள்ளைகள் வசிக்கும் இல்லங் களும் நிறுவப்பட்டு ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்துச் சாதுக்களால் நடத்தப்பட்டு வருகின்றன. மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் இருக்கும் இடை யிடையே கொழும்பு மாநகரத்துக்கு விஜயம் செய்து சொற்பொழிவுகளும் சம்பாஷணைகளும் ஆற்றினதின் நிமித்தம் சங்கத்திலே பற்றுதலுள்ள சில அபிமானி களுடைய உள்ளத்திலே கொழும்புமா நகரத் திலே ஒரு திருமடம் ஏற்படுத்த வேண்டு மென்னும் எண்ணம் ஆழ்ந்து பதிவதா யிற்று. அத்தகைய அபிமானிகள் பலமுறை கூட்டங்கூடி ஒரு விண்ணப்பத்தைத் தயாரித்து எல்லா மடங்களுக்கும் தலைமை மடமாகிய கல்கத்தாவுக்கு அனுப்பிக் கொழும்பு மாநகரத்திலே ஒரு திருமடம் நிறுவும்படி அதிகாரிகளைக் கேட்டனர். தலைமை மடத்தார் சுவாமி சர்வானந்தரை

அனுப்பி 1930ம் ஆண்டு அக்டோபர் மாதம் 22ஆம் திகதி வெள்ளவத்தையென்னும் இடத்திலே குடிக் கூலிக்கு ஓர் இல்லம் எடுத்து அதிலே மடத்தை நிறுவச் செய்தனர்.''

கொழும்பில் இராமகிருஷ்ண மிஷன் அமைந்திட அனுமதி வேண்டி கல்கத்தா பேலூர் இராமகிருஷ்ண மிஷன் தலைமை யகத்திற்கு ஆர்வலர்கள் சார்பில் கடிதம் எழுதியவர் எம். மூத்தத்தம்பி. இவருடைய சகோதரியின் உடன்பிறப்புதான் 1897ல் சுவாமி விவேகானந்தரை தமது விருந்தாளி யாக தமது இல்லத்தில் எழுந்தருளச் செய்த செல்லையா அவர்கள். தலைமையகச் செயலாளர் சுவாமி விரஜானந்தா அவர்கள் திரு. எம். மூத்தத்தம்பிக்கு 8.10.1939இல் எழுதிய பதில் பின்வருவது.

''என்னுடைய கடந்த 20ந் திகதியிட்ட கடிதத்தின் தொடர்ச்சியாக, கொழும்பில் இராமகிருஷ்ண மிஷன் தொடங்குவது சம்பந்தமாகத் தாங்கள் சமர்ப்பித்த கோரிக்கையை நிருவாகக் குழு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ளுகின்றேன். சுவாமி சர்வானந்தா இலங்கைக்கு முன்பே புறப்பட்டுவிட்டார்.''

சுவாமி சர்வானந்தா அவர்கள் சுவாமி பிரணவேஷானந்தா அவர்களுடன் இலங்கை வந்தார். அவர்களை சுவாமி விபுலானந்தாவும், மூத்தத்தம்பியும் மற்றும் பலரும் பரவேற்றனர். கொழும்பில் மிஷன் அமைப்புத் தொடர்பான முதல் கூட்டம் திரு. மூத்ததம்பி வீட்டில் நடைபெற்றது.

22.10.1930இல் கொழும்பு இராம கிருஷ்ண மிஷன் (இலங்கைக் கிளை) அமைக்கப்பட்டது. கொழும்பு வெள்ள வத்தை 48, ஹாமர்ஸ் அவென்யூவில் வாடகைக்கு எடுத்துக்கொண்ட இல்லத்தில் மிஷன் இயங்கியது. பிறகு 49, விக்ரமா தெரு, வெள்ளவத்தை முகவரிக்கு மாறியது.

பகவான் இராம கிருஷ்ணர், தூய அன்னையார் சுவாமி விவேகானந்தர் ஆகியோர் புகைப்படங்கள் வைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பெற்றது. சுவாமி சர்வானந்தா தொடக்கச் சடங்கை நிகழ்த் தினார். மிஷனின் ஆதரவாளர்கள் நூறு பேர் கலந்துகொண்டனர். சுவாமி விபுலானந்தர் இலங்கையில் மிஷனில் செயற்பாடுகளைக் குறித்து ஓர் அறிக்கையை சமர்ப்பித்தார். சுவாமி கணானந்தா இராமகிருஷ்ணா மிஷன் (இலங்கைகிளை) துணைத் தலை வராக நியமிக்கப்பட்டார். இவர் மிஷனின் முதல் துணைத்தலைவராக 1931 முதல் 1932 வரையில் பணியாற்றினார். 1933 முதல் சுவாமி அசங்கானந்தர் துணைத்தலைவ ரானார்.

இவர் காலத்தில் திருமடத்திற்கு சொந்த மாகக் கட்டிடம் கட்ட முயற்சியெடுக்கப் பட்டது. இதற்குரிய வேண்டுகோளாகத் தான் ''ஶ்ரீராமகிருஷ்ண சங்கத்துத் திருமடம், கொழும்பு- ஒரு விண்ணப்பம்'' வெளி யிடப்பட்டது. இதில் இறுதிப் பகுதி பின்வருமாறு:

"....துறவும் தொண்டுமே மேன்மை யான நோக்கங்களாமெனக் கொண்டுள்ள இவ்வாச்சிரமத்திலே இடைவிடாத ஆன்மார்த்தத்திற்குரிய எண்ணமும் பணியும் நாள்தோறும் வளர்ச்சியெய்திக் கொண்டு வருகின்றன. இவ்வாச்சிரமம் தற்காலம் ஒரு குடிக்கூலிக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுப் பரோபகார்த்தமாகக் கருதிக் கொடுக்கிற பொருளைக் கொண்டு நடத்தப்பட்டு வருகிறது. ஆச்சிரமம் நிறுவச் சொந்தமான நிலமும் பொருளும் தேவை. இத் திருப் பணிக்குக் குறைந்தளவாக ரூபா 20.00 ஆயினும் தேவையென்பது தெளிவு. பரந்த சிந்தையும், உயர்ந்த நோக்கமும் கொண் டொழுகும் பெருந்தகையாளர்கள் முன் வந்து தங்கள் தங்களாலியன்ற பொருள்

உதவியோ, நிலமோ, மற்றெவ்வித உதவியோ புரியுமாறு அவர்களை யாம் கேட்டுக் கொள்ளுகிறோம்."

சொந்தக் கட்டிடத்திற்கான முயற்சி 1935ல் நிறைவேறியது. 1935 ஏப்ரல் 4ல் கால் ஏக்கர் அளவில் சிறிய நிலம் கொழும்பு மிஷனால் வாங்கப்பட்டது. கோயில், பிரார்த்தனை அறை, சொற்பொழிவு கூடம், தங்குவதற்கு அறைகள், சமையல் அறை சாப்பாட்டு அறை கட்டுவதற்கு மார்ச் புதன் கிழமையன்று (1935) பகவான் ஸ்ரீ ராம கிருஷ்ண பரமஹம்சரின் பிறந்த நூற்றாண்டின் முதல் நாளில் ஆசிரம வளாகம் கட்டுவதற்கு அடிக்கல் நாட்டப்பட்டது. 24 பிப்ரவரி 1936ல் புதிய கட்டிடம் திறந்து வைக்கப்பட்டது. 26 ஏப்ரலில் (1936) புதிய சொற்பொழிவுக் கூடம் திறந்து துவக்கப் பட்டது. கோயிலும், பிரார்த்தனைக் கூடமும் ஜனவரி 4, 1938ல் அர்ப்பணிக்கப் பட்டது. இந்த மிஷனில் முகவரி 44 வது சந்து, வெள்ளவத்தை யாகும். மிஷனில் கோயில் கட்டுவதற்கான மொத்தச் செலவும் பிரேம்ஜி தேவ்ஜி, எம்.கே. கபாடியா, எம்.ஜே. படேல் ஆகியோரால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. பிரார்த்தனைக் கூடத்திற்கானச் செலவுத் தொகை டாக்டர் ஜி. விக்னராஜாவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இரண்டாம் உலகப் போர்க்காலத்தில் தற்காலிகமாக மிஷனின் தலைமையகம் 1942 ஏப்ரலில் லுனகாலாவிற்கும், பிறகு ஜுலை 1942ல் மட்டக்களப்பிற்கும், மீண்டும் வெள்ளவத்தை 60வது சந்திற்கும் மாற்றப் பட்டது. 1944 முதல் இப்பொழுது இருக்கும் இடத்திற்கே மாற்றப்பட்டது.

கொழும்பு இராமகிருஷ்ண மிஷனின் முதல் நிர்வாகக் குழுக் கூட்டம் மட்டக் களப்பு விவேகானந்தா மன்றத்தில் நவம்பர் 16, 1929 இல் கூடியது. துணைத் தலைவர் சுவாமி அவிநாசானந்தா, செயலாளர் சுவாமி விபுலானந்தா, டாக்டர் எஸ். சுப்பிரமணியம் மற்றும் பதினேழு உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். இருபத்தொன்பது உறுப்பினர்கள் புதிதாகச் சேர்த்துக்கொள்ளப் பட்டனர்.

மிஷனின் வளர்ச்சிக்கு கொழும்பு நகரவாசிகள் பலர் பொருளுதவி செய்தனர். சட்ட ரீதியான ஓர் அங்கீகாரத்தை இலங்கை அரசாங்கம் 1929ல் வழங்கியது. சட்ட மன்றத்தில் திருகோணமலைப் பிரதேசத்தின் பிரதிநிதியான கௌரவ எம்.எம். சுப்பிரமணியம் ஜுலை 28, 1928ல் மிஷனுக்கு சட்ட ரீதியான அங்கீகாரம் வழங்கப்பட ஒரு மசோதாவைக் கொண்டு வந்தார். இறுதியில் இதற்கான அரசு ஆணை ஜுலை 4, 1929ல் வெளியிடப்பட்டது.

தொடக்கத்திலிருந்தே பூஜை, உபநிடத வகுப்பு, பகவத்கீதை, ஆத்மார்த்தமான உரையாடல் முதலியன வகுப்புவாதமின்றி ஒழுங்காகவும், செம்மையாகவும் நடைபெற்று வருகின்றன. மடத்திலிருக்கிற சுவாமிகள் இலங்கையிலுள்ள பல முக்கிய மானவிடங்களுக்குஞ் சென்று சொற் பொழிவுகளும் சமய சம்பந்தமான சம்பாஷணைகளும் ஆற்றி வருகின்றனர். நிவாரணப் பணிகளில் முன் நின்று தொண்டாற்றும் இராமகிருஷ்ண இயக்க மரபைப் பேணி வளர்த்து வருகின்றது. இவ்வாறே கல்விப்பணி இயக்கத்திலும் மரபு வழியில் முன்நின்று வருகின்றது. 1930 மே 19ல் பேலூர் மடம் இராமகிருஷ்ண மிஷன் பொதுச் செயலாளர் சுவாமி மாதவானந்தாஜி மகராஜ் அவர்களுக்கு சமர்ப்பித்த வரவேற்புரையில் மிஷன் 18 பாடசாலைகளையும், 3500 மாணவர்களையும் மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம், லுனகாலா முதலிய இடங்களில் நிருவகித்து வந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இராமகிருஷ்ண மிஷனின் பொருளாளராகப் பணியாற்றிய திரு. சி.பி. மோடி,

அவருடைய மனைவி கமலா மோடி இருவரும் மிஷனுக்காக நூலகம், வாசக சாலை இரண்டையும் தங்கள் செலவி லேயே கட்டிக்கொடுத்தனர். 1949ல் இது பொது மக்களுக்காகத் திறந்து வைக்கப் பட்டது.

ஆன்மிக, சமய கலாசார நிகழ்ச்சிகளை அவ்வப்பொழுது ஏற்பாடு செய்தும், இதற்காக இலங்கையிலிருந்தும், வெளிநாடு களிலிருந்தும் சொற்பொழிவாளர்களை, கலைஞர்களை மிஷன் வரவழைத்து இராம கிருஷ்ணர் இயக்கப் பணிக்களத்தை விரிவடையச் செய்து வருகின்றது.

சுவாமி விவேகானந்தர் 1897ல் இலங்கை விஜயத்தின் பொன் விழாவை 1947ல் கொழும்பு மிஷன் கொழும்பு விவேகானந்த சபையுடன் இணைந்து கொண்டாடியது. அப்பொழுது இலங்கையில் இந்திய அரசின் உயர் தூதரக அதிகாரியாகப் பணி யாற்றிய மேதகு எம்.எஸ். ஆனே தலைமை வகித்தார்.

ஜனவரி 1950ல் அன்றையப் பாரதப் பிரதமர் ஜவஹர்லால் நேருஜி, அரசியல் அறிஞர் திரு. வி.கே. கிருஷ்ண மேனன் அவர்களுடன் கொழும்பு மிஷனுக்கு வருகை தந்து மிஷனின் உலக கலாசார மையக் கட்டிடத்தைத் திறந்து வைத்து, இராமகிருஷ்ண இயக்கத்தின் வெளிநாட்டு உள்நாட்டுப்பணிகளைப் பாராட்டிப் பேசினார். இதற்கான அடிக்கல் அன்றைய இந்திய ஜனாதிபதியான டாக்டர் ராஜேந்திர பிரசாத் அவர்களால் ஜூன் 17, 1959ல் நாட்டப் பெற்றது. இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன், உலகப்புகழ்பெற்ற விஞ்ஞானி சி.வி. இராமன், இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் ஜே.வி. கிருபாளனி முதலான பலர் கொழும்பு மிஷனுக்கு வந்து அதன் பன்முகப் பணிகளைப் பாராட்டியுள்ளனர். தூய அன்னை சாரதாதேவி அவர்களின் பிறந்த நூற்றாண்டு விழா மார்ச் 20, 1954ல் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையின் தலைவர் விஜயலட்சுமி பண்டிட் தலைமையில் நடைபெற்றது.

இந்தியாவில் இருந்தும் இராம கிருஷ்ண இயக்கத் துறைவிகள் பலர் அவ்வப் பொழுது இலங்கை வந்திருந்து மிஷனின் பணிகளை ஊக்குவித்துள்ளனர்.

சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவின் நூற்றாண்டு விழாவை கொழும்பு மிஷன் இலங்கையின் பலவிடங் களில் மக்கள் புத்தெழுச்சி பெறும் வண்ணம் 1993ல் நடத்தியது. இந்த நூற்றாண்டு விழாவையொட்டி தமிழக எழுத்தாளர் பெ.சு. மணி எழுதிய "நூற்றாண்டு விழாக் காணும் சுவாமி விவேகானந்தர் சிகாகோ சொற்பொழிவுகள்" எனும் நூலை கொழும்பு இராமகிருஷ்ண மிஷன் வெளியிட்டது.

இலங்கையில் பிரபல முருகன் திருக் கோயிலான கதிர்காமத்திற்கு வரும் யாத்திரிகர்களுக்காக கதிர்காமம் மடத்தை கொழும்பு மிஷன் நிறுவியதும் அதன் சிறப்புப் பணிகளுள் ஒன்றாகும். பின்னர் அது கோயில் விஸ்தரிப்புக்காக அரசினால் சுவீகரிக்கப்பட்டது.

# இலங்கை சின்மய மிஷன்

இருபதாம் நூற்றாண்டின் புகழ்பூத்த இந்து மத மறுமலர்ச்சியாளராக விளங்கியவர் சுவாமி சின்மயானந்தர். இந்து சமயத்தின் அடிநாதமாக விளங்கும் வேத, உபநிஷதங் கள், சாஸ்திரங்கள் முதலியவற்றின் உண்மைகளை மக்களுக்கு எளிமையான வகையில் விளக்கி, இந்துக்களை இந்துக் களாக வாழ வைக்க வேண்டுமென்பதைக் குறிக்கோளாகக் கொண்டு செயலாற்றியவர். குரு என்ற சொல்லின் விளக்கமாக ஞான தீபமாக விளங்கியவர். வேதாந்தத்தின் தெளிவாக விளங்கும் அவரின் பகவத் கீதைச் சொற்பொழிவுகள் உலகப் பிரசித்த மானவை. இந்து சமய சாஸ்திரங்களின் உண்மைகளைப் பரப்பி உணர்த்துவதற்கு, பல சந்நியாசிகளை வருவாக்குவதற்கு பம்பாயில் சாந்தீபனி சாதனாலய என்னும் பயிற்சி நிலையத்தை நிறுவி நூற்றுக் கணக்கான துறவிகளை இந்து சமயப் பிரசாரப் பணியில் ஈடுபடுத்தியவர். இந்தியாவிலும் உலகின் பல நகரங்களில் 200க்கும் மேற்பட்ட சின்மய மிஷன் கிளைகள் நிறுவப்பட்டன. மருத்துவ நிலையங்கள், கல்விக்கூடங்கள், நலிந்தோர் மேம்பாட்டு மையங்கள், என அவர் தொட்டவை எல்லாம் இன்று வானளாவ உயர்ந்து வளர்ந்து பயனளித்து நிற்கின்றன.

இந்தியாவிலும் பல வெளிநாடுகளிலும் அவர் நிகழ்த்திய வேதாந்த உரைகள், கீதைத் தொடர் சொற்பொழிவுகள் இங்கும் எதிரொலித்தன. அவரை இலங்கைக்கு அழைத்து நேரில் தரிசித்து அவரின் உரை களைக் கேட்பதற்கு ஆர்வங் கொண்டவர் களின் கோரிக்கையை ஏற்று 1979, 1980, 1981, 1982ஆம் ஆண்டுகளில் இலங்கைக்கு வருகை தந்து கீதையக்ஞங்களை நிகழ்த்திப் பலரைத் தம் குறிக்கோள்களில் ஈர்த்துக் கொண்டார். இலங்கையிலும் சின்மய மிஷனின் கிளையை நிறுவுவதற்கு விடுக்கப் பட்ட விண்ணப்பத்துக்கு சுவாமிகள் தமது ஆசீர்வாதத்தைத் தெரிவித்தார். இதற்கு இணங்க 25.6.1980 அன்று இலங்கை சின்மய மிஷன் கொழும்பில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இதன் தலைவர் நீதியரசர் வீ. சிவசுப்பிர மணியம், உபதலைவர் திரு. முனி குண்டன் மால், திரு. ஆர். சிவஞானஜோதி, திரு. கே.எச். சப்னானி, செயலாளர் திரு. வி.எம். வைகுந்தநாதன், துணைச் செயலாளர்கள் திரு. கே.வி. சோமசுந்தரம், திருமதி யசோதா சுந்தரலிங்கம், பொருளாளர் திரு. ஆர்.பி. சர்மா, உபபொருளாளர் திரு. ரி. சோமேஸ் வரன், செயற்குழு உறுப்பினர்கள் திருவா ளர்கள் எஸ். தர்மராஜா, கே. தங்கராஜா, ஏ. களுபோவில்ல, திரு. எல். கன்வானி, திருமதிகள் தயா மகிந்தா, மாதுரி மோடி, ஹேமா சோமசேகரம், எல். ஷப்னானி, எஸ், கனகசபை ஆகியோர் முதலாவது செயற் குழுவுக்கு தெரிவு செய்யப்பட்டனர்.

1981இன் பாராளுமன்றச் சட்டம் எண் 28இன்படி, மிஷன் பதிவு செய்யப்பட்டது. சின்மய மிஷனின் துறவிகளில் ஒருவரான பிரம்மச்சாரி வியக்த சைதன்யா இலங்கை யின் வதிவிட ஆச்சாரியராக சுவாமிகளால் அனுப்பிவைக்கப்பட்டார்.

பெண்களும் சமய, கலாசார சமூகப் பணிகளில் ஈடுபட்டு, அவற்றிற்கான ஒழுங்குகளைத் தமக்குள் கலந்துரையாடி மேற்கொள்வதற்காக தேவியர் வட்டம், சிறார்களுக்கான சமய போதனைக்கென பாலவிகார், இளைஞர்களிடம் ஒழுக்கத்தை மேம்படுத்தவும், தமது ஆற்றல்களை மேம்படுத்தவும் வசதியாக யுவகேந்திரா, பஜனைக்குழு, கருத்தரங்குகள், வேதாந்த ஆய்வுவட்டங்கள், சொற்பொழிவுகள் முதலிய நிகழ்ச்சிகள் செயற்குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டன.

கொள்ளுப்பிட்டி, நாரஹென்பிட்டி, வெள்ளவத்தை, கொட்டாஞ்சேனை ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்ட வேதாந்த ஆய்வு வட்டங்களில் விவேகசூடாமணி, தத்வபோதம், உபதேசசாரம், பஜ கோவிந்தம், உபநிடதங்கள் பற்றி வாராந்த வகுப்புகள் இடம்பெற்றன. 1983 ஆடிக் கலவரமும் அதனைத் தொடர்ந்த சூழ்நிலை யும் மிஷனின் செயற்பாடுகளை பல ஆண்டுகள் முன்னெடுக்க முடியாமல் தடை யாயிருந்தன. வதிவிட ஆச்சாரியாரும் தாயகம் திரும்பிவிட்டார். 1988ல் மிஷனின் செயற்பாடுகள் சிறியளவில் தலைதூக்கின. சுவாமி தத்வானந்தா, ஸ்ரீ. ஏ. பார்த்தசாரதி, பிரம்மச்சாரி தர்மேஷ் சைதன்ய, சுவாமி சுவரூபானந்தா ஆகியோர் அவ்வப்போது குறுகியகால வருகைகளை மேற்கொண்ட தால் கீதைப்பேருரைகளை மிஷன் நடத்த முடிந்தது. இயங்குவதற்கு இக்கட்டான அக்காலகட்டத்தில் மிஷனின் தலைமைப் பொறுப்பை ஏற்று இயக்கிய திருவாளர்கள் கீர்த்தி மோடி, முனிகுண்டன்மால், ஆர். சிவஞானஜோதி ஆகியோர் மிஷனின் பணிகள் தொய்வடையாமல் பார்த்துக் கொண்டனர்.

1990களிலிருந்து மிஷனின் பணிகள் புதிய தலைமையில் புத்துயிர் பெற்று வேக முற்றன. பாலவிகார் சிறப்பாக நடைபெறத் துவங்கியது. இந்து சமயத் திருநாட்கள், திருவிளக்குப் பூஜைகள், மருத்துவ முகாம்கள் எனப் பணிகள் விஸ்தரிக்கப் பெற்றன. "Voice of Chinmaya" காலாண்டிதழ் புதிய தோற்றத்தில் ஒழுங்காக வெளி வந்தது. இமாசல அடிவாரத்தில் உள்ள சித்தபாரி ஆச்சிரமத்தில் நடைபெற்ற ஆன்மிக முகாமுக்கு இலங்கைப் பிரதிநிதி களாகச் சென்ற குழுவினர் ரம்பொடை வெவண்டன் மலையில் ஆஞ்சநேயர் ஆலயத்தை அமைப்பதென்ற உறுதியுடன் திரும்பினர். சென்னை யுவகேந்திரா அமைப்புக்குப் பொறுப்பாக இருந்த பிரம்மச்சாரி சுவபோத் சைதன்யா அவர்களின் அடிக்கடி இலங்கை வருகை மிஷனின் செயற்பாடுகளைத் துரிதப் படுத்தியது. 1993ல் மகாசமாதி எய்திய குருதேவர் சின்மயானந்தருக்குப் பிறகு

உலகச் சின்மய இயக்க ஆன்மீக முதல்வ ராகப் பொறுப்பேற்ற சுவாமி தேஜோ மயானந்தரின் முதலாவது இலங்கை விஜயம் மேலும் பணிகளைத் தீவிரமடையச் செய்தது. ஆறு ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கான வதிவிட ஆச்சாரியராக பிரம்மச்சாரி ரமணச்தைன்யா நியமிக்கப் பட்டதும், கீதை யக்ஞங்கள், பாலவிகார், யுவகேந்திரா, தேவியர் வட்டம் முதலி யவை வேகமாகப் புதிய பரிமாணத்தைப் பெற்றன. கலைநிகழ்வுகள், பாத யாத்திரை, ஆன்மீக முகாம்கள் எனச் செயற்பாடுகள் அதிகரித்தன. மின்னேரியா கிரித்தலையில் நடைபெற்ற சர்வமத ஆன்மீக முகாமில் உலகின் பலநாடுகளிலிருந்தும் பிரதிநிதிகள் வந்து பங்கேற்றனர். சுவாமி சுவரூபானந்தா சுவாமினி விமலாநந்தா சுவபோத சைதன்யா ரம்பொடை அனுமன் ஆலயப் பணிகள் உத்வேகமுற்றன. 27.4.97ல் பூமிபூஜை, 25.7.99ல் 18 அடி உயர ஆஞ்சநேய விக்கிரகம் ரம்பொடைக்கு எழுந்தருளி ஜலாதி வாசகத்தில் வைக்கப் பட்டமை 12.9.99ல் ஆஞ்சநேயப் பெருமானை நிமிர்த்தப் பிரதிஷ்டை செய்தமை 8.4.2001 அன்று நடைபெற்ற குடமுழுக்குப் பெருவிழா முதலியவை பல்லாயிரம் மக்கள் மனதில் ஆன்மீக எழுச்சியை ஏற்படுத்தியது.

வதிவிட ஆச்சாரியாரின் முயற்சியாலும் செயற்குழுவினரின் ஒத்துழைப்பாலும் யுவகேந்திர அமைப்பின் செயற்பாடுகளா லும் சின்மயமிஷன் பணிகள் நாட்டின் பல பகுதிகளுக்கும் இப்போது பரவியுள்ளன.

சொந்தக் கட்டிடம் இல்லாத குறையைப் போக்குமுகமாக பம்பலப்பிட்டி ஹேக் வீதியில் மிஷனுக்கென கொள்வனவு செய்யப்பட்ட நிலத்தில் விசாலமான கட்டடம் அமைக்கும் முயற்சி மேற்கொள் ளப்பட்டு வருகின்றது.

# ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் கொழும்பு

ஓம் சாயி ராம்! கொழும்பில் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் ஸ்தாபிக்கப்பட்டு 12.06.2005ஆம் ஆண்டுடன் 38 வருடங்கள் நிறைவு பெறுகின்றன. இந்த சாயி ஸ்தாபனம் 1991ஆம் ஆண்டில் தனது 25 வருட கால சேவைகளை பூர்த்தி செய்து, 1992ஆம் ஆண்டு ஜனவரியில் வெள்ளி விழாவைக் கொண்டாடியது.

கொழும்பில் ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் 38 வருட கால சேவைகளை பூர்த்தி செய்யும் இன்றைய நிலையில், கொட்டாஞ்சேனை, புதுச்செட்டித் தெரு வில் 113 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள, தனது சொந்தக் கட்டடத்திற்குள் காலடி எடுத்து வைக்கும் நிகழ்வு பெரும் பாக்கியம் என்றே கருத வேண்டும். கொழும்பில் முதன்முதலில் உருவாக்கப்பட்ட சாயி ஸ்தாபனம், ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

கொழும்பு 13, ஏ.ஜி. ஹினிஅப்புஹாமி வீதியில் (முன்னைய வான்றுாயன் வீதி) அமைந்துள்ள இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் 1966 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 12ம் திகதி இந்த சாயி ஸ்தாபனம் வைபவரீதியாக அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு வியாழக்கிழமை பஜனை நிகழ்ச்சிகள் ஒழுங்கு முறையாக நடைபெற்றுவந்தன. ஆரம்பத்தில் இந்த சாயி ஸ்தாபனம், ஸ்ரீ சத்ய சாயி பாபா சத்சங்கம் என்ற பெயரில் இயங்க ஆரம்பித்தது.

இந்த சாயி அமைப்பைத் தோற்றுவித்தவர்களில் டாக்டர் (செல்வி) அ. கணேசன், வி. நாராயணதாஸ், செல்வி கே. வி. பராசக்தி, எஸ். செல்வத்துரை ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர்.

இந்த சாயி அமைப்பின் முதலாவது பகிரங்க சாயி பஜனை 1966ஆம் அண்டு நவம்பர் மாதம் 23ஆம் திகதி அதாவது சாயி பகவானின் 40 ஆவது பிறந்த தின விழாவின் போது, கொழும்பு கமலா மோடி

மண்டபத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. இதன் பின்னரே சாயி இயக்கத்தின் வளர்ச்சி உத்வேகம் அடைந்தது எனலாம்.

இதனையடுத்து, இராஜேஸ்வரி கல்வி நிலையத்தில் நடைபெற்று வந்த வாராந்த பஜனை நிகழ்ச்சியில் நூற்றுக்கணக்கான மக்கள் கலந்துகொள்ள ஆரம்பித்தனர்.

எனினும் சுற்று வட்டாரத்தில் வசித்து வந்த சிலர் மத்தியில் ஒரு வகை காழ்ப்பு உணர்ச்சி ஏற்படலாயிற்று அவர்களால் சாயி பக்தர்களுக்கு பயமுறுத்தலும் விடுக்கப் பட்டது. பஜனை நடைபெற்று வந்த கல்வி நிலையத்தின் உரிமையாளர் இதனால் சற்றுக் கலவரமடைந்தார்.

இதனால் மாற்றுவழியின்றி, கல்வி நிலையத்தில் இருந்து பஜனை நிகழ்ச்சியை வேறு இடத்துக்கு மாற்ற வேண்டிய ஏற்பட்டது. அப்போது பஜனையில் பங்கு பற்றி வந்த டி.ஏ. கதிரேசு தனது இல்லத்தில் பஜனை நிகழ்த்துவதற்கு இடமளிக்க முன்வந்தார்.

1967ம் ஆண்டு ஜனவரி மாத முற்பகுதி யில் இருந்து, கொழும்பு-13, மகா வித்தியாலய மாவத்தை (அப்போதைய பாபர் வீதி) 109ம் இலக்கத்தைக் கொண்ட கதிரேசு அவர்களின் இல்லத்தில் வாராந்த பஜனை தொடர்ந்து நடைபெறலாயிற்று.

1967ஆம் ஆண்டு சிவராத்திரியை சாயி சத் சங்கத்தினர் முதன் முறையாக அனுஷ்டிப்பது என்று முடிவுசெய்து, சாயி பகவானுக்கு கடிதம் அனுப்பப்பட்டது. பல நாட்கள் ஆகியும் பதில் வராததால் ஒரு தந்தியும் அனுப்பப்பட்டது. என்ன ஆச்சரியம்! சிவராத்திரி தினத்தன்று சாயிபகவான் தமது கைப்படவே, “எனது வாழ்த்துக்கள் - பாபா” என்ற வாசகங் களுடன் அவசரத் தந்தி ஒன்றை இந்த சாயி ஸ்தாபனத்துக்கு அனுப்பி வைத்தார்.

கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையத்தில் முன்னோடியான, சாயி சத் சங்கத்துக்கு சாயி பகவானுடைய தந்தி கிடைத்தமை ஒரு வரப்பிரசாதம் என்றே கூறவேண்டும்.

கொழும்பு, பாபர் வீதி, 109 ஆம் இலக்க வீட்டின் சொந்தக்காரர்கள் தமது வீட்டை புனரமைப்புச் செய்ய விரும்பியதால், 1988 ம் ஆண்டு, கொழும்பு - கொட்டாஞ்சேனை அரசினர் தமிழ் வித்தியாலய மண்டபத்துக்கு சாயி பஜனை மாற்றப்பட்டது.

சிறிது காலம் அங்கு இயங்கிய பின்னர் 1989 மே 6 ம் திகதி ஈஸ்வராம்பாள் தினத்தி லிருந்து வாராந்த பஜனையும், ஏனைய சாயி நிகழ்ச்சிகளும், கொழும்பு கமலாமோடி மண்டபத்தில் நடைபெற்று வந்தன. கமலா மோடி கலா கேந்திர நம்பிக்கை நிதியத்தின் தலைவர் திரு. கீர்த்தி மோடியும், திருமதி மதுரி கீர்த்தி மோடியும் சாயி நிகழ்ச்சிகளை கமலா மோடி மண்டபத்தில் தொடர்ந்து மேற்கொள்வதற்கான அனுசரணையை மனமுவந்து வழங்கியிருந்தனர்.

சாயி பாபா சத் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஐந்து வருட காலம் அது. சத் சங்கம் என்ற பெயரிலேயே இயங்கிவந்தது. 1971ம் ஆண்டில் அது ஒரு சாயி சமித்தியாக உயர்த்தப்பட்டது. எனினும் கொழும்பு மேற்கில் பின்னர் உதயமாகிய மற்றுமொரு சாயி அமைப்பு இதனை விரும்பவில்லை. அந்த புதிய சாயி இயக்கத்தினர் புட்ட பர்த்திக்குச் சென்று, பிரசாந்தி நிலையத்தில் தம்மை ஒரு சாயி சமித்தி என்ற பெயரில் பதிவுசெய்து கொண்டனர். அத்துடன் தாமே கொழும்பில் நகரில் சாயி அமைப்பாக இயங்க முடியுமெனவும் அவர்கள் வலியுறுத்தத் தொடங்கினர்.

இந்த நிலையில் சாயி சத்சங்கத்தின் சாதாரண உறுப்பினராக இருந்த எஸ்.டி. சிவநாயகம் அவர்கள், 1975ம் ஆண்டு

புட்டபர்த்தியில் நடைபெற்ற உலக சாயி அமைப்புகளின் இரண்டாவது மாநாட்டுக்கு விஷேட பிரதிநிதியாக அனுப்பி வைக்கப் பட்டார்.

சாயி சத்சங்கத்தை பூரணத்துவம் வாய்ந்த சாயி சமித்தி என்ற நிலைக்கு உயர்த்து வதற்கான அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடனேயே எஸ்.டி. சிவநாயகம் அவர்கள் அங்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

புட்டபர்த்தியில் நடைபெற்ற வெளி நாட்டு சாயி ஸ்தாபனங்களின் ஒருங் கிணைப்புக் குழுவின் ஆரம்பக் கூட்டத்தில் ஒரு பிரதிநிதியாகக் கலந்து கொள்ளும் வாய்ப்பும் சாயி பகவானின் ஆசீர்வாதத்தால் எஸ். டி. சிவநாயகம் அவர்களுக்கு அதிஷ்ட வசமாகக் கிடைத்தது.

வெளிநாட்டு சாயி ஸ்தாபனங்களின் அமைப்பு விதிகளை மறுசீரமைக்கும் பொருட்டு ஏற்படுத்தப்பட்ட செயற் குழு வின் தலைவரான இங்கிலாந்தைச் சேர்ந்த எஸ். சீத்தாராம் தெரிவு செய்யப்பட்டி ருந்தார்.

பெரிய நகரங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சமித்திகளை அமைத்து செயல்படுத்துவதற் கான அங்கீகாரத்தை பெறும் விவகாரத்தை இந்த குழுக்கூட்டத்தில் முன்வைத்தார் திரு. எஸ். டி. சிவநாயகம் அவர்கள்.

அவரின் இந்த கோரிக்கைக்கு சாதக மாகவே அங்கீகாரமும் கிடைத்தது. அமைப்பு விதிகளை மறுசீரமைக்கும் இந்த செயற்குழுவின் சிபாரிசுகளை இறுதியாக உலக சாயி ஸ்தாபனமும் ஏற்றுக் கொண் டது.

இதன் பிரகாரம் இந்த சாயி சத் சங்கம், **சாயி சமித்தி** என்ற அந்தஸ்தைப் பெற்றுக் கொண்டது. அதனைத் தொடர்ந்து இந்த ஸ்தாபனம், ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம் எனப் பெயரிடப்பட்டது.

1979ம் ஆண்டில், சத்ய சாயி பாபா (இலங்கை) நம்பிக்கை நிதியம் எனும் அமைப்பும் உருவாக்கப்பட்டது. இந்த நிதியத்தை நிர்வகிப்பதற்கான சட்ட விதிகள், சாயி பகவானின் பாதங்களில் சமர்ப்பிக்கப்பட்டு ஆசீர்வாதமும் கிடைக் கப்பெற்றது.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தின், நீதி அமைச்சில் அங்கீகரிக்கப்பட்ட சட்ட விதி களுக்கு அமையவே இந்த சாயி நம்பிக்கை நிதியம் உருவாக்கப்பட்டது. இது தொடர் பான உத்தியோகபூர்வ அறிவிப்பு, 1979ம் ஆண்டு செப்டம்பர் 27ம் திகதி (வியாழக் கிழமை) வெளியான 55/9ஆம் இலக்கம் கொண்ட (சிறப்பு) அரச வர்த்தமானியில் பிரசுரமாகியுள்ளது. இலங்கையில் ஸ்தாபிக் கப்பட்ட முதலாவது அகில இலங்கை சாயி நம்பிக்கை நிதியம் இது என்பதுவும் சுட்டிக்காட்டப்பட வேண்டியதொன் றாகும்.

1966ஆம் ஆண்டில் இந்த சாயி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து 1974 ஆம் ஆண்டுவரை 8 ஆண்டுகள் எஸ். செல்வத் துரை இந்த சாயி ஸ்தாபனத்தின் தலைவ ராகப் பணியாற்றினார். 1975ம் ஆண்டு ஜனவரியில் எஸ்.டி. சிவநாயகம் தலைவ ராகத் தெரிவு செய்யப்பட்டார். தொடர்ந்து ஒவ்வொரு வருடமும் சிவநாயகம் தலை வராக ஏகமனதாகத் தெரிவாகி வந்தார். சிவநாயகம் (2000 ம் ஆண்டில்) அமரத்துவம் எய்தும்வரை 25 ஆண்டுகள் தொடர்ந்து தலைவராகப் பணியாற்றி வந்தமை ஒரு சாதனை என்றே கூற வேண்டும்.

எமது சாயி மத்திய நிலையத்தின் பெருந் தலைவராக விளங்கிய எஸ். டி. சிவ நாயகத்தின் திடீர் மறைவின் பின்னர், எமது சாயி நிலையத்தின் உபதலைவர் எஸ்.என். உதயநாயகன், சாயி மத்திய நிலையத்தின்

தலைமைப் பதவிக்கு ஏகமனதாகத் தெரிவானார். தலைமைப் பதவியை பொறுப்பேற்க முன்னர், திரு. உதயநாயகன் அவர்கள் புட்டபர்த்தி சென்று, சாயி நிலையத்தை வழிநடத்தும் பொருட்டு, சாயி பகவானின் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்.

சாயி சேவைகளைத் தொடர்வதற்கு வசதியாக ஒரு சொந்தஇடம் தேவை என்ற தனது எண்ணத்தை ஆரம்பப் பணியாக மேற்கொள்ளத் தீர்மானித்தார். சாயி பகவானின் ஆசீர்வாதத்தால் அந்த எண்ணமும் அற்புதமாகக் கைகூடியது.

தற்போது ஐக்கிய ராஜ்யத்தில் வசித்து வரும் திருமதி நாகரத்தினம் (குடும்பத்தினர்), கொழும்பு- கொட்டாஞ்சேனை, இல. 113, புதுச்செட்டித்தெருவில் அமைந்திருந்த தமது பூர்வீக இல்லத்தை ஒரு சகாயப் பெறுமதிக்கு சாயி நிலையத்திற்கு தானாகவே முன்வந்து வழங்கினார். அத்துடன் அந்த இடத்துக்கான முழுத் தொகையையும் நீண்டகாலத் தவணை முறையில் செலுத்துவதற்கான வசதியையும் ஏற்படுத்தித் தந்தார்.

பிரஸ்தாப இல்லத்தை எமது சாயி மத்திய நிலையமும், டிரஸ்டும் (நம்பிக்கை நிதியம்) இணைந்து ஏனைய சாயி பக்தர்களின் நன்கொடையுடனும், எமது தற்போதைய தலைவரின் தந்தையான அமரர் எஸ்.டி. சிவநாயகம் அவர்களால் அவருடைய கால கட்டத்தில், கட்டிடம் ஒன்று கொள்வனவு செய்வதற்காக வங்கியில் சேர்த்து வைக்கப்பட்ட, ஒரு கணிசமான தொகையுடனும், எமது சாயி நிலைய டிரஸ்டின் உறுப்பினர்களான திரு. என். ஸ்ரீஸ்கந்தராஜனும். திரு. கே. பி. பாலநாயகம் முதலானோரின் உதவியுடனும் கொள்வனவு செய்து கொண்ட பின்னர், அங்கு வாராந்த பஜனை பிரார்த்தனை, மாதாந்த மருத்துவ முகாம் பணிகள், பாலவிகாஷ் மற்றும் பஜனை பயிற்சி வகுப்புகள் முதலான சேவைகளை மேற்கொள்வதற்கு உகந்த வகையில், அவ் இல்லத்தில் தற்காலிக புனரமைப்புகள் செய்யப்பட்டன.

சென்ற வருடம் அமெரிக்காவிலுள்ள சாயி பக்தர்களாலும். சமித்திகளாலும் சேகரிக்கப்பட்ட பெறுமதியான பெரும் தொகையான உடைகள், இங்கு தருவித்து, வவுனியாவிலுள்ள சமித்தியினால் நடாத்தி வரும் அனாதை குழந்தைகளுக்கு, அகதி முகாம்களுக்கும் வவுனியா சமித்தியின் தலைவர் எஸ். ரகுநாதபிள்ளை மூலமாக, எங்களது சாயி நிறுவனம் அனுப்பி வைத்தது.

பெரியளவிலான விசேட வைபவங்கள், கமலா மோடி மண்டபத்திலேயே மேற்கொள்ளப்பட்டு வந்தன. எனினும் புதிதாக கிடைக்கப்பெற்ற இல்லம், அதிக எண்ணிக்கையான பக்தர்களை உள்ளடக்கக் கூடிய வசதியைக் கொண்டிருக்கவில்லை என்ற ஆதங்கம் எமது மத்தியில் நிலவியது.

இந்த நிலையிலேயே, சாயி பகவானுடைய கிருபை மீண்டும் எமக்குக் கிடைத்தது. சாயி பக்தரும் தயாள சீலருமான திரு. சிவசெல்வரட்ணம் அவர்கள், தானாகவே முன்வந்து தனது சொந்தச் செலவில் இந்த இல்லத்தை விசாலமான சாயி நிலையமாக நிர்மாணித்துத் தருவதற்கு உதவலானார். இந்தக் கைங்கரியமானது சாயி பகவானின் கிருபை என்றே சொல்லவேண்டும்.

இதனைத் தொடர்ந்து. 2003ம் ஆண்டு மே மாதம் 15ம் திகதி அன்று, சாயி நிலையத்தை நிர்மாணிப்பதற்கான அத்திவாரக்கல் நடப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் சில இடையூறுகளும் தடைகளும் தலைதூக்கியதன் விளைவாக, கட்டட நிர்மாணப் பணிகளை மேற்கொள்வதில் காலதாமதம் ஏற்படலாயிற்று. எனினும் பகவானின் ஆசீர்வாதத்தால், இந்தப் பிரச்சினைகள்

அனைத்தும் ஆதவனைக் கண்ட பனிபோல் அப்பால் அகன்று சென்றன. பாதைகள் திறந்தன. பணிகள் தொடர்ந்தன.

எமது சேவைகளையும், கட்டிட நிர்மாணத்தையும் திடீர் என்று நேரில் பார்வையிட வந்த முன்னாள் இந்து சமய அமைச்சர் திரு. தி. மகேஸ்வரன் அவர்கள் எங்கள் சாயி வாசிகசாலைக்கு பெரும் தொகையான நூல்களும், நன்கொடையும் வழங்கினார்.

புதிய இடத்தில் கட்டட நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்த காலகட்டத்தில் ஏறத்தாழ ஒரு வருட காலமாக வாராந்த சாயி பஜனை பிரார்த்தனைகளை நடத்துவதற்கு சாயி அன்பரும் எமது செயற்குழு அங்கத்தவர்களில் ஒருவருமான கே. பாலசுப்பிரமணியம் அவர்கள், புதுச்செட்டித்தெரு, 24ம் இலக்கத்தில் அமைந்துள்ள தனது இல்லத்தில் இடம் ஒதுக்கித் தந்துதவினார் என்பதையும் நாம் இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியுடன் ஞாபகப் படுத்திக் கொள்ள வேண்டும்.

2.7.2004 அன்று குருபூர்ணிமா (பௌர்ணமி) தினத்தன்று இந்த புதிய கட்டிடத்தில் (சாயி நிலையம்) காயத்ரி பூஜையும் கோமாதா பூஜையுடன் கிரகப் பிரவேசம் செய்துகொண்டு, அங்குள்ள கீழ் மண்டபத்தில் எமது வாராந்த பஜனையை நடாத்தி வந்தோம்.

சாயி நிலைய கட்டடப் பணிகள் மேற்கொள்ளப்பட்ட போது, எமக்கு சேவை மனப்பான்மையுடன், ஒத்துழைப்பு வழங்கியுள்ளவர்களான கொழும்பு மாநகர முதல்வர் பிரசன்ன குணவர்தன, எமது சட்டத்துறை ஆலோசகர் ஜே.எம். சுவாமிநாதன் (Julius & Creasy) பாலசுப்பிரமணியம் குடும்பத்தார், திரு. டபிள்யு. எஸ். பிரபாகரன், திரு. ஈஸ்வரநாதன் மற்றும் கொழும்பு மாநகர சபை உத்தியோகத்தர் முதலானோர்க்கும் நன்றியைத் தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

இந்த சாயி ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்ட காலம் முதல் அதன் வளர்ச்சிக்கு பணியாற்றியவர்களில் அமரர்களான டி,ஏ, கதிரேசு, பொ. கனகராஜா, என். பழனியாண்டிபிள்ளை, திருமதி பாலாம்பிகை நடராஜா, எம்.எஸ். செல்வராஜா (இசை ஆசிரியர்), சாம்பசிவசர்மா முதலானோரும், கடந்த 38 ஆண்டுகால வேளையில் இந்த சாயி ஸ்தாபன வளர்ச்சிக்கு அனுசரணை புரிந்தவர்களில் அமரர்களான சந்திரகாந்த், சி. மோடி, மெய்கண்டான், என். இரத்தின சபாபதி, எஸ். நடராஜா, ஏ.எம். சுப்ரமணியம், ஜி.டி. சிரிசேன ஆகியோரும் மற்றும் வி.ஏ. ராஜா, எஸ். சரவணபவன், செ. இராஜதுரை (முன்னாள் அரச தூதுவரும், இந்த சமய அமைச்சரும்) எஸ்.பி. இராமநாதன் (லண்டன்) முதலானோரும் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர்.

கொழும்பு ஸ்ரீ சத்ய சாயி பாபா மத்திய நிலையம், தனக்கென அமையப்பெற்றுள்ள சொந்த இடத்துக்குள் காலடி எடுத்து வைக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில், இந்த சாயி ஸ்தாபனத்தின் தலைவராக எஸ்.என். உதயநாயகன் (ஜே.பி) பொதுச்செயலாளராக எஸ். தியாகராஜா, பொருளாளராக எஸ். தவகுமார் ஆகியோரும் சத்ய சாயி பாபா ஸ்ரீ லங்கா டிரஸ்ட் உறுப்பினர்களாக என். ஸ்ரீஸ்காந்தராஜன், கே.பி. பாலநாயகம், எஸ். சிவசுப்பிரமணியம் ஆகியோரும் பணியாற்றுகின்றனர்.

# இலங்கை சத்யசாயி கூட்டமைப்பு

மக்கள் சேவையே மகேசன் சேவை. அதனால் நாம் எமது சக மனிதர்களுக்கு தொண்டு செய்யும் பொழுது அது உண்மையாகவே இறைவனுக்குப் புரியும் சேவையாக அமைகின்றது.

ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் இப்பொன் மொழியை இவ்வமைப்பு முழுமையாகப் பின்பற்றி தனது பணிகளை பல காலமாக முன்னெடுத்துச் செய்து வருகின்றது.

கொழும்பு கறுவாக்காடு பார்ண்ஸ் பிளேசில் உள்ள "சாயி மந்திர்"ல் தனது தலைமையகத்தைக் கொண்டுள்ள இவ் வமைப்பில் நாடெங்கிலுமுள்ள 120 சாயி நிலையங்கள் இணைந்துள்ளன.

பார்ண்ஸ் பிளேஸ் சாயி மந்திர் ஊடாகவும் மற்றும் பல பகுதிகளிலுமுள்ள சாயி அமைப்புகளுடாகவும் ஆன்மீகம், சேவை, கல்வி ஆகிய முத்துறைகளிலும் பல அரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாராளுமன்றில் கூட்டமைக்கப்பட்ட நம்பிக்கை நிதியமொன்றினையும் இவ்வமைப்பு கொண்டுள்ளது. கொழும்பு பார்ண்ஸ் பிளேசில் உள்ள நிலையத்தில் வாரந்தோறும் சாயி பஜனைகள், சிறுவர்களுக்கான பாலவிகாஷ் வகுப்புகள், சிறப்புச் சொற்பொழிவுகள் தகுதி வாய்ந்தவர்களைக் கொண்டு நடத்தப்படுகின்றன. அகதி முகாம்கள், ஆஸ்பத்திரிகள், முதியோர் இல்லங்கள், அனாதை விடுதிகள் முதலிய வற்றிற்கு இதன் தொண்டர்கள் அடிக்கடி விஜயம் செய்து தேவைகளைப் பொறுத்து மருத்துவ சிகிச்சை முகாம்கள் நடத்தியும் நலிந்த குழந்தைகளுக்கு பால், மற்றும் போஷாக்கு உணவு, முதியோர்க்கும் ஊனமுற்றவர்களுக்கும் தேவையான தண்ணீர் வசதி, செயற்கைக்கால் முதலிய வற்றை வழங்கி வருகின்றனர்.

2003 ஏப்ரல், மே மாதங்களில் சுழற் காற்றும் பெருமழையும், மலைச்சரிவுகளும் மலையகத்தில் பேரழிவை ஏற்படுத்தியது. இரத்தினபுரி நகரம் 15 அடி வெள்ளத்தில்

மூழ்கியது. பார்ண்ஸ் பிளேஸ் சாயி சமித்தித் தொண்டர்கள் குழு அங்கு ஓடிச்சென்று இடர்களுக்குள்ளானவர்களுக்கு சமைத்த உணவுப்பொதிகளை விநியோகித்து ஏனைய நிவாரணப் பணிகளையும் மேற்கொண்டனர். இவ்வாறே அதற்குமுந்திய ஆண்டு ஹம்பாந்தோட்டையிலேற்பட்ட கொடிய வரட்சியின் போதும் பல்வேறு நிவாரணப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

2002 ஜுலை 6ந் திகதி ஹங்வெல்ல என்ற ஊரில் "சத்ய சாயிசுவ செவன" என்னும் பெயரில் பிணியாளர் பேணகம் ஒன்றினை இவ்வமைப்பு நிறுவியுள்ளது. 50 பிணியாளர்களை பராமரிக்கக்கூடிய வசதிகள் கொண்ட இதில் தற்போது 15 நோயாளர்கள் உள்ளனர். தாதியர் உட்பட 30 உதவியாளர்கள் இங்கு பணியாற்றுகின்றனர். உறவினர்கள் இல்லாத 21 நோயாளிகள் சென்ற காலத்தில் இங்கு மரணித்தபோது அவர்களின் நல்லடக்கத்தை / தகனத்தை இப்பிணியாளர் பேணகமே மேற்கொண்டது. இன, மத, பேதமின்றி இங்கு நோயாளிகள் அனுமதிக்கப்படுவதுடன், அனைத்து மதங்களினதும் பண்டிகைகளும் கொண்டாடப்படுகின்றன.

வவுனியாவிலுள்ள கூமாங்குளத்திலும், யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள கோப்பாயிலும் அநாதைச் சிறுவர் பராமரிப்பு இல்லங்களை நிறுவி, ஏதிலாச் சிறார்களின் மேம்பாட்டுப் பணிகளிலும் கவனஞ் செலுத்தப்பட்டு வருகின்றது. வவுனியா கூமாங்குளத்திலுள்ள இசிறுவர் பராமரிப்பு இல்லம் வவுனியா சத்ய சாயி நிலையத்தினரால் சென்ற 2003ஆம் ஆண்டு ஜனவரியில் ஆரம்பிக்கப்பட்டது.

சில வருடங்களின் முன் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் அரியாலையில் நிறுவப்பெற்ற சிறுவர் பராமரிப்பு இல்லம் விமானக் குண்டு வீச்சுக்காரணமாக அழிவுற்றதால் பின்னர் கோப்பாய்க்கு இடம் மாற்றப்பட்டு அங்கு இப்பொழுது இயங்கி வருகின்றது. இப்பராமரிப்பு நிலையத் தொண்டர்கள் பெரும்பாலான நேரத்தை இங்குள்ள சிறார்களுடன் செலவிட்டு அவர்களுக்கு ஆறுதலளித்து வருவதுடன், அச்சிறார்களின் ஆன்மீகத் தேவைகளையும் கல்வித் தேவைகளையும் கவனித்து வருகின்றனர்.

சிறுவர்களுக்கான கல்விப் போதனை எவ்வாறு அமைய வேண்டும் என்பதற்கான விதிமுறைகளை, பகவானின் ஆலோசனைகளின்படி பாங்கொக் நகரில் இயங்குகின்ற சாயி கல்வி வழி காட்டல் நிறுவனம் வகுத்துள்ளது. மானிப்பாய் சாயி நிலையத்தினால் சென்ற 8 ஆண்டுகளாக பாலர் பாடசாலையொன்று நடத்தப்பெற்று வந்தது. இப்பாடசாலை, சாயி கல்விப் போதனை வழிகாட்டலுக்கு இணங்கக் கூடியதாக சென்ற 2002ஆம் அண்டு அக்டோபர் மாதத்திலிருந்து இயங்கி வருவதுடன், அரசாங்க பாடசாலைகளுக்கு உரிய பாட விதானங்களும் சேர்க்கப் பட்டிருப்பதால் வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக்களத்தாலும் அங்கீகரிக்கப் பட்டுள்ளது. இப்பாடசாலையில் இப்பொழுது 26 மாணவர்கள் பயில்கின்றனர். காலப் போக்கில், ஏனைய வகுப்புகளையும் ஆரம்பிக்க வேண்டியிருக்கும் .

இக்கூட்டமைப்பு கொழும்புக்குள் மட்டுமல்லாமல் நாட்டின் பல பகுதி களுக்கும் தனது ஆன்மீக மற்றும் சேவைகளை சாயி விஸ்தரித்துள்ளது. சாயி இயக்கம் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட 40வது ஆண்டு விழாவை இக்கூட்டமைப்பு சிறப்பான முறையில் 2005ல் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது.

# பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்

**1936**ஆம் ஆண்டில் தாபிக்கப்பட்ட பிரம்மகுமாரிகள் உலக ஆன்மீகப் பல்கலைக்கழகமானது, ஆன்மீக அறிவைப் பகிர்ந்துகொள்ளுதல், இராஜயோகத் தியானத்தைக் கற்றுக் கொடுத்தல் என்பன வற்றின் மூலம் ஒளியேற்றப்பட்டதும் நற்குணமிக்கதுமான ஓர் சமுதாயத்தைத் தாபிப்பதற்காக 65 வருடங்களுக்கு மேற் பட்ட காலமாகத் தொழிற்படுகிறது. பிரமிக்கத்தக்க இப்பணியானது, ஐந்து கண்டங்களையும் உள்ளடக்கி 87 நாடுகளில் பரவியிருக்கும் 6000 இற்கும் மேற்பட்ட எண்ணிக்கையான நிலையங்களுக்கூடாகத் தற்போது கொண்டு நடத்தப்படுகிறது. இந்நிறுவனம், "மனித இனத்தின் சகோதரத் துவம்" என்பதை நம்புகின்றது. சரியான அணுகுமுறையாலும் முயற்சியாலும் மனித சமுதாயத்தினால் பொற்காலத்தின் - அமைதியும் அன்பும் நல்லிணக்கமும் கொண்டதோர் காலப்பகுதியின் விடியலை குறுகிய காலத்தில் வரவழைக்க முடியும் என இந்நிறுவனம் நம்புகிறது. பின்வரும் சர்வதேச நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

*1980*இல் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுத் தகவல் திணைக்களத்துடன் ஓர் அரச சார்பற்ற நிறுவனமாக இப் பல்கலைக் கழகம் இணைத்துக் கொள்ளப்பட்டது.

*1987*இல் உலக அமைதிக்கான பங்களிப்புக்காக ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தினால் ஏழு சமாதானத் தூதுவர் விருதுகள் வழங்கப்பட்டன.

*1990*இல் அபு மலை உச்சி மாநாட்டில் உருவாக்கப்பட்டுக் கையாளப்பட்ட அபு மலைப் பிரகடனத்தில், அகில உலக ஒத்துழைப்புத் திட்டத்தின் முதல் அம்சத் தின் உச்சக்கட்டம் உருவம் பெற்று ஐ.நா. பொதுக்கூட்ட ஆவணமாகியது.

*1996*இல் ஐ.நா.வின் ஐம்பதாவது ஆண்டு நிறைவைக் கொண்டாடுமுகமாக "நல்ல தோர் உலகத்திற்காக நமது பண்புகளைப் பகிர்ந்து கொள்ளுதல்" என்ற திட்டம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

*1998*இல் ஐ.நா. பொருளாதார சமூக ஆலோசனைச் சபையில் பொது ஆலோசனை அந்தஸ்து அளிக்கப்பட்டது.

யுனெஸ்கோவின் ஆதரவில் நடத்தப்பட்ட ஒரு கல்வி நிகழ்ச்சியான வாழும் விழுமியங்கள் என்பதற்கு ஆரம்ப ஆதரவும் வழங்கப் பட்டது.

2000 இல் யுனெஸ்கோவின் சர்வதேச திட்டமாகிய அமைதிக் கலாச்சாரம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

## இலங்கையில் சேவை

1989 இல் இலங்கையில் சேவை பொரளையில் ஆரம்பமானது. அந்த ஒரே நிலையம் தெகிவளைக்கு இடம்பெயர்ந்ததி லிருந்து பின்னோக்கிச் சென்றதில்லை. திரு கே. ஜெகதீசன் என்பவரது தலைமை யில் இயங்குகின்றது. இன்று, இலங்கைப் பிரம்மகுமாரிகள் 20 இற்கும் மேற்பட்ட நிலையங்களை நாடெங்கும் தாபித்திருக் கிறார்கள். இலங்கை நிலையங்களால் நடாத்தப்படும் நில சேவைகள்:

1. 1993-1994 ஆன்மீக சக்திகளில் மாதாந்த கருத்தரங்குகள் நடத்தப்பட்டன.
2. 1994-1995 மனிதப் பண்புகளில் மாதாந்த கருத்தரங்குகள்.
3. 1994/1995 நல்லதோர் உலகத்திற்காக நமது பண்புகளைப் பகிர்ந்துகொள்ளல் - இது ஒரு சர்வதேசத் திட்டமாக இருந்த போதிலும் பலருக்கும் ஒளியேற்றிய மாதாந்தக் கருத்தரங்குகள் நடத்தப் பட்டது.
4. 1995 கல்வியியலாளர்கள், சுற்றாடலிய லாளர்கள், ஆன்மீகத் துறையினர் என்போர் தமது கருத்துக்களைப் பகிர்ந்துகொண்ட விவாதம் ஒன்று வாழும் விழுமியங்கள் என்ற தலைப்பில் இடம்பெற்றது.
5. 1996-1997 பல பாடசாலைகளுக்கும் வாழும்விழுமியங்களின் நிகழ்ச்சி அறிமுகம் செய்யப்பட்டது.
6. 1997-1998 அமைதிக்கான மில்லியன் எண்ணங்கள் என்ற ஒரு தேசிய அமைதித் திட்டம் அங்குரார்ப்பணம் செய்யப் பட்டு ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட அமைதிக்கான எண்ணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டன.
7. 1998-1999 மனித கௌரவத்தின் விழிப்பு ணர்வைத் தூண்டுதல், இளைஞர்களின் விழிப்புணர்வைத் தூண்டுதல் என்பவை கருத்தரங்குகளுடனும் செயலமர்வு களுடனும் ஒன்றாக அறிமுகம் செய்யப் பட்டது.
8. 2000 - நாட்டின் பல பாகங்களிலும் அமைதிக் கலாச்சாரம் ஒருங்கிணைந்து நடாத்தப்பட்டு யுனெஸ்கோவிடமிருந்து ஒரு விருதுக்காக அங்கீகரிக்கப்பட்டது.

வாழும் விழுமியங்களிலும் தியானத் திலும் குறிப்பிடத்தக்களவு நிகழ்ச்சிகளில் முன்வருவதற்கு இளைஞர்களுக்கு பெரு மளவு வாய்ப்பளிக்கப்பட்டது. அதிலிருந்து இளைஞர்கள் புதிய திட்டங்களில் தொழிற் பட்டனர். இளைஞர்கள் வாழ்க்கையில் வெற்றியை அடைவதற்காகத் தொழிற்படக் கூடியதாக இருக்கும் வகையில், தீர்மானிக் கும் இயலுமை, மனஒருமைப்பாடு, தன்னம்பிக்கை போன்றவற்றை வளர்த்தலே இளைஞர்களின் இலக்கும் குறிக்கோளா கவுமிருக்கின்றது. பின்வருவன இளைஞர் களால் நடாத்தப்பட்ட சில நிகழ்ச்சிகள்:

1. தெஹிவளை, பிரம்மகுமாரிகள் இராஜ யோக பிரதான நிலையத்தில் இடம் பெற்ற "இளைஞர்களின் பண்புகளைக் கண்டறிதல்."
2. பிலியந்தலை, சுபோதி நிறுவனத்தில் இடம்பெற்ற "ஆக்கபூர்வ தியானத்தின் ஊடாக அமைதி"
3. இளைஞர்களின் விழிப்புணர்வைத் தூண்டுதல், 1998.

தொடர்புகளுக்கு :
**பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையம்**
**இல. 55, பீற்றர்ஸ் லேன், தெஹிவளை.**
தொலைபேசி :

# விவேகானந்த சபை - கொழும்பு

### சபையின் தோற்றம்

திருவாளர் எம்.எஸ். இளையதம்பி அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க 13.07.1902 ஆம் ஆண்டு மாலை 3.00 மணிக்கு, ஆட்டுப்பட்டித்தெருவில் இல 63ம் இலக்கத்தில் சில இந்துக்கள் கூடி இந்து சமயத்தை வளர்ப்பதற்கும், அதுபற்றிக் கற்றுக் கொள்ளுவதற்குமான ஒரு சபையை நிறுவுவதற்குக் கூடினார்கள். திறைசேரியில் கடமையாற்றிய திரு. வி. காராளபிள்ளை கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார்.

அக் கூட்டத்தில் எல்லா இந்து சமுதாயத்தின் கௌரவத்தையும் பெற்றுக் கொண்ட சுவாமி விவேகானந்தருடைய எதிர்பாராத மறைவு பற்றிப் பேசப்பட்டது. அங்கே குழுமி இருந்தவர்கள் ஆழ்ந்த கவலையில் மூழ்கி இருந்ததாக எழுதப் பெற்றது.

### நோக்கங்கள்:

இந்து வேதம், ஆகமம், சாஸ்திரம், திருமுறைகளில் சொல்லப்படுகின்ற சனாதன தர்மத்தை வளர்ப்பது. இக் குறிக்கோள்களை அடைவதற்குக் கீழ்க் காணும் வழிமுறைகளைக் கையாளுதல்.

அ) 1. சமயம், கலாசாரம் போன்றவற்றில் முன்னேறுவதற்காக சமய சொற்பொழிவுகள், சமய வகுப்புகள் ஏற்பாடுசெய்தல்.

2. சமயம், கலாசாரம், இலக்கியம் வேதாந்த சித்தாந்த நூல்களைக் கொண்ட ஒரு நூல் நிலையத்தை ஏற்பாடு செய்தல்.

3. இந்து மாணவர்களுக்கு இந்து சமயச் சூழலிலே சமயக் கல்வியும், இந்து சமய தத்துவங்கள் பற்றியும் கற்றுக் கொடுப்பதற்குமான கல்வி நிலையங்களை ஏற்பாடு செய்வதும் அல்லது இச்செயற்பாடுகளைச் செய்கின்ற ஏனைய நிலையங்களுக்கு ஆதரவு கொடுப்பதும்.

4. சபை இருக்குமிடத்தில் ஓர் ஆலயத்தை வழிபாட்டிற்கும், சமய சூழலை ஏற்பாடு செய்வதற்கும் நடவடிக்கை எடுப்பது.

ஆ. 1. இந்துக்களது சமயம், கலாசாரம், சமூகம், தேகாரோக்கியம், மேலும் பொது நன்மைகள் கொடுக்கக்கூடிய செயற்பாடுகளில் ஈடுபடுதல்.

2. தமிழ், சமஸ்கிருதம், இந்து நாகரிகம், கலாசாரம் முதலிய வற்றை வளர்ப்பதற்கும், ஆராய்ச்சி செய்வதற்கும் நடவடிக்கை எடுத்தல்.

3. இந்து சமுதாயத்தின் ஒருமைப்பாடு, வளர்ச்சி, நன்மைகளை வளர்ப்பதற்கான சேவைகளைச் செய்தல்.

4. ஏனைய ஸ்தாபனங்களோடு இணைந்து மேற்குறிப்பிட்ட விடயங்களை அடைவதற்காக ஒத்தாசை புரிவது.

5. விவேகானந்த சபையின் செயற்பாடுகள் இந்துமக்கள் வாழும் நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் குறிப்பாகக் கொழும்பிலும் இடம் பெறும்.

## தோற்றுவித்தோர் விவரம்:

திருவாளர்கள்

1. எம்.எஸ். இளையதம்பி
2. வி. காராளபிள்ளை
3. ஜே.பி. தம்பு
4. வைத்தியநாதன்
5. எஸ். வைத்திலிங்கம்
6. பி. முருகேசு
7. சி. எம். குமாரவேலுப்பிள்ளை
8. சி. எஸ். ஜம்புசாமி
9. ஆர். எஸ். சுப்பிரமணியம்
10. பி. நாகலிங்கம்
11. சேர். பொன். இராமநாதன்
12. சேர்.பொன். அருணாசலம்
13. ஏ. செல்லப்பா
14. சி. பெருமாள்.

## பிரதான செயற்பாடுகள்:

சபை தொடங்கிய காலத்திலிருந்தே இந்துசமயம் குறிப்பாகச் சைவசமயத்தை வளர்ப்பதற்காக விரிவுரைகள், கதா பிரசங்கங்கள், நாயன்மார் குருபூசை, சுவாமி விவேகானந்தர் குருபூசை முதலியவைகளை நடத்திக்கொண்டு வந்திருக்கின்றார்கள். சுவாமி ஆறுமுகநாவலருடைய குருபூசைத் தினங்களில் தமிழில் பேச்சுப் போட்டிகளையும், சுவாமி விவேகானந்தரின் பிறந்த தினக் கொண்டாட்டங்களில் ஆங்கிலத்தில் பேச்சுப் போட்டிகளையும் நடத்தியிருக்கின்றார்கள். பகவத்கீதை, திருவாசகம், திருப்புகழ், திருக்குறள், நன்னூல் போன்ற விடயங்களில் இந்தியாவிலிருந்தும், யாழ்ப்பாணத்திலிருந்தும் கல்விமான்கள் வந்து விவேகானந்த சபையில் சொற்பொழிவாற்றியிருக்கின்றார்கள் பௌத்தர்கள் புத்தகாயாவின் பரிபாலனத்தை தாங்கள் பொறுப்பெடுக்க வேண்டும் என்று ஆக்கிரமிப்புச் செய்தபோது, விவேகானந்த சபை, ஆளும் இந்திய காங்கிரஸ் நிர்வாகக் குழுவிற்கும், தலைவர், இந்துமா சபை, இந்தியாவிற்கும், சர்வதேச பௌத்த சகோதரத்துவ சங்கத்தின் தலைவருக்கும் இந்துக் கோயில்கள் பௌத்த பரிபாலனத்திற்குக் கீழ் இருப்பதைச் சுட்டிக்காட்டியது. குறிப்பாக கதிர்காமம் முருகன் ஆலயம், மேலும் அத்தகைய கோயில்கள் இந்துக்களையும்,பௌத்தர்களையும் கொண்ட ஒரு குழுவினால் பரிபாலிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. சேர். பொன். இராமநாதன் நினைவு தினத்தை ஒவ்வோர் ஆண்டும் கொண்டாடி வந்ததோடு,

அவரைப் பற்றிய பேச்சுப் போட்டியை தமிழிலும் ஆங்கிலத்திலும் அகில இலங்கை ரீதியாக நடத்தி வந்தது. 1930ம் ஆண்டிலிருந்து அகில இலங்கை சைவ சமய பாடப் பரீட்சையை நடத்தி வருகின்றது. பால பண்டிதர் சைவப்புலவர் போன்ற பரீட்சைகளையும் விவேகானந்த சபை நடத்தியது. இந்துக் கலாசாரத்தை வளர்ப்பதற்காக தைப்பொங்கல், தீபாவளி, வருடப்பிறப்பு போன்ற நாட்களில் விழாக்கள் ஏற்பாடு செய்து நடத்துவதும், பரதக்கலை - சங்கீதக்கலை, பண்ணிசை போன்ற கலைகளை வளர்ப்பதற்கும் வகுப்புக்களை நடத்தி வருகின்றது. சிறார் களின் ஆரம்பக் கல்வி சமய சூழலிலே ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற கோட் பாட்டிற்கமைய பாலர் பாடசாலையை ஆரம்பித்து நடத்தி வருகின்றது. தமிழுக்கும் சைவத்திற்கும் எக் காலத்திலும் இடையூறு வராத வண்ணம் தேவையான நேரங்களில் அரசாங்கத்திற்குக் குரல் எழுப்பும் சபை யாகவும் உள்ளது. மேலும் அரசாங்கத்திற்கு இந்துசமயம் பற்றிய ஆலோசனைகளை தேவையான காலங்களில் எடுத்துரைத்தும் வருகின்றது. சமய நூல்களை வெளியிடு வதும் வழக்கம். நாட்டின் பல பாகங் களிலும் சமய கருத்தரங்குகள், சைவ சமய தீட்சை போன்றவற்றை ஏற்பாடு செய்வது சபையின் கடமைகளில் ஒன்று. விவே கானந்தசபை ஏனைய ஸ்தாபனங்களின் தாய்ச்சபை என்றே கூறலாம்.

**விவேகானந்த சபையும், சுவாமி விபுலானந்தரும்:**

1. விவேகானந்த சபை ஸ்தாபனம் 13.07.1902
2. கொழும்பில் ஸ்தாபனம் செய்யப்பட்ட முதலாவது இந்து சங்கம்
3. ஆரம்பத்தில் கொழும்பு வாழ் இந்து மக்களுக்கு சமய அறிவைப் புகட்டுவ தற்காக சமய வகுப்புக்கள் ஆரம்பிக்கப் பட்டன.
4. மாணவர்களுக்கான சமய வகுப்புக்கள் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆரம்பிக்கப் பட்டது.
5. 1924ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் துறவறம் பூண்டார்
6. 1925ம் ஆண்டு சுவாமி விபுலானந்தர் நாட்டின் பல பாகங்களுக்கும் சென்று சமயப் பிரசங்கங்கள் செய்து கொண்டு வந்தார். குறிப்பாக, விவேகானந்த சபையில் தங்கியிருந்து சுவாமி ராம கிருஷ்ண பரம ஹம்ஸரைப் பற்றியும், சுவாமி விவேகானந்தரைப் பற்றியும் பல விரிவுரைகளை நடத்தி வந்தார்.
7. 1925ம் ஆண்டு விவேகானந்த சபை தமது உத்தியோகபூர்வமான செய்தி இதழை விவேகானந்தன் என்று நாமமிட்டு வெளியிட்டது. இதற்கு முதலாவது ஆசிரியராக சுவாமி விபுலானந்தர் கடமையாற்றினார்.
8. 1926ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19ம், 20ம் திகதிகளில் சுவாமி விவேகானந் தருடைய 65ஆவது பிறந்த தின வைபவத்தை விவேகானந்த சபை கொண்டாடியபோது, அன்றைய பூசையை சுவாமி விபுலானந்தரே செய்ததாக அறிக்கை கூறுகின்றது. மேலும் அன்றைய தினம் விவேகானந்தஜி மகராஜ் பற்றி விரிந்த விரிவுரையை ஆற்றியிருக்கின்றார்.
9. 24.03.26ம் ஆண்டு சேர். பொன். இராமநாதனுடன் இணைந்து சுவாமி விபுலானந்தரும், சச்சிதானந்த இராஜ யோகிகளும் விவேகானந்த வித்தியால யத்தை உத்தியோகபூர்வமாகச் சமய சடங்குகளோடு ஆரம்பித்து வைத்தார்.
10. இவ்வாண்டில் இலங்கையில் இராம கிருஷ்ண மிஷனின் தலைவராக பதவி யேற்றார். அத்தோடு வடக்கு, கிழக்கு

மாகாணங்களில் கல்வியை வளம் படுத்தப் பிரயாசைப்பட்டார்.

11. 1927ம் ஆண்டு சுவாமி விவேகானந்தரின் 66வது பிறந்த தின வைபவத்தில் கலந்து கொண்டு அன்றைய பூஜை வழிபாட்டையும் அவர் நடத்தி வைத்தார்.
12. இதேயாண்டில் கண்டிச் சைவமகாசபை அழைப்பின் பேரில் அங்கே சுவாமி விவேகானந்தரைப் பற்றி விரைவுரை ஆற்றியுள்ளார்.
13. 1931ம் ஆண்டு கொழும்பிலிருந்து அண்ணாமலைப் பல்கலைக்கழகத் திற்குச் சென்றார்.
14. 1936ம் ஆண்டு தமிழிசை பற்றிய நூலை வெளியிட்டார்.
15. 1937ம் ஆண்டு கைலாய யாத்திரையை மேற்கொண்டதாக அறிகின்றோம்.
16. 3ஆம் ஆண்டிலிருந்து 41ம் ஆண்டுவரை இராமகிருஷ்ண மிஷன் வெளியிட்ட வெளியீடான சஞ்சிகையின் ஆசிரியராக கடமையாற்றினார்.
17. 1943ம் ஆண்டு பேராதனைப் பல்கலைக் கழக தமிழ் பேராசிரியராக நியமனம் பெற்றார்.
18. 1947ம் ஆண்டு யூன் மாதம் விவேகானந்த சபையில் இருந்த நூல் நிலையத்தைப் பயன்படுத்தி, யாழ் நூல் என்ற புத்தகத்தை வெளியிட்டார்.
19. 1947.07.19ம் ஆண்டு சமாதி அடைந்தார்.

## கொழும்பில் இந்துக்கள்:

இந்துக்கள் என்று கூறும்போது பெரும் பாலானோர் சைவசமயத்தைத் தழுவிய வர்களே. ஏனையோர் இந்துக்களே. இருப்பினும் அனைவரும் திருக்கோயில் வழிபாடு செய்பவர்கள். விநாயகர், முருகன், விஷ்ணு காளி கோயில்கள் பலவுண்டு. கடந்த சில ஆண்டுகளாக சத்திய சாயி பாபாவை வணங்கிப் பிரார்த்தனை செய்பவர்களும் இருக்கின்றார்கள். இதே போன்று பிரம்மகுமாரி இயக்கத்தவர்கள் சிவ ஒளியை வழிபட்டு வருகின்றார்கள். பலரும் கடவுள் வழிபாட்டை தமது வாழ்வில் ஓர் அம்சமாகவே மேற்கொண்டு வருகின்றார்கள். ஓர் சிலர்தான் அவனின்றி ஓர் அணுவும் அசையாது என்ற கோட்பாட்டைக் கொண்டவர்களாக வாழ்கின்றார்கள்.

## சபையின் எதிர்காலத் திட்டம்

1. இந்து சமய ஆராய்ச்சி நிலையத்தை ஏற்பாடு செய்தல்
2. மதமாற்றத்தைத் தடுப்பதற்கான வழிமுறைகளைக் கையாளுதல்
3. சைவசித்தாந்தத்தின் உட்பொருளை சைவமக்கள் இலகுவாக அறிந்து கொள்ளக்கூடியவகையில் இலகுவான வழிவகைகளைக் கையாளுதல்.
4. இந்துக்கள் சமூகத் தொண்டுகளில் ஈடுபடுவதற்கான வழிவகைகளைச் செய்தல்.

# சைவ மங்கையர் கழகம்

**1930**ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் இராசநாயகம் முதலியாரின் ஆதரவுடன் திருமதி இராசமுத்து சதாசிவம், திருமதி சொர்ணகாந்தி நல்லைநாதன் மற்றும் திருமதி பாலாம்பிகை நவசிவாயம் ஆகிய மூன்று மங்கையர்கள் சைவப் பெண்களை உள்ளடக்கிய அவை ஒன்றைக் கூட்டினர். கொழும்பில் சைவ மங்கையர் அமைப் பொன்றை உருவாக்கக் காணப்படக்கூடிய சாத்தியங்களைப் பற்றி ஆராய்ந்தனர். இவர்களின் வாத-பிரதிவாதங்களின் பயனாக சைவ மங்கையர் கழகம் என்ற அமைப்பு 1930 ஆண்டு டிசம்பர் மாதம் 10ஆம் திகதி சுவாமி விபுலானந்தரின் முன்னிலையில் ஆரம்பித்து வைக்கப் பட்டது.

திருமதி சதாசிவம் மற்றும் திருமதி நல்லைநாதன் ஆகியோர் கழகம் ஆரம்பிக்க பட்ட நாள் தொடக்கம் 1960 களின் ஆரம்பம் வரை இருந்தனர். கழக உருவாக்கத்தின் ஆரம்பகாலப் பங்களிப்பு மிகவும் போற்றத் தக்கதாகும். எதிர்மறையான விமர்சனங்களுக்கு இவர்கள் ஆளாயினும், இவர்கள் தமது செயற்குழு முகாமைத்துவத்தின் துணையுடன் கழகத்தைக் கட்டியெழுப்பினர். 1932ஆம் ஆண்டு பெண் பிள்ளைகளின் இரண்டாம் நிலை பாடசாலையாக சைவ மங்கையர் கழகம் (இந்து மகளிர் கல்லூரி) ஆரம்பிக்கப்பட்டது. கழக வரலாற்றில் இது முக்கிய மைல் கல்லாகும்.

அரசியல்வாதிகளும், கொள்கை வகுப்பாளர்களும், மொழியும், சமய கல்வியும் சிறுவர்களின் பாட திட்டத்தில் முக்கிய மானதென தீர்மானம் எடுப்பதற்கு முன்னதாகவே இம் முன்னோடி மங்கையர் இருவரும் பாடத் திட்ட அறிவுறுத்தல்கள் தாய்மொழியில் இடம்பெற வேண்டும் என்பதை உணர்ந்தனர். அத்துடன் சமய கல்வி பாட திட்டத்தில் கட்டாயமாக்கப்பட வேண்டும் என்பதை முன்மொழிந்தனர்.

இவர்களின் இம்முயற்சியானது அக்கால கட்டத்தில் மரபு ரீதியாக பரவியிருந்த ஆங்கில மொழியின் மூலம் பாட

அறிவுறுத்தல்களை வழங்கும் தன்மையில் இருந்து ஒரு சிறப்பு வாய்ந்த மாற்றத்தை நோக்கி நகர்வதாய் இருந்தது. பழைமை வாய்ந்த இந்துப் பாரம்பரியங்கள் பெண் பிள்ளை களுக்கு அவர்களின் தாய்மொழியிலேயே அறிவூட்டப்பட்டது.

## சைவமங்கையர் கழகம்

கிளை நிறுவனங்களும் வேலை திட்டங் களும் ஒருங்கிணைந்த இந்து மகளிர் மூலம் இந்துப் பெண்கள் சபை 1930ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இச்சபையானது பிரதான மாக சமயம், பண்பாடு, தமிழ் மொழி போன்ற பாடங்களை முன்னேற்றுவதை யும், பிரசித்தப்படுத்துவதனையும் அடிப் படை நோக்கமாகக் கொண்டது. இந்த அமைப்பு கல்வி, சமயம், பண்பாடு, சமூகம் ஆகிய துறைகளை அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூக சேவை நிறுவனமாகும். இச்சபையானது 1936இல் சமுக சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டு அங்கீகரிக்கப் பட்ட அறநிலையமாகும். இந்நிலையத் திற்கு கிடைக்கப் பெறும் நன்கொடைகள் யாவும் வரிவிலக்கு அளிக்கப்பட்டது.

இந்த சபை தனது கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு பல்வேறு நிலையங்களை பல்வேறுபட்ட காலங் களில் ஆரம்பித்தது. இன்றுவரை இதன் எல்லா நிலையங்களையும் இவ்வமைப்பே நிர்வகித்து வருகின்றது. பல்வேறு பிரச்சினைகளுக்கு முகங்கொடுக்க வேண்டி இருப்பினும் அதன் உறுப்பினர்களின் கடின உழைப்பு மற்றும் அர்ப்பணிப்பு ஆகிய வற்றால் சீரான வளர்ச்சியை நோக்கி வந்துள்ளது.

இன்று நாட்டில் காணப்படும் முரண் பட்ட சமூக சூழ்நிலைக்கு அவசியமான மனிதாபிமான வேலைகளில் இந்த சபை தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளது. பிரதானமாக போரினால் அனாதரவாக அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள வன்னி மற்றும் மட்டக்களப்பு பிரதேசங் களைச் சேர்ந்த குடும்பங்களை பாதுகாத் தும், கவனித்தும் வருகிறது. அத்துடன் போர் காரணமாக இடம்பெயர்ந்த மாணவர் களுக்கு அவர்களின் கல்வியை தொடர் வதற்கும் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதுடன், பாடசாலைகளில் அனுமதியும் பெற்றுக்கொடுக்கிறது. மேலும் பெற்றோரை இழந்த சிறுவர்களைப் பாதுகாக்கும் நோக்குடன் பேணி வளர்ப்பு திட்டம் ஒன்றை உருவாக்கி சிறுவர் இல்லங் களின் மூலம் அவர்களுக்கு புனர்வாழ்வு அளிக்கின்றது. அதேவேளை, இந்நிலையம் தனது சேவைகளை புத்தளம், பதுளை, பசறை, மத்துகம போன்ற பின்தங்கிய இடங்களுக்கும் விஸ்தரித்துள்ளது. இதன் மூலம் அங்குள்ள மக்களின் கல்வி, சமயம், பண்பாடு, சமூக துறைகளுக்கு உதவி வழங்குகிறது.

### கிளை நிறுவனங்கள்

1. இந்து மகளிர் கல்லூரி

பெண் பிள்ளைகளுக்கான இரண்டாம் நிலை பாடசாலை, 1932ஆம் ஆண்டில் நிறுவப்பட்டது. இன்று இலங்கையிற் காணப்படும் இந்து மாணவிகளுக்கான தனியார் பாடசாலையாக இது மட்டுமே காணப்படுகிறது. இக்கல்லூரி படிப்படியாக வளர்ச்சி அமைந்து தற்போது 2500ற்கு மேற்பட்ட மாணவியரைக் கொண்டதாக விளங்குகிறது.

2. கர்நாடக சங்கீத, பரத நாட்டிய பாட சாலை. இது 1945ஆம் ஆண்டு நிறுவப் பட்டது.
3. தாதிமார் பாடசாலை, சிறிய குழந்தை களை பராமரிக்க கூடியவர்களுக்கானது. 1954ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
4. சிவானந்த நிலையம்: 1960ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. தினசரி பிரார்த்தனை கள் வாரத்திற்கு ஒரு முறை பஜனைகள்

இடம்பெறும் சமய பண்பாட்டு நிலையம்.

5. மங்கையர் இல்லம் பாடசாலை பாடசாலை பிள்ளைகளுக்கான விடுதி 1972ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.

6. பாலம்பிகை நமசிவாயம் விடுதி 1986 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. இது தொழில் செய்யும் பெண்களுக்கானது 17 பெண்களுடன் ஆரம்பிக்கப்பட்டது. இவர்களுக்குள் பல்வேறு கற்கை நெறிகளை பயிலும் மாணவிகளும் அடங்குவர்.

7. சங்கீதம் மற்றும் பண்பாடு சம்பந்தமான வதிவிட நிகழ்ச்சி நிரல்

இது மலையக இளம் பெண்களின் நன்மை கருதி 1981ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப் பட்டது. எனினும் 1983இன் கறுப்பு ஜூலைக்கு பின்னர் இடை நிறுத்தப்பட்டது. பின்னர் 1989 இல் மீள ஆரம்பமானது. இந்து சமய கல்வி குன்றி காணப்படும் பெருந்தோட்ட துறை பெண்களுக்கு பக்தி பாடல்கள் கற்பிக்கப் பட்டன. 2000ஆம் ஆண்டுக்குப் பின்னர் மத்துகம, மன்னார் பகுதிகளைச் சேர்ந்த மாணவிகள் இங்கு வந்து பரத நாட்டியம் மற்றும் குரல்சார் சங்கீதம் என்பவற்றை கற்றுக்கொடுப்பதுடன் அவர்களின் சொந்த பாடசாலைகளுக்கு திரும்பச் சென்று தமது பண்பாட்டுடன் மிகவும் நெருக்கமான இப்பாடங்களைக் கற்பித்துக் கொடுத்தும் வருகின்றனர்.

8. பாடசாலை கல்வியை நிறைவு செய்த வர்களுக்கான தொழில்சார் கணனி பயிற்சி நிலையம் இது 1990ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது.

9. இடம்பெயர்ந்த சிறுவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டம் இது 1990 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. வடக்கு கிழக்கைச் சேர்ந்த சிறுவர்கள் பிற இடங்களுக்கு இடம்பெயர்வதால் பல்வேறுபட்ட சிக்கல்கள் எழுகின்றன. எனினும் மனிதாபிமான அடிப்படையில் அவர்களுக்கு கல்வியூட்டல் தொடர்பான பொறுப்பை நாம் ஏற்றுக் கொண்டிருக்கிறோம். தற்போது இங்கு 1300 பேர் வரை பராமரிக்கப்படுகின்றனர்.

10. யோகா நிலையம் : (முக்கியமாக நோய் நிவாரணம்) இது 1994ஆம் ஆண்டு பெங்களூர் விவேகானந்தா கேத்திர நிலைய உதவியுடன் ஆரம்பிக்கப் பட்டது.

11. முதியோர் இல்லம்: பாலாம்பிகை நமசிவாயம் இல்லம் 1994ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது 20 வரையான முதியோர்கள் பராமரிக்கப் படுகின்றனர்.

12. பின்தங்கிய கிராமங்களை இனங் காணல்:

புத்தளம், மத்துகம, பதுளை, பசறை, முல்லைத்தீவு, மன்னார், இரத்தினபுரி, பலாங்கொடை, அம்பாறை, மட்டக் களப்பு ஆகிய மாவட்டங்களை சேர்ந்த பின்தங்கிய கிராமங்களை இனங்கண்டு அவற்றை பராமரிக்கும் பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த செயற் திட்டமானது ஒரு குறிப்பிட்ட காலவரை யறைக்கு உட்பட்டது. அதன் பின்னர் கழகம் படிப்படியாக தனது பங்கை குறைத்துக்கொள்ளும். இதன்போது தெரிவுசெய்யப்பட்ட பத்து பெண் களுக்கு ஐந்து பிரிவுகளாக விசேட பயிற்சி கொழும்பு முகத்துவாரம் டிலாசால் நிலையத்தில் வழங்கப் படுகிறது. இதன்போது வித்தியாலய அனுமதிபெற்ற பாடதிட்டம் மற்றும் மேலதிக பாடங்களான இசை, நடனம்

ஆகியவற்றை பயில உறுதியளிக்கும் மாணவிகளுக்கு புலமைப்பரிசில்கள் அளிக்கப்படுகின்றன. அத்துடன், அறநெறி ஆசிரியர்களுக்கு இத் துறைகளில் பயிற்சிகளும் முறையாக நடைபெறுகின்றன. இந்த செயற்திட்டத்தில் இலங்கை இந்து ஆலோசனை சபையும் இணைந்து செயலாற்றுகின்றது.

13. சாக்கா வேலைத் திட்டம்:

இளம் பெண்களிடையே சேவை மனப்பான்மையை விருத்தி செய்வதற்கான பயிற்சிகளை வழங்கவென உருவாக்கப்பட்ட வேலைத்திட்டம் இதுவாகும் 'சாக்கா' என்பதன் உள்ளார்த்தம் முகாம் என்பதாகும். இந்த குழுவானது கிராமங்களின் தேவைகளில் நேரடியாக ஈடுபட்டு வருகின்றது. இக்குழுவானது மன்னார் மாவட்டத்தில் இருந்து இடம்பெயர்ந்த சுமார் 50 குடும்பங்களை பராமரித்து வருகின்றது.

14. பெற்றோர் பேணிவளர்ப்புத் திட்டம் (சிறுவர் இல்லம்) 2000ஆம் ஆண்டு ஏப்ரலில் ஆரம்பிக்கப்பட்டது. பெற்றோரை இழந்த சிறுவர்களுக்கானது.

இலங்கை இந்து ஆலோசனை சபை 1985ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. இச்சபையானது ஆரம்பத்தில் பாராளு மன்றத்திற்கு கொண்டுவரப்படும் சமய நெறிகளுக்குப் புறம்பான பிரேரணைகளை தடுப்பதற்காக முன் நின்று, வெற்றியும் கண்டது. சமூக சட்டத்தின் கீழ் ஒரு சபையாக செயற்பட ஆரம்பித்தது. இதன் ஆரம்பகால சபை முதல்வராக திரு. யோகேந்திரா துரைசாமியும், செயலாளராக வைத்தியர் சண்முகசுந்தரமும், பொருளாளராக திரு. எஸ். பி. நடராஜாவும் இருந்தனர்.

### இலங்கை இந்து ஆலோசனை சபையின் எடுத்துகாட்டல்கள்: (காட்டுதல்கள்)

இலங்கை இந்து ஆலோசனை சபையானது நாட்டின் பல்வேறு இடங்களில் இந்து சமூகத்தின் கூட்டமைப்பாகவும், கோயில் அறகட்டளைகளின் கூட்டமைப்பாகவும் காணப்படுகிறது. இந்த அமைப்பு தன்னுடைய ஒன்றிணைந்த சங்கங்களின் குறிப்பிடத்தக்க பாத்திரமாக தன்னை ஈடுபடுத்திக் கொண்டுள்ளதுடன், தேவையான நேரத்தில் தேவையான இடத்தில் தனது சேவையை வழங்குகிறது. இந்துக்கள் ஒன்றாக கூடி தமது பிரச்சினைகளை பற்றி ஆராய்வதுடன் கருத்துக்களை பரிமாறிக்கொள்ளக்கூடிய இடமாகவும் இது காணப்படுகிறது.

இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு இலங்கையில் நடைபெற்றபோது இந்த சபையானது தனது செயற்பாடுகள், தியாகங்கள், அர்ப்பணிப்பு பற்றியும், அடிப்படையில் திடமான அத்திவாரத்தையும் அமைத்தனர். இதில் தமது சபையின் ஆரம்பகர்த்தாக்களின் உளவலிமை, முன்னறிவு திறன் பற்றியும் எடுத்துக்காட்டி இருந்தனர். அண்மைக் காலங்களில் மீள ஆரம்பிக்கப்பட்ட சில செயற்பாடுகள்:

1. இந்து ஆலோசனை சபையானது இந்துக்களை பாதிக்கும் பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக விழிப்புடன் இருப்பதுடன், தேவையானபோது தனது பிரதிநிதித்துவத்தை வழங்கி பிரச்சினைகளுக்குத் தீர்வுகளையும் தேடிக் கொடுக்கிறது. (உதாரணமாக)
   அ. பாடசாலைகளில் சைவசமயம் போதிக்கும் ஆசிரியர் பற்றாக்குறை தொடர்பில்

ஆ. பிறமத பாடசாலைகளில் கல்வி பயிலும் இந்து மாணவர்கள் எதிர் நோக்கக்கூடிய பிரச்சினைகளான பர்தா அணியுமாறு நிர்ப்பந்திக்கப் படல், நெற்றி பொட்டை அழிக்கு மாறு நிர்ப்பந்தித்தல் போன்றன.

இ. தமிழ்மொழி மற்றும் இந்து பாட புத்தகங்களில் காணப்படகூடிய பல தவறுகள் சம்பந்தமாக

ஈ. சைவசமய பயிற்சி, ஆசிரியர், அதிபர் சிரேஷ்ட மாணவர்கள் என்போருக்கான கருத்தரங்குகளை ஒழுங்குசெய்தல்.

2. பௌத்த, இந்து சமயங்களுகிடையே தெளிவான புரிந்துணர்வை ஏற்படுத்தும் நோக்கில் கண்டி மல்வத்த அஸ்கிரிய பீடங்களின் பீடாதிபதிகளுடன் நான்கு சந்தர்ப்பங்களில் கலந்துரையாடல்கள் மேற்கொள்ளப்பட்டன.

3. மகஸின் சிறையில் தடுத்து வைக்கப் பட்ட இந்துக்களை சமய விழாக்களின் போது சென்று சந்தித்தல். இதன்போது முத்துமாரி அம்மன் கோயிலின் உதவியுடன் அவர்களுக்கு தேவையான உடுதுணிவகைகள் வழங்குவதுடன், பிரார்த்தனைகள் செய்து பிரசாதமும் வழங்கப்பட்டது.

4. அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு முன்னர், இனப் பிரச்சினைக்கு ஒரு நீதியான தீர்வுக்கு செல்லும் நோக்கில் இந்துக்கள், பௌத்தர்கள், கிறிஸ்தவர்கள், முஸ்லிம் களை உள்ளடக்கிய கருத் தரங்கு ஒன்று "மார்கா" நிலையத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. (மார்கா சமாதானம், இணக்கப்பாடு மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றிற்கான நிலையம்)

5. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் பல்வேறு அரசியல் கட்சிகள் மற்றும் உரிமைப் போராட்டக் குழுக்களுடன் விடயங்கள் ஆராயப்பட்டு, உடன் பாட்டிற்கு வர முயற்சிகள் எடுக்கப் பட்டன.

6. இந்து சமயம் கற்பிக்கும் ஆசிரியர் களுக்கு மனித விழுமியங்கள் பற்றிய அறிவை ஏனைய அரச சார்பற்ற அமைப்புகளின் துணையுடன் கருத் தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன.

7. மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார், வவுனியா, மாங்குளம் ஆகிய பிரதேசங் களில் உள்ள அகதி முகாம்களில் தஞ்சமடைந்துள்ள குடும்பங்களுக்கு உதவியதுடன், அக்கரைப்பற்றிற்கு அண்மையில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கின்போது நிவாரண பொருட் களை அன்பளிப்பு செய்தது.

8. அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்த இடம்பெயர்ந்து இந்துக்களின் வீடமைப்பு நிர்மாண பணிகளுக்கு தேவையான வெளிநாட்டு பண உதவி யினை பெற மட்டக்களப்பு இந்து இளைஞர் பேரவைக்கு துணை புரிந்துள்ளது.

9. குறித்த கால பகுதியில் மன்னார் இந்துக்களுக்கான ஒரே ஒரு ஆலயமாக இருந்த திருமுருகன் கோயிலை அங்கி ருந்து அகற்றுவதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகளை முறியடித்து அதிகாரி களுடன் பேச்சுவார்த்தை நடத்தி கோயிலை அங்குள்ள இந்து சமூகத்தி னருக்கு தொடர்ந்து சேவை செய்யக் கூடிய வகையில் நீதிமன்ற ஆணையை பெற்றுக்கொடுத்தது.

10. 1992ஆம் ஆண்டு விஜயதசமியின் போது **இந்து குரல்** என்னும் நாளேட்டை வெளியிட்டது.

11. இந்து, பௌத்த மதங்களின் ஒற்றுமையினை நோக்காகக் கொண்டு இந்து பௌத்த மகாசபை என்னும் அமைப்பின் உருவாக்கத்திற்கு உதவியது. இவ்வமைப்பானது இந்து, பௌத்த ஆலோசனை குழுவாக தற்போது தனது செயற்பாட்டை உள்வாங்கிக் கொண்டு உள்ளது. இதன் பிரதான செயற்பாடாக இந்து, பௌத்த மக்கள் மதமாற்றம் செய்யப்படுவதை தடுப்பதாகும்.

12. சமாதானத்திற்கான சமய கூட்டுறவு மற்றும் சமய சமாதானம் மூலமான முரண்பாட்டு தீர்வு ஆகியனபற்றிய உலக மாநாட்டில் பங்குபற்றி வருகின்றது.

13. வெளிநாட்டு பிரதிநிதிகள் மற்றும் பிற மதத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுடனான சந்திப்பின் மூலம் முரண்பாடுகளை தீர்ப்பதற்கான பல்வேறு வழிமுறைகள் ஆராயப்படுகின்றன.

14. பதுளை, பசறை, இரத்தினபுரி, பண்டாரவளை, உடப்பு, முந்தல், அகலவத்தை, மத்துகம போன்ற பிரதேசங்களில் உள்ள கிராமங்களுக்கு சைவ மங்கையர் கழகத்துடன் இணைந்து வார இறுதி கருத்தரங்குகள் இடம்பெறுகின்றன.

15. புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு முன்னர் பாராளுமன்ற தெரிவு செயற்குழுவிற்கு முன்பாக இனத்துவம் தொடர்பாளர் வினா எழுப்பியமை.

16. நேபாளம், மொரிசீயஸ், பாரி, கொரக்கபூர், கல்கத்தா, டர்பன், லும்பினி, டிரினிடாட், டுபாகோ போன்ற இடங்களில் நடைபெற்ற சர்வதேச இந்து மாநாடுகளில் பங்கு பற்றியுள்ளது. மேலும் தைபேயில் இடம்பெற்ற சமய ஒத்துழைப்பிற்கான மாநாட்டிலும் பங்குபற்றியுள்ளது.

17. தேவை ஏற்படும் பொழுது பேச்சாளர்களை அழைத்து விரிவுரை நிகழ்ச்சி நிரல்களை ஒழுங்கு செய்துள்ளது.

18. இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் அமைச்சரை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் செயற்படல். அண்மையில் கதிர்காமம் இராமகிருஷ்ண மடத்தை அதன் உரிமையாளர்களிடம் கையளித்தது.

மதம் தொடர்பான காங்கிரஸின் ஒரு அங்கத்தவராக இந்து ஆலோசனை சபை காணப்படுகிறது.

சமாதானம் மற்றும் நெறி தொடர்பான தேசிய மாநாட்டின் உறுப்பினர்.
இந்து பௌத்த ஆலோசனை குழு உறுப்பினர்.
சமய ஆலோசனை குழு உறுப்பினர். தேசிய கல்வி கமிஷன்.
இலங்கை இந்து ஆலோசனை சபையின் நிறைவேற்று குழு.

மாண்புமிகு லக்ஷ்மன் ஜயகொடி
17.02.2000

# அகில இலங்கை சிவப்பிராமண சங்கம்

**தலைவர்**
**சிவஸ்ரீ. பா. ஷண்முகரத்ன சர்மா**
பரீட்சைக் குழுத் தலைவர் / உபதலைவர்
**சிவஸ்ரீ. சி.குஞ்சிதபாதக் குருக்கள்**
காரியதரிசி
**பிரம்மஸ்ரீ. சோ. குஹானந்த சர்மா**
ஆரம்பம்
**1957. 09. 02**
நோக்கம்
குருமார் கல்வி, குருமார் பயிற்சி

1957இல் கொழும்பு ஸ்ரீ சிவதர்மவர்தினி வித்தியாலயம், சுன்னாகம் ஸ்ரீ சதாசிவ பிராசீன பாடசாலை, மாவிட்டபுரம் வேத சிவாகம வித்தியாலயம், நீர்வேலி சங்கர பண்டிதர் பாடசாலை, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம் ஆரம்பித்து நன்கு நடாத்தப்பட்டன.

வருடா வருடம் "சிவாச்சார்யா" பரீட்சை நடத்தப்பட்டுச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

இந்திய வேத சிவாகமப் பாடசாலை களிலும் இம்மாணவர் பங்குகொண்டு பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். 1983 இனக்கலவரம் இக்கல்வியைப் பெரிதும் பாதித்தது.

ஆதலால் தற்போது கொழும்பு ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரத்தில் மட்டும் ஸ்ரீ சிவதர்மசம்வர்தினி வேதசிவாகமப் பாடசாலை நடைபெற்று வருகின்றது.

**நிதி**

1957 முதல் கலாசாரத் திணைக்களம் தம்மிடம் பதிவு பெற்ற எல்லாச் சங்கங் களும் உதவிப் பணம் கொடுத்தபோது எமது சங்கத்திற்கும் பணவுதவி செய்தார்கள்.

சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாத குருக்கள் அவர் களின் உதவியால் பாடசாலை சிறப்பாக நடைபெறுகின்றது.

தலைவர் அவர்களின் வழிகாட்டலில் விழாக்கள், நூல் ஆக்கம் என்பன நடை பெற்று வருகின்றன.

**நாட்டுத் தொண்டு**

1962 இல் அப்போதைய அமைச்சர், மதகுருமார் அரச சேவையில் ஈடுபடலா காது என்ற கூற்றைக் கூறியபோது அதற்கு மறு பரிசீலனை செய்ய உரிய ஆலோசனை களை சங்கம் வழங்கியது.

1976 இல் மஹா சிவராத்திரி, தீபாவளி விடுமுறைகளை அரசாங்கம் ரத்துச் செய்ய எத்தனித்தபோது சமய தத்துவங்களை அப்போதைய பிரதமர் ஸ்ரீமாவோ அம்மை யாருக்கு விளக்கியமையால் அது மீண்டும் மந்திரி சபை அங்கீகாரத்துடன் இன்றும் விடுமுறை நாட்களாக உள்ளன.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி மூலம் சமய தத்துவம், சமய விளக்கங்களை அளிப்பது

குருமாரின் படிப்பு, பயிற்சிகளை நேரிற் பெற்று அவர்களுக்கான சேவை ஆற்றல் சிபார்சுக் கடிதங்களை உரியவர்களுக்கும் கொடுத்துச் சிவாசார்யப் பணியை ஊக்குவித்தல்.

# ஸ்ரீ ராமகான சபா

ஸ்ரீ ராமகான சபா அந்தணர் நலன் கருதி 1939 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. சமய, சமூக, ஆன்மீக, கலாசார அடிப்படையில் ஒரு சந்திப்பை ஏற்படுத்த ஒரு சபா முக்கிய மானது என்ற பெருநோக்கில் ஆரம்பிக்கப் பட்டு இன்றும் நன்கு செயற்பட்டு வருகின்றது.

வைதீக முறைப்படி அந்தணர்க்கான கிரியைகளைச் செய்து வைக்க முன்னர் இந்தியாவிலிருந்து தகுதி வாய்ந்த - சாஸ்திரிகளை அழைத்து வந்துள்ளது இச் சபா. இப்பொழுதுகூட தகுதி வாய்ந்த ஆச்சாரியார் நற்சேவையில் உள்ளனர்.

இத்தகைய நற்சேவை மன்றம் சமீபத்தில் பொன்விழாவைக் கொண்டாடி இப்போது வைர விழாவைக் கொண்டாடும் வகையில் முன்னேறுகின்றது. அத்தோடு 50 வருட கால பழமை வாய்ந்த கட்டடத்தைப் புனரமைக்கும் பணியிலும் ஸ்ரீ ராமகான சபா செயற்படுகின்றது.

**தொடர்புகளுக்கு**
ஸ்ரீ ராமகான சபா,
418, காலி வீதி,
வெள்ளவத்தை,
கொழும்பு - 06

# சைவமுன்னேற்ற சங்கம்

I. **தாபனத்தின் பெயர்**

***சைவ முன்னேற்ற சங்கம்***

தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு

***29. 03. 1953***

**தாபனத்தின் செயற்படு பிரதேசம் / வட்டம்**

1. **கொழும்பு :** கொம்பனித் தெரு/ பொரளை, தெமட்டகொட சிலாபம்
2. **இங்கிலாந்து:** பிரதான கிளை

**தோற்றுவிப்புக்கான இலக்கு / நோக்கு**

1. கொழும்பில் பிற மத சூழலில் வசிக்கும் எமது மக்களுக்கு சமயக் கல்வி போதித்தல்.
2. முக்கிய காரணம் கொம்பனித் தெருவில் இந்துப் பாடசாலைகள் இல்லை.

**தோற்றுவித்தோர்**

திரு, சிவஞானம்

திரு. பா. சோமசுந்தரம்

திரு. வ. செல்வரட்ணம்

திரு. க. தியாகராஜா

**பிரதான செயற்பாடுகள்**

1. மாணவர்களுக்கு சைவசமய பாடம் புகட்டுதல்
2. நால்வர் பெருமக்களின் குரு பூஜை கொண்டாடுதல்
3. மாதந்தோறும் இல்ல பஜனைகள் செய்தல்
4. வருடாந்த கல்விக் கருத்தரங்கு (க.பொ.த (உ/த)
5. கல்வி ஊக்குவிப்புப் பணிகள்

II. **நிர்வாக அமைப்பு**

ஐந்து அறங்காவலர்கள்

தலைவர், செயலாளர், பொருளாளர் 11 உபதலைவர்கள் ஆகியோருடன் 31 உறுப்பினர்களைக் கொண்டது.

**பிரிவுகள்**

ஆட்சிக் குழு, தொடரணி, மாதரணி, நால்வர் சமய பாடசாலை

III. **தற்போதைய பதவியாளர்கள்**

தலைவர்
திரு. கார்த்திகேசு தில்லைநாதன்

கௌரவ பொதுச் செயலாளர்
திரு. ச. கனகசபாபதி

கௌரவ பொதுப் பொருளாளர்
திரு. எம். மாணிக்கம்

சமயப் பிரச்சார செயலாளர்
திரு. பெருமாள் பூமிநாதன்

பாடசாலைச் செயலாளர்
திரு. எஸ். ரி. செல்லத்துரை

சமயச் செயலாளர்
திரு. க. ஜெயந்திரன்

தொண்டரணிச் செயலாளர்
திரு. சு. பிரதீப் குமார்

மாதரணித் தலைவி
திருமதி. அம்பிகைமலர் பாலசுப்பிரமணியம்

மாதரணிச் செயலாளர்
திருமதி. புஷ்பவதி கார்த்திகேசு

**அறங்காவலர்கள்**

திரு. தம்பி நவரட்ணம்
திரு. சின்னத்துரை தனபாலா
தலைவர், செயலாளர், பொருளாளர்

IV. **சாதித்தவை**

1. 1977 ஆம் ஆண்டு பிரதான கிளை. இங்கிலாந்தில் உருவாக்கப்பட்டது.
2. சிலாபம், பேசியா கொண்ட கிளைகளும்
3. நால்வர் சமய பாடசாலை கிளைகள், பொரளை, தெமட்டகொடை பகுதியில் ஆரம்பிக்கப்பட்டது.

V. **சவால்கள்**

மதமாற்றம்

V. **எதிர்காலத் திட்டம்**

1. மத மாற்றத்திற்கான கண்டறிந்து சரியான தீர்வுத் திட்டத்தை முன்வைத்து செயற்படுத்துதல்.
2. சரவணபாலர் பாடசாலையை (முன் கல்வி) தமிழ் ஆரம்பப் பாடசாலை மேலும் ஊக்குவித்தல்.

**தொடர்புகளுக்கு**

சைவ முன்னேற்றச் சங்கம்
101/70, கியூ வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி - 2304743 (பெ. பூமிநாதன்)
2440695 (க. தில்லைநாதன்)

# கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை

**தா**பனத்தின் பெயர்
***கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை***
***3, கோவில் வீதி, கப்பித்தாவத்தை,***
***கொழும்பு - 10***

ஸ்தாபிதம்
***1925***

***தாபனம் செயற்படும் பிரதேசம்***
பிரதானமாக கொழும்பு, மன்னார், கதிர்காம பிரதேசங்கள்

***சபையின் பிரதான நோக்கம்***

1. கதிர்காம யாத்திரிகர்களுக்கும், திருக் கேதீஸ்வர யாத்திரிகளுக்கும் தேவை யான அவசிய வசதிகள் செய்து கொடுப்பது.
2. சைவ சமய அபிவிருத்தி ஊக்குவிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வது
3. அவசியப்படுமிடத்து சைவ சமய தொண்டுகள் நடைபெறும் புனித தலங்களில் மடங்கள் அமைப்பது
4. வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த சைவ சமயப் புனித தலங்களில் மடங்கள், காணிகள், இச்சபைக்கு உரிமையாக்கப் படும் பொழுது அவற்றைப் பாதுகாத்து வருதல்.
5. இச்சபைக்குச் சொந்தமான மடங்களைப் பராமரித்து நிர்வகிப்பதும்

தொடர்புகளுக்கு
***கதிர்காம யாத்திரிகர் தொண்டர் சபை***
***3, கோவில் வீதி, கப்பித்தாவத்தை,***
***கொழும்பு - 10***
***தொலைபேசி: 2433692***

# திருஞான சம்பந்தர் நற்பணி மன்றம்

**தா**பனத்தின் பெயர்
**திருஞான சம்பந்தர் நற்பணி மன்றம்**
**66/14, பேஸ்லைன் வீதி, பொரளை**
**கொழும்பு - 08**

பெரும்பான்மையினர் வாழும் பிரதேசமாகிய எமது பொரளைப் பிரதேசத்தில் தமிழ் மொழியினதும் சைவ சமயத்தினதும் சிறப்பினைப் பாதுகாப்பதற்காக எமது முன்னைய தலைவர் ச. பெருமாள் ஐயா அவர்கள், கொழும்பு சைவ முன்னேற்ற சங்க முன்னைய தலைவர் அமரர் பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களின் தலைமையில் எமது திருஞான சம்பந்தர் நற்பணி மன்றம் என்ற அமைப்பினை 26. 10. 2001 அன்று ஆரம்பித்து இப்பகுதியில் உள்ள சிறுவர்களுக்கு நால்வர் சமய பாடசாலை என்ற பெயரில் அறநெறிப் பாடசாலையை அதே தினத்திலே ஆரம்பித்து வைத்தனர். அறநெறிக்கான ஆசிரியர் ஒருவரையும் நியமித்து சீருடைகளும் வழங்கப்பட்டன.

பெரும்பான்மை மக்களின் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் எமது வருடாந்த மஹோற்சவம் மற்றும் சிவராத்திரி, நவராத்திரி, கந்தசஷ்டி விரதம், திருவெம்பாவை, வீதி பஜனைகள், ஆத்ம சாந்தி பிரார்த்தனைகள், மன்றத்தின் கலைவிழா போன்ற நிகழ்ச்சிகளை பல சிரமத்திற்கு மத்தியிலும் செய்து வருகின்றோம்.

**தற்போதைய பதவியாளர்கள்**

| | |
|---|---|
| தலைவர் | திரு. ஆனந்தகுமார் |
| உபதலைவர் | திரு. மோகன் |
| செயலாளர் | திருமதி. இலங்கேஸ்வரி |
| உப செயலாளர் | செல்வன். வினோதன் |
| அங்கத்துவச் செயலாளர் | செல்வி. நவனீதம் |
| பாடசாலைச் செயலாளர் | செல்வி. இந்துஷா |

# அன்னை ஆதிபராசக்தி இல்லம்

**அன்னை ஆதி பராசக்தி இல்லம்**
**65/235, விஸட்வைக் வீதி,**
**கொழும்பு - 15**

**ஸ்தாபிதம்**
**1988. 09. 16**

**தாபனம் செயற்படும் பிரதேசம்**
கொழும்பு மட்டக்குளி பிரதேசம்

**தாபனத்தின் பிரதான நோக்கம்**

1. சனாதன மறுமலர்ச்சிக்கு உதவுதல்
2. சாதிமத பேதமின்றி சகலருக்கும் சமூக சேவை ஆற்றுதல்
3. பக்தர்களுடைய நல்வாழ்விற்கு வழிகாட்டல்
4. அறநெறிப் பாடசாலைகள் மூலம் சகல சமூகத்தினரையும் நெறிப்படுத்தல்
5. சமூகத்தின் நன்மை கருதி பூஜைகள், யாகங்கள் செய்தல்.

**தலைவர் / ஆன்மிக குரு / ஸ்தாபகர்**
ஓம் சக்தி அருள்மிகு ஆன்மிக குரு
அமராவதி இராமமூர்த்தி அம்மையார்

**அன்னை ஆதிபராசக்தி இல்லத்தின் செயற்பாடுகள்**

1. நித்ய நைமித்திய பூஜைகள் நடைபெறல்.
2. சனி, ஞாயிறு தினங்களில் அறநெறி, வேத பாடசாலைகளும் நடத்தல்
3. மாதந்தோறும் பௌர்ணமி தினங்களில் திருவிளக்குப் பூஜை, அன்னதானம், பஜனைகள், மற்றும் ஆன்மிக சொற்பொழிவுகள் நடைபெறுதல்.
4. இந்து சமய நூல்கள் அடங்கிய ஒரு நூலகம் செயற்பட்டு வருகின்றது.
5. தியான வகுப்புகள் நடைபெறுதல்.

**சாதித்தவை**

1. மருத்துவர்களால் கைவிடப்பட்ட நோய்களையும் பக்தர்களின் வினைகளையும் தீர்த்தல்
2. பல சீர்கேடுகளுக்கு உட்பட்டு வழிமாறி சென்ற பல இளைஞர்களை நல்வழிப் படுத்தியது.
3. ஒரு குறிப்பிட்ட சாரார் என்றில்லாமல் சகலருக்கும் மந்திரங்களை புகட்டுதல்

**சவால்கள்**

1. இல்லத்திற்கென நிரந்தர இடம் இல்லாமையால் தொடர்ந்து எமது செயற்பாடுகளை நடத்துவதில் சிக்கல்.

**எதிர்காலத் திட்டங்கள்**

1. அநாதை இல்லம், வயோதிப இல்லம் அமைத்தல்.
2. கோயில்களைப் புதுப்பித்தல்
3. கைரேகை, வானியல் சாஸ்திரம் போன்ற சாஸ்திரங்களை வளர்த்தல்
4. ஏழை மக்களுக்கு இலவச மருத்துவ முகாம்களை அமைத்து நிவாரணங்கள் அளித்தல்.
5. புதிய கோயில்கள், மடங்கள் அமைத்தல்.

**அன்னை ஆதி பராசக்தி இல்லம்**
**65/235, விஸட்வைக் வீதி,**
**காக்கை தீவு**
**கொழும்பு - 15**
**தொலைபேசி: 2527134**

# உலக சைவப் பேரவை

I. **தா**பனத்தின் பெயர்
**உலக சைவப் பேரவை**
***(இலங்கைக் கிளை)***
தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
***1993 யூன் 10***

**தாபனத்தின் செயற்படு பிரதேசம்**
இலங்கை முழுவதும்

**ஸ்தாபகர்**
சுவாமி சிவநந்தி அடிகள்
(மெய்கண்டான் ஆதினம், லண்டன்)

**பிரதான செயற்பாடுகள்**

1. மஹா சிவராத்திரி தினம் (சைவக் கொடித் தினம் நந்தி) கொண்டாடல்
2. அறநெறிப் பாடசாலைகளுக்கு உதவுதல்.
3. நிர்க்கதியான சிறுவர் இல்லங்களுக்கு உதவுதல்.

**தற்போதைய பதவியாளர்கள்**

| | |
|---|---|
| தலைவர் | திரு. கா. தயாபரன் |
| உபதலைவர் | திரு. மு. கதிர்காமநாதன் |
| செயலாளர் | திரு. இ. வைத்தமாநிதி |

**பேரவையின் நடவடிக்கைகள்**

இதுவரையில் 9 சர்வதேச மாநாடுகளை நடாத்தியும் உலகெங்கும் உள்ள சமய அறிஞர்கள், ஆய்வாளர்கள், மடாதிபதிகள் ஆகியோரின் சொற்பொழிவுகள், கலந்துரையாடல்கள் போன்றவற்றை நடாத்தி மலர்கள் வெளியிட்டு சைவ சமயத் தனித்துவம் சமுதாயத்தில் ஏற்படுத்திய தாக்கச் சவால்கள் என்பவற்றை உலகளாவிய முறையில் எடுத்துக்கூறும் வாய்ப்பை பல நாடுகளில் ஏற்படுத்தியுள்ளது.

தொடர்புகளுக்கு
**உலக சைவப் பேரவை**
***(இலங்கைக் கிளை)***
***9, ஜயா வீதி, கொழும்பு - 04.***
**தொலைபேசி : *2582139***

# கொழும்பு மகளிர் இந்து மன்றம்

இந்து சமயத்தின் வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளவும் இந்துப் பெண்களின் மேம்பாட்டுக்காகவும் பல பெரியோர்களின் ஊக்குவிப்போடும் ஆசீர்வாதங்களுடன் திருமதி லீலா சுப்பிரமணியத்தின் தலைமையில் இம்மன்றம் 1965இல் தொடங்கப்பட்டது. செல்விகள் சற்சொருபவதி நாதன், வள்ளிநாயகி கணபதிப்பிள்ளை, திருமதி விசாலாம்பாள் அரியக்குட்டி ஆகியோருடன் இன்னும் சிலரும் இணைந்து இந்துப் பெண்களுக்கான விடுதியொன்றையும் சமயக் கொண்டாட்டங்களையும் சிறப்புற நடாத்தி வந்தனர். நாட்டின் குழப்பம் காரணமாக செயலிழந்திருந்த சங்கம் 1992இல் புத்துயிர் பெற்று இயங்கத் தொடங்கி இன்றுவரை பல்வேறு வகையான சமய, சமூகப் பணிகளில் ஈடுபட்டுச் சிறப்பாகத் தொடர்ந்து இயங்கி வருகின்றது.

சமய, கலாசாரப் பணிகளில் தன்னை முற்று முழுதாக இணைத்துக்கொண்ட இச்சங்கம் முதன்முலாக இலங்கை மன்றக் கல்லூரியில் 'சக்தி விழா' என்றொரு சிறப்பான கதம்ப நிகழ்ச்சியை நிகழ்த்திப் பலருடைய பாராட்டையும் வரவேற்பையும் பெற்றது.

இந்துமாமன்றக் கட்டிடத்திற்கு ஒரு தொகைப் பணம் அன்பளிப்புச் செய்தமை விவேகானந்த சபைப் பரீட்சைக்கு மேற்பார்வையாளராகப் பணிசெய்தல், ஸ்ரீ இராமகிருஷ்ண ஜெயந்தியையொட்டி வவுனியாவிலிருந்து வந்த 65 மாணவர் ஆசிரியர்களுக்கு உணவு, இருப்பிடம் அளித்து உதவியமை, உலக சைவப் பேரவை இலங்கையில் நடாத்திய 4ஆவது மாநாட்டின்போது மகளிர் மன்ற அங்கத்தவர்கள் யாவரும் பங்கேற்று உதவியும் ஒத்துழைப்பும் நல்கியமை உலகின் பல நாடுகளிலும் நடைபெற்ற சைவ மாநாடுகளில் கலந்துகொண்டமை முதலியவை இம்மன்றத்தின் பணிகளிற் சில. நவராத்திரி பூஜை நாயன்மார் பூஜை ஆகியவற்றைத் தருவது மன்றத்தில் நடாத்திச் சமய வழிபாடுகள் செய்யப்படுகின்றன.

இம்மன்றத்தின் ஆரம்ப காலந் தொடக்கம் இறுதிவரை உறுப்பினராக விருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காகப் பல வகையிலும் தொண்டாற்றிய உறுப்பினர் திருமதி விசாலாம்பாள் அரியக்குட்டி அவர்கள் இல 15, பகத்தல வீதியிலுள்ள வீட்டின் அவரது பங்கைச் சகாய விலையில் இம்மன்றத்துக்கென வழங்கினார். இக் கட்டிடத்திலே சுமார் 10 முதிய இந்துப் பெண்மணிகளை மன்றம் பராமரித்து வருகின்றது. இறை வழிபாடு சைவ உணவு, சைவப் பழக்க வழக்கங்கள், மாதம் ஒரு தடவை வைத்திய பரிசோதனை என இம் முதியவர்கள் சிறந்த பராமரிப்புப் பெறு கின்றனர்.

'விசாலாம்பாள் அன்பு இல்லம்' எனப் பெயரிடப்பெற்றுள்ள இவ்விடுதியில் மன்ற அங்கத்தவர்களோடு அங்கு வாழும் முதியவர்களும் கலந்து பூஜை வழிபாடு, பஜனை, சமயச் சொற்பொழிவுகள் போன்ற நிகழ்ச்சிகளிலும் தம்மை ஈடுபடுத்தி வருகின்றனர்.

2002ஆம் ஆண்டு இந்து கலாசார அமைச்சு நடாத்திய இந்து மாநாட்டிலும் இம்மன்ற அங்கத்தவர்கள் பல பொறுப்பான பதவிகளை வகித்துப் பணியாற்றியதோடு கொ/ மகளிர் இந்து மன்றத்தின் சார்பில் பெண்கள் சம்பந்தமான 8 ஆய்வுக் கட்டுரைகளைப் பெண்களே சமர்ப்பித்துச் சிறப்பித்தனர்.

மேலும் இந்துப் பெண்களின் வளர்ச்சிக் காகவும் உயர்ச்சிக்காகவும் மன்றம் தன் பணிகளை விரிவுபடுத்தியுள்ளது. இங்குள்ள இளம் சந்ததியினருக்காகவும் பிற நாடு களில் வாழும் இந்து சமயத்தினரையும் மனதில் கொண்டு இந்து பாரம்பரியம் என்றொரு நூலை இம்மன்றம் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளியிடப் பலரும் இந்து சமயச் சடங்கு முறைகளை அறிந்து கொள்வதற்குப் பெரிதும் உதவியுள்ளது.

# பணிக்குழு

**களப் பணியாளர்கள்**

திருமதி. ஈஸ்வரி யோதிலிங்கம்

திருமதி. ஹேமா சண்முக சர்மா

செல்வி. மஹாலஷ்மி

செல்வி. ஆர். சசிகலா

திரு. எஸ். ஜனகன்

**ஒழுங்கமைப்பு உதவிகள்**

ஜெ. ஜெயரூபன்

ச. ஜெயப்பிரகாஷ்

ஸ்ரீ. பிரசாந்தன்

எஸ். பாஸ்கரன்

**ஆலோசனைக் குழு**

பேராசிரியர். சி. பத்மநாதன்

பேராசிரியர். சோ. சந்திரசேகரம்

புலவர். இ. திருநாவுக்கரசு

திருவாட்டி வசந்தா வைத்தியநாதன்

திரு. கந்தையா நீலகண்டன்

**செவ்விதாக்கம் (பதிப்பு**

பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பி

# அனுபவப் பகிர்வு - I

இவ் ஆய்வுக்கான தகவல்களைப் பெறும் நோக்குடன் கோவில்களுக்குச் சென்ற போது, அங்கு நடைபெறும் வழிபாடுகள், அனுஷ்டானங்கள், கிரியை முறைகள் போன்ற பல்வேறு அம்சங்களையும் எம்மால் அவதானிக்க முடிந்தது. எமது இப் பணிக்கு சில ஆலய நிர்வாகங்கள் சிறந்த ஒத்துழைப்பினை வழங்கின. மாளிகா வத்தை சித்திவிநாயகர் கோவில், செட்டியார் தெரு முத்துவிநாயகர் ஆலயம், செட்டியார் தெரு புதிய கதிரேசன் ஆலயம், கதிரேசன் வீதி கதிர்வேலாயுத சுவாமி கோவில், முகத்துவாரம் சிவன் கோவில், முகத்துவாரம் விஷ்ணு கோவில், தம்பையா சத்திரம், ராம்லால் மகாராஜா சத்திரம், பொன்னம்பல வாணேஸ்வரர் ஆலயம், மயூரபதி அம்மன் ஆலயம், ஸ்ரீதேவி கருமாரி அம்மன் ஆலயம், சில்வர் சிமித் லேன் துர்க்கையம்மன் ஆலயம், கப்பித்தாவத்தை பால விநாயகர் ஆலயம் என்பன நாம் கேட்ட தகவல்கள் அனைத்தையும் தந்து உதவின. சில ஆலயங்களிலிருந்து போதிய அளவு தகவல்கள் திரட்ட முடியவில்லை. ஒரு சில ஆலயங்கள் பற்றிய தகவல்களை அயலவர்கள், நீண்ட கால பக்தர்கள் மூலமும் பெற்றுக் கொண்டோம்.

கொழும்பில் அமைந்துள்ள ஆலயங்கள் பல சமூக குழுமங்களால் நிர்வகிக்கப்படு கின்றன. நகர்புறம் காரணமாக ஒவ்வொரு சமூக குழுமமும் தமக்குத் தமக்கென கோவில்களை அமைத்துக் கொண்டமை ஆச்சரியமன்று. இது ஒரு வரலாற்றுத் தேவையுமாகும். அவரவர் சமூக தேவை கள், நம்பிக்கைகள், பண்பாடு என்பவற்றின் அடிப்படையில் பூஜை நடைமுறையில் சிற்சில மாற்றங்கள் காணப்படுகின்றன. கோவில் புனிதமான இடத்தில் அமைய வேண்டுமென்பது முக்கியமானது. பெரும் பாலான கோவில்கள் அவ்வாறு அமையா தது நகர்ப்புற இட நெருக்கடியினால் தவிர்க்க முடியாததாயுள்ளது. கோவில் உள்ளமைப்பினை நோக்கும்போது, இட வசதியீனம் காரணமாக ஒரு சில கோவில் களில் உட்பிரகாரம் மட்டுமே உள்ளது.

பெரும்பாலான கோவில்களில் உள்வீதி மட்டும் உள்ளது. ஒரு சில கோவில்களில் மாத்திரம் கோவிலுக்குச் சொந்தமாக வெளி வீதி காணப்படுகின்றது. எல்லாக் கோவில் களும் ஒரே கட்டட அமைப்பினைக் கொண்டிருப்பதும் முடியாத காரியம். இது அவையவை அமைந்துள்ள இடத்தைப் பொறுத்தது.

கோவில்களுக்கு வருபவர்கள் பெரும் பாலும் பெண்களாக இருப்பதையும் எம்மால் அவதானிக்கமுடிந்தது. இளம் பெண்கள் திருமண வேண்டுதலுக்காகவும் நேர்த்திக்கடன் நிறைவேற்றுவதற்கும் வருகின்றனர். நாட்டு நிலைமைகளின் காரணமாக ஏற்பட்ட இழப்புகளின் நிமித்தம் குடும்பப் பொறுப்புக்களை சுமக்க வேண்டிய குடும்பப் பெண்கள் தம் கஷ்டங்களை நிவர்த்திக்க வேண்டுதல் செய்வதற்காகவும் இறைவனிடம் கூறி ஆறுதல் பெறவும் ஆலயங்களையே நாடு கின்றனர். பிள்ளைகளின் பாதுகாப்பு, முன்னேற்றம் கருதி வேண்டுதல் செய்வதற் காகவும் சம்பிரதாய சமயச் சடங்குகள் செய்வதற்காகவும் பெரும்பாலும் குடும்பப் பெண்கள் வருகின்றனர். எல்லா ஆலயங் களிலும் அனைத்துத் தர மக்களையும் காணக்கூடியதாயிருந்தது.

விசேட தினங்கள், திருவிழாக் காலங் களின்போது வழிபடுவோருக்கும் நிர்வாகத் தினருக்கு மிடையில் தொடர்பு இறுக்கமாக உள்ளது. உபயம் வழங்க முடியாத ஏனைய வர்கள் விலகி நிற்பதும் தவிர்க்க முடியாத தாக உள்ளது. பல கோவில்களில் பூசகர்கள் நிர்வாகத்தினருடன் நல்ல உறவுகளைப் பேணுகின்றனர். எனினும் நகர்ப்புற கோவிலானதால் இவர்களுக்கிடையே தொழில் வழங்குநர் - பெறுநர் என்ற வேறு பாடு விளங்குவதாகவும் பலர் கூறக் கேட்டிருக்கின்றோம். ஒரு சில கோவில் களில் பூசகரிடமிருந்து தகவல்கள் பெறமுடி யாத நிலையும் எமக்கு ஏற்பட்டது.

இந்துக்கள் எப்போதும் ஏனைய மதத் தவர்களுடன் இணங்கியே வாழ்கின்றனர். ஏனைய மதத்தவர்களும் இந்துக் கோவில் களுக்கு வழிபாட்டிற்கு வருகின்றனர். கூடுதலாக பௌத்த மதத்தினர் வருவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. கொழும்புக் கோவில்களை அண்டி பல்வேறு மதத்தினரும் வாழ்வதால் வேற்று மதத்தினருக்கு நம்பிக்கை வேறுபாடு காரணமாக சில அசௌகரியங்களும் ஏற்படு கின்றன.

இடம்பெயர்ந்து வந்த மக்கள் தமது கோவில்களில் செய்து வந்த சில நேர்த்தி களையும் மத நம்பிக்கை சம்பந்தமான தேவைகளையும் பூர்த்தி செய்வதற்கான அமைப்பு கொழும்புக் கோவில்களில் இல்லை. தற்போது ஒரு சில ஆலயங்கள் இதற்கான ஏற்பாடுகளைச் செய்து கொடுத் துள்ளன. பால்குடம் எடுத்தல் தற்போது இங்கும் நடைபெறுவது கண்கூடு. கிராமப் புறக் கோவில்களில் வீட்டுக்குரிய பண்டங் கள், பாத்திரங்கள் வாங்குவது நடைமுறை வழக்கம். கொழும்புக் கோவில்களில் அவ்வாறான நடைமுறையினைக் காண முடியவில்லை.

சில கோவில்களின் வரலாற்றுப் பின்னணியினை அறிந்தபோது கோவிலை ஸ்தாபித்தவர்களின் தெய்வநம்பிக்கை, பக்தி, சமூக அக்கறை என்பன எம்மை மெய் சிலிர்க்க வைத்தது. ஆலயங்களின் வரலாற்றுச் சிறப்புகள், அவை தொடர்பான கதைகள், புதிய வழிபாட்டுத் தெய்வங்கள் மீதான மக்களின் அதீத நம்பிக்கைகள் என்பன இவ்வாய்வின் மூலம் நன்கு புலனா கின்றது.

இவ்வாய்வுக்கு ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**திருமதி. ஈஸ்வரி சோதிலிங்கம்**

# அனுபவப் பகிர்வு - II

**கொ**ழும்பிலே வரலாற்றுப் பழமை வாய்ந்த ஐந்து ஆலயங்களுடைய ஆய்வுத் தகவல்களைத் திரட்டும் முயற்சியை நான் மேற்கொண்ட பொழுது பெற்றுக்கொண்ட அனுபவங்கள் பலவற்றை இங்கு முன் வைக்கிறேன்.

கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பல வாணேஸ்வரம், கப்பித்தாவத்தை, பால செல்வ விநாயகர் ஆலயம், பம்பலப்பிட்டி, சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயம், தெகிவளை ஸ்ரீ நெடுமால் கோவில், பம்பலப்பிட்டி நாட்டுக் கோட்டை நகரத்தார் புதிய கதிரேசன் கோவில் போன்ற ஐந்து ஆலயங்களுடைய சிவாசாரியார்களையும் ஆலய தர்மகர்த்தா சபையினரையும் நாடிச் சென்றேன்.

கொழும்பு நகரின் சமய பாரம்பரியங் களின் தேடலுக்காக விசேடமாகத் தயாரிக் கப்பட்ட வினாக் கொத்துகளுடன் முதலில் பொன்னம்பலவாணேஸ்வரம் சென்றேன். ஆலயத்தின் பிரதம சிவாச்சாரியார் சிவஸ்ரீ. சி. குஞ்சிதபாதக் குருக்களிடம் சென்ற பொழுது இன் முகத்துடன் வரவேற்றார். ஆலயத்தைப் பற்றிய சகல விடயங்களையும் அவரிடமே பெற்றுக் கொள்ளக் கூடியதாக அவர் ஒரு தகவல் களஞ்சியமாகத் திகழ்ந்தார். ஐம்பது வருடங்களுக் மேலாக இவ்வாலயத்தின் பிரதம சிவாச்சாரியாராக சிவதொண்டு புரிந்துவரும் புனிதப் பணிக்குத் தன்னை அர்ப்பணித்த சிவாச்சாரியார் எமக்குத் தேவையான தகவல்கள் பலவற்றையும் பொறுப்புணர்வுடன் வழங்கினார்.

சைவ அடியார்களுக்கும் ஆலயத்துக்கு மிடையிலான உறவு நிலைகள் மிகவும் நெருக்கமானவை என்பதை நான் உணர்ந்து கொண்டேன். தினமும் அக்கினி காரியத் துடன் நிகழும் பூஜை ஒழுங்குகள், விசேஷ பூஜைகளின் நியமம் என்பன மக்களோடு ஆலயத்தை மிக மிக நெருக்கி வைக்கின் றன. ஆலயத்தின் வரலாற்றுத் தகவல்களின் விபரங்களைத் தர்மகர்த்தா திரு. டி. எம். சுவாமிநாதன் அவர்கள் தந்துதவினார்.

அந்தவகையில் ஆலயத் தகவல்களைச் சேகரிப்பதிலே சிரமம் பெரிதாக எனக்கு ஏற்படவில்லை.

ஆலயத்தின் அமைவிடத்தின் எல்லைக்கு வெளியே மேலும் பல சிறிய சிறிய ஆலயங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இரத்தினம் வீதி ஜம்பட்டா வீதி போன்ற இடங்களில் அமைந்துள்ள இந்து ஆலயங்களுக்கும் மக்கள் வழிபடச் செல்வது அதிகமாக உள்ளது. அது மட்டுமல்ல கொச்சிக்கடையில் புனித அந்தோனியார் தேவாலயம் ஒன்றும் சிறப்பான வணக்கத் தலமாக அமைந்திருக்கின்றது. இவ்வாலயத்திற்கு வழிபடுவதற்கு வருகின்ற அடியவர்களின் பலர் இந்து சமயத்தவர்கள். இவர்கள் இந்து, கிறிஸ்தவ மத பேதமின்றி இரு ஆலயங்களுக்கும் சென்று தமது வழிபாட்டு நேர்மானங்களை நிறைவு செய்கின்றனர். இங்கே சமயப் பொதுமையை உணர்ந்தேன்.

இதேபோல தெஹிவளை நெடுமால் ஆலயத்திற்குத் தகவல் சேகரிக்கச் சென்ற பொழுது அங்கும் சமயப் பொதுமையை உணர்ந்துகொண்டேன். பௌத்த சமயத்தவர்களின் வருகை இவ்வாலயத்திலே அதிகமாக இருந்தது. ஆலயச் சூழலில் அதிகமாகப் பௌத்தமக்கள் வாழ்கிறார்கள். இவர்களுடைய குலதெய்வமாகக்கூட தெஹிவளை வெங்கடேஸ்வரப் பெருமான் அமைகிறார் என்ற உண்மைகூட எனக்குத் தெரியவந்தது. வழிபட வந்தவர் கள் சிலர் இப்படிக் கூறினார்கள். அந்த வேளையில் அவர்களின் மனதில் இந்த தெய்வ நம்பிக்கை அதனைத் தமது மெய்ப்பாடுகளால் நெறிப்படுத்தும் பாங்கு என்பன எனது மனதிலே பதிந்துவிட்டது. ஆலய அறங்காவலர்கள் மக்களுடன் பழகும் விதம், ஆலயப் பூசகர்களுடன் பழகும் பாங்கு என்பன சிறப்பாக அமைந்திருந்தது.

ஆலயத்திற்கு வருகின்ற அடியவர்களிலிருந்து தம்மை வேறுபடுத்தி உணர வைக்காத வகையில் எளிமையாகவும் பக்குவமடைந்த மனப்பாங்குடையவர்களாகவும் காணப்பட்டமை மனதில் நிலைக்கின்றது. எமக்குத் தேவையான தகவல்களைத் தந்தார்கள்.

மேலும் கப்பித்தாவத்தை பால செல்வ விநாயகர் ஆலயத்தினை நோக்கிச் சென்ற பொழுது அங்கு நீண்டகாலமாக அப்பெருமானைத் தொட்டு பூஜை செய்து வருகின்ற மதிப்புக்குரிய சிவஸ்ரீ. பா. சண்முகரட்ண சர்மாவைச் சந்தித்து பல தகவல்களைப் பெற்றுக்கொண்டேன். நீண்டகாலமாக மக்களின் துயர் தீர்த்து அருள் வழங்கி நிற்கும் விநாயகப் பெருமான் பல சிறப்பான அரசியல் பிரமுகர்கள் நம்பிக்கைக்குரிய தெய்வமாகவும் அமைகிறார் என்பதை அறிந்துகொண்டேன். பௌத்த மதத்தைச் சேர்ந்த அரசியல் பிரமுகர்கள் பலர் இப் பெருமானின் திருவடி வழிபாட்டினை முன் வைத்தே தமது அரசியற் கருமங்களை ஆரம்பிக்கின்றார்கள் என்ற தகவலும் எனக்குக் கிடைத்தது. ஆக இவ்வாலயத்திலும் சமயப் பொதுமை உணர்வைக் காணக்கூடியதாக இருந்தது.

பம்பலப்பிட்டியிலுள்ள சம்மாங் கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்திற்குச் சென்ற பொழுது ஆலய சிவாச்சாரியார் சிவஸ்ரீ பால சிற்சபேசக் குருக்கள் அவர்கள் இன்முகத்துடன் என்னை வரவேற்று ஆலயத்தின் தகவல்களைத் தந்துதவினார். நீண்டகாலமாக மரபுவழியான பூஜை முறையைத் தொடர்பவர் என்ற வகையில் அவரிடம் பெற்றுக் கொண்ட தகவல்களில் நம்பிக்கை வைத்தேன். இவ் ஆலயம் தமிழர்கள் வாழ்கின்ற முக்கிய இடங்களில் ஒன்றாய் இருப்பதால் இடம்பெயர்ந்த வடபுல மக்கள் இவ்வாலயத்தினை நோக்கி

வருகிறார்கள். இங்கும் பௌத்த மக்களின் வருகை காணப்படுகிறது. ஆலயத்திலே விஸ்தாரமான மண்டபம் காணப்படுவதால் அமைதியான சூழலில் ஆன்மிகத்தை உணரும் பக்தர்கள் இம்மண்டபத்திலே அமர்ந்திருந்து அமைதி காண்கிறார்கள். புலம்பெயர் வாழ் மக்கள் கொழும்பிலே இட நெருக்கடியை அனுபவித்து வருகின்ற இந்த வேளையிலே இவ்வாலய மண்டபம் இவர்களுக்கு அமைதியைத் தருகிறது.

நாட்டுக்கோட்டை நகரத்தினருடைய புதிய கதிரேசன் கோவில் (பம்பலப்பிட்டி) அறங்காவலர் திரு. சுப்பிரமணியம் செட்டியார் அவர்களையும் சந்தித்தேன். அவர் பல தகவல்களைத் தந்தார். கொழும்பு நகர இந்துசமய பாரம்பரியங்கள் பற்றிய பல தகவல்களையும் அவர் அறிந்திருந்தார். இவ்வாலய பிரதம சிவாசாரியார் சிவஸ்ரீ. எஸ். நாகராஜக் குருக்களையும் சந்தித்துத் தகவல்களைப் பெற்றேன்.

ஆலய வழிபாட்டுக்காக மட்டும் இவ் வழிபாட்டிடத்தில் எல்லைகள் மட்டுப் படுத்தப்படவில்லை. சமுதாயத்தின் பல சமூகத்தினரும் தத்தம் கலை கலாசாரத் தினைப் பாதுகாத்துக் கொள்ளக்கூடிய வகையில் கதிரேசன் மண்டபம் ஒன்றினையும் இவ் அறங்காவலர்கள் நிர்வகித்து வருகின்றனர். பல இன, மத, கலாசார நிகழ்ச்சிகள், திருமண வைபவங்கள் என்பன இம்மண்டபத்திலே தினமும் நடைபெற்று வருகின்றன. சமுதாயத்துடன் இவ்வாலய நிர்வாகம் மிக மிக நெருக்கமான நிலையில் இருக்கின்றது. அத்துடன் இவ்வாலய வளாகம் மக்கள் நிறைவாக நின்று வழிபடுவதற்கு ஏற்ற வகையில் விஸ்தீரணமாகவும் இருப்பது இங்குள்ள சிறப்பு. எனவேதான் இவ்வாலயத்திற்கு வருகின்ற மக்களின் தொகை அதிகமாகக் காணப்படுகிறது. அத்துடன் காலி வீதிக்கு அருகிலே இது அமைந்திருப்பதும் வழிபடுவோருக்கு வசதியைத் தருகின்றது.

இவ்வாறு நான் சென்று வந்த ஆலயங்களிலே மகிழ்ச்சி தரக்கூடிய அனுபவங்கள் பல இருப்பினும் கசப்பான அனுபவத்தையும் நான் பெறத் தவறவில்லை. சில ஆலயங்களிலே (நான் பெயர் குறிப்பிட விரும்பவில்லை. பம்பலப்பிட்டி தெஹிவளைப் பகுதியில் அமைந்தவை.) இங்குள்ள சிவாச்சாரியார்களும் அறங்காவலர்களும் எமது ஆய்வுக் கொத்துக்களை வாங்கிப் பார்த்த பின்பு அவற்றை அலட்சியப்படுத்துவதுபோல பல வேதனைக்குரிய வார்த்தைப் பிரயோகங்களை வெளிப்படுத்தியமை, பல தடவைகள் என்னை வரவழைத்த பின்பும் கூடத் தகவல்களைத் தராது ஏமாற்றிமை இம் மலர்க்குழுவின் முயற்சிகளை அவமானப்படுத்துவது போல் நடந்து கொண்டமை போன்ற சம்பவங்களும் எனக்கு அனுபவங்களாக அமைந்திருக்கின்றன. ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் இருந்தாலும்கூட அதனுடைய பெறுமானம் குறைவடையாது தானே என நான் எனது மனதைத் தேற்றிக்கொண்டு உடன்பாடான அனுபவங்களில் மன மகிழ்வு கொண்டேன்.

வரலாறுகள் சமய பாரம்பரியர்கள் பண்பாடுகள் என்பவற்றினைப் பேணிப் பாதுகாக்கும் முயற்சியில் மட்டுமே எமது கவனம் செல்கின்றது என்பது மட்டுமே உண்மை என்பது குறிப்பிடத்தக்கது.

**திருமதி. ஹேமா சண்முகசர்மா**
ஆசிரிய ஆலோசகர்
கொழும்பு வலயம்.

# அனுபவப் பகிர்வு - III

எமது களநிலைத் தேடல்களின்போது பெரும்பாலான இடங்களில் நமது உதவியாளர் எதிர்கொண்ட வரவேற்புகளின் பின்புலத்தில் இக்கடிதம் அமுதத்துளி என வந்தது. இதனைப் பிரசுரிக்காமல் விடுவது தர்மமாகாது என்பதற்காக இதனை ஒரு முக்கிய பதிகையாக இணைக்கிறோம்.

- ஆசிரியர்

ஓம்

09.0?.2004.

திரு. எஸ். சுப்பிரமணியம்,
இந்து பரிபாலன சபை,
கொழும்பு - 15.

பேரன்புடையீர்!

10.08.2004 [illegible]
[illegible]
[illegible]
[illegible]

[illegible]

[illegible],
[illegible],
[illegible]

செயலாளர்
ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில்
அபிவிருத்தி சபை
குடகம வீதி
அவிசாவளை.
Reg: No. 6.3/Co/M 16

# பின்னிணைப்பு - I

## சங்கங்கள், நிறுவனங்களுக்கான வினாக்கொத்தின் மாதிரி அமைப்பு

***அன்புடையீர்!***

எமது சங்கத்தின் 50 ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு, கொழும்பில் இந்துப் பாரம்பரியம் என்னும் வரலாற்றுப் பதிவு ஒன்றினை வெளியிட ஒழுங்குகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, இந்நூலின் உங்கள் ஸ்தாபனத்தின் வரலாறும் இடம்பெறவேண்டும் என்பது எமது விருப்பம். ஆகவே, கீழ்கண்ட விபரங்களை தந்துதவுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

### கொழும்பில் இந்து சமயம் சார் ஸ்தாபனங்கள் பற்றிய கட்டுரைகளில் இடம்பெறவேண்டிய விபரங்கள்

"**கொழும்பில் இந்துப் பாரம்பரியம்**" என்ற தொகுதி கொழும்பில் உள்ள இந்து மதம்சார் ஸ்தாபங்கள் பற்றிய தரவுகளையும் சேர்த்துக்கொள்ள விரும்புகின்றோம். சம்பந்தப்பட்ட ஸ்தாபனம் தங்கள் அமைப்புப் பற்றிய கட்டுரையினை எழுதித் தருமாறு வேண்டுகின்றோம். அவ்வாறு தரப்படும் கட்டுரைகள் பிரசுர நிலைக்கு வேண்டப்படும் புதுமைப்பாட்டை பேணும் முறையில் செவ்விதாக்கம் செய்யப்பட்டு பிரசுரிக்கப்படும். அமைப்புப் பற்றித் தரவு தகவல்களில் எவ்வித மாற்றமும் செய்யப்பட மாட்டாது. ஒவ்வொரு அமைப்புப் பற்றிய கட்டுரையிலும் எவ்வெவ் விடயங்கள் பற்றிய தரவுகள், தகவல்கள் இடம்பெற வேண்டும் என்பதற்கான சரிபார்ப்புப் பட்டியல் கீழே தரப்பட்டுள்ளது. அவற்றை உள்ளடக்கி இயன்றளவு தெளிவாக, ஆனால் சுருக்கமாக கட்டுரையினை எழுதித் தருமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.

I.
1. தாபனத்தின் பெயர், முகவரி
2. தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு
3. தாபனத்தின் செயற்படு பிரதேசம் / வட்டம்
4. தோற்றுவிப்பிற்கான இலக்கு, நோக்குகள்
5. தோற்றுவித்தோர்
6. பிரதான செயற்பாடுகள்

II.
1. நிர்வாக அமைப்பு (யாப்பு இருப்பின் இணைக்கவும்)
2. தற்போதைய பதவியாளர் பற்றிய விபரங்கள்

III. சாதித்தவையும் அவற்றின் முக்கியத்துவமும் (வரலாற்று முக்கியத்துவமுடையோரின் தொடர்புகள்)

IV. நிறுவனத்தின் உடைமைகள்

V. நடப்புகாலப் பணிகள்

VI. எதிர்நோக்கும் சவால்கள்

VII. எதிர்காலத் திட்டங்கள்

VII. தெரியப்படவேண்டிய வேறு முக்கிய தகவல்கள் இருப்பின்

IX. தொடர்புகளுக்கு (பெயர், முகவரி, தொலைபேசி, மின்னஞ்சல்)

குறிப்பு
1. வெளியீடுகள் இருப்பின் இணைக்கவும்.
2. தங்கள் சங்கம் பற்றி மேற்படி விடயங்கள் கட்டுரை வடிவில் அமைப்பது சிரமமாக உணரப்படின் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட ஒழுங்கு வரிசையில் தரவுகள், தகவல்களைத் தரவும். பதிப்புக் குழுவினர் அதனைக் கட்டுரை வடிவில் அமைத்துக் கொள்வர்.

# பின்னிணைப்பு - II

## கொழும்பு இந்து வழிபாட்டிடங்கள் பற்றிய வினாக்கொத்தின் மாதிரி அமைப்பு

I

### கொழும்பு இந்து வழிபாட்டிடங்கள் பற்றிய வினாக்கொத்து

1. வழிபாட்டிடத்தின் பெயர் : ..........
2. முகவரி : ..........
3. தொடர்புகொள்ள வேண்டியவர்
   பெயர், முகவரி : ..........
   தொலைபேசி இலக்கம் : ..........

II

### வழிபாட்டிடம் / கோயிலின் அமைப்பு விஸ்தீரணம்

1. வழிபாட்டிடம் / கோயிலின் : ..........
   பொது அமைப்பு விஸ்தீரணம்: ..........
2. வழிபாட்டிடத்தின் / கோயில் உட்பிரகார அமைப்பு
   மூலஸ்தானம் : ..........
   பலிபீடம் : ..........
   துவஜஸ்தம்பம் : ..........
   இடமிருந்து வலமாக உள்வீதியின் அமைப்பு : ..........
   பூஜிக்கப்படும் தெய்வங்கள் : ..........
   வசந்த மண்டபம் : ..........
   எழுந்தருளி போன்றன : ..........
3. வழிபாட்டிடத்தின் / கோயிலின் இரண்டாம் சுற்று /
   வெளிப்பிரகாரத்தின் அமைப்பு : ..........
4. கோபுரம் / கோபுரங்கள் உண்டா?: ..........
5. வழிபாட்டிடத்தில் உள்ள கிணறு / கிணறுகள் / குளம் : ..........
6. கோவில் வளவிலுள்ள வழிபாடு சாராக் கட்டிடங்கள் : ..........
7. அவற்றின் பயன்பாடுகள் : ..........
8. பெரியமணி பற்றிய விபரம் : ..........

III

### வழிபடு தெய்வங்கள், அவை பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ள இடங்கள் பற்றிய தகவல்கள்

1. மூலவர் / மூர்த்தம் : ..........
2. பலிபீடம் : ..........
3. உட்பிரகாரத்திலுள்ள வழிபடும் தெய்வங்கள்
   இடமிருந்து வலமாக வரிசைப்படுத்தி தரவும் : ..........
4. எழுந்தருளி மூர்த்தங்கள் : ..........
   (விழாவின்போது வீதி வலமாகக் கொண்டு வரப்படும் உருவத் திருமேனிகள்) : ..........

IV

## பூசைக் கிரமம்

1. நாள் பூசைகள், நேரங்கள்: ..........
2. வெள்ளி போன்ற விசேட தினங்களில் நடைபெறும் பூசைகள் : ..........
3. பூசைக் கிரம வேறுபாடுகள் உண்டா? : ..........
4. பூசை பத்ததி : ..........
5. பூசகர் விபரம் : பிராமணர் / சைவக் குருமார்கள் ..........
6. பூசைகள் / வழிபாடு சார்ந்த பணிகளில் உதவுவோர் : ..........
   எவ்வெவ் பணிகளில் : ..........
7. பூசை வேளையின் பின் வழங்கப்படும் பிரசாதங்கள் : ..........
   நாளாந்த பூசையில் : ..........
   விசேட பூசையில் : : ..........
8. நேர்த்திக்கான அபிஷேக அர்ச்சனை செய்யப்படும் முறைமைகள் : ..........
9. தீபாராதனை சோடஷோபசார ஆராதனைப் பொருட்கள் : ..........

V

## மஹோற்சவம்

1. மஹோற்சவ காலம், நாட்கள் ..........
2. மஹோற்சவக் கிரமம் : ..........
3. மஹோற்சவ உபயகாரர் யாவர்? (வரிசைப்படி தருக.) : ..........
4. மஹோற்சவ கால விசேடங்கள் ..........
5. வீதிவலம் வரும் முறை (வேட்டைத் திருவிழா) ..........
   சப்பரம் : ..........
   முத்துச் சப்பரம் : ..........
   தண்டிகை : ..........
   மஞ்சம் : ..........
   தேர் : ..........
6. விசேட தேர்பவனி உண்டா? : ..........
7. தீர்த்த உற்சவ விபரங்கள் : ..........
   தீர்த்தம் ஆடும் இடம் : ..........
   தீர்த்த பின் பவனி : ..........
8. தெய்வ பவனிக்கானவை . : ..........
   சப்பரம் : ..........
   முத்துச் சப்பரம் : ..........
   தண்டிகை : ..........
   மஞ்சம் : ..........
   தேர் : ..........
   மஹோற்சவம் அல்லாத காலத்தில் இவை காப்பாற்றப்படும் முறைமை (தேர், தேர்முட்டி) : ..........

கோவிலிற்கு உரிய வாகனங்கள் உண்டா? : ..........

எவை எவை? பட்டியல்படுத்துக? : ..........

அவை எவ்வாறு கிடைத்தன : ..........

இவை பயன்படுத்தப்படும் முறை : ..........

மஹோற்சவம் தவிர்ந்த உற்சவங்கள் : ..........
(பிள்ளையார் கதை, கந்தஷஷ்டி, நவராத்திரி போன்றவை.)

1. அவற்றின் விபரங்கள், பெயர், காலம் போன்றவை : ..........
2. உற்சவ காலத்தில் சூரன்போர் போன்ற சடங்கு விழாக்கள் நடைபெறுகிறதா? : ..........
3. அவற்றின் விபரம் (சூரன்போர், மகிஷாசுரன், சூரசம்ஹாரம்) : ..........

## VI
## உபயகாரரும் வழிபடுவோரும்

1. இக்கோவில் / வழிபாட்டிடத்தின் பிரதான வழிபடுவோர் பற்றிய விபரம் : ..........
(வதிவிட அடிப்படையில் / குலக்குழும அடிப்படையில் / பிற)
2. கோயிலில் செய்யப்படும் நேர்த்திக் கடன்கள் பற்றிய விபரங்கள் : ..........
3. உற்சவங்களை நடத்துபவர்களின் விபரம்? : ..........

## VII
## அன்றாட நிர்வாக ஒழுங்குகள்

1. பூசைக் கருமங்கள் : ..........
2. கோயில் பிரசாத தயாரிப்பு ஒழுங்குகள் : ..........
3. கோயில் சுத்தம்செய் பணிகள் முதலானவை : ..........

## VIII
## கோயில் பரிபாலன முகாமை

1. கோயில் உரிமை பற்றிய விபரங்கள் : ..........
குடும்ப வழி உரிமை : ..........
குலவழி உரிமை : ..........
தேர்தல் வழி உரிமை போன்றவற்றுள் இவ் வழிபாட்டிடத்தின் உரிமை முறைமை : ..........
2. கோயிற் பரிபாலன பொறுப்பு எவ்வகையில் யார் யாரால் / எவ்வெவ் குழுக்களால் நடத்தப்படுகிறது : ..........
3. இந்த ஒழுங்கமைப்பிற்கான ஆட்சியாப்பு முறைமையும் / அதன் பிரதான அம்சங்களும் யாவை? : ..........
4. இப்போது நடைமுறையில் இருக்கும் பதவியாளர்கள் பெயர்களும் விபரங்களும் (பால், வயது, தொழில் என்பன) :
5. அரச மானியங்கள் பெறப்படுகின்றனவா? ..........
6. மாநகரசபை, நகரசபை, உள்ளூராட்சி நிறுவனங்களுடன் உள்ள உறவுகள் : ..........
7. மத்திய அரசுடன் உறவுகள் இருப்பின் : ..........
8. பிற அரச சார்பற்ற நிறுவனங்களுடன் உள்ள உறவு : ..........
9. கோவில் நிர்வாகம் நடாத்தும் தர்ம காரியங்கள் / பாடசாலைகள் : ..........

## IX
### கோயிற் சொத்துக்கள்

1. கோயிலுக்குரிய அசையும் அசையாச் சொத்துக்கள் விபரம் : ..............................................................................
2. கோயில் பூசகருக்கும் கோயில் நிர்வாகத்திற்கும் இடையில் உள்ள உறவு : ..........................................................

## X
### கோயில் வரலாறு

1. கோயில் வரலாறு பற்றிச் சுருக்கமாகத் தரவும்.: .............................................................................................
2. கோயில் பற்றி நூல்கள் எழுதப்பட்டிருப்பின் அவை பற்றிய தகவல்கள் : ......................................................
3. கோயில் பற்றிய சஞ்சிகைகள், மலர்கள் இருப்பின் விபரங்கள் : ...................................................................
(முடியுமானால் பிரதிகளை இணைக்கவும்.)

## XI
### கோயில் விஸ்தரிப்பு
**(ஆரம்பம் முதல் இன்று வரையுள்ள காலப்பகுதியில் கோயில் கட்டிட விஸ்தரிப்பு)**

1. படங்கள் இருப்பின் இணைக்கவும்.: ..................................................................................................................
2. பின்பற்றப்பட்டுள்ள கட்டிடக்கலை மரபுகள் : ................................................................................................
3. கோயில் ஆரம்பிக்கப்பட்டபின் எத்தனை தடவை கும்பாபிஷேகம் நடந்துள்ளது.:
அவை எவ்வெப்போது நடைபெற்றது. இறுதியாக நடைபெற்ற காலம் : ..........................................................

## XII
### கோயில் கலை நிகழ்ச்சிகள்

1. எத்தகைய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுவதுண்டு?: ........................................................................................
2. நடந்தேறிய மிகப் பிரபல்யமான கலை நிகழ்ச்சிகள் (விபரங்கள்) : .................................................................


*Wist Best compliments from*

# COLOMBO CENTRE

**Importers and Dealers of Toys Fancy, Oilment Goods & tetxtiles**



Head office:
89/22, Prince Street, Colombo-11
Tel: 2473314,4717972
Fax: 94-1-2449599,
E-mail: ccimpdda@sltnet.lk





## Colombo Centre (CC1)

**Dealers of Toys Fancy, Imitiation Jewelleries eversliver & oliment goods**

We undertake all kinds of goods to send Jaffna

89/22, Prince Street, Colombo-11
Tel: 2345193, 2478654

## Colombo Centre (CC2)


**Dealers of Toys Fancy, Imitiation Jewelleries & oliment goods**

116/2,11615, Prince Street, Colombo-11
Tel: 2325901, 2543999

## Dana Aluminium Industries

**Manufacturers of Aluminium kitchenware**

49/6, Maligawatta Place,
Maligawatta,
Colombo-10
Tel: 2459134,2430158



Buy an Apartment from
GEKAYS
& Make your life
More Luxurious
GPD
GEKAYS
PROPERTY DEVELOPERS (PVT) LTD.
# 104/37, Sea Street, Colombo-11
Tel: 011-7436874, 011-2336164
Fax: 4714099, 2393971
E-mail: gekaysproperty@sltnet.lk
HOT LINE: 0777-312591
GROUP OF COMPANY GEYAYS JEWELLERS & TRAVELS